தென்கிழக்கு ஆசிய நாடுகளில்

மொழி: கற்றல், கற்பித்தல்

(பன்னாட்டு ஆய்வு மாநாடு - கட்டுரைத்தொகுப்பு)

International Conference on Language Teaching and Learning in South East Asian countries

பிப்ரவரி 2022 மலர்:7 இதழ்: 29 | February 2022 Volume VII Issue 29

பொதுப் பதிப்பாசிரியர்

முனைவர் **இரா.சாந்தி | Dr. R. Santhi**
முனைவர் **இரா.ரமேஷ்குமார் | Dr. R. Rameshkumar**
முனைவர் **இரா.குறிஞ்சிவேந்தன் | Dr. R. Kurinjivendan**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **பா.கவிதா | Dr. P. Kavitha**
முனைவர் **ந.இராஜேந்திரன் | Dr. N. Rajendran**
முனைவர் **சத்தியராஜ் தங்கச்சாமி | Dr. Sathiyaraj Thangasamy**
முனைவர் **கிங்ஸ்டன் பால் தம்புராஜ் | Dr. Kingstan Paul Thampuraj**
முனைவர் **தெ.வெற்றிச்செல்வன் | Dr.D.Vetrichelvan**
முனைவர் **மு.முனீஸ்மூர்த்தி | Dr. M. Munees Moorthy**

தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி (த.) - கோயம்புத்தூர்
மொழித்துறை, இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த.) - கோயம்புத்தூர்.
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்
தென்கிழக்காசிய செம்மொழிக் கல்விக்கழகம் - மலேசியா
கல்பனா கலை மற்றும் படைப்பு அகாடமி - பிரான்சு
இனம் பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ், தமிழ்நாடு, இந்தியா

இதழாக்கமும் வெளியீடும்

இனம் பதிப்பகம்
கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா
inameditor@gmail.com, www.inamtamil.com

Inam Pathippagam
Coimbatore, Tamil Nadu, India
09677821364, 09600370671

மதியுரைஞர் குழுவினர்

முனைவர் இரா.குணசீலன்

பூசாகோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த.), கோவை

முனைவர் இரா.இராஜா

தேசியக் கல்லூரி (த.),திருச்சி

முனைவர் க.பாலாஜி

பூசாகோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த.), கோவை

முனைவர் பா.கவிதா

பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி (த.), கோவை

முனைவர் ந.இராஜேந்திரன்

இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த.),கோவை

முனைவர் கிங்ஸ்டன் பால் தம்புராஜ்

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி

பிஷப் ஹீபர் கல்லூரி (த.), திருச்சி

முனைவர் சத்தியராஜ் தங்கச்சாமி

ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த.), கோவை

முனைவர் மா.பரமசிவன்

அருள் ஆனந்தர் கல்லூரி, மதுரை

முனைவர் ஆ.மணி

பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, புதுச்சேரி

முனைவர் ப.சிவமாருதி

சிங்மாய் பல்கலைக்கழகம், தாய்லாந்து

முனைவர் ச.முத்துச்செல்வம்

தியாகராசர் கல்லூரி (த.), மதுரை

முனைவர் எஃப்.எச்.அகம்மது சிப்லி

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முனைவர் தெ.வெற்றிச்செல்வன்

அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முனைவர் பாரதிராஜா சக்கரவர்த்தி

அயர்லாந்து கால்வே தேசியப் பல்கலைக்கழகம், அயர்லாந்து

முனைவர் டி.தேன்மொழி

எஸ்.எஸ்.என். பொறியியல் கல்லூரி, சென்னை

திருமிகு பு.கமலக்கண்ணன்

ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி

திருமிகு யாழ்பாவாணன்

யாழ்ப்பாணம், வடமாகாணம், இலங்கை

Editorial Team

Dr.R.Gunaseelan
PSG College of Arts and Science (Autonomous), Coimbatore
Dr.R.Raja
National College (Autonomous), Trichy
Dr.G.Balaji
PSG College of Arts and Science (Autonomous), Coimbatore
Dr.P. Kavitha
PSGR Krishnammal College for Women (Autonomous), Coimbatore
Dr.N.Rajendran
Hindusthan College of Arts and Science (Autonomous), Coimbatore
Dr.Kingston Paul Thampuraj
Sultan Idris Education University, Malaysia
Dr. M. Munees Moorthy
bishop heber college, Trichy
Dr. Sathiyaraj Thangasamy
Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore
Dr. M. Paramasivan
Arul Anandar College, Madurai
Dr.A.Mani
Bharathidasan Government College for Women, Pondicherry
Dr.B.Sivamaruthi
Chiang Mai University, Thailand
Dr.S.Muthuselvam
Thiagarajar College (Autonomous), Madurai
Thiru.F.H.Ahamed Shibly
South Eastern University of Sri Lanka, Sri Lanka
Dr.D.Vetrichelvan
Department of Tamil Studies in Foreign Countries, Tamil University, Thanjavur
Dr.Bharathi Raja Sakkaravarthi
National University of Ireland Galway, Ireland
Dr.D.Thenmozhi
SSN College of Engineering, Chennai
Thiru. P. Kamalakkannan
Jawaharlal Nehru University, New Delhi
Thiru. Yarl Pavanan
Yarlpanam, Vadamaahaanam, SriLanka

பதிப்புரை

மொழியோ, ஒரு மொழியிலுள்ள இலக்கியமோ - அவற்றைக் கற்க, கற்பிக்க மேன்மேலும் விளக்கம் பெறுவர் கற்போர், கற்பிப்போர். புதிய சிந்தனைகள் துலங்குதற்கும் கற்றல் கற்பித்தலே இன்றியமையாமை.

கற்றல் கற்பித்தல் மூலமாகத் திறன்வளர்ச்சியை அடைவதற்குக் கற்றல் கற்பித்தல் மீதான மதிப்பீடு மிக இன்றியமையாததாகும்.

> "மொழிப்பாடம் பிற பாடங்களிலிருந்து வேறுபட்டது. பிற பாடங்கள் அறிவை வளர்க்கின்றன; மொழிப்பாடம் அறிவோடு பல திறன்களையும் வளர்க்கின்றது. மொழிப்பாடத்தின் அடிப்படைத் திறன்கள் கேட்டல்-பேசுதல்-படித்தல்-எழுதுதல் ஆகியனவாகும். இவற்றுள் கேட்டல், படித்தல் ஆகிய இரண்டும் செய்திகளை உட்கொள்ளும் திறன்கள். பேசுதல்-எழுதுதல் ஆகிய இரண்டும் செய்திகளை வெளியிடும் திறன்களாகும். மேலும், கேட்டல், பேசுதல் ஆகிய இரண்டும் சமுதாயம் வழங்கிய நன்கொடைகளாகும்... ஆதலால் அடிப்படைத் திறன்களை வளர்த்தல் என்பது மொழி கற்பித்தலில் சிறப்பிடம் பெறுகின்றது" (https://www.srmist.edu.in/tamilperayam/tamilperayam/diploma-dtt/Lessons/I_Year/dipl01/html/dip01004kap2.htm)

எனும் கருத்தினைக் கவனத்திற் கொள்ளும்போது கற்றல் கற்பித்தலில் மொழி பெறும் இடத்தை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

மரபுவழிக் கற்பித்தல் முறையானது நம் மண்ணுக்கேற்ற கற்பித்தல் முறையாகத் திகழ்ந்தாலும் அம்மரபுவழிக் கல்விமுறையுடன் தொழில்நுட்பம்வழிக் கற்பித்தலும் இணையும்போது அவற்றால் மாணவ சமூகமானது கற்றலில் பெரும் ஆர்வம், புதியன சிந்திக்கும் சிந்தனைத் திறன், கவனக்குவிவு, விரைந்த புரிதல்,... என்பன போன்ற திறன்களைப் பெறுவதனைக் கண்கூடாகக் காண முடிகின்றது.

அவ்வகையில்தான் ***"தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மொழி : கற்றல், கற்பித்தல்"*** எனும் சிறப்புப் பொருண்மையில் இத்தகு ஆய்வுமாநாடொன்று திட்டமிடப்பெற்று வெற்றிகரமாக நிகழ்த்தப் பெற்றது. இம்மாநாட்டுக் கட்டுரைகள் தகுந்த அறிஞர் பெருமக்களால் மதிப்பீடு செய்யப்பெற்று, மதிப்பீட்டாளரின் கருத்தினைக் கவனத்திற் கொண்டு கட்டுரையாளர் உரிய திருத்தங்களைச் செய்து அளித்தபின் இறுதி செய்யப்பெற்றவையே! மொழி கற்றல், கற்பித்தலின் சமகாலப் போக்கினை அளந்தறிவதற்கு இத்தொகுப்பிலுள்ள ஆய்வுரைகள் உதவும் என்று உறுதிபடக் கூற இயலும்!

இவண்,

பதிப்பாசிரியர் குழு

முனைவர் **எஸ். நிர்மலா**
முதல்வர்
பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 004

வாழ்த்துரை

"கல்வி ஒன்றே உலகை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம்" என்பது நெல்சன் மண்டேலாவின் சிந்தனை. ஒரு மரத்திற்கு அதன் வேர் முக்கியம். அதுபோல மனித சமூகத்திற்குக் கல்வி அவசியமாகும். இன்றைய வாழ்க்கை முறையில் கல்வி என்பது ஓர் அடிப்படை மற்றும் அத்தியாவசிய தேவையாக மாறிவிட்டது. இவ்வாறு அத்தியாவசிய தேவையாக விளங்கும் கல்விச் செயற்பாட்டில் கற்பித்தலும் ஆசிரியரும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். மானிட நடத்தைக்கு அடிப்படையாக அமைவது கற்றல் ஆகும். ஒருவரின் பழக்க வழக்கம், விருப்பங்கள், தன்னம்பிக்கைத் திறன்கள், மனப்பாங்குகள் என்பவற்றில் கற்றலின் செல்வாக்கைக் காணமுடியும். இவ்வுலகில் எத்தனையோ தொழில்கள் காணப்பட்டாலும் மதிக்கத்தக்கதும் போற்றத்தக்கதுமான தொழிலாக ஆசிரியர் தொழில் அமைகிறது. அவ்வகையில் தமிழ்த் துறையானது பல்வேறு பன்னாட்டுக் கருத்தரங்குகளையும் பயிலரங்கு களையும் நடத்துவதில் முனைந்து செயல்பட்டு வருகிறது எனில் அது மிகையாகாது. அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு , செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் சாகித்திய அக்காதெமி ஆகிய நிதி நல்கை நிறுவனங்களுடன் இணைந்து சான்றோர்கள் போற்றும் வகையில் ஆண்டுதோறும் செவ்வனே செய்து வருகின்றது. இப்பன்னாட்டுக் கருத்தரங்க மாநாடு நன்முறையில் நடைபெற திட்டமிட்டுச் செயல்களை மேற்கொண்ட தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இரா.சாந்தி அவர்களையும் தொல்காப்பியர் தமிழாய்வு மையத்தின் பொறுப்பாளர் முனைவர் பா.கவிதா அவர்களையும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். தொடர்ந்து இதுபோன்ற பயனுள்ள கருத்தரங்குகளை நடத்தித் தமிழன்னைக்கு அணி சூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு ***தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மொழி: கற்றல், கற்பித்தல்*** எனும் பொருண்மையில் நடைபெற்ற இம்மாநாட்டில் கற்றல் - கற்பித்தல் செயல்பாடுகளுடனும் உளவியல் காரணிகளுடனும் இலக்கண இலக்கியங்களைக் கற்பிக்கும் முறைகளையும் நவீன உபகரணங்களைக் கொண்டு கற்றல் செயல்பாடுகளை எவ்வாறு ஊக்குவிப்பது என்பது போன்ற பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் கல்லூரியுடன் இணைந்து இப்பன்னாட்டு மாநாட்டினை நடத்தும் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வாழ்த்துதலுடன்...

Nirmala

(முனைவர் **எஸ். நிர்மலா**)

வாழ்த்துரை

முனைவர் **அ.பொன்னுசாமி**
முதல்வர்
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி (த.)
கோயம்புத்தூர்

கல்வி ஒருவரைச் சகிப்புத்தன்மை மிக்கவராக மாற்றுகிறது; தனி மனித ஒழுக்கத்தை வளர்க்கிறது; சுதந்திர வாழ்க்கை வாழத் துணைபுரிகிறது. சமத்துவம் மற்றும் சமூக நீதி கொண்டவராக மாற்றுகிறது; அன்பும் ஒத்துழைப்பும் நல்கும் குணத்தை வளர்கிறது, அறிவியல் வளர்ச்சிக்கு வித்திடுகிறது; தொழில் வளர்ச்சியில் முன்னணி வகிக்க வித்திடுகிறது; விவசாய வழிமுறைகளை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்கிறது; வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவன்றி குறைவுறாது கல்வி. இக்கல்வியைப் பிச்சை புகினும் கற்க வேண்டும்; கற்றபின் அதற்குத்தக நிற்க வேண்டும். எனும் வள்ளுவனின் வாக்கினை உணர்ந்து இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி (த.) - மொழித்துறை, கோயம்புத்தூர். பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி(த.) - தமிழ்த்துறை, கோயமுத்தூர், அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர், தென்கிழக்காசிய செம்மொழித் தமிழ்க் கல்விக் கழகம் - மலேசியா, கல்பனா கலை மற்றும் படைப்பு அகாடமி - பிரான்சு, இனம் : பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் எனும் நிறுவனங்கள் ஒன்றிணைந்து ***தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மொழி: கற்றல், கற்பித்தல்*** - பன்னாட்டு மாநாட்டினை நிகழ்த்தியிருப்பது பெருமையளிக்கிறது.

இந்த அரும்பெரும் தமிழ்ப் பணியில் இணைந்து செயலாற்றிய எம் கல்லூரி மொழித்துறைத் தலைவர் முனைவர் இரா.ரமேஷ்குமார், ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.இராஜேந்திரன், மாநாட்டு வேலைகளைப் பங்கிட்டு முனைப்புடன் செயலாற்றிய ஏனைய மொழித்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இச்சமூகத்தின்மீது அக்கறை கொண்டு கல்விக்கு ஆற்றிடும் இவ்வறப்பணி தொடர்ந்து ஆண்டுதோறும் நிகழவேண்டுமென வாழ்த்துகிறேன்.

(முனைவர் **அ.பொன்னுசாமி**)

உள்ளே

"ரப்பரும் தமிழரும்" கவிதையைக் கேலிச்சித்திரம் கொண்டு கற்பித்தல் Teaching "Rapparum Tamilarum" poem using caricature

திவாகர் மணிவண்ணன் | Dhiwahar Manivanan 1

கவியரசு வைரமுத்து கவிதைகளில் கல்வி விழிப்புணர்வு Education awareness in Poet vairamuthu poems

ஏ.சிவசங்கரி | A. Sivasangari 6

கற்றல் கற்பித்தலில் 'எக்ஸ்ப்ளைன் எவ்ரிதிங்' செயலியின் பயன்பாடு The Use Of Explain Everything In Learning Process

த. நந்தினி | D. Nanthini 17

தமிழ் கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் NEW APPROACHES IN TAMIL TEACHING & LEARNING

முனைவர் க. முருகேசன் | Dr. K. MURUGESAN 28

சாதாரண பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களும், கற்றல் வாய்ப்புக்களும் Learning Challenges and Learning Opportunities Facing Special Learning Students in Ordinary Schools

சி. அருள்நேசன் | S. Arulnesan 38

காப்பிய இலக்கியங்கள் – கற்பித்தலும் மதிப்பிடுதலும் Kappiya Ilakiyangal-Teaching and Evaluation

த.முத்துக்குமார் | T. Muthukkumar

முனைவர் மு. சுதா | Dr. M. Sudha 54

'பில்மோரா' செயலியின்வழிப் புரியும்படியான தமிழ் இலக்கணம் கற்பித்தல் Innovation of Filmora Application in Teaching Tamil Grammar in Effective Way

லோகராஜ் மோகன் | Logaraj Mogan 70

இணையவழித் தமிழ்க் கற்றல் - கற்பித்தல் ONLINE TAMIL TEACHING & LEARNING

முனைவர் து. சவிதா | Dr. D. Savitha 81

தமிழ்மொழி இலக்கணத்தில் உடன்பாட்டுவினை மற்றும் எதிர்மறைவினையைக் கற்பிக்க டோராடூன் தொழில்நுட்பத்தின் வாயிலாக ஒரு புத்தாக்கம் An innovation through the technology of 'Doratoon' to teach the tamil grammar

தரிசினி காளிதாசன் | Tharisiniy Kalidasan 93

குற்றியலுகரம் கற்பிக்க கேன்வா பயன்பாட்டினிலுள்ள காமிக் ஸ்டிரிப் மூலம் ஒரு புத்தாக்கம் An Innovation through the Comic Strip on the Canva App to Teach Kutriyalugaram

கவிநித்யா ஸ்ரீ ஞானசுந்தரம் | Kavinithya Sri Ghanasundaram 104

தமிழ் மொழி இலக்கணம் கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைக் கொண்டு புத்தாக்கம் செய்தல் Innovation with the use of technology in grammar teaching

லோகப்பிரியா சண்முகம் | Logapriyaa Shanmugam 116

திறன்முனைப் படைப்பின் துணையோடு ஆக்கப்பூர்வமாகவும் புதுப்புனையாகவும் பெயர்ச்சொல்லைக் கற்றுக் கொடுத்தல் Effectiveness and Innovation of PowerPoint Presentation in Teaching of Adjectives

பிரேமா சௌந்தராசு I Perema Soundaraj 123

எக்ஸ்பிளீ (Explee), பவர் டைரக்டர் (PowerDirector) செயலிவழித் தமிழ் இலக்கியத்தைக் கற்பித்தல் Teaching Tamil Literature using Explee and Power Director Applications

கோகிலவாணி சிவக்குமார் | KOKILAVANI SIVAKUMAR 133

மின் கல்வியும் கண் நோயியல் தொடர்பான பகுப்பாய்வும் : மாவனல்லை ஸாஹிரா பாடசாலையை மையப்படுத்திய ஆய்வு E - Learning and Analysis of Ophthalmology: A study based on Zahira School, Mawanella

எப். சிப்னா | F. Shifna 139

விமர்சன நோக்கில் அறிஞர் அண்ணாவின் 'வேலைக்காரி' நாடகம் Scholar Anna's play 'The Maid' in Critical Perspective

முருகையா சதீஸ் | Murukaiya Sathees 152

ஐந்தாம் ஆண்டுக்கான தேசியப்பள்ளித் தமிழ்ப் பாடநூலில் காணப்படும் நன்னெறிக் கூறுகள் Moral values in national school's standard five Tamil text book

திலிப்குமார் அகிலன் | Thilipkumar Akilan

தேவேந்திரன் சுகுமார் | Deventhiran Sukumar 159

கிராமப்புற மாணவர்களிடையே மொழி கற்றல் கற்பித்தலில் உள்ள சிக்கல்கள் Impediments in Teaching and Learning Language among Rural students

முனைவர் மு.சு.கண்மணி | Dr. M.S. Kanmani 167

இலக்கியம் கற்றலும் கற்பித்தலும் - பன்னோக்குப் பார்வை Teaching and Learning Literature - Multifaceted view

பத்மா ஸ்ரீதர் | Padma Sridhar 172

இணையவழிக் கல்விச் செயல்பாட்டில் மொழியாசிரியர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளும் அவற்றுக்கான தீர்வுகளும் Solutions for Problems Faced by the Language Teachers in Online Education

முனைவர் மு.புஷ்ப ரெஜினா | Dr.M.Pushpa Regina 180

கல்வியில் ஆராய்ச்சி (Research in Education)

முனைவர் ப.தினகரன்| Dr. P. DHENAKARAN 197

அகநானூற்றில் தலைவனின் பரத்தமை ஒழுக்கம் - உளவியல் நோக்கும் தீர்வும் Aganaanootril Thalaivanin Parathamai Ozhukkam – Ulaviyal Nokum Thirvum

ரா. வனிதா | R. Vanitha 208

காப்பியங்கள் : கற்றலும் கற்பித்தலும் Epics : Learn and Educate

முனைவர் ம. ஷீலா | Dr. M. Sheila 227

வண்ணதாசனின் 'நாபிக்கமலம்' : உளவியல் சிக்கலும் தீர்வும் Vannadhasanin 'Naabikamalam' : Ulaviyal Sikkalum Theervum

முனைவர் சி.அம்சவேணி | Dr. C. Amsaveni 237

வரலாற்றுப் பின்னணியில் இலக்கணம் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் New approaches to teaching Grammar in the background of Historical context

முனைவர் பா. சங்கரேஸ்வரி | Dr.B.Sankareswari 246

A STUDY OF ICT FOR MARGINALIZED COMMUNITIES: A CRITICAL PERSPECTIVE IN NILGIRIS DISTRICT நீலகிரி மாவட்டத்தில் உள்ள விளிம்புநிலை மக்களின் மத்தியில் தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கத்தைப் பற்றிய ஆய்வு

Dr. J.Jone Antony Raja | முனைவர் ஜோ.ஜோன் அந்தோணி ராஜா 253

சித்தர் பாடல்கள் கற்றலும் கற்பித்தலும் – கடுவெளிச் சித்தர் Siddhar padalgal katral karpiththal - Kaduveli siddhar

முனைவர் சி.செந்தில்வடிவு | Dr.S.Senthilvadivu 263

கணித்தமிழ் கற்பித்தலில் உள்ள சிக்கல்களும் தீர்வுகளும் Problems and Solutions in Tamil Computing Teaching

முனைவர் இரா.தனசுபா | Dr. R. Dhanasuba 271

கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகள் New Thoughts in Teaching Learning

முனைவர் பொ.ஜெயப்பிரகாசம் | Dr.P.Jeyaprakasam 279

காலந்தோறும் கற்றல், கற்பித்தல் Forever Learning and Teaching

முனைவர் பா.கவிதா | Dr. P.Kavitha

முனைவர் ந.இராஜேந்திரன் | Dr. N.Rajendran 284

இலக்கியம் கற்பித்தலின் அணுகுமுறைகள் Teaching Approaches of Literature

முனைவர் ந. சுபா | Dr.N.Shubha 297

மனித வளர்ச்சியில் கற்றல் உளவியல் - அறிஞர்களின் சிந்தனைகள் Psychology of learning in human development - Thoughts of scholars

முனைவர் ஜெ.கவிதா | Dr.J.Kavitha 304

மொழிப்பாடம் கற்பித்தலின் நோக்கம் IMPORTANCE OF LEARNING LANGUAGE

முனைவர் க. உமாமகேஸ்வரி | Dr. K. Umamaheswari 314

மனவெழுச்சியும் மாணவர்களின் வளர்ச்சியும் EMOTIONS AND STUDENTS GROWTH

வீ.பூமிநாதன் | V. Boominathan 320

"ரப்பரும் தமிழரும்" கவிதையைக் கேலிச்சித்திரம் கொண்டு கற்பித்தல் Teaching "Rapparum Tamilarum" poem using caricature

திவாகர் மணிவண்ணன் | Dhiwahar Manivanan

Student of Tamil Department, Sultan Idris Educational University, Malaysia
dhiwamani1612@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் மொழிப்பாடம் கற்பித்தலில், புதிய சிந்தனையுடன் ஆசிரியர்கள் தங்களின் கற்றல், கற்பித்தலை நடத்தும் தமிழ் ஆசிரியர்கள் மிகக் குறைவு. இப்போதெல்லாம் தொழில்நுட்ப உதவியுடன் தமிழ் மொழியைக் கற்பிப்பது மிகவும் எளிது. இந்தக் கட்டுரையில் கேலிச்சித்திரம் பயன்படுத்தி, தமிழ் இலக்கியம் SPM பாடத்திட்டத்தில் ஒரு கவிதையை எப்படிக் கற்பிப்பது என்பதை விளக்குகிறது. மேலும், இந்தக் கட்டுரை ஒரு கேலிசித்திரத்தை எவ்வாறு உருவாக்குவது, அதன் பயன்பாடு மற்றும் பயன்படுத்தப்படும் கருவிகள் ஆகியவற்றையும் எடுத்துரைக்கின்றது.

Abstract

In Tamil language teaching, there are very few Tamil writers who conduct their learning and teaching with new thinking. Nowadays it is very easy to teach Tamil language with the help of technology. This article explained how to teach a poem in the Tamil Literature SPM curriculum using a cartoon. Also, this article will explain how to create a caricature, its application, and the tools used.

திறவுச்சொற்கள் (Keywords) : தொழில்நுட்பம், இலக்கியம், கேலிச்சித்திரம், Caricature, Technology, Tamil poem, Teaching

முன்னுரை

தமிழ்மொழி கற்பித்தலில் தமிழாசிரியர்கள் புத்தாக்கச் சிந்தனை கொண்டு தங்களின் கற்றல் கற்பித்தலை நடத்துவது என்பது மிகவும் குறைவாகவே உள்ளது. தற்காலத்தில் மிகவும் இலகுவாகவே தொழில்நுட்பத் துணைக்கொண்டு தமிழ் மொழிக் கற்பித்தல் இருந்து வருகின்றது. இக்கட்டுரையில் தொழில்நுட்பம் கொண்டு எஸ்.பி.எம் தமிழ் இலக்கியப் பாடத்திட்டத்தில் உள்ள கவிதை ஒன்றனைக் கேலிச்சித்திரம் (Cartoon) கொண்டு கற்பிப்பது எவ்வாறு என்று விளக்கப்படும். மேலும், இக்கட்டுரையில் கேலிச்சித்திரம் எப்படி உருவாக்குவது, அதன் பயன்பாடு, பயன்படுத்தப்படும் கருவிகள் பற்றியும் விவரிக்கப்படும்.

தமிழ் இலக்கியம் கற்றல் & கற்பித்தல்

தமிழ் இலக்கியப் பாடம் இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டத்திற்குத் தற்போது வந்துள்ளது. இப்பாடத்திற்குத் தேவையான பாட நூல்களை மலேசியத் தேர்வு வாரியம் தேர்ந்தெடுத்து வழங்குகின்றது. இப்பாடத்திற்கு ஒரு நாவல், ஒரு நாடகம், தேர்ந்தெடுக்கப்பட்ட சில கவிதைகள் ஆகியவற்றை மலேசியத் தேர்வு வாரியம் தேர்ந்தெடுத்துக் கொடுக்கின்றது (சாமிகண்ணு, கிங்ஸ்டன்; 2018).

இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கவிதைகளில் ஒன்றான 'ரப்பரும் தமிழனும்' என்ற கவிதை பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கவிதையை சா. ஆ. அன்பானந்தன் எழுதியுள்ளார். இக்கவிதையைக் கீழே காணலாம்.

எங்கிருந்தோ தமிழனைப்போ லிங்கெழுந்து
நிலம்பார்த்துத் தன்னை ஊன்றித்
தங்கமகன் ஒளியாலும் கங்கையவள்
அருளாலும் செம்மை ஊறி
மங்களமாய் இலைவிரித்து மலர்ந்தாளாம்
ரப்பர்எனும் மங்கை; பேர்த்துக்
தங்கமுடி மணிவைத்தால் போல்நிரையில்
வைத்திட்டார் செல்வம் பெற்றார்.

சங்குநிறப் பால்பொழியும் தங்கமரச்
செல்வங்கள் சொட்ட ஈந்து
தங்கடமை முடித்துவிட்டுத் தனையழிக்கக்
கொடுத்துவிட்டுச் சாய்தல் போலச்
செங்குருதி நீராக்கிச் செம்புடலை
உரமாக்கிச் சாய்ந்து போக
அங்கிருந்து வந்தானோ? அவனுக்கும்
ரப்பருக்கும் மாற்றம் காணேன்!

(தமிழ் இலக்கியம் கவிதைத் தொகுப்பு; பக்: 21)

இந்தக் கவிதை, 1.4 கவிதையிலுள்ள நயத்தை விளக்குவர் எனும் உள்ளடக்கத் தரத்தினைக் கொண்டுள்ளது. இதன் கற்றல் தரம் 1.4 கவிதையிலுள்ள பொருள் நயம் ஆராய்ந்து விளங்குவர். குறிப்பாக, தெரிநிலை புதைநிலை கருத்தினை மாணவர்கள் அறிதல் வேண்டும் என்பதைத் தமிழ்ப் பிரிவு கல்வி கலைத்திட்டம் வகுத்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு புத்தாக்கச் சிந்தனையில் கற்றல் கற்பித்தலை அணுகும் கருவியினைக் அடுத்து காணலாம்.

பயன்படுத்தப்பட்ட கருவி (Apps)

நான் மேற்கண்ட கவிதையைக் கற்றுக் கொடுக்க கேலிச்சித்திரம், யுட்யூப் (Youtube) பயன்படுத்தினேன்.

கேலிச்சித்திரம்

மலாயக மக்களின் தோட்ட வாழ்க்கை மையப்படுத்திய ஒரு கேலிச்சித்திரம் முன்பே இருந்தது. அந்தக் கேலிச்சித்திரத்தின் பெயர் "எஸ்டேட் பாய்" (estet boy). அதில் தோட்டம், தோட்டப்புறப் பள்ளி போன்ற கூறுகளின் அடிப்படையில் கேலிச்சித்திரம் அமையப் பெற்றிருக்கும். எனவே, ரப்பரும் தமிழரும் என்ற கவிதையும் தமிழர்கள் தோட்டப்புற வாழ்க்கையினைக் காட்டும் கவிதை என்பதால் அதற்குச் சரியான கேலிசித்திரமாக "எஸ்டேட் பாய்" (estet boy) பயன்படுத்தப்பட்டது. பள்ளிச் சூழலும், மாணவர்களின் துவங்கல், ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் முறை போன்ற அம்சங்கள் இக்கேலிசித்திரத்தில் இருப்பதால் ஓர் ஆசிரியர் இக்கவிதையினைக் கற்றுக் கொடுப்பது போல் அமையப் பெற்றுள்ளது.

(படம் 1: ஆசிரியர் கற்றுக் கொடுப்பது போன்ற கேலிச்சித்திரம்)

யுட்யூப் (Youtube)

கேலிச்சித்திரத்தை எடுத்த- பின், அதனைத் தொகுத்து யுட்யூப் (Youtube) பதிவிட வேண்டும். யுட்யூப் (Youtube) உள்ள சில பால் மரம் சீவும் காட்சிகளையும் இதனுள் உட்படுத்த வேண்டும்.

பயன்படுத்தும் முறை

"எஸ்டேட் பாய்" (estet boy) கேலிச்சித்திரம் எடுத்து, filmora என்ற செயலின் வழி தேவையான கேலிசித்திரத்தைத் தொகுக்க வேண்டும். அந்தக் கேலிச்சித்திரத்தின் குரலினை அழிக்க வேண்டும். அதற்குக் காரணம் யாதெனில் "எஸ்டேட் பாய்" (estet boy) கேலிச்சித்திரத்தில்

பேசப்படுவது வேறொன்றாகும். அது தேவையான ஒன்றும் இல்லை. அந்தக் குரலினை அழித்து விட்டுச் சரியான மற்றும் தேவையான நபர்களின் குரலினை நாம் சுயமாக filmora செயலில் இணைக்க வேண்டும். சான்றாக, இக்கவிதையைக் கற்றுக் கொடுப்பது பெண் ஆசிரியராக இருப்பார். அவரின் குரலுக்கு ஒரு பெண் குரல் தேவைப்படும். அதே போல் மாணவர்களின் குரலுக்கு மாணவர்கள் வயதிலுள்ள குரல் தேவைப்படும். இதனால், பேச வேண்டிய வசனங்களை எழுதி, பின் குரல் பதிவு செய்பவரிடம் எழுதிய வசனங்களை வழங்க வேண்டும். அவர்கள் குரல் பதிவு செய்தவுடன் filmora செயலில் இணைக்கலாம். பிறகு, அந்தக் காணொளியை யுட்யூப் (Youtube) பதிவிடலாம். இதை blogger என்ற தளத்திலும் பதிவேற்றலாம். எடுத்துக்காட்டாக,



மேற்கண்ட காணொளியின் துணைக்கொண்டு மாணவர்கள் blogger கீழே வழங்கப்பட்டுள்ள இணையப் பாரத்தில் பதில்களை அளிக்கலாம். கேள்விகள் யாவும் கற்றல் தரத்தின் அடிப்படையில் கேட்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சரியான விடைகளையும் அளிக்க முடியும்.

இந்தக் கேலிச்சித்திரம் கொண்டு காணொளியை மறுபதிவு செய்வது கடினமான ஒன்றாகும். பதிவு செய்யும் குரலின் ஏற்றத்தாழ்வு (tone of voice) கேலிச்சித்திரத்திற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கும் நேரத்தில் பல்வேறு சிக்கல் எதிர்நோக்குவோம். முக்கியமாக, கேலிசித்திரத்தில் இருக்கக் கூடிய சித்திரங்களின் அசைவு யாவும் குரலுக்கு ஏற்ப அமைத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் கேலிச்சித்திரம் நம்பகத்தன்மை கொண்டதாக இருக்கும். மாணவர்களும் சலிப்பின்றிக் கேலிச்சித்திரத்தைக் கண்டு களிக்கலாம்.

முடிவுரை

இந்தக் காணொளி செய்வதில் பல்வேறு சிக்கலை எதிர்நோக்கினாலும் வருங்கால ஆசிரியர்கள் இதுபோன்ற புத்தாக்கச் சிந்தனையுடன் பல்வேறு செயலிகளைப் பயன்படுத்திக் கற்றலின் உத்தி முறைகளை மாற்றி அமைக்கலாம். இதனால், மாணவர்களும் தற்போதைய சூழலில் நிலவி வரும் கோவிட்-19 நேரத்தில் வீட்டில் இருந்தவாறே இதுபோன்ற காணொளிகளைக் கண்டுகளித்து தனது அறிவினைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

துணைநின்றவை

- சாமிக்கண்ணு ஜெபமணி, ஈசா., கிங்ஸ்டன் பால், த. (2018). *மலேசியத் தமிழ்க்கல்வி வரலாறு*. சென்னை: நவநீதம் எண்டர் பிரைசஸ்.
- முரசு, நெடு. (2016). *கவிதைத் தொகுப்பு தமிழ் இலக்கியம்*. மலேசியா: அருள்மதியம் பதிப்பகம்.
- பச்சைபாலன், ந. (2016). *எஸ். பி. எம் தமிழ் இலக்கியம் தேர்வுக் களஞ்சியம்*. மலேசியா: தமிழ் இலக்கிய ஆசிரியர் கழகம்.
- Ponniah, K., Thamburaj, K. P., & Samuvell, S. J. I. (2017). Language attitude among Tamil language teachers. *International Journal of Advanced and Applied Sciences*, *4*(6), 142- 147.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2016). Hierarchical grammatical tagging for tinai (landscape) of cankam Tamil literature. *Indian Journal of Science and Technology*, *9*(48).
- Thamburaj, K. P., & Rengganathan, V. (2015). A Critical Study of SPM Tamil Literature Exam Paper. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *5*, 13-24.
- Thamburaj, K. P., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [A study on modern and traditional writing skill]. *Muallim Journal of Social Sciences and Humanities*, 141-146.
- Thamburaj, K. P. (2015). Promoting scientific ideas through the future studies in Tamil language teaching. *Procedia-Social and Behavioral Sciences*, *174*, 2084-2089.
- Thamburaj, K. P., Arumugum, L., & Samuel, S. J. (2015, August). An analysis on keyboard writing skills in online learning. In *2015 International Symposium on Technology Management and Emerging Technologies (ISTMET)* (pp. 373-377). IEEE.
- Thamburaj, K. P. (2021). An Critical Analysis of Speech Recognition of Tamil and Malay Language Through Artificial Neural Network. Turkish Journal of Computer and Mathematics Education (TURCOMAT), 12 (9), 1305-1317.

- Thamburaj, K. P., & Shakunthala, R. (2016). Standardization of question items to test tamil case markers–a study. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *6*, 9-16.
- Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K. P. (2021). Traditional teaching method-concept of moral education and pedagogy in Aathicuudi. *Muallim Journal of Social Sciences and Humanities*, 176-182.
- Thamburaj, K. P. (2021). E-Teaching in Teacher Education—A Conceptual Framework of Sultan Idris Education University. *Sino-US English Teaching*, *18*(5), 107-111.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2020). THE USE OF MOBILE–ASSISTED LANGUAGE LEARNING IN TEACHING AND LEARNING TAMIL GRAMMAR. *PalArch's Journal of Archaeology of Egypt/Egyptology*, *17*(10), 843-849.
- Thamburaj, K. P., Sivanadhan, I., & Kumar, M. (2021). IMPROVING FORM 4 STUDENT'S READING COMPREHENSION SKILLS IN TAMIL LANGUAGE BY USING SQ3R METHOD. *Psychology and Education Journal*, *58*(2), 2291-2295.
- Thamburaj, Kingston Pal. "A Process of Developing an ASR System for Malay and Tamil Languages." *Design Engineering* (2021): 731-741.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2015). வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி (Reframing Valluvar's claim on Friendship). *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, *2*(1), 7-13.

****

கவியரசு வைரமுத்து கவிதைகளில் கல்வி விழிப்புணர்வு
Education awareness in Poet vairamuthu poems

ஏ.சிவசங்கரி | A. Sivasangari

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், அரசு மகளிர் கலைக்கல்லூரி, சேலம் -8
Premalathajawahar29@gmail.com, https://orcid.org/0000-0002-7746-0035

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கிய வரலாறு சுமார் மூவாயிரம் ஆண்டுகால வரலாறுடையதாகவும் இதற்கு முன் பரந்துபட்ட படைப்புகளை உடையதாகவும் உள்ளது. தமிழ் இலக்கியம் சங்க கால இலக்கியம், இடைக்கால இலக்கியம், தற்கால இலக்கியம் என மூவகையுடைத்து. இதில் தற்கால இலக்கியங்களில் ஒன்றான புதுக்கவிதையில் கவியரசு வைரமுத்து கவிதைகளில் கல்வி விழிப்புணர்வு பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. அரசின் கல்விக் கொள்கைகள் மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டே செயல்படுத்தப்படுகின்றன. இதைச் சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு மூன்று தரப்பாருக்கு உள்ளது. முதலில் ஆசிரியர். அடுத்து பெற்றோர். மூன்றாவது மாணவர். வைரமுத்துவின் பார்வையில் இவை ஆராயப்படுகின்றன.

Abstract

The history of Tamil literature is about three thousand years old and has a wide range of works before it. Tamil literature is divided into three types as Sangam period literature, medieval

literature and contemporary literature. This article sets out to explore educational awareness in the poems of Kaviyarasu Vairamuthu in one of the contemporary literatures. Government education policies are implemented with the progress of the people in mind. It is the responsibility of the three parties to bring this about. First the teacher. Next parents. Third student. These are explored from Vairamuthu's point of view.

திறவுச்சொற்கள் (Keywords): கல்வி, வகுப்பறை, ஆங்கிலக்கல்வி, பாடத்திட்டம், தேர்வு, வேலைவாய்ப்பு, Keywords, Education, English medium, syllabus, exam, Employment

ஆசிரியர்

கல்வி கற்றதன் பயன் அதனை மற்றவர்களுக்குக் கற்றுத் தருவதே. எனவேதான் அன்ன சத்திரம் வைத்தலை விட, ஆலயம் கட்டுவதை விட மிகப் புண்ணியச் செயல் கல்லாத ஒருவனைக் கற்றவனாக்குவதே என்கிறார் பாரதியார். மாணவர்களை நூறு சதவீத தேர்ச்சிக்கு வழிவகை செய்வதற்கே பாடாய்பட வேண்டிய சூழ்நிலையில் அதிகாரிகள் தொடர்ச்சியாகப் புள்ளிவிவரங்களைக் கேட்கும்பொழுது அதில் ஆசிரியர்கள் ஈடுபடுகின்றனர். மீண்டும் மீண்டும் பல வகையான புள்ளி விவரங்களைக் கேட்கும் பொழுது, மாணவர்களுக்கு ஒதுக்க வேண்டிய நேரத்தைப் புள்ளி விவரங்கள் சேகரித்து உரிய வடிவத்தில் தருவதில் செலவிடுகின்றனர். மேலும் இதுபோன்ற வேலைகளில் நேரத்தைச் செலவிடுவதால் பாடம் நடத்துவதற்குரிய ஈடுபாட்டை இழக்கிறார்கள். சோர்வடைந்து விடுகிறார்கள். பள்ளிச் சூழலோ கல்லூரிச் சூழலோ இருதரப்பிலும் இம்மாதிரியான இடர்ப்பாடுகளுக்கு ஆசிரியர்கள் ஆளாகின்றனர். இதனால் மாணவர்களுக்கு உரிய பாடங்களைச் சொல்லித்தர இயலாத சூழல் ஏற்படுகிறது. பாடத்திட்டங்களோ மிகுதி. சொல்லித்தரும் நேரமோ குறைவு என்ற நிலை வரும்போது மாணவர்கள்இடர்ப்படுகின்றனர். மேலும் ஆசிரியர் பிற பணியில் ஈடுபடும் பொழுது வகுப்பு நேரங்களில் மாணவர்கள் சுதந்திரமாய் இருந்து பழகிவிடுகிறார்கள். இதனால் மாணவர்கள் தவறிழைக்கும் பொழுதோ, குறைவான மதிப்பெண்களைப் பெறும்போதோ சில சூழ்நிலையில் கண்டிக்க இயலா சூழலுக்கு ஆசிரியர்கள் தள்ளப்படுகின்றனர். அப்படிக் கண்டித்தாலும் தகவல் அறியும் சட்டத்தை நினைத்து மனம் திறந்து செயல்பட முடியாத நிலை உள்ளது. கல்லூரி மாணவர்களுக்குத் தகவல் அறியும் சட்டம் என்பது பல சூழலில் உண்மையாக கை கொடுத்தாலும், தவறான பாதையில் செல்லும் மாணவர்கள் கையில் கத்தியைப் போன்றே மாறி விடுகிறது. வகுப்பில் கீழ்ப்படியாத ஒழுக்கமற்ற மாணவர்களிருப்பின் பல ஆசிரியர்கள் ஒதுங்கிச் செல்லும் மனநிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

"இந்தக் கல்விமுறை
புதைத்த பிணங்களைத்
தோண்டியெடுத்துக் கொண்டிருக்கிறது.
பாடத்திட்டம் படைப்பவர்கள்
சுட்டுவிரலால்
தொட்டு நுகர்வது மகரந்தமாம்.
இல்லை இல்லை போன நூற்றாண்டின் புழுதி" (வைரமுத்து,2006, ப. 89)

குறிப்பிட்ட காலம்வரை (எட்டாம் வகுப்பு) அனைவரும் தேர்ச்சி என்ற முறை இருப்பதால் மீத்திறன் குறைந்த மாணவர்கள் அடுத்த வகுப்பிற்குச் சென்றுவிடுகிறார்கள். ஆனால் தேர்ச்சி முறைக்கு வரும்பொழுது அம்மாணவர்கள் ஆசிரியர்களுக்குப் பெரும் சிக்கலாகிவிடுகிறார்கள். ஏனெனில் அரசோ அதிகாரிகளோ தேர்ச்சி விழுக்காட்டினைக் கேட்கும் பொழுது கல்வியில் பின்தங்கி விடும் மாணவர்கள் தேர்ச்சி விழுக்காடு குறையக் காரணமாகி விடுகிறார்கள். இது ஆசிரியர்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய சூழலை ஏற்படுத்தி விடுகிறது. இது போன்ற சங்கடங்களைத் தீர்க்க சில புத்திசாலி ஆசிரியர்கள் பெற்றோரை அழைத்து அம்மாணவர்களுக்குப் படிப்பு ஏறவில்லை என்று சொல்லி மாணவரைப் பள்ளியை விட்டே நிறுத்தச் செய்துவிடுகிறார்கள். கல்வி கற்றல், கல்வி கற்பித்தல் புனிதமான தொழிலாகக் கருதப்பட்டு, இறைவனுக்கு முதல் நிலையில் கற்பிக்கும் குரு அமர்த்தப்படுகிறார் அவர் இவ்வாறு செய்யலாமா என்றெல்லாம் கேட்பதால் பலனில்லை.

இது அனைத்து ஆசிரியர்களுக்கும் பொருந்துமா? என்றால் அதற்கு பதில் சொல்வது கொஞ்சம் சிக்கல்தான். ஏனெனில், ஒரு இருபது வருடங்களுக்கு முன்பு வரை ஆசிரியர் தொழில் மிக புனிதமான தொழில். மாணவர்களை நேசிக்கும் ஆசிரியர்களாக,- தங்கள் பிள்ளைகளைப்போல் - ஒவ்வொரு மாணவனையும் அவனது திறமைக்கேற்ப பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக்க யாரும் அலுத்துக்கொண்டதுமில்லை!. இன்றைய சூழல், அதற்கு நேர்மாறாக, ஆசிரியர் பணியிடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பணி பெற்றவர்கள் அடுத்துச் சிந்திப்பது தமக்கேற்ற வசதியான பணி இடமாக வேண்டுவதுதான், அதுவும் அரசியல்வியாதிகளின் தலையீடுகளுடன் என்பது மிக அதிகம்! கிராமப்புறப் பள்ளிகளில் பணி பெறும் ஆசிரியர், எப்பாடுபட்டாவது நகர எல்லைக்குள் பணியாற்ற விரும்புவது, தன் குடும்பச் சூழலுக்கேற்பப் பணியிடத்தை அமைத்துக் கொள்வது போன்ற விஷயங்களில் தான் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர். பணியிடச் சிக்கலைச் சந்திக்கும் ஆசிரியர் கல்விப்பணியில் முழுதும் ஈடுபடாத நிலை ஏற்படுகிறது. தொலை தூரத்திலிருந்து வருகின்ற நிலையில் உடலும் ஒத்துழைக்காத சூழல் பலருக்கு ஏற்படுகிறது. இந்நிலையில் மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குத் தனிப்பட்ட கவனம் செலுத்துவது என்பது இயலாததாகிறது. இது ஒருபக்கம். இதற்கு மற்றொரு பக்கமும் உள்ளது. பள்ளியில் இடைநின்ற குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து மீண்டும் பள்ளியில் சேர்த்து அவர்களுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவர்களின் அறிவுத் திறனுக்கேற்ப வகுப்பில் சேர்த்துவிடும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள். இவர்கள் தனிப்பட்ட கவனம் செலுத்த விரும்பினாலும் வாக்காளர் பட்டியல் விவரம் சேகரித்தல், சரிபார்த்தல் முதலான பிற துறை சார்ந்த பணிகளிலும் அரசு கேட்கும் பிற விவரங்களைச் சேகரிப்பதற்கும் பள்ளி நேரத்தைச் செலவிடுகிறார்கள். இதனாலும் மீத்திறன் குறைந்த மாணவர்கள் புறக்கணிக்கப்பட நேரிடுகிறது. ஆனால், கல்விக்கூடத்தில் என்னதான் மாணவர்களை ஆசிரியர் நெறிப்படுத்தினாலும வீட்டுச்சூழல் அவர்களை மாற்றிவிடுகிறது.

பெற்றோர்

குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்குப் பெற்றோர்களும் காரணமாகின்றனர். குழந்தைகளின் முதல் ஆசிரியர் பெற்றோரே. பெற்றோர் குழந்தைகளின் ஆர்வத்தினைப் புரிந்து கொண்டு அவர்களுக்குக் கவனம் சிதறாத சூழலை ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் என்னதான் நல்ல சூழலை உருவாக்கித் தந்தாலும் மாணவரின் எதிர்காலம் வீட்டுச் சூழலில் தான் பெரிதும் அடங்கியுள்ளது. குடிகார அப்பா தரும் சிக்கல், உறவுகளில் ஏற்படும் சிக்கல்,

தொலைக்காட்சி தரும் சிக்கல் இவை ஒரு சில உதாரணங்கள். பெற்றோர்கள் மாணவர்களிடம் கல்விச் சூழல் குறித்தும், ஆசிரியர் குறித்தும் நல்ல எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும். ஒரு பெற்றோர் என்ற நிலையிலிருந்து தங்களுடைய குழந்தைகளின் அறிவை உணர்வதற்குக் கூடப் பலர் முன் வருவதில்லை என்பதை ஒரு பெற்றோர் நிலையிலிருந்து இன்றைய கல்வி முறையைக் கூர்ந்து பார்த்த வைரமுத்து.

"இந்தப் பட்டறைகளில் கூர் செய்யக்
கடப்பாறைகளைக் கொடுத்தோம் அவை
குண்டூசியாய் திரும்பின" என்றும்
"இந்தக் கல்வி முறை
புதைத்த பிணங்களைத் தோண்டியெடுத்துத்
துடைத்துக் கொண்டிருக்கிறது" (வைரமுத்து, 2006 ,ப-263)

என்றும் வேதனைப்படுகிறார். மாறாக, குடும்ப வறுமைச் சூழலைக் காரணம் காட்டி மாணவர்களை இடையிடையே பள்ளியை விட்டு நிறுத்தி வேலைக்கு அனுப்புவது, படிப்பின் பயன் குறித்து அறியாமலிருப்பது, தற்காலிக வருமானத்தைப் பெரியதாகக் கருதுவது, பள்ளியில் பிள்ளைகள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளாதது, ஆசிரியரிடம் தம் பிள்ளைகள் குறித்தும் அவர்களின் கல்வி குறித்தும் விசாரிக்காமை போன்றவை பெற்றோர் தரப்பு சிக்கல்களாகும். குடும்பச் சூழலில் இன்று உறவுமுறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முந்தைய சமுதாயத்தில் கூட்டுக்குடும்பச் சூழல் இருந்தது. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, உறவுகளைப் பேணல், அனுசரித்துப் போகும் தன்மை இருந்தது. தனிக் குடும்பத்தில் சோகம், சச்சரவு, தனிமை, கணவன்-மனைவி சண்டை போன்றவற்றால் மாணவர்கள் நிம்மதியிழந்து வருகின்றனர். கூட்டுக்குடும்பச் சூழல் கல்வியை ஒரு மதிப்பாகக் கருதியது. தனிக்குடும்பச் சூழல் கல்வியை ஒரு பணி வாய்ப்பாகக் கருதுகிறது. குடும்பச் சூழலும் கல்விச் சூழலைப் பாதிக்கிறது.

மாணவன்

மூன்றாவது தரப்பு மாணவர்கள், கற்றலில் பின்தங்கிய மாணவர்கள் தனிக்கவனம் செலுத்தப்படாத சூழலில் வகுப்புச் சூழலுக்கு அந்நியமாகின்றனர். அதிக எண்ணிக்கையிலமைந்த மாணவர்களிருப்பின் இம்மாதிரியான மாணவர்கள் ஓரங்கட்டப்படுகின்றனர். அல்லது இவர்களாகவே ஒதுங்கி விடுகின்றனர். குடும்பச் சூழல் வறுமையுற்றிருப்பின், பெற்றோர் கல்லாமை நிறைந்திருப்பின் இம்மாணவர்கள் நிலை மேலும் மோசமாகிறது. வீட்டில் ஒழுக்கம் பற்றி எவ்வளவு சொல்லிக் கொடுத்தாலும், பள்ளியில் கற்றுக் கொள்ளும் ஒழுக்கம் தான் இறுதிவரை கைகொடுக்கும். கோயில் இல்லா ஊரில் குடி இருப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் பள்ளி இல்லா ஊரில் குடியிருப்பதால், எதிர்காலச் சந்ததியினர் பாதிக்கப்படுவார்கள். நான், எனது என்ற எண்ணம் நீங்கவும், ஏழை, பணக்காரன் என்ற பேதம் மறையவும் பள்ளிப்படிப்பு உதவுகிறது. ஆடிப்பட்டம் தேடி விதை என்று நம் முன்னோர்கள் அனுபவப் பாடத்தினால் சொல்லிச் சென்றார்கள்.'வைரமுத்து கவிதைகள்' என்ற கவிதைத் தொகுப்பில் 'அவனுக்கே அந்நியமானான்' என்ற தலைப்பிட்ட கவிதையில் கல்வி குறித்த அவரது பார்வைகள் பதிவாகியுள்ளன.

"பள்ளி செல்லும் சிறுவன்

ஒவ்வொரு விடியலிலும்
தான் நாடு கடத்தப்படுவதாய்
நசிந்து போகிறான்" (வைரமுத்து, 2006, பக்.261)

என்ற வரிகளில் பள்ளி செல்லுவது என்பது மாணவனது சுதந்திரத்தைக் கட்டிப்போடுவதாகவும் எல்லா உறவுகளிடமிருந்தும் அவனைப் பிரித்துத் தனிமைப்படுத்துவதாகவும் மாணவன் எண்ணுவதாகப் பதிவு செய்கிறார். இது நடைமுறை உண்மைதான். பிறந்த குழந்தைக்கு ஐந்து வயது முடிந்த பின்னரே தொடக்கக் கல்விக்கு அனுப்பி வைத்தனர். அதுவரை குழந்தை, வீட்டில் பலருடனும் இணைந்து வாழும் சூழல், தெருவில் விளையாடுவது, வாழ்க்கைப் பாடத்தை மூத்தோர்களிடம் கதை வழியாகக் கேட்பது என வளர்ந்து வந்தது. தற்போது இரண்டு வயது முடிந்த உடனேயே விளையாட, பால்வாடி, கிண்டர்கார்டன் என்ற பெயரில் பள்ளிக்கு அனுப்பும் சூழல் நிலவுகிறது. இதனால் குழந்தை மன உளைச்சலுக்கு ஆளாகி, அன்பை, அரவணைப்பை இழக்கிறது. கண்டிப்பு, கறார், கட்டுப்படுத்தப்படல், தண்டனைகள் எனத் தேவையற்றவைகளைத் திணித்து அவர்களை முடமாக்கி விடுகிறோம். இன்றைய கல்வி மழலைப் பருவம் முடியும் முன்பே தொடங்கி விடுகிறது என்பதால் இதுவும் ஒருவகைத் திணிப்பாகவே கருதப்படுகிறது. உரிய பருவத்தில் அவர்களைப் பள்ளியில் சேர்ப்பதே மாணவர்களை முழுமையுடையவர்களாக உருவாக்கும். கல்வியைத் திணித்துக் குழந்தைகளை அச்சுறுத்தி வளர்ப்பதால் குழந்தைகள் இறுதி வரை வாழத்தெரியாமல் வாழ்க்கை பிடிக்காமல், ஏதோ பிறந்தோம், ஏனோ வாழ்கிறோம் என்று பிடிப்பற்று வாழ்வதைப் படம் பிடிக்கிறார்.

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை'- கல்வி, குறள்.400

என்ற அய்யன் வள்ளுவன் கூறியது போல், இவ்வுலகில் ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே; மற்ற எந்தச் செல்வமும் கல்விக்கு ஒப்பான செல்வம் இல்லை என்ற மேன்மை பொருந்தியதான அக்கல்வி பள்ளி என்ற நிலையில் தொடங்குகிறது.

"அந்தச் சிறு பறவைகளின் சிறகுகளை
கொள்ளிக் கட்டைகளாலா கோதி விடுவது" (வைரமுத்து, 2006, பக்.262)

என்ற வரிகளில், மாணவர்கள்- சிறு பறவைகளுக்கும் அவர்களின் மன உணர்வுகள் இறக்கைகளுக்கும், கட்டாயக் கல்விமுறை கொள்ளிக் கட்டைகளுக்கும் உவமானங்களாக உணர்த்துகிறார். கவிஞருடைய இந்த வெளிப்பாடு, கல்வி மீதான அவருடைய பார்வையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. கல்விக் கூடங்களிலும், இல்லங்களிலும் குழந்தைகள் விரும்பும் சூழல் இல்லாமல் போவதற்குக் காரணம் அவர்களின் மீதான பாடத் திணிப்பு தான். ஒரு மாணவன் என்னவாக வேண்டும் என்று பெற்றோர் தீர்மானித்து அதை நோக்கி அவனை நகர்த்துகிறார்கள். நல்ல கல்வியைத் தருவது மட்டுமே பெற்றோர் கடமை. என்னவாக வேண்டுமென்பது அவனுடைய திறமையைப் பொறுத்தது.

"ஒரு நாட்டின் தலைவிதி வகுப்பறைகளில் நிர்ணயிக்கப்படுகிறது" என்று முன்னால் குடியரசுத் தலைவர் டாக்டர். ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறியுள்ளார். ஆனால் கவியரசு வைரமுத்து இன்றைய வகுப்பறையைத் தம் எழுத்துக்களால் படம் பிடிக்கிறார். கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல செய்திகளைத் திணிக்கக் கூடியதாக இருத்தல் கூடாது.

அவ்வாறு திணிக்கப்படும் செய்திகள் வாழ்நாள் முழுவதும் அவனோடு ஒன்றாமல் இருந்து கொண்டு தொல்லை தருமேயன்றிப் பயன் தருவதில்லை. ஊக்கத்தையும், ஒழுக்கத்தையும், ஒன்றுதலையும் தராத கல்வி மாணவரிடையே தாழ்வு மனப்பான்மையையே ஏற்படுத்தும்

'அவர்களோடு சேர்ந்து துக்கம் கொண்டாடத்தான்
வகுப்பறைகளின் சுவர்கள் கரும்பலகையை நெஞ்சில்
நிரந்தரமாய் அணிந்தனவோ?"(வைரமுத்து, 2006, பக்.262)

கருப்பு வில்லைத் துணியைத் துக்கம் காட்ட அணிந்து கொள்வது வழக்கம். அதுபோல மாணவர்களின் துக்கம் காட்டும் விதமாக வகுப்பறைகளில் கரும்பலகைகள் உள்ளன என இன்றைய கல்வி முறை கடினமாக இருப்பது போலவும் பொருத்தமற்றதாக இருப்பது போலவும் உள்ளது என வாதிடுகிறார். தற்காலக் கல்வி முறையில் கற்றல் என்பது இனிமை தருவதாக இல்லை. இன்னல் தருவதாக உள்ளது என்ற கோணத்தில் கவிஞர் தன் கல்வி குறித்த சிந்தனைகளை வெளிப்படுத்துகிறார். ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அந்நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சியில் தான் உள்ளது. இந்நிலையில் ஐந்தாம் வகுப்பு வரை தேர்வு எழுதாத மாணவர்கள் ஆறாம் வகுப்பிற்குச் சென்ற பின்னர்த் தேர்வு எழுதச் சிரமப்படுவார்கள். அது மட்டுமன்றி அவர்கள் எந்த அடிப்படையில் கல்வி கற்றார்கள் என்பது பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் தெரிய வாய்ப்பில்லை. எனவே, கல்வி முறையில் தேர்வு என்பது தேவைதான். உயர்கல்வி சிறப்பாகவும், தரமாகவும் அமைய வேண்டும். தேர்வென்பதே இல்லாமல் அனைவரும் தேர்ச்சி என்பது ஆசிரியர் கற்பிக்காமல் இருப்பதற்கும் வழி செய்கிறது. தேர்வு என்ற இலக்கு, கட்டுப்பாடு இல்லாமல் இருந்தால் ஆசிரியர்களும் மாணவர்களைப் படிக்கச் சொல்லி ஊக்கப்படுத்த வாய்ப்பில்லை. அனைவரும் தேர்ச்சி என்பதால் மாணவர்களின் படிக்கும் ஆர்வம் குறைந்து விடுகிறது இதனால் கல்வியில் அடிப்படைச் செய்திகளைக் கூட அறியாமல் அடுத்த வகுப்பிற்குச் செல்கின்றனர். அடுத்த சில வரிகளில்

"அவர்கள் முளையில்விதையைப் போல்
தூவப்பட வேண்டிய அறிவுகணியைப் போல்
அறையப் படுகிறது" - என்று பதிவு செய்கிறார். (வைரமுத்து, 2006, பக்.262)

இன்றைய கல்விமுறை மாணவர்களுக்குப் பூந்தோட்டமாக இல்லாமல் போராட்டமாக இருப்பதை இக்கவிதைகள் கூறுகின்றன. இந்நிலை அவர்களது வளர்ச்சியில் உறுதுணை செய்யாது பாலைவனம் போன்று வாழ்வு மாறி விடுமோ என அஞ்சுகிறார்.

"பள்ளிக்கல்வியின் திருப்தியற்ற தரத்திற்குப் பல காரணிகள். 1.அதிக அளவிலான பள்ளிகள், பள்ளிக்கெனப் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்ற விதிகளையும், தரத்தையும் பின்பற்றாமல் இருத்தல். 2.மாணவர் ஆசிரியர் வராதிருத்தல். 3.ஆசிரியரின் தூண்டுதலுக்கும் பயிற்சிக்குமான அதிக இடைவெளி. 4. ஆசிரியரின் தரம் மற்றும் செயல்பாடுகளில் குறைகளை உண்டு பண்ணுகிறது." (அ. கார்ட்டர் ஆரோக்கியராஜ், 2021) குருகுல முறையில் குருவின் வேலையே, ஒரு மாணவர் எதையெல்லாம் உண்மையென்று நம்பி வந்திருக்கிறானோ அதையெல்லாம் அழிப்பது மற்றும் சுயமாகச் சிந்திக்க வைப்பது என்ற அளவில் இருந்தது. திறமையை வளர்ப்பது எப்படியெனப் பாடம் நடத்தவில்லை. இயல்பாகவே ஒரு மாணவன் சூழலிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு தன் திறமையை வளர்த்துக் கொண்டான். அதற்கேற்ப அவன் தன்னை வடிவமைத்துக் கொண்டான்.

ஆனால், தற்போதைய கல்வி முறை பெற்றோர் ஒரு மாணவனை என்னவாக்க விரும்புகிறாரோ அதைப் போலவே உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது. பண்டைய குருகுலங்களில் குருவிடம் மாணவர்களை ஒப்படைத்து விடுவார்கள். பெற்றோர் தலையீடு இருப்பதில்லை. ஆனால் தற்போது பெற்றோரின் தலையீடு மிகுதியாக இருக்கிறது. விதை தூவப்படுதல் என்பது வளர்ச்சி ஏற்படும் ஒரு நிலை. ஆணி அறையப்படுகிறது என்பது வளர்ச்சியைத் தடை செய்யும் என்ற நிலை. அறிவு என்பது வளர்ச்சிக்கு அடிப்படை. மாணவர் அறிவு தூண்டப்படுதலும் துலங்குதலும் இன்றி முடக்கிவிடப்பட்டுள்ள கல்விமுறையைச் சாடுகிறார்.

"மனப்பாட மந்திரங்களைச் சரியாக உச்சரித்தால்தான்
சரஸ்வதி வரந்தரச் சம்மதிப்பாளாம்
தேர்வுக் கூடமென்னும் நரகச் சுரங்கந்தான்
சொர்க்கத்திற்குச் செல்லும் சுருக்கு வழியாம்"(வைரமுத்து, 2006, பக்.264)

என்ற கவிதையடிகளில் மனப்பாட முறை என்பதே இன்றுள்ளது. சிந்தனையற்ற கல்வி மனனம் செய்து நெட்டுருப் போடும் கல்வி என மதிப்பெண் நோக்கில் கல்வி கற்பிக்கப்படுகிறது.

இன்றைய தேர்வு முறை ஒருவனின் தன்னம்பிக்கையை இழக்க வைத்து முடமாக்கி விடுகிறது. பள்ளிக்கூடம் செல்வதையே குழந்தைகள் வெறுக்கிறார்கள். மாணவர்களின் மூளையை மழுங்கடிக்கும் கல்வி முறை அமைப்பே சமூகத்தில் நிலவுகிறது. எனவே தான், கவிஞர் வைரமுத்து,

"பாலகர்கள்
சிலேட்டின் ஒரு பாகத்தை
எச்சிலாலும்
மறுபக்கத்தைக் கண்ணீராலும்
துடைத்தழிக்கிறார்கள்" (2004, ப-261) என்கிறார்.

இன்றைய கல்விச் சூழல் எப்படியிருக்கிறதோ, அப்படியே நாளைய சமுதாயம் இருக்கும் என்பதை அனைவரும் உணர வேண்டும். கடுமையாக நடத்தல், குற்றம் கூறுதல், அவசரப் படுத்துதல், சொந்தப் பொருத்தப்பாடு போன்றவை இளையோரிடம் மாறுபாடுகளை ஏற்படுத்துவதால் அவர்கள் வெறுப்பு அடைகின்றனர். இதுபோன்ற நிலை தொடர்ந்து நீடிக்கும் பொழுது, சிறுவர்கள் மனநிலையில் மாற்றம் ஏற்படும் இளங்குற்றவாளிகளாக மாற்றும் அடைகிறார்கள்.

மதிப்பெண்கள் மட்டும் ஒருவனை மனிதனாக ஆக்குவது இல்லை. உண்மையான கல்வி என்பது ஒவ்வொரு காரியத்திற்கும் மற்றவர்களை எதிர்பார்த்தோ, மற்றவர்களின் ஆதிக்கத்தில் இருந்தோ தனக்கு மற்றவர்கள் வழிகாட்ட வேண்டிய நிலையிலோ இல்லாமல் முழுச் சுதந்திரத்தோடு கூடிய அறிவோடு வாழத் தகுதியுடையவனாக்குவது. இந்தச் சமுதாயத்தை மாற்றுவதற்கு ஏற்றவனாக ஒருவனை உருவாக்க வேண்டிய கல்வி ஒருவனைத் தவறான பாதையில் இட்டுச் செல்ல காரணமாகிறது. ஒழுக்கம், நாணய., நேர்மை, பொறுமை, சகிப்புத் தன்மை, சுய நலமின்மை, உதவும் மனப்பான்மை முதலான சிறந்த குணங்களை உருவாக்க வேண்டும். கல்வி என்பது மனம் உள்பட நமது உணர்வுக்

கருவிகளைச் சரியான முறையில் உபயோகிக்கக் கற்றுக் கொள்வதாகும். இத்தகைய சூழலை உருவாக்காமல் தேர்வு முறையினை ஏற்படுத்தி அதில் வெற்றி பெறுபவரே வாழ்வில் வெற்றி பெற்றவர் என்பது போன்ற மாயையை இன்றைய கல்வி சூழல் உருவாக்கி வருகிறது.

ஐரோப்பாவின் வருகைக்குப் பிறகு அடிநிலை, இடைநிலை நிர்வாகத்திற்குத் தேவையான அலுவலர்களை உருவாக்கினர். கணிதம், ஆங்கிலத்தின் தேவை கருதி நிறுவனக் கல்வி முறையைப் புகுத்தி, அதில் சான்றிதழ் பெற்றவருக்கே வேலை என்ற சூழலை உருவாக்கினர். இதனால் குருகுலக்கல்வி முறை மெல்ல மெல்ல தளர்ந்து நலிந்து ஒழிந்தது. புத்திசாலியான, சிந்தனை திறன் கொண்ட இந்தியர்கள் வேலைவாய்ப்பு என்ற மாயைக்கு ஆளாகி, ஆங்கிலக்கல்வி முறைக்கு அடிமையாகி நடை-உடை-பாவனைகளில் அவர்களைப் போலவே மாற்றம் கொண்டு அவர்களிடம் வேலைக்கு அடிமையாகி இன்றுவரை அந்த அடிமைத்தளை மாறாமல் தொடர்ந்து வருகின்றனர். இந்நிலை தொடர்ந்தால்தான் இன்றைய நிறுவனக்கல்வி பயிலும் மாணவர்களிடம் கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு என்ற மூன்று தகுதிகளும் இருப்பதில்லை. கற்பிக்கப்படும் நேரத்தில் சக மாணவனுடன் உரையாடுதல், செல்பேசி பயன்படுத்தல், உணவு உண்ணல், இடையே வெளியே எழுந்து செல்லுதல், ஆசிரியரை மதித்து நடக்காமை, குற்றச் செயல்களில் ஈடுபடுதல் போன்றன இன்றைய கல்வி முறையில் படித்து வெளிவந்த மாணவர்களிடம் உள்ளன. வேலைவாய்ப்பு நிறுவனங்கள், அறிவு, மனப்பான்மை, திறமை, நடத்தை போன்றவற்றை எதிர்பார்க்கிறது. இதையேதான் அன்றைய குருகுலங்கள் கற்றுக் கொடுத்தன. தற்காலக் கல்வி நிறுவனங்கள் இதைக் கருத்தில் கொண்டு மாணவர்களை உருவாக்க வேண்டும். அன்பு, அறிவு, ஆற்றல் நல்கி ஒரு குழந்தையை மனிதனாக்கும் கல்வி இன்று இயந்திரமாக்கும் கல்வியாக மாறிவிட்டது.

'மனித வாழ்வினை மேம்படுத்தி நல்ல ஒழுக்கத்தையும் மனவலிமையையும் விரிந்த அறிவையும் சுயவலிமையையும் தருவது கல்வியாகும்" என்கிறார் முனைவர் செல்வ சுப்ரமணியம் ராமையா, ப-48)) கல்வி ஏற்பாட்டைச் செயல்படுத்துவது அதன் வழியாக அமையும் பாடத்திட்டமேயாகும் எந்தெந்த வகுப்பில் எந்தெந்த அளவு பாடஅறிவு வழங்கப்பட வேண்டும் என்றும், எந்தெந்த அளவு பாட அறிவு வழங்கப்பட வேண்டும் என்றும், எந்தெந்த திறன்களும் வளர்க்கப்பட வேண்டும் என்றும் இது வரையறுத்துக் கூறுகின்றது. ஒவ்வொரு வகுப்புக்கும் உரிய உள்ளடக்கத்தைப் பட்டியலிட்டுத் தருகின்றது. மாணவர்களது அடையும் மதிப்பீடு செய்வதற்கான தேர்வு முறைகளையும் அமைத்துத் தருகின்றது. கல்வி இலக்கு அல்லது நோக்கத்தை அடையும் வழிமுறைகளே குறிக்கோள்கள் எனப்படும். நோக்கம் ஒவ்வொன்றையும் எய்திடப் பல குறிக்கோள்கள் வேண்டும். இவ்வாறு குறிக்கோள்களைத் தனித்தோ, பாடப்பொருள் பகுதியோடு இணைத்தோ பாடத்திட்டம் தரும். இன்றைய பாடத்திட்டங்களும் ஒரு வகையில் காரணமாக உள்ளது. உயர்ந்த குறிக்கோள்களை ஒட்டியதாக அமைய வேண்டும். மனிதனும் வரலாற்று அனுபவங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றைப் பாடமாக்க வேண்டும். உடல், உள்ளம், சமூக நன்னெறி ஆகியவை வளரப் பாடத்திட்டம் உதவும் வகையிலிருக்க வேண்டும். ஆனால், பாடத் திட்டம் எவ்வாறு உள்ளது என்பதை, பாடத்திட்டம் படைப்பவர்கள்

"சுட்டு விரல்களால் தொட்டு நுகர்வது
மகரந்தமாம்
இல்லை.....
இல்லை....

அது போன நூற்றாண்டின் புழுதி' (வைரமுத்து, 2006, பக்.-263)

கல்வி ஒருவனிடத்தில் ஒருமைப்பாட்டை வளர்த்து இயற்கையோடும் பிரபஞ்சத் தோடும் ஒன்றி வாழ வழிவகுக்க வேண்டும். இதன் மூலம் தன்னைத் தான் உணரும் சக்தியை ஒரு மனிதன் பெறுகிறான். இத்தகைய ஆற்றல் வாய்ந்த கல்வித் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். மாணவர்கள் கடின உழைப்பால் கற்க விரும்பாமை, தன்னம்பிக்கை இல்லாமை, புரியாமல் கற்பது, ஆசிரியரோடு முரண்படுவது, கீழ்ப்படியாமை போன்றவை மாணவர் தரப்பிலான சிக்கல்கள். தற்கால மாணவர்கள் தொலைதொடர்பு சாதனங்களை மிகுதியும் பயன்படுத்துகிறார்கள். வகுப்பறையில் பின்னால் அமர்ந்து கொண்டு மின்னஞ்சல் அனுப்புவது, இடையிடையே வகுப்பிலுள்ள யாருக்காவது தொலைபேசி அழைப்புகள் விடுப்பது, படம் பார்ப்பது முதலான சேட்டைகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் எட்டாம் வகுப்பிலிருந்தே இது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிகிறது. கல்லூரிக்கு வந்தவுடன் முழுச் சுதந்திரம் பெற்று விட்டதாகக் கருதுகிறார்கள்.

பாடப்புத்தகம் வாங்குகிறார்களோ இல்லையோ புதிதாக செல்பேசிகளை வாங்கியபடியே இருக்கிறார்கள். ஒரு சில ஆசிரியர்கள் கண்டிக்கும் பொழுது அதை அக்கணமே துடைத்தெறிந்து விட்டு அடுத்த ஆசிரியரின் வகுப்பில் மீண்டும் சேட்டையை ஆரம்பிக்கிறார்கள். இந்த வகை மாணவர்கள் திரைப்படங்களில் வரக்கூடிய எதிர் நிலை ஹீரோக்களால் பாதிக்கப்பட்டவர்கள். இவர்களுடைய ஆடை அலங்காரங்களிலிருந்து இவர்களை வெளிப்படையாக அறியலாம். இப்படிப்பட்ட மாணவர்களுக்கு உரிய ஆலோசனையும் அறிவுரையும் தரக் கூடிய நிலை உள்ளது. எனவே ஆசிரியர்கள் மற்றொரு வகையில் பெற்றோர்களாகவும் செயல்பட வேண்டிய நிலையில் உள்ளனர். வீட்டிலேயே தங்கள் பிள்ளைகள் இது போன்ற ஆடைகளைப் பயன்படுத்தத் தொடங்கும் போது பெற்றோர்கள் கண்டித்துத் திருத்த முயல வேண்டும். கல்வியறிவற்ற ஏழைகளின் பிள்ளைகள் தங்கள் பிள்ளைகள் படிக்கச் செல்வதையே பெருமையாக நினைப்பதால் இத்தகைய மாற்றங்களைப் பெரிதுபடுத்துவதில்லை. இப்பிள்ளைகள் பெற்றோரின் கனவையும் தங்கள் எதிர்காலத்தையும் சேர்த்துச் சிதைத்து விடுகிறார்கள். இன்றைய தேர்வு முறை ஒருவனின் தன்னம்பிக்கையை இழக்க வைத்து முடமாக்கி விடுகிறது. பள்ளிக்கூடம் செல்வதையே குழந்தைகள் வெறுக்கிறார்கள். பள்ளிக் கூடங்களின் நிலை இது என்றால் பல்கலைக் கழகங்களின் நிலை என்ன என எண்ணுகையில்

"இந்தப் பல்கலைக்கழகங்கள்
வேலையில்லாதவர்களை
உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளா?" (வைரமுத்து, 2006, பக்.264)

என்று வினா எழுப்புகிறார். பொருள் உற்பத்தி போல மாணவர்கள் உற்பத்தி செய்யப்படுகிறார்கள் என்று சுட்டுகிறார். கல்வித்தரம் பற்றிய கவலை யாருக்கும் இல்லை என்பதே அடுத்த வரிகளில் கூறுகிறார்;

"இந்தக் கல்வியால் லாபம்
மூக்குக் கண்ணாடியில்
மூலதனம் போட்டவனுக்குத்தான்" (வைரமுத்து, 2006, பக்.264)

எனக் கல்விபெற்ற மாணவனுக்குக் கல்வியால் எவ்வித இலாபமும் இல்லை என்கிறார்.

"மூளையின் பயன்படுத்தாத பரப்புகளைக்
கத்தரித்து எடுத்துவிட்டது இந்தக் கல்வி"(வைரமுத்து, 2006, பக்.266)

என்று சுயசிந்தனையற்ற கல்வி இன்றைய கல்வி எனப் பதிவு செய்கிறார். புத்தகங்களின் சுமைமட்டும் ஏராளம். முதுகில் சுமை ஏற்றப்படுகிறது தாராளம். ஆனால் மூளையில் ஏற்றப்படுகிறதா என்றால் வேலையில்லாப் பட்டதாரிகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் தெரியும். இவ்விதமாகப் பள்ளிக்கூடங்கள் முதல் கல்லூரி உள்ளிட்ட பல்கலைக் கழகங்கள் வரையிலும் கல்வி என்பது வாழ்வுக்கு உதவாததாய் இருப்பதாய்க் குமுறுகிறார். வாழ்வை ஒட்டிய பாடத்திட்டக் கல்வியே பயனுள்ள கல்வி என உணர்த்துகிறார். அக்கல்விமுறையும் தாய்மொழி வழியே நடைபெறல் நல்லது என்கிறார். "அவன் கலைமகளுக்குப் பாடஞ் சொல்லுகிறான்"என்ற தலைப்பிட்ட கவிதையில்,

"படிப்பை முடித்துவிட்டுப் பாதை தெரியாத பட்டதாரிகள்" (வைரமுத்து, 2006, பக்.26)'

நூல் எவ்வளவு நுண்மையானதாக இருந்தாலும் ஆசான் எவ்வளவு நுண்மையாகக் கற்பிப்பினும், கற்பவனின் வேட்கையளவு, முயற்சியளவு, உணர்திறன் அளவு ஆகிய இவற்றின் அடிப்படையிலேயே கல்விநலன் அமையும்"(மா. தாமரைச்செல்வி, 2019). "வேலையில்லா இந்த இளைஞர்கள் சிம்மாசனம் கேட்கவில்லை. வேலை என்ற ஊன்றுகோல் கேட்டுத்தான் ஓலமிடுகிறார்கள். அவர்கள் இப்போது வாழ்வதெல்லாம் வாக்காளப் பட்டியலில் மட்டும் தான். அதிலும் சிலர் விடுபடப் போகிறார்கள். இத்தகைய நிலைமைக்கெல்லாம் காரணமாக இருக்கக்கூடியவர்கள் ஆட்சியாளர்களே என்று எச்சரிக்கை விடுப்பதாய் அமைவதைக் காணலாம்." (அ. கார்ட்டர் ஆரோக்கியராஜ், 2021)

"வாழ்க்கைக்குள் முக்குளிக்கச் சொல்லித் தராத
இந்தக் கல்வி முத்துக்களென்று
குமிழிகளைத் தானே நோக்கச் சொல்கிறது"(வைரமுத்து, 2006, பக் 21)

என்று பட்டதாரியின் வாழ்வு கல்வியால் முன்னேற்றம் ஏற்படாது என்று கங்கணம் கூறுகிறார்.

"பள்ளிக்கூடத்தில் உனக்கு
எழுத்துக்களின் கட்டாய அறிமுகந்தான்"(வைரமுத்து, 2006, பக்.259)

"வாழ்க்கையை வாசிக்க நீ
தெருவுக்குத் தானே திரும்பி வரவேண்டும்"(வைரமுத்து, 2006, பக்.259)

என்று மீண்டும், கல்வி முறையைச் சாடிப் பாடுகிறார் கவிஞர். இது போன்ற நிலை தொடர்ந்து நீடிக்கும் பொழுது, சிறுவர்கள் மனநிலையில் மாற்றம் ஏற்படும் இளங்குற்றவாளிகளாக மாற்றும் அடைகிறார்கள். பள்ளியில் புறக்கணிப்பு, பெற்றோரின் சிடுசிடுப்பு, சகமாணவர்களின் ஏளனப்பார்வை போன்றை அவனை அந்நியமாக்கி விடுகின்றன. பள்ளியும், ஆசிரியரும் வெறுப்பை ஏற்படுத்தும் போது திசை மாற்றம் ஏற்பட்டு முறை தவறிப் போகிறார்கள். கண் முன்னே வீணாகிப் போய்க் கொண்டிருக்கும் இளைய சமுதாயத்தைக் கண்டு தம்மளவில் ஆசிரியர்கள் திருத்த முயன்றாலும் ஒரு சில மாணவர்களே உணர்ந்து நலவழியடைகின்றனர். சில கல்லூரி மாணவர்கள் படித்தால்

வேலை கிடைக்கப் போகிறதா என்று எதிர் கேள்விகள் கேட்டு, படித்தாலும் வேலையில்லை, படிக்காவிட்டாலும் வேலையில்லை அதற்கு ஓரளவு படித்தால் போதாதா என்று எதிர் கேள்விகள் கேட்கின்றனர். சமூகம், கல்வி என்பது மதிப்பு சார்ந்தது என்ற மனநிலையிலிருந்து வேலை சார்ந்தது என்றே அவர்கள் மனத்தில் பதிவை ஏற்படுத்தி வைத்திருக்கிறது.

இப்படி இவர் இலக்கியம் காட்டும் சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏதும் நிகழுகிறதா என வினாவுமிடத்து எப்போதும் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன எனலாம். "கல்வி இன்றைய நடைமுறைகளை உள்ளடக்கியதாகவும், நாளைய தலைமுறைக்குப் பயன்தரக் கூடியவையாகவும் இருக்க வேண்டும். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்க வேண்டும். முதியவர்களுக்குப் படிப்பினையும், சிறியவர்களுக்குத் தூண்டுதலையும் ஏற்படுத்த வேண்டும். பாடத்திட்டங்களை வயதிற்கேற்றாற்போல் மாற்றி அமைக்க வேண்டும். வளர்ந்து வரும் அறிவியல் யுகத்தை உள்வாங்கிக் கண்டுபிடிப்புகளை ஆதரிக்க வேண்டும். இளம் விஞ்ஞானிகளை உருவாக்கும் சுய அறிவை வெளிக்கொணரும் கல்வி வேண்டும்." (முனைவர் மு. நாகபாண்டி, 2019)"வகுப்பறையில் கற்பித்தல் செயற்பாடுகளில் மிகக்குறைந்த விருப்பத்துடன் ஈடுபடுகின்ற மாணவர்களின் நடத்தைகளை முதலில் அவதானிக்க வேண்டும். எனவே சிரேஷ்ட இடைநிலைப் பிரிவில் கற்றலை வழங்கும் ஆசிரியர்கள் ஒழுக்கரீதியான நடத்தைகளை இனம்கண்டு அவர்களில் கவனம் வைத்து கற்றலில் உள்வாங்க வேண்டும். இதன் பொருட்டு விழுமியக் கருத்துக்களை வழங்குதல், நற்சிந்தனைகள் வழங்குதல், வழிகாட்டல் ஆலோசகரின் கருத்துக்களை வழங்குதஙல, விசேட கற்பித்தல் வழங்குதல் போன்ற பிரச்சினைகளை இனங்கண்டு குறைத்துக் கொள்ள உதவும்." (Jesuiya Dilani 2017)வைரமுத்து கவிதை 33 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பெற்றது. ஆனால் இன்று சில செயல்பாடுகளில் கீழ்வரும் நிலைகளில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

தொடக்கக் கல்வி அளவில் புத்தகச் சுமை இன்று குறைக்கப்பட்டுள்ளது. மும்முறை பாடத் திட்டம் என்ற திட்டத்தின் மூலம் புத்தகம் குறைத்து, சுமை தளர்த்தப்பட்டுள்ளது.

தேர்வு எனும் அச்சம் தொடக்க நிலைக் கல்வியில் இப்போது இல்லை. 'செயல்வழிக் கற்றல்' என்ற முறையில் அவரவர் நிலையில் அவரவர் கற்றல் அட்டைகள் கொண்டு கல்வி கற்றுப் பாடத்திறன் முடிந்தால் தேர்வு அட்டையை எடுத்து தேர்வு எழுதலாம் என்ற நிலை தற்போது அரசுப் பள்ளிகளில் நடைமுறையில் உள்ளது.

பல்கலைக்கழகங்களில் இன்று செயல்வழிக் கற்றலும், களப்பயணக் கற்றலும் பின்பற்றப்படுகின்றன. நிர்வாகம் சார்ந்த படிப்பு என்றாலும் பொறியியல் கல்வி என்றாலும் கற்கும்போதே செயல்திட்டம் மேற்கொள்வதும் களப்பயணம் சென்று கற்றல் தெளிவு பெற்றலும், தொழில்முறைப் பார்வை - தொழிற்சாலை சென்று மேற்கொண்டு அதுபற்றித் தெளிவுக் கட்டுரைகள் ஒப்படைவு செய்வதும் இன்றைய கல்வியில் நடைமுறையில் உள்ளன.

இவையெல்லாம் இன்றைய சமுதாயத்தில் கல்வியில் ஏற்பட்ட விழிப்புணர்வுகள் தாம்.

துணைநின்றவை

- வைரமுத்து, (2006), வைரமுத்து கவிதைகள் (கி.பி.2000 வரை கவிஞர் எழுதிய கவிதைகளுள் அறிஞர்கள் தேர்ந்தெடுத்த தொகுப்பு), சூர்யா வெளியீடு, டிரஸ்ட்புரம், சென்னை. எட்டாம் பதிப்பு - 2006. முதற்பதிப்பு: சூலை 2000
- **செல்வ சுப்ரமணியம் ராமையா, (ஜீலை 2021), சங்க இலக்கியத்தில் கல்வி (**Education in Caṅkam Literature **தமிழ்ப்பேராய்வு ஆய்விதழ் Journal of peraivu (**eISSN : 2636-946X **&** Print ISSN : 2286-8379 **) Vol. 10 No. 1 (2021), 2021-07-20 ப.48**
- கார்ட்டர் ஆரோக்கியராஜ் அ., (ஜீலை 2021), கல்வி எனது உரிமை (Education my Right) தமிழ்ப்பேராய்வு ஆய்விதழ் Journal of peraivu (**eISSN :2636-946X** & **Print ISSN : 2286-8379**) Vol. 10 No. 1 (2021) , 2021-07-20 ப.122
- கார்ட்டர் ஆரோக்கியராஜ் அ., (ஜீலை 2021), கல்வி எனது உரிமை (Education my Right) தமிழ்ப்பேராய்வு ஆய்விதழ் Journal of peraivu (**eISSN :2636-946X** & **Print ISSN : 2286-8379**) Vol. 10 No. 1 (2021) , 2021-07-20 ப.123
- நாகபாண்டி மு., (ஜீலை 2019), வைரமுத்து கவிதைகளில் கல்விச் சி்ந்தனைகள் (Education thoughts in vairamathu poems) சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் http://www.shanlaxjournals.in/ மலர் 3, இதழ் 3, 2019. ISSN 2454 -3993. ப.49
- தாமரைச்செல்வி மா., (அக்டோபர் 2019), வள்ளவர் காட்டும் கல்விக் கொள்கை – ஓர் ஆய்வு (Education policy in valluvar) அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் https://www.aranejournal.com/article/5830 ISSN 2582-399x
- Jesuiya Dilani, (October 2017), பாடசாலை மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் வினைத்திறனான கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம், (The impact of school students' moral problems on effective learning), BODHI International Journal of Research in Humanities, Arts and Science online, Peer reviewed, Refereed and Quarterly Journal No : 1 October 2017 ISSN : 2456 CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES (CRRPS) www.crrps.in | www.bodhijournals.com Research in Humanities, Arts and Science and Quarterly Journal 2456-5571 ப.80.

****

கற்றல் கற்பித்தலில் 'எக்ஸ்ப்ளைன் எவ்ரிதிங்' செயலியின் பயன்பாடு The Use Of Explain Everything In Learning Process

த. நந்தினி | D. Nanthini

Student of Tamil Department, Sultan Idris Education University, Malaysia
nanthinidarman99@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

Explain Everything என்பது கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் ஒரு செயலியாகும். Explain Everything செயலி எல்லா சாதனங்களிலும் மற்றும் அனைத்து பிரபலமான கணினிகளிலும் செயல்படுகிறது. அதாவது, iOS, Chrome OS மற்றும் Android. இணைய அணுகல் மற்றும் வலை உலாவி கொண்ட நவீன சாதனம் அல்லாத சாதனங்களிலும் இதை இயக்க முடியும். கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் அனைத்து அம்சங்களையும் இந்தச் செயலி உள்ளடக்கி உள்ளது. பாரம்பரிய முறைகளான கரும்பலகை அல்லது

வெண்பலகை பயன்படுத்துவது போலவே இதன் பயன்பாடும் அமைந்துள்ளது. ஆனால், பாரம்பரிய முறைகளில் நாம் தொழில்நுட்பத்தை உட்புகுத்த வேண்டுமென்றால் அதற்கான பயிற்றுத் துணைப்பொருட்களைத் தனித்தனியாகத் தயார் செய்ய வேண்டும். ஆனால் இந்த Explain Everything செயலியின் மூலம் கற்றல் கற்பித்தலை நடத்தினால் கற்பித்தலுக்குத் தேவையான அனைத்துப் பயிற்றுத்துணைப் பொருட்களும் ஒரே திரையில் அமைந்திருக்கும். சொற்கள், விளக்கங்கள் , படங்கள் , ஒலிநாடாக்கள் , காணொளிகள் இவையாவும் ஒரே திரையில் அமைந்திருக்கும். பாடத்தைத் தொடங்குவது முதல் மதிப்பீடு வரையிலும், அனைத்தையும் இந்தச் செயலியின் பயன்பாட்டின் மூலம் ஒரே திரையில் காணப்படும். பீடிகை, கற்பித்தல் நடவடிக்கை, பாடம் தொடர்பான கலந்துரையாடல் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றினை மையப்படுத்தியே செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த செயலியானது மாணவர்கள் கற்றல் கற்பித்தலை மேற்கொள்வது, தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான ஒரு பயிற்றுமுறை என்பதால் மாணவர்களின் அகத்தூண்டலினை மேம்படுத்திக் கற்றல் மீதான அவர்களின் கவனத்தை மேலும் ஊக்குவிக்கிறது. வகுப்பறையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆக்கபூர்வமான இலக்கிய கற்றல் கற்பித்தல் அனுபவத்தைப் பெற Explain Everything செயலி பெரிதும் துணை புரிகிறது. இதனால்தான் உலகெங்கிலும் உள்ள பல ஆசிரியர்கள் தங்கள் வகுப்புகளில் Explain Everything செயலியைப் பயன்படுத்துகின்றனர்.

Abstract

The Explain Everything programme is a learning and teaching processor. The Explain Everything programme is compatible with all common devices and PCs. iOS, Chrome OS, and Android are the three operating systems in question. It may also be operated on non-modern devices that have access to the Internet and a web browser. This processor has all of the capabilities needed as a foundation for educational exercises. Its use is similar to that of traditional methods such as blackboard or whiteboard. But if we want to incorporate technology into traditional methods, we have to prepare the training materials separately. But if you teach learning through this Explain Everything processor, all the teaching aids needed for teaching will be located on the same screen. Words, descriptions, pictures, audios, and videos are all located on the same screen. From the beginning of the lesson to the evaluation, everything is displayed on a single screen through the use of this processor. The processor is designed to focus on pedagogy, teaching activity, lesson-related discussion and evaluation. Furthermore this processor is an information technology based tutorial that teaches students learning to improve their motivation and further encourage their focus on learning. The Explain Everything processor greatly assists teachers and students in gaining a creative literary learning-teaching experience in the classroom. This is why many teachers around the world use the Explain Everything processor in their classes.

திறவுச்சொற்கள் (Keywords) : Explain Everything, Online And Offline Classes, Learning And Teaching

முன்னுரை

நாட்டின் சிறந்த சமூகக் கட்டமைப்பிற்கு உதவுவதில் கல்வி ஒரு முக்கியமான கருவியாகும். ஒரு சமூகத்தைக் கற்பிப்பதற்கான முக்கிய கடமை அதன் குடிமக்களை மேம்படுத்தும் கல்வியில் அடங்கியிருப்பதால், ஒரு சமூகத்தின் சித்தாந்தத்தைப் போலவே ஒரு சமூகத்தின் தேவைகளும் மாறுவது இயல்பு. இதன் விளைவாக, கல்வி முறையிலும் கற்பித்தல் மற்றும் கற்றல் முறையிலும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன. 21-ஆம் நூற்றாண்டின் கற்றல் மற்றும் கற்பித்தல் வளர்ச்சியின் காரணமாக, இன்றைய மாணவர்களின் அதிவேக சிந்தனைக்கு ஊட்டமளிப்பதற்காக, ஆசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும் முறைகளில் புதிய சிந்தனைகளைப் புகுத்த வேண்டும் என்பது அனைத்து நாடுகளிலும் உள்ள கல்வியாளர்கள் மற்றும் பயிற்றுநர்களைக் கோருவதை நாம் காணலாம். தொழில்நுட்ப பரிமாணத்தின் வளர்ச்சியில், பள்ளி மற்றும் கற்றல் சூழலில் கருவிகளின் பயன்பாட்டை மாணவர்கள் எதிர்பார்க்கிறார்கள் (சண்முகம், 2017). கற்றலின் முழுமையான பலனே கற்பித்தலில்தான் உள்ளது. கற்பித்தல் இல்லாத கற்றல் வீணானது. ஆகவே, கற்றலின் நோக்கமே கற்பித்தல்தான் என்பதை மிகத் தெளிவாகவே நமக்கு உணர்த்துகிறது. பாரம்பரிய கல்விமுறையான நேரடி வகுப்பறை கற்பித்தல் முறை பயனுள்ள வகையில் அமைந்திருந்தாலும், தொன்றுதொட்டுப் பயன்படுத்தி வரும் ஏட்டுக் கல்வியிலேயே தொடர்ந்து கல்வியைக் கற்பிப்பது மாணவர்களுக்குச் சலிப்பை ஏற்படுத்துவதோடு தற்காலச் சூழ்நிலையில் அவர்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அதுவும், உலகம் முழுவதும் உள்ள பெரும்பாலான நாடுகளில் ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை கொரோனா பெருந்தொற்று காரணத்தால் அனைவரும் இணைய வழிக் கல்வி கற்கின்றனர். அந்த வகையில் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினைக் கொண்டு நவீன கற்பித்தல் முறைகள் குறித்து ஓர் ஆசிரியர் அறிந்திருப்பது இன்றைய காலத்தின் தேவையாகும். கற்பித்தலின் தரத்தை மேம்படுத்தல், கற்பித்தலின் விளைவாக சிறந்த அணுகுமுறைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் விளைதிறன் மிக்க கற்பித்தலை வகுப்பறையில் முன்னெடுத்தல் போன்றவற்றுக்கு நவீன வகுப்பறைக் கற்பித்தல் முறைமைகள் குறித்த அறிவு மிக இன்றியமையாததாகும் (பிரஷாந்தன், 2015). தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினைக் கொண்டு தமிழ் மொழி இலக்கியம் கற்பித்தலில் புத்தாக்கம் ஒன்றை மாணவர்களுக்குச் செயல்படுத்த வேண்டும்.

இலக்கியம்

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சி கொண்ட உலகின் சிறந்த இலக்கியங்களில் ஒப்பற்றதாகத் திகழ்கின்றது (வாசுகி, 2018). இது வாழ்வின் பல்வேறு கூறுகளைத் கொண்டுள்ள பழம் பெரும் இலக்கியமாகும். வெண்பா, குறள், செய்யுள், கவிதை, கட்டுரை, பழமொழி, சிற்றிலக்கியங்கள், புதினம், சிறுகதை எனத் தமிழ் இலக்கியங்கள் பல்வேறு வடிவங்களில் வளர்ச்சிக் கண்டுள்ளன.

தொழில்நுட்பம்

தொழில்நுட்பம் என்பது ஒரு குறிப்பிட்ட முறையில் சில பணிகளைச் செய்ய இயந்திரங்களில் பதிக்கப்பட்டு இருக்கக்கூடிய செயல்முறைகளின் அறிவு. அடிப்படைக் கருவிகள் தொழில்நுட்பத்தின் மிக அடிப்படையான வடிவங்களுடன் கூடத் தயாரிக்கப்படுகின்றன. இருபதாம் நூற்றாண்டுக்கு முன்னர், "தொழில்நுட்பம்" என்ற சொல் பயனுள்ள கலைகளின் ஆய்வு அல்லது தொழில்நுட்ப அறிவின் முன்னேற்றத்தைக் குறிக்கிறது. தொழில்நுட்பம் என்பது ஒரு சிக்கலான சிக்கலைத் தீர்க்கப் பயன்படும் மாற்றம், உருவாக்கம், பயன்பாடு, கருவி மற்றும் நுட்பங்கள், அமைப்பு, அறிவு மற்றும் இயந்திரங்கள் ஆகும். இது ஒரு

மனிதனின் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கிறது. தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்துடன், வாழ்க்கை மிகவும் எளிதாகிவிட்டது (Tamil, 2019).

புத்தாக்கச் சிந்தனை நிறைந்த கற்பித்தல் வழிகாட்டலின் வழி மாணவர்களின் அறிவு , உணர்வு, நடத்தை ஆகியவை மேம்படும் என்று கல்வி ஆய்வாளர் (ரஷீட், 2018) குறிப்பிடுகின்றார். ஆசிரியர்களின் புத்தாக்கச் சிந்தனை இல்லாத வகுப்பறைகளில் கல்வியில் நாட்டமில்லாத, அறிவுக்கு வேலை கொடுக்காத மாணவர்களே நிறைந்திருப்பர். தற்காலச் சூழலில் மாணவர்களிடத்தில் இலக்கியப் பயன்பாடு சற்று மந்த நிலையிலேயே உள்ளது எனலாம். எனவே, தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினைக் கொண்டு புத்தாக்கம் வழி மாணவர்களிடையே இலக்கியத் தொடர்பான ஆற்றலை மேம்படுத்துவதற்காக Explain Everything எனும் செயலி பயனபடுத்தலாம். இந்தச் செயலியின் வழி கற்பிக்கப்படும் இலக்கியக் கூறுகள் மாணவர்களை இலகுவாகச் சென்றடையும். மாணவர்கள் இலக்கியத்தைக் கற்பதில் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலான சில கற்றல் கற்பித்தல் அம்சங்கள் இந்தச் செயலில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

படம் 1 : Explain Everything செயலியின் சின்னம்

படம் 2: Explain Everything செயலி விளக்கப்படம்

செயலியின் செயல்முறை

சிக்கலான யோசனைகளைப் பார்வைக்கு மூளைச்சலவை செய்ய மற்றும் மதிப்புமிக்க கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள எல்லையற்ற டிஜிட்டல் இடத்தைத் வழங்குகிறது.

அ. Drive Google மற்றும் Dropbox லிருந்து நேரடியாக ஊடகங்களைக் கொண்டு வந்து அவற்றை ஏற்றுமதி செய்யலாம்.

ஆ. காணொளியின் மூலம் செய்திகளையும் கதைகளையும் உருவாக்க தொடர்புகளையும் குரல் பயன்பாட்டையும் அமைக்கலாம்.

இ. எந்த சாதனமானாலும் எந்த இடத்திலானாலும், நிகழ்நேரத்தில் சேர இணைப்பு அல்லது திட்டக் குறியீட்டைக் கொண்டு விருந்தினர்களை அழைக்கலாம். எல்லாவற்றையும் பதிவுசெய்து பின்னர் வீடியோவாகப் பகிரலாம்.

ஈ. கேன்வாஸிலிருந்து கலவையான ஊடகமான திரைப்படங்கள், புகைப்படங்கள், ஆவணங்கள் மற்றும் ஓவியங்களுடன் மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும், ஈடுபடுத்தும் மற்றும் ஊக்குவிக்கும் அமைப்பில் இருக்கும்.

உ. இடுபணிகளை PDF, MP4 அல்லது திருத்தக்கூடிய திட்டங்களாகப் பகிரலாம். இதனை ஒரு வலை வீடியோ இணைப்பாகப் பகிர்ந்து கொள்ளலாம். மற்றவர்கள் விளக்க வீடியோக்களை ஸ்ட்ரீம் செய்யலாம்.

ஊ. ஒரு குழுவின் அல்லது நிறுவனத்தின் உள்ளடக்கக் கூறுகள் மற்றும் அதன் அம்சங்களை மைய இடத்திலிருந்து அணுகுவதை எளிதாகவும் வசதியாகவும் கட்டுப்படுத்தலாம்.

Explain Everything செயலி வாயிலாகத் தமிழ் மொழி இலக்கியம் கற்றல் கற்பித்தல்

Explain Everything செயலி 21ஆம் நூற்றாண்டு கற்றல் கற்பித்தலை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளதால் இது மாணவர்களின் சலிப்பையும் போக்கிப் பாடத்தின் மீதான அவர்களின் ஆர்வத்தினையும் மேம்படுத்தி மகிழ்ச்சியான கற்றல் கற்பித்தல் சூழலினை உருவாக்குகிறது. பல தொழில்நுட்ப அடிப்படையிலான பயிற்சி கருவிகளைச் சேர்ப்பதன் மூலம், இது கற்றல் செயல்முறையை எளிதாக்குகிறது. பள்ளியில் கற்பிப்பதைத் தவிர கைப்பேசி, கணினி அல்லது தட்டைக் கணினி பயன்படுத்தி வீட்டிலிருந்து அதே பாடத்தைக் கற்பிக்கலாம். இன்றைய சூழலில், அனைத்து மாணவர்களும் இணைய வழிக் கல்வி கற்பதால் தங்கள் வகுப்பிற்காக முழுக்கவும் தொழில்நுட்ப சாதனங்கலான கைப்பேசி, கணினி போன்றவற்றைதான் பயன்படுத்துகின்றனர். முழுவதுமாகத் தொழில் நுட்பம் மற்றும் இணையத்தை அடிப்படையாகக் கொண்டும் இந்தச் செயலி செயல்படுவதால் தற்கால மாணவர்களின் தொழில்நுட்பம் தொடர்பான ஆற்றலுக்குச் சமமாக ஈடு கொடுக்கும் வகையில் இச்செயலி அமைகிறது. மேலும், இச்செயலியில் ஆசிரியர்கள் மாணவர்களின் இலக்கிய அறிவை சோதிப்பதன் மூலம் மாணவர்களுக்கு அந்தப் பாடத்தைப் பற்றிய தகவல்கள் அறிய முடிந்ததா இல்லையா என ஆசிரியர்கள் தீர்மானித்து அவர்களின் புரிதல் திறனை அதிகரிக்கவும் வளப்படுத்தல் நடவடிக்கையைத் தயார் செய்யவும் வழிவகுக்கிறது. அவ்வகையில், Explain Everything செயலின் மூலம் மாணவர்கள் எவ்வாறு குறுந்தொகை இலக்கியத்தைக் கற்றுக்கொள்ள முடியும் என்பதனைக் காணலாம்.

1. செயலியின் அம்சங்கள்

Explain Everything செயலில் பல செயலி அம்சங்கள் செயல்படுகின்றன. இவை அனைத்தும், மாணவர்களுக்கு ஆசிரியர் மிகச் சுலபமாக வகுப்பில் கொண்டு சேர்க்க முடியும். ஏனெனில், மிகவும் வித்தியாசமான மற்றும் ஆக்கப்பூர்வமான அம்சங்களின் படைப்புகளின் வழி வகுப்பில் மாணவர்களின் கவனத்தை ஈர்க்க முடியும்.



படம் 3 : படங்கள் மற்றும் காணொளிகளை இணைத்தல்

இலக்கிய வகுப்பு பாடத்திட்டத்திற்காகச் சேகரித்த சங்க இலக்கியமான குறுந்தொகை தொடர்பான படங்களையும் காணொளிகளையும் இணைக்கலாம். குறுந்தொகை சங்க கால பாடல்கள் ஆகும். பொதுவாக, தலைவன் தலைவி பாடல்களைக் கொண்டிருக்கும். குறுந்தொகைப் பாடல்கள் செய்யுள் முறையில் இயற்றபட்டிருக்கும். இதனால், அந்த பாடலின் விளக்கத்தை சற்று புரிந்துகொள்ள மாணவர்கள் சிரமப்படுவர். இந்த சிக்கலைக் களைய, ஆசிரியர் இந்த செயலியைப் பயன்படுத்தி, வகுப்பில் மாணவர்களுக்குக் குறுந்தொகைப் பாடல் தொடர்பான காணொளிகளையும் படங்களையும் இணைத்துக் கொடுக்கலாம். படங்களின் கதாபாத்திரத் தோற்றங்களின் மூலமும் காணொளியின் விளக்கத்தின் மூலமும் மாணவர்கள் சுலபமாகக் குறுந்தொகை விளக்கத்தைப் புரிந்து கொள்வர்.



படம் 4 : Sticky Notes

மேலும், sticky notes என்ற பாடக் குறிப்பு அட்டையில், மாணவர்களும் ஆசிரியர்களும் இச்செயலில் பாடம் தொடர்ப்பான குறிப்புகளைக் கற்றல் கற்பித்தல் சமயத்தில் குறித்து வைத்து கொள்ளலாம். பல வண்ணங்களுடனும், வடிவங்களுடனும் தானியங்கி முறையில் நிறைய குறிப்பு அட்டைகள் உள்ளதால், மாணவர்கள் தங்கள் வசதிக்கேற்பக் குறிப்பு எடுத்து கொள்ளலாம். இதனால், பல முறை வாசிக்கும் உணர்வு மாணவர்களிடையே அதிகரிக்கும்.



படம் 5 : Clipart

இதுமட்டுமல்லாது, clipart என்ற சிறுபட இணைப்பும் இச்செயலி அமசங்களில் இணைக்கப்பட்டுள்ளது. சிறு சிறு படங்கள் அதாவது, emoji என்று அழைக்கப்படும் படங்கள் நிறைய சேகரிக்கப்பட்டுள்ளன. மரங்கள், செடிகள், மலர்கள், மலைகள், விலங்குகள், பழங்கள், பருவங்கள் போன்ற பலவகையான சிறுபடங்கள் இந்த clipart யில் இணைக்கப்பட்டுள்ளன. குறுந்தொகை இலக்கியத்தில் பெரும்பாலும் இயற்கை வளங்கள் (திணை), இடம் (துறை), உணர்ச்சி போன்றவை அதிகமாகக் காணப்படும். அதனால், இந்த சிறிய படங்கள் யாவும் ஆசிரியர் குறுந்தொகைப் பாடத்தில் சேர்த்து மாணவர்களுக்குக் கற்று

கொடுத்தால், பாடத்திட்டம் மேலும் ஒரு மகிழ்ச்சியினையும் பாடத்தில் ஈர்ப்பையும் ஏற்படுத்தும்.



படம் 6 : ஒலிப்பதிவு

ஆசிரியர்கள், இலக்கியம் சம்பந்தப்பட்ட ஒலிப்பதிவை இந்த வெண்பலகையில் இணைத்துக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, குறுந்தொகை குறித்த பாடலை ஆசிரியரே தனது குரலில் பதிவு செய்து இதில் பதிவேற்றம் செய்யலாம். மாணவர்களையும் தங்கள் குரலில் குறுந்தொகைப் பாடலை பாடி இதில் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தலாம். இதனால், மாணவர்கள் குறுந்தொகைப் பாடல் மனனம் செய்யும் வேளையில் அந்த குறுந்தொகையில் விளக்கம், கருத்துக்கள், வாழ்வியல் கூறுகளை நினைவில் வைத்துக்கொள்ள உதவும்.



படம் 7 : இணையத்திலிருந்து பதிவிறக்கம்

இலக்கியப் பாடம் தொடர்பான மேலும் பல படங்கள் மற்றும் காணொளிகளை அவ்வப்போது பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பாடம் நடத்தும்போது, மாணவர்களையும் சோதித்துப் பார்க்கும் வகையில், இணையத்திலிருந்து குறுந்தொகை பற்றிய தகவல்களை எடுக்க ஆசிரியர் வலியுறுத்தலாம். இதனால், நேர விரயத்திலிருந்து மட்டுமல்லாது, வகுப்பில் மாணவர்கள் பாடத்தின் அடைவு நிலை குறித்தும் ஆசிரியர் அதே நேரத்தில் அறிய முடியும்.

படம் 8 : குறுந்தொகை தொடர்பாக மாணவர்களுக்குத் தயார் செய்திருக்கும் படம்

மேலே உள்ள படம், Explain Everything செயலியின் அம்சங்களின் மூலம் உருவாக்கப்பட்ட குறுந்தொகைப் படைப்பாகும். மாணவர்களை இலக்கியப் பாடத்தில் ஈடுபடுத்த நெகிழ்வான தொடர்பு கொள்ளும் கருவியைப் பயன்படுத்த வேண்டும். இலக்கிய கற்றல் வகைகளில் மாணவர்களை ஈடுபடுத்த இலக்கிய ஆவணங்கள், புகைப்படங்கள், காணொளி, ஓவியங்கள் மற்றும் பலவற்றை இச்செயலியில் உள்ளடக்கலாம். உதாரணமாக, மேலே உள்ள குறுந்தொகைப் படைப்பு. பாடத்தின் தலைப்பு (குறுந்தொகை), காணொளி, விளக்கம், படங்கள் போன்ற இப்படைப்பினைக் கொண்டு மாணவர்களிடம் கற்றுகொடுக்கும் பொழுது மாணவர்கள் ஆர்வம் கொண்டு பாடத்தில் முழு கவனம் செலுத்துவர். காணொளியின் மூலமும் குறுந்தொகை போன்ற சங்க இலக்கிய படங்களின் மூலமும் மாணவர்களுக்குச் சலிப்பு தன்மை நீங்கி ஆக்கப்பூர்வமாகப் பாடத்தை ஆசிரியர் கொண்டு செல்ல முடியும். மேலும், இம்மாதிரியான தொழில்நுட்பத்தைக் கொண்டு புத்தாக்கத்துடன் வகுப்பில் ஆசிரியர்கள் பாடத்தை போதிக்கும்பொழுது மாணவர்களுக்கு இலக்கியப் பாடத்தில் புரிந்துணர்வு திறனும் நாட்டமும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

Explain Everything செயலி வாயிலாகத் தமிழ் மொழி இலக்கியம் கற்பித்தலின் அவசியம்

உலகில் பல்வேறு ஆசிரியர்களால் மொழிப் பாடங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த "Explain Everything" செயலியானது தமிழ் மொழியின் இலக்கியத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். பொதுவாக, ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் போது, அவர்கள் அறிந்த மற்றும் தெரியாதவற்றை எளிய வார்த்தைகளில் தொடர்புகொள்வதே அடிப்படைக் கற்றல் தரமாகும். இருப்பினும், ஒதுக்கப்பட்ட கால எல்லைக்குள் பாடத்திட்டத்தில் பாடத்தை முடிக்க விரைந்து செல்வதை விட, மாணவர்களின் அறிவாற்றல் திறனுக்கு ஏற்பப் பாடத்தை நடத்துவதில் பயிற்றுவிப்பாளர் கவனம் செலுத்த வேண்டும். அதேசமயம், அனைத்து நிலை மாணவர்களுக்கும் (முதல், நடுத்தர, கடை) அன்றைய கற்றல் தரம் பயனுள்ளதாக இருந்ததா என்பதை ஆசிரியர்கள் ஆராய வேண்டும். அதற்கான மதிப்பீட்டு நடவடிக்கையை வாய்மொழியாகவோ, எழுத்தின் மூலமாகவே நடத்த வேண்டும். இவை அனைத்தையும் இந்த Explain Everything செயலியின் மூலம் நடத்திப் பயன்மிக்க கற்றல் சூழலை உருவாக்க முடியும். இந்த முறையானது மாணவர்களுக்குச் சலிப்பை ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்யும். அதுமட்டுமல்லாது அவர்களின் புரிதல் திறனையும் அறிய உதவும் சிறந்த கருவியாகவும் செயல்படுகிறது.

முடிவுரை

கற்றல் மற்றும் கற்பித்தல் பன்முக கலாச்சாரவாதம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றமாக ஊக்குவிக்கப்படுவது மிகவும் முக்கியமானது. தேர்வு அடிப்படையில் நம் நாட்டுக் கல்வி அமைந்திருந்தாலும் மாணவர்களிடையே தமிழ் இலக்கிய இன்பத்தை நுகரச் செய்வது ஒவ்வொரு தமிழாசிரியர்களின் கடமையாகும். இன்றைய சிக்கலான கல்விச் சூழலில் மாணவர்களின் கவனத்தைத் திசைதிருப்பாமல் வகுப்பறையைத் திறம்பட கட்டுப்படுத்தும் நுட்பங்களை ஆசிரியர்கள் அடையாளம் கண்டு அதற்கான வழிகளை மேற்கொள்வது அவசியமாகிறது. இலக்கியத்தில் உள்ள எளிமை , அருமை , இனிமை , செழுமை , கருத்து ஆகியவற்றை மாணவர்கள் அறிய ஆசிரியர் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும். அதுவும் இக்காலகட்டத்தில் மாணவர்கள் இணைய வழிக் கற்றல் கற்பித்தல் குறித்த ஆசிரியரின் புரிதலை மேம்படுத்தாமல் தொடர்ந்து வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடுவது மாணவர்களுக்குப் பல விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதை உணர வேண்டும். அவர்களின் கற்பித்தல் தொடர்பான அணுகுமுறைகளையும் எண்ணங்களையும் ஆசிரியர்கள் தற்போதைய சூழ்நிலைக்கு மாற்றியமைப்பது அவசியமாகும். இதன் விளைவாக, ஒவ்வொரு ஆசிரியரும் வகுப்பறைச் சூழலில் இருந்து வெளியேறி, கற்றல் கற்பித்தலை ஒழுங்கமைத்துச் செயல்பட வேண்டும். எனவே, Explain Everything செயலி கற்றல் கற்பித்தலில் மாணவர்களுக்கு இலக்கியம் கற்பித்தலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

பின்னிணைப்பு

இந்த இடுபணிக்காகக் காணொளி ஒன்று செய்யப்படுள்ளது. இந்த காணொளியில் பட விளக்கத்தில் இந்த Explain Everything செயலியின் அம்சங்களும் மற்றும் இலக்கியம் கற்பித்தல் செயல்முறையும் இணைக்கப்பட்டுள்ளது. இந்த காணொளி google-drive –இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

Google-drive இணைப்பு

https://drive.google.com/file/d/1ocoloCqqlVOzwhfG3Y5db82HNMePrJXe/view?usp=drivesdk

துணைநின்றவை

- Tamil, G. (2019, march 04). *What is technology? | Introducing All Tech Tips.*Retrieved from alltechtips.in: https://www.alltechtips.in/2019/03/what-is-technology-all-tech-tips.html
- Shanmugam, T. (August 26, 2017). *Anegun.com*. Retrieved from 21st Century Classroom, Learning and Teaching Skills: https://www.anegun.com/?p=3692
- Prashanthan, w. (March 1, 2015).*teachsrilanka.blogspot.com*. Retrieved from Team teaching: https://teachsrilanka.blogspot.com/2015/02/blog-post_28.html
- Rashid, a. (2018). *Tamil Chaaral IPG IPOH.* Retrieved from anyflip.com: https://anyflip.com/ibzax/mgqz/basic
- Vasuki. (July 17, 2018). *Tamil literature immortalized by time!*Retrieved from worldtamilforum.com: https://worldtamilforum.com/historical_facts/tamil-literature/
- Ponniah, K., Thamburaj, K. P., & Samuvell, S. J. I. (2017). Language attitude among Tamil language teachers. *International Journal of Advanced and Applied Sciences*, *4*(6), 142-147.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2016). Hierarchical grammatical tagging for tinai (landscape) of cankam Tamil literature. *Indian Journal of Science and Technology*, *9*(48).
- Thamburaj, K. P., & Rengganathan, V. (2015). A Critical Study of SPM Tamil Literature Exam Paper. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *5*, 13-24.
- Thamburaj, K. P., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [A study on modern and traditional writing skill]. *Muallim Journal of Social Sciences and Humanities*, 141-146.
- Thamburaj, K. P. (2015). Promoting scientific ideas through the future studies in Tamil language teaching. *Procedia-Social and Behavioral Sciences*, *174*, 2084-2089.
- Thamburaj, K. P., Arumugum, L., & Samuel, S. J. (2015, August). An analysis on keyboard writing skills in online learning. In *2015 International Symposium on Technology Management and Emerging Technologies (ISTMET)* (pp. 373-377). IEEE.
- Thamburaj, K. P. (2021). An Critical Analysis of Speech Recognition of Tamil and Malay Language Through Artificial Neural Network. *Turkish Journal of Computer and Mathematics Education (TURCOMAT)*, *12*(9), 1305-1317.
- Thamburaj, K. P., & Shakunthala, R. (2016). Standardization of question items to test tamil case markers–a study. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *6*, 9-16.
- Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K. P. (2021). Traditional teaching method-concept of moral education and pedagogy in Aathicuudi. *Muallim Journal of Social Sciences and Humanities*, 176-182.
- Thamburaj, K. P. (2021). E-Teaching in Teacher Education—A Conceptual Framework of Sultan Idris Education University. *Sino-US English Teaching*, *18*(5), 107-111.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2020). THE USE OF MOBILE–ASSISTED LANGUAGE LEARNING IN TEACHING AND LEARNING TAMIL GRAMMAR. *PalArch's Journal of Archaeology of Egypt/Egyptology*, *17*(10), 843-849.
- Thamburaj, K. P., Sivanadhan, I., & Kumar, M. (2021). IMPROVING FORM 4 STUDENT'S READING COMPREHENSION SKILLS IN TAMIL LANGUAGE BY USING SQ3R METHOD. *Psychology and Education Journal*, *58*(2), 2291-2295.

- Thamburaj, Kingston Pal. "A Process of Developing an ASR System for Malay and Tamil Languages." *Design Engineering* (2021): 731-741.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2015). வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி (Reframing Valluvar's claim on Friendship). *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, *2*(1), 7-13.

****

தமிழ் கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் NEW APPROACHES IN TAMIL TEACHING & LEARNING

முனைவர் க. முருகேசன் | Dr. K. MURUGESAN

உதவிப்பேராசிரியர் & ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை, தேசியக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி -01, தமிழ்நாடு, இந்தியா. 9976225551, murugu.kanakasabai@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

தனிமனிதனின் வளர்ச்சியும் சமூக முன்னேற்றமும் ஒன்றோடு ஒன்று இணைந்த இரட்டை நோக்கம் உடையன ஆகும். கல்விச் செயல்முறை என்பது மனித இனம் தோன்றிய பழங்காலத்திலிருந்தே நிகழ்ந்து வருவதாகத் தோன்றும். இருப்பினும், நாளாக நாளாக அது பொருளிலும் நோக்கங்களிலும் அமைப்பிலும் தேவையான மாறுதல்கள் அடைந்துள்ளது. கல்வி என்பதற்கு வளர்த்தல், வெளிக்கொணர்தல், உள்ளதைச் சிறக்கச்செய்தல், குழந்தையிடம் செயல்படாது அடங்கியிருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துதல் என்பனவற்றை முக்கிய பொருளாகக் கொள்ளலாம். கல்வி அறிவானது கற்கக் கற்க மேன்மையடையும் பான்மையுடையது. அக்கல்வி மனித மனங்களைப் பக்குவப்படுத்துவதற்குத் தாய்மொழியறிவு பலநிலைகளில் பயன்படுவதை மொழி கற்றல் கூறுகளான தமிழ்ப்பாட நோக்கம், மொழியும் இலக்கியமும், ஆழப்படித்தலும் அகலப்படித்தலும், வாய்விட்டுப்படித்தலும் கண்ணோட்டப் படிப்பும், தமிழ்மொழிப் பயிற்சிகள். கடிதங்களும் கட்டுரைகளும் போன்ற உட்தலைப்புகளுடன் ஆய்வுச்சுருக்கம், முன்னுரை, தொகுப்புரை, முடிவுரை, மொழிச்சுவை பரவும் வழிகளும் கருவிகளும், பயன்கொண்ட நூல்கள் முதலிய கட்டமைப்பில் மொழி கற்றலின் கூறுகளால் மொழிவழிப் பயன்பாடு மேம்படுவதையே இவ்வாய்வு முதன்மையாகக் கொண்டு நிகழ்த்தப்பட்டுள்ளது.

Abstract

The growth of an individual as well as the society is integrated and has a double purpose. The process of education starts early since the origin of human development. In addition to that, learning has got various changes in its aim, form and structure. The important aspects of education are growth, outcome, exhibiting the hidden skills of a child and so on. Learning is a Continuous process. The deep knowledge in one's mother tongue helps to train the human mind. The elements of language learning includes objectives of Tamil prose, language & literature, extensive reading, step by step learning, overview, language exercises, letters and essays, along with abstract, introduction, contents and conclusions. This research article aims to observe the essence and usage of Tamil language with reference to textbooks.

திறவுச்சொற்கள் (Keywords) : Murmur, Ariyamai (Ignorance), Ulara, Ullavarai Irukaiyil, Pattravan, Pulamai Arivu (Knowledge), Veiyon, Sooriyan (Sun), Choti, Oli (Light), Mai, Anjanam, Karaintha, Maraintha (Hidden)

முன்னுரை

திறமையான கற்றல் கற்பித்தல் வழிகாட்டுதலுக்குக் குழந்தையை அறிதல் என்பது மிக இன்றியமையாத ஒன்றாகும். கல்வி தற்போது குழந்தையின் இயல்பையும் தேவைகளையும் வலியுறுத்தும், குழந்தை மையக் கல்வியாக உள்ளது. குழந்தைமையக் கல்வியானது மேன்மையடைய தாய்மொழி வழிக் கற்றலே சிறந்த கருவியாகும். 'இளமையிற் கல்' என்பது பழமொழி. கல்வி கற்றல் என்பது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்தெடுப்பவதே முக்கிய நோக்கமாகும். கற்றல் செயலின் விளைவாகக் கற்போரின் நடத்தையில் ஒரு மாற்றம் நிகழ்கிறது. இம்மாற்றம் தானாகவே முதிர்ச்சி பெறுவதன் விளைவு அன்று. கற்போரின் முந்தைய நடத்தை, முந்தைய அனுபவம், முன் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி ஆகியவற்றின் விளைவாக, ஓரளவு நிலையான இந்த நடத்தை மாற்றம் எழுகின்றது. இத்தகைய மாற்றம் தாய்மொழி வழிக் கற்றலில் எவ்வாறு வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது என்பது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

கல்வி

'கல்வி' இச்சொல்லைப் பிரித்துப் பொருள் கொண்டால் கல், வில், கவி என்ற முச்சொல்லைத் தருகின்றது. கல்வி கற்கும் ஒருவர், கல்லைப் போன்ற மன உறுதி உடையவராகவும், வில்லைப் போன்ற கூர்மதியுடையோராகவும், கவிபுனையும் ஆற்றல் உடையவராகத் திகழ்வதே இக்கல்வி என்ற சொல்லாட்சியின் விளக்கமாகக் கருத இடமுண்டு. மேலும்,

"ஒரு தனிமனிதன் பொதுவாகப் பெறக்கூடிய பழக்கவழக்கங்கள், அறிவு, மனப்பான்மை ஆகியவற்றைத் தரக்கூடிய ஒரு செயல் முறையே கற்றல் எனப்படும் என்கிறார் ஜி.டி. போயஸ் (G.D.BOEZ)." (ப. கோகிலவாணி, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கல்விச் சிந்தனை)

நாலடியாரில் சமணமுனிவர்கள் கல்வியானது, இப்பிறவிக்குரிய நன்மையெல்லாம் தரும்; கொடுத்தாலும் குறைவுபடாது; கற்றோரைப் புகழ்பெறச் செய்யும்; அவர்கள் உள்ளவரை அழியாத இயல்புடையது; அறியாமை நோயை நீக்கும் அருமருந்தாகக் கவ்வி விளங்குவதை,

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாம் உளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து" (நாலடியார் பாடல் – 132. ப. 78)

அறிய முடிகின்றது.

புரேகா பெருமகனார் கல்வி குறித்த விளக்கத்தில், கல்வி கற்றவரை எளிதில் நல்வழியில் திருப்பிவிடலாம். ஆனால் ஏமாற்ற முடியாது. எளிதில் ஆளலாம்; ஆனால் அடிமைப்படுத்த முடியாது என்கிறார். திருமூலரோ,

"எல்லாம் அறிவும் அறிவுதனை விட்டு

எல்லாம் அறிந்தும் இலாபமங் கொன்றில்லை"
(அறிவுச்சுடர் திரு.க. அப்பாத்துரை பிள்ளை – ப.8)

என்று மொழிகின்றார்.

நான் கற்றுக் கொடுக்க எண்ணுவது அறிவை அன்று; அறிவை அறியும் அறிவையே. என் அறிவு வளர வளர, இக்கோட்பாடு வளர்ந்து வருகிறது என்ற அர்னால்டு அவர்களின் கூற்று இங்கு சிந்திக்கத்தக்கதாகின்றது.

மாணவன் ஆசிரியன் கற்பித்தவற்றைத் தன் அறிவோடு பொருந்தக் கற்றான் ஆயினும் கால் பங்கு புலமையை மட்டுமே பெறுவான் என்கிறார் பவணந்தி முனிவர். அதனை,

"ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
கால்கூறு அல்லது பற்றலன் ஆகும்"
(நன்னூல், எழுத்ததிகாரம்- நூற்பா. 44, ப. 30)

என்ற நூற்பாவினால் அறிந்துணரமுடிகின்றது. புறநானூறு,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"
(புறநானூறு, பாடல் 183, ப. 198)

என்று விளக்க முற்படுகின்றது. வள்ளுவப் பெருந்தகையோ,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"
(திருக்குறள் (பொருட்பால்) கல்வி.- குறள் 891, ப. 82)

வள்ளுவர் முதலில் 'கற்க' என்றார். எவற்றைக் கற்பது, "கற்பவை கற்க" பின்னர் கற்றவழி நிற்கவேண்டும். நடத்தையில், பண்பாட்டில் குறைவின்றி நிற்க என்று விளக்கம் பகர்கின்றார். மேலும், "கற்றலிற் கேட்டலே நன்று" என்பது பழமொழி நானூறு சுட்டும் விளக்கமாகும். கற்றல் கேட்டல் குறித்துப் பண்டைய இலக்கண நூலாசிரியர் நன்னூற் புலவர் பவணந்தி முனிவர்,

"நூல் பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்து அவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடம்நனி இருக்கும்"
(நன்னூல் நூற்பா - 41 ப.29)

மாணவர் நூலைப் பயில்கின்ற போது கடைபிடிக்க வேண்டியதையே நூல் பயிலும் முறையாகக் கொள்ளலாம். பவணந்தி முனிவர் அவற்றை ஏழு படிநிலைகளாகப் பகிர்ந்துள்ளார். 1. நூலைக் கற்கும் மாணவன் உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும்

அறிதல், 2. மூல பாடத்தை உயர்வாகப் போற்றிப் பலகாலும் சிந்தித்தல், 3. கேட்ட பாடத்தை நினைத்துப் பார்த்தல். 4. மீண்டும் ஆசிரியனிடம் சென்று கேட்டவற்றைக் குறைதீரப் பதியும்படிக் கேட்டல், 5. எப்போதும் கல்வியைப் பற்றிப் பேசும் மாணவர்களிடம் பழகுதல் 6. தன் ஐயத்தைப் பிறரிடம் கூறித் தெளிவுபெறுதல், 7. பிறரது ஐயத்தைத் தெளிவுபடுத்தல் இவ்வேழு செயல்களையும் மாணவன் தனக்குரிய கடமைகளாகக் கொண்டு செயல்பட்டால் அறியாமை நீங்குகின்றது.

தமிழ்ப்பாட நோக்கம்

'அப்துல் கலாம்' என்ற தலைப்பிலான பாடப்புத்தகத்தில் காணப்படும் பாடத்தின் நோக்கம் என்னவென்று இன்றைய தமிழாசிரியரிடத்தில் வினாஎழுப்பினால் அவர் 'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்ற நீதியையே சொல்லுவார். வேறொன்றும் நோக்கமில்லையா என்ற வினாவிற்கு அவருடைய வரலாற்றை விளக்குவது என்பார். ஆனால் தமிழ்மொழியில் ஒரு வரலாற்றைக் கூறும் முறையை விளக்குவதே இப்பாடத்தின் முதன்மை நோக்கமென்பதை உணரத் தவறுவதோடு அதை ஏற்றுக்கொள்ளவும் தயக்கமுடையவராகவே மொழியாசிரியர் திகழ்கிறார் என்ற குற்றச்சாட்டு மறுப்பதற்கில்லை.

மொழிப்பயிற்சி நோக்கத்தின் உறுப்புகள் எவை?

முதல் உறுப்பு, படித்துப்பொருளறியும் பயிற்சி, இரண்டாவது பொருளின் அமைப்பு, ஒழுங்குகளைக் கண்டு கொள்ளுதல், மூன்றாவது, மொழிநயம் உணர்தல், நான்காவதும் இறுதியானதும் இம்மொழி நயத்திற்குக் காரணமாகவுள்ள சொற்களையும் அவற்றின் அமைப்பு இலக்கணங்களையும் ஆராய்வதாகும். இவ்வாராய்ச்சியுடன் புதிய மொழிப்பயிற்சி இணையும் மொழிநயம், சொல்லமைப்பு ஆராய்ச்சிகளைப் பின்பற்றிய பயிற்சிகளே பாட நோக்கத்தை நிறைவு செய்கின்றன. இத்தொடர் பயிற்சியின்றி ஆராய்ச்சியுடன் பணி நிறைவேறினால் மொழிப்பாடத்தின் நோக்கம் சிதைவுறும்.

தனிப்பாடங்களின் மொழிப்பயிற்சியின் வகையினாலும் முறையினாலும் முடிவில் மாணாக்கர் தமிழ் விருப்பமும் இன்ப நுகர்ச்சித்தன்மையும் பெறவேண்டும். இக்கருத்தை, "ஒரு மொழியின் சிறந்த நூல்கள் ஆராய்ந்து படிக்கப்படுமுன், அவை மாணாக்கரின் காதலுக்குரியவை ஆகவேண்டும்" 'வகுப்பறையில் மொழிக்கலை' என்ற கட்டுரையில் ஜார்ஜ் ஸாம்ஸனின் இக்கருத்து மொழியாசிரியரின் மொழியாளுமைத் திறனைப் பொறுத்தே மாணாக்கரிடம் மொழிக்கல்வி மேன்மையடையும் என்பது திண்ணம்.

மொழியும் இலக்கியமும்

எம்மொழியிலும் மாணாக்கர் உணர்ந்தறியத்தக்க நிலைகள் இரண்டு உள்ளது. முதல்நிலை "மொழி" என்றும், இரண்டாவது நிலையை 'இலக்கியம்' என்றும் கூறலாம். ஆங்கிலத்தில் முறையே 'Language' என்றும் 'Literature' என்றும் அழைக்கப்படும்.

மொழியை மக்களின் பொதுவான தேவைகளுக்கேற்ற அளவில் கையாளும் நிலை மொழிநிலை, அழியாத புகழுடைய நூல்களின் நயங்களையும் நுட்பங்களையும் நுகரும் நிலைக்கு இலக்கிய நிலை எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

மொழியறிவு முன்னால் ஓரளவு அமைந்தாலன்றி இலக்கிய நுகர்ச்சி ஏற்படாது. இவ்விரண்டிற்குமிடையிலோ அல்லது மொழியறிவோடு கூடவோ மொழிச்சுவை பிறக்க வேண்டும். மொழியாசிரியரின் தலையாயப்பணி என்னவென்றால், மொழிச்சுவை பிறக்கும்முன் இலக்கிய நுகர்ச்சியானது உண்டாதல் அரிதாகும். ஆனால் மொழியாசிரியர் தக்கமுறையில் இலக்கிய நூல்களின் ஏற்ற பகுதிகளை எடுத்துக்காட்டி மொழிச்சுவை பிறக்க வழிவகுக்க வேண்டியது அவருடைய முதற்பணியாகும்.

"தமிழுக்கு கதி என்று கம்பனையும் திருவள்ளுவரையும் செல்வக்கேசவராயர் குறிப்பிடுவர். தமிழின் கதியாக விளங்கும் கம்பனையும் திருவள்ளுவரையும் தமது இருகண்களாகக் கொண்டு" (முனைவர் செ. சிவகாமிசுந்தரி, தமிழ்இன்பம் தமிழ் உலகிற்கே பேரின்பம்) மொழியாசிரியரின் பணி அமையவேண்டும்.

தமிழிலக்கியங்கள் பெரும்பாலும் செய்யுளுருவமாகவே இருப்பதால் இலக்கிய நுகர்ச்சி என்பது ஆசிரியர் செய்யுள் பாடத்தை நடத்தும் முறையைப் பொருத்திருக்கும். அம்முறையானது மாணாக்கர்களுக்கு மொழியில் விருப்பமுண்டாக்கத் தக்கதாக இருக்கவேண்டும் சான்றாக,

"வெய்யோன் ஒளி, தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ, மர கதமோ, மறி கடலோ, மழைமுகிலோ
ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா அழ குடையான்"
(கம்பர் கவியும் கருத்தும், P.G. கருத்திருமன், ப.87)

அயோத்தியா காண்டத்தின் கங்கைப் படலத்தில் இராமனின் வடிவழகினைப் புகழ்ந்துரைக்குமிடத்தில் மொழியாசிரியர் இராமனின் அழகுருவை மாணாக்கர்தம் மனக்கண்ணில் நிறுத்தும் வகையில் குரலில் ஏற்ற இறக்கத்தோடு சொற்சுவை பொருட்சுவை மிளிர எடுத்துரைத்தல் உத்தியால் இலக்கிய நுகர்ச்சிக் கூறினை வெளிப்படுத்த முடியும்.

இலக்கியத்திற்கு அடிப்படையான கருவி மொழி. அம்மொழியைச் சுவையுடன் மாணாக்கர் கற்க விழையவேண்டும். மொழியும், இலக்கியமும் வேறு வேறானவையே எனவும், குறைந்த அளவிலான மொழிப்பயிற்சியின்றி இலக்கிய நுகர்ச்சி பிறக்காதென்பதை மொழியாசிரியர் நன்குணர்ந்து மொழிப்பாடம் கற்பிக்க வேண்டும்.

ஆழப்படித்தலும் அகலப்படித்தலும்

"தொல்காப்பியர் காட்டியிருக்கும் அழுகை, உவகை இவ்விரு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்குரிய காரணங்களை அறிந்து மக்களின் அழுகையைப் போக்கவும் செல்வத்தையும் கல்வியையும் பெற்று உவகையுடன் வாழ வழிசெய்யவும் சான்றோர் முனைந்தனர்" (முனைவர் சு. மகேஷ்வரி, தொல்காப்பியம் முதல் இக்காலம் வரை)

மொழிப் படிப்பானது ஆழப்படித்தல், அகலப்படித்தல் என்று இருவேறு கூறாலானது. ஆழப்படித்தலானது படித்துப் பொருளறியும் பயிற்சி, பொருளின் அமைப்பு மற்றும் ஒழுங்குகளைக் கண்டு கொள்ளுதல், மொழிநயம் உணர்தல், சொற்கள், இலக்கணங்களையும் ஆராய்ந்து படிக்கும் படிப்பே ஆழப்படித்தலாகும்.

தமிழ்க்கல்வி பயிற்று முறையில் இதுநாள்வரை ஆழப்படித்தலுக்கும் அகலப்படித்தலுக்கும் வெவ்வேறு படிக்கும் முறைகள் பலரறிய எடுத்துக் கூறப்படவில்லை. ஆனால் இவற்றை அறிய அனுபவ அறிவே முதலிடம் பெறுகின்றது. ஆழப்படித்தல் ஓரளவு வாய்விட்டுப் படித்தலில் அடக்கிவிடலாம். முற்றிலுமாக வாய்விட்டுப் படித்தலாக இருக்கத் தேவையில்லை.

அகலப் படித்தலானது பெரும்பாலுமோ முற்றிலுமோ மௌனபடிப்பு அல்லது கண்ணோட்டப் படிப்பாகக் கருதப்படுவதுண்டு. இப்படிப்பு முறையே விரைவாகப் படித்துப் பொருளுணர்தலுக்கு ஏற்ற முறையாகக் கல்வியாளர்களின் ஆராய்ச்சியால் விளைந்த பயனாகக் கருதப்படுகிறது.

மொழி கற்பித்தல், கற்றலில் ஆழப்படித்தல், அகலப்படித்தல் என்பவற்றிற்கேற்ப வாய்விட்டுப் படிப்பும், மௌனப் படிப்பு அல்லது கண்ணோட்டப்படிப்பும் இடம் பெற்றிருக்கவேண்டும். ஆழப்படித்தல் நோக்கத்தின் முதற்கூறானது 'பொருளுணர்தல்' பெரும்பாலும் மௌனப் படிப்பினாலே நிறைவேறுமென்தனையும் மொழியாசிரியர் கவனித்தல் நலம் பயக்கும்.

வாய்விட்டுப் படிப்பும் , மௌனப் படிப்பும்

வாய்விட்டுப் படித்தல் நிகழ்வதற்கான காரணங்களாக,

1. வரிவடிவங்களை ஒலிவடிவங்களாக அடையாளம் அறிந்ததன் திருத்தத்தை உணர்தல்.
2. தனி வடிவங்களைக் கூட்டிச் சொற்களாக ஒலித்தல்.
3. படிப்பறிவு உள்ளவர்கள் ஏட்டிலிருந்து படிப்பதைப் படிக்கத் தெரியாதவர்கள் தொடர்ந்தறிய உதவுதல்.
4. படிப்பதை மனனம் செய்தல்.

மேற்கண்ட காரணிகளில் முதலிரண்டும் படிப்பிற்கு அடிப்படையானது. என்றும் நிலைத்த தன்மையது. பின்னிரண்டும் பள்ளிக்கூட மாணாக்கரின் பயிற்சிக்கு இன்றியமையாததாக அமைகின்றது. தொடக்கக் கல்வியில் மொழி படிப்பில் வாய்விட்டுப் படிப்புத் தேவை என்றும், பிற்காலப் படிப்பில் அப் பயிற்சி தேவையில்லை என்றும் கூறும் மேல் நாட்டுக் கொள்கையைத் தமிழ்நாட்டவர் முற்றிலும் பின்பற்றத்தக்க காலம் இன்னும் வரவில்லை என்பதை மொழியாசிரியர் உணரவேண்டும்.

உயர்நிலைத் தமிழ்க்கல்வியில் வாய்விட்டுப் படித்தலின் இவ்விரு காரணங்கள் எப்போதும் ஆசிரியர் நினைவிலிருக்க வேண்டும். இந்த நிலையில் பிறருக்குப் பொருள் உணர்த்தலும், படிப்பவர் மனப்பாடம் செய்தலுமே என்பதையும் மொழியாசிரியர் மறக்கலாகாது. மாணாக்கர்களை ஊர் மக்கள் கூட்டம் ஒன்றைப் போலக்கருதி, பாடம் படிக்கும் மாணவனைப் படிக்கச்சொல்ல வேண்டும். அல்லது, ஒலிப்பரவியின் நுட்பச்செவியின் ('மைக்'கின்) எதிரில் நின்று படிப்பதைப்போல் படிக்கச் சொல்லவேண்டும்.

மாணாக்கர்களை ஒருவர் பின் ஒருவராக வகுப்பில் பாடத்தை வாய்விட்டுப் படிக்கச் சொல்லுல் மொழிப்பயிற்சி முறைகளுக்குப் பொருத்தமானதன்று. பிறமொழி

ஆசிரியர்களிடமும் இவ்வழக்கத்தைக் கண்டு, டி ஆர்ஸிதாம்ஸனின் "ஒரு பள்ளியாசிரியர் பகற்கனவுகள்" என்னும் நூலில்,

"வாசிப்பை மந்தமும் உணர்ச்சியற்றதுமாகச் செய்து, மாணாக்கர் மனத்தில் நூல்கள்பால் வெறுப்புண்டாக்கத்தக்க செயல் இவ்வரிசை முறையான வாய்விட்டுப் படித்தலைப்போன்ற வேறெதுவுமில்லை"[11] என்ற கருத்தால் மொழியாசிரியரின் பங்கு குறிப்பிடத்தக்கதாகிறது.

மௌனப்படிப்பு

பொருளறிவுக்கேற்ற விரைவும் விரிவும் அமைந்த வாசிப்பு கண்ணோட்டப் படிப்பேயாகும். இது மௌனவாசிப்பு என்றும் வாய்க்குட்படித்தல் என்றும் பயிற்றுமுறைப் புத்தகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. மொழியாசிரியர் கடைபிடிக்கவேண்டிய இருகூறுகளில் முதலாவதாக, ஒவ்வொரு பாடமும் ஒரு முறை கண்ணோட்டமாகப் படிக்கப்படவேண்டும் என்பதை மறவாதிருத்தல், இரண்டாவதாக, கண்ணோட்டப்படிப்பின் அளவு புத்தகத்திலடங்கிய பொருளின் ஒரு சிறு பகுதியே என்றிருத்தல், ஆசிரியர் இத்தவறான எண்ணத்திற்கு இடம்கொடாமல் தம் மாணாக்கர்களைக் கண்ணோட்டப்படிப்பில் ஊக்கப்படுத்தவேண்டும்.

தமிழ்மொழிப் பயிற்சிகள்

மொழியாசிரியர்களின் மொழிப்பயிற்சி அருஞ்சொற்பொருள், இலக்கணம், சந்தி, பதவுரை, பொழிப்புரை முதலியவற்றைக் கூறுதலுக்குள் அடங்கிவிடும். மாணாக்கர் தமது உள்ளக்கருத்துகளை உணர்ச்சியுடன் தமிழில் வெளியிடும் நிலைக்கு வர இப்போலிப் பயிற்சியானது பயன்தராது. பயிற்சி பெறாத காரணத்தால் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையைப் போல் அறிந்தோ அறியாமலோ மனப்பாடம் செய்தவற்றைத் திருப்பிச் சொல்லவும் எழுதவும் தான் மாணாக்கர்களுக்குத் தெரியும். ஆனால், சிறு குழந்தைகளுக்கு,

பூவே பூ	- என்ன பூ?	கற்பூரவாழை	- என்ன கற்பூரம்?
புளியம் பூ	- என்னபுளி?	ரசகற்பூரம்	- என்ன ரசம்?
காட்டுப்புளி	- என்ன காடு?	மிளகுரசம்	- என்ன மிளகு?
பாலக்காடு	- என்ன பால்?	வால்மிளகு	- என்ன வால்?
கள்ளிப்பால்	- என்ன கள்ளி?	நாய்வால்	- என்ன நாய்?
இலைக்கள்ளி	- என்ன இலை?	மரநாய்	- என்ன மரம்?
வாழையிலை	- என்னவாழை?	மாமரம்	- என்னமா? – அம்மா

என்பதைப் போன்ற தொடர்க் கூற்றுகளும், வெளிப்பாடுகளும், விடுகதைகளும் அளிக்கும் இன்பத்தைப் பெற்றோர் கண்டு களிப்பதைப் போல ஆசிரியரும் ஏன்? கண்டு களிக்கக்கூடாது? இப்போது வெளிவரும் பல பாடப் புத்தகங்களில் இவற்றில் சிலவற்றைக் காணலாம். இது தமிழ்க்கல்விக்கு ஒரு நல்ல அறிகுறியாகக் கருதலாம். புத்தக ஆசிரியர்களும் பள்ளிக்கூட ஆசிரியர்களும் இவ்வகைப் பயிற்சியினைப் பெற்றிருத்தல்வேண்டும்.

பல எழுத்துக்களைக் கலந்து கொடுத்து அவற்றிலிருந்து சொற்களாகச் செய்யும் பயிற்சியில், மப்ரவேபம் (வேப்பமரம்), சுமந்தசோரம் (சோமசுந்தரம்) முதலியவை போன்றன. மற்றொரு வகை பல சொற்களைக் கலந்து கொடுத்து அவற்றின் பெரும்பாலான பொதுத்தன்மையை

உணர்ந்து அத்தன்மையில்லாதவற்றை விலக்கச்செய்தல் சான்றாக, தேங்காய், பழம், பூ, கத்தி, கற்பூரம் – இவற்றில் பொருந்தாத சொல் எது? (கத்தி). வேறொரு வகைப்பயிற்சி, ஒரு வாக்கியத்தின் சொற்களை ஒழுங்கு மாற்றிக்கொடுத்து ஒழுங்காக்கச் செய்தல். எழுத்துக்களால் சுருக்கிக் குறிக்கப்பட்ட பெயர்களை விரித்துக்கூறுதல் மற்றொரு பயிற்சி. சான்றாக, அ.இ.ரே (அகில இந்திய ரேடியோ) சு.ம.கட்சி (சுயமரியாதைக் கட்சி) இவையெல்லாம் எளிய பயிற்சிகளே. இலக்கண, இலக்கியங்களைத் தழுவி இன்னும் சிறந்த பயிற்சிகளை உருவாக்கலாம். சான்றாக முக்காலப்பெயர் எது? இவ்வினாவிற்கு,

"காலம் கரந்த பெயரெச்சமே வினைத்தொகை" என்று பவணந்தி முனிவர் பதிலுரைக்கின்றார். முக்காலம் எது? இறந்த, எதிர், நிகழ் என வகைப்படுவதையும் "கரந்த" என்ற சொல்லுக்கு "மறைந்த" என்ற பெயரிடப்படுவதையும் இப் பயிற்சியால் உணர்த்தலாம்.

நாற்றிசை - கிழக்கு, வடக்கு, தெற்கு, மேற்கு
நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
முத்தமிழ் - இயல், இசை, நாடகம்.
முக்கூடல் - பொருநை, சிற்றாறு, கோதண்டராமநதி

சொற்களுக்குப் பொருள் விளக்கம்தர மேற்கண்ட பயிற்சிகளால் மாணாக்கர்கள் மொழிப்பாடத்தில் நிபுணத்துவம் பெறலாம்.

இப்பயிற்சிகளில் சிலவற்றின் உதவியால் மொழிநயம், நடை, நுட்பங்கள். முதலான கூறுகளை மாணாக்கர் உணரச்செய்யலாம். சான்று, 'சீதையைக் கண்டேன', 'கண்டேன் சீதையை' என்ற இரண்டிற்கிடையிலும் உள்ள உணர்ச்சி வேற்றுமையைக் காணச்செய்து, இவ்வகை மாறுபாடுகளைத் தழுவி உணர்ச்சி தோன்றாத வாக்கியங்களை உணர்ச்சி விளங்கச் செய்யும் பயிற்சிகளைக் கொடுத்து மொழிப் பயிற்சிக்கு வழி வகுக்கலாம்.

கடிதங்களும் கட்டுரைகளும்

கட்டுரைகள் எல்லாவற்றையுமே இருவகைகளில் தொகுத்துரைக்கும் ஆங்கிலக் கல்வியியலறிஞர் 'ஸர் பிலிப் ஹட்டாக்' ஒன்றை 'Record' அல்லது நினைவுப்பதிவென்றும் மற்றொன்றை, 'Messages' அல்லது செய்தி அல்லது அறிக்கை என்றும் வரையறை செய்துள்ளார். ஆங்கில மொழியில் கூட, பள்ளிக்கூடக் கட்டுரைப் பயிற்சி சிறக்கவில்லை என்கிறார் 'ஸர் பிலிப்'. ஏதாவது ஒரு பொருளைப் பற்றி யாருக்காகாவது எதையாவது எழுதுதலே கட்டுரை என்பதைப் 'பாலார்ட்' என்ற ஆங்கில அறிஞரின் கூற்றாக அறியலாம்.

கட்டுரைகளின் பொருள் மாணாக்கர்களின் வாழ்க்கையில் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கவேண்டும். உதாரணமாக, 1926 – ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் வெளியிடப்பட்ட 'ஹாடோ அறிக்கை' பின்வருமாறு கூறுகிறது. "கடிதங்களா, கட்டுரைகளா?" கடிதமெழுதும் கலையில் இக்காலத்துப் பள்ளிக்கூட மாணாக்கர்களைத் திறமைபெறப் பயிற்றுவித்தலின் இன்றியமையாத் தன்மையை மிகவும் வற்புறுத்துகிறோம். அக்கடிதங்கள் மாணாக்கர்கள் உணர்ந்தறியும் வாழ்க்கை நிலைமைகளிலிருந்தும் நிகழ்ச்சிகளிலிருந்தும் தன்வயப்பட்ட அறிவினின்றும் விளைவதாகவும், குறித்த நோக்கம் கொண்டவையாகவும் அமையவேண்டும் இப்பயிற்சி மாணாக்கரின் எதிர்காலத்திற்குச் தக்க பயன் விளைவிப்பதாக

அமையுமென்பதை எடுத்துரைத்து ஊக்குவித்தலே மொழியாசிரியரின் தலையாய கடமையாகும்.

மொழிச்சுவை பரவும் வழிகளும் கருவிகளும்

"ஓடி விளையாடு பாப்பா" என்று பாரதியார் பாடி அச்சொல்லில் தேனை வைத்தார். மொழிச்சுவை பரவ உதவும் முதல் வழி இசை. இசைக்குத் துணையாகுவன இசைக்கருவிகளும் இன்றைய ஒலிபரப்புக் கருவிகளும் முறைகளுமேயாகும். இசைக்குப் பொருளாக அமைந்துள்ளது நாட்டுக்கலைக் களஞ்சியம். இசையின் வலிமையைப் பரப்ப பல கருவிகள் இன்றைக்குத் துணைபுரிகின்றன. ஆசிரியர் இவற்றைக் கசடறக் கற்று மாணாக்கர்களும் கற்க உதவுகின்ற மனநிலையை வளர்த்தெடுக்க வேண்டும். செய்யுள் பாடத்தைச் சுவையற்ற சுமையாகவும் செய்யலாம், சுவை நிரம்பிய இன்ப நிகழ்வாகவும் செய்யலாம். இசையின் துணையினாலும் நாட்டுக்கலைத் தொடர்பினாலும் சுவையூட்டத் தொடங்கினால் மொழிக்கல்வி இன்பக்கல்வியாகும். மேலும்,

"ஒரு மொழியானது பேசினால்தான் உயிரோடு இருக்கும். ஆனால் ஒருமொழியால்தான் ஓர் இனம் வாழ்கிறது என்றால் தமிழ் மொழியின் சிறப்பை இதைவிட விரிவாக விளக்கிட வேறொன்றும் இல்லை" (கோ. துர்க்காதேவி, தமிழனும் தமிழ்மொழியும்)

தமிழ்மொழியில் இன்று காணும் புதுப்படைப்புகள் பள்ளிகளில் எவரும் பெற்ற உணர்ச்சி ஊக்கங்களின் பயனன்று,

"செலவு தந்தைக்கோ ராயிரந் சேன்றது
தீதெ னக்குப்பல் லாயிரஞ் சேர்ந்தன
நலமொ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்"
(பாரதியார் கவிதைகள்)

என்றார் பாரதியார். ஆனாலும் பள்ளிக் கூடங்களில் இப்படைப்பூக்கம் அளிக்க இயலாதோ? இயலும். எப்போது இயலுமென்றால், நற்றமிழை நன்கறிந்து தம் நாவன்மையால் தமிழ்ச்சுவைத் தெரிக்க எடுத்துரைக்கும் நல்லாசிரியரால் நானிலம் கமழும் நற்றமிழை மாணாக்கர் மனம் மகிழ எடுத்துரைத்தால் முடியும்.

தொகுப்புரை

- தனிமனித வளர்ச்சி, சமூக முன்னேற்றம் இவ்விரண்டும் வளர்த்தெடுக்க கல்வி ஒன்றே சிறந்த கருவியாகிறதென்பதை எடுத்துக்காட்டுகளுடன் நிறுவுதல்.
- எளிதில் பொருள் விளங்கமுடியாத சொற்களுக்குப் பொருள் விளக்கம் நிரல்பட பட்டியலிடுதல்
- நடத்தை மாற்றமே கல்வியின் முக்கிய நோக்கமென்பதை எடுத்தியம்புதல்.
- கல்விக்குப் பொருள் விளக்கம் பெற, நாலடியார், நன்னூல், திருமந்திரம், அறிவுச்சுடர், புறநானூறு, திருக்குறள் போன்ற நூல்களின் கருத்துகள் எடுத்தாளப்பெற்றுள்ளன.
- தமிழ்ப்பாடநோக்கம் என்னும் தலைப்பில் மொழிப்பயிற்சியின் உறுப்புகள் அவற்றைக் கையாளும் மொழியாசிரியரின் ஆளுமைப் பண்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

- 'மொழியும் இலக்கியமும்' இத்தலைப்பில் மொழி, இலக்கியம் இவ்விரண்டிற்கிடையே உள்ள நுணுக்கங்கள் கம்பராமாயணப் பாடல்வழி நிறுவப்பட்டுள்ளது.
- படிப்பின் வகைகள் எடுத்துக்காட்டுகளுடன் சுட்டப்பெற்றுள்ளன.
- தமிழ்மொழிப் பயிற்சியினால் மாணாக்கர் அடையும் நன்மைகள், பயிற்சிகள் பட்டியலிட்டுக் கூறப்பட்டுள்ளன.
- கடிதங்கள், கட்டுரைகள், ஆவணப்படுத்தும் விதம் சான்றுகளுடன் நிறுவப்பட்டுள்ளது.

முடிவுரை

மொழிப்பாடம் கற்கும் மாணாக்கருக்கு மனமகிழ்வைத் தரும் கருவியே மொழியாசிரியர். ஆசிரியர் மொழியைக் கற்பிக்கும் விதத்தால் மாணாக்கரின் மொழியுணர்வு வளர்வதோடு மொழிச் சுவையறியும் திறனும் வளர்கிறது. அவ்வாசிரியரின் இலக்கணம்,

> "குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
> கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
> நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
> உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
> அமைபவன் நூல்உரை யாசிரி யன்னே" (நன்னூல், நூற்பா, 26, பக் – 21)

நன்னூலாசிரியர் குறிப்பிடும் இலக்கணத்தோடு பொருந்தி இருந்தால் நல்ல சமுதாயம் விளைவதற்கான நாற்றங்காலாகப் பள்ளியறை விளங்கும். "இந்தியாவின் தலைவிதியை வகுப்பறைகளே தீர்மானிக்கிறதென்றார்" கோத்தாரி. இவர் கருத்து பொய்த்துப்போகாமல் இருக்க மொழியாசிரியர் தம் கற்பித்தலின் மேற்கண்ட நுணுக்கங்களை வகுப்பறைகளில் பின்பற்றினால் மொழியறிவு வளர்வதோடு சமூக மாற்றமும் நிகழும் என்பது உறுதிப்படுகின்றது. எரிகின்ற விளக்காய் தம்மை எரித்துக் கொண்டு மாணவர்களுக்கு ஒளிகொடுக்கும் வாழ்வே ஆசிரியரின் உன்னத வாழ்வாகும்.

துணைநின்றவை

- பத்மதேவன் (உரையாசிரியர்), (டிசம்பர் 2005), நாலடியார், கற்பகம் புத்தகாலயம், ப.28.
- அப்பாத்துரைப்பிள்ளை கா., (மறுபதிப்பு 1956), அறிவுச்சுடர், கழகவெளியீடு, ப. 8.
- திருஞானசம்பந்தம் ச., (முதற்பதிப்பு, 2005), நன்னூல் எழுத்ததிகாரம், கதிர்பதிப்பகம், திருவையாறு, ப.30
- புலியூர்க்கேசிகன் (உரையாசிரியர்), (7ஆம் பதிப்பு 2019/7), புறநானூறு, சாரதா பதிப்பகம், பா.183, ப.198.
- திருஞானசம்பந்தம் ச., (முதற்பதிப்பு 2005), நன்னூல் எழுத்ததிகாரம், கதிர்பதிப்பகம், திருவையாறு, ப. 30.
- கருத்திருமன் P.G., (முதற்பதிப்பு அக்டோபர் 1963), கம்பர் கவியும் கருத்தும், தமிழ்ப்புத்தகாலயம் சென்னை, ப.87.
- சந்தான கிருஷ்ணன் த.பு., (முதற்பதிப்பு 1960), தமிழ் கற்பிக்கும் முறைகள், ப.56.
- திருஞானசம்பந்தம் ச., (முதற்பதிப்பு 2005), நன்னூல், எழுத்ததிகாரம், திருவையாறு: கதிர்பதிப்பகம், ப.21.
- Jamal Academic Research Journal An Interdisciplinary Special Issue, Vol – 1 ISSN: 0973 – 0303 SEP – 2015, P.107.

- Jamal Academic Research Journal An Interdisciplinary Special Issue, Vol – 1 ISSN: 0973 – 0303 SEP – 2016, P.85.
- Journal of Classical Thamizh (Quarterly International Multilateral Tamizh Journal) Vol – 4, No:1 Jan-Mar – 2016, ISSN: 2321 – 0737, P.10 , www.rajapublication.com
- Ayldha Ezhuthu An International Journal of Tamil Studies> ISSN: 2278 – 7550 (UGC RECOGNISED JOURNAL), March: 2018, P. 133. www.pallavi pathippakam.in
- Journal of Modern Thamizh Research, Vol. No:1, ISSN: 231-984x – Jan – March – 2018, p. No241. , www.rajapublication.com

****

சாதாரண பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களும், கற்றல் வாய்ப்புக்களும் Learning Challenges and Learning Opportunities Facing Special Learning Students in Ordinary Schools

சி. அருள்நேசன் | S. Arulnesan
கல்வி, பிள்ளைநலத்துறை, கலை, கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
arulnesan1994@gmail.com

ஆய்வு சுருக்கம்

இன்றைய உலகமயமாதல் யுகத்தில் உலகியல் மாற்றங்களுக்கேற்ப ஆளுமை மிக்க மனித சமூகத்தை உருவாக்கும் பொறுப்பு கல்வித்துறைக்கு உண்டு. வகுப்பறையில் பல்வகைத் தன்மை கொண்ட விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படலாம். பெரும் விசேட தேவைகள் சார் மாணவர்கள் தொடர்பாக அதிகம் கவனம் செலுத்தப்படுவதில்லை. எனவே அவர்களது பிரச்சினைகளைக் களைந்து சீரான கற்றலுக்கு வாய்ப்பளிப்பது பாடசாலையின் கடமையாகும். அந்த வகையில் "சாதாரண பாடசாலைகளில் விசேட தேவைகள் சார் மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சாவல்கள், கற்றல் வாய்ப்புக்கள் எனும் தலைப்பின்கீழ் இதனைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்துவதற்கான தீர்வாலோசனைகளையும் விதந்துரைப்புக்களையும் முன்வைப்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. இவ்வாய்வானது அளவை நிலை ஆய்வாக வடிவமைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. பலாங்கொடை கல்வி வலயத்தின் இம்புல்பே கோட்டத்தின் ஐந்து பெருந்தோட்டப்புறத் தமிழ் பாடசாலைகளில் தரம் 6 – 9 வரையான வகுப்புக்களிலிருந்து நோக்க மாதிரி அடிப்படையில் 100 விசேடதேவைசார் மாணவர்கள் இவ்வாய்வுக்காக தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 50 பெற்றோர்களும், 50 கனிஸ்ட இடைநிலை பிரிவு ஆசிரியர்களும், எளிய எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். அதிபர்களும் எளிய எழுமாற்று மாதிரியில் உள்வாங்கப்பட்டிருந்தனர். வினாக்கொத்து, நேர்காணல், அவதானிப்பு போன்ற தரவு சேகரிப்புக் கருவிகளைப் பயன்படுத்தித் தொகைசார் மற்றும் பண்புசார் தரவுகள் திரட்டப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் நூற்றுவீதம் மூலம் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் பாடசாலையில் விசேட தேவைகள்சார் மாணவர்கள் கற்றலில் சவால்களை

எதிர்கொள்கின்றனர். அவர்களுக்கான கற்றல் வாய்ப்புக்களும் குறைவாகவே காணப்படுகின்றமையைக் கண்டறிய முடிந்தது. இதற்குப் பாடசாலையின் வளப்பற்றாக்குறை, பெற்றோர்களின் கவனமின்மை, பாடசாலை செயற்பாடுகளின் திருப்தியின்மை முக்கிய காரணங்களாக அமைகின்றன. எனவே பல்வேறுபட்ட கற்றல் வாய்ப்புக்களைப் பாடசாலை மட்டத்தில் ஒழுங்கமைப்பதோடு அவற்றிற்குப் பெற்றோரின் பங்களிப்பையும் பெற்றுக்கொடுப்பதால் மாணவர்களிடையே சிறந்த கற்றல் விருத்தியை ஏற்படுத்த முடியும் என்பது கண்டறியப்பட்டது. அத்துடன் கற்றலில் நலிவு நிலையைக் காட்டும் மாணவர்களுக்கான கற்றலின்பால் உள்ள ஈடுபாட்டை அதிகரிக்கவும், கற்றலை ஊக்குவிக்கும் வகையிலான உத்திகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

Abstract

In globalization, the education sector has a responsibility to create a humane society that is responsive to global changes. Students with special needs can be found in a variety of classrooms. Greater special needs students are not given much attention. It is therefore the duty of the school to eliminate their problems and provide an opportunity for balanced learning. In that regard, the purpose of this study is to identify the challenges faced by students with special needs in learning in ordinary schools and to present solutions and suggestions for improving them. This study is designed and carried out as a scale level study.

This study has been conducted focusing on the plantation Tamil schools in the Impulpe division of the Balangoda education zone. For this purpose, 5 Tamil schools have been identified on the basis of the facility model and since then 100 special needs students and 50 parents of those students have been identified on the basis of the objective model from classes 6 to 9 of junior intermediate section. The 50 junior intermediate teachers and 5 principals of the schools were identified as models on the basis of light transformation and all the data obtained from them qualitatively and quantitatively were analyzed through Excel and marked with tables and diagrams. Based on the results obtained from this survey, students with special needs in school face learning challenges. Learning opportunities for them were also found to be low. The main reasons for this are the lack of resources in the school, the inattention of the parents and the dissatisfaction of the school activities. It was therefore found that organizing the various learning opportunities at the school level and involving the participation of parents in them can lead to better learning development among the students. There are also suggestions on how to increase learning engagement and encourage learning for students with learning disabilities.

திறவுச் சொற்கள் (Keywords): சாதாரண பாடசாலைகள், விசேட தேவையுடைய மாணவர்கள், கற்றல் சார்ந்த சவால்கள், கற்றல் வாய்ப்புக்கள், இடைநிலை மாணவர்கள் (Normal Schools, Special needs Students, Learning challenges, Learning opportunities, Intermediate students)

1.1 ஆய்வு அறிமுகம்

இன்றைய 21ஆம் நூற்றாண்டிலே சமூகம் பல்வேறு வகையிலும் முன்னேறியுள்ளது. அந்த வகையில் அனைவருக்கும் கல்வி எனும் சிந்தனை மனித சமூகத்தின் சமூக தேவைகள்

மற்றும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்ய மிகவும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அனைவருக்கும் கல்வி எனும் சிந்தனையானது பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் கல்வி பெற தகுதியுடையவர்களே என்பதைச் சுட்டி நிற்கின்றது. விசேட தேவையுடைய மாணவர்கள் இன்று அதிகம் அனேகமான பாடசாலைகளில் சாதாரண மாணவர்களுடன் இணைந்து வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவ்வாறு ஈடுபடுத்துவதனூடாகப் பல்வேறு பின்னடைவுகள் விசேட தேவையுடைய மாணவர்கள் மத்தியில் ஏற்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பறைச் செயற்பாட்டின் நோக்கமும் அங்குக் காணப்படும் மாணவர்களின் விருத்தியினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால் சாதாரண மாணவர்களுடன் விசேட தேவையடைய மாணவர்கள் வகுப்பறைச் செயற்பாட்டில் இணைக்கப்படும்பொழுது எவ்வாறு அவர்களது விருத்தி நிலை சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியாகும்.

சாதாரண மாணவர்களை போன்று ஆசிரியர்களும் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றார்கள். விசேட தேவையுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்கள் என்ற இரு பிரிவினருக்கும்; ஒரே சமயத்தில் வகுப்பறைச் செயற்பாடுகளை மேற்கொள்வது என்பது மிகவும் சிக்கலாக உள்ளது. அதே போன்று விசேட தேவையுடைய மாணவர்களுக்கான குறிப்பாகக் கண் பார்வையற்றோர் போன்றவருக்கான கருவிகள் பயன்படுத்துவதில் சில ஆசிரியர்கள் சிக்கல்களை எதிர்நோக்கின்றார்கள். இவ்வாறு ஆசிரியர்களின் பிரச்சினைகளையும் குறிப்பிட முடியும்.

எனினும் சாதாரண பாடசாலைகளில் சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாடுகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கிள்கின்றார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். மேற்படி விசேட தேவைகள் சார் மாணவர்கள் சாதாரண பாடசாலைகளில் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும் அவர்களுக்கான கற்றல் வாய்ப்பு எவ்வாறு அமைந்து காணப்படுகின்றது என்பதையும் ஆராயும் நோக்கில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது. அந்த வரிசையில் கற்பிட்டி கோட்டத் தமிழ்மொழி மூல சாதாரண பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களும் கற்றல் வாய்ப்புக்களும் எனும் தலைப்பிலமைந்த இவ் ஆய்வானது கனிஷ்ட இடைநிலைப்பிரிவில் உள்ள சகல தரங்களையும் தரங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு முழுமையாக முன்னெடுக்கப்படுகின்றது.

1.2 ஆய்வுப் பிரச்சினை

ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவனும் தமது வாழ்க்கை காலத்தில் எண்ணற்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அந்த வகையில் சாதாரண மாணவர்களை போன்றே விசேட தேவைகள் சார் மாணவர்களும் எதிர்காலச் சவால்களைப் பொருத்தமான வகையில் எதிர்கொண்டு வாழ்வில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். மேற்படி இம்மாணவர்கள் சவால்களைக் களைவதற்கான ஊடகமாகக் கல்வியைக் கையாள மாணவர்களை இசைவாக்கம் அடையச் செய்ய வேண்டும். அந்த வகையில் கல்வியை வழங்கும் முறைசார் நிறுவனமாகப் பாடசாலைகள் தொழிற்படுகின்றன. மேற்படி கல்வியைப் பெற்றுக்கொள்ள உதவும் கற்றல் கற்பித்தல் செயன்முறையினைச் சரியாக விளங்கிக்கொண்டு விசேட தேவைகள் சார் மாணவர்களைக் கற்றலில்

ஊக்குவிப்பதும் வினைதிறனுள்ள கற்றலுக்கு வகை செய்வதும் கல்விசார் துறையைச் சேர்ந்த அனைவரினதும் கடமையாகும்.

1.3 ஆய்வின் பிரதான நோக்கமும் குறிக்கோள்களும்

பிரதான நோக்கம்

விசேட தேவைகள் சார் மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களைக் கண்டறிவதுடன் அவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் அவர்களது ஆற்றலை மேம்படுத்த வாய்ப்புகளை ஏற்படுத்தல்.

1. விசேட தேவைகள் சார் மாணவர்களுக்கு வகுப்பறையில் வழங்கப்படும் கற்றலுக்கான வாய்ப்புகளை கண்டறிதல்.
2. வகுப்பறையில் செயற்படுத்தப்படும் கற்பித்தல் செயன்முறைகளில் விசேட தேவைகள் சார் மாணவர்களின் பங்கு பற்றுதல் அறிதல்
3. விசேட தேவைகள் சார் மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தலை மேற்கொள்வதற்கான பாடசாலையில் காணப்படும் வளங்களைக் கண்டறிதல்.
4. விசேட தேவைகள் சார் மாணவர்கள் கற்றல் கற்பித்தலின் போது எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதை இனங்காணல்.

2.0 இலக்கிய மீளாய்வு

விசேட தேவையுடைய மாணவர்கள் என்னும்போது சாதாரணமாகக் கற்கின்ற மாணவர்களை விட விசேடமான பல கருமங்களை ஆற்றியவாறு கல்வியை வழங்க வேண்டிய மாணவர்கள் வகுப்பறையில் காணப்படுகின்றனர் அவர்களை விசேட தேவையுடைய மாணவர்கள் எனக் குறிப்பிடலாம். (மகேசன், 2010)

சாதாரண வகுப்பறை ஒன்றிலிருந்து தனது கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்வதில் பெருமளவு இடருகின்ற மாணவர்களே விசேட தேவையுடையோராகக் கொள்ளப்படுகின்றனர். (செல்வநாயகம், 2007)

விசேட கல்வி சார் தேவைகளைக் கொண்ட மாணவர்கள் பல்லினத் தன்மை கொண்டவர்களாவர். அவர்கள் துரிதமாகவோ மெதுவாகவோ அல்லது மிகுந்த சிரமப்பட்டோ கற்கின்றார்கள். அவர்களது நடத்தை பொருத்தமானதாகவோ அல்லது பொருத்தமற்றதாகவோ அமையலாம். (திறந்த பல்கலைக்கழகம், 2007)

கற்றல் இயலாமைக் குறைபாட்டையுடைய மாணவர்கள் எழுதுதல், வாசித்தல், கிரகித்தல், ஞாபகப்படுத்தல் போன்ற கற்றல்சார் செயற்பாடுகளில் இடர்ப்படுபவர்களாகக் காணப்படுகின்றனர். அத்துடன் இத்தகைய கற்றல் இயலாமை எனப்படுவது நரம்புசார் ஒழுங்கீனம் ஆகும். இவ்வாறான இயலாமை கொண்ட மாணவர்கள் தமது சகபாடிகளைப் போல அல்லது அவர்களை விட ஆற்றல் கொண்டவர்களாவர். (Dash, 2000)

'மாணவர்கள் சாதனைகள் மற்றும் மேம்படுத்துவதில் பெற்றோர், குடும்பக்கல்வியின் தாக்கம்' என்ற ஆய்வின் மூலம் சமூகவியல் அடிப்படையில் விரிந்த குடும்பங்களின் சமூகமயமாக்கலுக்கான சாதகமான நிலைமைகள் அதிகரித்துக் காணப்படுமாயினும்

குடும்பத்தின் பருமன் காரணமாக, அங்குத் தோன்றக்கூடிய நிலைமைகள் உறுப்பினர்களைப் பாதிக்கலாம். குடும்பங்களில் கருக்குடும்பம், கூட்டுக்குடும்பம் என இரண்டு வகையாகச் சமூகவியலாளர்கள் பகுத்துக் காட்டுவர். குடும்ப உறுப்பினர்களின் கூட்டுப்பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், ஆளுமை விருத்தியில் அதன் பாதிப்புக்களை விரிவாக எடுத்துக்காட்டியுள்ளனர். (Desforges & Abouchaar, 2013)

மாணவர்களின் கற்றலில் வகுப்பறைச் சூழலின் தாக்கம் என்ற ஆய்வில் விளையாட்டுத் திடலிலும், இடைவேளையிலும், பாடசாலை நேரத்தின் பின்னரும் மாணவருடன் நல்லிணக்கத்துடன் கலந்துரையாடுவதன் மூலம் அவர்களது நண்பர்கள், பெற்றோர்கள், சகோதரர்கள், அயலில் வசிப்போர் ஆகியோரின் விருப்பு வெறுப்புக்களையும் தேவைகளையும் இனங்காண்க. பல்வேறு பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களைப் பற்றி கொண்டிருக்கும் மனப்பாங்குகளைக் கண்டறியுங்கள். (An Int. J. 2016)

பிள்ளை எவ்வகையான இடர்களை எதிர்கொள்கின்றனர் என்பதை முதலில் ஆசிரியரும் பெற்றோரும் அறிதல் வேண்டும். உரிய முறையில் எழுதும் முறைமை கற்பிக்கப்பட்டிருந்தாலும் எழுதுவதில் இடர்படும் மாணவர்களுக்கு அதனைத் திருத்தி அமைக்க முடியும் என்ற நம்பிக்கை மாணவருக்கும் ஆசிரியருக்கும் இருத்தல் வேண்டும். எழுத்தை உறுப்பாகவும் வலுவின்றியும் எழுத முடியும் என்ற உறுதியையும் தன்னம்பிக்கையையும் கட்டியெழுப்புதல் முதற்கண் முக்கியத்துவம் பெறுகின்றது. (ஜெயராசா, 2008)

குறைப்பாடுடைய பிள்ளைக்காக வரையப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டத்தைப் பயனுறுதியுள்ளதாக மாற்றியமைக்க பெற்றோரின் உயிர்த்துடிப்பான பங்களிப்பு அவசியமானதாகும். (Sahnnon, 2004)

மெல்லக் கற்பவர்கள் ஒரு சாதாரண வகுப்பில் இருந்தாலும் குறைந்தளவினராக இருக்க வேண்டும். திறமையான மாணவர்களைப் போலவே வெற்றிக்கான பயணத்தில் ஆசிரியர்கள் அவர்களுடன் வர வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தையைப் புகழ்வதும் ஊக்குவிப்பதும் அதிசயங்களையும் கற்றலில் மகிழ்ச்சியையும் உருவாக்குகின்றது. அற்பமான வெற்றிகளிலிருந்து பலனற்ற தோல்வியிலிருந்தும் கூடக் கற்றுக்கொள்ள ஆசிரியர்கள், பெற்றோர் உதவ வேண்டும். (Korikan, 2020)

பல்வேறுபட்ட கற்றல் தேவை எனும்போது ஒரு வகுப்பறையில் மீத்திறன் மாணவர்கள், மெல்லக்கற்கும் மாணவர்கள், கற்றல் இடர்ப்பாடுடைய மாணவர்கள், விசேட தேவையுடைய மாணவர்கள் எனப் பல வகையான மாணவர்கள் காணப்படுவார்கள். இவர்களின் கற்றல் பாங்கு, ஆற்றல், திறன் போன்றன ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாகும். இவர்கள் கற்றுக் கொள்வதில் வித்தியாசமான கற்றல் தேவையுடையவர்களாகக் காணப்படுவார்கள். (Anas & Nawastheen, 2019)

மீத்திறன் குழந்தைகள், சராசரி குழந்தைகள் ஆகியவர்களுக்கு மட்டும் ஆசிரியர் கல்வி கற்பிப்பதில்லை. மெதுவாகக் கற்கும் குழந்தைகள், இயக்கக் குறைவுடைய குழந்தைகள், தொந்தரவு தரும் குழந்தைகள் போன்றவர்களுக்கும் கல்வி கற்பிக்க வேண்டிய இன்றியமையாமை எல்லா ஆசிரியர்களுக்கும் உண்டு. இவர்களது கல்வி ஈவு 90 இற்குக்

குறைவாக இருக்கும். கல்வி ஈவு என்பது மாணவனது அடைவு வயதுக்கும் (Attainment Age) கால வயதுக்கும் (Chronological age) உள்ள விகிதமாகும். இந்த ஈவு வீதங்களும் பிள்ளைகளின் கற்றலில் ஆதிக்கம் செலுத்துவதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (Agnes Jerome,2012)

விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கான கலைத்திட்டமானது கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகவும் அனைத்துக் கற்றல்சார் விடயங்களையும் சேகரித்து வைக்கும் தொழில் நுட்பத்தினை உடையதாகவும் கற்பித்தல் உபகரணங்களின் பயன்பாடு உடையதாகவும் இருத்தல் வேண்டும். (விசேட தேவைகள் சார் கல்விக்கான பல்துறை அணுமுறைகள், 2010)

செயற்பாட்டின் மூலம் கற்பிக்கும் திறன் அதாவது இருந்த இடத்தில் இருந்து கொண்டே கற்பிக்காது செயற்பாட்டின் மூலமாகக் கற்பிக்கும் திறனைக் கொண்டிருத்தல். மாணவர்களுக்குப் பொருத்தமாக இருக்கின்ற வேறு வகையான ஆனால் உயர்ந்த எதிர்பார்ப்புகளை ஸ்தாபிக்கத்தக்க திறமை அதாவது மாற்று வகையான மதிப்பீடுகளை அபிவிருத்தி செய்தல். (மகேசன், 2010)

3.0 ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது அளவை நிலை முறை மற்றும் பண்பறிசார் முறை என்ற ஆய்வு முறைகளை இணைத்ததாக மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் இவ்வாய்வு கலப்பு முறையிலான ஆய்வாகக் கருதப்படுகின்றது.

இந்த ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் வசதி மாதிரி அடிப்படையிலும் கனிஸ்ட இடைநிலைப் பிரிவில் மெல்லக் கற்கும் மாணவர்கள் நோக்க மாதிரி அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் ஆய்விற்காக மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இலகு எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுத் தகவல்கள் திரப்பட்டன. ஆய்வு செயற்பாட்டில் தரவு சேகரித்தல் முறை இன்றியமையாததாகும். ஆய்வாளரையும், ஆய்வுக்குட்படுவோரையும் இணைக்கின்ற செயற்பாடாகத் தரவு சேகரித்தல் முறை அமைகின்றது. இங்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அவர்களின் பெற்றோர்கள் என்பவர்களுடனான வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் போன்ற அகவயமான உணவுர்களும் ஆய்வில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

இங்குத் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளைக் கொண்டு ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டு முழு அங்கத்துவத்திற்கும் பொதுமைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் தரவுகளினதும், தகவல்களினும் நம்பகத் தன்மையும், தகுதியும் உறுதிப்படுத்தும் வகையில் தரவுப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. இவ்வாறாக ஆய்வு முறையியலானது ஆய்விற்கான முக்கிய நுட்பங்களை உள்ளடக்கியதாக அமைகின்றது.

3.1 மாதிரித்தெரிவு

இது ஒரு கல்வியியல்துறை சார்ந்ததும் பாடசாலையை மையமாகக் கொண்டதுமான ஆய்வு என்பதால் பாடசாலை மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூகத்தைப் பாடசாலை

உள்ளீர்த்துக் கொள்கிறது. அந்தவகையில் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 4 வலயங்களுள் ஒன்றான இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள 4 கல்வி வலயங்களில் ஒன்றான பலாங்கொடை கல்வி வலயம் பலாங்கொடை, இம்புல்பே, வெலிகபொல ஆகிய மூன்று கோட்டங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இவ்வலயத்தில் மொத்தமாக 132 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 1AB பாடசாலைகள் 10 உம், 1C பாடசாலை 19 உம் வகை 2 பாடசாலைகள் 63 உம், வகை 3 பாடசாலைகள் 40 உம் காணப்படுகின்றன. சிங்களம் மற்றும் தமிழ் மொழி அடிப்படையில் 132 பாடசாலைகள் இதில் இயங்கி வருகின்றன. குறிப்பாக 23 தமிழ் மொழி மூலமான பாடசாலைகள் உள்ளடங்குகின்றன. எனவே, இவை வலயத்தின் பாடசாலைகள் பற்றிய முழு விபரம் அட்டவணை 1இல் காணலாம்.

அட்டவணை 1: பலாங்கொடை வலய பாடசாலைகள், ஆசிரியர், அதிபர், மாணவர்கள் எண்ணிக்கை

விபரம்	பாடசாலை					அதிபர்	ஆசிரியர்கள்	மாணவர்கள்	மாணவர்கள்
	1AB	1C	வகை 02	வகை 03				ஆண்கள்	பெண்கள்
எண்ணிக்கை	10	19	63	40	132	132	2708	19257	20275
மொத்தம்	10	19	63	40	132	132	2708	39532	

(மூலம்: பலாங்கொடை கல்வி வலயம்)

குறித்த ஒரு ஆய்விற்கான தரவுகளைச் சேகரிப்பதற்காக மாதிரி எடுத்தல் முறை பயன்படுத்தப்படுகின்றது. ஆய்வாளன் பெரியதோர் குடித்தொகையில் இருந்துதான் சில வழிமுறைகளைப் பின்பற்றி தனக்குத் தேவையான தரவுகளைப் பெற பயன்படுத்தப்படும் ஓர் எளிய கூறாக இம்மாதிரி காணப்படுகின்றது.

அதனடிப்படையில் இம்புல்பே கல்விக்கோட்டத்தில் 1AB பாடசாலைகள் இரண்டும், 1C பாடசாலைகள் ஆறும், வகை II பாடசாலைகள் பதினேழும், வகை III பாடசாலைகள் பதினேழும் மொத்தமாக 42 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவ்வாய்விற்காக, தூரம், போக்குவரத்துப் பிரச்சினை, காலநிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு வசதிமாதிரி அடிப்படையில் இரண்டு 1C பாடசாலைகளும், மூன்று வகை III பாடசாலைகளும் அடங்கலாக மொத்தம் ஐந்து பாடசாலைகள் ஆய்விற்காகக் தெரிவுசெய்யப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளில்; உள்ள அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டதோடு, மேலும் இப்பாடசாலைகளின் ஆசிரியர்கள் 100 பேரில் 2:1 என்ற விகித அடிப்படையில் 50

ஆசிரியர்கள் இலகு எழுமாற்று மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கனிஸ்ட இடைநிலையில் கல்வி கற்கும் மாணவர்களில் மெல்லக் கற்கும் 200 மாணவர்களில் இருந்து 2:1 என்ற விகிதத்தின் அடிப்படையில் நோக்கமாதிரி தெரிவின் அடிப்படையில் 100 மாணவர்களும், ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களின் பெற்றோர்கள் இலகு எழுமாற்றுத் தெரிவு முறை அடிப்படையில் 2:1 எனும் விகிதத்தில் 50 பேர் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறாகத் தெரிவு செய்யப்பட்ட அதிபர்களினதும், மாணவர்களினதும், பெற்றோர்ளினதும், ஆசிரியர்களினதும் விபரம் பின்வரும் அட்டவணை 2 இன் மூலம் காட்டப்படுகின்றது.

அட்டவண 2 : மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மற்றும் அதிபர், ஆசிரியர் விபரம்

	பாடசாலைகள், அதிபர்கள், ஆசிரியர்கள்,எண்ணிக்கை									
இல	பாடசாலை பெயர்	பாடசாலை வகை	அதிபர்கள்	மாதிரித் தெரிவு	ஆசிரியர்கள்	மாதிரி தெரிவு	மாணவர்கள்	மாதிரி தெரிவு	பெற்றோர்கள்	மாதிரி தெரிவு
01	A	1C	01	1	36	16	46	23	23	11
02	B	1C	01	1	29	15	64	64	64	16
03	C	Type - II	01	1	15	8	28	28	28	7
04	D	Type - II	01	1	12	6	36	36	36	9
05	E	Type - II	01	1	10	5	26	26	26	7
மொத்தம்			05	5	102	50	200	100	100	50

(மூலம்: ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது)

4.0 ஆய்வுப் பகுப்பு

4.1 விசேட தேவைகள் சார் மாணவர்களுக்கு வகுப்பறையில் வழங்கப்படும் கற்றலுக்கான வாய்ப்புக்களைக் கண்டறிதல்

4.1.1 பெற்றோர்கள் கல்வியில் கவனமெடுத்தல் தொடர்பான பகுப்பு

விசேட தேவைகள்சார் மாணவர்களுக்குப் பெற்றோர்களது பங்களிப்பு, கண்காணிப்பு மிக அவசியம். இவ்வாறான கண்காணிப்புடன் இணைந்த கற்றலில் இறுதியில் மாணவர்களது கல்வியில் சிறப்பான விருத்தி ஏற்பட வழிவகுக்கும். இம்மாணவர்களது கற்றலில் பெற்றோர்கள் கவனமெடுக்காதுவிடின் கற்றலில் பின்னடைவு உருவாகும். மேற்படி விசேட தேவைகள் சார் மாணவர்களது கல்வியில் பெற்றோர்களின் பங்களிப்பு பற்றிய மாணவர்களின் கருத்து பின்வரும் உருவில் காட்டப்படுகின்றது.

உரு 4.1 பெற்றோர்களின் கல்வியில் கவனமெடுத்தல் தொடர்பான மாணவர்களது கருத்து

ஆய்வுக்குப்படுத்தப்பட்ட 60 மாணவர்களில் தமது கற்றலில் பெற்றோர்கள் கவனமெடுத்தல் நன்றாக அமைந்திருப்பதாக 13 மாணவர்கள் என 22 சதவீமானவர்கள் பதிலளித்தனர் 22 மாணவர்கள் ஓரளவேனும் தமது பெற்றோர்கள் கவனமெடுப்பதாக 37 சதவீதமானவர்கள் பதிலளித்தனர். 25 மாணவர்கள் தமது பெற்றோர்கள் கவனமெடுப்பதில்லை என 41 சதவீதமானவர்கள் பதிலளித்தனர்.

4.2 வகுப்பறையில் செயற்படுத்தும் கற்பித்தல் செயன்முறைகளில் விசேட தேவைகள் விசேட தேவைகள்சார் மாணவர்களின் பங்கு பற்றலை அறிதல்

4.2.1 பாடசாலை மட்ட கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் வாய்ப்பு தொடர்பான பகுப்பு

சாதாரண மாணவர்களைக் காட்டிலும் விசேட தேவைகள்சார் மாணவர்களைப் பொருத்தவரை ஏனைய செயற்பாடுகளில் சிறப்பான ஆற்றல்களைக் கொண்டிருப்பர். குறித்த ஆற்றல்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆசிரியர்களும் கவனம் செலுத்த வேண்டும். இவர்களைப் பாடசாலைமட்ட கலை நிகழ்ச்சியில் ஈடுபடுத்துவது தொடர்பான வினாவானது மாணவர்களிடம் வினவப்பட்டபோது மாணவர்கள் பின்வருமாறு பதிலளித்தனர். இது பின்வருமாறு உருவில் காட்டப்படுகின்றது.

4.2. பாடசாலை மட்ட கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றும் விதம் பற்றிய மாணவர்களின் பதில்

பாடசாலை மட்ட கலை நிகழ்ச்சியில் பங்கு பற்றும் வாய்ப்பு தொடர்பாக மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட 60 மாணவர்களிடம் வினவப்பட்ட போது 22 சதவீதமான மாணவர்கள் தாம் கலை நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு நன்றாக அமைந்துள்ளது எனவும் 33 சதவீதமான மாணவர்கள் தமக்கான வாய்ப்பு ஓரளவு கிடைக்கின்றது எனவும் மற்றைய 45 சதவீமான மாணவர்கள் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் குறைவு எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

4.3 விசேட தேவைகள் சார் மாணவர்களுக்குக் கற்றல் - கற்பித்தலை மேற்கொள்வதற்காகப் பாடசாலையில் காணப்படும் வளங்களை அறிதல்.

4.3.1 ஆளணிவளம் தொடர்பான பகுப்பு

எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர் உள்ளனரா? இல்லையெனில் அந்தப் பாடம் எது என ஆசிரியர்கள், மாணவர்களிடம் வினவியபோது ஆய்வுக்கு உட்பட்ட பாடசாலையில் கணிதம், சிங்களம், சித்திரம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக மாணவர்கள். இது பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

அட்டவணை 3 : பாடங்களுக்கான ஆசிரியர்கள் இன்மை தொடர்பாக மாணவர்கள், ஆசிரியர்களால் அளிக்கப்பட்ட பதில்கள்

பாடங்கள்	அளித்த பதில்கள் (%)	
	மாணவர்கள்	ஆசிரியர்கள்
கணிதம்	15%	23%
மொழிப்பாடங்கள் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்)	42%	42%
சித்திர பாடம்	33%	20%

(மூலம்: ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது.)

மேற்படி வினாவில் ஆசிரியர்களிடம் வினவப்பட்டபோது 35 ஆசிரியர்களில் 8 ஆசிரியர்கள் கணித பாட ஆசிரியர்கள் பாடசாலையில் இல்லை என பதில் அளித்தனர். இது 23 சதவீதமாகும். 15 ஆசிரியர்கள் மொழி தொடர்பான ஆசிரியர் இல்லையெனவும் 42 சதவீதமாக அமைகின்றது. 12 ஆசிரியர்கள் சித்திர பாடத்திற்கு ஆசிரியர்கள் இல்லை என 20 சதவீனமானவர்கள் பதிலளித்தனர்.

4.3.2 கற்றல் உபகரணங்கள் தொடர்பான பகுப்பு

ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகளில் கற்றலுக்கான உபகரணங்கள் தொடர்பாக மாணவர்களிடம் வினவியபோது மாணவர்கள் பின்வருமாறு தமது துலங்களை வெளிப்படுத்தினர். இது பின்வரும் உருவில் காட்டப்படுகின்றது.

உரு 4.3 பாடசாலையில் காணப்படும் கற்றல் உபகரணங்கள் தொடர்பான மாணவர்களது கருத்து

4.3.3 ஆசிரியர்களது ஊக்கல் தொடர்பான மாணவர்களது கருத்து

மாணவர்களுக்கான ஊக்குவித்தல் வழங்கப்படுகின்றமை தொடர்பாக மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களிடம் வினவியபோது மாணவர்கள் பின்வருமாறு தமது துலங்களை வெளிப்படுத்தினர். இது பின்வரும் உருவில் காட்டப்படுகின்றது.

4.4 ஆசிரியர்களது ஊக்கல் தொடர்பான மாணவர்களது கருத்து

60 மாணவர்களில் 15 மாணவர்கள் கற்றலின் போது ஆசிரியர்களினால் தமக்கான ஊக்கல் நன்றாக வழங்கப்படுவதாக 25 சதவீதமானவர்கள் பதிலளித்தனர். 20 மாணவர்கள் ஓரளவேனும் தமக்கான ஊக்கல் வழங்கப்படுவதாக 33 சதவீதமானவர்கள் பதிலளித்தனர். 25 மாணவர்கள் தமக்கான ஊக்கல் வழங்கப்படுவதில்லை என 42 சதவீமானவர்கள் பதிலளித்தனர்.

4.4 சாதாரண பாடசாலைகளில் விசேட தேவைகள் சார் மாணவர்களுக்கு வகுப்பறையில் கற்றல் கற்பித்தலில் வழங்கப்படும் கற்றலுக்கான வாய்ப்புக்களைக் கண்டறிதல்.

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பல்வேறு பிரிவுகளை உடையவர்களாக இருப்பர். சாதாரண பாடசாலைகளில் விசேட தேவைகள் சார் மாணவர்களுக்கு வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை அவதானிப்பதற்கான பல்வேறு உத்திகளைக் கையாள்வதற்கான நடைமுறைகளைவ் செயற்படுத்துவதற்கு முறையான கண்காணிப்பு அவசியமாகும். அதனைக் கருத்திற்கொண்டு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மட்டத்தில் மாணவர்களின் கற்றல் விருத்தி நிலைகளைக் கண்டறிதல் முக்கியமானதாகும்.

4.4.1 மாணவர்களை வழிகாட்டக்கூடிய பயிற்சி நுட்பங்கள் வலய, மாகாண மட்டங்களில் வழங்கப்படுகின்றமை தொடர்பான பகுப்பு.

வலய மாகாண மட்டங்களில் பயிற்சி நுட்பங்கள் வழங்குதல் தொடர்பாக ஆசிரியர்களிடம் வினவிய போது ஆசிரியர்கள் பின்வருமாறு பதிலளித்தனர். இது பின்வரும் உருவில் காட்டப்படுகின்றது.

உரு. 4.5 பயிற்சி நுட்பங்கள் தொடர்பான ஆசிரியர்களது கருத்து

இவ்வினாவிற்கு 5 ஆசிரியர்கள் தமக்கான பயிற்சி வழிகாட்டல்கள் மிகவும் நன்றாக இடம்பெறுவதாக 14 சதவீதமானவர்கள் தெரிவித்திருந்தனர். 8 ஆசிரியர்கள் பயிற்சி நன்றாக இடம்பெறுவதாக 23 சதவீதமானவர்கள் பதிலளித்தனர். தமக்கான பயிற்சி ஓரளவேனும் இடம்பெறுவதாக 15 ஆசிரியர்கள் பதில் அளித்திருந்தனர். இது 43 சதவீதமாகும் ஆகும். 7 ஆசிரியர்கள் தமக்கான பயிற்சி வழிகாட்டல்கள் குறைவாக இடம்பெறுவதாக 20 சதவீதமானவர்கள் பதிலளித்தனர்.

4.4.2 குழுச் செயற்பாட்டின் போதான அவதானம் தொடர்பான பகுப்பு

குழுச் செயற்பாடுகளின் போது ஒவ்வொரு மாணவனதும் கற்றற் செயற்பாட்டை அவதானிப்பது தொடர்பாக ஆசிரியர்கள் காட்டிய துலங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

அட்டவணை 4 : குழுச் செயற்பாட்டின் போதான அவதானம் தொடர்பாக ஆசிரியர்களினால் அளிக்கப்பட்ட பதில்கள்

ஆசிரியர்களது கூற்றுக்கள்	சதவீதம்
நன்று	29%
ஓரளவு	57%
குறைவு	14%

(மூலம்: ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது.)

5.0 ஆய்வுத் தீர்வும் பரிந்துரைகளும்

5.1 வழிகாட்டல் சேவை தொடர்பான பகுப்பு முடிவுகள்

ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகளில் பெரும்பாலான மாணவர்களிடம் வழிகாட்டல் ஆலோசனை பெறுவது தொடர்பான அறிவு காணப்படவில்லை. விசேட தேவைகள் சார் மாணவர்களின் துலங்கல்கள் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை தாம் குறைவாகவே பெற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டிருந்திருந்தமை அறிய முடிந்தது. ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை தொடர்பாகக் குறைவான ஆசிரியர்களே பயிற்சி பெற்றிருப்பதனை ஆசிரியர்களின் துலங்களிலிருந்து கண்டறிய முடிந்தது. பாடசாலைகளில் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் பதில்களுக்கு அமைவாக விசேட தேவைகள்சார் மாணவர்களது சவால்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைகள் குறைவாக வழங்கப்பட்டுள்ளமையை அறிய முடிந்தது.

- விசேட தேவைகள்சார் மாணவர்களுக்கான சவால்கள் எழும்போது வழிகாட்டல் ஆலோசனை பெற வேண்டும். என்பதனை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தி இது தொடர்பான அறிவினைப் பாடசாலை மட்டத்தில் முன்னெடுப்பது அவசியமாகும்.
- விசேட தேவைகள்சார் மாணவர்களது சவால்களைக் களைந்து வழிகாட்டல் ஆலோசனை பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு தமக்கேயுள்ளது என்பதை அறிந்து அதற்கேற்ற செயற்பாடுகளை (பயிற்சிகள், வழிகாட்டல்கள்) முன்னெடுப்பது அவசியமாகும்.

- பாடசாலைகள் இவ்விசேட தேவைகள் சார் மாணவர்கள் தொடர்பான சமூகத்தின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான செயற்பாடுகளைப் பாடசாலை மட்டத்தில் முன்னெடுப்பது அவசியமாகும்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்களுடனான இடைத்தொடர்பானது ஓரளவேணும் சிறப்பாகக் காணப்படுவதனை அறிய முடிந்தது. மேலும் விசேட தேவைகள் சார் மாணவர்களில் அனேகமானோரது துலங்களின் படி ஆசிரியர் தம்முடன் இடைத்தொடர்புகளை ஓரளவேனும் பேணி வருவதைத் தெரிவித்தமை, அனேக ஆசிரியர்களின் துலங்கலானது மாணவர்களிடம் சிறப்பான தொடர்பைப் பேணுவதாகத் தெரிவித்தமை அறிய முடிந்தது.

- மாணவர்கள் ஆளுக்காள் வேறுபட்ட ஆளுமையுடையவர்கள் என்பதனை ஆசிரியர் கருத்திற்கொண்டு ஆளுமைகளை விருத்தியுறச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- விசேட தேவைகள் சார் மாணவர்களுடனான இடைத்தொடர்புகளைச் சிறப்பாகப் பேணுவதன் மூலம் அவர்களது கற்றலில் முன்னேற்றத்தை ஏற்படுத்த ஆசிரியர் தான் கடமைப்பாடு உள்ளவர்கள் எனச் செயலாற்ற வேண்டும்.
- ஆசிரியர்கள் விசேட தேவைகள்சார் மாணவர்களது கற்றல் சவால்களைக் களைவதற்கு இம் மாணவர்களுடனான தொடர்பினைச் சிறப்பாகப் பேணி வழிகாட்டல்களையும் ஊக்குவித்தலும் வழங்குதல் ஆசிரியரது கடமையாகும்.

ஆய்வுக்குட்பட்ட பாடசாலைகள் கஸ்டப் பிரதேசங்களில் அமைந்து காணப்படுவதனால் அதற்கான வளங்கள் சீராக அமையப் பெறவில்லை என்பதனை அறிய முடிந்தது. மாணவர்களில் 83 சதவீதமானோர் தமது பாடசாலையில் கற்றலை மேற்கொள்வதற்கான வளப்பற்றாக்குறை காணப்படுவதாகப் பதில் அளித்ததனை அறிய முடிந்தது. மேலும் பாடசாலைகளின் பௌதீக வளங்கள் மாணவர்களது கல்வி நடவடிக்கைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தியதனை இனங்காண முடிந்தது.

- பாடசாலைக்கு அவசியமான பௌதீக வளங்களையும் ஆளணி வளங்களையும் பெற்றுக்கொள்வதில் பாடசாலை நிர்வாகமும் அதிபரும் அதிக அக்கறை செலுத்துதல் வேண்டும். பாடசாலையில் காணப்படும் வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தி கற்றல் செயற்பாட்டை ஆசிரியர்கள் ஒழுங்கமைக்க வேண்டும்.
- தொண்டு நிறுவனங்கள், சமூக நலன் விரும்பிகள், பழைய மாணவர் சங்கம் என்பவர்களிடமிருந்து சில உதவிகளைப் பெற்று வளப்பற்றாக்குறையைக் குறைப்பதற்குப் பாடசாலை செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

ஆய்வுக்குட்பட்ட கனிஸ்ட இடைநிலை மாணவர்களிடத்தில் மொழித்தேர்ச்சி இன்மையால் கிரகித்துக் கொள்ளும் தன்மையானது குறைவு என்றே கூறலாம். அதாவது ஆசிரியர்கள் - கூறுபவற்றை அவர்களால்; கிரகித்துக் கொள்ள முடியாதவர்ககளாகக் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் கவனக்குறைவு என்றே கூறமுடியும். அதாவது கனிஸ்ட இடைநிலை மாணவர்கள் மனதினை ஒரு நிலைப்படுத்திக் கற்பிப்பவற்றைக் கேட்டுக் கொள்ளமாட்டார்கள். இதனால் அவர்களிடத்தில்; கிரகிப்பு என்பது குறைவாக உள்ளது எனலாம்.

இவ்வாறான கிரகித்தலில் மாணவர்கள்; இடர்படுகின்ற வேளையில் அவர்கள் பாடத்தில் கவனம் செலுத்துகின்ற வகையில் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடானது அமைய வேண்டும். இதனூடாக மாணவர்கள் மத்தியில் முறையாக வாசிப்பதற்கும், எழுத்து பிழைகளின்றி எழுதுவதற்கும் கற்பிக்கின்ற விடயத்தைப் பிள்ளைகள் விளங்கிக் கொள்வதற்கு வகுப்பறையில் படங்களைத் தொங்கவிட்டுக் கற்பித்தலை மேற்கொள்ளலாம். அதுமட்டுமன்றி விளையாட்டுக்கள் மூலமான கற்பித்தலை மேற்கொள்வதன்; மூலமாகவும் பிள்ளையின் கிரகித்தல் ஆற்றலை விருத்தியாக்கிக் கொள்ள முடியும். கனிஸ்ட இடைநிலை மாணவர்களிடத்தில் கவனக் குறைவானது அதிகளவில் காணப்படும். ஏனெனில் அவர்கள் சிறுவயதினராகையால் அவர்களிடத்தில் விளையாட்டுத் தனமானது காணப்படுகின்ற பருவத்தினர் என்பதாகும். அதனால் அவர்களின் கவனத்தைச் சிதரவிடாத வகையில் வகுப்பறையினைக் கற்பதற்குரிய கவின்நிலை உடையதாக மாற்றியமைக்க வேண்டியது ஆசிரியரின் கட்டமையாகும். கற்பிப்பது அவர்களின் மனதில் இலகுவாகப் பதியும் வகையில் அவர்களிடத்தில் சிறந்த புலக்காட்சியை ஏற்படுத்தும் வகையில் ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடானது அமைய வேண்டும். இதனை வகுப்பறையில்; ஆசிரியரின் செயற்பாடு மட்டும் ஏற்படுத்தாது இதற்கு வீட்டுச் சூழலின் பங்களிப்பு முக்கியமான ஒன்றாகும். அந்த வகையில்; பிள்ளைகளிடத்தில் விடயங்களைச் செவிமடுத்துவற்கு ஊக்கப்படுத்தல், அவற்றின் மூலமாகத் தமது செயற்பாடுகளை கிரகித்து அவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கான பயிற்சிகளை ஆசிரியர்கள் வழங்கின்ற போது மாணவர்களின் கிரகித்தல் திறனை விருத்தியாக்கிக் கொள்ள முடியும். இதனூடாக விசேடதேவைசார் மாணவர்களின் கற்றல் விருத்தியை அதிகரித்துக் கொள்ள முடியும்.

விசேடதேவைகள்சார் மாணவர்களது குறைபாட்டிற்கேற்பக் கற்பித்தலை மேற்கொள்வதாக அதிகமான ஆசிரியர்கள் தெரிவித்திருந்தபோதிலும் அதனை 100 வீதம் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தமை முக்கியமானதாகும். சாதாரண பாடசாலைகளில் பல்வகைத்தன்மை கொண்ட மாணவர்கள் காணப்படுவதால் ஒவ்வொரு மாணவர்களது குறைப்பாட்டை அறிந்து கற்பித்தலை மேற்கொள்வது கடினமானது என ஆசிரியர்கள் கூறியிருந்தனர்.

எழுத்து வாசிப்பு தேர்ச்சிகளை விசேட தேவைகள்சார் மாணவர்களில் அதிகமானோர் குறைவாகக் கொண்டிருப்பதால் வகுப்பறை மட்டத்தில் முழுமையாகத் தேர்ச்சிகளை எய்த முடிவதில்லை என்பதும் கண்டறியப்பட்டது.

மாணவர்களது குறைபாட்டினை அறிந்த ஆசிரியர்கள் அவர்களது குறைப்பாட்டிற்கேற்றாற்போல அவர்களை வகைப்படுத்தி விசேட செயற்றிட்டங்கள் மூலம் அவர்களது கற்றல் சவால்களைக் களைய எத்தனித்தல்

கற்றல் கற்பித்தலை விரிவுபடுத்தும் கருவிகளையும் இசைவுபடுத்திக் கொள்வதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் முயற்சி எடுத்தல் அவசியமாகும்.

மேலதிகமான விசேட செயற்றிட்டங்கள் மூலம் இம் மாணவர்களிடம் கற்றலில் முன்னேற்றத்தை ஏற்படுத்த பாடசாலை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆசிரியர்கள் செயல்நிலை ஆய்வுகளில் அதிகமாக ஈடுபடுதல் அவசியமாகும்.

மாணவர்களது கற்றல் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான இணைப்பாடவிதான செயற்பாடுகள் ஆசிரியர்களால் திட்டமிடப்படுதல் அவசியமாகும். மேலும் மாணவர்களது பல்வகைத் தன்மை அறிந்து இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதில் ஆசிரியர் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

ஆலோசனைகள்

வகுப்பறையில் மாணவர்களை ஒருமித்துச் செயற்படக் கூடியவாறு செயற்பாட்டுத்திட்டங்களை ஆசிரியர்கள் தயாரிக்க வேண்டும். மாணவர்களை வகுப்பறையில் ஊர் மட்டத்தில் பிரிக்காமல் சமமானவர்களாகக் கருத வேண்டும் மாணவர்களின் துலங்கல் சிறப்பாக வெளிப்படக் கூடிய வகையில் ஆசிரியர்கள் தூண்டிகளை ஏற்படுத்த வேண்டும், அதேநேரம் மாணவர்களின் தனியாள் வேறுபாட்டிற்கு ஏற்பக் கற்பித்தலை முன்னெடுக்க வேண்டும். பெற்றோர் வீட்டில் சரியான அரவணைப்பைப் பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டும். பிள்ளைகளின் வகுப்பறைக் கற்பித்தல் தொடர்பில் அக்கறை செலுத்துவதன் மூலம் அவர்களது கற்றல் அடைவுகளை அதிகரிக்க முடியும்.

6.0 முடிவுரை

இந்த ஆய்வின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதனூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளையும், விதப்புரைகளையும் உள்ளடங்கும் வகையில் அமைகின்றன. சாதாரண பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றல் வாய்ப்புக்கள் என்னும் ஆய்வுப் பிரச்சினையுடன் தொடர்புபட்டதாக மேலும் பல பிரச்சினைகள் ஆய்வின்போது கண்டறியப்பட்டன. குறிப்பாக விசேட தேவையுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் ஏற்படும் நன்மை தீமைகளை அறிதல், விசேட தேவைகள் உடைய மாணவர்களது வகுப்பறை செயற்பாட்டில் ஏற்படும் சவால்களை நீக்குவதற்காக ஆசிரியர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளைக் கண்டறிதல், சாதாரண பாடசாலைகளில் வகுப்பறைச் செயற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களுக்குக் கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம், சாதாரண பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறந்த வகுப்பறைச் செயற்பாட்டு நுட்பங்களும் அவற்றினைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதில் ஆசிரியர்களது பங்களிப்பினை அளவிடுதல் போன்ற எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுக்களங்களும் இவ்வாய்வில் முன்மொழியப்படுகின்றன. எனவே சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுப் பெறப்பட்ட முடிவுகள் முன்வைக்கப்பட்டு அதற்கான விதப்புரைகளும் இங்கு முன்வைக்கபட்டுள்ளன.

துணைநின்றவை

- அருள்மொழி, செ. (2008), கல்வி ஆய்வு முறைகள், எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு.
- அருள்மொழி, செ. (2010), பிள்ளை வளர்ச்சியும் கற்றலும், ராஜா புத்தக நிலையம், மட்டக்களப்பு.
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2007), விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைக்கான அறிமுகம், நாவல, நுகேகொட.
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம், (2010), விசேட தேவைகள் சார் கல்விக்கான பல்துறை அணுகுமுறைகள், நாவல, நுகேகொட.

- செல்வநாயகம், இ. (2007), சீரிய சிந்தனை, திருவள்ளுவர் அச்சகம், நல்லூர், யாழ்ப்பாணம்.
- சிவநடேஸ், செ. (2006), பாடசாலை அபிவிருத்தி கல்வியற்சமூகம், கிழக்கு பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி.
- சின்னத்தம்பி, மா. (2005), பாடசாலை வழிகாட்டல் புதிய சேவை, அகவிழி வெளியீடு.
- மகேசன், ஏ. (2010), விசேட கல்வியும் ஆலோசனை வழங்கலும், திருகோணமலை வீதி, மட்டக்களப்பு.
- தனராஜ். தை, (2005), செயல்வழி ஆய்வு ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
- பரமானந்தம், சு. (2007), உட்படுத்தல் கல்வி, அகவிழி வெளியீடு.
- ஜெயராசா, சபா. (2008), ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர், மேமடு பதிப்பகம், கொழும்பு.
- Agnes Jerome, (2012), The Journal of Education Research, Francis Ltd.
- Anas, P. L., & Nawastheen, F. M. (2019). Teachers' perception towards fulfilling diverse learners' needs in the classroom teaching-learning process. South Eastern University International Arts Research Symposium-2019, http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4170
- An Int. J. (2016), Teaching of Education and Applied Social Sciences, Oxford Journals Press.
- Appaji Korikan, A. (2020), Providing Educational Opportunities to them to be a successful learner, International Journal of Social Sciences.
- Desforges & Abouchaar, (2013), **The impact of parental involvement, parental support and family education on pupil achievement and adjustment: a literature review,** Digital Education Resource Archive.
- Dash.M, (2000). Education of exceptional children, Atlantic publishers and distributers, Vishal enclave, New Delhi.
- Panda, K, C. (2007), Education of exceptional children, Vikas publishing House, New Dehli.
- Shannon. L, Berg, (2004), The research on the advanatages in disadvnatges of the inclusion of students with disabilities into regular education classrooms, University of Wisconsin-Stout.
- Tim loreman, Joanne, D. (2006), Inclusive education, 130, Nelson Manicam Road, Aminjikarai, Chennai.

****

கற்பித்தலும் மதிப்பிடுதலும் Kappiya Ilakiyangal-Teaching and Evaluation

த.முத்துக்குமார் | T. Muthukkumar

முனைவர்பட்ட ஆய்வாளர், கல்வியியல் துறை, அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி-3, தமிழ்நாடு, இந்தியா, yokimuthu@gmail.com
orcid id - https://orcid.org/0000-0001-5689-5112

முனைவர் மு. சுதா | Dr. M. Sudha

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3, தமிழ்நாடு, இந்தியா, sutham@alagappauniversity.ac.in, orcid id - https://orcid.org/0000-0002-6938-7149

ஆய்வுச்சுருக்கம்

ஒரு மனிதனை முழுமை பெறச்செய்வது கல்வி. அக்கல்வியின் வழி அடுத்தடுத்த தலைமுறையினரைத் தகுதிப்பாடு உடையவர்களாக மாற்றுபவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியப்பணி என்பது அறப்பணி. அதில் அர்ப்பணிப்பு வேண்டும். அவற்றிலும் தாய்மொழிவழிக்கல்வியின் வாயிலாகப் பயன்தரக்கூடிய சிறப்பான கல்வியை மாணவர்களுக்குக் கொண்டுசேர்ப்பது இன்றியமையாத ஒன்றாகும்.

குறிப்பாக இலக்கியப் பாடங்களை, அவை தரும் வழிகாட்டுதல்களை, அறிவுரைகளைக் கற்றுத் தரும் வாழ்வியல் விழுமியங்களை, அவற்றில் பொதிந்து கிடக்கும் உண்மைகளை மாணவர்கள் மனத்தில் பதியச்செய்து அதன்வழி வரும் இளையதலைமுறையினர் தங்கள் வாழ்வில் சிறந்த நிலையை அடைவதற்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியரே பெருந்துணையாக வேண்டும்.

மதிப்பெண்ணுக்காக மனனம் செய்யும் நிலைமாறி அவ்விலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியலைப் பழக்கவழக்க பண்பாடுகளைப் பின்வருவோர் அறிந்து உணர்ந்து தம் வாழ்வில் பின்பற்றவும், ஒரு சமுதாயம் நற்சமுதாயமாக வளரவும் ஆசிரியர்களே உறுதுணையாக வேண்டும். இன்றைய சமுதாயத்தைச் சரிசெய்ய காவல்துறையும் நீதித்துறையும். வருங்காலச் சமுதாயத்தைச் சரிசெய்யக் கல்வித்துறையாலேயே இயலும் என்பது மறுக்கவியலா உண்மை.

அந்தவகையில் தமிழ் இலக்கியங்கள் காலத்தை வென்று தமிழர்தம் பெருமையை இன்றளவும் உலகளவில் கொண்டு சேர்த்தவை என்றால் அது மிகையில்லை. சங்க இலக்கியங்கள் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரை அவ்வவ் காலச் சமூகச் சூழலுக்கு மட்டுமல்லாமல் எதிர்காலச் சந்ததியினரும் உய்விக்கும்வகையில்

வழிகாட்டு இலக்கியங்களாக இருப்பது படைப்பாளர்களின் தொலைநோக்குச் சிந்தனையை உணர்த்துகின்றன.

ஒரு படைப்பினை வெறும் பொழுதுபோக்கிற்காவும் இலக்கியச்சுவைக்காகவும் மட்டும் படைத்து சென்றுவிடாமல் கலை வாழ்க்கைக்காக என்ற உணர்வோடு இலக்கியங்களை உருவாக்கித்தந்தவர்கள் இலக்கியப்படைப்பாளர்கள். இந்நற்சிந்தனையாளர்களின் கருத்தியல்களை எதிர்கால மாணவர்களின் வாழ்வியல் கருதி அவர்களிடத்துக் கொண்டு சேர்க்கவேண்டிய பொறுப்பும் கடமையும் அவ்விலக்கியங்களைக் கல்வியின் வாயிலாகக் கொண்டு சேர்க்கும் கற்பிப்போருக்கும் வேண்டும். இலக்கிய உலகில் தனக்கெனத் தனியிடம் பெற்றுக் கலைக்காக, வாழ்க்கைக்காக என்ற இருநிலைகளையும் பின்பற்றி மக்களை வழிப்படுத்தும் வாழ்வியல் உண்மைகளை உணர்த்தி அமைந்த தமிழ் இலக்கியங்களுள் காப்பிய இலக்கியங்கள் தனக்கென்ற தனித்தன்மையுடன் காலத்தை வென்று வாழ்வன.

தமிழின் பெருமையை உலகிற்குப் பறை சாற்றியவை தமிழ் இலக்கியங்கள் என்றால் சங்க இலக்கியங்கள், அற இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் எனத் தொடர்ந்து இன்றைய நவீன இலக்கியங்கள் வரை ஒவ்வொரு படைப்புகளும் தன்னளவில் தனித்துவம் பெற்றனவாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாகக் காப்பியங்கள். அகத்தையும் புறத்தையும் பாடுபொருளாகக் கொண்ட சங்க இலக்கியங்கள் குறுகிய அடிகளில் மக்களின் உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடாய் வாழ்வியல் பதிவுகளாய் அமைந்தன. அறஇலக்கியங்கள் அம்மக்களுக்கு நல்வழியை எடுத்தோதின. பின்வந்த காப்பிய இலக்கியங்கள் அகம், புறம், அறம், பக்தி என்ற பல நிலைப்பாடுகளையும் ஒருங்கே தன்னகத்தே கொண்டு தோன்றியதுடன் அவை தோன்றிய சமூகப்பதிவாய் அமைந்ததும் தனிச்சிறப்பாகும்.

இத்தகைய சிறப்பு பொருந்திய காப்பியங்களைக் கற்பிக்கும் முறைகுறித்தும் கற்பித்தலுக்குப் பிறகு அமையும் மதிப்பிடுதல் குறித்தும் எடுத்துரைப்பதாக ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

Abstract

Education makes man perfect. Teachers play a vital role in utilizing such education to empower the upcoming generation. Teaching is a selfless service that requires dedication. The foremost duty in reaching the little minds with their own mother tongue language is remarkable.In particular, the literature, the abundant guidance and advice in them, teaches the life lessons through culture and history, which gets engraved in the students' mind. The responsibility of teaching such good literature is to shape the younger generation's vests in the teacher.The present situation of learning the subjects for marks should be swapped by following the cultural roots learnt through the education. It should

descend through generations by practice. To have a healthy society, the teachers should be the pillar of the society.The weeds in the current society/generations are nipped by the Judiciary powers and the police department. Likewise, the future generation could be made flawless by the teachers. It is an irrefutable truth.

The credit goes to Tamil literature for carrying the pride and glory of Tamil language throughout the world, through ages. The prophet vision of the creators to guide the generation in each era is continuing since ancient literature.The creators have written the literature not only for entertainment and to enjoy the literature, but also have incorporated the art and sense of life in it. Teachers, who teach about the brainchild of those creators, should educate the younger, future generations to incorporate it in their lifestyle. Amongst all, the literature, "Kappiyallakiyam" in Tamil literature has set a benchmark an proves the strong roots of Tamil civilization through ages.The unique nature of Tamil literature, say 'Sanga Ilakiyam', 'Ara Ilakiyam', 'Kappiyallakiyam', 'Bhakthillakiyam' till the modern literature depicts the glory of Tamil to other parts of the world. Especially, Kappiyallakiyam, they separate literature as 'Agam' means inside and 'Puram', stands for 'Outside'. They preached the goodness of home and the country through that literature including Bhakthi, which means devotion. They all had social messages, which are carried over years.My Article is going to be on how to teach and evaluate such great epics in our literature.

திறவுச்சொற்கள் (Keyword): அர்ப்பணிப்பு, Dedication, காப்பியங்கள், Epics, கற்பித்தல், Teaching, மதிப்பிடுதல், Evaluate, சமூகநீதி, Social justice.

தாம் தோன்றிய சமூகக் கட்டமைப்புக்கு உட்பட்டு அதே நேரத்தில் சமூக மேன்மைக்கான தங்களது உள்ளக் கிடக்கைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ தங்கள் படைப்புகளின் வழிப் பதிவுசெய்து வரலாற்றில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் காப்பியப் படைப்பாளர்கள். இது இவர்களுடைய ஆளுமைத்திறனாகும். இவ்வாளுமைப்பண்பை உணர இப்படைப்புகளை ஆழ்ந்து நோக்க வேண்டும் (முனைவர் மு. சுதா, ப.1). கற்பித்தல் என்பது ஏதோ ஒன்றை எடுத்துரைப்பது என்ற நிலையில் அமையக்கூடாது. அவற்றிலும் இலக்கியங்களைக் கற்பித்தலில் கற்பிப்போருக்கு ஆழ்ந்த புலமை வேண்டும். ஆய்வு நோக்கு வேண்டும்.

ஏனென்றால் சங்க காலம் தொட்டு இலக்கியங்கள் ஏதோ சுவைக்காகத் தோன்றியன மட்டுமல்ல. அவை அந்தந்தக் காலத்துச் சமூகவெளிப்பாடு. ஒவ்வொரு கால வாழ்வியலுக்கான இலக்கியச்சான்றுகள். ஆதலால் அவற்றைக் கற்பித்தலில் ஆய்வு நோக்கம்,தெளிவு,எளிமை, உணரவைத்தல் போன்றன பின்பற்றப்பட வேண்டும்.

குறிப்பாகக் காப்பியங்கள் நீண்ட கதைப்போக்கில் பலமாந்தர்கள் பல கிளைக்கதைகள் எனஅமைவது. அவைமேலோட்டமாய் ஒரு பொருளைத்தந்தாலும்

உட்பொருளாகப் பல நற்கருத்துகள் காணக்கிடக்கும். ஆதலால் அவற்றைக் கற்பித்தலில் காப்பியப்பொருளில் மட்டுமல்ல காப்பிய ஆசிரியனின் உளமும் அறிந்து எடுத்துரைக்கவேண்டும். காப்பியத்தின் ஒவ்வொரு சிறுகூறும் அக்காப்பிய ஆசிரியனின் திறன் உணர்த்தும். காலம் வென்று அக்காப்பியம் வாழ்வதற்கான சான்று பகரும்.

உவமை, உருவகம், கற்பனை, வருணனை என்ற இலக்கியக்கூறுகளை அமைத்து தமது அழகியல் உணர்வை வெளிப்படுத்துவதற்காக மட்டும் காப்பிய ஆசிரியர்கள் தங்கள் இலக்கியங்களைப் படைத்துச்சென்றுவிடவில்லை. முதல் தமிழ்க்காப்பியமான சிலப்பதிகாரம்

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துதலும்
ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டுவதூஉம்" (சிலப்.பதிகம் 55-57)

என்று மூன்று உண்மைகளைப் பதிவு செய்து சென்றதுபோல ஒவ்வொரு காப்பியமும் வாழ்விற்குத் தேவையான பின்பற்றப்படவேண்டிய பல உண்மைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ தந்துவிட்டுதான் சென்றுள்ளன. இலக்கியங்களைக் கற்பித்தலுக்குப் பல்வேறு நோக்கங்கள் உள்ளன. எனினும் தமிழருக்கேயுரிய பண்பாட்டினை அடையாளங்களை விளக்குவதே கற்பித்தலின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும். இதன்வழி அவ்விலக்கியத்தை உருவாக்கியவரின் உளப்பாங்கு, அது உருவாகிய காலச்சூழல், அனுபவத்தின்வழி உணர்த்தப்படும் வாழ்வியல் உண்மைகள் போன்றன உணரப்படும்.

ஓர் இலக்கியத்தை எடுத்துக்கொண்டு இலக்கியநயம் கூறல், கற்பனையாற்றலை வளர்த்தல், சொற்சுவை கூறல், இறையுணர்வினை ஊட்டுதல், நாடு, மொழி, பண்பாடு போற்றுதல் போன்றனவற்றை எடுத்துக்கூறுவதே சாலச்சிறந்தது. அவற்றிலும் இலக்கியங்கள் சுட்டும் வாழ்வியல் விழுமியங்கள் மாணவர்களை மட்டுமல்லாது ஒரு சமூகமேன்மைக்கு உதவுவன என்பதை மனங்கொண்டு பயிற்றுவிக்கவேண்டும்.

உலகஅளவில் தமிழ்ப்பண்பாடு போற்றப்படுவதற்கும் போற்றிப் பின்பற்றப் படுவதற்கும் காரணம் அது தலைசிறந்த ஒழுக்கமாக இருத்தலேயாம். உலகப் பொதுமறையாம் திருக்குறளைவிட இதற்கோர் சான்று காட்டத்தேவையில்லை.

"யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" (புறம் 192)

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் தமிழினத்தின் பெருமைகளைக் கூறுவன. காப்பிய இலக்கியங்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

"யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ நீதி எற்கு

என்றும்,

மன்னவன் பணி அன்றாகின் நும் பணி மறுப்பேனோ"(கம்ப-297)

என்றும் தாயைவிடச் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரமும் இல்லை என்று போற்றும் புதல்வர் பெருமை,

"நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு" (கம்ப-525)

என்று வினவும் மனம் ஒன்றிய காதலின் மேன்மை,

"நீர் உளஎனின் உள மீனும் நிலமும் நானும் சீதையும் ஆர் உளர் எனின் உளேம் அருள்வாய்" (கம்ப-454)

எனும் உருகும் சகோதரத்துவச்சிறப்பும்

"மெய்த்திருப்பதம் மேவு என்றபோதினும்
இத்திருத்துறந்து ஏகு என்ற போதினும்
சித்திரத்தின் அலந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்" (கம்ப-349)

என்று பற்றற்ற வாழ்வே மனநிறைவையும் மகிழ்ச்சியையும் தரவல்லது என இவை போன்ற பல வாழ்வியல் தேவைகளைக் கம்பனின் காவியம் உலகிற்குத் தந்துசென்றுள்ளது. அத்தகைய காப்பியத்தின் சிறப்புக்கூறுகள் அனைத்தும் மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் மக்களுக்கும் சென்று சேரவேண்டிய கருவூலம் என்பதால் அதனைக் கற்பிக்கும் முறை குறித்து ஈண்டு விரித்துக்காணப்பெறுகிறது.

"வால்மீகி தந்தபொன்தான் இது. ஆனால் அதனைத் தமிழ்க்கோலம் கொடுத்து அவர் காலத்திற்கு(கம்பர்) ஏற்ற வகையில் வார்த்தெடுத்து மெருகிட்டு அழியாமல் என்றும் இருக்கம் வகையில் தான் கண்ட உலகத்தின் உட்பொருள் எல்லாம் அதன்வழியே விளங்கும்படியாக அவர் (கம்பர்) படைத்துவிட்டார்"

"வால்மீகியின் கதையினையே தமிழ்ப் பசும்பொன்னாகத் தம்கற்பனை சித்தின் திறத்தால் மாற்றி உருக்கி வார்த்துவிட்டார் கம்பர்" (தெ.பொ.மீ., ப.112) என்று தெ.பொ. மீயும்

"பொதுவகையில் வால்மீகியைப் பின்பற்றிய போதிலும் கட்டங்கள் தோறும் இவன்(கம்பன்) இராமசரித அம்சங்களை வேறுபடுத்திப் பேரழகு பட வைத்திருக்கின்றான்" (எஸ்.வையாபுரிப்பிள்ளை, ப.18) என்று வையாபுரிப்பிள்ளையும் கம்பரின் படைப்புத்திறனை அவரின் தனித்துவத்தைச் சுட்டுவர்.

வால்மீகி இராமாயணத்தைத் தழுவி படைக்கப்பட்டாலும் தமிழ்மரபிற்கேற்ப மாற்றங்கள் பல செய்து தமிழ்மக்களுக்கு வேண்டிய வழிகாட்டுக் கருத்தாக்கங்களுடன் தனது காப்பியத்தைத்தந்து சென்றவர் கம்பர். அவற்றிலும் கம்பராமாயண மாந்தர் படைப்பு கம்பரின் உளவியல் திறனை வெளிபபடுத்துவது.

"காப்பியத்தின் முக்கியக்கூறுகள் கதை பாத்திரம் கிளைக்கதை என்பன. இம்மூன்றிலும் கூட மிக முக்கியமான தேவையான ஒன்று பாத்திரப்படைப்பே. பல்வேறுபட்ட பாத்திரங்களே காப்பியத்திற்கு உயிரூட்டுகின்றன" என்பார் தா.ஏ.ஞானமூர்த்தி. அத்தகைய உயிர்நாடியாக விளங்கும் மாந்தர் படைப்புகளைத் தந்தவர் கம்பர்.

"கம்பநாடன் கட்டிய கலைக்கோவிலில் ஒவ்வொரு பகுதியும் தனிச்சிறப்புடையது. பகுதி சிறிதாயினும் பெரிதாயினும் அதுபற்றிக் கவலையில்லை. சிறிய பகுதியையும் மிக நுண்ணிய தன்கதைத் திறமையால் அக்கலைஞன் ஒப்புயர்வற்றதாகவே ஆக்கிவிட்டான்" (அ.ச.ஞானசம்பந்தன், ப.327) என்ற அ.ச.ஞானசம்பந்தன் கூறியபடி கம்பராமாயணத்தின் திருப்புமுனைக்காண்டமான அயோத்தியா காண்டத்தில் சற்று நேரமே வந்தாலும் சரித்திர மாற்றம் செய்த மந்தரையின் மாந்தர்படைப்பை கம்பர் உருவாக்கியுள்ள திறன் குறித்தும் அவை உணர்த்தும் உளவியல் உண்மைகளையும் எவ்வாறு கற்பிக்கவேண்டும். அது உணர்ந்த மாணவர்களை எவ்வாறு மதிப்பிட வேண்டும் என்பதைக் காணலாம்.

காப்பியங்களைக் கற்பித்தல்

காப்பியங்கள் எண்ணற்ற மாந்தர்களைத் தன்னகத்தே கொண்டவை. ஏராளமான சிந்தனைகளைக் கொண்டு சேர்க்க வேண்டிய சூழலில் எண்ணிக்கை மிகுமாறு மாந்தர்களைப் படைப்பது தவிர்க்க இயலாதவை. இத்தகைய காப்பியங்களின் சிறப்பினையும் பாடுபொருளினையும் மாந்தர் படைப்புகளின் தனித்துவத்தையும் கற்பித்தல் குறித்து ஈண்டு எடுத்துரைக்கப்படுகிறது.

மனிதனைப் பண்படுத்துவது கல்வி. இக்கல்வி முறையும் காலச் சூழலுக்கேற்ப மாற்றம் பெறும். புதுமைகள் என்பது கல்வி முறைக்குத் தேவையான ஒன்றாகும். காலத்திற்குத் தகுந்தவாறு பாடத்திட்டத்திலும் பயிற்றுவிக்கும் முறையிலும் மாற்றங்களைச் செய்து மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும்போது சமுதாயமே முன்னேற்றம் பெற வாய்ப்புக்கிடைக்கும். சமுதாயத்தை நிலைபெறச்செய்வதில் கல்விக்குத் தலையாய பங்குண்டு.

செம்மொழி சிறப்பைப் பெற்றுத்தந்த சங்கஇலக்கியம் தொட்டுப் புதுமையாக வலம்வரும் இக்கால இலக்கியங்கள் வரை அனைத்து இலக்கியப்படைப்புகளும் தமிழின் பெருமையை நிலை நாட்டுவதுடன் அவை சமூகப் பண்பாட்டு வெளிப்பாட்டு இலக்கியங்களாகவும் திகழ்கின்றன. அகமும் புறமுமாய் வாழ்வியலை ஒட்டியதாய்க் கூறப்பட்டுள்ள உளவியல் கருத்துகள் தொடங்கி இன்றைய அறிவியல் சிந்தனைகளுக்கு வித்தாக ஏராளமான கருத்துகளைத் தன்னகத்தே கொண்டு திகழும் இவ்விலக்கியங்களைக் கற்றலிலும் கற்பித்தலிலும் சில புதுமை முறைகளைக் கொண்டு வருவது இன்றைய கல்வியாளர்களின் கடமைகளுள் ஒன்றாகும்.

மாணவர்களின் படைப்பாற்றலை வளர்த்தல் பாடத்திட்டத்தில் புதுமைகள் செய்தல் இலக்கியக் கல்வியுடன் பிறதுறை அறிவுபெற வழிவகை செய்தல் எளிமையாக்குதல் போன்ற படி நிலைகளைக் கற்பித்தலில் கொண்டு வரும் தேவை தற்போது அதிகரித்துள்ளது. இவ்வடிப்படை நோக்கில் தமிழ்க்காப்பியங்களை எவ்வாறு கற்பிக்கவேண்டும் அதனை எப்படி மதிப்பீடு செய்யவேண்டும் என்ற ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது. கற்பித்தல் என்பது கல்வித்திட்டத்தின் அடிப்படையில் அமையவேண்டும். தொடக்கக்கல்வி, நடுநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி, மேல்நிலைக்கல்வி, பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, ஆய்வு அதாவது பள்ளிக்கல்வி, இளநிலை, முதுநிலை, ஆய்வு என்ற அடிப்படையான நான்கு நிலைகளில் மாணவர்களுக்குத் தகுந்த நிலையில் கற்பித்தல் அமையவேண்டும். உதாரணமாகக் காப்பியத்தில் மாந்தர் படைப்புகள் என்று எடுத்துக்கொண்டால்,

தொடக்கக்கல்வி

சிலப்பதிகாரம் ஒரு தமிழ்க்காப்பியமாகும். சிலப்பதிகாரத்தை எழுதியவர் இளங்கோவடிகள் என்பது போல் அடிப்படையை அறிந்து கொள்வதாக எளிமையானதாக அமையவேண்டும்.

நடுநிலைக்கல்வி

ஐம்பெருங்காப்பியங்களைப் பற்றிய அறிமுகம்,சிலப்பதிகாரத்தின் தனித்தன்மைகள் என்பதாக அமைதல் . அதாவது ஒரு காப்பியத்தைப் பற்றிய அறிமுகமாக அமையவேண்டும்.

உயர்நிலைக்கல்வி

சிலப்பதிகாரப் பாடல் அடிகளைப் பிரித்துப் பொருள் எடுத்துரைத்துக் காப்பியத்தின் தனித்தன்மையைச் சுட்டுதலாக அமையவேண்டும். இங்கு மாணவர்களின் மனனத் திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கலாம்.

மேல்நிலைக்கல்வி

பாடலடிகளின் பொருளுணர்ந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் அவை உணர்த்தும் பொருள் அக்காப்பியத்தின் நோக்கம் கொள்கை போன்றவைகளைப் பாடப்பகுதி கொண்டு அறிவிக்கவேண்டும். பள்ளிக்கல்வி நிலையைப் பொறுத்தவரையில் அளிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் உணர்த்த வேண்டிய செய்திகளைக் கொண்டு சேர்த்தல் வேண்டும்.

பட்டப்படிப்பு

பட்டப்படிப்பு எனும் நிலையில் இக்காப்பியங்களைக் கற்பித்தல் நிலை மாறவேண்டும். இங்குப் பாடப்பகுதி விரித்துரைக்கப்படவேண்டும். காப்பியம் தரும் கருத்துகளை விரிவாகவும் விளக்கமாகவும் சுட்டுதல் வேண்டும். காப்பியம் பற்றிய பிற அறிஞர்களின் கருத்துகளை மேற்கோளாகக் காட்டி அதன் தனித்துவத்தை மாணவர்கள் மனங்கொள்ள எடுத்துரைக்கவேண்டும்.

பட்ட மேற்படிப்பு எனும் நிலையில் கற்பிப்பவருக்குப் பொறுப்புகள் கூடுதலாகின்றது. ஏனென்றால் இந்நிலையில் இதுகாறும் ஒன்றைப் பற்றிப் பிறர் மூலம் அறிந்த ஒரு மாணவன் அதனை நுட்பமாக தானே தேடி உணரவைக்கும் பணி கற்பிப்பவருக்கு உரியது. இங்கு பாடப்பகுதி விரித்துரைக்கப்படமாட்டாது. இதுவரை அறியப்பட்ட காப்பியத்தின் முழுமையைத் தாங்களாகவே தேடி அறிந்து கொள்ள மாணவரை ஆயத்தப்படுத்தவேண்டும். தேடுதல் என்பது இந்நிலையிலேயே தொடங்குதல் வேண்டும். அதற்கான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கற்பிப்போர் உண்டாக்கவேண்டும்.

திறனாய்வு என்ற அறிவு நிலை மேம்படுத்தப்படுவதோடு கல்வி என்பது சமூகத்தைச் சார்ந்ததாக இருக்கவேண்டும். தான் கற்கும் கல்வி அச்சமூகத்தை எப்படி முன்நிறுத்துகிறது என்பதனைத் தானே உணரும் வாய்ப்பினை இந்நிலையில் அளிக்கவேண்டும். ஒரு காப்பியம் என்று எடுத்துக்கொண்டால் அதனை மட்டுமல்லாமல் அக்காப்பியம் தொடர்பான திறனாய்வுச் சிந்தனைகள் அக்காப்பியத்தோடு தொடர்புடைய பிற இலக்கியங்கள் பற்றி அறிதல் என்ற ஆய்வுப் போக்கிற்காக விதை இப்பட்ட மேற்படிப்பு நிலையிலேயே விதைக்கவேண்டும்.

இலக்கியக்கூறுகளைக் கருத்தியல் அடிப்படையில் கற்பிக்கும்போது புலப்பதிவு பாடப்பொருள் தகவல் மொழி வெளிப்பாடு அமைப்பு பாத்திரப்புனைவுகள் பயன்படுத்தப்பட்ட உத்திகள் அதில் காணப்படும் பண்பாட்டுக்கூறுகள் என்ற நிலையில் கற்பித்தல் என்பது இன்றியமையாதது. குறிப்பாக ஆய்வுநிலையில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூறுகளை ஆய்வு செய்தல் ஊகித்துணர்தல் கருத்துருவாக்கல் என்ற நிலையில் ஆய்வு செய்தல்வேண்டும் என்ற அறிவுறுத்தலை செய்தல்வேண்டும்.

ஆய்வு நிலை

ஆய்வு நிலையில் இளநிலை முதுநிலை என்ற பிரிவுகள் உண்டு. இளநிலை ஆய்வு என்பது குறிப்பிடத்தக்க நிலையாகும்.

இங்கு இதுகாறும் அறியப்பட்டிருந்த காப்பியத்தைத் திறனாய்வு செய்தல் வேண்டும். அறிதல், புரிதல், ஆளல் என்ற படிநிலைகளின் தொடர்ச்சியாகப் பகுப்பாய்வு செய்தல் என்ற நிலையை மாணவர்களிடத்து உருவாக்க வேண்டியது இவ்வாய்வுக் கல்வியிலேதான். குறிப்பாக ஒரு காப்பியம் உணர்த்தும் மேலோட்டமான பொருள் என்ன அவை உணர்த்தும் உட்பொருளென்ன என்பதனை அவை தொடர்பான திறனாய்வுக்கருத்துகள் அரணாக எடுத்துரைப்பது குறித்தும் ஆய்வுக்குரிய நெறிமுறைகள் அணுகுமுறைகள் பற்றியும் கற்பிக்கவேண்டியது இவ்வாய்வு நிலையின் முக்கியப்பகுதியாகும்.

உதாரணமாக மாபெரும் இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தில் முக்கியத் திருப்புமுனையை ஏற்படுத்தக் காரணமாயிருப்பவள் மந்தரை. இப்படைப்பு மட்டும் இல்லாவிடில் இராமாயணக் காப்பியமே இல்லையென்று அறுதியிட்டுக் கூறலாம். இராமனின் சிறப்பிற்கும் அவதார நோக்கம் நிறைவேறுவதற்கும் உறுதுணையாய் நிற்பது இம்மந்தரையின் கொடுஞ்செயலே. அழிவிற்குக் காரணமாகி நின்றாலும் நல் ஆக்கத்திற்கும் மறைமுகமாக உதவுகின்றாள் மந்தரை.

இராமகாதையின் திருப்புமையமாக விளங்கும் மந்தரை மட்டும் இல்லாவிடில் இராம அவதாரமே பயனற்றுப் போகும். பெரியதொரு நன்மை நடக்கக் காரணமானவள் மந்தரை. இவளின் இச்செயல் இன்னல் தருவதேயென்றாலும் அது விளைவித்த நன்மை கருதி இப்படைப்புக்கு முக்கியத்துவம் அளிக்கின்றார் கம்பர்.

பிறருக்கு இடுக்கண் தருவதையே இயற்கையாகக் கொண்ட இராவணன் இழைத்தத் தீமையே உருக்கொண்டாற்போல மந்தரை தோன்றினாள் என்று கம்பர் அறிமுகப்படுத்துகின்றார். அயோத்தி நகரம் அலங்கரிக்கப்படுதலைக் கொண்டே இராமன் முடி சூடவிருத்தலை அறிகின்ற மந்தரை

> 'பண்டைநாள் இராகவன் பாணிவில் உமிழ்
> உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து' (கம்ப.140)

நினைத்து தன்னை இகழ்ந்தவனைப் பழிதீர்க்க இதுவே தக்கதருணம் என்று நினைக்கின்றாள். முற்காலத்தில் இராமனின் குழந்தைப் பருவத்தில் அவன் கையில் உள்ளவில் வெளிப்படுத்திய களிமண் உருண்டை தன் மேல் பட்டுத் துன்பம் செய்ததை மனதில் கொண்டு இராமனைத் துன்புறுத்த இதுவே சரியான நேரமெனக் கருதி கைகேயிடத்துச் செல்கிறாள்.

உறங்கிக் கொண்டிருந்த கைகேயியின் பாதத்தை மெதுவாகத் தீண்டித் துயில் எழுப்புகின்றாள். பெருந்துன்பம் நேரவிருப்பது அறியாது உறங்குவதாக வெகுண்டு

உரைக்கின்றாள். வீழ்ந்தது நின் நலம் திருவும் வீழ்ந்தது வாழ்ந்தனள் கோசலை மதியினாள் என்றுரைக்கின்றாள். இராமன் முடிசூடப்போவதை அறிந்த கைகேயி மகிழ்ந்து தனக்களித்த மாலையை வீசியெறிகின்றாள். நீயும் பரதனும் துன்பப்படுக. தான் கோசலையின் பணிப்பெண்களுக்குப் பணிசெய்து வாழமாட்டேன் என்று சினத்துடன் கூறுகின்றாள்.

இராமனும் சீதையும் உயர்வடைய அவர்களுக்கு வணங்கி நிற்கும் நிலையை பரதன் அடையவிருக்க நீ மகிழ்வது எப்படியோ என்கின்றாள்.கோசலை தனக்கு உறுதி தரும் செயலை மறக்காது நடத்திவிட்டாள். இராமனை ஆட்சி பெறும்படிச் செய்துவிட்டாள். ஆனால் பரதனுக்கு அரசு கிடைக்க வழிசெய்யாது விட்ட கைகேயிக்குப் பரதன் பிறந்து பிறவாதவனே என்று கூறுகின்றாள். இராமனும் அவன்தம்பி இலக்குவனும் அரசேற்றால் பரதனையும் சத்ருக்கனனையும் வனத்திற்கு அனுப்பிவிடுதலே நல்லது. உலகத்து உயிர்களைக் காக்கும் அரசர்கள் வரிசையில் வைத்து எண்ணுமாறு பரதன் பிறக்காததால் அவன் இறப்பதே நன்று என்று பரதனுக்கு ஆதரவாய்ப் பேசுகின்றாள். தயரதன் பரதனைத் தொலைவில் இருக்கும் கேகயத்திற்க அனுப்பியதன் காரணம் இப்போதுதான் விளங்கிற்று என்றவள்

'அந்தரம் தீர்ந்து உலகு அளிக்கும் நீரினால்
தந்தையும் கொடியள் நல்தாயும் தீயளால்' (கம்ப.159)

என்று பழித்துக் கூறுகின்றாள். அவளின் புலம்பலைக்கேட்ட கைகேயி 'எனக்கு நீ நல்லவள் இல்லை' என்று வெகுண்டுரைக்க அயராது இராமன் அரசேற்றால் கோசலையையே கைகேயியும் அவள் சுற்றத்தாரும் சார்ந்திருக்க வேண்டும் என்று எடுத்துரைக்கின்றாள். இறுதியாக,

'கெடுத்தொழிந்தனை உனக்கு அரும் புதல்வனை கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒரு மகற்கு எனவே
கொடுத்த பேரரசு அவன் குலக்கோ மைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம் பிறர்க்கு ஆகுமோ" (கம்ப.175)

என்கிறாள். இதற்குப் பிறகு மனம்மாறிய கைகேயியிடம் வரமிரண்டைக் கேட்கச்சொல்லுகிறாள். மந்தரை சூழ்ச்சிப்படலத்திற்குப்பிறகு ஆறுசெல் படலத்திலேயே மந்தரையைக் காணமுடிகின்றது. இராமனை அழைக்கச் செல்லும் பரதன் முதலியவரோடு தானும் உடன்செல்ல அப்போது சத்ருக்கனன் அவளைத் தாக்க முற்பட, பரதனால் காப்பாற்றப்படுகின்றாள்.

இந்நிகழ்வுகள் மந்தரையைப் பற்றிய இராமாயணக் காப்பியத்தில் இடம்பெற்ற செய்திகளாகும். இந்த பாத்திரப்படைப்பை மாணவர்களிடத்துக் கற்பிக்கும் போது உரையை மட்டும் எடுத்துரைப்பதை விட அம்மாந்தர் படைப்பின்வழிக் காப்பிய ஆசிரியன் கூறவிழையும் உட்பொருளையும் ஆய்ந்து எடுத்துரைக்கவேண்டும்.

மேலும் எந்த ஒரு மாந்தர் படைப்பினையும் எப்படி எதற்காக ஒரு ஆசிரியன் படைக்கின்றான் என்பதனையும் விரித்துரைக்கவேண்டும்.

சாதாரணப் பணிப்பெண்ணுக்கேயுரிய கோப தாபங்கள் கொண்டவளாகப் படைக்கப்பட்டுள்ள மந்தரையின் செயல் தீமை தருவதாக இருந்தாலும் பின்னர் விழையும் நன்மைக்கு வித்திட்டதை உணர்ந்த கம்பர் அப்பாத்திரத்தின் பண்பை மேன்மேலும் உயரச்செய்கின்றார்.

சிறுவயதில் இராமன் தனக்குத் தந்த துன்பத்தில் மனம்நொந்தவள் அதனை மறக்காது தக்கசமயம் எதிர்நோக்கியிருந்து காத்திருக்கின்றாள். இராமன் முடிசூடவிருத்தலை அறிந்து அதற்கு எவ்வாறேனும் இடையூறு செய்து வஞ்சம் தீர்க்க நினைக்கின்றாள். இக்காரணத்தினாலேயே கைகேயி மனத்தையும் மாற்றுகிறாள். பாதிக்கப்படவைத்தது சிறுசெயலாக இருந்தாலும் அதனைத் தன் நெஞ்சில் மறைத்து வைத்து காலம் வரும்பொழுது பழிதீர்க்க நினைக்கும் கொடியவர்களின் உளப்பாங்கினை உடையவளாக மந்தரையை மாற்றிப் படைக்கின்றார் கம்பர்.

'தேனகம் செய் தண்ணறு மலர்த்துழாய் நன் மாலையாய்
கூனகம் புகத் தெறித்த கொற்றவில் அல்லையே'

(திருமழிசையாழ்வார், திருச்சந்தவிருத்தம், 30)

கொண்டை கொண்ட கோதைமீது தேனுலாவி கூனிகூன்
உண்டை கொண்டு அரங்கவோட்டி உள்மகிழ்ந்த நாதன்'

(திருமழிசையாழ்வார், திருச்சந்தவிருத்தம், 49)

என்ற திருமழிசையாழ்வார் பாசுரங்களில் உணர்த்தப்பட்டிருக்கும் செய்தியை எடுத்துக்கொண்ட கம்பர் பழிதீர்க்கும் மனத்தவளாய் மந்தரையைப் படைக்கின்றார். முந்தைய இலக்கியங்களைப் பின்பற்றும் கம்பர் மிகச் சிறு செயலைக்கூட, கொடியவர்கள் தம் நெஞ்சில் மறைத்து வைத்துக் காலம் வரும்பொழுது பழிதீர்த்துக்கொள்வர் என்ற உளவியல்பை மந்தரையின் படைப்பு மூலம் விளக்குகின்றார்.

எவ்வித காரணமும் இன்றி ஒருவரின் துன்பத்திற்குக் காரணமாயிருப்பது என்பதைவிட தன் மனம்கொண்ட வஞ்சத்தைத் தீர்க்கவெண்ணிப் பழிவாங்குதல் சரியானதொரு காரணமாயிருக்கும் என்றெண்ணி இம்மாற்றம் செய்கின்றார் கம்பர். தன்வஞ்சம் தீர்க்கப் பிறர் வாழ்வை அழிக்கும் வன்மையுடையவளாய் மந்தரையை எதிர்நிலை மாந்தராகப் படைத்துள்ளபோதிலும் சங்க இலக்கியத் தோழியின் சொற்திறத்தைப் பெற்றவளாக உயர்த்திக்காட்டியிருப்பது நோக்கத்தக்கது.

வால்மீகரில் இராமன் முடிசூட இருத்தலை அருகிலிருந்த பணிப்பெண் மூலம் மந்தரை அறிகின்றாள். அறியாவயதில் சிறுவனொருவன் தெரியாமல் செய்த பிழையை மனதில்கொண்டு ஒரு பெரிய அரசியல் மாற்றத்தையே ஏற்படுத்த வேண்டுமென்றால் அத்தகையவள் சிறந்த மதிநுட்பத்தாளாகவே இருக்கமுடியும்

எனவே அயோத்தி நகரம் அலங்கரிக்கப்படுதலைக் கண்டே இராமன்முடிசூட விருப்பதை அறிந்துகொள்ளும் நுட்பமான அறிவுடையவளாய் மந்தரையைக் கம்பர் படைத்துள்ளது சிறப்பானது.

வால்மீகரில் தயரதனைப் பலவாறாகத் தூற்றியும் அவன் பரதனைத் திட்டமிட்டே கேகயத்திற்கு அனுப்பியதாகவும் கைகேயியும் அதற்குத் துணையாகிவிட்டதாகவும் மந்தரை கூறுகின்றாள். பரதனுக்குச் சேரவேண்டிய அரசுரிமையை இராமனுக்குக் கொடுத்ததால் இராமனால் பரதனுக்குத் துன்பம் நேரிடும் என்று இராமனையும் தூற்றுகின்றாள். அப்படியும் கலங்காத மனத்துடையாளை கோசலையால் ஏற்படவிருக்கும் அவமதிப்பைச் சுட்டிக்காட்டி மனத்தை மாற்றுபவளாகக் காட்டப்படுகின்றாள்.

தயரதனின் பண்பைக்குறைக்கும் மந்தரையின் கூற்றுக்களைக் கம்பர் நீக்கி விடுகின்றார். பரதனைக் கேகயத்திற்கு அனுப்பியதால் தயரதன் நடுவுநிலைமை தவறிவிட்டான் என்பதை எடுத்துக்கூறுவதுடன், கைகேயியின் அன்பிற்குரியவன் தயரதன். ஆதலால் அவனைப் பலவாறாக அவதூறு செய்வது கைகேயியிக்கு வெகுளியையே அளிக்கும். எனவே அவ்வாறு செய்யாது சமயம் நோக்கி மாற்றாள் கோசலை வாழ்வு பெற்றதைச் சுட்டிக்காட்டுகின்றார். தயரதன் மட்டுமல்லாது கைகேயியும் உடனிருந்து கெடுத்ததைச் சுட்டிக்காட்டும் பேச்சு சாதுர்யம் உடையவளாய் விளங்குகின்றாள்.

தயரதனைத் தூற்றியும் கலங்காத மனத்தவளாகி நிற்கும் கைகேயியை, கோசலையால் ஏற்படவிருக்கும் அவமதிப்பைக் கூறி அவளுடைய மனத்தினை மந்தரை மாற்றுவதாய் வால்மீகர் படைக்கின்றார். கம்பரில் தம்மை இகழ்ந்தாலும் தம் பிறந்தகத்தின் இழிவைப் பொறுக்காத பெண்களின் மனத்தைப் புரிந்தவளாய் கைகேயியின் தாய் தந்தை சுற்றத்தினருக்கும் ஏற்படவிருக்கும் இழிவை எடுத்துக்கூறுகின்றாள். கைகேயியின் இரக்கக்குணத்தையும் தர்ம சிந்தனையையும் உடனிருந்து உணர்ந்த மந்தரை **"உன்னை இரப்பார்க்கு இல்லை என்று கூறி இறப்பாயோ அன்றிக் கோசலையிடமிருந்து பெறுவாயோ?"** என்று எடுத்துரைக்கின்றாள்.

இறுதியாகப் பிள்ளைப் பாசத்திலோ பிறந்தகப் பாசத்திலோ அவளை மாற்றவியலாது என்ற எண்ணத்துடன் தனது இறுதி ஆயுதமாக அவளுடைய நீதியையும் வாய்மையையும் போற்றிக்காக்கும் அறச்சிந்தனையை உணர்ந்து எதனைக் கூறினாலும் மாறாதவள் தன் குலத்திற்கு இழுக்கு நேரிடின் அதனை மட்டும் ஏற்காத மனமுடையவள் என்பதை அவள் வார்த்தைகளின் மூலமே அறிந்து பரதனுக்கும்

கைகேயியின் தம்பிக்குமே அரசுரிமை என்று கூறி தயரதன் முன்பு கொடுத்த வரத்தை மறந்து நீதி தவறியதை எடுத்துக்காட்டி அசையா மனத்தையும் அசைக்கின்றாள்.

கைகேயியின் மனவியல்பைப் புரிந்து கொண்டு அதற்கேற்றபடி தன்விடாமுயற்சியால் படிப்படியாக மனத்தை மாற்றும் திறமையும் அறிவாற்றலும் உடையவளுமாகக் கம்பர் மந்தரையைப் படைத்துள்ளார்.

வால்மீகரில் இராமனை அழைக்க மந்தரை பரதனுடன் செல்லவில்லை. கம்பரோ இராமனுடைய உயர்குணத்தை அறியாமல் தான் செய்த பிழையை உணர்ந்து இராமனை அழைக்கச் செல்லும் பரதனுடன் மந்தரையும் செல்வதாக மாற்றியமைத்து எத்தகைய கொடுமையானவளாக இருந்தபோதிலும் தன் தவறு உணரும் தன்மையளாய்க் காட்டி அவளையும் பண்புயர்வு பெறச் செய்துவிடுகின்றார்.

"கைகேயியின் மனவியல்பைப் புரிந்துகொண்டு அதற்கேற்றபடி தன் விடாமுயற்சியால் படிப்படியாக மனதை மாற்றும் திறமையும் அறிவாற்றல் உடையவளுமாகக் கம்பர் மந்தரையைப் படைத்துள்ளார்" (முனைவர் மு. சுதா, பக்.37-45).

இத்தகைய கொடுமையான உள்ளம் கொண்டவளாகக் காட்டப்பட்டாலும் அவளும் தன் தவறுணர்ந்து இராமனின் நல்உள்ளம் அறிந்து அவனை மீண்டும் அழைத்துவரச் செல்லுபவர்களுடன் செல்லவைத்து அந்த மாந்தர் படைப்பை மேன்மேலும் உயர்வடையச் செய்கிறார் கம்பர்.

வால்மீகரின் படைப்பில் இயற்கையாகவே தீவினையான எண்ணம் உடையவளாகவும் தன்னலம் கருதுபவளாகவும் உளவியல் உணர்ந்தவளாகவும் மந்தரை காணப்படுகின்றாள். வால்மீகர் காட்டிய அடிப்படைக் குணங்களை எடுத்துக்கொண்ட கம்பர் காப்பியத்தின் போக்கிற்கும் நிகழ்விற்கும் காரணமாக விளங்கும் மந்தரையைக் கொடுமையான எண்ணமுடையவளாகச் சித்தரிக்கின்றார். இருந்தபோதும் ஒரு செயற்கரிய செயலைச் செய்விக்கும் மந்தரையை விடாமுயற்சி, தான் நினைத்த செயலைச் சாதிக்கும் தன்மை, வாதத்திறமை, சிறந்த மதிநுட்பம், உளவியல் நுட்பம் எனப் பல திறமைகளின் பிறப்பிடமாய்க் காட்டிச் சிறப்பிக்கின்றார்.

மேலும் தான் செய்த தவறு உணரும் பண்புடை மாந்தராய் மாற்றிவிடுகிறார். கொடுங்குணமுடையவள் என்றாலும் அறம் எடுத்துரைத்துக் குலப்பெருமைகாக்க தயரதன் வாய்மை காக்க உதவுபவளாக விளங்கும் மந்தரை படைப்பு கம்பரில் உயர்ந்து காணப்படுவதை உணரமுடிகின்றது. கம்பரின் மந்தரையிடத்துச் சங்கஇலக்கியத்துத் தோழிக்குரிய திறன் மிளிர்வதை அறியமுடிகின்றது.

மனிதர்களின் இயல்பினைச் சுட்டக் கம்பருக்கு இம்மாந்தர்படைப்பு பயன்பட்டுள்ளது. சமூகத்தில் காணலாகும் இத்தகைய மாந்தர்களை எடுத்துக்காட்ட மந்தரை பயன்பட்டுள்ளாள். மேலும் தவறுசெய்பவர்கள் மனம் திருந்துவதற்கும் வாய்ப்புண்டு.

அந்தச் சூழலில் அத்தகையோரை மன்னித்து ஏற்றல் வேண்டும் என்பதனையும் சமூகத்திற்கு எடுத்துக்காட்டுகிறார்.

முன்னர் அறிந்தோ அறியாமலோ செய்யும் சிறுதவறு கூடப் பின்னர் ஏதாவது ஒருசூழலில் பாதிப்பினை உண்டாக்கும் போன்ற கருத்துகளை இப்பாத்திரப்படைப்பின் வழிக் காப்பிய ஆசிரியர் சமூகத்திற்கு எடுத்துரைக்கிறார். இதுபோன்ற இப்படைப்பின்வழி ஏராளமான கருத்துகள் வெளிப்படுவதை ஆய்வின் வழி எடுத்துரைக்கலாம். இவ்வாறு கற்பிப்பது அடுத்து வரும் தலைமுறையினருக்குக் காப்பியங்கள் என்பது வெறும் கதையல்ல. சமூக மேம்பாட்டிற்கான வழிகாட்டி என்பதனை உணரவைக்கும்.

"காப்பியங்கள் என்பது வெறும் கதையல்ல. நல்ல கருத்துகளை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் இணைப்புப்பாலம். உண்மையோ கற்பனையோ இக்காப்பியங்களின் தனிச்சிறப்பே தான், தோன்றியகாலத்து வாழ்ந்த மக்களுக்கு அவர்களால் ஏற்கப்பெறும் கதைப்போக்கில் அம்மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் நல்ல அறிவுறுத்தல்களைக் கதைப்போக்கில் மாந்தர் படைப்புகளின் வழி எடுத்துரைப்பது ஆகும். இங்கு சமூகமேம்பாட்டை நோக்கிய படைப்பாளனின் கருத்துப் பதிவு செய்யப்படுவதோடு அப்படைப்பும் வெற்றிபெறுகிறது. காப்பியங்களைப் பொறுத்தவரையில் படைப்பாளனையும் படைப்பினையும் நோக்குதல் அவசியமானது." (முனைவர் மு. சுதா, ப.8)

இத்தகைய பார்வையே மாணவனுக்குக் காலத்திற்கேற்ற படைப்பாற்றலைத் தரும். ஒன்றினைப்பற்றி அறிந்து அதன் உட்பொருளைப் புரிந்து ஆளச் செய்வதுடன் அதனைப் பகுத்து ஆராய்ந்து ஒரு புதிய சிந்தனையை உருவாக்கச் செய்யும் அளவிற்கு ஒவ்வொரு கல்வி நிலையிலும் கற்பிக்க வேண்டும்.

மதிப்பிடுதல்

கற்பித்தலின் அடுத்தநிலை மதிப்பிடுதல் ஆகும். ஒவ்வொரு கல்வி நிலைக்கும் தகுந்தவாறு மதிப்பிடுதல் அமையும். தொடக்கக்கல்வி முதலாக ஆய்வு நிலை ஈறாக அகவயம், புறவயம் என்ற இருநிலைகளில் மதிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு கேட்கப்படும் வினாக்கள் அறிதல், புரிதல், ஆளல், தொகுத்தல், பகுத்தல், மதிப்பிடுதல் என்ற படிநிலைகளில் அமைதல் மாணவர்களின் அறிவுத்திறனை அறிய உதவும்.

மைசூரிலிலுள்ள இந்திய மொழிகளுக்கான நடுவண் நிறுவனம் இவ்வினா அமைத்தல் குறித்த ஆய்வுத்திட்டங்களை உருவாக்கி அதனை அந்தந்த மொழிக்குரிய மாநிலத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களை ஒருங்கிணைத்து வினாக்கள் உருவாக்கச்செய்தும் அதுதொடர்பான பல பயிற்சிப்பட்டறைகளையும் நடத்தி வருகிறது. அதன்படி உருவாக்கப்பட்ட அகவய

புறவய வினா முறைகள் மாணவர்களின் தனித்திறன் மதிப்பீட்டிற்கு உதவுவனவாய் உள்ளன

அகவயம் என்பது மதிப்பீட்டாளரின் விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்கும் வகையில் அமையும் வினாக்கள் ஆகும்.

உ.ம்: ஐம்பெருங்காப்பியங்களின் சிறப்பினைக்கூறுக

அவ்வாறு இல்லாமல் பாடத்திட்டத்தின் அடிப்படையில் உள்ளது உள்ளவாறே கூறுவது புறவய வினாக்கள் எனலாம்.

உம்: சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகளைக் கூறுக

இவ்வினாக்கள் மாணவர்களின் திறனறிவதாக, அவர்களின் அறிவுத்திறனை அளவிடுவதாகத் தேர்வு செய்தலுமாக Measurement,Assessment,Evaluate என்ற நிலையில் அமையவேண்டும். அவை

அகவயவினாக்கள்

1. எளியவினா
2. சிறுவிடைவினா
3. நிரப்பல் உரு
4. கட்டுரை
5. சிக்கல் தீர்வு (அ) உருவாக்குதல்

புறவயவினாக்கள்

1. சரியா தவறா என அமைத்தல்
2. மாற்றியமைத்தல்
3. பொருத்தல்
4. அளிக்கப்பட்டிருக்கும் பகுதியிலிருந்து வினாக்கள் அமைத்து விடையளிக்கச் செய்தல்

என்பதாகும். இவ்வினா அமைப்பு முறையானது தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி வரை அவரவர்க்கேற்ப அமைதல் வேண்டும். உயர்கல்வியில் கற்பிக்கப்படும் திறனாய்வு போக்கில் கட்டுரை வினாவே மதிப்பிடுதலுக்கு உதவும். போட்டித்தேர்வுகளில் பலவுள் தெரிவு வினாக்கள் பயன்படுத்தப்படுகிறது. உயர்கல்விக்குப் பிறகு கற்பித்தல் பணியில் ஈடுபடப்போகும் மாணவர்களுக்குத் திறனாய்வு நோக்கில் அமையும் கட்டுரை வினாக்களும் அடிப்படை அறிவை அறிய பலவுள் தெரிவு வினாக்களுமே பொருத்தமானதாக அவர்களின் அடிப்படை அறிவை அறியஉதவும். இவ்வண்ணம் கேட்கப்படும்பொழுது அதன்வழி மாணவர்களின் திறனை மதிப்பிடுதல் சரியானதாக அமையும். இவ்வாறு

மாணவர்களின் திறனை மதிப்பிடும் வினாக்கள் அவர்களது அறிவு மேம்பாட்டைப் பயன்படுத்திப் பதிலளிக்கக் கூடியதாக அமைக்கவேண்டும்.

கூறியது கூறலாக இல்லாமல் காரண காரியத்துடன் தருக்கரீதியில் அமைத்தல் வேண்டும். வினாக்கள் அமைப்பதில் ஒரு ஒழுங்குமுறை என்பதனைப் பின்பற்றவேண்டும். மனப்பாடத்திறனை மதிப்பிடுவதைவிட ஒன்றை உருவாக்கும் (Creativity) தன்மையை உண்டாக்குவதாய் அமைக்கவேண்டும்.

இக்கற்பித்தல் முறையும் மதிப்பிடும் தன்மையும் இங்கு ஆய்வு நிகழ்த்தப்படும் காப்பியங்களில் மட்டுமல்ல அனைத்து இலக்கியங்களிலும் பின்பற்றப்பட்டால் இனிவரும் தலைமுறையினர் முன்னையோரைக் காட்டிலும் அறிவுத்திறனோடும் சமூகநோக்கோடும் விளங்க வாய்ப்புண்டாகும்.

தமிழகத்தில் உள்ள இளநிலை பட்டப்படிப்பில் உள்ள வினாத்தாள்களை ஆய்வுசெய்த பேராசிரியர் ஒருவர் வினாக்களின் அமைவு பற்றிக் குறிப்பிடும்போது,

"Following are the percentage of the current Question papers in most of the University of Tamilnadu:

Remember – 60%
Understand – 10%
Application – 5%
Analysis - 9% (app)
Evaluation - 5%
Classification – 10%
Creativity – 1% (app)' (கருத்தரங்கக் கருத்துரை)

என்ற நிலையிலேயே உள்ளது என்கிறார். இவ்வருந்தத்தக்க நிலை மாறவேண்டும். இம்முயற்சியை இந்திய மொழிகளுக்கான நடுவண் நிறுவனம் செய்து வருகின்றது. அதற்கு இதுபோன்ற கருத்தரங்குகள் நடத்தப்பட்டு கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் மேன்மேலும் வலிமை சேர்க்கவேண்டும்.

துணைநின்றவை

- சுதா மு., (26 அக்டோபர் 2019), காப்பிய மாந்தர் படைப்பும் கருத்துருவாக்கங்களும், ஆய்வுக்கட்டுரை, பதிவுகள் இணைய இதழ் ISSN:1481-2991.
- வேங்கடசாமிநாட்டார் ந.மு. (உரை), (2014), சிலப்பதிகாரம், சென்னை: ராமையா பதிப்பகம்.
- துரைசாமிப்பிள்ளை ஔவை.சு., (2010), புறநானூறு மூலமும் உரையும், சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
- கோபாலகிருஷ்ணமாச்சாரியார் வை.மு., (உரை), (2011), கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், சென்னை: உமா பதிப்பகம்.
- கோபாலகிருஷ்ணமாச்சாரியார் வை.மு., (உரை), (2011), கம்பராமாயணம், சுந்தர காண்டம், சென்னை: உமா பதிப்பகம்.
- மீனாட்சி சுந்தரனார் தெ.பொ., (1966), நாடகக் காப்பியங்கள், சென்னை: சேகர் பதிப்பகம்.

- வையாபுரிப்பிள்ளை எஸ்., (1965), கம்பன் காவியம், சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.
- ஞானசம்பந்தன் அ.ச., (1988), கம்பன்கலை, சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
- கமலக்கண்ணன் இரா.வ., (2008), நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் மூலமும் உரையும், சென்னை: வர்த்தமானன் பதிப்பகம்.
- கமலக்கண்ணன் இரா.வ., (2008), திருமழிசையாழ்வார், திருச்சந்தவிருத்தம், சென்னை: வர்த்தமானன் பதிப்பகம்.
- சுதா மு., (2007), அயோத்தி மாந்தர்கள் (வால்மீகி-கம்பர் ஒப்பீடு), காரைக்குடி: மகேஷ் பதிப்பகம்.
- சுதா மு., (சனவரி 6,2020), காப்பியமாந்தர் படைப்புகளும் கருத்துருவாக்கங்களும், வல்லமை இணைய ஆய்விதழ், ஆய்வுக்கட்டுரை, (peer reviewed), vallamai.com ISSN:2348-5531.
- மைசூரிலுள்ள இந்திய மொழிகளுக்கான நடுவண் பயிலரங்கத்தில் பெறப்பட்டக் கருத்து, நாள்:28.1.2014-1.2.2014

****

'பில்மோரா' செயலியின்வழிப் புரியும்படியான தமிழ் இலக்கணம் கற்பித்தல் Innovation of Filmora Application in Teaching Tamil Grammar in Effective Way

லோகராஜ் மோகன் | Logaraj Mogan

Student of Tamil Department, Sultan Idris Education University, Malaysia,
logarraj.morgan@yahoo.com

ஆய்வுச் சுருக்கம்

தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி, கல்வித் துறையிலும் வளர்ந்து விட்டது. அந்த வளர்ச்சியில் ஒன்றுதான் பில்மோரா எனப்படும் காணொளி இயற்றும் செயலி. ஒரு திரைப்படத்தையே சுலபமாக இயற்றிவிடும் அளவிற்கு இச்செயலில் மிக அதி நவீன காணொளி தயாரிக்கும் சேவைகளும் வசதிகளும் உண்டு. இச்செயலியைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்றல் கற்பித்தல் நடத்தலாம். ஆசிரியர்கள் கற்பிக்க விழையும் பாடங்களைக் காணொளி முறையில் தயாரித்து அதை மாணவர்களுக்கு இயங்கலையில் அல்லது நேரடியாகவும் கற்பிக்க இதன்வழி இயலும். இந்தக் காணொளிகளின் வழி, ஆசிரியர்களினால் மானவர்களின் கவனத்தைச் சுலபமாக ஈர்க்க இயலும். ஆக, இதன்வழி பில்மோரா செயலி கல்வித் துறையில் அதிலும் தமிழ் கற்பிக்க மிகவும் உதவுகிறது.

Abstract

The overall study about the innovation of 21st century teaching methodology in Tamil grammar by using technology according to this modern period. Filmora is used as one of the effective and

innovative software to teach Tamil grammar for students. Wondershare Filmora is the best video editing software on Mac and PC for all novice and semi-professional video editors because it provides tools and features that enable you to create videos of all genres. By using this application, teachers can teach students in simple and creative ways via those sources in the classroom like computer and LCD. There are a lot of benefits in usage of Filmora application in education especially in teaching of Tamil grammar such as being able to create creative and innovative videos regarding the subject in the classroom for teaching students offline or online. Thus, teachers also can easily attract the attention and interest of the students while teaching. Not only that, this review strengthens the teacher's thinking and refreshing skills and also develops the listening ability of the students through this video. Its use is often limited to an information transmission mode and so this paper emphasizes more ways that we can use Filmora in education especially in Tamil grammar to create a video. So, this paper emphasizes the use of a very powerful, flexible, innovative teaching and learning support tool in Tamil grammar.

திறவுச்சொற்கள் (Keywords) : Tamil grammar, Wondershare Filmora, Videos, Offline, Online

முன்னுரை

தமிழ் மொழி 'இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ்,' என மூன்று பிரிவுகளை உடையது. இவையே 'முத்தமிழ்' என அழைக்கப்படக் காரணமாக விளங்குகிறது. முன்னோர் முத்தமிழின் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இலக்கணம் அமைத்தனர். அகத்தியம் முத்தமிழுக்கும் உரிய இலக்கண நூல் என்பர். இருப்பினும், பொதுவாகத் தமிழ் இலக்கணம் என்பது இயற்றமிழ் இலக்கணத்தைக் குறிப்பதாயிற்று. செய்யுள், உரைநடை ஆகியவற்றின் தொகுதி இயற்றமிழாகும். தொல்காப்பியம் இயற்றமிழில் கிடைத்துள்ள மிகப்பழைய இலக்கண நூலாகும். பைந்தமிழ் இலக்கணம் ஐந்து வகை. அவை, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகும். இவ்வாறு தமிழ் பல இலக்கணக் கூறுகளைக் கொண்டுள்ளது. அவையாவும் தமிழ் சான்றோர் முதல் சிறு பிள்ளை வரை படித்துப் பயன் பெறும் அளவுக்கு தகவல்களை உள்ளடக்கியுள்ளது. ஆக, இவ்விடுபணியின் தலைப்புக்கு ஏற்றவாறு தமிழ் மொழி இலக்கணக் கூறுகளான **'இயற்சொல் – திரிசொல் – வடசொல் – திசைச்சொல்'** எனும் இலக்கணக் கூறுகளைத் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டின் வாயிலாகக் கற்பிக்கும் முறையை விளக்கி உள்ளேன்.

தற்போது வளர்ந்துவரும் தொழில்நுட்பம் மனித அறிவுக்கு எட்டாத தூரத்தைத் தொட்டு விட்டது எனலாம். அறிவியல் துறை முதல் மருத்துவத் துறை வரை இதன் வளர்ச்சி எண்ணிலடங்காதவை. அதிலும் முக்கியமாகப் பல தரப்பட்ட மக்களால் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் சமூக ஊடகங்களிலும் சிறுவயதிலிருந்து அனைவராலும் கற்கப்படும் கல்வி துறைகளிலும் இதன் செல்வாக்கும் பயன்பாடும் நாளுக்கு நாள் அதிகமாவதோடு முன்னேற்றமும் அடைந்து வருகிறது. சமூக ஊடகங்களான முகநூல், படவரி, புலனம், 'கீச்சிடு' போன்ற பல செயலிகள், தோன்றிய காலம் முதல் இன்று வரை பல வளர்ச்சிகளை அதாவது பல வசதியான தன்மைகளைப் பெற்று வருவது அவற்றைப் பயன்படுத்துபவர்களால் உணர முடியும். எடுத்துக்காட்டிற்குக், காணொளி அழைப்பு, ஒலிப்பதிவு போன்ற வசதிகளைக் கூறலாம். இதைப் போன்றே கல்வி துறையிலும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் பங்கும் தற்போது மிகவும் கூடி விட்டது. கல்வி கற்பதற்கும் கற்பிப்பதற்கும் பல தொழில்நுட்ப மென்பொருள்களும் செயலிகளும் பெருகி விட்டன.

எடுத்துக்காட்டிற்கு, 'பில்மோரா', 'கூகல் கிளாஸ்ரூம்', 'அனிமேகர்', 'பலதோகோன்', 'பேணிமே', 'அனிமத்ரோன்', 'நோட்டபிளீட்டி' என அடுக்கிக் கொண்டே போகலாம். இவையனைத்தும் கல்வி கற்பிப்பதற்கு மிகவும் அவசியப்படும் செயலிகளாகும். அவை ஆசிரியர்களால் கற்று தரும் செயலியாகவும் பயன்படுத்த இயலும், மாணவர்களால் கற்றுக் கொள்ளும் செயலியாகவும் செயல்படும் தன்மைகள் கொண்டவை. அதுவும் தொழில்நுட்பத்தைச் சார்ந்து அதாவது காணொளி, விளையாட்டுவழிக் கற்றுத் தருதல் போன்ற அணுகுமுறைகள் படிக்கும் மாணவர்களை ஈர்ப்பதோடு அவர்களுக்கு படிக்கும் பாடத்தையும் புரிய வைக்கும். அவ்வாறாக, இந்த இடுபணியில், பல தொழில்நுட்பச் செயலிகளில் ஒன்றான **'பில்மோரா'** எனும் செயலியின்வழிப் புத்தாக்க முறையில் இலக்கணம் கற்பித்தலை (இயற்சொல் – திரிசொல் – வடசொல் – திசைச்சொல்) பற்றி விளக்கவுள்ளேன்.

ஆக, இந்த இடுபணி தமிழ் மொழி இலக்கணம் (இயற்சொல் – திரிசொல் – வடசொல் – திசைச்சொல்) கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைக் கொண்டு புத்தாக்கம் (பில்மோரா) ஒன்றினை விளக்கியவாறு அமைந்துள்ளது.

'பில்மோரா' செயலியின் வரலாறும் பயன்பாடும்

படம் 1: 'வொண்டர்ஷேர் பில்மோரா' லோகோ

'வொண்டர்ஷேர் பில்மோரா' (Wondershare Filmora) என்பது வொண்டர்ஷேர் எனும் நிறுவனத்தின்கீழ் காணொளி செய்வதற்கும் முறையாக வடிவமைப்பதற்கும் உருவாக்கப்பட்ட ஒரு செயலி அல்லது மென்பொருள் ஆகும். இது பலதரப்பட்ட எடிட்டிங் கருவிகளைப் பயன்படுத்தி அற்புதமான காணொளிகளைத் திறமையாக உருவாக்க உதவுகிறது. இது கைப்பேசியிலும் கணினியிலும் பயன்படுத்த கூடிய ஒரு மென்பொருள் அல்லது செயலியாகும். இதனை இணையம் இல்லாமலும் பயன்படுத்தலாம். இதன் அனைத்து வசதிகளையும் பெறுவதற்குக் கட்டணம் செலுத்தித் தரவிறக்கம் செய்ய வேண்டும். குறிப்பிட்ட அதாவது இயல்பான காணொலிகளைச் செய்வதற்கு இதனை இலவசமாகக் கூட தரவிறக்கம். இதனை https://filmora.wondershare.com/ எனும் அகப்பக்கத்தில் பெறலாம். 'வொண்டர்ஷேர்

பில்மோரா' எளிதாக பயன்படுத்தக்கூடிய வடிவமைப்பைப் உள்ளடக்கியுள்ளது. இதன் உள்ளடக்கம் யாராலும் சிறந்த காணொளிகளை உருவாக்கிச் சிறந்த பதிப்பாசிரியராக மாற உதவுகிறது. இதன் உள்ளடக்கம் ஒரு திரைப்படத்தில் எவ்வாறு படப்பதிவு அமைந்திருக்குமோ அந்த அளவுக்கு மிக சிறப்பாக இருக்கும்.



படம் 2 : 'வொண்டர்ஷேர் பில்மோரா' வடிவமைக்கும் தளம் (எடிட்டிங்)

எடுத்துக்காட்டிற்கு, அனிமேஷன், கிராஃபிக், எழுத்து வடிவமைப்புகள், ஒலி மாற்றியமைக்கும் வசதிகள், சிறப்பு எஃபக்ட் போன்ற இச்செயலி வழங்குகிறது. கூடுதலாக, இதன் மூலம், பயன்படுத்துவோர் தங்கள் காணொளிகளில் வேறு காணொளிகளையும் படங்களையும் தடையின்றி இணைத்துப் புதிய காணொளிகளையும் இணைக்கலாம். இசை நூலகத்திலிருந்து சரியான ஒலிப்பதிவினைத் தேர்வு செய்தும் இணைக்கலாம். 'வொண்டர்ஷேர் பில்மோரா' வழங்கும் விசையில் 4 கே (4K) எடிட்டிங் ஆதரவு, ஜிஐஎஃப் ஆதரவு, சத்தம் நீக்குதல், வண்ண சரிப்படுத்தும் முறை, மேம்பட்ட உரை திருத்தி, ஆடியோ கலவை, வீடியோ உறுதிப்படுத்தல், காட்சி கண்டறிதல், ஆடியோ சமநிலை ஆகிய உயர்தரக் கூறுகளும் உள்ளன. 4K எடிட்டிங் அம்சம் பயன்படுத்துவோருக்கு 4K வரை தெளிவுத்திறனில் காணொளிகளைத் திருத்த மற்றும் ஏற்றுமதி செய்ய உதவுகிறது. GIF ஆதரவு அம்சம் GIF கோப்புகளை இறக்குமதி செய்ய, திருத்த மற்றும் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கிறது. சத்தம் அகற்றும் அம்சம் தேவையற்ற பின்னணி இரைச்சலை உடனடியாக அகற்ற உதவுகிறது. கலர் ட்யூனிங் அம்சம் காணொளிகளில் உள்ள வெள்ளை சமநிலை மற்றும் நிறம் மாறும் வரம்பை சரிசெய்ய உதவுகிறது. ஆடியோ மிக்சர் அம்சம் ஒவ்வொரு ஒலிப்பதிவின் ஒலியையும் மாற்ற உதவுகிறது. மேம்பட்ட உரை திருத்தி உரையின் நிறம், அளவு, எழுத்துரு மற்றும் அனிமேஷனைத் திருத்த அனுமதிக்கிறது. ஸ்க்ரீ ரெக்கார்டிங் அம்சம் கணினி

மற்றும் புகைப்படக் கருவியின் திரையைத் திறமையாகப் பதிவு செய்ய உதவுகிறது. காணொளி உறுதிப்படுத்தல் அம்சம் கேமரா குலுக்கலின் விளைவுகளை நீக்குகிறது. முக்கியமாகக் காணொளிகளை வடிவமைப்பதற்கு உருவாக்கப்பட்ட மிகச் சிறப்பான செயலி இதுவாகும். இது போன்ற பல விதமான அம்சங்களையும் கூறுகளையும் இந்த செயலி கொண்டுள்ளது.

பயன்படுத்தும் செயல்முறை (இலக்கணம் கற்பித்தலைச் செயலி வழி விளக்குவது)





படம் 3 & 4 : 'வொண்டர்ஷேர் பில்மோரா' வடிவமைக்கும் தளம் (எடிட்டிங்)

முதலில் செயலியைத் திறந்த பிறகு, வடிவமைக்கும் தளம் (எடிட்டிங் பகுதி) காண்பிக்கப்படும். அதில் நான் ஏற்கனவே செய்து வைத்த இலக்கணம் சார்ந்த புகைப்படங்கள் (அனைத்து விதமான படங்கள், 'பவர்பாயின்ட்' சார்ந்த படைப்புகள்), காணொளிகள், மேலும் மெருகூட்டும் விதத்தில் இருக்கும் பின்னணி இசையையும் இணைக்கிறேன்.





படம் 5 & 6 : 'வொண்டர்ஷேர் பில்மோரா' வடிவமைக்கும் தளம் (எடிட்டிங்)

பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட புகைப்படங்களையும் காணொளிகளையும் ஒவ்வொன்றுக்கும் ஏற்றவாறு சரியாக இணைக்கிறேன். இவ்வாறு அனைத்துப் படங்களுக்கும் காணொளிகளுக்கும் செய்கிறேன்.



படம் 7 : 'வொண்டர்ஷேர் பில்மோரா' வடிவமைக்கும் தளம் (எடிட்டிங்)

ஒவ்வொரு கற்பித்தல் ஒலிப்பதிவுகளும் காணொளியில் முறையாகக் கேட்பதற்கு ஒலி அளவுகளை அதிகமாக வைக்கிறேன்.





படம் 8 & 9 : 'வொண்டர்ஷேர் பில்மோரா' வடிவமைக்கும் தளம் (எடிட்டிங்)

பின்னணி இசைக்காகச் சேர்க்கப்பட்ட ஒலிப்பதிவு நீளமாக உள்ளதால் அதனை வெட்டுகிறேன்.





படம் 10 & 11 : 'வொண்டர்ஷேர் பில்மோரா' வடிவமைக்கும் தளம் (எடிட்டிங்)

இறுதியாக, அனைத்து வடிவமைப்புகளும் முறையாக உள்ளதா என்பதை உறுதி செய்து விட்டு 'எக்ஸ்போர்ட்' எனும் விசையை அழுத்தி முழு புத்தாக்கம் வாய்ந்த காணொளியை உருவாக்கி விட்டேன்.

முடிவுரை

ஆக, இந்த இடுபணியின்வழித் தொழில்நுட்பத்தின் வழி பல நன்மைகள் உள்ளன எனவும் முக்கியமாகக் கல்வித் துறையில் இதன் பங்கு அளப்பரியது எனவும் தெரிகிறது. இவ்விடுபணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'பில்மோரா' எனும் செயலியும் அதன் பயனும் கல்வி கற்பித்தலில் மிகவும் அவசியம் எனத் தெரிகிறது. ஆகையால், இந்த இடுபணியின் வழி பில்மோரா செயலியின் நன்மைகள் தெரிவதோடு அதனைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என நம்புகிறேன்.

பின்னிணைப்பு

இந்த இடுபணிக்காகப் புதிதாக அகப்பக்கமும் (Blogspot) திறக்கப்பட்டது. அந்த அகப்பக்கத்தில் பட விளக்கத்தில் இந்தக் கற்பித்தல் காணொளி செய்வதன் செயல்முறையும் அதனைத் தொடர்ந்து காணொளி விளக்கத்தில் கற்பித்தல் காணொளி செய்வதன் செயல்முறையும், இறுதியாக, 'பில்மோரா' செயலியின் வழி செய்த முழு காணொளியையும் இணைத்துள்ளேன். இந்த இரண்டு காணொளிகளும் 'யுட்யூப்'- யில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

அகப்பக்க இணைப்பு :

https://tamilkarpittal.blogspot.com/2021/06/blog-post.html

செயல்முறை காணொளி இணைப்பு :

https://youtu.be/RyLwNF2gjoQ

இலக்கண கற்பித்தல் புத்தாக்கக் காணொளி :

https://youtu.be/iMrVgvNhZDg

References

- Apperson, J. M., Laws, E. L., & Scepansky, J. A., (2006), The impact of presentation graphics on students' experiences in the classroom. Computers & Education, 47, 116–126. https://doi.org/10.1016/j.compedu.2004.09.003.
- Catharina, (2006), Using Powerpoint as an Effective Instructional Tool. https://doi.org/10.4219%2Fgct-2006-8
- Christopher, Deandra and Myers, Carly, "Can the Role of Reflection Transform the Way. We Use PowerPoints (Presentation)" (2021). Sheridan Creates. https://source.sheridancollege.ca/conferences_creates/2021/2021/9

- Harknett, R. J., Cobane, C. T. (1997). Introducing instructional technology the international relations. Political Science and Politics, 30, 496–500. https://www.cambridge.org/core/journals/ps-political- science-
- Hill, Arford, T., Lubitow, A., & Smollin, L. M. (2012). "I'm ambivalent about it": The dilemmas of PowerPoint. Teaching Sociology, 40, 242–256. https://doi.org/10.1177/0092055X12444071
- Levasseur, D. G., & Sawyer, K. (2006). Pedagogy meets PowerPoint: A research review of the effects of computer-generated slides in the classroom. Review of Communication, 6, 101–123. https://doi.org/10.1080/15358590600763383.7.
- Murphy, T. (2004, October). Research based methods for using PowerPoint, animation, and video for instruction. SIGUCCS'04. Retrieved November 1, 2005, from http://www.bitbetter.com/powertips.html
- Rickman, J., & Grudzinski, M. (2000). Student expectations of information technology use in the classroom. Educause Quarterly, 23, 24–30.
- Tufte, E. (2003). The cognitive style of PowerPoint. Cheshire, CT: Graphics Press, https://dl.acm.org/doi/abs/10.5555/121358
- Ponniah, K., Thamburaj, K. P., & Samuvell, S. J. I. (2017). Language attitude among Tamil language teachers. International Journal of Advanced and Applied Sciences, 4(6), 142-147.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2016). Hierarchical grammatical tagging for tinai (landscape) of cankam Tamil literature. Indian Journal of Science and Technology, 9(48).
- Thamburaj, K. P., & Rengganathan, V. (2015). A Critical Study of SPM Tamil Literature Exam Paper. Asian Journal of Assessment in Teaching and Learning, 5, 13-24.
- Thamburaj, K. P., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [A study on modern and traditional writing skill]. Muallim Journal of Social Sciences and Humanities, 141-146.
- Thamburaj, K. P. (2015). Promoting scientific ideas through the future studies in Tamil language teaching. Procedia-Social and Behavioral Sciences, 174, 2084-2089.
- Thamburaj, K. P., Arumugum, L., & Samuel, S. J. (2015, August). An analysis on keyboard writing skills in online learning. In 2015 International Symposium on Technology Management and Emerging Technologies (ISTMET) (pp. 373-377). IEEE.
- Thamburaj, K. P. (2021). An Critical Analysis of Speech Recognition of Tamil and Malay Language Through Artificial Neural Network. Turkish Journal of Computer and Mathematics Education (TURCOMAT), 12(9), 1305-1317.
- Thamburaj, K. P., & Shakunthala, R. (2016). Standardization of question items to test tamil case markers–a study. Asian Journal of Assessment in Teaching and Learning, 6, 9-16.
- Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K. P. (2021). Traditional teaching method-concept of moral education and pedagogy in Aathicuudi. Muallim Journal of Social Sciences and Humanities, 176-182.
- Thamburaj, K. P. (2021). E-Teaching in Teacher Education—A Conceptual Framework of Sultan Idris Education University. Sino-US English Teaching, 18(5), 107-111.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2020). THE USE OF MOBILE–ASSISTED LANGUAGE LEARNING IN TEACHING AND LEARNING TAMIL GRAMMAR. PalArch's Journal of Archeology of Egypt/Egyptology, 17(10), 843-849.
- Thamburaj, K. P., Sivanadhan, I., & Kumar, M. (2021). IMPROVING FORM 4 STUDENT'S READING COMPREHENSION SKILLS IN TAMIL LANGUAGE BY USING SQ3R METHOD. Psychology and Education Journal, 58(2), 2291-2295.
- Thamburaj, Kingston Pal. "A Process of Developing an ASR System for Malay and Tamil Languages." Design Engineering (2021): 731-741.

- Thamburaj, K. P., & Ponniah, K. (2015). வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி (Reframing Valluvar's claim on Friendship). Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்), 2(1), 7-13.

****

இணையவழித் தமிழ்க் கற்றல்- கற்பித்தல் ONLINE TAMIL TEACHING & LEARNING

முனைவர் து. சவிதா | Dr. D. Savitha

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.
8807523163, savitha@psgrkcw.ac.in, ORCID ID 0000-0002-4443-6290

ஆய்வுச்சுருக்கம்

உலகையே குவலய கிராமமாக மாற்றிவிட்ட ஆற்றல் வாய்ந்த தொழில்நுட்பம் தான் இணையம். இணையம் என்ற கடலில் நீந்திச் செல்லும் கப்பலாகத் தமிழ் திகழ்கிறது. .இணையத்தில் இல்லாதது எதுவுமே இல்லை என்ற அளவிற்கு அனைத்து தகவல்களையும் தன்னகத்தே கொண்டதாக இணையம் திகழ்கிறது. நீங்கள் எதைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதனை இணையத்தில் சென்று ஒருசில நொடிகளில் தெரிந்துகொள்ளலாம். இணையத்தின் பயன்பாடு அளவிடமுடியாத அளவிற்கு பல்கிப்பெருகி உள்ளது. ஏறக்குறைய எல்லாத்துறைகளும் இணையதள வழியை ஏற்படுத்தி உள்ளன. அதுபோலக் கல்வித்துறையிலும் இணையதளத்தின் பயன்பாடு வெகுவாக வளர்ந்து உள்ளதைக் காணமுடிகிறது. இவ்வாறு இணையத்தின்வழித் தமிழ் கற்றல் கற்பித்தலின் வளர்ச்சி பற்றி இக்கட்டுரை அமைகிறது.

Abstract

The Internet is a powerful technology that has transformed the world into a village. Tamil is a ship that swims in the sea of the Internet. The Internet embodies all information to the extent that there is nothing that is not on the Internet. Whatever you want to know about it, you can go online and find out in a few seconds. Use on the Internet is immensely multiplied. Almost all departments have created the Internet. Similarly, the use of the Internet in the field of education can be seen growing exponentially. Thus this article sets out about the development of Tamil learning teaching through the internet.

திறவுச்சொற்கள் (KEYWORDS): தமிழ் இணையம், வலைதளங்கள், வலைப்பதிவுகள், வலைப்பூக்கள், இணைய பாடநூல்கள், திரட்டிகள், மென்பொருள்.

முன்னுரை

இணையம் விரிந்து பரந்து கிடக்கும் இந்த உலகையே நம் வீட்டுக்குள் கொண்டு வரும் ஆற்றல் வாய்ந்தது. தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியின் கனவை நனவாக்கும் செயல்வன்மை மிக்கது. ஆதாரங்களைக் கண்முன்னே கொண்டு வந்து கொட்டும் கருத்துப் பெட்டகமாக விளங்குகிறது. இணையத்தின் வழிப் புதிய நோக்கு உண்டாகும், அறிவு பெருகும், சிந்தனை செழிக்கும். இதன் மூலம் தகவல்களைப் பெறலாம். அளிக்கலாம், தொகுக்கலாம், கல்வி பயிலலாம், பயிற்றுவிக்கலாம். இதன் அடிப்படையில் இணையம், வழியான கற்றல் கற்பித்தல் முறைமை இன்று மிகவும் புகழ் பெற்றதாகவும். எல்லோராலும் விரும்பக் படுவதாகவும் இருக்கின்றது. இணையத்தின் வழியாக அல்லது செயலிகள், மென்பொருள்கள், வலைதளங்கள், மின்னிதழ்கள், ஒலி ஒளி மின் ஊடகங்கள், சமூக வலைதளங்கள் முதலான இணைய ஏந்துகள் வழியாகத் தமிழ் மொழியைக் கற்கவும், கற்பிக்கவும் வேண்டிய தேவைகள் அதிகரித்து வருகின்றன, காலத்திற்கு ஏற்ற வகையில் புதிய அணுகுமுறையில் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலை மேம்படுத்த வேண்டும். அதற்குரிய விரிவான வாய்ப்புகள் இன்று உருவாகி இருப்பதை இன்முகத்துடன் வரவேற்று விரிவாகப் பயன் கொள்ள வேண்டும்.

ஆய்வு அணுகுமுறை

கடந்த காலத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் இணையத்தின் பங்கு பற்றிக் கூறுவதால் எதிர்காலவியல் அணுகுமுறையாகவும் பல்வேறு தமிழ் தளங்கள் பற்றிய செய்திகளை பகிர்வதால் இது அறிவியல் அணுகுமுறையாகவும், நவீனத்துவ அணுகுமுறையாகவும், பல்கலைக்கழகங்களைப் பற்றிய செய்திகளைச் சொல்வதால் பகுப்பியல் அணுகுமுறையாகவும் இக்கட்டுரை அமைகிறது.

இணையம் - சொற்பொருள்

உலகம் முழுவதும் உள்ள அனைத்துக் கணினிகளையும் ஒரே மின்னணுவலையில் சங்கிலிப்பிணைப்புச் செய்யப்பெற்று ஒன்றாக்கபட்டதுதான் இணையம் இதனை ஆங்கிலத்தில் **world wide web** என்பர். இதன் சுருக்கம்தான் www இதனை W3, the Web என்றும் அழைப்பர். ஆயினும் www என்பதுதான் பெருவழக்காகும்.

இணைய வரலாறு

இன்றைய உலகம் இணைய வழிகாட்டுதலின்படிப் பீடுநடை போடுகிறது எனில் அது மிகையன்று. இத்தகைய அரிய கண்டுபிடிப்புக்கு வித்திட்டவர்கள் பிரிட்டானிய நாட்டு அறிஞர் சார்லஸ்காவ், ஜார்ஜ்ஹாக்மேன் ஆகியோர் ஆவர். இவர்கள் 1966 இல்ஃபைபர் (Fiber) நூலிழையின் உதவியால் தகவல்களை ஒளிப்பிம்பங்களாக மாற்றி நெடுந்தொலைவு அனுப்பமுடியும் என்று கண்டுபிடித்தனர். 1944இல் WWW என்ற வலைப்பின்னலாக அமைந்த அமைப்பு உலகின் பல்வேறு பகுதிகளை இணைக்கும் கருவியாக உருமாற்றம் பெற்றது. இதன்மூலம் தகவல்களை மட்டும் அல்லாது படங்களையும் பார்க்க முடிந்தது.

முதல் இணையதளம்

உலகின் முதல் இணையதளம் அர்பாநெட்(arpanet advanced research project agency network) ஆகும். கலிபோர்னியா மற்றும் ஃவுடா மாகாணங்களில் இருந்த கணினிகளை இணைத்து அமெரிக்க நாட்டின் பாதுகாப்புத்துறையில் எதிரிகளுக்குத் தெரியாமல் ராணுவ வீரர்கள் செய்திகள் பகிர்ந்து கொள்ள குறியீடுகளைப் பயன்படுத்தினால் இதனைத் தொடர்ந்து 1972இல் 50 பல்கலைக்கழகங்கள் இணைக்கப்பட்டன. 1983இல் பல்வேறு நாடுகளின் 562 கணிப்பொறி கட்டமைப்புகள் இதில் இடம்பெற்றன.

தமிழில் முதல் இணையதளம்

தமிழை இணையதளத்தில் கொண்டு சேர்க்கும் முயற்சியில் முதலிடத்தில் இருப்பவர்கள் சிங்கப்பூர் மற்றும் இலங்கை தமிழர்கள் ஆவர். தமிழ் இணையதளத்தின் தந்தை என்று போற்றப்படுபவர் சிங்கப்பூர் பேராசிரியர் நா. கோவிந்தசாமி ஆவார். இவர் சீனாவிற்குச் சென்றபொழுது அவரது நண்பரிடம் தமிழின் பெருமைகளை எடுத்துக்கூறி உள்ளார். இதனைக் கேட்டுவியந்த அவரது நண்பர் எங்களின் சீனமொழியைப் போலப் பெருமை வாய்ந்த மொழி உங்களின் தமிழ்மொழி. ஆகவே எங்கள் மொழியைப் போலவே உங்கள் மொழியையும் இணையத்தில் ஏற்றலாம் என்று கூறினாராம். அதன் விளைவாகத் தமிழை இணையத்தில் ஏற்றும் முயற்சியில் கோவிந்தசாமி அவர்கள் ஈடுபட்டதாக அறியமுடிகிறது.

1995 அக்டோபரில் சிங்கப்பூர் அதிபர் திரு.ஓங்டாங்சாங் தொடங்கி வைத்த **journey: words, home and nation- anthology of Singapore poetry(1984 -1995)** என்கிற நான்கு தேசிய மொழிக் கவிதைகளுக்கான வலையகத்தில்தான் முதன் முதலில் தமிழ் இணையத்தில் பிரவேசம் செய்தது. இதை சாதித்த **IRDU (Internet Research and Development nit)** குழுவில் கோவிந்தசாமியும் அவரோடு இணைந்து பணியாற்றிய வல்லுநர்கள் டாக்டர் வீ.லியோஸ்கோக்யாங் நான் இரு சீனர்களும் முதல் தமிழ்ப் பக்கத்தை வலையேற்றியவர்கள். இவர்களுக்குத் தமிழ்கூறும் நல்லுலகம் என்றென்றும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளது. (பார்க்க: www.ezhilnila.com, செ.ச.செந்தில்நாதனின் 'இணையம்' என்ற கட்டுரை)

இணையதளத்தையும் நடத்திவந்தார் நா. கோவிந்தசாமி www.kanian.com என்ற இணையதளத்தையும் நடத்தி வந்தார். இத்தளம் பேச்சு மொழி நடையில் அமைந்திருந்தது.

இணையவசதி வழங்குவோர்

இணைய வசதிகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கட்டணம் செலுத்தி இணைய இணைப்பு பெற்றுக்கொள்ளலாம். சேவை வழங்கும் நிறுவனங்கள் ஆங்கிலத்தில் service provider என்று அழைக்கப்படும். அமெரிக்காவில் GTR, MCI, SRINT, UUNET, AOL ஆகிய நிறுவனங்கள் இணையசேவையை வழங்குகின்றன. இந்தியாவில் VSNL, BSNL, DISHNET, SIFY, AIRTEL, RELIANCE, TATA INDICOM முதலிய நிறுவனங்கள் இச்சேவையை அளிக்கின்றன.

இணைய முகவரி

ஒவ்வொருவருக்கும் ஒரு பெயர் மற்றும் முகவரி இருப்பது போல் ஒவ்வொரு இணையதளத்திற்கும் ஒரு பெயர் மற்றும் முகவரி இருக்கிறது. இதனை இணையமுகவரி

என்றுகூறுவர். எ.கா. httP://www.maraththadi.com இம்முகவரியில் நான்கு பகுதிகள் உள்ளன. அவை:

1. http - Hypertext Transport Protocol என்பதன் சுருக்கமாகும்.
2. www – World Wide Web என்பதன் சுருக்கமாகும்.
3. maraththadi - குறிப்பிட்ட ஒரு இணையதளத்திற்கு வழங்கப்பட்டுள்ள பெயர்.
4. .com – commerce என்பதன் சுருக்கமாகும். இது இணையதளத்தின் தன்மையை குறிப்பதாகும்.

இணையதளங்களின் தன்மையைச் சுட்டும் மேலும் சில குறியீடுகள்

Edu – கல்வி
Univ – பல்கலைக்கழகம்
Org - அரசு சாரா நிறுவனம்
mil – இராணுவம்
net - வலை பராமரிப்பு
gov -அரசாங்கம்
tn - தமிழ்நாடு
in -இந்தியா

ஒவ்வொரு இணையதளமும் அதனை எளிதில் அடையும் வகையில் ஒவ்வொரு இணையதள முகவரியைக் கொண்டு விளங்குகின்றன. நாம் எளிதில் மனதில் பதியவைத்துக் கொள்ளும் வகையில் முகவரிகள் அமைந்திருந்தாலும் கணினிக்கு முகவரிகள் தெரியா. இந்த முகவரிகளைக் கணினி, எண்களை கொண்டே அடையாளம் காட்டுகிறது. 212.58.240.32 என்ற எண் BBC இன் இணையதளத்தைக் குறிக்கிறது.

தமிழ் இணையம்

தமிழைக் கணினியில் பயன்படுத்தவழி ஏற்பட்டவுடன் பலரும் தமிழ் இணையதளங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் பங்களிப்பு இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. இதுவரை உலக அளவில் 6 தமிழ் இணைய மாநாடுகள் நடந்துள்ளன. இணையத்தில் பல்வகைப் பயன்பாடுகள் உள்ளன. நாளுக்கு நாள் பெருகிவரும் மனிதனின் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்யும் வண்ணம் இணையம் வளர்ந்து வருகின்றது. பங்குவர்த்தகம் வணிகச்சந்தை நிலவரம் அறிவியல் வளர்ச்சி போன்றவை அறிய இணையம் பெரிதும் உதவுகிறது.

தமிழ் கற்றல் கற்பித்தலுக்கான வலைத்தளங்களை அடையாளம் காணல்

வலைத்தளத்தின் வரிசை கணிப்பொறி வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது. உலகளாவிய அறிவை, இருக்கும் இடத்திலேயே அறிந்துகொள்வதற்கும் வலைத்தளம் பெரிதும் உதவுகிறது. உலகத்தமிழர்களை இணைப்பதிலும் வலைத்தளம் பெரும்பங்காற்றுகிறது.

இணையத்தின் பல்வேறு பயன்பாடுகள்

மின்னஞ்சல் (E-mail)
குரல்அஞ்சல்(Voice Mail)
சொல்லாடல் (Chatting)
ஒளிப்படமாநாடுகள் (Video Conference)
மின்வணிகம் (E-commerce)
மின்பணம்.(E-cash)
மின்னிதழ்கள் (E-Journals)
மின்நூலகங்கள் (E-library)
மின்களஞ்சியம் (E-archeive)
மின்அகராதிகள் (E-dictionary)

இந்தப்பணிகள் யாவற்றையும் தமிழில் மேற்கொள்ள முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. மதுரை திட்டத்தின் கீழ்த் தமிழ் மின்களஞ்சியம் துவக்கப்பட்டுள்ளது. தமிழ்இலக்கிய நூல்கள், தமிழ் இதழ்கள், தமிழ்சினிமா, சமையல், அரசு நிறுவனங்கள் பற்றிய எண்ணற்ற வலைத்தளங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அம்பலம்.காம், தமிழோசை.காம், தமிழ்பலகை.காம், தமிழோசை.காம் தமிழர்.காம் போன்ற எண்ணற்ற வலைத்தளங்கள் உள்ளன.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

சென்னையில் 1999இல் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் இணைய மாநாட்டில் அறிவித்த வண்ணம் 2000 ஆண்டில் தமிழக அரசு தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை தொடங்கி வைத்தது.

குறிக்கோள்கள்

1. உலகளாவிய தமிழ்ச் சமூகத்தினருக்குத் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய கல்வி சாதனங்களை உருவாக்கி இணையம் வழியாக அளித்தல்.
2. உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்கள் உருவாக்கும் கல்வியறிவு சாதனங்களைத் தொகுத்து அவற்றைப் பரவலாகத் தமிழ்மக்களுக்கு அளித்தல்.
3. உருவாக்கப்படும் பாடத்திட்டத்தைத் கற்க வாய்ப்பு அளித்தல். கற்போரின் தகுதிக்கு ஏற்ப தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாகச் சான்றிதழ் /பட்டம்/ பட்டயம்வழங்க ஏற்பாடு செய்தல்.

இப்பல்கலைக்கழகம் மூன்று பணித்திட்டங்களைக் கொண்டுள்ளது. அவை,

1. தமிழ்க்கல்வித் திட்டம்
2. மின்நூலகம் அமைத்தல்
3. தமிழ் தகவல் தொழில்நுட்ப மேம்பாடு

பல்கலைக்கழக மின் நூலகத்தில் அகராதிகள் பண்பாட்டு நிகழ்ச்சிகூறுகள் கலைச்சொற்கள் ஆகியன உள்ளன. மேலும் சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரையிலான லட்சத்திற்கும்

மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட 200க்கும் மேற்பட்ட நூல்கள் இதில் உள்ளன. பல்வேறு நாடுகளிலும் இப்பல்கலைக்கழகத்தின் தொடர்புமையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் கல்வித்திட்டம் தொடக்கக்கல்வி, உயர்கல்வி, பிறஇணைய வழிக்கல்வி என மூன்று பிரிவுகளைக் கொண்டதாக விளங்குகிறது.

கல்வித்திட்டம்

தமிழ்கல்வியை அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை தமிழ் இணையப்பல்கலைக்கழகம் வழங்குகிறது. இதன்கல்வித்திட்டம் ஆறுநிலைகளை கொண்டது. அவை,

1. மழலைக்கல்வி
2. சான்றிதழ்கல்வி
3. பட்டயக்கல்வி
4. பட்டப்படிப்பு
5. பட்டமேற்படிப்பு
6. ஆய்வு

இவைதவிர

1. பயணியர்தமிழ் (Tourist Tamil)
2. சிறப்புக்கல்விதிட்டங்கள் (other rearning Materia)

ஆகியனவும் உள்ளன.

வலைப்பின்னல் அடிப்படையிலான கற்றல் அல்லது இணையதளம் வழியே கற்றல் (Web Based (or) Virtual Education)

உலகளாவிய வலைப்பின்னல்

1. இது வரைபடங்களையும் உரைநடை பகுதிகளையும் கொண்டு இணையதளத்தில் உலாவருகின்றன.

2. தனிநபர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகள் தம்மைப் பற்றிய விவரங்களையோ, தாம் செயல்படுத்த விரும்பும் தகவல்கள் குறித்தோ செய்தி பலகையாக ஒரு குறிப்பிட்ட வடிவில் உருவாக்கி, பிரத்தியோக பக்கங்களாக இணையதளத்தில் இடம்பெறச் செய்கின்றன.

3. இணையதள இணைப்பைப் பெற்றுள்ள எந்த ஒரு கணினி மூலமும் வலைப்பின்னலில் உள்ள இத்தகைய ஒவ்வொருவரது தனிப்பட்ட ஆற்றல்களையும் பார்வையிட முடியும்.

4. வலைப்பின்னலை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சூழ்நிலையை உருவாக்கித் தொலைதூரக்கல்வி (Distance Education) மற்றும் கல்வி நிறுவனங்களில் நேரடியாகப் பயில்வோர் என அனைத்து வகை மாணவர்களுக்கும் அளித்திட முடியும்.

வலைப்பின்னல் அடிப்படையில் அமைந்த கற்றலுக்கான கோட்பாடுகள் (Principles of web based learning)

வடிவமைக்கப்படும் கற்றல் அனுபவங்கள் தெளிவான நோக்கத்தை கொண்டிருத்தல் வேண்டும். அவை குறிப்பிட்ட கற்றல் குறிக்கோள்களை நிறைவுசெய்து அவற்றிற்கு உரிய விளை பயன்களை மாணவர்களிடம் ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்படவேண்டும்.

வலைப்பின்னலின் குறிப்பிட்டவை அவர்கள் பார்வையிடுவோர் உற்சாகத்துடன் முழுவதையும் படிக்கத்தெரியும் வண்ணம் அமைந்திருக்க வேண்டும்.

பல்வேறுவிதமான கற்பிக்கும் உத்திகளைப் பயன்படுத்திப் பார்க்கும் விதமாகக் கற்றல் சூழலானது தகவல்களைப் பெற்று அறிவை வளர்த்துக் கொள்ளும் விதமாகவும் பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்வுகாணும் விதமாக அமைக்கப்படல் வேண்டும்.

வழங்கப்படும் கற்றல் அனுபவங்கள் சமுதாயத்தின் தேவை, ஆர்வம் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும். வலைப் பின்னல் தளங்களில் புதிய தகவல்களைச் சேர்ப்பதன் மூலம் எதையும் ஆராய்ந்து அறியும் உண்மையான அறிவைப் பெறும் வழிமுறை ஆகும்.

வலைப்பின்னல் அடிப்படையில் கற்றலின் இயல்புகள் (characteristics of web based learning)

பொருள் படைக்கும் ஆற்றல் உடைய கற்றல் நிலையை வலியுறுத்துகிறது.

1. தகவல் அறிவை ஒருவர் பிறருக்கு வழங்குதல் என்பதிலிருந்து கற்போர் தமக்கு வேண்டியவற்றைச் சேகரித்துக்கொள்ளுதல் என்ற நிலைக்கு மாறுவதற்கு ஊக்கமளிக்கிறது.
2. கற்போர் கற்பிப்பவர் என்னும் இரு சாராருமே பரஸ்பரத்துடன் கற்பித்தலில் ஈடுபடச் செய்கிறது.
3. கற்போரை மையமாகக் கொண்டது.
4. கற்போரிடையே துடிப்பான கற்றலை ஊக்குவிக்கிறது.
5. உயர் சிந்தனை திறன்களான பகுத்தறிதல் தொகுத்தறிதல் மதிப்பிடுதல் போன்றவற்றை வளர்க்கிறது.
6. குழு உறுப்பினர்களிடையே ஒத்துழைப்பையும், புத்துணர்வையும் வளர்கிறது.
7. பல்வேறு நிலைகளில் கருத்தை வலியுறுத்துகிறது.

வலைப்பின்னல் தளங்களில் இடம் பெறும் தகவல்கள் (nature of information provided on the website)

1. ஒவ்வொரு கல்வி நிறுவனமும் தத்தம் வெப்சைட்களில் கீழ்க்கண்டவற்றைப் பாடத்திட்டமாகப் போட்டு வைக்கலாம்.
2. மாணவர்கள் படிக்க வேண்டிய படிப்புகள் மாணவர்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளக்கூடிய பாடங்கள் குறித்த விபரம் பயிற்சி ஒப்படைப்புகள், சோதனைகள் பற்றிய விபரம் ஆசிரியர்கள் நடத்திய பாடக்குறிப்புகள் செயல்விளக்கம், ஒலி, ஒளிக்காட்சிகள் பயில்வதற்கு நூல்களின் விபரம் போன்றவை வலைப்பின்னல்

வழியே கற்பித்தலுக்கான திறன்கள்(skills for web based teaching) இணையதளம் வழியே கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் சிலர் அடிப்படைத் திறன்களைப் பெற்றிருக்க வேண்டும்.

1. Word processing

உரைநடை வடிவில் உள்ள கோப்புகளை (MS-Wordfiles) ஒலி, ஒளி மற்றும் அசைவுகளுடன் கூடிய காட்சிகளின் தொகுப்பாக (power-Points shows) படைத்திடும் திறன்.

2. வலைத்தளபக்கங்கள் வடிவமைத்தல் (Designing personal web - Pages)

உரை வடிவில் உள்ள கோப்புகளை (HTML (HTML- Hyper Text Markup Language) வடிவில் சொந்த வலைத்தளங்களை உருவாக்கும் ஆற்றல் பெற்றிருத்தல்.

3. மின்னஞ்சலைக் கையாளும் திறன் (Handing E-mails)

மின்னஞ்சல் மூலமாகப் பிறரோடு தொடர்பு கொள்ளவும், பிறர் அனுப்பும் தகவல்களை பார்த்துப் பரிசீலிக்கவும் திறன் பெற்றிருத்தல்.

இணையதள வகுப்பறை நுட்பவியல் (அல்லது) நிழல் வகுப்பறைகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் (virtual Classroom Technology)

நிழல் வகுப்பறைகளில் கீழ்க்காணும் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன அவை பின்வருமாறு,

1. இணையதள வகுப்பறைகள் (virtual classroom)
2. ஹைபர் டெக்ஸ்ட் படிப்புகள் (Huper textCourses)
3. காட்சி வழி சார்ந்த படிப்புகள் (Video Based Courses)
4. ஒலி வழி சார்ந்த படிப்புகள் (Audio Based Courses)
5. உயிரோட்டம் உடைய பாடப்புத்தக படிப்புகள் (Animated courses)
6. வலைத்தள அடிப்படையிலான பாடப் புத்தகபடிப்புகள் (web Based text book Courses)
7. ஒத்தமாணவர்கட்கான படிப்புகள் (Peer to peer Courses)
8. செய்தித்தொடர்பும், இடை வினையாற்றலும் (Communication and Interaction)

இணையதள வகுப்பறைகள் (Virtual Classroom)

1. இது இணையதளத்தின் மூலம் இயங்கும் கற்பித்தல் வழிமுறையாகும்.

2. கணினியின் துணைகொண்டு மாணவர்களும் ஆசிரியர்களும் தொலைதூரத்தில் உள்ள கற்றல் சமுதாயத்தோடு தொடர்புகொண்டு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும் கல்வித்தரத்தை முன்னேற்றவும் துணைபுரிகின்றன.

3. அறிவுப் பெருக்கத்தின் காரணமாக எதையும், எவ்வாறேனும் கற்க வேண்டும் என்பதே இணையதள வகுப்பறைகள்.

வலைதளங்கள்-மொழி கற்பித்தல்

வெப்ஸ்டர் அகராதியின்படி (Webster's Dictionary)"சமுதாயம் என்பது பெரியமக்கள் தொகுதியில் இடம் பெற்றிருக்கும் சிறு சமூக அலகாகும்" பொதுவான ஆர்வங்கள் வாழ்வியல் முறைகள் பழக்கவழக்கங்கள் ஒரேமொழியைப் பேசுபவர்களாக ஒன்றுகூடிவாழும் சிறிய சமூக அழகினைச் சமுதாயம் என்கிறோம். மின்னியல் முறையில் தொடர்பு கொண்டு இயங்கும் ஒத்த அவங்களுடைய சமூகக்குழுவினர் மின்னியல் சமுதாயம் என்று அழைக்கப்படுகின்றனர்.

தமிழில் வலைப்பூக்கள்

இணையத்தில் ஆங்கில மொழிக்கு அடுத்ததாக அதிக அளவில் பயன்படுத்தப்படும் மொழி தமிழ் ஆகும். அதுபோலவே அதிக அளவில் வலைப்பூக்களும் தமிழ்மொழியில் உருவாக்கப்பட்டுள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் வலைப்பூக்களின் வருகை குறைவாக இருந்தது. தமிழில் எழுத்துரு பிரச்சினை இருந்ததே இதற்கு காரணமாகும். தமிழ் ஒருங்குறி அமைப்புமுறைக்கு மாறத் தொடங்கியவுடன் தமிழில் வலைப்பூக்களும் அதிகரிக்கத் தொடங்கி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வலைப்பூக்கள் நூற்றுக்கணக்கில் பல்கிப் பெருகின. வலைப்பதிவுகளின் அரங்கம் என்று அழைக்கப்படுகின்ற தமிழ்மணத்தில் (www.tamilmanam.net) ஏறக்குறைய 500 வலைப்பூக்கள் திரட்டப்பட்டுள்ளன. ஆயினும் இவற்றின் எண்ணிக்கையை அறுதியிட்டுக்கூற இயலவில்லை.

தமிழ் வலைப்பூக்கள் மொழி, இலக்கியம், இலக்கணம், சமயம், பண்பாடு உள்ளிட்ட கருத்தோட்டங்கள் தாங்கி வருகின்றன. இவற்றின் வருகையால் தமிழ் ஆய்வுப்பரப்பில் புத்தெழுச்சி தோன்றியுள்ளது. இக்கால ஆய்வாளர்கள் அனைவரும் வலைப்பூக்களை தங்களது ஆய்விற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

திரட்டிகள்

தமிழில் ஒருங்குறியீட்டு முறை பயன்பாட்டுக்கு வரத் தொடங்கியவுடன் இணையத்தில் தமிழ் உலா வெகுவாக நடந்தேறி வருகிறது. இவ்வலைப்பூக்கள் வழியாகப் பெரிதும் நடைபெற்றுவருகிறது. கணக்கிடமுடியாத அளவிற்கு பல்கிப்பெருகி வரும்வலைப்பூக்கள் திரட்டி ஒரே தளத்தில் பார்வை இடுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கமுன் வந்துள்ளனர். இப்பணியைச் சிறப்பாகச் செய்து வரும் வலைப்பூக்களும் அவற்றின் பெயரும் முகவரியும் வருமாறு:

- தமிழ்கணிமைகாம் - www.kanimai.com
- தமிழ்மணம் – www.tamilmanam.net
- தமிழ்வெளி- www.tamilveli.com
- தமிழ்ப்பதிவுகள்- www.tamilblogs.com
- திரட்டி- www.thiratti.com
- தேன்கூடு – www.thenkoodu.com
- டெக்னோரட்டி- technorati.com
- வேர்ட்பிரஸ்- ta.wordpress.com

- மாற்று- www.maatru.net

வலைப்பூக்களின் பட்டியலைத் தொகுத்தளிக்கும் தமிழ்மணம் திரட்டியில் ஏறக்குறைய 4000 வலைப்பூக்கள் காணப்படுகின்றன.

கல்விசார் இணையதளங்கள்

கல்விசார் இணையதளங்களை மூன்று வகையாகப் பகுக்கலாம்.

1. கற்பிப்பவை.
2. நூலகங்கள் பயன்பாடு இன்றைய காலகட்டங்களில் மிக அதிகமாகவே இருக்கின்றது.
3. தகவல்களை வழங்குபவை. கற்பிப்பவை

இணையதளங்களின் மூலம் கல்வி கற்பிக்கும் அரசு நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும் இருப்பது போலச் சில தனியார் நிறுவனங்களும் அமைப்புகளும் கூட இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இக்கற்பிப்பதை ப்பற்றி விரிக்கின் பெருகும்.

நூலகங்கள்

பள்ளிகள் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் வழிக் கற்பித்தல் ஆனாலும் சரி இணையம் வழியாகக் கற்பித்தல் ஆனாலும் சரி இவற்றில் நூலகங்களின் பங்களிப்பு இன்றியமையாததாக இருக்கின்றது. எனவே இணைய நூலகங்களின் (மின்நூலகங்கள்) பயன்பாடும் பங்களிப்பும் மிக அதிகமாகவே இருக்கின்றது. இவைகளைக் கல்விதொடர்பான செய்திகளை வழங்குபவைகளின் வகைப்பாட்டினுள் அடக்கலாம்.

- விக்கிபீடியா
- பல்கலைக்கழக நிதிநல்கைகுழு
- மனிதவளமேம்பாட்டுத்துறை
- தமிழ்நாடு மாநில உயர்கல்விமன்றம்
- தமிழகஅரசு உயர்கல்வித்துறை
- தமிழ்வளர்ச்சித்துறை

தமிழ்விக்கிபீடியா

எந்த ஒன்றைப் பற்றியும் கலைக்களஞ்சியம் அல்லது வாழ்வியல் களஞ்சியத்தைப் பார்த்து தெரிந்துகொள்ளலாம். களஞ்சியங்களைப் போலவே இணையத்தில் விக்கிபீடியாவின் பயன்பாடும் அமைந்துள்ளது. இதனைத் தமிழ் ஆங்கிலம் உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் காண இயலும். தமிழ் விக்கிப்பீடியாவின் இணையமுகவரி: www.ta.wikipedia.org என்பதாகும். தற்பொழுது உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் கொரோனா காய்ச்சல் பற்றிய செய்தியும் இதன்கண் இடம்பெற்றுள்ளது. இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளை அகரவரிசை, துறைவரிசை, புதியன எனும் பிரிவுகளின் வழிகாண முடியும் கட்டற்ற கலைக்களஞ்சியமாகத் திகழும் இதன்கண் செய்திகளை யார் வேண்டுமானாலும் எழுதிச் சேர்க்க முடியும். அமெரிக்காவை மையமாகக்கொண்டு செயல்படும் இது ஒரு லாப நோக்கமற்ற அமைப்பாகும். இது மேலும் பல பன்மொழி கட்டற்ற திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

குறிப்பாகத் தமிழ் விக்சனரி 96,728 சொற்களைத் தன்னகத்தே கொண்டு தமிழ் விளக்கங்களுடன் வளர்கிறது.

தமிழ் வளர்ச்சித்துறை

www.tn.gov.in/department/tamil.html என்னும் இணையமுகவரிக்குச் சென்றால் தமிழ்வளர்ச்சித்துறையின் இணையதள பக்கம் கிடைக்கும். இத்தளம் உயர்கல்வித்துறையின் இணையதள செயல்பாட்டுமுறை அடிப்படையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் தொல்லியல்துறை, இசைக்கல்லூரி, அருங்காட்சியகம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தமிழ் இணையபல்கலைக்கழகம், தமிழ் அரசியல் பல்வேறு துறைகளின் பல்வகை விண்ணப்பப்படிவங்கள் முதல் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இணையத்தின்வழித் தமிழ் கற்றல்கற்பித்தலில் சில சிக்கல்கள்

இங்குக் கற்றல்-கற்பித்தல் இயந்திரத்தினால் இயக்கப்படுவதால் மாணவர்கள் பெறவேண்டிய ஆளுமை வளர்ச்சி, போட்டி, சகமாணவர்களோடு பழகுதல் போன்றவை அடையமுடியாது. உண்மைநிலை, இயக்கநிலை போன்ற கற்றல் நோக்கங்களை அடைய முடியாது. கருணை, பரிவு, பிறருக்குஉதவுதல், திறமையாக அமைத்துச் செயல்படுத்தி மகிழ்ச்சி கொள்ளுதல் போன்ற பண்புகள் இணையத்தின் வழிக் கற்றல் மூலம் மாணவர்களிடம் ஏற்படவாய்ப்புகள் இல்லை, இம்முறைக்கு செலவு அதிகம்.

தீர்வுகள்

ஆசிரியர் பயிற்சி மற்றும் அது தொடர்பான படிப்புகளில் கணினி மற்றும் தொழில் நுட்பங்கள் பற்றிய பாடங்கள் கட்டாயமாக்கப்பட வேண்டும். பாடத்திட்டத்தில் கட்டாயம் ஒரு பாடம் தமிழ்இணையவழிப் பாடமாக அமைக்கப் பரிந்துரை செய்ய வேண்டும். தொழில்நுட்பத்தைப் புரிந்து கொண்டால் மட்டுமே அது எல்லோருக்கும் சாத்தியமாகும். அதற்கான சாத்தியக்கூறுகளை நடைமுறைப்படுத்தினால் அனைவரும் இணையவழிக் கற்றலை விரும்புவர். புதுப்புதுதேடலை விரும்பும் மாணவர்கள் இணையவழி கற்றலையும் விரும்புவர். தடையற்ற இணையவழிச் சேவை, மின்சாரம், கணினி, இன்றைய நவீனகைபேசி இத்துடன் அரசின் மானியமும் தகுந்த பயனாளிகளைச் சென்றடைந்தால் வெற்றி பெறும்.

ஆய்வுப்பயன்/தீர்வு

இணையவழித் தமிழ் கற்றல் - கற்பித்தல் மூலம் இணையத்தில் காணலாகும் புதிய செயலிகளின் வழியாகவும் வலைதளங்களின் வழியாகவும் இணையதளங்களின் வழியாகவும் தகவல்களை மாணவர்கள் அறிந்து கொண்டு தமிழ்கற்றல்-கற்பித்தலின் எளியவழிகளை மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்வதே இக்கட்டுரையின் பயனாகும்.

முடிவுரை

தமிழ் கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் இயல்பாகவே கணினிநுட்பங்கள் பொருத்தமாக விளங்குகின்றன. நிறுவனம் சார், நிறுவனம்சாரா, இயல்புநிலை ஆகிய மூவகைக்கல்விக்கும் அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி படிப்பு வரையிலான ஏழுபடிநிலைகளுக்கும் கணினிசார்ந்த

இணையநுட்பத்தைக் கடைப்பிடித்து, தமிழ் கற்றல்-கற்பித்தலைச் செம்மையாக்கவும் மேம்படுத்தவும் வழிகள் உள்ளன. தமிழ்க்கல்வியாளர்கள், கணினிவல்லுநர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் இணைந்த செயல்பாடுகள் இன்றைய தேவைகளாகக் கருதப்படுகின்றன.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பதற்கேற்பப் பல்துறையில் தோன்றி வரும் மாற்றங்களையும் வளர்ச்சியையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ் போன்ற நெடிய பாரம்பரியத்தைப் பெற்று விளங்கும் மொழியில் சூழ்நிலைகளால் ஏற்படும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் வளர்ச்சிப் போக்கினைக் கணினியின் துணைகொண்டு, இணையம் வழி மேம்படுத்த உலகளாவிய தமிழர்கள் அனைவரும் பாடுபடவேண்டும்.

துணைநின்றவை

- முனைவர் க.துரையரசன், (பதிப்.),(2015)இணையமும் இனிய தமிழும், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் கலைக்கல்லூரி(தன்னாட்சி), கும்பகோணம்-1, தமிழ்நாடு.
- நல்லாசிரியர், டாக்டர்இ.பா.வேணுகோபால், க.சாந்தகுமாரி, (பதிப்.), (2015), தமிழ் கற்பிக்கும் முறைகள், சென்னை, சாரதா பதிப்பகம், சென்னை.
- www.gowrabookfair.in
- பி.இரத்தின சபாபதி, (பதிப்.), (2003), தரமிகு தமிழ்க்கல்வி அம்சாப்பதிப்பகம், கோடம்பாக்கம், சென்னை-24
- ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் (பதிப்.), (2003), கல்வியில் முழுமையான தர மேலாண்மை, ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலய அஞ்சல், கோயம்புத்தூர்-641020
- ஸ்ரீஜி.விபப்ளிக்கேசன்ஸ் (பதிப்.), (2011), கலைத்திட்டமும் கற்பித்தலின் நுட்பங்களும், திருவல்லிக்கேணி, சென்னை-5 gvpublications@yahoo.in
- பேராசிரியர் சு.தண்டபாணி எம்.ஏ.,எம்.எட்., (பதிப்.), (2015), தமிழ் கற்பிக்கும் முறைகள், மதுரை – 11. மீனாப்பதிப்பகம்,
- பி.இரத்தினசபாபதி(பதிப்.), (2007), தமிழகத்தில் செயல்வழி கற்றல் தமிழகக் கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம், சென்னை, வனிதா பதிப்பகம்.
- http://vikaspedia.in/index/
- http://www.webopedia.com
- https://in.yahoo.com/
- http://www.nationalgeographic.com/

****

தமிழ்மொழி இலக்கணத்தில் உடன்பாட்டுவினை மற்றும் எதிர்மறைவினையைக் கற்பிக்க டோராடூன் தொழில்நுட்பத்தின் வாயிலாக ஒரு புத்தாக்கம் An innovation through the technology of 'Doratoon' to teach the tamil grammar

தரிசினி காளிதாசன் | Tharisiniy Kalidasan

Student of Tamil Department, Sultan Idris Educational University, Malaysia
tharisiniykalidasan@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இந்தக் கட்டுரை மேம்பட்ட தொழில்நுட்ப அமைப்பைப் பற்றியது, இது கற்றல் செயல்பாட்டில் குறிப்பாக தமிழ் இலக்கியப் பாடத்தில் பயன்படுத்தப்படலாம். இந்த 21ஆம் நூற்றாண்டில், ஒவ்வொரு மாணவர்களும் குறிப்பாக கல்வியில் ஆக்கப்பூர்வமாக சிந்தித்துச் செயல்பட வேண்டும். அதைத் தவிர, ஆசிரியர்களும் மாணவர்களை ஈர்க்கும் வகையில் ஆக்கப்பூர்வமான யோசனைகளுடன் ஒரு புதிய வழியில் தங்கள் கற்பித்தல் செயல்முறையைக் கொண்டு வர இயலும். மேலும், நிறைய மாணவர்கள் தங்கள் கற்றல் செயல்பாட்டில் மேம்பட்ட தொழில்நுட்ப முறையை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறியாமல் இருக்கின்றனர். ஆக, கற்றல் செயல்பாட்டில் மேம்பட்ட தொழில்நுட்ப அமைப்பை எவ்வாறு பயன்படுத்துவது என்பது இந்தக் கட்டுரையின் நோக்கம். எனவே, இந்த கட்டுரையில் கற்றல் செயல்முறைக்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு புதிய செயலியை மற்றும் அதனுடைய வழிமுறைகளை அறியலாம்.

Abstract

This article is about the advanced technology system that can be used in the learning process, especially in Tamil literature. In this 21st century, every student should act and think creatively especially when it comes to studies. By using the network with a creative mind we can create any app which is suitable for us on our own. Apart from that, teachers also can bring their teaching process in a new way with creative ideas to attract the students. Moreover, there are a lot of students who don't know how to apply the advanced technology system in their learning process. The purpose of this article is how to apply the advanced technology system in the learning process. So, in this article we can learn about a new app that can be used for the learning process and their steps to enter the app.

திறவுச்சொற்கள் (Keyword): தொழில்நுட்பம், கற்றல் செயல்முறை, செயலி, Advanced Technology, Learning Process, Doratoon App

1.0 முன்னுரை

இவ்வுலகத்தினுடைய காலம் மட்டும் அதிகரிக்கவில்லை மாறாக தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது என்றால் அது மிகையாகாது. உணவு, உடை, வசிப்பிடம் இவற்றுள் தொழில்நுட்பமும் தற்போது அனைவருடைய அடிப்படை தேவையாகிவிட்டது. ஒரு மனிதனுடைய பிறப்பு முதல் இறப்பு வரை அறிவியலும் தொழில்நுட்பமும் அவனது நிழல் போல ஒன்றி வருகின்றது. தொழில்நுட்பம் இன்றைய காலத்தில் அதீத வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகத் தான் இப்பொழுது அனைவரும் இன்றைய உலகத்தை, நவீன உலகம் என்று அழைக்கின்றனர். தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மூலம் நன்மையும் உண்டு தீமையும் உண்டு. ஆனால், இவை இரண்டும் பார்க்கையில் மனிதனுடைய அன்றாட வாழ்வில் தொழில்நுட்பம் தீமையைக் காட்டிலும் நன்மை அதிகமாகவே கொடுக்கின்றது எனலாம்.

தொழில்நுட்பம் என்றால் தொழில் + நுட்பம் என்று பிரிக்கப்படுகின்றது. அதாவது ஒரு தொழிலைச் செய்திடும்பொழுது பயன்படுத்தப்படும் நுட்பம் தான் தொழிநுட்பம் ஆகும். அவ்வகையில், நுட்பம் என்றால் ஒன்றை நுணுக்கமாகச் செய்வது என்ற பொருள்படும். ஒவ்வொரு விடயங்களிலும் நுட்பம் உண்டு. தொழில் சார்ந்து பயன்படுத்தும் நுட்பங்கள் அனைத்தும் தொழில்நுட்பம் என்று கூறுவோம். மேலும், இன்றைய நவீன உலகத்தில் தற்பொழுது பல எண்ணிலடங்கா தொழில்கள் உருவாகிவிட்டன. அவ்வகையில் தொழில் என்பது பொருட்கள் மற்றும் சேவைகள் போன்றவற்றின் உள்ளடக்கம் ஆகும். அதாவது ஒரு செயலைச் செய்யும் போது ஒவ்வொரு மனிதனும் அதற்கான சில நுணுக்கங்களைப் பயன்படுத்தி அச்செயலை இலகுவாகச் செய்து முடிப்பதற்கு இந்நுட்பமானது துணையாக நிற்கின்றது.

இன்றைய நவீன உலகத்தில் தொழில்நுட்பம் என்றாலே அறிவியல் தொடர்பானவை என்று அனைவருடைய மனத்திலும் ஆழமாகப் பதிந்துவிட்டது எனலாம். இதற்குக் காரணம் அவ்வளவிற்கு இணையம், கணினி, அறிவியல் குறித்த தகவல்களும் கண்டுபிடிப்புகளும் இந்நவீன உலகத்தில் அதிகரித்த வண்ணமாக உள்ளது. அவ்வகையில், கணினி தொழில்நுட்பம், கைத்தொலைபேசி தொழில்நுட்பம், இணைய தொழில்நுட்பம் போன்ற பல தொழில்நுட்பத்தைக் கூறலாம். அதுமட்டுமின்றி, கட்டுமானத் தொழில்நுட்பம், மருத்துவத் தொழில்நுட்பம் போன்ற பல துறைகளிலும் தொழில்நுட்பம் தாக்கம் அல்லது அதனுடைய நுட்பங்கள் கையாளப்படுகின்றது.

தொடர்ந்து, அவ்வகையில் கல்வித் துறையிலும் தொழிநுட்பத்தின் பயன்பாடு அதிகளவே உள்ளது. நவீன உலகம் உருவாவதற்கு முன்பு கல்வியுடைய அறிவைப் பெறுவதற்குப் பல இடங்களுக்குச் சென்று தேடி பெறக்கூடிய ஒன்றாகத் திகழ்ந்தது எனலாம். ஆனால், இந்நவீன உலகத்தில் கல்வி அனைவரையும் தேடி வருகின்றது. இதற்கு முக்கிய காரணமாகத் திகழ்வது தொழில்நுட்பம்தான். இத்தொழில்நுட்பம் ஒரு நொடிக்குள் உலகத்தையே விரல் நுனிக்குள் கொண்டு வருகின்றது. பள்ளிக்கூடத்தில் வகுப்பறைகள் அனைத்தும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, வகுப்பறையில் கரும்பலகைகள் சென்று மின்திரைகள் உருவாகிவிட்டது. மேலும், மாணவர்களுடைய கையளவு கைப்பேசியிலேயே அனைத்து புத்தகங்களும் அடங்கிவிட்டது. இப்பொழுது மாணவர்கள் அறிவோடு மட்டுமின்றி அறிவியலோடும் வளர்கின்றனர்.

2.0 இலக்கணம் கற்பித்தல்

மலேசியத் தமிழ்மொழிக் கலைத்திட்டமானது தமிழ்மொழி வாயிலாக மாணவர்கள் பிறருடன் தொடர்பு கொள்ளவும் தங்கள் எண்ணங்களை நல்ல மொழியில் வெளிப்படுத்துவதிலும் நோக்கமாகக் கொண்டுள்ளனர். அவ்வகையில் அடிப்படை மொழித் திறன்களான பேச்சு, எழுத்து, வாசிப்பு, கேட்டல் ஆகியவற்றோடு செய்யுள் மற்றும் இலக்கணக் கூறுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். தமிழ்மொழியைப் பிழையற பேசவும் எழுதவும் மாணவர்கள் இலக்கண அறிவைக் கண்டிப்பாகப் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், இன்றைய காலத்தில் மாணவர்களிடையே உள்ள இலக்கண ஆர்வம் நாளடைவில் குறைந்த வண்ணமே உள்ளது. இதனால், பெரும்பான்மையான தமிழ்ப்பள்ளி மாணவர்களிடையே இலக்கணம் மனனப் பாடமாகக் கருதப்பட்டுள்ளது. மாணவர்கள் யாவரும் இலக்கணத்தைப் புரிந்து கொண்டு படிப்பதில்லை மாறாக இலக்கண விதிகளை மனனம் செய்து பயன்படுத்துகின்றனர். இதனால், உயர்நிலைச் சிந்தனை கேள்வியாக இருப்பின் மாணவர்களால் பகுத்தாய்ந்து தீர்வு காண முடிவதில்லை எனலாம். அதுமட்டுமின்றி, சில வேளைகளில் மனனம் செய்த விதிகளை மறந்துவிடுகின்றனர் மாணவர்கள்.

மாணவர்கள் யாவரும் இலக்கணத்தினுடைய அறிவைச் சுமையாகக் கருதாமல் மாணவர்கள் அனைவரும் ஆர்வத்தோடும் துடிப்போடும் தமிழ்மொழியின் மேல் கொண்டுள்ள அன்போடும் இலக்கணத்தை விரும்பி கற்றுப் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய நவீன உலகத்தில் கல்வித் துறையிலும் பல மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. ஆக, இன்றைய கல்வி வளர்ச்சிகு ஏற்ப கற்றல் கற்பித்தலிலும் பல மாற்றங்கள் தேவைப்படுகின்றது. மாணவர்களுடைய ஆர்வத்தை அதிகரிக்க இத்தகையான மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

அனைத்து மொழிகளுக்கும் இலக்கணம் என்பது இன்றியமையாத ஒன்றாகும். அவ்வகையில் தமிழ்மொழிக்கும் இலக்கணம் ஒருவர் தம் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் நிலை மாறாமல் எழுதவும் பயன்படுகின்றது. அதுமட்டுமின்றி, இலக்கியம் கற்பித்தலைக் காட்டிலும் இலக்கணம் கற்பிப்பது சிறிது கடினம் என்று ஆசிரியர்களிடையே தோன்றுகின்ற கருத்தாகும். ஆனால், அக்கருத்து முற்றிலும் ஏற்கமுடியாத ஒன்றாகும். இலக்கணதிற்கு என்று தனி சூத்திரங்கள் உண்டு அதை ஆசிரியர்கள் புரிந்து கொண்டால் இலக்கணம் அனைவருக்கும் எளிதாகும்.

மேலும், பெரும்பான்மையான ஆசிரியர்கள் இலக்கண விதியைக் கூறி மனனம் செய்யும் உத்தியைப் பயன்படுத்துகிறார்கள். இதனால், மனனம் செய்யும் ஆற்றல் கொண்ட திறமையான மாணவர்கள் இலக்கண விதியை மனனம் செய்து விடுகின்றனர் அதோடு விதியைச் சரியாகப் பயன்படுத்தியும் கொள்கிறார்கள். ஆனால், நடுநிலை மற்றும் கடைநிலையில் உள்ள மாணவர்களுக்கு மனனம் செய்வது என்பது கடினமான ஒன்றாகும். ஆக, இத்தகைய மாணவர்களிடையே மனனம் செய்வதில் ஆர்வம் இல்லாததால் அவர்களுக்கு இலக்கணத்தில் மேலும் ஆர்வம் குன்றிவிடுகின்றது. அதோடு, நாளடைவில் மாணவர்களுக்குத் தமிழ்மொழியின் மேல் உள்ள பற்றும் குறைந்துவிடுகிறது.

ஆகவே, 21 - ஆம் நூற்றாண்டில் திறன், ஆக்கச் சிந்தனையும் ஆய்வுச் சிந்தனையும் கொண்ட மாணவர்களை உருவாக்க வேண்டும் என்பது குறிக்கோளாகக் கருதப்படுகின்றது. எனவே, சிந்தனைத் திறனும் எதிர்காலச் சவால்களை எதிர்கொண்டு தீர்வு காணும் மாணவர்களையும் உருவாக்கப் புத்தாக்கக் கற்றல் கற்பித்தல் அவசியமாகக் கருதப்படுகின்றது. மாணவர்களுக்கு

இலக்கண அறிவைக் கற்றுக் கொடுப்பதோடு சிந்தனைத் திறன் கொண்டவர்களாகவும் உருவாக்க வேண்டும். எனவே, புத்தாக்க முறையைக் கொண்டு இலக்கணத்தைக் கற்றுக் கொடுத்தால் மாணவர்கள் மனமகிழ் சூழலில் இலக்கணத்தை ஆர்வத்தோடு கற்பார்கள். இந்த அணுகுமுறையின் படிநிலைகள் சிந்திக்கத்தக்க மாணவர்களையும் உருவாக்கவல்லது எனலாம். ஆக, இலக்கணக் கற்றல் கற்பித்தலில் புத்தாக்கம் அவசியமாகத் திகழ்கிறது.

3.0 '*Doratoon*' என்ற செயலியின் அறிமுகமும் பயன்பாடும்

'*Doratoon*' என்பது காணொலி தயாரிக்கும் செயலி ஆகும். இந்தச் செயலி மற்ற காணொலி தயாரிக்கும் செயலி போல் அல்ல. இதற்குக் காரணம் இந்தச் செயலியில் அனிமேஷன் (Animation) கொண்டு காணொலியைத் தயாரிக்கலாம். உலகத்தில் அனைவரும் அனிமேஷன் (Animation) என்பதற்குச் சிறந்த செயலி என்றால் அது '*Doratoon* ' என்ற செயலி மட்டுமே என்று கூறுகின்றனர். மேலும், இந்தச் செயலியில் மிகச் சுலபமாகவும் விரைவாகவும் காணொலியைத் தயாரிக்கலாம். இந்தச் செயலிக்கென்று ஒரு தனிச் சின்னமும் உள்ளது.

'*Doratoon*' என்ற செயலியின் சின்னம்

மேலும், '*Doratoon* ' என்ற செயலியில் பல உட்கூறுகள் அடங்கியுள்ளது அவை டெம்ளேட் (Template), கதைப்பாத்திரங்கள் (Animated Characters), பின்னணி இசை (Background Music), சொற்கள் (Animated Words), பிரோபஸ் (Props), பின்னணி (Background), காட்சி (Scenes) போன்ற கூறுகள் அமைந்துள்ளன. இந்த அனைத்து கூறுகளையும் நமக்கு ஏற்றார் போல் மாற்றிக் கொள்ளலாம். அதுமட்டுமின்றி, இச்செயலியுடைய உட்கூறுகளை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்றால் இச்செயலியைப் பணம் கொடுத்து வாங்க வேண்டும். இருந்தபோதிலும், இச்செயலியைப் பணம் கொடுத்து வாங்காமல் இலவசமாகக் கூட பயன்படுத்தலாம் ஆனால் ஒவ்வொரு உட்கூறுகளிலும் சிலவற்றையே இலவசமாகப் பயன்படுத்த அனுமதிக் கொடுத்துள்ளனர்.

டெம்ளேட் (Template)





கதைப்பாத்திரங்கள் (Animated Characters)

பின்னணி இசை (Background Music)





சொற்கள் (Animated Words)

பிரோபஸ் (Props)





பின்னணி (Background)

காட்சி (Scenes)



தொடர்ந்து, இந்த செயலி பல நன்மைகளைக் கொண்டுள்ளதால் இச்செயலியின் சேவையைப் பல நிறுவனங்கள் பயன்படுத்தி பயனடைகின்றனர். அவ்வகையில் இச்செயலியைப் பயன்படுத்தும் நிறுவனங்கள்,

இந்த அனைத்து நிறுவனங்களும் இச்செயலியைப் பயன்படுத்துவதற்கான நோக்கம் என்னவென்றால் அவர்கள் தங்களுடைய நிறுவனங்களின் அறிமுகத்தைப் பல்வேறு அனிமேஷன் (Animation) பயன்படுத்தி பிறருக்கு விளம்பரம் செய்கின்றனர். இதனால் பலர் இக்காணொலி மூலம் ஈர்க்கப்படுவதால் அந்த நிறுவனங்களை மக்கள் நாடுகின்றனர்.

4.0 *'Doratoon'* என்ற செயலியின் செயல்முறையை விளக்குதல்

முதலாவதாக, *'Doratoon'* செயலியைக் கட்டணம் ஏதும் செலுத்தாமலேயே பதிவுப் பெறலாம். அதாவது, இச்செயலியைப் பயன்படுத்த வேண்டுமென்றால் நம்முடைய சுய மின்னஞ்சல் முகவரியைக் கொண்டு பதிவுசெய்தல் (Sign Up) போதுமானதாகும். அதன் பிறகு, இலவசமாகவே அச்செயலியைப் பயன்படுத்த இயலும்.

தொடர்ந்து, நாம் *'Doratoon'* செயலியில் சுயமாக ஒரு காணொலியும் தயாரிக்கலாம் அல்லது *'Doratoon'* செயலியிலேயே கொடுக்கப்பட்டுள்ள காட்சியைப் பயன்படுத்தியும் தயாரிக்கலாம்.

- சுயமாகக் காணொலி தயாரிக்க வேண்டுமென்றால் கீழே கொடுக்கப்பட்டுள்ள புகைப்படத்தைப் போல *'Doratoon'* செயலியில் அமைந்திருக்கும்.



இதில் நாமே நாம் விரும்பிய படத்தைக் காணொலியின் பின்னணியாக வைத்துக் கொள்ளலாம். ஆக, சுயமாகக் காணொலி தயாரித்தால் நாம் நினைக்கின்ற உள்ளடக்கத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளலாம்.

- *'Doratoon'* செயலியிலேயே உள்ள காட்சியைப் பயன்படுத்த வேண்டுமென்றால் கீழே கொடுக்கப்பட்டுள்ள புகைப்படத்தைப் போல *'Doratoon'* செயலியில் அமைந்திருக்கும்.



இதில் நம் விருப்பத்திற்கு ஏற்ப உள்ளடக்கதை மாற்றிக் கொள்ள இயலாது. அங்கே கொடுக்கப்பட்டுள்ள உள்ளடக்கதிலேயே தொகுக்க வேண்டும். மேலும், இதில் நாம்

விரைவாகக் காணொலி தயாரிக்க இயலும் ஏனென்றால் ஏற்கனவே காட்சிகள் இருப்பதால் வேலைப் பழு இங்கு சற்று குறைந்த அளவிலேயே இருக்கும்.

மேலும், நம்முடைய உள்ளடக்கதிற்கு ஏற்றவாறு பின்னணி படத்தையும் அதோடு அந்த உள்ளடக்கதிற்கு ஏற்ற கதைமாந்தர்களையும் நாமே தேர்வு செய்து காணொலியில் பதிவிடலாம். அதுமட்டுமின்றி, ஒவ்வொரு கதைமாந்தர்களுக்கும் ஒவ்வொரு வகையான பாவனைகளும் உண்டு. எடுத்துக்கட்டாக, கோபம், மகிழ்ச்சி, ஆச்சிரியம், வணக்கம் கூறுவது போன்ற பாவனைகள் ஆகும். மேலும், இந்த கதைமாந்தார்கள் யாவும் (Animated Characters) ஆகும். மேலும், இச்செயலியில் மிருகங்களையும் அனிமேடெட் (Animated) செய்துள்ளனர் உதாரணதிற்கு ஓடுவது, குதிப்பது, நடப்பது போல அனிமேடெட் (Animated) செய்துள்ளனர். கீழே கொடுக்கப்பட்டுள்ள புகைப்படத்தைப் போல *'Doratoon'* செயலியில் அமைந்திருக்கும்.



ஆதலால், காணொலி தயாரித்த பின் அக்காணொலியைப் பார்க்கும் பொழுது அத்துணைக் கதைப்பாத்திரங்களும் நிஜமாகேவே இருப்பது போல் அமைந்திருக்கும். ஆக, இதுதான் இந்த *'Doratoon'* செயலியுடைய முக்கிய அம்சமாகும்.



அதனைத் தொடர்ந்து, *'Doratoon'* செயலியில் உள்ள படங்களைத் தவிர்த்து நாம் ஏற்கனவே செய்து வைத்திருந்த படங்களைக் கூட இச்செயலியில் சேர்க்க முடியும் அதாவது (Import) என்ற முறையைப் பயன்படுத்தி. அதோடு, அப்படத்தை நமக்கு ஏற்றவாறு பெரியதாகவோ சிறியதாகவோ மாற்றிக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, கீழே கொடுக்கப்பட்டுள்ள புகைப்படத்தைப் போல்.



அடுத்ததாக, நாம் அந்த செயலியில் தட்டச்சு செய்த சொற்கள் காணொலியாக உருவாகிய பிறகு நிஜமாகவே நாம் அக்காணொலியில் எழுதுவது போல் அனிமேடெட் (Animated) செய்யப்பட்டுள்ளது. இது இந்த *'Doratoon'* செயலியின் காணொலியின் அழகு மெருகூட்டுகிறது என்று கூறவேண்டும். அவ்வகையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள புகைப்படத்தைப் போல் *'Doratoon'* செயலியில் அமைந்திருக்கும்.

மேலும், *'Doratoon'* செயலியில் ஒவ்வொரு காட்சியிலும் அதிகபட்சம் 20 வினாடிகளுக்கு மட்டுமே காணொலியைத் தயாரிக்க முடியும். அதுமட்டுமின்றி, ஒவ்வொரு காட்சிக்கும் பின்னணி இசையும் பின்னணி குரல் பதிவும் கொடுக்க இயலும்.





இறுதியாக, *'Doratoon'* செயலியில் எத்தனைக் காட்சிகள் வேண்டுமென்றாலும் தயாரிக்க இயலும். மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்தும் ஒவ்வொரு காட்சிக்கும் செய்த பிறகு இந்த அனைத்துக் காட்சிகளையும் ஒரே காணொலியாக மாற்ற இயலும் அதுதான் (Export) என்ற முறையில். இந்த (Export) என்ற முறையைப் பயன்படுத்தி அந்த முழு காணொலியை நம்முடைய கணினியில் பதிவு செய்து கொள்ளலாம். அதுமட்டுமின்றி, முழு காணொலியைப் பதிவு செய்த பிறகு அக்காணொலியினுடைய இணைப்பைக் கூட பிறருக்குப் பகிர்ந்து கொள்ளலாம்.







ஆக, (Export) என்ற முறையைப் பயன்படுத்திய பிறகு அக்காணொலியானது *'Doratoon'* என்ற செயலியில் பதிவு செய்துவிடும். அதுமட்டுமின்றி, நாம் தயாரிக்கும் ஒவ்வொரு காட்சியும் தானாகவே (Draft) என்ற தளத்தில் பதிவு செய்யப்படும். அதோடு, பதிவு செய்யப்பட்ட காணொலி அச்செயலியிலிருந்து என்றும் அழியாமல் இருப்பதோடு எப்பொழுதும் அக்காணொலியை நம்மால் காணவும் இயலும்.

5.0 முடிவுரை

ஆகவே, ஆசிரியர்கள் ஒரு புத்தாக்க செயலியைக் கொண்டு இலக்கணத்தை மாணவர்களுக்குக் கற்பித்துக் கொடுக்க வேண்டும். அவ்வகையில் இந்த *'Doratoon'* என்ற செயலியை மாணவர்களுக்குப் பயன்படுத்தி இலக்கணத்தைக் கற்பித்துக் கொடுத்தால் நிச்சயமாக அப்பாடத்தைக் கூர்ந்து கவனிப்பர். அதோடு, இந்த செயலி மூலம் மாணவர்களுக்கு இலக்கணத்தில் மேல் உள்ள ஆர்வம் அதிகரிக்கப்படும். இந்த செயலியில் பயன்படுத்தப்பட்டுள்ள அனிமேஷன் (Animation), புகைப்படங்கள், வர்ணங்கள் போன்ற கூறுகள் இந்த செயலியில் அமைந்துள்ளதால் இச்செயலி மாணவர்களை மிக வெகுவாக கவர்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. அதுமட்டுமின்றி, மாணவர்களிடையே அதிகமாக பிடிக்கப்பட்டுள்ள செயலி என்றால் அது இதுவே ஆகும். ஆக, இந்த செயலி மூலம் மாணவர்கள் மட்டும் அல்ல ஆசிரியர்களும் பயனடைவார்கள்.

6.0 துணைநின்றவை

- சீனி நைனா முகம்மது, செ. (2015). நல்ல தமிழ் இலக்கணம். பினாங்கு, உங்கள் குரல் எண்டர்பிரைசு.
- கணபதி. வி. (2005). தமிழ் ஐவகைப் பாடங்களும் திறன் அடிப்படையில் கற்பித்தலும். சென்னை. சாந்தா பப்ளிஷர்ஸ்.
- Ponniah, K., Thamburaj, K. P., & Samuvell, S. J. I. (2017). Language attitude among Tamil language teachers. *International Journal of Advanced and Applied Sciences*, *4*(6), 142-147.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2016). Hierarchical grammatical tagging for tinai (landscape) of cankam Tamil literature. *Indian Journal of Science and Technology*, *9*(48).
- Thamburaj, K. P., & Rengganathan, V. (2015). A Critical Study of SPM Tamil Literature Exam Paper. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *5*, 13-24.
- Thamburaj, K. P., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [A study on modern and traditional writing skill]. *Muallim Journal of Social Sciences and Humanities*, 141-146.
- Thamburaj, K. P. (2015). Promoting scientific ideas through the future studies in Tamil language teaching. *Procedia-Social and Behavioral Sciences*, *174*, 2084-2089.
- Thamburaj, K. P., Arumugum, L., & Samuel, S. J. (2015, August). An analysis on keyboard writing skills in online learning. In *2015 International Symposium on Technology Management and Emerging Technologies (ISTMET)* (pp. 373-377). IEEE.
- Thamburaj, K. P. (2021). An Critical Analysis of Speech Recognition of Tamil and Malay Language Through Artificial Neural Network. *Turkish Journal of Computer and Mathematics Education (TURCOMAT)*, *12*(9), 1305-1317.
- Thamburaj, K. P., & Shakunthala, R. (2016). Standardization of question items to test tamil case markers–a study. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *6*, 9-16.

- Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K. P. (2021). Traditional teaching method-concept of moral education and pedagogy in Aathicuudi. *Muallim Journal of Social Sciences and Humanities*, 176-182.
- Thamburaj, K. P. (2021). E-Teaching in Teacher Education—A Conceptual Framework of Sultan Idris Education University. *Sino-US English Teaching*, *18*(5), 107-111.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2020). THE USE OF MOBILE-ASSISTED LANGUAGE LEARNING IN TEACHING AND LEARNING TAMIL GRAMMAR. *PalArch's Journal of Archaeology of Egypt/Egyptology*, *17*(10), 843-849.
- Thamburaj, K. P., Sivanadhan, I., & Kumar, M. (2021). IMPROVING FORM 4 STUDENT'S READING COMPREHENSION SKILLS IN TAMIL LANGUAGE BY USING SQ3R METHOD. *Psychology and Education Journal*, *58*(2), 2291-2295.
- Thamburaj, Kingston Pal. "A Process of Developing an ASR System for Malay and Tamil Languages." *Design Engineering* (2021): 731-741.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2015). வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி (Reframing Valluvar's claim on Friendship). *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, *2*(1), 7-13.

****

குற்றியலுகரம் கற்பிக்க கேன்வா பயன்பாட்டினிலுள்ள காமிக் ஸ்டிரிப் மூலம் ஒரு புத்தாக்கம் An Innovation through the Comic Strip on the Canva App to Teach *Kutriyalugaram*

கவிநித்யா ஸ்ரீ ஞானசுந்தரம் | Kavinithya Sri Ghanasundaram

Student Of Tamil Department, Sultan Idris Educational University, Malaysia
gkavinithyasri@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொழில்நுட்பம் மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. காரணம் இது பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் பல வகையில் நன்மைகளை வழங்கியுள்ளது. தொழில்நுட்பப் பயன்பாட்டின் மூலம் மாணவர்களுக்கு எளிதான முறையில் கற்றல் கற்பித்தலை ஒருவரால் நடத்த இயலும். அதன் அடிப்படையில், தமிழ் மொழி இலக்கணம் கற்பித்தலில் தொழில்நுட்பப் பயன்பாடுகளுள் ஒன்றான கேன்வா (canva) பயன்பாட்டிலுள்ள காமிக் ஸ்டிரிப் (comic strip) மூலம் புத்தாக்கம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. கேன்வா பயன்பாடு என்பது கிராஃபிக் வடிவமைப்புகளை (graphic designs) உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்ட தளமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் மொழி இலக்கணம் என்னவென்றால் குற்றியலுகரம் ஆகும். இடைநிலைப்பள்ளி மாணவர்கள் குற்றியலுகரத்தைக் கற்பதில் சிரமப்படுவதால், அவர்களுக்குப் புரியும்படி எளிமையான முறையில் கேலிச்சித்திரம் ஒன்று குற்றியலுகரத்தைப் பற்றி கற்றுக் கொடுப்பது போல செய்யப்பட்டுள்ளது. புது வகையில் மாணவர்களுக்கு இலக்கணங்கள் கற்றுக் கொடுப்பதன் மூலம் மாணவர்களே சுயமாகவும் ஆர்மாகவும் படிப்பர் என்று நம்பப்பட்டுள்ளது. ஆக, கேன்வா பயன்பாட்டிலுள்ள காமிக் ஸ்டிரிப் மூலம் கற்றுக் கொடுக்கப்பட்ட குற்றியலுகரம் அனைத்து மாணவர்களுக்கும் படிப்பதற்கு சுலபமாக இருக்கும் என்பது நம்பிக்கையாகும்.

Abstract

Technology plays a significant role in the daily lives of human beings because it is providing benefits to adults and children in many ways. Through the use of technology, one can easily carry out the teaching and learning process to students. Based on this, one of the technology applications 'Canva' has been innovated for Tamil Language grammar teaching by the comic strip in that application. The Canva application is a platform for creating graphic designs. The selected Tamil language grammar is *kutriyalugaram*. Middle school students have difficulty learning kutriyalugaram. So, a caricature is made to teach them about *kutriyalugaram* in a way that is easy for them to understand. It is believed that by teaching grammar to the students in a new way, the students will learn on their own and enthusiastically. So, it is hoped that the *kutriyalugaram* taught through the comic strip in the Canva application will be easy to learn by all students.

திறவுச்சொற்கள் (Keywords): கேன்வா பயன்பாடு, காமிக் ஸ்டிரிப், குற்றியலுகரம் கற்பித்தல், Canva application, comic strip, teaching *kutriyalugaram.*

முன்னுரை

தொழில்நுட்பம் என்பது மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது எனலாம். தொழில்நுட்பம் இல்லாத வாழ்வு நம்முடைய முன்னோர்களுக்கு சுலபமாக இருந்திருந்தாலும் இக்கால தலைமுறையினருக்குக் கற்பனை செய்து பார்க்க முடியாத ஒன்றாகும். இத்தொழில்நுட்பக் காலத்தில், ஒவ்வொரு நாளிலும் அல்லது மாதத்திலும் புதிய மென்பொருள்களும் கேஜெட்களும் (gadget) சந்தைக்குக் கொண்டு வரப்படுகின்றன. மேலும், தொழில்நுட்பத்தினால் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் எளிதாக்கப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி கல்வித்துறைக்கு அதிகளவில் பங்களிப்பதிலும் தவறுவதில்லை. எடுத்துக்காட்டாகப் பார்த்தோமானால், இக்காலக் கட்டத்தில் அதிகமான தொழிநுட்பப் பயன்பாடுகள் உருவாக்கப்பட்டு மாணவர்களுக்குப் பல வகையில் நன்மைகளை வழங்கி வருகிறது. இதுபோன்ற பயன்பாடுகள் மாணவர்களுக்குப் பாடம் கற்பிப்பதற்கும், அறிவை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது. இதனால், ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களில் பாடம் போதிக்க இயலாவிட்டாலும், அன்றைய பாடத்தைத் தொழில்நுட்பப் பயன்பாடுகளின் மூலம் எளிதான முறையில் கற்பிக்க இயலும்.

தமிழ்மொழி என்று குறிப்பாகப் பார்க்கும்பொழுது தமிழில் இலக்கியமும் இலக்கணமும் உள்ளது. இவற்றையும் இந்தத் தொழிநுட்பப் பயன்பாட்டின் மூலம் மாணவர்களுக்கு எளிதாகப் புரியும்படி கற்பிக்க இயலும். ஆக, தமிழ் மொழி இலக்கணம் கற்பித்தலில் தொழில்நுட்பப் பயன்பாடுகளுள் ஒன்றான கேன்வா (canva) பயன்பாட்டிலுள்ள காமிக் ஸ்டிரிப் (comic) மூலம் புத்தாக்கம் ஒன்றை செய்துள்ளேன்.

கேன்வா பயன்பாடு (Canva application)

கேன்வா பயன்பாடு என்பது கிராஃபிக் வடிவமைப்புகளை (graphic designs) உருவாக்குவதற்காக உருவாக்கப்பட்ட தளமாகும். இது பல விளக்கக்காட்சிகள் (presentations), சுவரொட்டிகள் (posters), ஆவணங்கள் (documents) மற்றும் இன்னும் பலவற்றை உருவாக்கப் பயன்படுகிறது.

இந்தக் கேன்வா பயன்பாடு உலகமெங்கிலும் உள்ள மக்களால் பயன்படுத்தப்படுகிறது. நாம் ஒரு வடிவமைப்பு நிபுணராக (graphic designer) இல்லாவிட்டாலும் நம்மால் சிறந்த வடிவமைப்புகளை எளிமையாகச் செய்ய இயலும். இதனைப் பயன்படுத்த நல்ல இணைய இணைப்பு வேண்டும். அதுமட்டுமல்லாமல், இந்தப் பயன்பாட்டுத் தளத்தைக் கணினி, தொலைபேசி, டேப்லெட் (tablet) போன்ற எந்தவொரு சாதனத்திலும் இலவசமாகப் பயன்படுத்த இயலும் ஆனால் கூடுதல் செயல்பாடுகள் வேண்டுமென்று நினைப்பவர்கள் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். மேலும், சில தயாரிப்புகளை அச்சிட்டு பெறுவதற்கும் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். பிறகு, இந்தக் கேன்வா பயன்பாட்டில் இலவசமாக வடிவமைத்த எல்லாவற்றையும் நாம் இறுதியில் பதிவிறக்கம் (download) செய்து வைத்துக்கொள்ளலாம். கீழ்க்காணும் புகைப்படம் கணினியின் வழிப் பயன்படுத்தப்படும் கேன்வா பயன்பாடாகும்.



கேன்வா பயன்பாட்டின் அம்சங்கள் (Canva applications features)

கேன்வா பயன்பாட்டில் நாம் நினைத்துப் பார்க்க முடியாத பல அம்சங்கள் உள்ளன. முதலாவது, உரை அனிமேஷன் (text animations) ஆகும். நாம் உருவாக்கும் வடிவமைப்பில் சொற்களைத் தட்டச்சு செய்யலாம். இதற்கு, டைனமிக் உரை அனிமேஷன்களைப் பயன்படுத்தி நம்முடைய வடிவமைப்புகளில் உள்ள சொற்களுக்கு அற்புதமான இயக்கங்களைப் பயன்படுத்தி அழகுப்படுத்துவதால் இவை நம்முடைய திரையில் பாப் (pop), ஸ்லைடு (slide) ஆக செயல்படுவதைக் காணலாம்.

பிறகு, அணிகள் (teams) அதாவது ஒன்றாக சிறப்பாக வடிவமைக்க இயலுவதும் இதனுடைய அம்சம் ஆகும். விளக்கக்காட்சிகள் முதல் பலவற்றுக்கு நம்மால் ஒரே நேரத்தில் வேறொருவருடன் இணைந்து வேறு வேறு சாதனத்திலிருந்து வடிவமைக்க இயலும். நாம் உருவாக்கும் வடிவமைப்புடைய இணைப்பை (link) மற்றொருவருக்கோ அல்லது குழுவுக்கோ பகிர்வதன் மூலம் அவர்களும் நம்முடன் இணைந்து செயல்பட முடியும்.

இதன் பின், இமேஜ் க்ராப்பர் (image cropper) அம்சம் மூலம் நம்மால் நம்முடைய படங்களை டிரிம் செய்ய இயலும். இந்த பயன்பாட்டில் உள்ள பயிர் கருவியின் (cropping tool) மூலம் நம்முடைய புகைப்படங்களை எளிய வழியில் வெட்ட (crop) இயலும். அதுமட்டுமல்லாமல், நம்முடைய புகைப்படங்களை அற்புதமாக்க புகைப்பட விளைவுகளையும் (photo effects)

சேர்க்கலாம். இதிலுள்ள ஏராளமான புகைப்பட வடிப்பான்களைக் (photo filters) கொண்டு நம்முடைய புகைப்படங்களை அழகுப்படுத்த முடியும்.

பிறகு, இந்தப் பயன்பாட்டில் வடிவமைப்பு மற்றும் புகைப்பட கட்டங்களும் (design and photo grids) உள்ளன. தளவமைப்பு (layout) பலகத்தைக் கிளிக் செய்து, இதில் உள்ள பல கட்ட தளவமைப்புகளில் (grid layouts) நமக்குப் பிடித்த ஒன்றைத் தேர்வு செய்து, அதனை இழுத்து (drag) நம்முடைய வடிவமைப்பில் போடலாம் (drop). இதன் மூலம், நாம் நம்முடைய பல படங்களை இதில் இணைக்கலாம்.

அதுமட்டுமின்றி, நம்முடைய புகைப்படங்களுக்கு நமக்குப் பிடித்த பிரேம்களையும் (frames) சேர்த்துக் கொள்ளலாம். அனைத்துப் புகைப்படங்களுக்கும் பொருத்தமான பிரேம் தேவை. ஆக, இந்தக் கேன்வா பயன்பாட்டில் அனைவருக்குமே எண்ணிக்கையில்லாத பிரேம்கள் வியக்கத்தக்க வடிவிலும் பாணியிலும் உள்ளன. இதனை நாம் தேர்வு செய்து நம்முடைய புகைப்படங்களுடன் இணைத்துக் கொள்ளலாம்.

இந்தக் கேன்வா பயன்பாட்டில் பல வடிவங்களை ஒரே தளத்தில் உருவாக்க முடியும். இதில் விளக்கப்பட சுவரொட்டி (infographic poster), வால்பேப்பர் (wallpaper), புத்தக உறை (book cover), மன வரைபடம் (mind map), இணையதளம் (website), சுவரொட்டி (poster), வீடியோ (video), நாட்காட்டி (calendar), அறிக்கை (report), பணித்தாள் (worksheet), காமிக் துண்டு (comic strip), தற்குறிப்பு (resume), வகுப்பு அட்டவணை (class schedule), வணிக திட்டம் (business proposal), விலைப்பட்டியல் (invoice), ஃப்ளையர் (flyer), புத்தகக்குறி (bookmark) போன்ற இன்னும் பலவற்றை உருவாக்க இயலும்.

இதுபோல இன்னும் பல அம்சங்கள் இந்தக் கேன்வா பயன்பாட்டில் உள்ளது. இவையனைத்தையும் பயன்படுத்தி பயன் பெறுங்கள்.

கேன்வா பயன்பாட்டைப் பயன்படுத்தும் முறை

முதலில் இந்தப் பயன்பாட்டின் தளத்திற்குச் செல்ல https://www.canva.com/ என்ற இணைப்பை கூகுளில் தட்டச்சு செய்ய வேண்டும் அல்லது இந்தப் பயன்பாட்டை நவீன தொலைபேசியிலோ டேப்லெட்டிலோ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பிறகு, அதனுள் நாம் பதிவு பெற்றுக் கொள்ள 'சைன் அப்' (sign up) என்பதனைக் கிளிக் செய்ய வேண்டும்.



அதன் பின், நாம் நம்முடைய கூகுள் மூலமாகவோ முகநூல் மூலமாகவோ பதிவு பெற்றுக் கொள்ளலாம். இல்லையெனில் நாம் கேன்வா பயன்பாட்டிற்கென புதிய மின்னஞ்சல் ஒன்றைத் திறந்து பதிவு செய்து கொள்ளலாம். இனி, நாம் இந்த கேன்வா பயன்பாட்டில் உள்ள அம்சங்களையும் இலவசமாகப் பயன்படுத்தி பல வடிவமைப்புகளை உருவாக்கிக் கொள்ளலாம்.



பிறகு, 'தெம்ப்லெட்ஸ்' (templates) என்பதனைத் தெர்வு செய்யும்பொழுது அது நமக்கு சுவரொட்டி, வீடியோ போன்ற பல தேர்வுகளைக் கொடுக்கும். நாம் அந்நேரத்தில் எதனை உருவாக்க வந்திருந்தோமோ, அதனைத் தேர்வுசெய்து உருவாக்க ஆரம்பிக்கலாம்.



எடுத்துக்காட்டிற்காக சுவரொட்டியைக் கிளிக் செய்தால் கீழ்க்காண்பது போலவே நமக்கு பல வடிவமைப்புத் தேர்வுகள் கொடுக்கப்படும். நாம் நமக்கு பிடித்தவற்றைத் தெரிவு செய்து கொள்ளலாம்.



நமக்கு பிடித்த சுவரொட்டி வடிவமைப்பைத் தேர்ந்தெடுத்த பிறகு, அதனை நமக்கு பிடித்த மாதிரி மாற்றிக் கொள்ளலாம். இடது பக்கத்தில் காணப்படும் 'தெம்ப்லெட்ஸ்' (templates) என்பவற்றை தெரிவு செய்தால், இதுபோல வேறு சுவரொட்டி வடிவமைப்புகளைக் காணலாம். பிறகு, 'எலிமென்ட்ஸ்' (elements) தெரிவு செய்வதன் வழி வடிவங்கள் (shapes), விளக்கப்படங்கள் (charts), பிரேம்கள் (frames), கட்டங்கள் (grids), புகைப்படம் (images), வீடியோ (video), ஆடியோ (audio) போன்றவையெல்லாம் இருக்கும். அதையும் நாம் தெரிவு செய்து நம்முடைய சுவரொட்டியில் இணைத்துக் கொள்ளலாம். பிறகு, 'அப்லோட்' (upload) என்பதனைக் கிளிக் செய்தால் நம்முடைய புகைப்படங்களையோ வீடியோக்களையோ ஆடியோக்களையோ பதிவேற்றம் செய்து சுவரொட்டியில் இணைக்கலாம். 'தெக்ஸ்ட்' (text) என்பதனைத் தெரிவு செய்தால் தலைப்பு (heading), துணை தலைப்பு (subheading), உடல் உரை (body text) போன்றவைகளை இணைக்கலாம். வலது பக்கத்தில் இருக்கும் 'ஷேர்' (share) என்பதனைத் தெரிவு செய்தால் நம்மால் இந்த வடிவமைப்பின் இணைப்பை மற்றவர்களுக்குக் கொடுத்து நம்முடன் இணைந்து உருவாக்கவும் அல்லது பார்க்கவும் வைக்கலாம். இறுதியாக, 'ஷேர்' பக்கத்திலிருக்கும் கீழ்நோக்கியிருக்கும் அம்பைக் கிளிக் செய்து இந்த வடிவமைப்பைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.



கேன்வா பயன்பாட்டின் மூலம் இலக்கணம் கற்பித்தல்

பல வடிவமைப்புகளைக் கொண்டிருக்கும் கேன்வா பயன்பாட்டின் மூலம் நம்மால் மாணவர்களுக்கு இலக்கணம் கற்பிக்க இயலும். இதன் மூலம், மாணவர்களும் ஆர்வமாக படிப்பர். நான் இந்த கேன்வா பயன்பாட்டில் இருக்கும் 'காமிக் ஸ்டிரிப்' (comic strip) கொண்டு குற்றியலுகரம் கற்று கொடுக்கவுள்ளேன். பொதுவாகவே, பல மாணவர்கள் இடைநிலைப்பள்ளிகளில் குற்றியலுகரத்தைக் கற்க சிரமப்படுவதைப் பார்த்துள்ளேன். ஆக, அவர்களுக்கு புரியும்படி எளிமையான முறையில் ஒரு கேலிச்சித்திரம், மாணவர்களுக்குக் குற்றியலுகரம் கற்றுக் கொடுப்பது போல செய்துள்ளேன். ஆக, இந்தக் காமிக் ஸ்டிரிப் மூலம் எப்படி குற்றியலுகரம் செய்தேன் என்பதனை இனி பார்க்கலாம்.

கேன்வா பயன்பாட்டிலுள்ள காமிக் ஸ்டிரிப் மூலம் குற்றியலுகரம் கற்பித்தல் செயல்முறை

முன்பு கூறியது போல பதிவு செய்த பிறகு, 'தெம்ப்லெட்ஸ்'-இல் 'காமிக் ஸ்டிரிப்'-ஐ தெரிவு செய்ய வேண்டும். கொடுக்கப்பட்ட பல காமிக் ஸ்டிரிப்பில் மாணவர்களைக் கவரும் வகையிலிருந்த கீழுள்ள கேலிச்சித்திரத்தைத் தெரிவு செய்திருந்தேன்.



ஒரு கேலிச்சித்திரத்தைக் கொண்டு மட்டும் இந்த இலக்கணத்தைக் கற்றுக் கொடுக்க இருந்ததால் ஆரஞ்சு வர்ணத்தில் உள்ள கேலிச்சித்திரத்திற்கு முங்கி எனப் பெயரிட்டு குற்றியலுகரம் கற்றுக்கொடுத்தேன். ஆதலால், மஞ்சள் மற்றும் நீல வர்ணத்தில் இருந்த கேலிச்சித்திரங்களைக் கிளிக் செய்து அழித்துவிட்டேன்.



இந்த வடிவமைப்பின் வலது பக்கத்தில், இந்த ஆரஞ்சு வர்ண கேலிச்சித்திரத்தின் இன்னும் சில படங்களும் இதற்கான முக பாவனைகளும் இருந்தன. இதனைக் கொண்டு தான் நான் குற்றியலுகரம் கற்றுக் கொடுக்க தொடங்கினேன். ஆக, தலைப்புக்கு முதலில் "குற்றியலுகரம்"

எனத் தமிழில் தட்டச்சு செய்தேன். பிறகு, முதலாம் கட்டத்தில் நான்காம் கட்டத்தில் இருந்த கேலிச்சித்திரத்தை நகலெடுத்து வைத்து அதனைக் கிளிக் செய்து சிறியதாக ஆக்கினேன் காரணம் உரையாடல் எழுதுவதற்கு இடம் வேண்டுமென்பதாலே.



பிறகு, அந்தக் கட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் உரைப் பெட்டியில் (text box) அந்தக் கேலிச்சித்திரத்தைப் பெயருடன் அறிமுகப்படுத்தி இரண்டாம் கட்டத்தில் குற்றியலுகரம் பற்றி கற்றுக் கொடுக்கபோகிறேன் என அந்தக் கேலிச்சித்திரம் பேசுவது போலச் செய்திருந்தேன்.



இது போலவே தான், அனைத்துக் கட்டத்திலும் அந்தக் கேலிச்சித்திரத்தை நகலெடுத்து வைத்து உரைப் பெட்டியில் மாணவர்களுக்குப் புரியும்படி குற்றியலுகரம் கற்றுக் கொடுத்திருந்தேன். நான் காமிக் ஸ்டிரிப்பில் குற்றியலுகரம் கற்றுக் கொடுக்க இதுபோலவே

நான்கு பக்கங்களைப் பயன்படுத்தியிருந்தேன். குற்றியலுகரம் பற்றி அனைத்தையும் இந்த காமிக் ஸ்டிரிப்பில் கற்றுக் கொடுத்த பிறகு இதனை பி.டி.எப் (PDF) வடிவில் பதிவிறக்கம் செய்து கொண்டேன்.

காமிக் ஸ்டிரிப்பில் குற்றியலுகரம் கற்று கொடுத்ததில் எதிர்நோக்கிய சிக்கல்கள்

இந்தக் கேன்வா பயன்பாட்டில் உள்ள காமிக் ஸ்டிரிப்பில் எளிமையான முறையில் குற்றியலுகரத்தைக் கற்றுக் கொடுக்க முடிந்திருந்தாலும் சில சிக்கல்களை எதிர்நோக்கியிருந்தேன். அது என்னவென்றால் நான் தேர்ந்தெடுத்த காமிக் ஸ்டிரிப்பில் கொடுக்கப்பட்ட கேலிச்சித்திரங்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. இதனால், நான் நினைத்தது போல அந்தக் கேலிச்சித்திரத்தை மாற்றியமைக்க இயலவில்லை. நாமே அந்த கேலிச்சித்திரங்களை மாற்றியமைக்க முடிந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். பிறகு, தமிழ் எழுத்திற்கென ஒரே ஒரு எழுத்துரு (font) மட்டுமே இருந்தன. ஆக, தமிழுக்கென அதிக எழுத்துருக்கள் இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

முடிவுரை

ஆதலால், தமிழ் மொழி இலக்கணம் கற்பித்தலில் தொழில்நுட்பப் பயன்பாடுகளுள் ஒன்றான கேன்வா பயன்பாட்டிலுள்ள காமிக் ஸ்டிரிப் மூலம் புத்தாக்கம் ஒன்றை செய்தது எனக்குப் புதிய அனுபவமாக இருந்தது. நான் இதுவரை எல்லா நேரங்களிலும் அதிகளவில் படவில்லைகளைத் (powerpoint slides) தான் பயன்படுத்தியுள்ளேன். ஆனால், இந்த இடுபணியைச் செய்த பிறகு என்னால் இந்த கேன்வா பயன்பாட்டில் உள்ள பல அம்சங்களையும் இதில் நம்மால் செய்ய முடிகிற பல வடிவமைப்புகளையும் அறிந்து கொள்ள முடிந்தது. இப்படி புது வகையில் மாணவர்களுக்கு இலக்கணமோ இலக்கியமோ கற்றுக் கொடுப்பதன் மூலம் மாணவர்களே சுயமாகவும் ஆர்வமாகவும் படிப்பர் என்பது என் கருத்தாகும். ஆக, கேன்வா பயன்பாட்டில் உள்ள காமிக் ஸ்டிரிப் மூலம் கற்றுக் கொடுக்கப்பட்ட குற்றியலுகரம் அனைத்து மாணவர்களுக்கும் படிப்பதற்குச் சுலபமாக இருக்கும் என நம்புகிறேன். அனைத்து ஆசிரியர்களும் இதுபோன்ற பல பயன்பாடுகளைக் கொண்டு கற்றுக் கொடுப்பது மாணவர்களின் ஆர்வத்தை ஈர்த்து படிக்க வைக்கும்.

துணைநின்றவை

- செ. சீனி நைனா முகம்மது. (2015). நல்ல தமிழ் இலக்கணம் (மூன்றாம் பதிப்பு). சிலாங்கூர்: பெர்செத்தாக்கான் சாவார் சென்டிரியான் பெர்ஹாட்.
- இடைநிலைப் பள்ளிகளுக்கான இலக்கண இலக்கிய விளக்கவுரை. (2008). மலேசியா: யூனிட் பாஹாசா தமிழ்
- தென்னகன். (2000). வசந்தா தமிழ் அகராதி, சென்னை, வசந்தா பிரசுரம்.
- The Importance of Technology in Education. (2021). Obtained from: https://myessaypoint.com/the-importance-of-technology-in-education
- Technology in Education. (2021). Obtained from: https://www.bartleby.com/essay/Technology-In-Education-P38YQ5MUYEF
- Canva. (2021). https://en.wikipedia.org/wiki/Canva
- https://www.canva.com/
- Canva. (2021). Obtained from: https://www.getapp.com/collaboration-software/a/canva/

- Ponniah, K., Thamburaj, K. P., & Samuvell, S. J. I. (2017). Language attitude among Tamil language teachers. *International Journal of Advanced and Applied Sciences*, *4*(6), 142-147.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2016). Hierarchical grammatical tagging for tinai (landscape) of cankam Tamil literature. *Indian Journal of Science and Technology*, *9*(48).
- Thamburaj, K. P., & Rengganathan, V. (2015). A Critical Study of SPM Tamil Literature Exam Paper. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *5*, 13-24.
- Thamburaj, K. P., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [A study on modern and traditional writing skill]. *Muallim Journal of Social Sciences and Humanities*, 141-146.
- Thamburaj, K. P. (2015). Promoting scientific ideas through the future studies in Tamil language teaching. *Procedia-Social and Behavioral Sciences*, *174*, 2084-2089.
- Thamburaj, K. P., Arumugum, L., & Samuel, S. J. (2015, August). An analysis on keyboard writing skills in online learning. In *2015 International Symposium on Technology Management and Emerging Technologies (ISTMET)* (pp. 373-377). IEEE.
- Thamburaj, K. P. (2021). An Critical Analysis of Speech Recognition of Tamil and Malay Language Through Artificial Neural Network. *Turkish Journal of Computer and Mathematics Education (TURCOMAT)*, *12*(9), 1305-1317.
- Thamburaj, K. P., & Shakunthala, R. (2016). Standardization of question items to test tamil case markers–a study. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *6*, 9-16.
- Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K. P. (2021). Traditional teaching method-concept of moral education and pedagogy in Aathicuudi. *Muallim Journal of Social Sciences and Humanities*, 176-182.
- Thamburaj, K. P. (2021). E-Teaching in Teacher Education—A Conceptual Framework of Sultan Idris Education University. *Sino-US English Teaching*, *18*(5), 107-111.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2020). THE USE OF MOBILE–ASSISTED LANGUAGE LEARNING IN TEACHING AND LEARNING TAMIL GRAMMAR. *PalArch's Journal of Archaeology of Egypt/Egyptology*, *17*(10), 843-849.
- Thamburaj, K. P., Sivanadhan, I., & Kumar, M. (2021). IMPROVING FORM 4 STUDENT'S READING COMPREHENSION SKILLS IN TAMIL LANGUAGE BY USING SQ3R METHOD. *Psychology and Education Journal*, *58*(2), 2291-2295.
- Thamburaj, Kingston Pal. "A Process of Developing an ASR System for Malay and Tamil Languages." *Design Engineering* (2021): 731-741.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2015). வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி (Reframing Valluvar's claim on Friendship). *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, *2*(1), 7-13.

பின்னிணைப்பு


குற்றியலுகரம்
வணக்கம் மாணவர்களே! அனைவரும் நலமா? நான் தான் முங்கி!
நான் உங்களுக்கு குற்றியலுகரம் என்றால் என்னவென்று கற்றுக் கொடுக்கப் போகிறேன். ஆக. தொடர்ந்து படியுங்கள்
குற்றியலுகரம் என்றால் குறுகிய இயல்புடைய உகரமாகும். வல்லின உகரங்களான கு. சு. டு. து. பு. று சொல்லின் இறுதியில் வரும்பொழுது குறுகி ஒலிக்கும்
அது என்ன வல்லின உகரம் என யோசிக்குறீர்களா? வல்லின மெய்யெழுத்துகள் என்பது க். ச். ட். த். ப். ற் ஆகும். இதனுடன் உகரம் சேர்வதினால். கு. சு. டு. து. பு. று என மாறுபட்டு வல்லின உகரம் எனப் அழைக்கப்படுகிறது.
ஆக. இந்த ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்பொழுது. அதனுடைய ஒலி குறுகி ஒலிக்கப்படும்.
குற்றியலுகரம் ஆறு வகைப்படுகிறது. அவை
வன்றொடர்க் குற்றியலுகரம்
மென்றொடர்க் குற்றியலுகரம்
இடைத்தொடர் குற்றியலுகரம்
உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
நெடில்தொடர்க் குற்றியலுகரம்
ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்
இவற்றை இப்பொழுதுக் காணலாம்.


குற்றியலுகரம்
ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின உகரத்திற்கு முன் வரும் எழுத்து வல்லின மெய்யானால் (க், ச், ட், த், ப், ற்), அது வன்றொடர்க் குற்றியலுகரமாகும்.
எடுத்துக்காட்டிற்கு. வாக்கு. அச்சு. பட்டு. கூத்து. தபுஃ கூற்று ஆகும்
பிறகு. ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின உகரத்திற்கு முன் வரும் எழுத்து மெல்லின மெய்யானால் (ங், ஞ், ண், ந், ம், ன்), அது மென்றொடர்க் குற்றியலுகரம் ஆகும்.
எடுத்துக்காட்டிற்கு. பங்கு. அஞ்சு. வண்டு. பந்து. அம்புஃ கன்று ஆகும்
ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின உகரத்திற்கு முன் வரும் எழுத்து இடையின மெய்யானால் (ய், ர், ல், வ், ழ், ள்), அது இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.
எடுத்துக்காட்டிற்கு. கொய்து. மார்பு. சால்பு. போழ்து ஃ தெள்கு ஆகும்


குற்றியலுகரம்
அடுத்து, ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின உகரத்திற்கு முன் வரும் எழுத்து உயிர் எழுத்தானால், அது உயிர்தொடர்க் குற்றியலுகரமாகும்.
எடுத்துக்காட்டிற்கு, முதுகு, கரடு, பரிசு, விருது, உருபு, கயிறு ஆகும்
கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளில் எங்கே உயிர் எழுத்து இருக்கிறது என யோசிக்குறீர்களா?
முதுகு என்ற சொல்லில் உள்ள து எழுத்து. த் + உ மூலம் வந்துள்ளது. ஆக, உ என்பது உயிரெழுத்து ஆகும்.
அதன் பின், ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின உகரத்திற்கு முன் வரும் எழுத்து தனி நெடிலானால், அது நெடில்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.
எடுத்துக்காட்டிற்கு, பாகு, மாசு, நாடு, சூது, பாபு, சாறு ஆகும்
இறுதியாக, ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின உகரத்திற்கு முன் வரும் எழுத்து ஆய்த எழுத்தானால், அது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.


குற்றியலுகரம்
எடுத்துக்காட்டிற்கு, எஃகு, அஃது, கஃசு, எஃது, இஃது ஆகும்
இவைதான் அந்த ஆறு வகையாகும். ஆனால், தனிக்குறிலுக்கு பிறகு வரும் வல்லின உகரங்கள், குற்றியலுகரம் அல்ல மாறாக அது முற்றியலுகரம் ஆகும். முற்றியலுகரத்தை வேறொரு நாள் கற்றுக் கொடுக்கிறேன்.
ஆக, குற்றியலுகரத்தைக் கண்டுபிடிக்க, நீங்கள் செய்ய வேண்டியவை என்ன?
முதலில், ஒரு சொல்லின் இறுதியில் வல்லின உகரம் உள்ளதா என்று பார்க்க வேண்டும்.
சொல்லின் இறுதியில் வல்லின உகரம் இருந்தால், அதற்கு முன் உள்ள எழுத்தைப் பார்த்து அது எந்த வகை குற்றியலுகரம் என கண்டுப்பிடிக்க வேண்டும்
இதன் மூலம், குற்றியலுகரத்தை எளிமையாகக் கண்டுப்பிடிக்கலாம்
ஆக, குற்றியலுகரம் என்றால் என்னவென்று புரிந்துவிட்டதா மாணவர்களே!
இனி, உங்களை வேறொரு தலைப்புடன் சந்திக்கிறேன்.

****

தமிழ் மொழி இலக்கணம் கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைக் கொண்டு புத்தாக்கம் செய்தல் Innovation with the use of technology in grammar teaching

லோகப்பிரியா சண்முகம் | Logapriyaa Shanmugam

Student Of Tamil Department, Sultan Idris Educational University, Malaysia
D089919@siswa.upsi.edu.my

ஆய்வுச்சுருக்கம்

தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கம் கல்வியில் அதிகமான நிலையில் இடம்பெற்றுள்ளது. இந்த நவீன யுகத்தில் தொழில்நுட்பம் வளர்ச்சியைக் கல்வி அமைப்பு மேலும் பாதித்தது. எனவே, கல்வியின் நல்ல குறிக்கோள்கள் வாழ்க்கையின் தற்போதைய சூழ்நிலைகளுடன் தொடர்புடையவை. ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி முறை ஒரு சமூகத்தின் உண்மையான சூழ்நிலைகளைச் சந்திக்க வேண்டும். மேலும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே எளிதில் நிறுவப்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தமிழில் இலக்கணத்தைக் கற்றுக்கொள்வதற்கான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புத்தாக்கத்தின் மூலம் ஒரு புரிதல் கற்றல் முறையை அடைய முடியும். பெயர்ச்சொல் இலக்கணம், இது கற்றல் அமைப்பில் தமிழ் மொழியின் ஆரம்பகால இலக்கணம் ஆகும். 'பவர் பாயிண்ட்', 'யூடியூப்' மற்றும் 'வலைப்பதிவு' போன்ற தொழில்நுட்பங்கள் இந்தக் கண்டுபிடிப்பில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே முன்கூட்டியே தொழில்நுட்பமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Abstract

The aim of education varies according to technology development. Education system more influenced technology development in this modern era. Therefore, good aims of education are related to the current situations of life. The organized education system must meet the real situations of a community. Moreover, an understanding learning system can be accomplished via innovation with the use of technology in learning grammar in Tamil, especially using technology which is easily found among students and teachers. The peyarsol grammar, which is an earliest grammar known of Tamil Language in learning system. Technology such as 'powerpoint', 'youtube' and 'blog 'have been used in this innovation as advanced technology among students and teachers.

திறவுச்சொற்கள் (Keywords) : innovation, technology development, 'powerpoint', 'youtube' 'blog', and grammar learning, புதுமை, தொழில்நுட்ப வளர்ச்சி, 'பவர்பாயிண்ட்', 'யூடியூப்' 'வலைப்பதிவு' மற்றும் இலக்கணக் கற்றல்.

ஆய்வு முன்னுரை

' எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு ',

என்பதற்கொப்ப இவ்வுலகில் நிகழும் ஒவ்வொரு அதிசயங்களும் கடவுளின் ஆசியால் தான் நடைபெறுகிறது என்றால் உண்மையே ஆகும். அதேபோல் இந்நவீன உலகில் பல துறைகளில் புதிய-புதிய மாற்றங்களைக் கண்டு வருகிறது. ஏனெனில், இன்றைய நவீன காலத்தில் வாழும் மனிதர்களும் கூட புதிய- புதிய மாற்றங்களை எதிர்பார்த்து வாழ்ந்து வருகிறார்கள். மாணவர்களும் கூட அவர்களின் கற்றல் கற்பித்தலில் புதிய மாற்றங்களை எதிர்ப்பார்க்கிறார்கள். இந்நிலையில் தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் ஒரு பகுதிகளாக அமையும் இலக்கணம், இலக்கியம் என்ற இருப்பிரிவினை மேம்படச் செய்ய வேண்டிய சூழல் நிலவிவருகின்றது. அதிலும் இலக்கணம் பகுதி என்பது மாணவர்களின் கற்றல் கற்பித்தலில் ஒரு கடினமான பகுதியாகவே தென்படுகிறது. இத்தகைய கடினமான பகுதியிலிருந்து ஒரு சிறு பகுதியாக பெயர்ச்சொல் என்ற இலக்கணத்தைத் தேர்வு செய்யப்பட்டு அதனை மாணவர்களுக்குத் தொழில்நுட்பம் வாயிலாக சில கருவிகளைத் துணைக்கொண்டு எவ்வாறு எளிய முறையில் கற்றுவிக்கலாம் என்ற நோக்கத்துடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிப்பதில் உச்சிக் குளிர்கிறேன்.

ஆய்வுப் பகுப்பு

தமிழ் கற்றல் கற்பித்தலில் 'பவர்பாயிண்ட்' (powerpoint) பயன்பாடு

புதிய மாற்றங்களை எதிர்பார்த்து கற்றல் கற்பித்தலைக் கற்கும் மாணவர்களின் எண்ணத்திற்கு ஏற்ப தமிழ் கற்றல் கற்பித்தலில் 'பவர்பாயிண்ட்' என்ற செயலியைப் பயன்படுத்தி ஒரு புதிய கற்பித்தல் திறனை இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'பவர்பாயிண்ட்' என்றால் 'பவர்பாயிண்ட்' என்ற செயலியைத் துணைக் கொண்டு தமிழ் இலக்கணப் பிரிவில் அடங்கியுள்ள பெயர்ச்சொல்லினைக் கற்பிக்கும் முறையினை மேலும் விவரிக்கப்பட்டுள்ளது.

'பவர்பாயிண்ட்' (Powerpoint)

தேர்வுசெய்யப்பட்ட இலக்கணத்தை முதலில் 'பவர்பாயிண்ட்' செயலி துணைக்கொண்டு தயார் செய்ய வேண்டும். அதற்கு முதலில் விளக்கக்காட்சியை உருவாக்குவதற்காக வெற்று விளக்கக்காட்சியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கருப்பொருள்கள் பொருந்தக்கூடிய வண்ணங்கள் கூடி மற்றும் எழுத்துருக்களுடன் வரும், இது ஒரு ஒத்திசைவான தோற்றத்துடன் ஆவணத்தை உருவாக்க உதவக்கூடிய கருவியாக அமையும். தொடர்ந்து, 'பவர்பாயிண்டில்' ஒரு புதிய ஸ்லைடு விளக்கக்காட்சியை உருவாக்க வேண்டும். அதில் தலைப்பு ஸ்லைடில் தொடங்குகிறது. உங்கள் சொந்த உரையைச் சேர்க்க தலைப்பு ஸ்லைடில் உள்ள எந்த உரை பெட்டிகளிலும் கிளிக் செய்யலாம்.

முகப்புப் பகுதியில் ஒரு புதிய ஸ்லைடைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் விளக்கக்காட்சியில் கூடுதல் ஸ்லைடுகளைச் சேர்க்கவும். பின்பு, இடது புறத்தில் உள்ள ஸ்லைடு சார்ட்டர் பட்டியில் வலது கிளிக் செய்து, அங்கிருந்து புதிய ஸ்லைடைத் தேர்ந்தெடுக்கவும்.அதில்அடங்கியுள்ள ஒருபகுதியான தளவமைப்பைக் கிளிக் செய்வதன் மூலம் ஸ்லைடின் தளவமைப்பை மாற்றிவிடுவோம். அடுத்து, உரைப் பெட்டியைக் கிளிக் செய்வதன் மூலம் கருத்தைத் தட்டச்சு செய்து பதிவிட முடிந்தது. தட்டச்சு செய்த கருத்தை எழுத்துரு, அளவு, தைரியமான, சாய்வு, நிறம் மற்றும் சீரமைப்பு போன்ற உரை வடிவமைப்பு விருப்பங்களுக்கு ஏற்ப மாற்றி அமைக்கவும் முடியும்.

மேலும், மேல் வழங்கியுள்ள படங்கள் கருவிப்பெட்டியில் செருகு விருப்பத்தைப் பயன்படுத்தி ஒரு சில படங்களை ஸ்லைடில் சேர்த்துவிடப்பட்டது. படங்கள் கருவிப்பெட்டியில் நான்கு வகையாகவும் பிரிவுகள் அடங்கியுள்ளன. அவை, ஆன்லைனில் ஒரு படத்தைத் தேடி தேர்வு செய்தல், ஆன்லைன் படங்கள் உலாவல் சாளரத்தைத் திறக்கும், அல்லது தனிப்பட்ட புகைப்படங்களை அணுக 'ஒவன் டிராவ் (one drive)' பயன்படுத்துதல், ஸ்கிரீன்ஷாட் செய்த புகைப்படங்களைக் கணினியின் வாயிலாக சேர்த்தல் மற்றும் புகைப்படம் ஆல்பம் கணினியின் புகைப்படங்களின் குழுவில் தெரிவுசெய்தல் ஆகும். இத்துணை அழகாக வடிவமைக்கப்பட்ட பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியைச் செய்து முடித்ததுடன் சேமித்து வகைக்க வேண்டும் இல்லையேல் அழிந்துவிடும். ஆகையால், முதலில் பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியை எளிதாக அணுகக்கூடிய இடத்தில் வைப்பதற்காக ஹோம்மை தேர்வு செய்து பின் அதில் அடங்கியிருக்கும் சேமி என்ற பகுதியைத் தேர்வுசெய்து சேமித்துவிடப்பட்டது.

சேமித்துவிடப்பட்ட பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியை டோக்கியுமென் அல்லது அடோப் பி.டி.எஃப் ஆக சேமி என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு ஸ்லைடில் குரல்களைப் பதிவிட்டு சேர்க்கப்பட்டது. பின்பு, அந்த ஸ்லைட்டை காணோலியாக மாற்றியமைக்கப்பட்டது. பெயர்ச்சொல் குறித்து விளக்கப்பட்ட பவர்பாயிண்ட் விளக்கக்காட்சி கற்பிப்பதற்கு தயார்நிலையானது.

பெயர்ச்சொல்

பெயர்ச்சொல் என்றால் தமிழ் இலக்கணத்தில் ஒரு சிறு பகுதியாக அமைவதாகும். பெயர்ச்சொல் என்பதன் மூலமாக அமைவது சொல் ஆகும். சொல் என்றால் ஓர் எழுத்து தனித்து நின்றும், இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்து நின்றும் பொருள் தரும் சொற்களைக் குறிப்பதாகும். மேலும், சொல் நான்கு பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது. அவை பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் மற்றும் உரிச்சொல் அடங்கும். இதன் வகையில் ஒரு பகுதியாக அமைவது தான் பெயர்ச்சொல் ஆகும். பெயர்ச்சொல் என்றால் ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல்லாக அமையும் என்றால் உண்மையே ஆகும். 'பவர்பாயிண்ட்' செயலினைத் துணைக் கற்பிக்கும் தருவாயில் சொல்லின் உட்பிரிவாக அமையும் நான்கு வகையினையும் சிறு குறிப்பாக விளக்கப்பட்டுள்ளது.

வினைச்சொல் என்றால் ஒரு செயலை அல்லது தொழிலை அல்லது வினையைக் குறிக்க உதவும் சொல்லாகும். எடுத்துக்காட்டாக, ஆடுதல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து, இடைச்சொல் என்றால் ஒரு சொல் பெயர்ச்சொல்லுக்கும், வினைச்சொல்லுக்கும் முன்னும், பின்னும் இடம் பெற்று பொருள் வழங்குவதாகும். ஐ, ஆல், கு, இன் போன்ற வேற்றுமை உருபுகள் எடுத்துக்காட்டாக கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், உரிச்சொல் என்றால் பெயர்ச்சொற்கள் போலவோ வினைச்சொற்கள் போலவோ இன்றி ஒன்றின் குணங்களை

உணர்த்தி வரும் சொற்களாக அமைவதாகும். எடுத்துக்காட்டாக, நனி பேதை என்ற சொல்லைக் கொடுக்கப்பட்டுள்ளது.

பெயர்ச்சொல் என்பதற்குப் பெய்வது அதாவது இடுதல் என்ற பொருளாகக் கூறியுள்ளார் (ஞா. தேவ நேயப் பாவாணர், 2012). தொடர்ந்து, பெயர்ச்சொல் பல தன்மைகளைக் கொண்டு அடங்கியுள்ளது. முதலில். பெயர்ச்சொல் இடுகுறியாகவோ காரண அடிப்படையாகவோ அமையும். இடுகுறிப்பெயர் என்றால் காரணமில்லாமல் இடப்பட்ட வழிவழியாய் வழங்கும் பெயராகும். எடுத்துக்காட்டாக, கல் மற்றும் மண். காரணப்பெயர் என்பது காரணத்தால் அமையக்கூடிய சொற்களைக் குறிப்பதாகும். எடுத்துக்காட்டாக, பறவை வானில் பறப்பதனால் அதற்குப் பறவை என்ற பெயர் இடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, காரண அடிப்படையில் தோன்றி இடுகுறியாய் மாறும் தன்மையும் பெயர்ச்சொல்லுக்கு அடங்கும். எடுத்துக்காட்டாக, நான்கு கால்கள் கொண்டிருப்பதனால் அதற்கு நாற்காலி என்ற பெயர் இடப்பட்டுள்ளது.

மேலும், பெயர்ச்சொல் வேற்றுமை உருபை ஏற்கும். பையன் என்ற சொல்லுடன் ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு இணைந்தால் பையனை என்ற சொல்லாக அமையும். பெயர்ச்சொல் காலம் காட்டாது. மரம், வருதல், மற்றும் ஊர் போன்ற சொற்கள் இயல்பாக அமையும் எப்போதும் காலத்தைக் காட்டி நிற்பதுகிடையாது. வாக்கியங்களில் எழுவாயாக மட்டும் தன்மை பெயர்ச்சொல்லுக்கு உண்டு. எடுத்துக்காட்டாக, மரம் வெட்டினான் என்ற வாக்கியத்தில் எழுவாயாக அமைந்திருக்கு மரம் என்ற சொல் பெயர்ச்சொல்லாக அமைந்துள்ளது. தொடர்ந்து, பெயர்ச்சொல் எப்பொழுதும் பெயரெச்சம் முற்றுப் பெறுவதற்கு அமையும். எடுத்துக்காட்டாக, பெய்த மழை என்ற வாக்கியத்தில் பெய்த என்ற சொல் பெயரெச்சமாகவும் மழை என்ற சொல் பெயர்ச்சொல்லாகவும் அமைந்துள்ளது. மேலும், பெயர்ச்சொல்லினை இரு பாகுபாடுகள் கொண்ட பெயச்சொல்லாகவும் அமைத்துக் காட்டப்பட்டுள்ளதை கீழே வழங்கப்பட்ட புகைப்படம் வாயிலாக அறிந்துக்கொள்ள இயலும்.

தொடர்ந்து, பெயர்ச்சொல்லினை ஆறு வகைகளாகப் பிரிக்கலாம். அவை பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர் அல்லது குணப்பெயர் மற்றும் தொழிற்பெயர் அல்லது வினைப்பெயர் ஆகும். பொருட்பெயர் என்றால் உயர்திணைப் பெயர்களையும் உயிருள்ள உயிரற்ற அஃறிணைப் பொருள்களையும் குறிக்கும் சொற்கள் ஆகும். எடுத்துக்காட்டாக, உயிருள்ள பொருட்பெயராக மனிதன், ஆசிரியன், முருகன் என்றும், அஃறிணை உயிருள்ள பொருட்பெயராக பறவை, நண்டு, எறும்பு என்றும் மற்றும் அஃறிணை

உயிரற்ற பொருட்பெயராக கடல், மலை, காற்று என்றும் கூறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவதாக, இடங்களை அல்லது இடமாகக் கருதப்படுவதைக் குறிப்பது இடப்பெயராகும். எடுத்துக்காட்டாக, இடம் சார்ந்த பகுதியாக அமையும் குறஞ்சி, மருதம், நெய்தல், பாலை போன்றவற்றையும் மற்றும் இடமாகக் கருதப்படும் வானம், நாடு, காடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து, காலத்தை அல்லது பொழுதைக் குறிப்பது காலப்பெயர் ஆகும். எடுத்துக்காட்டாக, காலை, எற்பாடு, நேரம், மாதம் போன்ற சொற்கள் வழங்கப்பட்டுள்ளன. நான்காவதாக, சினைப்பெயர் ஆகும். இதனை ஒன்றின் உறுப்பினைக் குறிக்க உதவும். தலை, கால், கிளை, பூ, செவி, இலை போன்ற ஒன்றின் உறுப்பினைக் குறிக்கும். அடுத்து, ஒரு பொருளின் இயல்பினை அல்லது தன்மையைக் குறிப்பது பண்புப்பெயராகும். ஒரு பொருளின் தோற்றம், வடிவம், நிறம், அளவு, எண்ணிக்கை, தன்மை அல்லது குணம் குறிப்பது. மையீற்றுப் பண்புப்பெயர் என்பதும் பண்புப்பெயரின் கீழ் அடங்கும். 'மை' ஈற்றுடன் முடிகிற பெயர்கள் புணர்ச்சி வேறுபாடு கருதி அமைவதே இந்த மையீற்றுப் பண்புப்பெயர் ஆகும். எடுத்துக்காட்டாக, கருமை, செம்மை, இனிமை போன்ற சொற்கள் அடங்கும். இறுதியாக தொழிற்பெயர். இதனை ஒரு செயலை அல்லது வினையை அதாவது அடிச்சொல்லினைக் குறிக்க உதவும். எடுத்துக்காட்டாக, நடை, கல்வி, விற்பனை, பயிற்சி, காட்சி, பேசுதல் போன்ற சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய விளக்கங்களுடன் ஸ்லைடு தயார் செய்யப்பட்டது.

வலையொளி (YouTube)

வடிவமைக்கப்பட்ட பவர்பாயிண்ட் விளக்கக்காட்சிக் காணொளியைப் பதிவிட்டு பாதுகாப்பாய் அமைத்துவிடுவதற்காகவே வலையொளியின் துணையை நாடப்பட்டது. தயாரித்த காணொளியை முதலில் வலையொளியில் பதிவிட முதலில் சுயமாய் ஒரு ஜிமைல் இருத்தல் அவசியம். பின்பு சுயமாய் வலையொளியில் பக்கம் பதிவிட வேண்டும். வலையொளியின் முகப்புப் பகுதியில் அமைந்திருக்கும் மேல் வலது பகுதியில் அமைந்திருக்கும் காணொளியின் படத்தைக் கிளிக் செய்து பின்பு காணொளி பதிவேற்றம் என்பதைக் கிளிக் செய்து தயாரித்த பவர்பாயிண்ட் விளக்கக்காட்சிக் காணொளியைப் பதிவிட வேண்டும். மேலும், காணொளிக்குத் தகுந்த தலைப்பையிட வேண்டும். அக்காணொளியை எந்த வயதினர்கள் வரைக் காண முடியும் என்பதையும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இறுதியாக காணொளியும் வலையொளியில் காணத் தயார் நிலையில் அமைந்தது. இதுவே தயாரிக்கப்பட்டு பின்பு வளையொளியில் இணைக்கப்பட்ட இணைப்பாகும். https://youtu.be/XS7BYUcMpic

ஆய்வுத் தீர்வு

தமிழ் இலக்கணக் கற்றல் கற்பித்தலில் வலைப்பதிவின் (Blog) பங்கு.

தயாரிக்கப்பட்ட காணொளியை ஆசிரியர்களின் பார்வைக்கும் மாணவர்களின் தேடல் வரிசையில் அமைத்திடவும் வலைப்பதிவினைத் துணைக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் பதிவிடுவதனால் பலரின் பார்வைக்குக் கொண்டு செல்ல முடியும் என்றால் உண்மையே. வலைப்பதிவைத் திறப்பதற்கு முதலில் சுயமான ஜிமைல் இருத்தல் அவசியம். அதன் துணைக்கொண்டு

ஒரு கூகுள் பக்கத்தைத் திறந்திட முடியும். பின்பு, வலைப்பதிவு பக்கத்தை நாடி அதிலும் சுயமாக அக்கவுண்ட் திறக்க வேண்டும். திறந்த பிறகு, அப்பக்கத்தில் புதிய பதிவினைத் தேர்வு செய்து அதில் ஒரு டோகிமென் வடிவில் வரும் அதில் பெயர்ச்சொல்லின் பற்றிய கருத்தினையும் காணொளியாக செய்யப்பட்ட தட்டச்சு செய்யப்பட்டது.

தொடர்ந்து, வலையொளியில் பதிவிடப்பட்ட பவர்பாயிண்ட் காணொளியின் இணைப்பினையும் சேர்த்துவிடப்பட்டது. மேலும், சுயமாக எழுதப்பட்ட வலைப்பதிவினை அழகு கூட்டும் வகையில் அதிலேயே இருக்கும் தளவமைப்பு, தீம் போன்ற பகுதியின் துணையுடன் விரும்பிய வண்ணத்தில் அல்லது புகைப்படத்தில் போன்றவற்றில் வைத்துக்கொள்ளலாம். மேலும், இயற்றப்பட்ட வலைப்பதிவில் நம்முடைய தனிப்பட்ட விவரங்களைப்பற்றியும் குறிப்பிடலாம். கருத்துகளைப் பதிவிட்ட பிறகு எழுத்துப்பிழைகளையும் இலக்கணப்பிழைகளையும் சரி பார்க்கப்பட்டது. ஏனெனில், ஒரு கருத்தை மக்கள் முன்னிலையில் வைக்கும் போது எவ்வித தவறுகள் இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

வலைப்பதிவில் மேல் பகுதியில் கண் சின்னம் இடப்பட்டிருக்கும் அதன் வாயிலாக வலைப்பதிவினை வெளியிடுவதற்கு முன்பு மீள்பார்வையாக பார்த்துக் கொள்ள முடியும். வலைப்பதிவில் தட்டச்சு செய்த பெயர்ச்சொல் ஒட்டிய கருத்துக்களை வெளியிடப்பட்டது. அதுவும் எளிய முறையில் அனைவராலும் அறிய முடிந்த எளிமையான முறையில் அமைக்கப்பட்ட இணைப்பு ஒன்றினைத் தயாரிக்கவும் பட்டது. இறுதியாக, அனைவரின் பார்வைக்குப் பெயர்ச்சொல்லின் கருத்தை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் மிகையாகாது.



https://peyarsol.blogspot.com/2021/06/httpsyoutu.html

ஆய்வு முடிவுரை

தமிழ் கற்கும் மாணவர்கள் இலகுவான முறையில் தரமான கற்றல் கற்பித்தல் மேம்படுத்திக் கொள்வதற்கு இன்றைய நவீன வளர்ச்சியில் அடங்கியிருக்கும் பவர்பாயிண்ட், வலையொளி, வலைப்பதிவு போன்ற பதிவுகள் தூண்று கோளாய் அமைக்கின்றது என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது. ஆகவே, ஆய்வின் முடிவில் குறிப்பிட்டதைப் போலவே மேலும் பலதரப்பட்ட உத்திமுறைகளை ஆசிரியர்கள் அவசியம் மாணவர்களை ஈர்க்கும் வண்ணம் கற்றல் கற்பித்தலை வழிநடத்தி வந்தால் மாணவர்களின் கற்றல் கற்பித்தலின் மீது இருக்கும் ஆர்வத்தை மேம்பட செய்திட முடியும். ஆகையால் மாணவர்களிடையே நவீன தொழிட்நுட்ப வளர்ச்சியினைப் பற்றி எடுத்துரைக்கும் வகையிலும் அதனை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் ஆசிரியர்கள் நன்முறையில் கற்றுக்கொடுத்து, புத்தாக்க சிந்தனையுடன் கற்றல்

கற்பித்தலை வழிநடத்தி வந்தால் மாணவர்களின் சிந்தனையாற்றலை நன்முறையில் உருவாக்கிட முடியும் என்றால் ஐயமில்லை என்பதை இவ்வாவின் முடிவில் அறிய முடிந்த ஒரு உண்மை.

துணைநின்றவை

- Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K. P. (2021). Traditional teaching method-concept of moral education and pedagogy in Aathicuudi. Muallim Journal of Social Sciences and Humanities, 176-182.
- Gopinath. (2014). EBook, Virtual Learning Platform, and Chrome Lab (மின்னூல், மெய்நிகர் கற்றல் தளம், மற்றும் குரோம் லேப்). Tanjong Malim: Sultan Idris Education University.
- Justin Brown ,https://www.youtube.com/watch?v=6o7qODwjEz8
- Kevin Stratvert, https://www.youtube.com/watch?v=D8JV3w4TOVw
- Ponniah, K., Thamburaj, K. P., & Samuvell, S. J. I. (2017). Language attitude among Tamil language teachers. International Journal of Advanced and Applied Sciences, 4(6), 142-147.
- Salavanisri, P. (2013). சாலாவாணிஸ்ரீ, பொ. (2013). Use of Information Technology in New Approaches to Learning Teaching (கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளில் தகவல் தொழில்நுட்பப் பயன்பொடு). India: Annai Velangkanni College.
- Sivakumaran Ramalingam (சிவகுமாரன் ராமாலிங்கம்). சிங்கப்பூரில் தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் கணினியின் பயன்பாடு. Paper presented at the 9th Tamil Internet Conference 2010, Coimbatore, India. http://hdl.handle.net/10497/17706.
- Thamburaj, K. P. (2021). E-Teaching in Teacher Education—A Conceptual Framework of Sultan Idris Education University. Sino-US English Teaching, 18(5), 107-111.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2020). THE USE OF MOBILE-ASSISTED LANGUAGE LEARNING IN TEACHING AND LEARNING TAMIL GRAMMAR. PalArch's Journal of Archaeology of Egypt/Egyptology, 17(10), 843-849.
- Thamburaj, K. P., Sivanadhan, I., & Kumar, M. (2021). IMPROVING FORM 4 STUDENT'S READING COMPREHENSION SKILLS IN TAMIL LANGUAGE BY USING SQ3R METHOD. Psychology and Education Journal, 58(2), 2291-2295.
- Thamburaj, Kingston Pal. "A Process of Developing an ASR System for Malay and Tamil Languages." Design Engineering (2021): 731-741.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2015). வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி (Reframing Valluvar's claim on Friendship). Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்), 2(1), 7-13.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2016). Hierarchical grammatical tagging for tinai (landscape) of cankam Tamil literature. Indian Journal of Science and Technology, 9(48).
- Thamburaj, K. P., & Rengganathan, V. (2015). A Critical Study of SPM Tamil Literature Exam Paper. Asian Journal of Assessment in Teaching and Learning, 5, 13-24.
- Thamburaj, K. P., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [A study on modern and traditional writing skill]. Muallim Journal of Social Sciences and Humanities, 141-146.
- Thamburaj, K. P. (2015). Promoting scientific ideas through the future studies in Tamil language teaching. Procedia-Social and Behavioral Sciences, 174, 2084-2089.
- Thamburaj, K. P., Arumugum, L., & Samuel, S. J. (2015, August). An analysis on keyboard writing skills in online learning. In 2015 International Symposium on Technology Management and Emerging Technologies (ISTMET) (pp. 373-377). IEEE.
- Thamburaj, K. P. (2021). An Critical Analysis of Speech Recognition of Tamil and Malay Language Through Artificial Neural Network. Turkish Journal of Computer and Mathematics Education (TURCOMAT), 12(9), 1305-1317.

- Thamburaj, K. P., & Shakunthala, R. (2016). Standardization of question items to test tamil case markers–a study. Asian Journal of Assessment in Teaching and Learning, 6, 9-16.
- Usharani, S. (2014). உஷாராணி, சொ. (2014). The Roles of Communication Techniques in Teaching Learning (கற்றல் கற்பித்தலில் தகவல் தொடர்பு நுட்பங்களின் பங்குகள்). Kuala Lumpur: University Putra Malaysia.
- செ.சீனி நைனா முகம்மது (2015). நல்ல தமிழ் இலக்கணம். உங்கள் குரல் எண்டர்பிரைசு. பினாங்கு.
- சிங்கப்பூர் சித்தார்த்தன்.(2010). இலகு தமிழில் இனிக்கும் தமிழ் இலக்கணம். நர்மதா பதிப்பகம். தி.நகர். சென்னை
- க.திலகவதி.(1995). எழுத்தியலும் சொல்லியலும். உமா பதிப்பகம். கோலாலம்பூர்.
- https://peyarsol.blogspot.com/2021/06/httpsyoutu.html
- https://youtu.be/XS7BYUcMpic

****

திறன்முனைப் படைப்பின் துணையோடு ஆக்கப்பூர்வமாகவும் புதுப்புனையாகவும் பெயர்ச்சொல்லைக் கற்றுக் கொடுத்தல்
Effectiveness and Innovation of PowerPoint Presentation in Teaching of Adjectives

பிரேமா சௌந்தராசு I Perema Soundaraj

Student of Tamil Department, Sultan Idris Education University, Malaysia
perema1999@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

இந்தக் கட்டுரைத் தமிழ் இலக்கணத்தில் அமைந்திருக்கும் பெயர்ச்சொல்லை மாணவர்களுக்குத் திறன்முனைப் படைப்பு (Powerpoint Presentation) துணையுடன் புத்தாக்கச் சிந்தனையுடன் கற்பிக்கும் முறைகளை விவரித்துள்ளது. கல்வியில் திறன்முனைப் படைப்பின்வழிக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கை வகுப்பறையில் மேற்கொள்வது ஆக்கப்பூர்வமாக மாணவர்களிடையே விளக்குகின்றது. திறன்முனைப் படைப்பில் பலவற்றை எளிமையாகவும் மாணவர்களைக் கவரும் வகையிலும் இலக்கணமட்டுமின்றி இலக்கியமும் ஆசிரியர்களால் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க இயலுகின்றது என்பது இக்கட்டுரையின் வழி அறிய முடிந்தது. இக்கட்டுரைக் கற்றல் கற்பித்தல் சூழலுக்கு நிறைய நன்மைகளை வழங்குகிறது. அதன் பயன்பாடு பெரும்பாலும் தகவல் பரிமாற்ற முறைக்கு வரையறுக்கப்படுகிறது என்ற கருத்தின் முரணாக இக்கட்டுரை விளங்குகின்றது. திறன்முனைப் படைப்பில் காணொலிகளும் தயாரிக்க முடியும் என்பது அறிய முடிக்கின்றது. எனவே, இந்தக் கட்டுரை பெயர்ச்சொல்லை மாணவர்களுக்கு எளிமையாகவும் புத்தாக்க முறைகளுடனும் திறன்முனைப் படைப்பு கற்றல் கற்பித்தலுக்குச் சிறந்த துணைப் பொருளாக அமைக்கின்றது என்பதை வழியுறுத்துகின்றது.

Abstract

This paper discusses innovation of technology in teaching of adjectives. Powerpoint Presentation is used as one of the effective and innovative software to teach adjectives for students. There are a lot of benefits in the usage of Powerpoint Presentation in education especially in teaching of adjectives such as being able to create a creative and innovative presentation in the classroom for teaching students offline. The use of PowerPoint for teaching presentations has considerable potential for encouraging more innovative and professional presentations. This paper reviews the advantages associated with its use in a teaching and learning context and suggests some guidelines and pedagogical strategies that need to be considered where it is to be used. Its use is often limited to an information transmission mode and so this paper emphasizes more ways that we can use Powerpoint Presentation in education especially in Tamil grammar such as to create a video. So, this paper emphasizes the use of a very powerful, flexible, innovative teaching and learning support tool in Tamil grammar.

1.0 முன்னுரை

கணினிவழிக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை மேம்படுத்த பல வகையான மென்பொருள்கள் உள்ளன. பாரம்பரிய வழிசார்ந்த கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மாறி தற்போது புத்தாக்கச் சிந்தனைகளுடன் அமைந்துள்ள மென்பொருள்களின் துணையுடன் வகுப்பில் பாடங்கள் நடக்கும் சூழ்நிலை உருவெடுத்துள்ளது. கற்றல் கற்பித்தல் நடவடிக்கை சிறப்பாக நடத்த பல வகைகளாக அமைந்திருக்கும் மென்பொருள்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றன. விரைவு, ஈர்ப்பு, போன்ற தன்மைகளை மென்பொருள்கள் கொண்டிருக்கின்றன. மொழிப்பாடங்களில் இலக்கணம், இலக்கியம் என்ற 2 முக்கியப் பகுதிகள் இருக்கின்றன. அவற்றை மாணவர்கள் எளிமையாகக் கற்றுக் கொள்வதற்கு இந்த மென்பொருள்களின் பயன்பாடுகள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுக்கின்றன. மென்பொருள்களின் வழிக் கற்பிக்கப்படும் பாடங்கள் இணையத்தில் பதிவு செய்வதன்வழி இப்புவியில் ஒருவர் எந்த இடத்தில் இருந்தாலும் அதனை அவர்களால் கற்றுக் கொள்ள முடிக்கின்றது. மென்பொருள்களின் வளர்ச்சிக்கு இணையமும் ஒரு தூணாக இருக்கின்றது.

2.0 பவர்பாயிண்ட் (Powerpoint)

பவர்பாயிண்ட் என்ற பொருள் படைப்புகள் செய்வதற்காக உருவாக்கப்பட்டது. இந்த மென்பொருள் ரொபர்ட் காசுக்கின் மற்றும் டென்னிசு அவுத்தின் என்பவர்களால் 1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்தப் பவர்பாயிண்ட் மென்பொருள் ஏறத்தாள கண்டுபிடித்த மூன்று மாதங்களில் மைக்ரோசாப்ட் (Microsoft) நிறுவனம் அதனை வாங்கி அவர்களின் மென்பொருளுடன் இணைத்துவிட்டனர் (கத்திரினா, 2006) அதற்குப் பிறகு உலக அளவில் மக்கள் அதனைப் பயன்படுத்தத் தொடங்கினர். இந்தப் பவர்பாயிண்ட் மென்பொருள் முதலில் வணிகத் துறைகளின் பயன்பாட்டிற்குத் தான் உருவாக்கப்பட்டது. பிறகு, காலப்போக்கில் பல துறைகளில் படைப்புகள் செய்ய பயன்படுத்தப்படத் தொடங்கியது. இந்த மென்பொருளைக் கொண்டு சுமார் 102 மொழிகளில் தட்டச்சு செய்ய முடியும்; இதில் தமிழ்மொழியும் அடங்கியுள்ளது. இந்த மென்பொருளைக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்த முடியும். இந்த மென்பொருளின் துணையுடன் மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணத்தில்

அமைந்திருக்கும் பெயர்ச்சொல்லைக் கற்பிக்கும் முறை இந்த இடுபணியில் விளக்கப்பட்டுள்ளது.

2.1 பவர்பாயிண்ட் மென்பொருளின் செயல்பாடுகள்

பவர்பாயிண்ட் மென்பொருள் பெரும்பாலான கணினிகளில் பொருத்தப்பட்டுதான் கடைகளில் விற்கப்படுகின்றது. அதுமட்டுமின்றி, கைத்தொலைப்பேசிகளிலும், 'கூகிள்பிலேஸ்டோர்' (Google Playstore) மற்றும் 'ஆப்பிள் பிலேஸ்டோர்'(Apple Playstore) வழி நாம் பவர்பாயிண்ட் மென்பொருளைச் செயலியாகப் பதிவிறக்கமும் செய்யவும் முடியும்.

படம்1: பவர்பாயிண்ட் செயல்பாடுகள்

பவர்பாயிண்ட் மென்பொருளில் மொத்தம் 12 செயல்பாடுகள் இருக்கின்றன. அவை கோப்பு (File), முகப்பு (Home), செலுத்தம் (Insert), அமைப்பு (Design), நிலைமாற்றம் (Transition), நகர்ப்படம் (Animation), படவில்லைக்காட்சி (Slideshow), சீராய்வு (Review), காட்சி (View), நிட்ரோ ப்ரோ (Nitro Pro), போக்சித் படவுரு (Foxit Pdf), வடிவமைப்பு (Format) ஆகியவையாகும். இந்த 12 செயல்பாடுகளைக் கொண்டு பவர்பாயிண்ட் மென்பொருளைப் பயன்படுத்தி படைப்புகளைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

2.1.1 கோப்பு (File)

படம் 2: கோப்பு

புதியதாக வில்லையைத் (Slide) தேர்ந்தெடுக்க நாம் கோப்பு சொடுக்க (Click) வேண்டும். அதில் புதியது என்ற ஒரு தேர்வு இருக்கும். அதைச் சொடுக்கினால் புதிய வில்லையில் நம்முடைய படைப்பைச் செய்யத் தொடங்கலாம். திறப்பு (Open)என்ற தேர்வில் நாம் இதற்கு முன்பு செய்த படைப்புகளைக் காண முடியும். அதைக் கடந்து மற்ற கணினியில் ஏற்கனவே இருக்கும் மற்ற கோப்புகளையும் காண முடியும். தொடர்ந்து, அச்சு எடுக்கும் தேர்வு இருக்கும். அதனைச் சொடுக்கினால் நாம் செய்த வில்லைப் படைப்புகளை அச்சுப்பொறியில் அச்சு எடுக்க முடியும். பகிர்வு (Share) இதன் மூலம் நம்முடைய படைப்புகளை மின்னஞ்சல் வழி மற்றவர்களுக்குப் பகிர முடியும். இதைக் கடந்து, நாம் செய்யும் படைப்புகளைக் காணொளி வடிவிலும் நம்மால் எஸ்போர்ட்(Export)வழி மாற்றும் வசதியும் இந்தப் பவர்பாயிண்ட் மென்பொருளில் அமைந்துள்ளது.

2.1.2 முகப்பு (Home)



படம் 3: முகப்பு

இந்த முகப்பில் படைப்பு செய்வதற்கான முக்கியமான கூறுகள் இருக்கின்றது. தமிழில் அல்லது மற்ற மொழிகளில் தட்டச்சு செய்ய நமக்குத் தேவையான எழுத்து அமைப்பை எழுத்துருவில் (Font) தேர்வு செய்ய வேண்டும். எழுத்து அளவையும் அதன் நிறத்தையும் நம்மால் இந்த முகப்பில் தேர்ந்தெடுக்க முடியும். நமக்கு மேற்கொண்டு படைப்புகள் செய்ய தேவைப்படும் வில்லைகளையும் புதிய வில்லையின்வழிப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், நாம் தேர்ந்தெடுக்கும் எழுத்து தடிப்பாகவும் அல்லது சாய்வாகவும் காட்ட இந்த முகப்பின் வழி மேற்கொள்ள முடியும்.

2.1.3 செலுத்தம் (Insert)



படம் 4 : செலுத்தம்

செலுத்தத்தில் படைப்பிற்குத் தேவையான படங்கள், அட்டவணைகள், வரைபடங்கள், வடிவங்கள் ஆகியவை அடங்கியுள்ளது. படைப்பைக் காணொளி வடிவில் செய்ய விரும்புபவர்கள் ஒலி, காணொளி ஆகிய இரண்டினையும் பயன்படுத்திக் காணொளிகளைத் தயார் செய்ய முடியும். காணொளிகள் எளிமையாகச் செய்ய இது ஒரு சிறந்த அணுகுமுறையாகும். படைப்பிற்கான பக்கங்களும் இதன் மூலம் போட முடியும். ஏடார் மற்றும் பூடர் (Header and Footer) வழி அனைத்துப் பக்கங்களிலும் நமக்குத் தேவையான சில தகவல்களை ஒருமுறை மட்டும் தட்டச்சு செய்தால் அது சுயமாகவே மற்ற வில்லைகளிலும் பதிவாகிவிடும் (குன்னெல், 2020). இதனால், படைப்புகளை விரைவாகச் செய்ய முடிக்கின்றது. எடுத்துக்காட்டாக, பெயர், நாள் போன்றவைகளாகும்.

2.1.4 அமைப்பு(Design)

படம் 5: அமைப்பு

இந்த அமைப்பில் வில்லைகளின் அமைப்புகளை நம்முடைய விருப்பதிற்கேற்ப அமைக்க முடியும். வில்லையின் தோற்றம், அதனின் அளவு, பின்னணி வடிவமைப்பு (Format Background) அனைத்தையும் நாம் மாற்றிக் கொள்ள முடியும்.

2.1.5 நிலைமாற்றம் (Transition)

நிலைமாற்றம் என்பது ஒரு படவில்லையிலிருந்து மற்றொரு படவில்லைக்குச் செய்யும் மாற்றங்களாகும். எடுத்துக்காட்டாக,



படம் 6: நிலைமாற்றம்

இவ்வாறு ஒரு படவில்லையிலிருந்து மற்றொரு படவில்லைக்கு மாறும் போது இம்மாதிரியான நிலை மாற்றங்கள் செய்யலாம். அதே நேரத்தில், இந்த முறை பார்ப்பவர்களையும் கவரும்.

2.1.6 நகர்ப்படம்(Animation)

நகர்ப்படத்துக்கும் நிலைமாற்றத்துக்கும் சிறிய வேறுபாடுதான் உள்ளது. நகர்ப்படம் என்பது தற்போதைய படவில்லையிலிலே செய்யப்படும் மாற்றங்களாகும். இதன்மூலம் படைப்பையொட்டிய விளக்கங்களைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

2.1.7 படவில்லைக்காட்சி (Slideshow)

படம் 7: படவில்லைக்காட்சி

படவில்லைக்காட்சியில் படைப்புகள் செய்யும்போது சுயமாகவே அடுத்த வில்லைக்காட்சி செல்லும்படிச் செய்ய முடியும். இதில் அதற்கு ஏற்றதுபோல் நேரத்தை அமைக்க முடியும்.

2.1.8 சீராய்வு (Review)

படம் 8: சீராய்வு

சீராய்வில், படைப்பிலுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தவும், அதே நேரத்தில் படைப்பிற்குத் தேவையான சொற்களஞ்சியங்களையும் தேடிப் பெற்றுக் கொள்ள பயன்படுத்தப்படுக்கின்றது. மேலும், சீராய்வில் மொழி பெயர்க்கும் ஒரு சேவையும் உள்ளது. இதனால், படைப்புகளை எளிமையாக அனைவரும் செய்யலாம்.

2.1.9 காட்சி (View)



படம் 9: காட்சி

இந்தக் காட்சியில் படவில்லைகளைப் பெரிதாகி பார்க்க இயலும். தொடர்ந்து, ஒரே பக்கத்தில்பல படவில்லைகளை அமைக்கவும் முடியும். இவற்றையெல்லாம் கடந்து, அடிக்கோல், கட்டங்கள் ஆகியவற்றையும் அமைக்க முடியும்.

2.1.10 நிட்ரோ ப்ரோ (Nitro Pro)

நிட்ரோ ப்ரோவில் எளிமையாகப் படவுருக்கு மாற்றலாம். அதே நேரத்தில் படவுருக்கு மாற்றியதை ஒருவருக்கு மின்னஞ்சலும் செய்ய முடியும்.

2.1.11 போக்சித் படவுரு (Foxit Pdf)

படவுருக்கு மாற்றிய படைப்பைப் பற்றிய விபரங்கள் போக்சித் படவுருவில் காண முடியும்.

2.1.12 வடிவமைப்பு (Format)



படம் 10: வடிவமைப்பு

வடிவமைப்பில் நாம் சேர்க்கும் படங்களை நமக்கு ஏற்றது போல் அதன் அமைப்பை(Rotate) நாம் மாற்றிக் கொள்ள வடிவமைப்பு பயனுள்ளதாக இருக்கும்.

இந்த 12 செயல்பாடுகளின்வழி பவர்பாயிண்ட் மென்பொருள் இயங்குகின்றது.

3.0 பவர்பாயிண்ட் மென்பொருளின் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள்

3.1 எளிமையாகப் பயன்படுத்த இயலுக்கின்றது

இந்த மென்பொருள்வழி சிறுவர்கள் கூட எளிமையாகவும் சிறப்பாகவும் படைப்புகளைச் செய்ய முடியும். இதனால், சிறுவயது முதலே அவர்கள் பல அணுகுமுறைகளைப் பயன்படுத்தி படைப்புகள் வழங்க கற்றுக் கொள்ள இது சிறந்த தளமாக அமைக்கின்றது.

3.2 இலவசமான சேவையைப் பெற இயலும்.

இந்த மென்பொருளைப் பயன்படுத்த கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை. அதனால், ஒருவர் எந்த நேரமும் எந்த இடத்திலும் இருந்து பயன்படுத்த முடியும்.

3.3 இணையத்தின் துணையின்றி பயன்படுத்தலாம்

பவர்பாயிண்ட் மென்பொருளை இணையம் துணையின்றி பயன்படுத்தலாம். இதனால், எளிமையாக எந்த இடத்திலும் படைப்புகள் செய்யலாம்.

3.4 வில்லைக்காட்சிகளை விருப்பம்போல் தேர்ந்தெடுக்கலாம்

பவர்பாயிண்ட் மென்பொருளைப் பயன்படுத்துவதற்கு நமக்கு விருப்பமான வில்லைக்காட்சிகளை நாம் தேர்ந்தெடுக்க முடியும். அதனின் நிறம் அமைப்பைக்கூட நம்மால் தேர்ந்தெடுக்க முடியும்.

4.0 கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் பவர்பாயிண்ட் மென்பொருளின் பயன்பாடு

தற்காலத்தில் பவர்பாயிண்ட் மென்பொருளின் பயன்பாடு பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு மிகவும் தேவையான ஒன்றாக உருவெடுத்துள்ளது. பல செயலிகள் இதைவிட நவீனமாக கண்டுபிடிக்கபட்டிருந்தாலும் பவர்பாயிண்ட் பயன்பாடு அதிகமாகவேதான் இருக்கின்றது என்று கூறலாம். மாணவர்களிடையே வகுப்பில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குக் கணினியின் பயன்பாடு அதிகமாக இருப்பதால் படைப்புகள் எல்லாப் பாடங்களிலும் செய்ய இந்த மென்பொருள் துணையாக இருக்கின்றது. மாணவர்களும் இம்மாதிரியான அணுகுமுறைகளைக் கொண்டு நடத்தபடும் பாடங்களை விரும்புகின்றனர் (ரிக்மன் & கரட்சிங்கி, 2000).

இந்த மென்பொருளின் கண்டுபிடிப்புக்குப் பிறகு, நிறைய செயலிகள் இதை விட நவீனமான முறையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் பலர் இதனையே பயன்படுத்த விரும்புகின்றனர். கட்டணம் எதுவும் தேவையில்லை; விரைவாகவும் எளிமையாகவும் இதனின்பயன்பாடு அமைந்திருப்பதால் மாணவர்களும் ஆசிரியர்களும் இதனை அதிகமாக வகுப்பில் பயன்படுத்த விரும்புகின்றனர்.

இந்த மென்பொருளின்வழி நடத்தப்படும் வகுப்புகள் மாணவர்களுக்கு, ஆசிரியர்கள் பாடம் போதிக்கும்போது, அந்தப் பாடம் அவர்களுக்குத் தெளிவாகவும், கவனம் சிதறாமல் ஆசிரியர் பாடம் போதிக்கும்போது தகவல்களை உள்வாங்கி கொள்ளவும் முடிக்கின்றது (அப்பெர்சோன், லாவ் & ஸிபான்ஸ்கி, 2006). இதனால், மாணவர்களால்வகுப்பில் சிறப்பாகச் செயல்படவும், தேர்வில் சிறந்த புள்ளிகளையும் பெற முடிக்கின்றது (ஹில் et al.,2012).

மேலும், பவர்பாயிண்ட் போன்ற மென்பொருள்களைக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதால் காகிதங்களின் பயன்பாட்டை நம்மால் குறைக்க இயலுகின்றது. மாணவர்களும் பள்ளிக்குச் செல்லும்போது நிறைய புத்தகங்களைக் கொண்டு செல்லும் சூழலும் இதனால் குறைக்கின்றது. எனவே, பவர்பாயிண்ட் மென்பொருள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்கு மட்டுமில்லாமல் இயற்கைக்கும் மாணவர்களின் நலத்துக்கும் நன்மையைப் பல பயக்கின்றன.

இதைத் தொடர்ந்து, பவர்பாயிண்ட் மென்பொருள்வழி நடத்தப்படும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மாணவர்களின் அறிவாற்றல் கற்பித்தல் திறனை வளர்க்கின்றது (லேவைசிர் & சவ்யர், 2006). பவர்பாயிண்ட் மென்பொருள்வழி நடத்தப்படும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் மாணவர்களின் ஈடுபாடு அதிகமாக இருக்கின்றது . பவர்பாய்ண்ட், மென்பொருளில் நகர்ப்படம், நிலைமாற்றம் போன்ற அசைவுகள் கொண்டிருப்பதால் மாணவர்கள் பாடம் போதிக்கும்போது மகிழ்ச்சியுடன் பயில்கின்றனர். எனவே, வகுப்பில் கற்பிக்கப்படும் அனைத்தும் எளிதில் அவர்களின் மனதில் பதிக்கின்றது (அல்லேவேல் & லக்கோவிக், 2017).

5.0 பவர்பாயிண்ட் மென்பொருள்வழிப் படைப்பு உருவாக்கும் முறை



முதலில் படவில்லையில் தட்டச்சு செய்யும் முன் அதற்கான அமைப்பைத் (Design) தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்குப் பிறகு, நமக்குத் தேவையான மொழியைத் தட்டச்சு செய்ய தேர்ந்தெடுக்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து, நமக்கு விருப்பமான எழுத்து வடிவம், அதன் அளவு மற்றும் அதன் நிறத்தை முகப்பில் தேர்ந்தெடுத்த பிறகு தட்டச்சு செய்ய தொடங்கலாம். நம்முடைய தேவைக்கேற்ப நாம் செய்த படைப்புகளை அலங்கரிக்கலாம். எனவே, பவர்பாயிண்ட் மென்பொருள்வழி நம்முடைய படைப்புகளை மிக எளிமையாகச் செய்யலாம்.

6.0 முடிவுரை

எனவே, புத்தாக்கம் கொண்ட மென்பொருள் அல்லது செயலிகளின் வழி மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை மேம்படுத்த முடியும். இந்தப் புத்தாக்கங்களைக் கொண்டு பாடங்கள் வகுப்பில் போதிக்கும்போதுமாணவர்களின் புரிதல் அதிகரிக்கின்றது; அதே நேரத்தில் சிறந்த புள்ளிகளையும் வகுப்பில் அவர்களால் பெற முடிக்கின்றது. எளிமையான முறையில் அமைந்திருக்கும் இந்தப் பவர்பாயிண்ட் மென்பொருள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்கு மிகவும் பயனாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் விளங்குகின்றது. பவர்பாயிண்ட் மென்பொருள்வழி தமிழ்மொழிப் பாடத்தில், இலக்கணப் பகுதியில் அமைந்திருக்கும் பெயர்ச்சொல் பற்றி மாணவர்களுக்குத் தெளிவாக போதிக்கப்பட்டு, விளக்கப்பட்டுள்ளது. அது பலருக்குப் பயனுள்ளதாக அமைய வேண்டும் எண்ணத்தில் வலையொளியில் பதிவுச் செய்யப்பட்டுள்ளது.

7.0 துணைநின்றவை

- அப்பர்சன், ஜே.எம்., சட்டங்கள், ஈ. எல்., மற்றும் செஸ்பான்ஸ்கி, ஜே. ஏ. (2006), வகுப்பறையில் மாணவர்களின் அனுபவங்களில் திறன்முனை கிராபிக்ஸின் தாக்கம். கணினிகள் மற்றும் கல்வி, 47, 116-126. https://doi.org/10.1016/j.compedu.2004.09.003
- ஆர்க்நெட், ஆர். ஜே., கோபேன், சி.டி. (1997). அறிவுறுத்தல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், அனைத்துலக தொடர்புகள். அரசியல் அறிவியல் மற்றும் அரசியல், 30, 496–500. https://www.cambridge.org/core/journals/ps-political-science-இல், ஆர்ஃபோர்ட், டி., லுபிடோ, ஏ., &ஸ்மோலின், எல். எம். (2012). "நான் அதைப் பற்றி தெளிவற்றவன்": தி. திறன்முனையில் காணப்படும் குழப்பங்களும் கற்பித்தல் சமூகவியலும் ஆகும். 40, 242-256. https://doi.org/10.1177/0092055X12444071
- இரிக்மேன், ஜே., &க்ரூட்ஜின்ஸ்கி, எம். (2000). தகவலின் மாணவர் எதிர்பார்ப்புகள், வகுப்பறையில் தொழில்நுட்ப பயன்பாடு. கல்வி காலாண்டு, 23, 24-30.
- கிறிஸ்டோபர், டீன்ட்ரா மற்றும் மியர்ஸ், கார்லி, "பிரதிபலிப்பின் பங்கு மாற்ற முடியுமா?: திறன்முனை பயன்படுத்தும் முறைகள். (2021). சேரிடன் கிரேயடேஷ் https://source.sheridancollege.ca/conferences_creates/2021/2021/9
- கேத்தரினா. (2006). திறன்முனையை ஒரு பயனுள்ள அறிவுறுத்தல் கருவியாகப் பயன்படுத்துதல்.https://doi.org/10.4219%2Fgct-2006-8
- துப்தி.இ. (2003). திறன்முனையின் அறிவாற்றல் நிலை. செஷயர், CT: கிராபிக்ஸ் பிரஸ். https://dl.acm.org/doi/abs/10.5555/121358
- மாதேசன், பெர்கின்ஸ், டி., ஸ்னெடன், டி. (2002, ஜனவரி). திறன்முனை உருவாக்குதல். அமாரிக்கா பொருளாதார சங்க மாநாடு, அட்லாண்டா. https://economicsnetwork.ac.uk/advice/powerpoint.pdf.
- முர்பி. T. (2004). திறன்முனையின் பயன்பாட்டு முறைகள், கார்ட்டூன், ஊடகத் தொடர்பு காணொலி. SIGUCCS'04. http://www.bitbetter.com/ powertips.htm

- லெவாசூர், டி. ஜி. & சாயர், கே. (2006). கற்பித்தல் திறன்முனை சந்திக்கிறது: ஒரு ஆராய்ச்சி வகுப்பறையில் கணினி உருவாக்கிய ஸ்லைடுகளின் விளைவுகள் பற்றிய ஆய்வு. பற்றிய ஆய்வு தொடர்பு, 6, 101-123 https://doi.org/10.1080/15358590600763383.7.
- Apperson, J. M., Laws, E. L., & Scepansky, J. A. (2006). The impact of presentation graphics on students' experiences in the classroom. Computers &Education, 47, 116–126. https://doi.org/10.1016/j.compedu.2004.09.003.
- Catharina.(2006). Using Powerpoint as an Effective Instructional Tool. https://doi.org/10.4219%2Fgct-2006-8
- Christopher, Deandra and Myers, Carly, "Can the Role of Reflection Transform the Way. We Use PowerPoints (Presentation)" (2021). Sheridan Creates. https://source.sheridancollege.ca/conferences_creates/2021/2021/9
- Harknett, R. J., Cobane, C. T. (1997). Introducing instructional technology the international relations. Political Science and Politics, 30, 496–500.https://www.cambridge.org/core/journals/ps-political- science- Hill, Arford, T., Lubitow, A., & Smollin, L. M. (2012). "I'm ambivalent about it": The dilemmas of PowerPoint. Teaching Sociology, 40, 242–256. https://doi.org/10.1177/0092055X12444071
- Levasseur, D. G., & Sawyer, K. (2006). Pedagogy meets PowerPoint: A researchreview of the effects of computer-generated slides in the classroom. Review ofCommunication, 6, 101–123. https://doi.org/10.1080/15358590600763383.7.
- Murphy, T. (2004, October). Research based methods for using PowerPoint,animation, and video for instruction. SIGUCCS'04. Retrieved November 1, 2005, from http://www.bitbetter.com/ powertips.htm
- Rickman, J., & Grudzinski, M. (2000). Student expectations of information technology use in the classroom. Educause Quarterly, 23, 24–30.
- Tufte, E. (2003). The cognitive style of PowerPoint. Cheshire, CT: Graphics Press https://dl.acm.org/doi/abs/10.5555/121358
- Ponniah, K., Thamburaj, K. P., & Samuvell, S. J. I. (2017). Language attitude among Tamil language teachers. *International Journal of Advanced and Applied Sciences*, *4*(6), 142-147.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2016). Hierarchical grammatical tagging for tinai (landscape) of cankam Tamil literature. *Indian Journal of Science and Technology*, *9*(48).
- Thamburaj, K. P., & Rengganathan, V. (2015). A Critical Study of SPM Tamil Literature Exam Paper. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *5*, 13-24.
- Thamburaj, K. P., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [A study on modern and traditional writing skill]. *Muallim Journal of Social Sciences and Humanities*, 141-146.
- Thamburaj, K. P. (2015). Promoting scientific ideas through the future studies in Tamil language teaching. *Procedia-Social and Behavioral Sciences*, *174*, 2084-2089.
- Thamburaj, K. P., Arumugum, L., & Samuel, S. J. (2015, August). An analysis on keyboard writing skills in online learning. In *2015 International Symposium on Technology Management and Emerging Technologies (ISTMET)* (pp. 373-377). IEEE.

- Thamburaj, K. P. (2021). An Critical Analysis of Speech Recognition of Tamil and Malay Language Through Artificial Neural Network. *Turkish Journal of Computer and Mathematics Education (TURCOMAT)*, *12*(9), 1305-1317.
- Thamburaj, K. P., & Shakunthala, R. (2016). Standardization of question items to test tamil case markers–a study. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *6*, 9-16.
- Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K. P. (2021). Traditional teaching method-concept of moral education and pedagogy in Aathicuudi. *Muallim Journal of Social Sciences and Humanities*, 176-182.
- Thamburaj, K. P. (2021). E-Teaching in Teacher Education—A Conceptual Framework of Sultan Idris Education University. *Sino-US English Teaching*, *18*(5), 107-111.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2020). THE USE OF MOBILE–ASSISTED LANGUAGE LEARNING IN TEACHING AND LEARNING TAMIL GRAMMAR. *PalArch's Journal of Archaeology of Egypt/Egyptology*, *17*(10), 843-849.
- Thamburaj, K. P., Sivanadhan, I., & Kumar, M. (2021). IMPROVING FORM 4 STUDENT'S READING COMPREHENSION SKILLS IN TAMIL LANGUAGE BY USING SQ3R METHOD. *Psychology and Education Journal*, *58*(2), 2291-2295.
- Thamburaj, Kingston Pal. "A Process of Developing an ASR System for Malay and Tamil Languages." *Design Engineering* (2021): 731-741.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2015). வள்ளுவர்கூறும்நட்பின்மறுகட்டமைதி (Reframing Valluvar's claim on Friendship). *Journal of Tamil Peraivu (தமிழ்ப்பேராய்வு ஆய்விதழ்)*, *2*(1), 7-13.

****

எக்ஸ்பிளீ (Explee), பவர் டைரக்டர் (PowerDirector) செயலிவழித் தமிழ் இலக்கியத்தைக் கற்பித்தல் Teaching Tamil Literature using Explee and Power Director Applications

கோகிலவாணி சிவக்குமார் | KOKILAVANI SIVAKUMAR

Student of Tamil Department, Sultan Idris Education University, Malaysia

ஆய்வுச் சுருக்கம்

எக்ஸ்ப்ளீ என்பது டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் உருவாக்கமாகும். இதில் பயனீட்டாளர்களுக்கு "வைட்போர்டு அனிமேஷன்" விளக்கக்காட்சிகளை உருவாக்க அனுமதிக்கிறது. எக்ஸ்ப்ளீ செயலி தன்னுள் மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை, காட்சி அதாவது தளவமைப்பு பலகை, ஓர் ஊடக பலகை அதில் நூற்றுக்கணக்கான படங்கள், இசை மற்றும் உரை விருப்பங்கள் உள்ளடங்கியிருக்கும், மற்றும் ஒரு காலவரிசை அதாவது காணொளி உருவாக்கத்திற்கான கதைக்களம் போன்றது ஆகும். தமிழ் மொழி கற்பித்தலிலும் எக்ஸ்பிளீயைப் பயன்படுத்தலாம். உதாரணமாக, இதில் தமிழ் இலக்கியங்களில் ஒன்றான

பழமொழி பயன்படுத்தப்பட்டுள்ளது. பாரம்பரிய முறையான ஆசிரியர் கூறும் விளக்கத்தைக் கேட்டு மாணவர்கள் புரிந்து கொள்வது போல் இல்லாமல் இதில் அந்த பழமொழிக்கு ஒரு கதைக்களம் அமைக்கலாம். அதனை மாணவர்களை ஈர்க்கும் வண்ணம் மாற்றியும் அமைக்கலாம். அடுத்து, பவர் டைரக்டர் என்பது காணொளிகளைத் தொகுக்க பயன்படுத்தப்படும் செயலியாகும். இதில் பின்னிணை குரல் பதிவு, இசை, காட்சிகள் ஒழுங்குபடுத்துதல் போன்றவற்றை மேற்கொள்ளலாம். மாணவர்களிடத்தில் எக்ஸ்பிளீ, பவர் டைரக்டர் என இரு செயலிகள் தமிழ் மொழி கற்பிதலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

Abstract

Explee application is the development of digital technology. It allows users to create "whiteboard animation" presentations. The Explee processor itself has three main parts. They are visual, a layout board, a media board that contains hundreds of images, music and text options, and a timeline, such as a storyline for video creation.Thus, Explee can make Tamil language teaching more interesting. For example, one of the proverbs in Tamil literature is used. It can be easily taught to students by this application. This can set a storyline for the proverb without the students having to listen to the traditional teacher's explanation. Listening to the story in general is one of the most favorite things for students. Therefore, this application can set the storyline for the proverb or any kind of literature that comes to teach. It can also be set to change the color to attract students easily. Unlike other processors, teachers can draw and illustrate scenes without creating a storyline with only scenes. This is the uniqueness of this Explee application. Other than that, Power Director is an application used to compile videos. This includes voice recording, music, and scene adjustment. Therefore, teachers can download the video created in the Explee application and then compile it in the Power Director app. So, Explee and PowerDirector applications can easily bring Tamil literature to students.

திறவுச்சொற்கள் (Keywords): எக்ஸ்பிளீ, Explee, பவர் டைரக்டர், PowerDirector, தமிழ் இலக்கியம், கற்பித்தல்

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சி கொண்ட உலகின் சிறந்த இலக்கியங்களில் ஒன்று. வாழ்வின் பல்வேறு கூறுகளைத் தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன. தமிழ் இலக்கியத்தில் வெண்பா, குறள், புதுக்கவிதை, கட்டுரை, பழமொழி, தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்கள் எனப் பல வடிவங்கள் உள்ளன. தமிழில் வாய்மொழி இலக்கியங்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. இவ்வாறான தமிழ் மொழி இலக்கியத்தை மாணவர்களிடம் கற்பித்தல்வழிக் கொண்டு சேர்ப்பது அனைத்து ஆசிரியர்களின் கடமையாகும். கற்பித்தல் முறை என்பது மாணவர் கற்றலைச் செயல்படுத்த ஆசிரியர்கள் பயன்படுத்தும் கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை உள்ளடக்கியது. இந்த உத்திகள் பகுதியளவில் கற்பவரின் இயல்பின் அடிப்படையிலும், பகுதியளவில் கற்பிக்கப்படும் பாடப்பொருளின் அடிப்படையிலும். அமைந்திருக்கும். ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் முறை பொருத்தமானதாக மற்றும் செயல்திறன் மிக்கதாக இருக்க வேண்டும். மேலும், ஆசிரியர் மைய முறையில் ஆசிரியர்கள் முதன்மையானவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் கூறுவதை மௌனமாக கேட்டு கற்றலில் ஈடுபடுவர். ஆசிரியர்கள் மைய கற்பித்தல் அணுகுமுறையில், ஆசிரியர்கள் அதிகார மையங்களாக விளங்குகிறார்கள். தேர்வு மற்றும் மதிப்பீட்டின் மூலம் மாணவர்களின் கற்றல் அடைவுகள் சோதிக்கப்படுகிறது. மேலும், இவ்வாறான கற்பித்தலில்

தொழில்நுட்பத்தின் பங்கு அலப்பரியதாகும். 21ம் நூற்றாண்டில் கல்வித்துறை மாற்றத்தில், தொழில்நுட்பம் பேருதவி புரிந்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இத்திட்டம் முறையாக செயல்படுத்தபடுமேயானால், வாழ்நாள் முழுக்க பயன்படும் கல்வி அறிவு மற்றும் திறமையை மாணவர்கள் எளிதாக பெற இயலும். ஆகவே, இந்த இடுபணியில் தமிழ்மொழி இலக்கியத்தை தொழில்நுட்பத்தின் வழி கற்பிக்கும் வழிமுறை கூறப்பட்டுள்ளது.

எக்ஸ்பிளீ (Explee), பவர் டைரக்டர் (Power Director) செயலிவழி இலக்கியத்தைக் கற்பித்தல்

இன்றைய சூழலில், கோவிட்-19 தொற்று பரவலைக் கட்டுப்படுத்த, கல்வி வளாகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. மாணவர்களின் நலனைக் கருதி இந்த முடிவு கல்வி அமைச்சால் எடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் மாணவர்கள் வெளியே செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கியுள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் மாணவர்களின் கல்வியைக் காத்து நிற்பது இணைய வழிக் கல்வியாகும்.

இணைய வழிக் கல்வி என்பது மாணவர்கள் இணையத்தில் காணப்படும் சில செயலிகளின் வழித் தன் கற்றல் திறனை வளப்படுத்துவதாகும். மேலும், சில திறன்மிக்க ஆசிரியர்களின் விளக்க உரைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட காணொளிகள் அதற்கான இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றது. இதன் வழியும் மாணவர்கள் நிறைய புதிய தகவல்களைக் கற்றுக் கொள்ளலாம். அதோடு, அந்தத் தளங்களில் கல்வி மட்டுமல்லாமல் தொழில்நுட்பம், பொது அறிவு, பொழுதுபோக்கு ஆகியவை குறித்த விளக்கக் காணொளிகளும் கிடைக்கப் பெறுகின்றன. தகவல் தொடர்பு நுட்பம், குறிப்பாக, கணினி மற்றும் இணையதளம் முறையாகப் பயன்படுத்தப்பட்டால், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவரும் பயன்பெரும் வாய்ப்பு உள்ளது. இந்தப் புதிய முறை பாடம் கற்பித்தலில், ஆசிரியர்கள் மாணவர்களை மையப்படுத்தி கற்பிக்க வழிவகுக்கிறது.

தொழில்நுட்பப் பயன்பாட்டின் மூலம், பல புதிய முறைகளில் தகவலைப் பயன்படுத்த மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. மனப்பாடம் செய்து படிப்பதைக் காட்டிலும், வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல், கற்றலை எளிமையாக்குதல், கற்போரின் வாழ்க்கைச் சூழ்நிலைக்கு ஏற்ப கல்வி அமைதல் ஆகியவை சாத்தியமாகும்.

மேலும், தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கற்றல் முறையானது, மாணவர்கள், ஆசிரியர்கள், வல்லுநர்களிடையே அவர்களுடைய இடம், தகுதியைக் கணிக்காமல் கலந்துரையாட ஊக்குவிக்கின்றது. பலவிதமான கலாச்சார பிரிவினரிடையே பழகுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கிறது. இதன் மூலம் கற்போருடையே ஒருமித்த கருத்தும், தகவல் பரிமாறிக் கொள்ளும் திறனும் அதிகமாக உதவி செய்கிறது. அதோடுமட்டுமல்லாமல், கல்வி பயிலுதல் ஒரு காலகட்டத்திற்கு மட்டும் என்றில்லாமல், வாழும் காலம் முழுக்க தொடர் பணியாக மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறான இணைய வழிக் கற்றல் கற்பித்தல் சூழ்நிலைகளில் ஆசிரியர்கள் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். ஒரு தேர்ந்த ஆசிரியரால் மட்டுமே எந்த ஒரு கடினமான பாடத்தையும் இலகுவானதாக மாணவர்களை ஈர்க்கும் வண்ணம் மாற்ற முடியும்.

அவ்வாறு ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலை மாணவர்களை ஈர்க்கும் வண்ணம் அமைப்பதற்கு பயன்பாட்டில் உள்ள பல செயலிகளையும் மென்பொருள்களையும் பயன்படுத்தலாம். அதிலும்

குறிப்பாக எக்ஸ்பிளீ எனும் இந்தச் செயலியின் வழிக் கற்றுக் கொடுக்கும் பாடத்தை விறுவிறுப்பாகவும் சுலபமான முறையிலும் மாணவர்களிடத்தில் கொண்டு சேர்க்கலாம்.

எக்ஸ்ப்ளீ என்பது டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் உருவாக்கமாகும். இதில் பயனீட்டாளர்களுக்கு "வைட்போர்டு அனிமேஷன்" விளக்கக்காட்சிகளை உருவாக்க அனுமதிக்கிறது. எக்ஸ்ப்ளீ செயலி தன்னுள் மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை, காட்சி அதாவது தளவமைப்பு பலகை, ஒர் ஊடக பலகை அதில் நூற்றுக்கணக்கான படங்கள், இசை மற்றும் உரை விருப்பங்கள் உள்ளடங்கியிருக்கும், மற்றும் ஒரு காலவரிசை அதாவது காணொளி உருவாக்கத்திற்கான கதைக்களம் போன்றது. மேலும், இதில் பயனர்கள் தங்களின் சொந்த படங்களைப் பதிவேற்றலாம் அல்லது ஏற்கனவே வழங்கியவற்றைப் பயன்படுத்தலாம் மற்றும் அவற்றை எந்த வரிசையிலும் காட்சிக்கு அமர்த்தலாம். அதோடு, ஒலி தேர்வுகளைப் பொறுத்தவரை, பயனர்கள் தங்களின் சொந்த இசையைப் பதிவேற்றலாம் மற்றும் உரை-க்கு-பேச்சு அம்சத்தின் மூலம் காணொளியை உருவாக்கலாம். முன்னோட்ட விசையும் இதில் உள்ளடங்கியுள்ளது. இதன் மூலம் படைப்பாளர்கள் தங்களின் இறுதி படைப்பு அல்லது தயாரிப்பு எவ்வாறு இருக்கும் என்பதை முன்னரே காணலாம்.

எக்ஸ்பீளி தளத்தில் பொதுவாக சேமிக்கப்படும் ஒரு நிமிடம் வரையான காணொளிகளை உருவாக்கப் பயனர்களை ஒரு இலவச கணக்கு அனுமதிக்கிறது. பள்ளிகளுக்கான தனித்துவமான திட்டங்கள் அதிக செலவு மற்றும் கூடுதல் அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. வீடியோக்கள் 10 நிமிடங்கள் வரை இருக்கலாம், மேலும் பயனர்கள் தங்கள் வீடியோக்களைப் பதிவிறக்கம் செய்யலாம், YouTube க்கு ஏற்றுமதி செய்யலாம், தனியுரிமைக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தலாம். பெரும்பாலும், மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிப்பதற்காக காட்சி விளக்கக்காட்சிகள் உள்ளிட்ட பாடங்களுக்கு ஆசிரியர்கள் எக்ஸ்பீளைப் பயன்படுத்துவார்கள். ஆசிரியர்கள் இந்த விளக்கக்காட்சி கருவியைத் தங்கள் மாணவர்களுக்கு வழங்குவதை விரும்புவர், ஏனென்றால் இதனால் மாணவர்கள் தங்கள் அறிவையும் ஒரு கருத்தைப் பற்றிய புரிதலையும் வெளிப்படுத்துவதில் ஆக்கப்பூர்வமாக இருக்க முடியும். காணொளியை உருவாக்குவதில் மாணவர்கள் ஆக்கப்பூர்வமாகவும் சுறுசுறுப்பாகவும்எப்பொழுதும் இருப்பார்கள், மேலும் காணொளி வடிவமைப்பதில் உள்ள ஆக்கபூர்வமான சவால்கள் அவற்றின் அர்த்தத்தை உருவாக்க உதவும். ஒரு அறிவியல் வகுப்பில் வரவிருக்கும் ஆய்வகத்திற்கு மாணவர்களை விளம்பரப்படுத்துங்கள் என்றும் அல்லது கணித சிக்கலின் படிகளை விளக்குங்கள் என்றும் ஆசிரியர்கள் இந்த செயலி வழிக் கூற இயலும். ஒரு முக்கிய நிகழ்வை விளக்கும் காணொளியை உருவாக்க வரலாற்று வகுப்புகளில் உள்ள மாணவர்களை ஊக்குவிக்கவும், அல்லது இலக்கிய வகுப்புகளில் கற்கும் பாடத்தை வரிவடிவத்துடன் உருவாக்க வேண்டும் என்றும் ஆசிரியர்கள் மாணவர்களிடம் கூறலாம். புதிய கருத்துகளை அறிமுகப்படுத்த அல்லது கடினமான பாடத்தைக் கற்பிக்கும் பொழுதும் ஆசிரியர்கள் எக்ஸ்பீளைப் பயன்படுத்தலாம்.

இவ்வாறு தமிழ் மொழி கற்பித்தலிலும் எக்ஸ்பிளீயைப் பயன்படுத்தலாம். உதாரணமாக, இதில் தமிழ் இலக்கியங்களில் ஒன்றான பழமொழி பயன்படுத்தப்பட்டுள்ளது. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை எனும் இந்த மொழியை எக்ஸ்பிளீ செயலி வழி மாணவர்களுக்கு எளிதில் கற்பிக்க இயலும். இதனைப் பாரம்பரிய முறையான ஆசிரியர் கூறும் விளக்கத்தைக் கேட்டு மாணவர்கள் புரிந்து கொள்வது போல் இல்லாமல் இதில் அந்த பழமொழிக்கு ஒரு கதைக்களம் அமைக்கலாம். மாணவர்களுக்கு பொதுவாகவே கதையைச் செவிமடுப்பது என்பது மிகவும் பிடித்தமான ஒன்றாகும். ஆகையால், இந்தச் செயலி வழி கற்பிக்க வரும் பழமொழி அல்லது

எந்தவித இலக்கியமாக இருந்தாலும் அதற்கு கதைக்களம் அமைக்கலாம். அதனை மாணவர்களை ஈர்க்கும் வண்ணம் மாற்றியும் அமைக்கலாம். மற்ற செயலிகளைப் போல் காட்சிகளை மட்டும் கொண்டு கதைக்களம் உருவாக்காமல் இதில் அந்தக் காட்சிகளை வரைந்து விளக்கப்பட்டு அமைக்கலாம். இது இந்த எக்ஸ்பிளீ செயலியின் தனிச்சிறப்பாகும். உதாரணமாக, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை எனும் பழமொழிக்கு ஆதரவற்றோர்க்கு உதவ எண்ணும் மாணவி தன்னுடன் மற்ற மாணவர்களைச் சேர்த்து ஒன்றிணைந்து அந்தச் செயலை வெற்றிப் பெற வைக்கின்றாள் என்பது போல் கதைக்களம் அமைக்கலாம். ஆசிரியர்கள் வெறும் மாணவர்களுக்கு விளக்கத்தை மட்டும் கூறிக் கொண்டு செல்லாமல் அதனை இவ்வாறு கதையாக கூறினால் மாணவர்களின் மனத்தில் இன்னும் ஆழமாக புரியும். மாணவர்கள் அதனைச் சுலபமாக நினைவு கூர்ந்து கொள்ளவும் முடியும். மேலும், தற்பொழுது சூழ்நிலையில் இணைய வழிக் கல்வி என்பதனால் மாணவர்கள் அதிக நேரம் கணினி முன் அல்லது கைத்தொலைபேசியைப் பார்க்க விரும்ப மாட்டார்கள். ஆகையால், இந்தச் செயலியின் வழிக் கூற வரும் கருத்தைச் சுருங்கக் கூறி விளங்க வைக்க இயலும். அதோடு, இணைய சிக்கலை எதிர்நோக்கும் மாணவர்களுக்கும் சுலபமாக இருக்கும் ஏனென்றால் இந்தக் காணொளிகள் மிகவும் குறுகிய கால வரையே கொண்டவையாகும்.

எக்ஸ்பிளீ செயலி மாணவர்களை ஈர்பதற்க்கும் பாடத்தைச் சுலபமாக்குவதற்கும் ஏதுவாக இருந்தாலும் இதில் சில குறைப்பாடுகள் உள்ளன. இந்தச் செயலியில் தமிழில் தட்டச்சு செய்ய இயலாது. இதில் அதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. ஆசிரியர்கள் படங்களைக் கொண்டு மட்டுமே கதைக்களம் அமைக்க இயலும். அதில் தட்டச்சு செய்து செய்திகளைப் பதிவிட முடியாது. இது இந்த செயலியில் மிகப் பெரிய குறைபாடாக உள்ளது. மேலும், இந்தச் செயலியில் தமிழில் பின்னிணைக் குரல் பதிவு வழங்க இயலாது. 6 மொழிகளில் மட்டுமே இதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சிக்கலைக் களைவதற்குப் பவர் டைரக்டர் எனும் செயலியைப் பயன்படுத்த இயலும். பவர் டைரக்டர் என்பது காணொளிகளைத் தொகுக்கப் பயன்படுத்தப்படும் செயலியாகும். இதில் பின்னிணைக் குரல் பதிவு, இசை, காட்சிகள் ஒழுங்குபடுத்துதல் போன்றவற்றை மேற்கொள்ளலாம். ஆகையால், எக்ஸ்பிளீ செயலியில் உருவாக்கப்பட்ட காணொலியைப் பதிவிறக்கம் செய்து பின் அதனைப் பவர் டைரக்டர் செயலியில் தொகுக்கலாம். இதில் சுலபமாக காட்சிகளுக்குப் பின்னிணைக் குரல்பதிவு கொடுக்கலாம். மேலும், இந்தப் பவர் டைரக்டர் செயலியில் தமிழிலும் தட்டச்சு செய்யலாம். ஆகையால், எக்ஸ்பிளீ செயலியில் ஏற்பட்ட சிக்கலைப் பவர் டைரக்டர் செயலி வழிச் சுலபமாக சரி செய்து விடலாம்.

ஆகவே, மாணவர்களிடத்தில் எக்ஸ்பிளீ, பவர் டைரக்டர் என இரு செயலிகள் தமிழ் மொழி கற்பிதலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். தமிழ் மொழி இலக்கியத்தின் மேல் அவர்களுக்கு உள்ள ஆர்வம் பெருகும், அதனை மேலும் இரசிக்கவும் தொடங்குவார்கள். மேலும், தற்பொழுது உள்ள இணைய வழிக் கற்றல் கற்பித்தலில் இவ்வாறான செயலிகளைக் கொண்டு கற்பிப்பதனால் மாணவர்களுக்கு எளிமையாக புரியும், அவர்களின் நேரத்தையும் சேமிக்கலாம்.

முடிவுரை

தமிழ் மொழி இலக்கிய கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பங்கு அலப்பரியதாகும். அதிலும் குறிப்பாக நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையால் எதிர்கொள்ளும் இணையம் வழிக் கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகமாக உள்ளது. அவ்வகையில் எக்ஸ்பிளீ

(Explee), பவர் டைரக்டர் (PowerDirector) எனும் செயலி வழி இலக்கியத்தை மிக சுலபமான முறையில் மாணவர்களிடத்தில் கொண்டு சேர்க்கலாம். இவ்வாறு கற்பிக்கப்படும் பாடங்கள் மாணவர்களின் மனத்தில் மிக ஆழமாக பதிவதுடன் அவர்கள் சிரமம் எடுத்து மனப்பாடம் செய்ய தேவையில்லை. மேலும், இந்தச் செயலிகளின் வழிக் கற்பிப்பதன் மூலம் இலக்கிய பாடத்தில் மாணவர்களின் ஆர்வத்தைப் பெருக்க இயலும். ஆகவே, எக்ஸ்பிளீ (Explee), பவர் டைரக்டர் (PowerDirector) செயலி தமிழ்மொழி இலக்கியப் பாடத்தின் கற்பித்தலில் துணை புரிகின்றது என்றால் அது மிகையாகாது.

துணைநின்றவை

- Appana, S. (2008). A review of benefits and limitations of online learning in the context of the student, the instructor and the tenured faculty. *International Journal on E-learning*, *7*(1), 5-22.
- Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K. P. (2021). Traditional teaching method-concept of moral education and pedagogy in Aathicuudi. *Muallim Journal of Social Sciences and Humanities*, 176-182.
- Cairncross, S., & Mannion, M. (2001). Interactive multimedia and learning: Realizing the benefits. Innovations in education and teaching international, 38(2), 156-164.
- Ponniah, K., Thamburaj, K. P., & Samuvell, S. J. I. (2017). Language attitude among Tamil language teachers. *International Journal of Advanced and Applied Sciences*, *4*(6), 142-147.
- Rosidah, I. (2021, March). The "Power Director" Application as a Media for Indonesian Language Teaching Using "Ruang Guru" Style at PGRI Wiranegara University. In *5th International Conference on Arts Language and Culture (ICALC 2020)* (pp. 94-99). Atlantis Press.
- Thamburaj, K. P. (2015). Promoting scientific ideas through the future studies in Tamil language teaching. *Procedia-Social and Behavioral Sciences*, *174*, 2084-2089.
- Thamburaj, K. P. (2021). An Critical Analysis of Speech Recognition of Tamil and Malay Language Through Artificial Neural Network. *Turkish Journal of Computer and Mathematics Education (TURCOMAT)*, *12*(9), 1305-1317.
- Thamburaj, K. P. (2021). E-Teaching in Teacher Education—A Conceptual Framework of Sultan Idris Education University. *Sino-US English Teaching*, *18*(5), 107-111.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2015). வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி (Reframing Valluvar's claim on Friendship). *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, *2*(1), 7-13.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2016). Hierarchical grammatical tagging for tinai (landscape) of cankam Tamil literature. *Indian Journal of Science and Technology*, *9*(48).
- Thamburaj, K. P., & Ponniah, K. (2020). THE USE OF MOBILE-ASSISTED LANGUAGE LEARNING IN TEACHING AND LEARNING TAMIL GRAMMAR. *PalArch's Journal of Archaeology of Egypt/Egyptology*, *17*(10), 843-849.
- Thamburaj, K. P., & Rengganathan, V. (2015). A Critical Study of SPM Tamil Literature Exam Paper. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *5*, 13-24.
- Thamburaj, K. P., & Shakunthala, R. (2016). Standardization of question items to test tamil case markers–a study. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *6*, 9-16.
- Thamburaj, K. P., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [A study on modern and traditional writing skill]. *Muallim Journal of Social Sciences and Humanities*, 141-146.
- Thamburaj, K. P., Arumugum, L., & Samuel, S. J. (2015, August). An analysis on keyboard writing skills in online learning. In *2015 International Symposium on Technology Management and Emerging Technologies (ISTMET)* (pp. 373-377). IEEE.
- Thamburaj, K. P., Sivanadhan, I., & Kumar, M. (2021). IMPROVING FORM 4 STUDENT'S READING COMPREHENSION SKILLS IN TAMIL LANGUAGE BY USING SQ3R METHOD. *Psychology and Education Journal*, *58*(2), 2291-2295.
- Thamburaj, Kingston Pal. "A Process of Developing an ASR System for Malay and Tamil Languages." *Design Engineering* (2021): 731-741.

மின் கல்வியும் கண் நோயியல் தொடர்பான பகுப்பாய்வும் : மாவனல்லை ஸாஹிரா பாடசாலையை மையப்படுத்திய ஆய்வு E - Learning and Analysis of Ophthalmology: A study based on Zahira School, Mawanella

எப். சிப்னா | F. Shifna

SDTI Campus of Sri Lanka, worldfocus909@gmail.com, ORCIT ID: https://orcid.org/0000-0003-4552-0133

ஆய்வுச்சுருக்கம்

தற்காலத்தில் மின் கல்வி என்பது மாணவர்களின் வாழ்வில் ஓர் அங்கமாக மாறிவிட்டது. அந்த வகையில் மின் கல்வியும் கண் நோயியல் தொடர்பான பகுப்பாய்வும் என்ற தலைப்பில் மாவனல்லை ஸாஹிரா பாடசாலையை மையப்படுத்திய ஆய்வாக இவ் ஆய்வு அமையப்பெற்றுள்ளது. இந்நிலையில் மின் கல்வியானது மாணவர்கள் மத்தியில் எந்தளவிற்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்றதோ அந்தளவிற்குப் பெற்றோர்கள் மத்தியிலும் இம் மின் கல்வியினால் மாணவர்களது கண்கள் பாதிக்கப்படுகின்றன என்ற கருத்தும் பரவலாக பேசப்பட்டுக்கொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஆகவே இதனை ஆய்வுப் பிரச்சினையாகக்கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. W2இவ்வாய்வானது தற்போதைய சூழலில் அதிகமாக கண் பாதிக்கப்படுவதற்கான முக்கிய காரணங்களைக் கண்டறிதல், மின் கல்வி மூலம் மட்டுமே கண் பாதிக்கப்படுகின்றது என்ற அறிதல் பிழையானது என்பதனை நிரூபித்தல் போன்றவற்றைத் தன்னுள் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் தற்கால சூழ்நிலையில் மாணவர்களினுடைய கண் பாதிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கும் வகையில் இவ் ஆய்வானது முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இவ் ஆய்வு அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அமையப்பெற்றுள்ளது. அந்த வகையில் இது கலப்பு முறையிலான ஆய்வாக அமைகின்றது. மேலும் இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக வினாக் கொத்து, கலந்துரையாடல், அவதானம் போன்றன பயன்படுத்தப்பட்டு இத்தரவுகள் யாவும் MS Excel லினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக சஞ்சிகைகள், இணையத்தளம் அதனுடன் தொடர்புடைய ஆய்வுக் கட்டுரைகளும் பயன் படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் இவ்வாய்வானது இலங்கை, கேகாலை மாவட்டத்தின் மாவனல்லை பிரதேசத்தில் அமைந்துள்ள ஸாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் முதலாம் தர வகுப்பிலிருந்து ஐந்தாம் தர வகுப்பு வரையான மாணவர்களையும், க.பொ.த உயர்தர மாணவர்களையும் மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் 200 மாணவ, மாணவிகள் எழுமாற்று மாதிரியின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாய்வில் ஸாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் கண்கள் பாதிப்படைவதற்கு மின் கல்விக்காகப் பயன்படுத்தும் நேரத்தை விட மற்றைய பொழுதுபோக்கு விடயங்களிற்கு அதிகமான நேரங்களைச் செலவழிப்பதே பிரதான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளதோடு ஆண் மாணவர்களே அதிகமாக கண் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர் என்பதும் மின் கல்விக்காக மட்டும் தொலைத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தியவர்களுக்குக் கண்

பாதிப்பு பெரிய அளவில் ஏற்படவில்லை என்பது தொடர்பாகவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே மாணவர்களை இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து பாதுகாப்பதற்காக, பாடசாலையில் உள்ள அதிபர், ஆசிரியர்கள் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்தி இவர்களின் மூலம் பெற்றோர்களுக்கான கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் போன்ற ஏற்பாடுகளை மேற்கொண்டு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக பிள்ளைகளை கையாளும் விதங்களைத் தெளிவுப்படுத்துதல் மேலும் நடைமுறைக்கு ஏற்றவாறு அறிவுரைகளை வழங்குதல் போன்ற ஏற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் மாணவர்களுக்கும் இது தொடர்பான விழிப்புணர்வினை அறிவுபூர்வமாக வழங்க வேண்டும்.

Abstract

Nowadays e-learning has become an element of students' lives. This study is based on e-learning and analysis of ophthalmology at the Zahira School of Mawanalla. Greater emphasis is placed on e-learning among students and as well as it can be seen that there are a lot of concepts among parents about how students' eyes are affected by e-learning. This study aims to identify the main causes of high eye damage in the current context, to prove that it is a mistake to say that e-learning only affects the eye. This study is also important in suggesting ways to protect students from eye damage in the current context. This is a mixed method study based on quantitative and qualitative data. Primary data were gathered from questionnaire, discussion, observation and all these data were analyzed through MS Excel. Further, secondary data were gathered from Magazines, Websites and previous research articles. In that regard, the study has been conducted focusing on students from first class to fifth class and GCE Advanced Level students of Zahira National School, Mawanella, Kegalle District. For this, 200 students have been selected through the systematic random sampling. The study found that students of Zahira National School spend more time on entertainment than e-learning, causing eye damage. The study also found that male students were more affected by eye damage and those who used telecommunication equipment for only e-learning were massively unaffected by eye problems. Therefore, in order to protect the students from such problems, the principal of the school should be aware among the teachers and arrange the meetings and discussions for the parents and make arrangements for the use of technology and should provide practical advice and make the students aware.

திறவுச் சொற்கள் (Keywords): மின் கல்வி, கண் பார்வை, அலைபேசி, பொழுது போக்கு, கல்வி, கோவிட் – 19, E- Learning, Eyesight, Mobile, Entertainment, Education, Covid - 19

முன்னுரை

மனித வாழ்வில் ஆரோக்கியம் மிக முக்கியமானதாகும். மனிதனின் இன்பமான வாழ்க்கைக்கு நோயற்ற வாழ்வு இன்றியமையாதது. (Rashidha & Nasreena, 2021). இன்றைய காலத்தில் தொலைத்தொடர்பு சாதனங்கள் மனிதனின் வாழ்கையுடன் இணைந்ததொன்றாகவே இருக்கின்றது. அனைத்து துறைகளும் Online தளத்திற்கு நகர்ந்து விட்டதைக் (Nafrees et al., 2020). காணக்கூடியதாக உள்ளது. அதிலும் குறிப்பாகக் கல்வித் துறையில் மின் கல்வியானது முக்கியத்துவமளிக்கக்கூடியதாக உள்ளது. அந்தவகையில் மின் கற்றல் (E-learning) என்றால், அது கற்பிக்கும் / கற்றுக்கொள்ளும் முறையாகும். பள்ளி மற்றும் கல்லூரிகளில் வகுப்பறையொன்றில் கற்றுக் கொள்வது போல், கணினி உதவியுடன், இன்டர்நெட் உதவியின்

மூலம் ஆசிரியரும் மாணவர்களும்; கற்றுக்கொள்வதே மின்கற்றல் என்பதாகும். (Srinivasan & Bhargavan, 2020). இதன் செல்வாக்கானது பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் வரை பரந்து காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக மின்கல்வியைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் மத்தியில் தொலைத் தொடர்பு சாதனங்களின் பாவனையானது மிகவும் அதிகரித்துக் கொண்டே செல்லக்கூடியதாக இருக்கின்றது. (Unicef, 2017). தொலைத்தொடர்பு சாதனங்கள் என்பதன் மூலம் கருதப்படுவது யாதெனில் "ஓர் இடத்தில் இருந்து தொலைவில் இருக்கும் மற்றுமொரு இடத்தோடு கருத்துகளை மற்றும் எண்ணங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் செயற்பாடாகும்." அந்த வகையில் தற்காலத்தில் பயன்படுத்தும் தொலைக்காட்சி, தொலைபேசி, வானொலி, ரேடர், பெக்ஸ், ஈமெயில் இணையம், கணினி, செய்மதி முதலானவைகள் தொலைத்தொடர்பு சாதனங்களாக இருக்கின்றது. (Banu,2018).

இவ்வாறு மாணவர்கள் தொலைத்தொடர்பு சாதனங்களை அதிகம் பயன்படுத்துவதனூடாக பல நோய்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய நிலையானது Covid-19 காலத்திற்கு முன்பே ஏற்பட்டிருந்ததை ஆய்வுகளினூடாக அறிந்துகொள்ளலாம் (Shameeraj & Nadhira, 2018). உலகமட்டத்தில் மின்கற்றல் அறிமுகமாக முன்பும் அதற்குப் பின்பும் அதிகமானவர்களுக்குக் கண்கள் பாதிக்கப்பட்டுள்ளது. (Annadurai et al., 2015).

அந்தவகையில் கோவிட் நெருக்கடியின் காரணமாக இலங்கையிலும் பாடசாலை மாணவர்கள் தொலைத் தொடர்பினூடாகவே தமது கல்வியைத் தற்போது மேற்கொள்கின்றனர் (Sumaiya et al., 2021). இதன் போது பல்வேறு சுகாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாக பல ஆய்வுகள் மூலம் அறியமுடிகின்றது. (Rashidha & Nasreena, 2021). இந்த வகையில் ஸாஹிரா பாடசாலை மாணவர்களைப் பற்றி நோக்கும் போது இது இலங்கை கேகாலை மாவட்டத்தின் மாவனல்லை பிரதேசத்தில அமைந்துள்ளது. இப்பாடசாலை தற்போது 4250 க்கும் மேற்பட்ட ஆண், பெண் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இந்த மாணவர்கள் Covid-19 காலப்பகுதியில் மின் கல்வி மூலம் கல்வியைத் தொடர்கின்றார்கள். இந்த நிலையில் இவர்களின் கவ்வியானது மாணவர்கள் மத்தியில் எந்தளவு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதோ அந்த அளவுக்குப் பெற்றோர்கள் மத்தியிலும் இந்த மின் கல்வியினால் இந்த மாணவர்களின் கண்கள் பாதிக்கப்படுகின்றது எனும் கருத்தும் பரவலாகப் பேசப்பட்டுக் கொண்டு இருக்கின்றது என்பதை நாங்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே கண்நோய் இந்த காலத்தில் அதிகமாக ஏற்படுவதற்கான காரணத்தைக் கண்டறிதல், மின் கல்வி மூலம் மட்டுமே கண் பாதிக்கப்படுகின்றது என்ற அறிதல் பிழையானது என்பதனை நிரூபித்தல் என்பனவற்றைக் கண்டறியக்கூடியதாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வின் நோக்கங்கள்:

- தற்போதைய சூழலில் அதிகமாக கண் பாதிக்கப்படுவதற்கான முக்கிய காரணங்களைக் கண்டறிதல்
- மின் கல்வி மூலம் மட்டுமே கண் பாதிக்கப்படுகின்றது என்ற அறிதல் பிழையானது என்பதனை நிரூபித்தல்

ஆய்வு முறையியல்:

இவ்ஆய்வு அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அமையப்பெற்றுள்ளது. அந்த வகையில் இது கலப்பு முறையிலான ஆய்வாக அமைகின்றது.

மேலும் இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக வினாக் கொத்து, கலந்துரையாடல் போன்றன பயன்படுத்தப்பட்டு இத்தரவுகள் யாவும் MS Excel லினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக சஞ்சிகைகள், இணையதளம் அதனுடன் தொடர்புடைய ஆய்வுக் கட்டுரைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் இவ்வாய்வானது இலங்கை, கேகாலை மாவட்டத்தின் மாவனல்லை பிரதேசத்தில் அமைந்துள்ள ஸாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் முதலாம் தர வகுப்பிலிருந்து ஐந்தாம் தர வகுப்பு வரையான மாணவர்களையும், க.பொ.த உயர் தர மாணவர்களையும் மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் 200 மாணவ, மாணவிகள் எழுமாற்று மாதிரியின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்களிடத்தில் கூகுள் படிவம் வழங்குதல் மற்றும் (Zoom) ஸூம் வழியாக கலந்துரையாடல் போன்றன ஆய்வினுடைய நுட்பங்களாக பயன்படுத்தி தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவற்றில் தரம் 1-5 வரையிலான மாணவர்களினுடைய பெற்றோர்களிடமிருந்தே தகவல்கள் பெறக்கூடியதாக இருந்தன.

கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட தகவல்கள் சிறு குறிப்புகளாகவும் பதிவு நாடாக்களிலும் பதிவுசெய்யப்பட்டு மற்றும் கூகுள் படிவத்தினூடாக பெறப்பட்ட தகவல்கள் அனைத்தும் இதனுடன் ஒன்று சேர்த்து MS Excel லினூடாக பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது.

ஆய்வுப் பிரச்சினை:

மின் கல்வியானது மாணவர்கள் மத்தியில் எந்தளவிற்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்றதோ அந்தளவிற்குப் பெற்றோர்கள் மத்தியிலும் இம் மின் கல்வியினால் மாணவர்களது கண்கள் பாதிக்கப்படுகின்றன என்ற கருத்தும் பரவலாக பேசப்பட்டுக்கொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஆகவே இதனை ஆய்வுப் பிரச்சினையாகக்கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வின் முக்கியத்துவம்:

எனது ஆய்வின் மூலம் இவர்கள் அன்றாடம் பொழுது போக்கிற்காக பாவிக்கும் தொலைத்தொடர்பு சாதனத்தைச் சரியான திட்டமிடலுடன் குறிப்பிட்ட நேரத்தினை அடிப்படையாகக்கொண்டு பயன்படுத்தல் வேண்டும். இவர்களால் மின் கல்விக்கு மாத்திரம் இதனைப் பயன்படுத்தினால் வாழ்வில் கல்வியை ஆரோக்கியமான முறையில் மீண்டும் கொண்டு வரலாம். மேலும் பள்ளிகளில் மீண்டும் 'மின் கல்வி மூலம் கல்வியைத் தொடர்வதால் சாதாரண மக்களுக்குப் பணம் அறவிட்டு; படிப்பதை நிறுத்துவதன் மூலம் இவர்களின் வாழ்வில் கஷ்டம் ஓரளவேனும் குறையும். மேலும் இதற்கு செலவிடும் பணத்தை அன்றாட முக்கியத் தேவைக்குப் பயன்படுத்த முடியும் என்பதே எனது ஆய்வின் முக்கியத்துவமாகும்.

இலக்கிய மீளாய்வு:

கடந்த கால இலக்கியங்களை மீளாய்வுக்குட்படுத்தும் போது இவ்வாய்வின் தலைப்புடன் தொடர்புபட்ட பல்வேறு ஆய்வுகள் இடம்பெற்றிருந்ததை அறிய முடிந்தது.

UNICEF Sri Lanka (2017) "Keeping Children in Sri Lanka Safe and Empowered Online" இவர்களின் ஆய்வில் இணையதளத்தின் பாவனை மற்றும்; பல விடயத்துக்காக computer பாவனை 5 வயது முதலே தனியாகவே பாவிக்க முடியுமானவர்களாகவும் 5 வயதுக்குக் குறைந்தவர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். மேலும் உயர்தரமானவர்களின் பாவனை மிக அதிகளவாகவும் உள்ளது என்று கண்டறியப்படடுள்ளது. ஒவ்வொரு வருடமும் இதன் பாவனை வீதம் மிக அதிகமாகச் செல்வதை இவ்வாய்வினூடாகக் கண்டறிந்துள்ளனர்.

J. Aparna, R Gayatri Devi, A. Jyothipriya (Issue 06, 2019) "Eye complications in Children due to excessive use of electronic gadgets" இவர்களின் ஆய்வின்படி சிறுவர்கள் அதிகளவு தொலைத் தொடர்பு சாதனங்களைப் பாவிக்கக் கூடியவர்காக உள்ளனர் என்றும் அதிலும் தொலைபேசி பாவனை அதிகம் எனக் கண்டறிந்துள்ளனர். மேலும் அதற்காக செலவிடும் நேரங்கள் மிக அதிகமாக உள்ளது எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் electronic gadgets அதிகம் பயன்படுத்தும் போது ஏற்படும் நோய்கள் எனும் போது கண்வலி, Irritation, dark circle என்பன அதிகமாக வந்துள்ளதாகவும் மூக்குக் கண்ணாடி அணிபவர்களின் வீதம் அதிகமாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் இவ்வாய்வின் பரிந்துரையாக இதனை அளவுக்கதிகமாக பயன்படுத்துவதில் தீமைகளே அதிகம் என்று கூறியுள்ளனர்.

Klyoko Kambibeppu, R.N. and Hitoml Sugiura R.N. (2005) என்பவர்கள் "கையடக்கத் தொலைபேசிகளின் தாக்கங்கள்" என்ற ஆய்வினை டோக்கியோ பெருநகரின் சிரேஷ்ட, கனிஷ்ட மாணவர்களின் நட்புறவை மையமாகக் கொண்டு மேற்கொண்டுள்ளனர். டோக்கியோ பெருநகரின் 651 சிரேஷ்ட, கனிஷ்ட மாணவர்களை மையமாக கொண்டு செய்யப்பட்ட இவ்வாய்வில் கையடக்கத் தொலைபேசி பாவனையால் ஏற்படும் சாதக பாதகங்களை எடுத்துக்காட்டி கையடக்கத் தொலைபேசிகளின் அதிகரித்த பாவனையால் மாணவர்களிடத்தில் ஏற்பட்டுள்ள உளவியல், சுகாதார மற்றும் மனோரீதியான தாக்கங்கள் குறித்து கூறியுள்ளனர்.

A.W.F. Shameera, A.K.F. Nadhira (2018) "பாடசாலை மாணவர்களும் அதிகரித்த கைத்தொலைபேசி பாவனையும், அதன் தாக்கங்களும் - அல் முர்ஷிட் மகா வித்தியாலயத்தின் 8 – 13 ஆம் தர மாணவர்களை மையமாகக் கொண்ட ஆய்வு" என்ற தலைப்பில் மாணவர்கள் மத்தியில் கையடகத்தொலைப்பேசிகளின் பாவனை எவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்தியுள்ளது என்பதையும் ஒவ்வொரு வருடமும் அதன் அதிகரிப்பையும் காணக்கூடியதாக உள்ளது. எனவே அவர்களின் முடிவில் இதன் பாவனையை முழுதாக குறைக்கமுடியாவிட்டாலும் ஓரளவாவது இதன் தாக்கங்களைக் கூறி விளிப்புணர்வூட்டி குறைந்த பாவனையை வழங்கமுடியும் என்று பரிந்துரைத்துள்ளனர்.

Ranwei, (2006) என்பவரின் "தொடர்பாடல் மற்றும் பொதுபோக்கிற்காக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தல்" என்ற ஆய்வின் இணையத்தள பாவனை, புதிய விடயங்களைத் தேடுதல், இணைய விளையாட்டு மற்றும் இணைத்தில் அரட்டை போன்றவற்றுக்காக இளைஞர்கள் அதிகமாக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளதோடு தற்காலத்தில் உயர் தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் கையடக்கத் தொலைபேசிகள் அதிக வசதிகளைக் கொண்டுள்ளதோடு அதிக செலவின்றி பெற முடிகின்றமையும், எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்ல முடிகின்றமையும் தான் கையடக்கத் தொலைபேசிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதற்கான காரணங்கள் போன்றன பற்றி கூறுகின்றார்.

மேற்கூறப்பட்ட ஆய்வுகள் இவ்வாய்வை மேற்கொள்ள துணைபுரிந்தன. எனினும் மின் கற்றல் மூலமாகவே கண் நோய்கள் அதிகம் ஏற்படுகின்றது என்பது பிழையானதொரு எண்ணக்கரு என்ற ரீதியில் இதுவரைக்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே இந்தவகையில் எனது ஆய்வு முன்னைய இலக்கிய மீளாய்வுகளிலிருந்து வேறுபட்டு அமைகின்றது.

கலந்துரையாடலும் கண்டறிதலும்



உரு 01-ல் இவ்வாய்விற்காக உள்வாங்கப்பட்டவர்களின் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில் தரம் 01 தொடக்கம் 05 வரை கற்கும் ஆண்கள் 61 மாணவர்களும் பெண்கள் 53 மாணவிகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இதேபோன்று கல்விப் பொதுத் தராதர உயர் தர (Advanced Level) மாணவர்களில் 43 பெண்களும் 43 ஆண்களும் சமனான எண்ணிக்கையில் தெரிவுசெய்யப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன.



cU:02 - மூலம் : ஆய்வுத்தரவுப் பகுப்பாய்வு-2021

உரு 2ஆனது இவ்வாய்வில் பங்குபற்றியுள்ளவர்களிடத்தில் கைப்பேசியின் பாவனை தொடர்பாகத் தரவுகள் சேகரிப்பதற்கு எடுக்கப்பட்ட தகவல்களின் நிழற்படமாக காணப்படுகின்றது. இம்மாணவர்கள் தமது மின் கல்விக்காகப் பயன்படுத்தும் கைப்பேசியானது உரிய மாணவருடையது மாத்திரமா? அல்லது ஏனைய உறவினர்களிடமிருந்து பயன்படுத்தப்படுகின்றதா? என்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

அந்தவகையில் தரம் 1 - 5 வரையான மாணவர்களிடத்தில் தனிப்பட்ட ரீதியில் எவரிடமும் கைப்பேசி இல்லை என்றும் தமது பெற்றோர்களிடமிருந்தே பயன்படுத்தப்படுவதாகவும் கிடைக்கப்பெற்றது. மேலும் கல்விப் பொதுத் தராதர உயர்தர (Advanced Level) மாணவர்களில் ஆண்கள் அனைவரிடத்திலும் அவர்களுக்கேயுரிய கைப்பேசி இருப்பதனால் 100% எனவும் பெண்களில் 80% ஆனவர்களிடம் தனிப்பட்ட ரீதியில் கைப்பேசி இருப்பதாகவும் இன்னும் 20% பெண் மாணவர்கள் தமது பெற்றோர்களின் கைப்பேசியைப் பயன்படுத்துதாகவும் அறியக்கூடியதாக இருந்தது.

இவ்வாய்விற்குட்படுத்தப்பட்டவர்கள் அதிகமாக தொழில்நுட்ப சாதனங்களில் கைப்பேசியையே பயன்படுத்துகின்றனர். ஏனைய சாதனங்களைப் பயன்படுத்துவது குறைவாக இருந்துள்ளது. இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் வைத்திய அதிகாரி வைத்தியர் லசந்த விஜேசேகர தொலைபேசிகளால் ஏற்படுகின்ற சுகாதார சீர்கேடுகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், அதிகமான தொலைபேசி பயன்பாடும் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றது.(ஷிப்னா சிராஜ்,2020).



cU:03 - மூலம் : ஆய்வுத்தரவுப் பகுப்பாய்வு-2021

உரு:03 ஆனது Covid-19 காலத்திற்கு முன் ஒரு நாளில் எத்தனை மணித்தியாலங்கள் தொலைத்தொடர்பு சாதனங்களின் பாவனை இருந்துள்ளது என்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

அந்த வகையில் 1 தொடக்கம் 3 மணித்தியாலங்கள் வரை பயன்படுத்தியவர்களில் தரம் 1- 5 வரையான மாணவர்களுள் ஆண்கள் 5 உம் பெண்கள் 10 பேரும் ஆவார்கள். கல்விப் பொதுத் தராதர உயர் தர மாணவர்களுள் ஆண்களில் 2 பேரும் பெண்களில் 5 பேருமாகும். அடுத்து 3 தொடக்கம் 6 மணித்தியாலங்கள் வரை பயன்படுத்துபவர்கள் 1-5 வரையான மாணவர்களில் ஆண்கள் 56 மாணவர்களும் 43 பெண் மாணவிகளும் பயன்படுத்தியுள்ளனர். க. பொ.உ. தர மாணவர்களில் ஆண்கள் 26 பேர்களும் பெண்கள் 25 பேர்களும் பயன்படுத்தியுள்ளனர். மேலும் 6 மணித்தியாலங்களுக்கு மேல் பயன்படுத்துபவர்களில் கல்விப் பொதுத் தராதர உயர் தர மாணவர்களில் ஆண் மாணவர்கள் 6 பேர்கள் மாத்திரமே பயன்படுத்தியுள்ளனர்.

இந்தப் பின்னணியில் தொலைத்தொடர்பு சாதனங்களின் பாவனை Covid-19 க்கு முன்பு அதிகமாக இருந்தது போலவே தற்போது வீடுகளில் இருக்கும் சந்தர்ப்பம் அதிகரித்து உள்ளதால் அதன் பாவனையின் சதவீதம் மிகவும் அதிகரித்துள்ளது எனலாம். முன்னைய ஆய்வுகளின் மூலம் எவ்வளவு தூரம் இதன் பாதிப்பு இருந்தது எனக் கண்டறிய முடிகின்றது. அத்தோடு Covid-19 க்கு முன்னரே இதன் பாவனையின் அளவும் மாணவர்களுக்கு என்றே தனியான தொலைத்தொடர்பு சாதனங்கள் இருந்துள்ளதை முன்னைய தரவுகளின் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது. அதிலும் ஆண் மாணவர்கள் குறிப்பிட்ட அளவில்லாமல் பயன்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



cU:04 - மூலம் : ஆய்வுத்தரவுப் பகுப்பாய்வு-2021

உரு 04-ல் Covid-19 காலத்தில் மின் கல்வி (E-Learning) அறிமுகப்படுத்தியதற்குப் பிறகு பொழுதுபோக்கிற்காக தொலைத்தொடர்பு சாதனத்தினூடான பாவனையின் அதிகரிப்பு தொடர்பாக ஆராயப்பட்டன.

இந்த ரீதியில் தரம் 1-5 வரையான மாணவர்களில் அதிகரித்துள்ளது என்று கூறியவர்களாக 23 பேர்களும் கல்விப் பொதுத் தராதர உயர் தர மாணவர்கள் 18 பேர்களும் காணப்படுகின்றனர். ஓரளவு அதிகரித்துள்ளதாக கூறியவர்களுள், 1-5 வரையான மாணவர்களில் 36 பேர்களும் கல்விப் பொதுத் தராதர உயர் தர மாணவர்கள் 18 பேர்களும் இன்னும் மிகவும்

அதிகரித்துள்ளது என்று கூறியவர்களுள் 1-5 வரையான மாணவர்களில் 45 பேர்களும் கல்விப் பொதுத் தராதர உயர் தர மாணவர்களில் 40 பேர்களும் கூறியுள்ளதாக இத்தரவினூடாக அறியக்கூடியதாக இருக்கின்றது. மேலும் பயன்பாடு அதிகரிக்கவில்லை என்பதில் எவருமே உடன்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்ளும் விடயமாக முன்பை விட தற்காலத்தில் பொழுதுபோக்கிற்காக இதன் பாவனை மிகவும் அதிகரித்துள்ளதை அவதானிக்கலாம். இவ்வாறு இதன் பாவனை அதிகரித்துள்ளது மின் கல்வியினால் மாத்திரம் அல்ல. இவர்களது மின்கல்விக்கான நேரம் தவிர்த்து ஏனைய நேரங்களில் இவர்கள் தமது பொழுதுபோக்கிற்காக அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர் என்பதனை பின்வரும் உரு 04 லிருந்து அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது.



cU:05 - மூலம் : ஆய்வுத்தரவுப் பகுப்பாய்வு-2021

உரு 06 ஆனது தூங்கும் முன் தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

அந்தவகையில், தரம் 1 - 5 வரையான மாணவர்களிடத்தில் தகவல் திரட்டும் போது 8-9 மணித்தியாலத்தினுள் பயன்படுத்துபவர்கள் 51 பெண்களாகவும் ஆண்களில் இருவரும் காணப்படுகின்றனர். அதே போன்று 9-10 மணி நேரத்திற்குள் மாத்திரம் பயன்படுத்துபவர்களில் பெண்கள் இருவர் மற்றும் ஆண் மாணவர்கள் 3 பேர்களாகவும் உள்ளனர்.

இதேபோல கல்விப் பொதுத் தராதர உயர் தர மாணவர்களை நோக்குமிடத்து, 9 -10 மணி நேரத்திற்குள் மாத்திரம் பயன்படுத்துபவர்கள் 6 பேர்களாகவும் 10 - 11 மணி நேரத்திற்குள் பயன்படுத்துபவர்கள் ஆண், பெண் மாணவர்கள் இருவரும் 10 பேர்கள் என்ற சம அளவில் இருப்பதாகவும் 11-12 மணி நேரத்திற்குள் பயன்படுத்துபவர்கள் பெண்கள் 15 மாணவர்களும் ஆண்கள் 7 மாணவர்களுமாக உள்ளனர். மேலும் 12 மணிக்கு மேல் கைப்பேசியினைப் பயன்படுத்துபவர்கள் 20 ஆண் மாணவர்கள் என்று அறியக்கூடியதாக இருக்கின்றது.

இத்தரவின் படி இரவு நேரத்தில் அதிகம் கைப்பேசியைப் பயன்படுத்துபவர்கள் கல்விப் பொதுத் தராதர உயர் தர மாணவர்கள் என்றும் அதிலும் குறிப்பாக 12 மணிக்கு மேல் இதன் பாவனையில் ஈடுபாடு அதிகரித்துள்ளவர்களில் ஆண் மாணவர்களே அதிகமாக இருப்பதையும் இவ்வாய்வினூடாக கண்டறியக்கூடியதாகவுள்ளது.

மேலும் தொலைபேசியின் மூலம் பேசிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலேயே இவ்வகை அலைகள் உருவாகும் வீதம் அதிகமாக இருப்பதாக தொழில்நுட்ப வல்லுனர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இரவில் தலைக்கருகே கைப்பேசிகளை வைத்திருப்பதும் உமிழப்படுகின்ற அலைகளின் தாக்கத்தை அதிகரிக்கும். அதிக வெளிச்சமான ஒளிப்படைத் திரைகளைத் தொடர்ந்தும் பார்ப்பதனால் பார்வை நரம்பும் மூளையின் கட்புலன் பிரதேசமும் பாதிக்கப்படுவதாக மருத்துவ உலகம் கூறுகிறது. (ஷிப்னா சிராஜ், 2020).



cU:06 - மூலம் : ஆய்வுத்தரவுப் பகுப்பாய்வு-2021

உரு 6-ல் மூக்குக் கண்ணாடி பாவிப்பவர்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ்வாய்வில் மொத்தமாக 200 மாணவர்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டதில் தரம் 1-5 வரையான மாணவர்களில் ஆண்கள் 15 பேர்களும் பெண்கள் 11 பேர்களும் பயன்படுத்துபவர்களாக உள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கல்விப் பொதுத் தராதர உயர் தர மாணவர்கள் தொடர்பாக அவதானிக்கும் போது ஆண்கள் 20 மாணவர்களும் பெண்கள் 15 மாணவிகளும் பயன்படுத்துகின்றனர். ஆகவே ஆய்வுக்குட்பட்டவர்களில் மொத்தமாக 63 மாணவர்கள் மாத்திரம் மூக்குக்கண்ணாடி பயன்படுத்துபவர்களாக உள்ளதை இவ்வாய்வினூடாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் இம்மாணவர்களிடத்தில் கண் நோய்களுக்கான அறிகுறிகள் ஏற்படுவது தொடர்பாக ஆராயப்பட்ட போது, தரம் 1-5 வரையான மாணவர்களில் 40 பேர்களுக்கு இதற்கான அறிகுறிகள் தென்படுவதனைப் பெற்றோர்கள் கூறியதினூடாக அறியக்கிடைத்தது. அதாவது

கண்களிலிருந்து அடிக்கடி கண்ணீர் வருதல், பார்வைத் தெளிவின்மை, எரிச்சல், கண்ணில் வறட்சி ஏற்படல் மற்றும் பார்வைத் திரிபு போன்ற அறிகுறிகள் ஏற்படுவதாக அறியமுடிகின்றது.மேலும் கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்கள் 50 பேர்களுக்கு இவ்வாறான அறிகுறிகள் இருப்பதாகவும் இவ்வாய்வினூடாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

முடிவுரை

21ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த கண்டுபிடிப்பாக கையடக்க தொலைபேசிகள் திகழ்கின்றன. கையடக்க தொலைபேசிகள் இன்றி ஒரு நாளை கடத்துவதும் பெரிய சவாலாகவே இருக்கின்றது. ஏனெனில் எமது வாழ்வின் அன்றாட தேவைகளும் வேலைகளும் கையடக்கத் தொலைபேசிகளை மையமாகக் கொண்டே ஆற்றப்படுகின்றன. ஆயினும் இத்தகைய பயனுள்ள தொழில்நுட்ப சாதனம் எமது வாழ்வின் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றது. இவற்றில் குறிப்பாக கண் நோய் தொடர்பாக கூற முடியும்.

இந்த அடிப்படையில் இவ் ஆய்வினூடாக கிடைக்கப்பெற்ற விடயங்களாக தற்போதைய சூழலில் அதிகமாக கண் பாதிக்கப்படுவதற்கான காரணங்களைக் கண்டறிதல் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இப்பாடசாலை மாணவர்கள் தொலைத்தொடர்பு சாதனங்களில் ஏனைய சாதனங்களை விட கைப்பேசியைப் பயன்படுத்துபவர்களே அதிகமாக காணப்படுகின்றனர் என்பதனைக் கண்டறியக்கூடியதாக இருக்கின்றது. அதிலும் குறிப்பாக பலர் தனிப்பட்ட ரீதியில் இந்த சாதனத்தைப் பயன்படுத்துவதுடன் குறிப்பிட்ட கால நேர வரையரைகளின்றி இரவு 12 மணிக்கு மேலாகவும் பயன்படுத்துவதனை அறியக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு இன்றைய சூழ்நிலையைப் பொருத்த வரையில் தமது வீடுகளிலேயே முடங்கி இருப்பதினால் பல மணித்தியாலங்களாக இதனைப் பாவித்துக்கொண்டிருப்பதாலும் மற்றும் இரவு நேரங்களில் தூங்காமல் இதனைத் தேவையின்றி பயன்படுத்துவதனை அறியக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு பயன்படுத்திக்கொண்டிருப்பதால் எவ்வாறான கண் தொடர்பான நோய்கள் ஏற்படுகின்றன போன்றவற்றை விஞ்ஞான ரீதியாக அறியக்கூடியதாக உள்ளது.

மற்றும் மின் கல்வி மூலம் மாத்திரம் கண் பாதிக்கப்படுகின்றது என்ற அறிதல் பிழையானது என்பதனை இவ் ஆய்வுக்குட்படுத்திய தரவுகளின் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. அதாவது இம்மாணவர்கள் அதிகமான நேரங்களில் ஒளிப்படைத் திரையினை (Screen) பார்த்துக்கொண்டிருப்பவர்களாகவும் மின் கல்வி மற்றும் முக்கிய தேவைகள் தவிர்த்து பொழுதுபோக்கிற்காகவே அதிகமாக தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்திக்கொண்டிருப்பதாகவும் அறியக்கூடியதாக இருக்கின்றது. இதிலும் கண் பாதிப்புக்குள்ளாகியவர்களில் அதிகமாக ஆண் மாணவர்களே ஆளாகியுள்ளனர் என்தனையும் இவ்வாய்வினூடாக கண்டறியக்கூடியதாக இருக்கின்றது.

எனது ஆய்வின் மூலம் இவர்கள் அன்றாடம் பொழுது போக்கிற்காக பாவிக்கும் தொலைத்தொடர்பு சாதனத்தைச் சரியான திட்டமிடலுடன் குறிப்பிட்ட நேரத்தினை அடிப்படையாகக்கொண்டு பயன்படுத்தல் வேண்டும். இவர்களால் மின் கல்விக்கு மாத்திரம் இதனைப் பயன்படுத்தினால் வாழ்வில் கல்வியை ஆரோக்கியமான முறையில் மீண்டும் கொண்டு வரலாம். மேலும் பள்ளிகளில் மீண்டும் 'மின் கல்வி மூலம் கல்வியைத் தொடர்வதால் சாதாரண மக்களுக்குப் பணம் அறவிட்டு; படிப்பதை நிறுத்துவதன் மூலம் இவர்களின் வாழ்வில் கஷ்டம் ஓரளவேனும் குறையும். மேலும் இதற்கு செலவிடும் பணத்தை அன்றாட முக்கியத் தேவைக்குப் பயன்படுத்த முடியும் என்பதே எனது ஆய்வின் முக்கியத்துவமாகும்.

எனவே மாணவர்களை இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து பாதுகாப்பதற்காக, பாடசாலையில் உள்ள அதிபர், ஆசிரியர்கள் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்தி இவர்களின் மூலம் பெற்றோர்களுக்கான கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் போன்ற ஏற்பாடுகளை மேற்கொண்டு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக பிள்ளைகளைக் கையாளும் விதங்களைத் தெளிவுப்படுத்துதல் மேலும் நடைமுறைக்கு ஏற்றவாறு அறிவுரைகளை வழங்கல் போன்ற ஏற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் மாணவர்களுக்கும் இது தொடர்பான விழிப்புணர்வினை அறிவுப்பூர்வமாக வழங்க வேண்டும்.

பரிந்துரை

மாணவர்களின் கண் பார்வை பாதிக்காமல் இருப்பதற்கு பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்ளல் வேண்டும். அதாவது பிள்ளைகளுக்கு ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும் குறுகிய காட்சி இடைவெளி தேவை, எலக்ட்ரானிக் சாதனங்களைக் குறைந்தபட்சம் ஒரு கை தூரத்தில் வைக்கவும், கண் சிமிட்டலைத் தவிர்க்க எழுத்துரு அளவை அதிகரிக்கவும் மற்றும் திரை ஒளியைத் தவிர்க்க இயற்கை ஒளியைச் சமநிலைப்படுத்தவும்.

References

- Aparna, R.J., Gayatri Devi, A., & Jyothipriya. (2019). Eye complications in Children due to excessive use of electronic gadget. Institute of Medical and Technical Science, Saveetha University,Chennai, Tamil Nadu,India.(ISSN: 0975-7619),vol.12,Issue 6,PP.1182-1184.
- UNICEF Sri Lanka, (2017). Keeping Children in Sri Lanka Safe and Empowered Online. Institute for participatory interaction in Development (IPID), ISBN : 978-955-1720-01-8. PP.12-57.@UNICEFSriLankafacebook.com/UNICEFSriLanka.
- Klyoko Kambibeppu, R.N., & Hitoms Sugiura, R.N. (2005). Impact of the Mobile Phone on Junior High-School Students' Friendships in the Tokyo Metropolitan Area. Cyberspychot OGY & BEHAVIOR. Volume 8, Number 2, 2005. PP. 121-130
- Ran – Wei., and Ven-Whei Lo. (2006). Cellphone Use and Social Connectedness. New Media & Society. SAGE Publications London. Thousand Oaks, CA and New Delhi Vol 8(1): PP. 53-72 [DO110-1177/1461444806059870]
- Shameera, A.W.F., & A.K.F. Nadhira, (2018). பாடசாலை மாணவர்களும் அதிகரித்த கைத்தொலைபேசி பாவனையும், அதன் தாக்கங்களும் - அல் முர்ஷிட் மகா வித்தியாலயத்தின் 8 – 13 ஆம் தர மாணவர்களை மையமாகக் கொண்ட ஆய்வு. South Eastern University of Sri Lanka.
- Abdullah Naseer Al Sagr , & Nora Abdullah Al Sagr, (2020). The effect of electronics on the growth and development of young children; A Narrative Review. JH 1 DC (Journal of Health Information in Developing Countries), Vol 14, No. 1, 2020; PP-1-9 http://www.jhidc.org
- Subrahmanyam K., Greenfield P. Kraut R., & Gross E. (2001). The impact of computer use on children's and adolescents' development. Journal of Applied Development Psychology. 22(1): Pp: 7-30.
- Sundus M., The impact of using gadgets on children. Journal of depression and anxiety. 2018;7(1);1-3
- Suhana, M., (2017). Influence of Gadget Usage on Children's Social – Emotional Development. International Conference of Early Childhood Education, (ICECE).
- Srinahyanti, Yasaratodo Wau1, Imelda Free Unita Manurung1, & Nur Arjani1., (2018). Influence of Gadget: A Positive and Negative Impact of Smartphone Usage for Early Child Faculty of Education, Universitas Negeri Medan, Medan, Indonesia.
- Felisitas Sihura PGPAUD UAD Yogyakarta, & Yogyakarta, (2018).The Role of Parents "Generation of Z" to the Early Children in the Using of Gadget Advances in Social Science, Education and Humanities

Research, volume 249, 4th International Conference on Early Childhood Education. Indonesia. (http://creativecommons.org/licenses/by-nc/4.0/).

- Huseyin Kaya, (2020). Investigation of the effect of online education on eye health in Covid-19 pandemic ophthalmology. (IJATE) International Journal of Assessment Tools in Education 2020, Vol. 7, No. 3, 488–496 https://doi.org/10.21449/ijate.788078, https://ijate.net/ https://dergipark.org.tr/en/pub/ijate Research Article
- Esther Jennifer, S., (2012). Influence Of Electronic Gadgets Excessive Use On Academic Performance And Family Interaction Among Adoloscents. Pp. 7, 8,31,47 & 66
- Alves MR., & Louzada RN., (2019). Effects of online education on students' eye health during the Covid-19 pandemic. eOftalmo. 2020;6(4):68-70. DOI: 10.17545/eOftalmo/2019.0015
- Dinesh Kumar, J., & Arulchelvan, S., (2018). The Attitude towards Smartphones and its Influence on Process, Social and Compulsive Usage, Research Scholar, Volume 4, Issue 4 – Pages 306-314, https://doi.org/10.30958/ajmmc4-4-4 doi=10.30958/ajmmc.4-4-4
- Damian Trujillo, (2020 Dec 8). screen time due to Distance learning affecting children's eyesight. https://www.nbcbayarea.com/news/coronavirus/screen-time-due-to-distance-learning-affecting-childrens-eyesight/2417032/?amp
- Common Pediatric Eye problems (2021). college of medicine department of ophthalmology.https://dmei.org/services-specialties/pediatric-ophthalmology-strabismus/common-pediatric-eye-problems/
- Studying Media Effects on Children and youth; improving methods and measures workshop summary Alexandra Beatty rapporteur National Research council institute of medicine of the national academics 2006 preview. www.nap.edu
- Rashida, M..A.F., & Nasreena, M.N.F., (2021). Challenges Faced by G.C.E (O/L) Students in the Online Education at Present Context: Special Reference to the Schools in Kandy District. Faculty of Islamic studies & Arabic language South Eastern University of Sri Lanka. Proceedings of 8th International Symposium, FIA, SEUSL – ISBN 978-624-5736-14-0
- Nafrees, ACM., Roshan, ACM., Nuzla Baanu, AS., Fathima Nihma, M.N., and Shibly, FHA., (2020). Awareness of Online Learning of Undergraduates during COInstructor, South Eastern University of Sri Lanka. Journal of Physics: Conference Series 1712 012010 IOP doi:10.1088/1742-6596/1712/1/012010
- Sumaiya, M.S.F., Rasiya Farwin, T., and Safna, M.F.F., (2021). Covid - 19 fhyg;gFjpapy; gy;fiyf;fof khztu;fspd; Xa;T Neug;gad;ghL: njd;fpof;Fg; gy;fiyf;fof ,];yhkpa fw;iffs; kw;Wk; muG nkhopg;gPlj;ij ikag;gLj;jpa Ma;T. Proceedings of 8th International Symposium, FIA, SEUSL, ISBN 978-624-5736-14-0
- Damian Trujillo, (2020.Dec.8). Screen time Due to Distance Learning Affecting Children's Eyesight.https://dmei.org/services-specialties/pediatric-ophthalmology-strabismus/common-pediatric-eye-problems/

****

விமர்சன நோக்கில் அறிஞர் அண்ணாவின் 'வேலைக்காரி' நாடகம் Scholar Anna's play 'The Maid' in Critical Perspective

முருகையா சதீஸ் | Murukaiya Sathees

உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை. (Assistant Lecturer, Department of Tamil, University of Jaffna, Sri Lanka.)
satheesmurukaiya@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

விமர்சனம் என்பது இலக்கிய இரசனை மற்றும் மதிப்பீட்டு முறைகளை உள்ளடக்கியதாகும். வாசிப்பின் போது கிடைக்கின்ற அனுபவங்களும் , பொருள்களும், உணர்வுகளும்தான் அதன் அடிப்படையாகும். எனவே விமர்சன அணுகுமுறையில் அண்ணாவின் "வேலைக்காரி" எனும் நாடகத்தைப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அறிஞர் அண்ணா தமிழ் இலக்கிய உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய ஒரு படைப்பாளி. சமூக மேல்மட்டங்களை மையமாகக் கொண்டும், அரச மற்றும் இறை சிந்தனையுடைய கருப்பொருள் வெளிப்பாட்டு முறையிலும் நடிக்கப்பட்டு மேடையரங்கேற்றம் செய்யப்பட்டு வந்த நாடக உலகில் சமூகக் கீழ்மட்டப் பிரச்சினைகளையும் கொண்டு வந்து பேசிய பெருமை இவரையே சாரும். சமூகத்தில் நடக்கும் பிரச்சினையின் எதிரொலியாகவே அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி எனும் நாடகம் அமைந்துள்ளது. அத்தகைய இவரின் வேலைக்காரி நாடகத்தினை வாசிப்பிற்கு உட்படுத்தி, மதிப்பீடு செய்து, வாசிப்பு அனுபவத்தினை விமர்சிப்புக்கு உட்படுத்தி, சமூகத்தில் இந்நாடகத்திற்குரிய வாசகப்பங்கீட்டை அதிகரித்து அதன் இருப்பினை நிலைநிறுத்திக்கொள்ளும் நோக்கிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏழைகளின் கண்ணீரின் வலி, சாதி ஒழிப்பு, போலி வழிபாடு, பணக்கார ஆதிக்கம் என்பவற்றைக் கடுமையாகச் சாடுகிறார். பணம் மட்டுமே வாழ்வு என்று நினைப்பவர்களுக்குப் பணம் இல்லை மனம் கொண்ட வாழ்வுதான் வாழ்வு என்பதனை இந்நாடகத்தின் வழி விளக்குவதில் வெற்றியும் கண்டுள்ளார் என்றே கூறமுடியும். இவ்வாய்விற்கு, முதன்மைத்தரவாக அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி நாடகப் படைப்புப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அவரின் அந்நாடகம் சார்ந்த கட்டுரை நூல்கள் மற்றும் மின்னூடகக் கருத்துக்கள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Abstract

Criticism involves literary taste and evaluation methods. It is based on the experiences, objects, and feelings that are available during reading. So the purpose of this article is to look at Anna's play "The Maid" in a critical approach. Scholar Anna is a creator who caused a great revolution in the world of Tamil literature. He is credited with bringing social and grassroots issues to the world of drama, which has been staged with a focus on social upliftment and thematic expression of state and theological thought. Of the problem going on in the community; The echo is in the play Scholar Anna's Maid. The study aims to increase the reader's share of the play in the community by reading, evaluating, and critique the reading experience of the play. He laments the pain of the tears of the poor, caste annihilation, false worship and rich domination. For those who think that money is the

only life, it can be said that he has succeeded in explaining the way of this play that life is a life with no mind. For this study, the scholar Anna's maid play has been used primarily. Essays on his play And electronic comments have also been used.

திறவுச்சொற்கள் (Keywords): அறிஞர் அண்ணா, வேலைக்காரி, நாடகம், விமர்சன நோக்கு, Scholar Anna, Maid, Drama, Critical Perspective.

அறிமுகம்

இலக்கியம் பற்றிய புரிந்து கொள்ளலில் விமர்சனத்தின் பங்கு மிக முக்கியமானது. நீண்ட இலக்கியப் பாரம்பரியத்தினைக் கொண்ட மொழிகள் தமக்கெனத் தனித்துவமான இலக்கிய ஆக்கம், இலக்கிய இரசனை மற்றும் இலக்கிய மதிப்பீட்டு முறைகளையும், கோட்பாடுகளையும், சிந்தனைகளையும் வளர்த்து வந்துள்ளமையினைக் காணலாம். ஆங்கிலத்தில் "லிற்றறி கிறிற்றிசிசம்" (Literary Criticism) எனக் குறிப்பிடப்பெறும் புலமைத் தொழிற்பாடே இங்கு குறிப்பிடப்படுகின்றது. தமிழில் திறனாய்வு, விமர்சனம் என்ற இரண்டு சொற்களுமே இந்தப் பொருளில் வழங்குகின்றன. (சிவத்தம்பி. கா, விமர்சனச் சிந்தனைகள் : 15). விமரிசை என்ற சொல்லில் இருந்து வந்தது விமர்சனம். விளக்கமாகச் சொல்லுதல், பாராட்டிப்பேசுதல் என்று பொருள். அதாவது வாசிப்பின் போது கிடைக்கின்ற அனுபவங்களும், பொருள்களும், உணர்வுகளும்தான் திறனாய்விற்குத் தளங்கள் என்பது கருத்து. (நடராசன் தி.சு., திறனாய்வுக்கலை : 4) எனவே விமர்சன அணுகுமுறையில் அண்ணாவின் "வேலைக்காரி" எனும் நாடகத்தைப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்காகும்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் முறை, விபரணப் பகுப்பாய்வு முறை ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு, முதன்மைத்தரவாக அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி நாடகப் படைப்புப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அவரின் அந்நாடகம் சார்ந்த கட்டுரை நூல்கள் மற்றும் மின்னூடகக் கருத்துக்கள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆசிரியர்

அறிஞர் அண்ணா தமிழ் இலக்கிய உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய ஓர் படைப்பாளி. குறிப்பாக நாடக உலகில் தனக்கென்று ஓர் அடையாளத்தினை ஏற்படுத்திய பெருமைக்கு உரியவர். சமூக மேல்மட்டங்களை மையமாகக் கொண்டும், அரச மற்றும் இறை சிந்தனையுடைய கருப்பொருள் வெளிப்பாட்டு முறையிலும் நடிக்கப்பட்டு மேடையரங்கேற்றம் செய்யப்பட்டு வந்த நாடக உலகில் சமூகக் கீழ்மட்டப் பிரச்சினைகளையும் கொண்டு வந்து பேசிய பெருமை இவரையே சாரும்.

சமூக விழிப்புணர்வுக் கருத்துக்களை வெளிப்படுத்தித் தன் அரசியல் பிரச்சாரப் பயணத்திற்கு ஒரு கருவியாக நாடக இலக்கியங்களைப் படைத்தார். இவரின் பேச்சு மற்றும் எழுத்து வன்மையால் சமூகத்தின் சகல மட்டங்களிலும் இடம்பிடித்துப்போன நாடகப்படைப்புக்கள், தமிழக நாடக அரங்கில் புதிய வேகத்தையும், துரித எழுச்சியையும் கொடுத்தன. தமிழுணர்ச்சி மற்றும் பகுத்தறிவுச் சிந்தனைகள் இவரின் இந்நாடகப் படைப்புக்கள் மூலம் வீரியம் கொண்டன.

அண்ணாதுரை எழுதிய நாடகங்களில் பிரச்சார நோக்கம் வரிக்கு வரி தெரிந்தாலும், செயற்கைத்தனமும், அலங்காரத் தமிழும் ஓரளவு குறைவாகவே இருக்கும். நாடகங்களில் அதிசயத் தற்செயல் நிகழ்வுகள் மிக அதிகமாகவே காணப்படும். எனவே சமூகப்பற்றுக் கொண்ட இவர், தன்னுடைய "வேலைக்காரி" எனும் நாடகத்தின் மூலம் வர்த்தக மோதல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகக் கருப்பொருளையும், தற்போதுள்ள சமூகப் பழக்கவழக்கங்களையும், தனது பகுத்தறிவுச் சிந்தனை மூலம் விமர்சிக்கிறார்.

வேலைக்காரி

அறிஞர் அண்ணா 1944 ஆம் ஆண்டு எழுதிய நாடகமே "வேலைக்காரி". இது 92 பக்கங்களையும், 54 காட்சிகளையும் கொண்டு பகுத்தறிவுச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது. வீட்டிற்குப் பணிக்கு வரும் வேலைக்காரியை, எமைப் போன்ற உணர்வுள்ள உயிராக யாரும் எண்ணுவதில்லை. வீட்டைச்சுத்தம் செய்யப் பயன்படுத்தும் துடைப்பத்தைப் போல எல்லோரும் நினைத்து வந்த காலத்தில் வேலைக்காரிக்கெனத் தனி மதிப்பைத் தேடித்தந்ததுடன் அந்தக் கீழ்ப்பட்ட சமூகத்திற்கு மதிப்புக்கொடுக்க வேண்டிய உணர்வையும் இந்நாடகத்தின்வழி அண்ணா ஏற்படுத்தித் தந்துள்ளார் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

ஒவ்வொரு மேலிடங்களிலும் வேலைக்காரிக்கு நடக்கும் சமூகக் கொடுமைகளைத் தெளிவாக விளக்கிய அண்ணா, ஏழைகளின் கண்ணீர் வாழ்வு, வர்ணப்பாகுபாடு, சமயப்பொய்மை, பண அதிகாரம் முதலிய சமூகப் பிரச்சினைகளையும் இந்நாடகத்தின் வாயிலாகச் சுட்டியிருக்கின்றார். இந்நாடகம் 1949 ஆம் ஆண்டு ஏ.எஸ்.ஏ.சாமியின் இயக்கத்தில், ஜீபிடர் பிக்சர்ஸ் சோமு தயாரிப்பில் திரைப்படமாகவும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

கே.ஆர்.ராமசாமி – ஆனந்தனாகவும், பாலையா – மணியாகவும், நம்பியார் - மூர்த்தியாகவும், எம்.ஜி.ஆரை மணந்து கொண்ட வி.என்.ஜானகி – கதாநாயகியான அமிர்தமாகவும் நடித்திருந்தனர். பணம் கொண்ட வாழ்வுதான் நிறைவான வாழ்வு என்று செயற்பட்டுக் கொண்டிருந்த சமூகத்தினைக் கண்டித்து, மனம் கொண்ட வாழ்க்கைதான் நல்ல நிறைவான வாழ்க்கை என்பதனை இவ் "வேலைக்காரி" எனும் நாடகத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

பாத்திரப்படைப்பு

இந்நாடகத்தில் பணம்தான் பிரதானம் என்று நினைத்து வாழும் 'வேதாசல முதலியார்' மற்றும் அவருடைய மகள் 'சரசா', ஏழைகளின் மேல் இரக்க குணம் படைத்த அவரின் மகன் 'மூர்த்தி', வேலைசெய்யும் வீட்டு வேலைக்காரியான 'அமிர்தம்', அவ்வூரிலே வாழும் 'சுந்தரம்பிள்ளை', அவருடைய மகன் 'ஆனந்தன்', ஆனந்தனுடைய நண்பன் 'மணி' முதலியோர் இந்நாடகத்தின் முக்கிய பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், வேலைக்காரனான 'சொக்கன்', அமிர்தத்தின் தந்தை 'முருகேசன்', அமிர்தத்தின் அம்மா 'முத்தாயி', 55 வயது மாப்பிள்ளையின் தங்கச்சி 'பாக்கியம்' முதலியோரும் இந்நாடகத்தில் வந்துபோகும் முக்கிய பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். தன்னுடைய கருத்துக்களைச் சரியான முறையில் சொல்வதற்குத் தகுந்த பாத்திர வகைமாதிரிகளை அவ்வாறே தெரிவு செய்து தன் படைப்பில் கச்சிதமாகப் படைத்துள்ளார் என்றே கூறமுடியும்.

கதைச்சுருக்கம்

வேதாசல முதலியாரின் வீட்டிற்குச் 'சொக்கன்' துணிப்பார்சல் கொண்டு வருகிறான். அது 'சரசம்மா' மாதர் சங்கத்தில் டான்ஸ் ஆடக் கேட்டிருந்த துணி என்று வேதாசலத்திடம் சொக்கன் கூறியதும், அமிர்தம் சரசாவை அழைத்துவரச் செல்கிறாள். சரசாவும் தந்தையிடம் செல்கிறாள். இத்துணியின் பணத்தினை மாதர் சங்கத்திலே வாங்கித் தரும்படி தந்தை கூறவும் அதற்கு உடன்படுகிறாள். கடன் வாங்கிய 'சுந்தரம்பிள்ளையை' என்ன செய்யலாம் என்று வேதாசலம் கேட்க, அவனை அரஸ்ட் பண்ணலாம் எனச் சொல்கிறான் 'சொக்கன்'.

கையில் காசில்லாத சுந்தரம்பிள்ளை இப்பிரச்சினைகளால் தற்கொலை செய்து கொள்கிறான். சுந்தரம்பிள்ளையின் மகன் 'ஆனந்தன்' வேலைமுடித்து கையில் 2000 ரூபாய் பணத்துடன் வெளியூரில் இருந்து வருகிறான். வீட்டிற்கு வந்து தந்தையின் உடல் தூக்கிட்டு இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைகின்றான். அப்பா எழுதி வைத்த கடிதத்தைப் படித்து வேதாசலமே இதற்கெல்லாம் காரணம் என்பதை உணர்ந்து கொள்கிறான்.

மாதர் சங்கத்தில் சரசாவின் நாடகம் அரங்கேறி முடிகிறது. சரசாவின் சேலையை அமிர்தம் மடித்து வைத்து அழகு பார்க்கிறாள். அதைக்கண்ட சரசா அவளைத் திட்டுகிறாள். செருப்பினைத் துடைத்து வைக்கும்படி பேசுகிறாள். இதைப்பார்த்த 'மூர்த்தி' சரசாவைப் பணத்திமிர் பிடித்தவள் எனத் திட்டுகிறான். இந்த நிலையில் ஆனந்தன் வேதாசலத்தைக் கொலை செய்ய எண்ணுகிறான். அவனுடைய நண்பன் 'மணி' அதனைத் தடுத்து "கத்தியினைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு" என்கிறான்.

அமிர்தத்திற்குத் திருமண ஒழுங்கு செய்யும் நிகழ்வு நடக்கிறது. அமிர்தத்தின் தந்தை 'முருகேசன்' தன் மகள் திருமணத்திற்கு மறுப்பதாகவும், மாப்பிள்ளைக்கு வயதாகியதே காரணமாம் என்பதையும் வேதாசலத்திடம் கூறுகிறான். வேதாசலம் அமிர்தத்தினை அதட்டி அறிவுரை சொல்கிறான். அமிர்தத்தின் செயலைக் கண்ட சரசாவும் அமிர்தத்தைப் பேசுகிறாள். மூர்த்தியோ அமிர்தத்திற்கு ஆதரவாகப் பேசி, கல்யாணத்தினை நிறுத்த ஒரு திட்டம் தீட்டிக்கொடுக்கிறான். மாப்பிள்ளைவீடு பெண்பார்க்க வருகின்றார்கள். அமிர்தத்தைத் தனியே அழைத்து மாப்பிள்ளையின் தங்கச்சி தனியாகப் பேசுகிறாள். அமிர்தத்தின் மூளிக்கண்ணையும், தெத்துப்பல்லையும் பார்த்துப் பயந்து பெண் வேண்டாம் எனப் போகின்றனர். நடந்ததை மூர்த்தியிடம் சொல்கிறாள் அமிர்தம். மூர்த்திக்கு அமிர்தம்மீது ஒரு கண். சரசா வருவதைக்கண்டு அவ்விடம் விட்டு நகருகின்றாள் அமிர்தம்.

ஆனந்தனின் நண்பன் 'மணி' கடன் கொடுத்தவனிடம் காசு வாங்கவில்லை எனக் காளி கோயிலில் அடித்துச் சத்தியம் செய்கிறான். கடன் கொடுத்தவன் ஆனந்தனை மானக்கேடாகத் திட்டவும் அவனுடைய வேலை போகிறது. இதனால் மனமுடைந்த ஆனந்தன் தற்கொலைக்கு முயல்கின்றான். அதைக்கண்ட மணி அவனைச் சமாதானப்படுத்தி காளி கோயிலுக்குக் கூட்டிச்சென்று காளியின் அருள் பற்றிப் பேசுகிறான். இறுதியில் நம்பிக்கை இழந்து காளியிடம் நீதி கேட்டுக் காளியை அசிங்கப்படுத்துகிறான் ஆனந்தன். பின் ஊரைவிட்டு இருவரும் புறப்படுகின்றனர்.

வழியில் இறந்த ஓர் உடலைக்கண்டு அது 'பரமானந்தன்' என்பதையும், அவன் வெளிநாட்டில் இருந்து தன் கண்தெரியாத தாயைப் பார்க்க வந்துள்ளான் என்பதையும் அதிலே கிடந்த டைரியின் மூலம் அறிகின்றனர். ஆள்மாறாட்டம் செய்ய முடிவெடுக்கின்றனர். பரமானந்தனின் தாயார், மணியை யார் என விசாரித்து பரமானந்தனின் நண்பன் என்றதும்

சந்தோசப்படுகிறாள். பரமானந்தனுக்கு வேதாசலத்தின் மகள் சரசாவைக் கட்டி வைக்க தாய் எடுத்த முடிவையும் கூறுகிறாள். பின் தேநீர் விருந்திற்கு வேதாசலத்தின் குடும்பத்தினை அழைப்பு விடுக்கின்றனர். தேநீர் விருந்தை ஆனந்தனும், மணியும் எப்படியோ சமாளிக்கின்றனர்.

சில நாட்களில் திருமணம் நடந்து முடிகிறது. வேதாசலத்தைப் பழிவாங்கும் திட்டங்களை மணி பரமானந்தனுக்குக் கூறுகிறான். திட்டம் போட்டது போலவே ஆரம்பத்தில் சரசாவைக் கொடுமைப்படுத்துகிறான் பரமானந்தன். மூர்த்தி, அமிர்தத்திடம் தன் காதலைச் சொல்கிறான். அடுத்த சில நேரங்களில் அமிர்தத்தைத் தவறாகப் பேசுகிறான் பரமானந்தன். அந்த இடத்திற்கு வந்த சரசாவும் வழமைபோலவே அமிர்தத்தை அதட்டுகிறாள். அதனைப் பார்த்த மூர்த்தி, பரமானந்தனை எச்சரிக்கிறான். மூர்த்தியும் அமிர்தமும் கொஞ்சிப் பேசிக்கொண்டிருப்பதை ஒருநாள் வேதாசலம் காணுகின்றார்.

அமிர்தத்தை ஊரை விட்டு அனுப்பி விடலாம் என வேதாசலம் கூற, வாழ்ந்தால் அவளோடுதான் வாழ்வேன் என்கிறான் மூர்த்தி. மூர்த்தி சென்னை சென்று நண்பர்களின் உதவியுடன் அமிர்தத்தைத் திருமணம் செய்ய முடிவெடுக்கிறான். ஆனால் சொந்த சாதியில் திருமணம் செய்து வைக்க அவளுடைய தந்தை 'முருகேசன்' முயல்கிறான். பரமானந்தன் வேதாசலத்துடன் சண்டை போட்டுக் கொண்டு சரசாவையும் அழைத்துச் செல்கிறான்.

குரு ஹரிஹரதாஸ் இருக்கும் ஆசிரமம் பெண்களின் உல்லாச விடுதி என்பதை உணர்ந்து ஹரிஹரதாஸைக் கொலை செய்கிறான் மூர்த்தி. பின் வழக்கிலிருந்து விடுதலையாகி வந்து அமிர்தத்தைக் காணுகிறான். பல காலம் பிரிந்திருந்ததால் அடையாளம் மாறிப்போன அமிர்தமும் மூர்த்தியும் பாலுவின் வீட்டில் சந்திக்கின்றனர். மூர்த்திக்கும் அமிர்தத்திற்கும் திருமணம் நடக்கிறது. ஆனந்தன் நடந்த அத்தனை உண்மைகளையும் கூறுகிறான். அனைவருடைய வேடமும் கலைகின்றது. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது நிரூபிக்கப்படுகிறது. இவ்வாறு இரசனை மிகுந்ததாக நாடகம் முடிகின்றது.

பணக்கார அதிகாரமும், ஏழைகளின் உரிமை மறுப்பும்

வேலைக்காரியான அமிர்தத்திற்கு 'சரசா' செய்யும் கொடுமைகளின் வழி வேலைக்காரியை ஏனைய மனிதர்களைப் போல நினைக்காமல் அடிமையாக நினைக்கும் இச்சமூகத்தினை அறிஞர் அண்ணா வன்மையாகக் கண்டிக்கிறார். சரசாவின் கூற்றுக்கள் கீழ்சமூகத்தினை அடக்கி வைத்திருக்கும் எண்ணப்பாட்டினையே இங்கு காட்டுகின்றன. "ஒரு வேலைக்காரிக்கு வேண்டிய அடக்கம், ஒடுக்கம் மட்டுமரியாதை ஒன்றுமே உன்கிட்டே கிடையாது" என்ற சரசாவின் கூற்று இதனை உறுதி செய்கிறது.

மேலும், மேலிட வர்க்கத்தினர் பார்வையில் வேலைக்காரிகள் அடிமைகளாகச் சேவகம் புரிய வந்தவர்கள் என்ற எண்ணமே மிகுந்திருக்கிறது. சரசாவின் புடைவையை ஒழுங்கு படுத்தி அப்புடைவையைத் தன்மீது போட்டு இரசிக்கும்போது அதனைக் கண்ட சரசாவின் எதிர்ப்பு வார்த்தைகள், வேலைக்காரிகள் அடிமைகள் என்ற நினைப்பை வெளிப்படுத்துகின்றன. "அம்மாளுக்குப் பேஸனிலே கேட்குது. ஏண்டி! உன் உடம்பில் இருக்கிற அழுக்குப்பட்டால் என்னத்துக்கடி ஆகும் சேலை" எனும் சரசாவின் கூற்று இதனைக் காட்டுகிறது. சரசா வேலைக்காரியின் பெயரைக்கூட 'அமிர்தம்' என்று கூறாமல், அவளைக் 'குப்பி' என்று கணவர் பரந்தாமனிடம் அறிமுகம் செய்வதும் இங்கு நோக்கத்தக்கது. வேலைக்காரர்கள் என்றும் கீழ்மையானவர்கள் என்ற அவர்களின் உணர்வினை இது வலியுறுத்துகின்றது.

ஏழைகளின் செயற்பாடுகளில் அதிகாரமாகத் தலையிடும் நிலையில் பணக்காரர்கள் இருப்பதாகவும், ஏழைகளின் மனநிறைவு இங்கு சீரழிக்கப் படுவதாகவும் காட்டுகின்றார் அண்ணா. வயதானவரைத் திருமணம் செய்ய அமிர்தம் மறுக்கும் போது, "இந்தா அமிர்தம்! கல்யாணங் காட்சியை முடித்து வைப்பது பெரியவங்க காரியம். வயசாயிடுத்து அது இது என்று என்னென்னவோ சொல்றியாமே" என்று வேதாசல முதலியார் அதட்டுவதில் ஏழைகளின் முடிவினை யாரும் ஏற்பதாக இல்லை என்பதைக் காட்டுகின்றது.

பணமில்லாத ஏழைகளை நாயாகக் கருதும் எண்ணத்தினை வேதாசல முதலியாரின் கூற்றின் மூலம் காட்டுகின்றார் அண்ணா. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத சுந்தரம் பிள்ளையை 'நாய்' என்று கூறுகிறார். "இந்த நாயைத் தெருவழியாக இழுத்துக் கொண்டு போகச் சொல்லு ஜெயிலுக்கு" எனும் கூற்று இதனை உறுதி செய்கிறது. ஏழைகளின் உழைப்பினையும், உணர்வுகளையும் புரிந்து கொள்ளாமல் பணத்தின் மீது மட்டும் மோகம் கொண்ட மேல் மட்டத்தின் கீழ்மைக் குணத்தினை இந்நாடகத்தின் மூலம் அறிஞர் அண்ணா போட்டுடைக்கின்றார்.

அதுமட்டுமன்றி ஏழைப்பெண்களின் கற்பினைத் தமது பணவலிமை மூலம் கெடுத்து விடலாம் என்ற எண்ணமும் பணக்கார வர்க்கத்திடம் இருப்பதாகவும் காட்டுகின்றார். மூர்த்தி, வேலைக்காரியுடன் நெருங்கிப் பழகுவதைக் கண்ணுற்ற வேதாசலம், "அந்தப் பொண்ணை டச்சுக் கிச்சு பண்ணியிருந்தா சொல்லுடா இப்பவே காசு பணம் கொடுத்துக் கழுதைங்களை ஊரைவிட்டு ஓட்டிவிடலாம்" என்று தன் மகன் மூர்த்தியிடம் கூறும் தன்மை அவர்களின் பண ஆதிக்கத்தினையும், திமிரையும் பறைசாற்றுகின்றது.

எனவே வேலைக்காரியும், ஏழைகளும் என்றும் தமக்குச் சேவகம் புரிபவர்கள். அவர்கள் என்றும் தமக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்ற நிலையைத் தம் செயற்பாடுகள் மூலம் நிலைநிறுத்தி விடும் எண்ணம் பணக்கார மேல்மட்டத்தினரிடம் உண்டு என்பதே இந் நாடகத்தின் வழி அறிஞர் அண்ணா வெளிப்படுத்துகின்றார். தமக்காக வீட்டில் வேலை செய்யும் இந்த வேலைக்காரியை ஒரு பொருட்டாக மதிக்காத பணத்திமிர் பிடித்த மனிதர்களின் மனவுணர்வையும் இங்கு அண்ணா வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

பகுத்தறிவுச் சிந்தனைகள்

அறிஞர் அண்ணா பொய்மையான வழிபாட்டு முறைகளையும், மூடநம்பிக்கைகளையும், மதத்தலைவர்களின் போலியான செயற்பாடுகளையும் எதிர்க்கிறார். குறிப்பாக அவர் காளி வழிபாட்டு எதிர்ப்பினைப் பல இடங்களில் வெளிப்படுத்துகின்றார். அவ்வழிபாட்டினை மேற்கொள்பவனை 'பைத்தியக்காரன்' என்கிறார். இதனை, "பைத்தியக்காரன் உழைக்கிறான். மாடு போல சம்பாதிக்கிற காசையெல்லாம் கற்பூரமாக வாங்கிக் கொளுத்துறான்" என்று ஆனந்தன் ஏளனத்திற்கு உட்படுத்தப்படும் காட்சி உறுதிப்படுத்துகின்றது.

மேலும் கடவுளை நம்புவது, பைத்தியக்காரத்தனம் என்பது, வேதாசலத்தின் கொடுமைகளுக்குக் கொதிக்கும் ஆனந்தன் காளியிடம் உரையாடும் பகுதியின் மூலம் காட்டப்படுகின்றது. "நீ என்ன செய்வாய்! நான்தான் பித்தன். உன்னையே நம்பிக்கிடந்தேன் அது என் பைத்தியக்காரத்தனம். நயவஞ்சகத்தால் வேதாசல முதலியார் கொழுத்ததால் அது உன் அருளால் வந்தது என்று எண்ணினேன். அதுவும் என் பைத்தியக்காரத்தனம். எனக்கு இருந்த போதை தெளிந்தது" என்ற ஆனந்தனின் கூற்று உற்றுநோக்கத்தக்கதாகும்.

மேலும் அண்ணா, பகலில் சாமியாராகவும் இரவில் காம இச்சை கொண்ட போகியாகவும் இருக்கும் போலிச்சாமியார்களின் செயலையும் கண்டிக்கிறார். "ஹா கபட வேடதாரியே! காமுகா... பகலிலே யோகியாகவும் பாதி ராத்திரியிலே போகியாகவும் காட்சியளிக்கும் பேடிப்பயலே! ஆசிரமமா இது" என்ற மூர்த்தியின் ஆவேசக் கூற்று இதனை ஆதாரப்படுத்துகின்றது.

அதுமட்டுமன்றி சாதிக்கு எதிரான குரலையும் பதிவு செய்கிறார். வேற்று சாதிப் பெண்ணான அமிர்தத்தை மூர்த்திக்குத் திருமணம் செய்து வைப்பதன் மூலம் சாதி ஒழிப்பினை மேற்கொள்கின்றார். சாதி ஒழிப்பிற்கு நல்ல தீர்வாகக் கலப்பு மணத்தினை அறிமுகப்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது எனலாம். அறிஞர் அண்ணா, சமூகத்தில் இருந்த கீழ்த்தரமான சிந்தனைகளுக்கு எதிராகப் பகுத்தறிவுச் சிந்தனைகளை இந்நாடகத்தின் மூலம் வலியுறுத்துவதனூடாக சமத்துவமான சமுதாயத்தைக் காண விளைகின்றார் என்பதே உண்மை ஆகும்.

முடிவுரை

"வேலைக்காரி" எனும் நாடகத்தினை நோக்கும் போது, சமூக விழிப்புணர்வுக் கருத்துக்களைப் பரப்பும் கலைக் கருவியாக அண்ணா இந்நாடகத்தினைப் பயன்படுத்தியுள்ளார். வீட்டுக்கு வரும் வேலைக்காரியை ஒரு ஜீவனாக மதிக்காத பணக்கார வர்க்கத்திற்கு ஒரு செருப்படியாக இது அமைந்துவிடுகிறது. வேலைக்காரர்களும் எம்மைப் போன்றவர்கள் என்ற சமூக சமத்துவத்தினை நிரூபித்திருக்கிறார் அண்ணா. வேலைக்காரிக்கு நடக்கும் கொடுமைகளினூடாகத் தன்னுடைய பகுத்தறிவுச் சிந்தனைகளை வெற்றிகரமாக விதைத்திருக்கிறார். ஏழைகளின் கண்ணீரின் வலி, சாதி ஒழிப்பு, போலி வழிபாடு, பணக்கார ஆதிக்கம் என்பவற்றைக் கடுமையாகச் சாடுகிறார். பணம் மட்டுமே வாழ்வு என்று நினைப்பவர்களுக்குப் பணம் இல்லை மனம் கொண்ட வாழ்வுதான் வாழ்வு என்பதனை இந்நாடகத்தின் வழி விளக்குவதில் வெற்றியும் கண்டுள்ளார் என்றே கூறமுடியும்.

References

- Sivathambi, K. (1982). Critical Thoughts. Chennai: Public Release.
- Natarajan, T. S. (2003). Thiranaayvuk Kalai. Chennai: New Century Book House.
- Annathurai, C. N. (1971). Annavin Naadakankal. Chennai: Parimalam Publishing House.
- Scholar Anna. (2009). Maid. Chennai: Barry Publishing.
- Scholar Anna. (2010). Maid. Chennai: Gayatri Publications.
- https://www.bookmybook.in/product/velaikkari
- http://www.annavinpadaippugal.info/annavin_nadagangal.htm
- http://www.moolai.com/site/articleview.php?articlepagename=velaikkaari
- https://tamil.trendingonlinenow.in/a-view-on-velaikkari-drama-by-c-n-annadurai

****

ஐந்தாம் ஆண்டுக்கான தேசியப்பள்ளித் தமிழ்ப் பாடநூலில் காணப்படும் நன்னெறிக் கூறுகள் Moral values in national school's standard five Tamil text book

திலிப்குமார் அகிலன் | Thilipkumar Akilan

சுல்தான் இத்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா, dhilipchandrusp@gmail.com

தேவேந்திரன் சுகுமார் | Deventhiran Sukumar

தாமான் மோலேக் தேசியப்பள்ளி, மலேசியா dhev_akhbar@yahoo.com

ஆய்வுச்சுருக்கம்

மாணவர்கள் மத்தியில் நன்னெறிக்கூறுகளின் விதைப்பு மிக முக்கியமானதாகும். அவர்கள் தேசியக் கல்விக் கொள்கையின்படி முழுமையான, ஆக்கப்பூர்வமான, விழுமியங்கள் பொருந்திய மாணவர்களாக உருவாக நன்னெறிக் கூறுகளின் செவ்விய அறிமுகம் மிக இன்றிமையாததாகும். பள்ளிகளில் முக்கிய மேற்கோளாக விளங்குவன பாடநூல்களாகும். இப்பாட நூல்கள் மாணவர்கள் மத்தியில் நன்னெறிக் கூறுகளை இலகுவாகக் கொண்டு சேர்க்கும் ஊடகங்களாகச் செயலாற்றுகின்றன. அவ்வகையில், சொல், சொற்றொடர், வாக்கியம், பத்தி, கட்டுரை, கதை, மொழியணிகள் என எல்லாவிதமான வகையிலும் தேசியப்பள்ளி ஐந்தாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலில் காட்டப்பட்டுள்ள நன்னெறிக்கூறுகளை இக்கட்டுரைப் பட்டியலிடும். தேசியப்பள்ளிக்கான ஐந்தாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலை மட்டுமே இக்கட்டுரை ஆய்வு எல்லையாகக் கொண்டுள்ளது. உள்ளடக்கப் பகுப்பாய்வு எனும் முறையைப் பயன்படுத்தி இவ்வாய்வு நகரவிருக்கிறது. இது ஒரு பண்புசார் ஆய்வாகும்.

Abstract

Moral values should be implemented among students. Its important to introduce moral values in the proper way among students to mold them as excellent students. Textbooks are a major reference tool in schools. According to that, this paper will discuss moral values which are found in National school Tamil text books. Limitation of research for this paper is National school Tamil year five textbook.This paper will use content analysis method and this is a qualitative research.

திறவுச்சொல் (Keywords) : தேசியப்பள்ளி, தமிழ்மொழி, பாடநூல், நன்னெறி, மாணவர்கள், தேசியக் கல்விக்கொள்கை, National school, Tamil, Textbook, Moral, Students, National Education Philosophy.

அறிமுகம்

ஒரு நாட்டின் மேம்பாடு என்பது அதன் கல்வி அடைவுநிலையை அடியொற்றியதாகும். நாட்டிலுள்ள கல்வித் தரத்தின் அளவு மேம்பாடையும்பொழுது, மக்களின் ஆக்கத்தன்மையும்

அதிகரிக்கும் *(Yeni Ratmelia, 2018).* அதன் பொருட்டு, மாணவர்களுக்காக வடிவமைக்கப்படும் கல்வி மூலங்கள் அவர்களின் ஆக்கத்தன்மை, பண்பு, நன்னடத்தை, சிந்தனை, அறிவாற்றல் ஆகியவற்றை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். கல்விச் சட்டம் (1996), குறிப்பிடும் மலேசியக் கல்வியின் முதன்மை நோக்கத்தை ஆராய்கையில், அது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் ஆகியன அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவற்றை ஒன்றிணைத்து ஒரு சமன்நிலையும் இயைபும் கொண்ட தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியென பகர்கிறது. அதன் வழியில், அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் கொண்ட, குடும்பம், சமூகம், நாடு ஆகியவற்றிற்கு உழைக்கும் நல்ல மலேசியரை உருவாக்குவதை இந்தத் தேசியக் கல்விக் கொள்கை முதன்மை நோக்கமாகக் கொண்டு நகர்கிறது. மேலும், தேசியக் கலைத்திட்ட வரையறையின் சாரத்தை ஊடாடுகையில், அதுவும் மாணவர்களை ஆன்மீகம், அறிவு, உடல், உள்ளம் ஆகிய வகைகளில் மேம்படச் செய்து, அவர்களிடத்தில் பண்பு விதைப்பைச் செய்து அதை மேம்படுத்தவும் வழிச் செய்வதை அடிப்படையாகக் கொண்டுள்ளது (கல்வி விதிமுறைகள் (தேசியக் கலைத்திட்டம்) 1997). ஆக, ஒரு மாணவன் முழுமையானவனாக உருவாக அவனிடத்தில் நன்னெறிப் பண்புகள் நிரம்பியிருத்தல் அவசியம் என்பது புலனாகிறது. அதன் வழியில், அனைத்துலகத் தரத்திலான கல்வி நிலையை அடைவதற்கு, புதிய மலேசியக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்ட கல்வித்திட்டத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ள ஐந்தாம் ஆண்டுக்கான தேசியப்பள்ளித் தமிழ்மொழிப் பாடநூலில் காணப்படும் நன்னெறிக் கூறுகளை அடையாளங்கண்டு பட்டியலிடுதல் அவசியமானதாகும். எனவே, இந்த ஆய்வுக்கட்டுரை தேசியப்பள்ளித் தமிழ்மொழிப் பாடநூலில் காணப்படும் நன்னெறிக் கூறுகளை உள்ளடக்கப் பகுப்பாய்வு எனும் அடிப்படையில் பண்புசார் முறையில் ஆராயவிருக்கிறது.

நன்னெறிக் கூறுகள்

ஒரு செயலிலுள்ள நல்லது தீயது அல்லது ஒரு நடத்தையிலுள்ள நல்லது தீயது ஆகியவற்றை அளத்தல் நன்னெறியாகும் (Ruslam Hasan, Farid Mat Zain, Kaseh Abu Bakar & Azmul Fahimi Kamaruzaman, 2020). மன்சூருடின் (2003), இஸ்லாம் நன்னெறி என்பதை நடத்தை, நன்னடத்தை மற்றும் பாத்திரம் என வரையறுக்கிறது. நன்னெறி என்ற சொல் லத்தின் மொழியில் *"Mores"* என்று வழங்கப்படுகிறது. இதுவே, *"Moral"* என்ற சொல்லின் மூலமாகும். இச்சொல் குழுமமாகவோ அல்லது தனியாளாகவோ மனிதர்கள் ஒரு சூழலில் செய்யும் செயற்பாடு என பொருள்படுகிறது (கசாலி, 2007). அதுமட்டுமல்லாது, *"Mores"* என்பது வழமை அல்லது சடங்கு எனவும் பொருள்படுகிறது (Bertens,2003). நன்னெறி என்பது முழுமையாக மற்ற மனிதர்களோடு தொடர்புபடும்பொழுது விளையும் செயல், நடத்தை, பேச்சு என்பதாகும். இது பின்பற்ற வேண்டிய நல்ல செய்கைகள், பின்பற்றக் கூடாத தீய செய்கைகள் ஆகியவற்றின் தொகுப்பாகும். சஹாரா et. al (2015), தம்முடைய *"Pembangunan akhlak dan moral ke arah masyarakat lestari"* எனும் ஆய்வேட்டில் நன்னெறி ஒரு மனிதனை முழுமையாக உருவாக்கத் தேவைப்படும் அம்சமென மொழிகிறார். பெர்தேன்ஸ் (2003), தம்முடைய *"Etika dan moral untuk pengajian tinggi"* எனும் நூலில் மாணவர்கள் மத்தியில் அமல்படுத்த வேண்டிய நன்னெறியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார்.

மலேசியச் சூழலில் நன்னெறி விதைப்பு என்பது முறையான கல்வியின் வாயிலாக செய்யப்படுகிறது. இஸ்லாம் அல்லாத ஒன்றிலிருந்து ஆறாம் ஆண்டு மாணவர்களுக்காக நன்னெறிக் கல்விப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1983- ஆம் ஆண்டு ஆரம்பப்பள்ளி புதியப் பாடத்திட்டத்தின் *(KBSR)* அறிமுகத்தின் மூலமாக நன்னெறிக் கல்வியின் பாடத்திட்டம் அமலாக்கம் செய்யப்பட்டது. நாட்டின் கல்வித்திட்டத்தின் மேம்பாட்டினால் 2003-ஆம் ஆண்டு இப்பாடம் மீண்டும் மீளுருவாக்கம் செய்யப்பட்டு, மீண்டும் 2011-ஆம் ஆண்டு மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. 2017-ஆம் ஆண்டுக்கான ஆரம்பப்பள்ளியின் சீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் மூலம் மீண்டும் சீரமைக்கப்பட்ட நன்னெறிக்கல்வி 14 நன்னெறிக் கூறுகளை உள்ளடக்கியிருக்கிறது. அந்த நன்னெறிக் கூறுகளோடு ஏனைய சில நன்னெறிக் கூறுகளும் இணைக்கப்பட்டு, இந்த ஆய்வில் தமிழ்மொழி பாடநூலில் ஆராயப்படவிருக்கின்றன. தேசியப்பள்ளியில் தொடர்பு மொழிப் பாடமாகவும், தமிழ் மாணவர்களின் முக்கியத் தொடர்புமொழியாகவும் இருக்கின்ற தமிழ்மொழிக்கு முதன்மை மேற்கோள் நூலாக இருக்கும் தமிழ்பாடநூலில் நன்னெறிக் கூறுகளின் விதைப்பு என்பது முக்கியம் என்ற அடிப்படையில் இவ்வாய்வு செய்யப்படுகிறது.

ஆய்வின் நோக்கம்

- தேசியப்பள்ளி ஐந்தாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலிலுள்ள நன்னெறிக் கூறுகளை அடையாளங்காணுதல்.
- தேசியப்பள்ளி ஐந்தாம் ஆண்டு தமிழ்மொழிப் பாடநூலிலுள்ள நன்னெறிக் கூறுகள் காட்டப்பட்டுள்ள வகையினை விளக்குதல்.

ஆய்வு முறைமை

இந்த ஆய்வு பண்புசார் ஆய்வாகும். பண்புசார் ஆய்வென்பது குறிப்பிட்ட சூழலிலுள்ள கருத்துகளை விளக்கப்பாட்டியல் அடிப்படையில் எண்களின் தலையீடு இல்லாமல் விளக்குதலாகும் (Cathryne Palmer & Amanda Bolderston, 2006). மேலும், பாடநூலிலுள்ள நன்னெறிக் கூறுகளின் உள்ளடங்களை ஆராய்ந்து விளக்குவதால் இது உள்ளடக்கப் பகுப்பாய்வையும் உள்ளடக்கி இருக்கிறது. உள்ளடக்கப் பகுப்பாய்வு என்பது ஒரு எழுத்துப் படிவத்தில் உள்ள கருத்துகளைப் பகுத்தாய்தலாகும் (Mulyana & Darmiasti, 2013). பாடநூலிலுள்ள நன்னெறிக் கூறுகளைத் தெளிவாகக் கண்டறிய இம்முறை மிக அவசியமானதாகும்.

தரவுகள் பகுப்பாய்வு

ஐந்தாம் ஆண்டுக்கான தேசியப்பள்ளித் தமிழ்மொழிப் பாடநூலில் 9 நன்னெறிக் கூறுகள் கண்டறியப்பட்டுள்ளன. நன்னெறிக்கல்வியில் வழங்கப்பட்டுள்ள நன்னெறிக் கூறுகளோடு ஏனையத் தொடர்புடையக் கூறுகளும் இணைத்துக் கொள்ளப்பட்டு, நன்னெறிக் கூறுகள் அடையாளங்காணப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

I. இயற்கையை நேசித்தலும் போற்றுதலும்

இயற்கையின் சீர்மையைப் பாதுகாக்க அதனை நேசித்தலும் போற்றுதலும் அவசியமாகிறது. இயற்கையை நேசித்தலும் போற்றுதலும் மனிதர்களிடையே இயற்கையைப் பாதுகாக்கும் பண்பினை ஆழ விதைக்கின்றது (Okorondu, 2008). ஒருவருக்கு ஒன்றின் மீது அதீத நேசம் விளையும் போது அதனைப் பாதுகாக்கின்ற உத்வேகம் தானே பிறக்கும் (Souljah, 2011). அந்த

வகையில், இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் இயற்கையை நேசித்தலும் போற்றுதலும் என்ற நன்னெறிக் கூறு 3 இடங்களில் காட்டப்படுகிறது.

"மரம் தந்த வரம்" எனும் தலைப்பின்கீழ் முதலாவதாக, காற்றையும் நிழலையும் தருதல், விலங்குகளின் இருப்பிடமாக இருத்தல், பசுமையை நிலை நிறுத்துதல் ஆகியன காரணங்களுக்காக வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் என்ற கருத்து காட்டப்படுகிறது. இரண்டாவதாக, "நல்ல நண்பன்" எனும் தலைப்பில், விலங்குகளிடத்தில் அன்பு செய்தல் எனும் வகையில் இந்நன்னெறிக் கூறு காட்டப்படுகிறது. இறுதியாக, "வீடு எங்கே" எனும் தலைப்பில் பறவைகள், விலங்குகள், பூச்சிகள் ஆகியவற்றின் வீடுகளைப் பட்டியலிடுவதன் வாயிலாக இக்கருத்து காட்டப்படுகிறது.

II. அன்பு நெறி

அன்பு நெறி மிகவும் உயரியதாகப் போற்றப்படுகிறது. "அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்" (10.1.1), "அன்பின் வழியது உயிர்நிலை" (குறள்.80), "என்பிலதனை வெயில்போலக் காயுமே அன்பிலதனை அறம்" (குறள்.77) ஆகிய வரிகள் அன்பின் சிறப்பை நமக்கு உணர்த்துகின்றன. இத்தகைய அன்பு நெறி, "நல்ல நண்பன்" எனும் தலைப்பில் விலங்குகளிடத்தில் அன்பு செய்தல் எனும் வகையிலும், "வேறுபாடு அறிவோம்" எனும் நடவடிக்கைப் பகுதியில் வெயிலில் வந்தவருக்குப் பானம் கொடுத்தனர் என்ற வாக்கியத்திலும் காட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து, "தொழில்நுட்பம்" எனும் பெருந்தலைப்பின்கீழுள்ள நடவடிக்கை-2 பகுதியில் "மாமா தங்கச் சங்கிலியை அத்தையின் பிறந்தநாள் அன்று பரிசளித்தார்" எனும் வாக்கியத்தில் அன்பு நெறி காட்டப்பட்டுள்ளது. "கல்விக்கூடம் சென்றிடுவோம்" என்ற கவிதையில் "அன்பாய்க் கூடிப் பழகிடுவோம்" என்ற வரியில் அன்பு நெறி காட்டப்பட்டுள்ளது. இறுதியாக, "நல்லதொரு குடும்பம்" என்ற பகுதியில் "பெற்றோர்களின் அன்பான போதனை வாழ்க்கைக்கு வழிகாட்டும்" என்று கூறுவதன் மூலம் அன்பு நெறி காட்டப்படுகிறது.

III. சுறுசுறுப்பு

வாழ்க்கையில் தொடர்ந்து வெற்றி பெற ஒருவருக்குச் சுறுசுறுப்பு அவசியமாகும் (Mohammad Kahiri, Asmawati & Samsilah, 2015). முதன்முதலில் ஒருவர் கற்றுக் கொள்ளவேண்டிய பழக்கமாகச் சுறுசுறுப்புத் திகழ்கிறது (சுந்தரவடிவேலு, n,d). சுறுசுறுப்பு எனும் நெறி "எறும்பு சொல்லும் பாடம்" எனும் கவிதையில் "சுறுசுறுப்பே வேண்டும் விரும்பு" எனும் வரியில் காட்டப்படுகிறது. தொடர்ந்து "வெற்றி நாட்டுவேன்" எனும் கவிதையிலும் "சோர்வுதனைத் தள்ளுவேன் சுறுசுறுப்பைக் கொள்ளுவேன்" எனும் வரியில் சொல்லப்படுகிறது. இறுதியாக, "காலம் பொன்னானது" எனும் பகுதியில் சோம்பலைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தின் வாயிலாக சுறுசுறுப்பு நெறிக் காட்டப்படுகிறது.

IV. நேர்மை

நேர்மை என்பது ஏற்புடைய செயல் மற்றும் சொல், உண்மைச் சூழலை விளக்கும் கருத்து விளக்கல், அல்லது விதிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் உறுதிசெய்யப்பட்ட செயலாகும் (Fitriah & Abd.Majid, 2020). புத்தரின் போதனைகளில் நேர்மை என்பது ஏமாற்றும் சூழ்ச்சியும் அற்றத் தன்மை என்று காட்டப்பட்டுள்ளது (ராமசாமி, 1991). ஐந்தாம் ஆண்டுக்கானத் தமிழ்மொழிப் பாடநூலில் நேர்மை எனும் நெறி "ஏமாறாதே ஏமாற்றாதே" எனும் கதையில்,

"பிறரை ஏமாற்றக் கூடாது" எனும் நீதியினைப் புகட்டுவதன் மூலமாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், "அறிவே வெல்லும்" எனும் கதையில் கருமி ஒருவன் ஏழை விவசாயியை ஏமாற்ற நினைக்கிறான். அவ்வாறு ஏமாற்ற நினைத்ததால் அவன் பீர்பால் என்ற அறிவாளியால் தண்டிக்கப்படுகிறான். இதன் மூலமும், யாரையும் ஏமாற்றக்கூடாது என்ற வகையில் நேர்மை நெறி காட்டப்படுகிறது. இறுதியாக, "நேர்மை வேண்டும்" எனும் கதையில் அஸ்வினி எனும் சிறுமியை ஏமாற்ற நினைத்தக் கடைக்காரருக்குப் பெரியவர் ஒருவர் பாடம் புகட்டுவதன் மூலமும் நேர்மை நெறி காட்டப்படுகிறது.

V. உதவும் மனப்பான்மை

உதவும் மனப்பான்மை என்பது உதவியைப் பெறுதல் அல்லது வழங்குதல் என்பதாகிய மனிதர்களின் குணமாகும் (Putra & Rustika, 2015). உதவும் மனப்பான்மை நெறி தமிழ்மொழிப் பாடநூலில் இரண்டு இடங்களில் வருகிறது. முதலாவதாக, "நல்ல நண்பன்" எனும் பகுதியில் குறிப்பிடப்படுள்ள அமுதன் என்பவனின் பண்பாக "உதவும் மனப்பான்மை கொண்டவன்" என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்ததாக, "உதவும் மனப்பான்மை" எனும் பகுதியில் "பெரியவருக்குக் கடித உறையில் முகவரி எழுத உதவினேன்" என்ற வாக்கியத்தில் உதவும் மனப்பான்மை வழங்கப்பட்டுள்ளது. இறுதியாக, "அன்பான நண்பனை ஆபத்தில் அறி" எனும் பழமொழியின் விளக்கத்தில் "நல்ல நண்பனை அவன் நமக்குத் தக்க சமயத்தில் உதவி செய்வதைக் கொண்டு அறியலாம்" என்று வழங்கப்பட்டுள்ளதன் மூலமாக வெளிகாட்டப்பட்டுள்ளது.

VI. மதிக்கும் மனப்பான்மை

மதித்தல் எனப்படுவது ஒருவரிடத்தில் பணிவுடன் நடத்தல், சேவையாற்றுதல், தொடர்பாடுதல் என்ற வகையில் அவரை உயர்ந்து நோக்குதல் ஆகும் (Surina Nayan, Latisha Asmaak Shafie, Mahani Mansor, Mohd. Izwan Osman & Nazira Osman, 2011). இந்த மதிக்கும் மனப்பான்மை "நல்ல நண்பன்" எனும் பகுதியில் நட்பை மதித்தல் என்ற வகையில் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக, "நன்னெறி" என்ற பெருந்தலைப்பின் செய்யுளும் மொழியணியும் என்ற பகுதியின் நடவடிக்கை அங்கத்தில் "பெற்றோரிடம் ஆசி பெறுதல் கபிலனின் பழக்க வழக்கம் ஆகும்" என்ற வாக்கியத்தை மதிக்கும் மனப்பான்மை காட்டப்பட்டுள்ளது. இறுதியாக, "தாய் சொல் கேள்" என்ற தலைப்பில் தாயின் சொல்லை மதிக்க வேண்டும் என்ற முறையில் உதவும் மனப்பான்மை நெறி காட்டப்பட்டுள்ளது.

VII. ஆரோக்கியம்

ஒரு மனிதனின் மேம்பாட்டிற்கு உடல் ஆரோக்கியம் என்பது முக்கியமானதாகக் கருதப்படுகிறது (Muhammad Hilmi Jalil & Fakhrul Adabi Abdul Kadir, 2013). அத்தகைய ஆரோக்கியம் எனும் நெறி தமிழ்மொழிப் பாடநூலில் 6 இடங்களில் காட்டப்படுகிறது. "விளையாட்டின் அவசியம்" எனும் தலைப்பில் உடல் ஆரோக்கியமாக இருக்க விளையாட்டு அவசியம் என்று கூறுவதன் மூலமாக ஆரோக்கிய நெறி காட்டப்படுகிறது. தொடர்ந்து, "இன்பமாக உண்ணலாம்" எனும் கவிதையில் ஆரோக்கியமான காய்கறி உணவுகளை உண்ணுவதன் மூலம் நலமாக வாழலாம் என்பது கூறப்படுகிறது. அதே போன்ற கருத்து "உணவில் காய், கனி, கீரை" என்ற கவிதையில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், "இட்டலி உண்போம்" என்ற பகுதியில் இட்டலி உண்ணுவதன் மூலமாக ஆரோக்கியமாக இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஆக, ஆரோக்கியமான உணவுகளை உண்ணுவதன் மூலமாக

உடலின் நலத்தினைப் பாதுகாக்க முடியும் என்ற விடயம் இதன் மூலமாக விளக்கப்படுகிறது. அடுத்ததாக, "விழித்துக் கொள்" என்ற பகுதியில், அதிகமாக திறன்பேசி பயன்படுத்துவதால் ஏற்படும் நோய்களைப் பட்டியலிட்டு அவ்வாறு செய்யக்கூடாது என்று கூறுவதன் மூலமாக ஆரோக்கியம் எனும் நெறி காட்டப்படுகிறது. இறுதியாக, "யோகாவும் நானும்" என்ற பகுதியில், யோகா உடலுக்கும் மனத்திற்கும் பலன் தரக்கூடியது என்ற வகையில் ஆரோக்கிய நெறி காட்டப்பட்டுள்ளது.

VIII. ஒற்றுமை

ஒற்றுமை எனும் நெறி "என்னைக் கவர்ந்தவர்" எனும் பகுதியில் துங்கு அப்துல் ரகுமான் இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்த்தார் என்பதிலும்," கல்விக்கூடம் சென்றிடுவோம்" என்ற பகுதியில் "அன்பாய்க் கூடி பழகிடுவோம்" என்ற வரியிலும், "திறந்த இல்லம்" எனும் பகுதியில் திறந்த இல்லம் இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கிறது என்பதிலும், "இளையோர் உலகம்" என்ற பெருந்தலைப்பின் கீழுள்ள செய்யுளும் மொழியணியும் பகுதியில் "எலியும் பூனையும் போல" என்ற உவமைத் தொடர் வாயிலாகவும், "நல்லதொரு குடும்பம்" என்ற பகுதியில் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமையின் அவசியத்தை உணர்த்துவதன் வாயிலாகவும் வழங்கப்பட்டுள்ளது.

IX. முயற்சியுடைமை

"முயற்சி திருவினையாக்கும்" (குறள்.616) என்ற குறள் முயற்சி எனும் நெறியின் முக்கியத்துவத்தை நன்கு பறைச்சாற்றுகிறது. "தன்முனைப்பு" எனும் பெருந்தலைப்பின் கீழுள்ள செய்யுளும் மொழியணியும் பகுதியிலுள்ள "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்ற பழமொழியும், "குன்றின் மேலிட்ட விளக்குப் போல" எனும் உவமைத்தொடர் பகுதியில் விடாமுயற்சியோடு காற்பந்து பயிற்சி செய்யப் போகிறேன் என்ற விளக்கமும், "சாதனை செய்" என்ற பகுதியில் சறுக்குக்காலணி பயிற்சி செய்து அந்தப் போட்டியில் பெறுவதும், "எண்ணமே வாழ்வு" என்ற பகுதியில் உடல் எடையைக் குறைக்க விடாது முயற்சி செய்வதும் முயற்சியுடைமை என்ற நெறியைக் காட்டுகின்றன. மேலும், "கட்டொழுங்கு" என்ற பெருந்தலைப்பின் கீழுள்ள செய்யுளும் மொழியணியும் என்ற பகுதியிலுள்ள "முயற்சி திருவினையாக்கும்" என்ற திருக்குறள் முயற்சியுடைமை பறைச்சாற்றுகிறது. "எதிர்காலத்தில் நான்" என்ற பகுதியிலும் "எதிர்காலத்தில் நான், வாழ்க்கையில் முன்னேற கடுமையாக உழைப்பேன்" என்ற வாசகம் முயற்சியுடைமையைக் காட்டுகிறது. இறுதியாக, "குடும்பம்" என்ற பெருந்தலைப்பிலுள்ள மரபுத்தொடர் பகுதியில் ஒரு பெண் விடாமுயற்சியோடு வாழ்வில் முன்னேறுகிறாள் என்று காட்டுவதன் மூலமாக முயற்சியுடைமை காட்டப்பெறுகிறது.

முடிவுரை

இதன் மூலம், இந்த ஆய்வில் 9 முதன்மையான நன்னெறிக் கூறுகள் கண்டறியப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. இந்த நன்னெறிக் கூறுகளில் முயற்சியுடைமை என்ற நன்னெறிக் கூறே அதிகமான இடங்களில் பேசப்பட்டுள்ளது. இந்த நன்னெறிக் கூறுகளை வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலமாக மாணவர்களால் வாழ்வில் சிறந்து விளங்க முடியும்.

துணைநின்றவை

- Ayan, Surina and Shafie, Latisha Asmaak and Mansor, Mahani and Osman, Mohd. Izwan and Osman.
- Nazira (2011) Nilai hormat di kalangan pelajar UiTM Perlis terhadap pensyarah (dari perspektif pensyarah) / Surina Nayan ...[et.al.]. Jurnal Intelek, 6 (1). ISSN 2231-7716.Retreived from http://malrep.uum.edu.my/rep/Record/my.uitm.ir.32072
- Bahagian Pembangunan Kurikulum. (2019). Pendidikan Moral. Dokumen Standard Kurikulum dan
- Pentaksiran. Kementerian Pendidikan Malaysia: Putrajaya.
- Bertens, K.(2003). Etika dan Moral untuk Pengajian Tinggi. Kuala Lumpur: Penerbit Universitiy, Malaya.
- Cathryne Palmer & Amanda Bolderston,(2006), A Brief Introduction to Qualitative Research, The Canadian journal of medical radiation technology / CAMRT 37(1):pp.16-19. Retrieved from https://www.researchgate.net/publication/237892956_A_Brief_Introduction_to_Qualitative_Research
- Fitriah M.Suud & Abd.Madjid,(2020), Honesty: A Multidimensional Study as Motivation for National Character Building, Hayula: Indonesian Journal of Multidisciplinary Islamic Studies, Vol. 4, No. 1, Januari 2020.DOI:https://doi.org/10.21009/hayula.004.1.06.
- Manshuruddin Jabaidin.(2003). Moral Kunci Pembangunan dalam Islam. Johor Bharu:
- Perniagaan Jahabersa.
- Muhammad Hilmi Jalil & Fakhrul Abadi Abdul Kadir,(2013), KEPENTINGAN KESIHATAN DIRI
- DALAM PEMBANGUNAN INSAN: ANALISIS KARYA FALSAFAH HAMKA (The Importance of Healthy Body in Human Development: Analysis from HAMKA's Philosophical Works), Jurnal Hadhari 5 (2) (2013):pp. 69-84.Retrieved from https://www.researchgate.net/profile/Wan-Mohd-Fazrul-Azdi-Wan-Razali/publication/345601040_E-PROCEEDINGS_OF_THE_INTERNATIONAL_CONFERENCE_ON_AQIDAH_RELIGIONS_AND_SOCIAL_SCIENCES_SIGMA10/links/5fa90befa6fdcc0624202319/E-PROCEEDINGS-OF-THE-INTERNATIONAL-CONFERENCE-ON-AQIDAH-RELIGIONS-AND-SOCIAL-SCIENCES-SIGMA10.pdf
- Mulyana, A. dan Darmiasti. (2009). Hitoriografi Di Indonesia: Dari Magis-Religius Hingga Strukturalis. Bandung: Refika Aditama.
- Okorondu,C.C.,(2008). Discover the Secret of True Love. New York:I, University, Inc.
- Othman, Mohammad Khairi and Suhid, Asmawati and Mat Rashid, Abdullah and Roslan, Samsilah, (2015), Penghayatan nilai murni dalam kalangan pelajar sekolah menengah masa kini,Jurnal Pembangunan Sosial, 18. pp. 1-20. ISSN 1394-6528.
- Putra, I., & Rustika, I. (2015). HUBUNGAN ANTARA PERILAKU MENOLONG DENGAN KONSEP DIRI PADA REMAJA AKHIR YANG MENJADI ANGGOTA TIM BANTUAN MEDIS JANAR DUTA FAKULTAS KEDOKTERAN UNIVERSITAS UDAYANA. Jurnal Psikologi Udayana, 2(2). doi:10.24843/JPU.2015.v02.i02.p08.Retrieved from https://ojs.unud.ac.id/index.php/psikologi/article/view/25199
- Ruslam Hasan, Farid Mat Zain, Kaseh Abu Bakar & Azmul Fahimi Kamaruzaman, (2020), Kefahaman Nilai Etika dan Moral Pelajar di Institusi Pengajian Tinggi: Satu SorotaN Literatur (Understanding of The Dimensions of Ethical and Moral Values In Higher Learning Institutions: A Literature Review), MALIM: Jurnal Pengajian Umum Asia Tenggara 21(2020):pp.126–141https://doi.org/10.17576/malim-2020-2101-10 Retrieved from https://www.researchgate.net/publication/345770142_KEFAHAMAN_NILAI_ETIKA_DAN_MORAL_PELAJAR_DI_INSTITUSI_PENGAJIAN_TINGGI_SATU_SOROTAN_LITERATUR.
- Sarmellaa Santie Rajandran & Kumaraguru Kuppasamy.(2020). Bahasa Tamil Sekolah Kebangsaan. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.
- Souljah,S.(2011).Midnight and the meaning of love.New York: Atria Books.

- Yeni Ratmelia, (April 2018),Nilai Moral Dalam Buku Teks Pelajaran Sejarah (Analisis Terhadap Buku Teks Sejarah Indonesia kelas X) , HISTORIA: Jurnal Pendidik dan Peneliti Sejarah, Vol. I, No. 2, pp.115-122. Retrieved from file:///C:/Users/HP/Downloads/10711-23204-1-PB.pdf.
- Zaharah Hussin, Saedah Siraj, Zai Hazreen Ab Malik, Mohd Ridhuan Mohd Jamil, Ahmad Arifin Sapar & Nurul Rabihah Mat Noh,(2015),Pembangunan akhlak dan moral ke arah masyarakat Lestari,Jurnal Al-Hikmah, 7(2) 2015:pp. 72-87. Retrieved from http://journalarticle.ukm.my/9388/
- அண்ணாமலை. சு.ப. (2002). திருமந்திரம் மூலபாட ஆய்வு பதிப்பு – முதல் பகுதி. சென்னை: கலாஷேத்ரா பதிப்பகம்.
- அண்ணாமலை. சு.ப. (2002). திருமந்திரம் மூலபாட ஆய்வு பதிப்பு – இரண்டாம் பகுதி. சென்னை: கலாஷேத்ரா பதிப்பகம்.
- அண்ணாமலை. சு.ப. (2002). திருமந்திரம் மூலபாட ஆய்வு பதிப்பு – மூன்றாம் பகுதி. சென்னை: கலாஷேத்ரா பதிப்பகம்.
- சுந்தரவடிவேலு, நெ, து.(n.d). எல்லாரும் வாழ்வோம்.கன்னிமாரா பொது நூலகம்: சென்னை.
- ராமசாமி, பா.(1991). புத்தர் போதனைகள். சென்னை: முல்லை நிலையம்.
- வரதராசன். மு.வ. (2008). திருக்குறள் தெளிவுரை. சென்னை: அப்பர் அச்சகம்.

****

கிராமப்புற மாணவர்களிடையே மொழி கற்றல் கற்பித்தலில் உள்ள சிக்கல்கள் Impediments in Teaching and Learning Language among Rural students

முனைவர் மு.சு.கண்மணி | Dr. M.S. Kanmani

உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை - 630003. அலைபேசி 9842489040.

ஆய்வுச்சுருக்கம்

'கிராமப்புற மாணவர்கள்' மொழிப்பாடம் தேர்வு செய்தலில் தொடங்கி, அவர்களின் குடும்பப் பின்னனி, வாழ்வியல் சூழல், கற்றலுக்கான சூழல், கல்விசார் விழிப்புணர்வுகளில் அவர்களுக்கான ஈடுபாடு போன்றவை மொழி கற்றலுக்கு அடிப்படையாக அமைகின்றன. அறிவியல் பாடத்தினைத் தேர்வு செய்யும் மாணவர்களுக்கும் மொழி படிக்கும் மாணவர்களுக்கும் இடையே கல்வி கற்றலில் இருக்கும் வேறுபாடு. அதற்கான காரணங்கள் ஆராயப்படுகின்றன. களத்தில் மாணவர்களிடையே சேகரிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகிறது.

செவ்விலக்கிய மொழிநடையைப் பேசுவதில், வகுப்பெடுப்பதில் ஏற்படுகின்ற இடப்ர்பாடுகள், மொழியைக் கற்பிப்பதில் மேற்கொள்ளப்படும் புதிய உத்திகள், மனச்சோர்வு அடையா வண்ணம் ஊக்கப்படுத்தும் செயல்பாடுகள், மொழியை உச்சரிக்கவும், வாசிக்கவும், பிழையின்றி எழுதவும் செய்முறைக் கூடங்களை உருவாக்குதல். செய்முறைக் கூடங்களில் பயிற்சிகளை அளித்தல் தொடர்பான விதிமுறைகள். மொழியைக் கற்கும் மாணவர்களிடையே மொழியைக் கற்றல் மற்றும் இலக்கியங்களை உருவாக்கும் திறனை மேம்படுத்துதல். இணைய வழி மொழி வகுப்புகள் மூலம் உலக நாடுகளில் உள்ள மாணவர்களை அறிமுகம் செய்தல். அவர்களின் கற்றல் ஆர்வத்தினை அவர்கள் வாயிலாகவே கேட்டறியச் செய்தல்.

இலக்கியக் கற்றலின் இன்றியமையாமையைத் தெளிவுபடுத்துதல். புழங்கு தமிழிலிருந்து செந்தமிழ் நடையைக் கற்கத் தேவையான உளவியல் மற்றும் வகுப்பறைச் சூழலைச் சரிசெய்தல். இலக்கியம் கற்றலின் இடர்ப்பாடுகளைக் களைந்து மொழித்திறனை மேம்படச் செய்தல் போன்றவை இந்த ஆய்வின்வழிக் கண்டறியப்பட்டு முடிவுகள் கொடுக்கப்படுகின்றன. கிராமப்புற மாணவர்கள் இலக்கியம் கற்றலில் வளர்நிலை அடைய இந்த ஆய்வின் முடிவுகள் உறுதுணையாய் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Abstract

Language learning is not 'a cup of tea' for the students of rural background. Teaching and learning language to rural students is influenced by multiple factors such as their social and family background, their awareness and involvement in the field of education etc. The research

proposes to do a statistical study of the difference in the learning capability of science and arts major students and also tries to analyze the reasons behind it. Limitations in speaking and understanding the classical Tamil in language classes has also been taken into consideration for research. The students must be made to understand the latest pedagogy of language teaching with ease. The learning capacity of the students with regard to the use of four skills of the language must be enhanced with the usage of language labs. A few decades before the concept of pen friends was rampant among youngsters. The same concept of introducing new students. Each student must have a discussion with a foreign student of his/ her age, about the latest learning methods. This would help to develop interest in language learning. Thus, the researcher proposes to find out new pedagogic methods to enhance the language learning capability of the rural students. These new methods would surely develop the interest among the rural students in learning a language.

திறவுச்சொற்கள் (Keywords): கிராமப்புற மாணவர், வாழ்வியல் சூழல், விழிப்புணர்வு, மொழிஅறிவு, பயணநேரம், மனச்சோர்வு, அறிவியல் மாணவர்கள், நகர்ப்புற மாணவர்கள், தீர்வுகள், Rural students, Biological environment, Awareness Language knowledge, Travel Time, Depression, Science students, Urban students, Solutions

ஆய்வுரை

உயர்கல்வியானது வாழ்க்கைப் பருவத்தின் மிக முக்கியமான காலக்கட்டம். அதில் மொழிப்பாடத்தினைத் தேர்வுசெய்து படிக்கும் மாணவர்களின் கற்கும் திறன் இடம்நோக்கி வேறுபடுகிறது. கிராமப்புற மாணவர்கள், நகர்ப்புற மாணவர்கள் என இருபெரும் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதிலும் உள்நோக்கி ஆய்வு செய்தோமே என்றால் பொருளாதாரம் மற்றும் இனம்சார் பின்னடைவுகளைப் பார்க்கலாம். அத்தகைய பின்தங்கிய மாணவர்கள் மொழிப்பாடம் கற்றலில் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களை ஆராய்வதும் அதனைக் களையச் சில வழிமுறைகளைக் கொடுப்பதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

அறிமுகம்

கிராமப்புற மாணவர்கள் இலக்கியக் கல்வி கற்றலில் எழும் சிக்கல்கள் பல்வேறு கோணங்களில் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

1. கிராமப்புற மாணவர்களின் வாழ்வியல்
2. மொழிப்பாடத் தேர்வு
3. மொழியறிவும் இலக்கியப் புரிதல்களும்
4. கல்விசார் விழிப்புணர்வுகள்

கிராமப்புற மாணவர்களின் வாழ்வியல்

கிராமப்புற மாணவர்களின் வாழ்வியல் சூழல், கல்வி கற்றல் சூழலைக் கட்டமைக்கிறது. பெரும்பான்மையான குடும்பங்களில் கல்வி கற்றவர்கள் இல்லாத நிலை உள்ளது. தன் நிலையை மாற்றப் பிள்ளைகள் உயர்கல்வி கற்றுவிட வேண்டும் என்ற எண்ண உந்துதலே பிள்ளைகளைப் படிக்க வைக்க அடிப்படைக் காரணியாக உள்ளது. கல்வி கற்க ஏற்ற சூழலைத் தர இயலாத குடும்பங்களும் காணப்படுகின்றன. பொருளாதாரச் சிக்கலும் இதில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. போக்குவரத்துத் தொடர்புகள் குறைவான பகுதிகள்,

போக்குவரத்து ஒரு குறிப்பிட்ட பகுதிக்குமேல் வராது இருத்தல், அதிகாலைப் பயணம், அந்தி நேர வரவு, பயணத்தினால் ஏற்படும் உடல், உளவியல் சோர்வுகள், படித்த பெற்றோர்கள் இல்லாத சூழலில் அவர்களின் கல்வியின்மையைப் பயன்படுத்திக் கொள்ளும் மாணவர்களின் மனநிலை போன்றவை கற்றலின் நிலையை நிர்ணயம் செய்யும் அடிப்படைக் காரணிகளாகும்.

மொழிப்பாடத் தேர்வு

உயர்நிலைப் பள்ளியில் தேறிய மாணவர்கள் அவர்களின் விருப்ப அடிப்படையில் அல்லாது மதிப்பெண் அடிப்படையில் மேல்நிலைக் கல்வியைத் தேர்ந்தெடுக்கும் முறையே இங்கு நடைமுறையில் உள்ளது. இதில் அறிவியல் பாடப்பிரிவினை மாணவர்கள் தனி விருப்பத் தேர்வாக தேர்ந்தெடுக்கின்றனர். உயிரியல், இயற்பியல், வேதியியல், கணிதம், கணினி பாடப்பிரிவுகளில் மாணவர்களின் தன் விருப்பத் தேர்வாகத்தான் பெரும்பான்மை அமைகின்றது. வணிகவியல் பாடப்பிரிவு அறிவியல் படிப்புக்கு நிகரான மதிப்பீட்டைப் பெற்றுள்ளது. இந்தப் பாடப்பிரிவுகளைத் தேர்ந்தெடுக்க இயலாத அளவு மதிப்பெண் பெற்ற மாணவர்களே பொருளியல், ஆங்கிலம், தமிழ் போன்ற படிப்புகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். அதிலும் ஆங்கில மொழிப் பாடத்தேர்வு பெரும்பான்மை தன்விருப்பத் தேர்வாகவே உள்ளது. அதற்கு அடுத்த நிலையில் தான் பொருளியல் மற்றும் தமிழ்மொழி அமைகின்றது. அதிலும் குறைந்த மதிப்பெண் பெற்ற கிராமப்புற மாணவர்களின் எளிமையான பாடப்பிரிவாகவும் இன்னும் குறிப்பாக எந்தப் பாடப்பிரிவினைத் தேர்வு செய்வது என்ற அடிப்படைக் கல்வி அறிவு அற்ற பெற்றோர்களின் பிள்ளைகளாகவே தமிழ்மொழிப் பாடப்பிரிவினைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் நிலை உள்ளது. மாணவர்களின் தன்விருப்பத் தேர்வாக தமிழ்மொழி இல்லை என்பதே இங்குப் பெறப்படுகிறது.

மொழி அறிவும் இலக்கியப் புரிதல்களும்

மேல்நிலைக் கல்வியில் தமிழ் இலக்கியப் பாடப்பிரிவினைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அடிப்படை மொழித்திறன் கொண்டவர்களாக இருக்கின்றனர். செய்யுள் அல்லாத உரைநடைப் பகுதியைக்கூட தெளிவாகவும் முழுமையாகவும் வாசிக்கும் மாணவர்கள் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது. இத்தகைய மாணவர்கள் மத்தியில் தொல்காப்பியம், நன்னூல், யாப்பு போன்ற இலக்கணப் பகுதிகளின் நூற்பாக்களை வாசித்தலும், கேட்டலும், இலக்கியப் பாடல்களை வாசித்தலும், கேட்டலும் என்பதே இங்கு முற்றிலும் முரண்பட்டதாய் அமைகின்றது. கற்பிக்கும் பொழுதுகூட வாசிக்கின்ற இலக்கியத்தைப் புரிந்து கொள்ளும் திறனை மாணவர்கள் பெற இயலாத சூழலிலேயே அவர்கள் கல்வியைத் தொடர்கின்றனர். உச்சரிப்பு தெளிவின்மையால் எழுத்துப் பிழைகள், வாக்கியப்பிழைகள், ஒற்றுப்பிழைகள், ஒருமை பன்மை மயக்கங்கள், கோர்வையற்ற வாக்கியங்கள் போன்று பல பிழைகளைக் கண்ணுற முடிகின்றது. கிராமப்புற மாணவர்களிடையே அடிப்படைக் கல்வி கற்றல் இன்மையும் கல்வி கற்கும் கூடங்களின் தொலைவும், ஆசிரியர்கள் போதுமான அளவு இன்மையும் மேல்நிலைக்கல்வி கற்றலில் அதேநிலை தொடர வழிவகுக்கிறது. அடிப்படைக் கல்வி கற்றலில் ஏற்படும் தொய்வும், தொடர் கண்காணிப்பு இன்மையும் கல்வி கற்கும் கூடங்களின் தொலைவும் ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதாக இன்மையும் மேற்கல்வி கற்றலில் அதே நிலை தொடர்கிறது. பழகிய கிராமச்சூழலுக்கும், மேல் கல்வி கற்றலுக்கான நகர்ப்புறச் சூழலுக்கும், பருவமுறை

மாற்றமும், பயண நேர அதிகரிப்பும் மாணவர்களிடையே சிந்தனை மாற்றம் ஏற்பட மேலும் ஒரு காரணியாகக் கூறலாம்.

மொழி படித்தலில் அடிப்படைக் கல்வி அறிவே இல்லாத மாணவர்களே இலக்கியப் பாடத்தினைத் தேர்வு செய்யும் நிலை உள்ளது. இச்சூழலில் அவர்களின் மொழிசார் அறிவும், இலக்கியம்சார் புரிதல்களும் மேலும் அவர்களை உளவியல்சார் பாதிப்புகளுக்குள் தள்ளவே எத்தனிக்கின்றன.

இலக்கிய, மொழிப்புலமையையும், அதன் நுட்பங்களையும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்துவதைவிடத் தேர்வு நோக்கி அவர்களை நகர்த்துவது இங்குக் கட்டாயமாக உள்ளது. ஆகவே புரியாத மொழியினை மனனம் செய்வது போல் இலக்கியங்களைப் பொருள்புரியாது மனப்பாடம் செய்து தேர்வு எழுதும் மனநிலையே வளர்கிறது.

கல்விசார் விழிப்புணர்வுகள்

மொழி படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமின்றி பொதுவாக அனைத்துக் கல்வி பயிலும் கிராமப்புற மாணவர்களுக்கும் கல்விசார் விழப்புணர்வைத் தருவது இன்றியமையாத ஒன்றாக இருப்பினும் இலக்கியம் படிக்கும் மாணவர்களுக்குக் கல்விசார் விழிப்புணர்வு மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. ஏனெனில் தமிழ்மொழி செம்மொழித் தகுதி பெற்றது. இலக்கியம் படிக்கும் மொழி மெருகேற வேண்டும். மொழி வளர்ச்சியில் இலக்கிய மாணவர்களின் பங்கு இன்றியமையாதது. மொழி என்பதே ஓர் இனத்தின் வரலாற்றை நிலைத்து நிற்கச் செய்யும். ஆகவே இலக்கிய மாணவர்களுக்கு கல்விசார் விழிப்புணர்வு அவசியமானதாகக் கருதப்படுகிறது.

கிராமப்புற மாணவர்களுக்குக் கல்வியின் இன்றியமையாமை விளக்குதல், இலக்கியத்தின் அடிப்படைத் தேவை என்ன என்பதை எடுத்துக்கூறுதல், மொழி வளர்திறனை மேம்படுத்த உச்சரிப்பு முறையினைச் சரிசெய்து பிழையறக் கற்கச் செய்தல், உலகளாவிய மாணவர்கள் தொடர்பான செய்திகளை எடுத்துக் கூறுதல். துறைசார் மாணவர்களின் தரம், அவர்களின் கற்றல் திறன் குறித்த செய்திகளைப் பகிர்தல். இதன் பயனாகக் கிராமப்புற மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து அவர்களைப் போல தங்களை உயர்த்திக் கொள்ள வழிவகை செய்தல்.

மேலும் உளவியல் சார் விழிப்புணர்வு மிகவும் அவசிமான ஒன்றாக இங்கே கருதப்படுகிறது. ஏனெனில் பல்வேறு சூழலியல் தடைகளைக் கடந்து கல்விகற்க வரும் மாணவர்களுக்கு இயல்பாகவே மனச்சோர்வு இருக்கும். அதனை நீக்கினால்தான் அவர்களைக் கல்வியில் நாட்டம் உள்ளவர்களாக மாற்றிட முடியும். ஆகவே பல்வேறு தடைகளைத் தாண்டி வாழ்வில் வெற்றிபெற்ற வெற்றியாளர்கள் குறித்த செய்திகளைப் பகிர்தல், தன்னம்பிக்கையை வளர்த்தல், தொடர்முயற்சியினுடைய பலன்களை எடுத்துரைத்தல் அவற்றின் ஊடாக ஆரோக்கியமான முறையில் போட்டி மனப்பான்மையை ஏற்படுத்துதல், இலக்குகள் நிர்ணயம் செய்தல், வெற்றி பெற்றவர்களைப் பாராட்டிச் சிறு பரிசுகள் வழங்குதல் போன்ற உளவியல்சார் செயல்பாடுகளால் அவர்களின் மனத்திட்பத்தை உறுதிபடச் செய்தல் அவசியமானதாகும். அதன்மூலம் மொழியின் மீது அவர்களின் ஆர்வத்தினை அதிகப்படுத்த வழிவகை செய்யலாம்.

ஆய்வுமுறை

- அறிவுத்திறன், கற்கும் முறை, பலதரப்பட்ட தனித்திறன்கள், சிறப்புப்பயிற்சி தேவைப்படக் கூடியவர்கள், அவர்களில் வாழ்வியல்சார் பின்னணிகளை ஆய்வுக்குட்படுத்துதல்.
- அவர்கள் ஏற்கனவே கற்ற, கல்வி, தெரிந்து கொண்ட கருத்துகள், புரிந்து கொண்ட முறை, அதனை வளர்க்க எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் ஆகியவற்றின் புதிய செய்திகளை இணைத்துப் புரிதல்களை உருவாக்கச் செய்தல்.
- கற்பித்தலில் புதிய உத்திகளை அறிமுகம் செய்தல். கணினி வழியாக, செய்திக்காட்சிகள், படக்காட்சிகள் மூலமாக தெளிவு பெறச் செய்தல். அதனால் அவர்களின் கற்றல் திறன் மேம்படுதலை ஆய்வு செய்தல்.
- ஆக்கப்பூர்வமான உரைகளை நிகழ்த்திப் புரிந்து கொள்ளச் செய்தல்.
- அவர்களுக்குள் குழுக்களை உருவாக்கி, குழுக்களுக்கு இடையே போட்டி உணர்வுடன் மொழித்திறனை வளர்க்க உதவுதல்.
- கற்றலில் நேரும் இடர்ப்பாடுகளை அவர்கள் வாயிலாகக் கேட்டறிந்து, அதனைச் சரிசெய்த ஒருவரை அவர்கள் ஊடாகவே கண்டறிந்து அவர்களின் அனுபவங்களைப் பகிரச் செய்தல்.
- புதிய கற்றலுக்கான தேடல்களை அவர்களையே கண்டறியச் செய்தல்.
- இணையச் செயலிகள் வாயிலாகப் பல்வேறுபட்ட இலக்கிய மாணவர்களுடன் கலந்துரையாடச் செய்தல். இருவேறுபட்ட சூழலில் இலக்கியம் படிக்கும் மாணவர்களை ஒன்றிணைத்து உரையாடல்களை நிகழ்த்துதல்.
- உலகளாவிய இலக்கிய மாணவர்களிடையே கலந்துரையாடச் செய்து மொழி ஆளுமையை வளர்த்தல். மொழிப்பயிற்சி கூடங்களை உருவாக்கி, மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கல்.
- தாங்களாகவே சிந்தித்துப் புதிய படைப்புகளை உருவாக்கச் செய்தல்.
- இத்தகைய கற்றல் திறனை ஆய்வுக்கு உட்படுத்தி மதிப்பீடு செய்தல்.

கலந்துரையாடல்கள்

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் செய்திகளின் அடிப்படையில், அவர்களின் கற்றல் செயல்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதைக் கண்டறிவது ஆய்வில் மிகவும் அவசியமானதாகும்.

இதனை புதிய கற்றலில் ஈடுபட்ட மாணவர்களிடம் கலந்துரையாடுவதின் மூலமும் கண்டறியலாம்.

சில கேள்விகளை நேரடியாகக் கேட்பதன் மூலம் அவர்களின் உச்சரிப்புத்திறன் மற்றும் மொழி ஆளுமைத் திறன்களை வெளிப்படுத்த முடியும்.

கிராமப்புற மாணவர்களின் முந்தைய தேக்க நிலைக்கும், புதிய வழி கற்றலின் வாயிலாகப் பெற்றுக்கொண்ட வளர்நிலைக்கும் உள்ள வேறுபாட்டை அவர்களே உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

மொழிபயில் கூடங்களின் வாயிலாகப் பெற்ற நன்மைகளைக் கேட்டறிய வேண்டும்.

தங்களை ஒத்த வயதுடைய மொழி கற்றுக்கொள்பவர்களைப் போல தங்கள் நிலையும் உயர்ந்துள்ளதைப் பகிரச் சொல்ல வேண்டும்.

புதிய வகை மொழி கற்றலில் இருக்கும் கற்றல் கற்பித்தலின் சிறப்புகள் மற்றும் இடர்ப்பாடுகளை அவர்கள் உரையாடல்கள்வழித் தெரிந்து கொண்டு மேலும் அதனைச் செம்மைப்படுத்தும் செயல்பாடுகளை உருவாக்க வேண்டும்.

முடிவுரை

கிராமப்புற மாணவர்களின் வாழ்வியல் சூழலை உளவியல் மனத்திட்பச் சூழலால் கடக்கச்செய்து மொழி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல். புதிய கற்றல் வழிமுறைகளின் வாயிலாக மொழித்திறனை மேம்படுத்திச் செம்மொழி இலக்கியப் பண்பாட்டுத் தளத்திற்குத் தகுதியுள்ளவர்களாகக் கிராமப்புற மாணவர்களைத் தயார் செய்வதே இவ்வாய்வின் அடிப்படை நோக்கமாகும்.

துணைநின்றவை

- களஆய்வின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட செய்திகள் - ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
- இராஜேந்திரன் என்.எஸ் (2006), "தமிழ் கற்றல் கற்பித்தலில் சவால்களும், பரிந்துரைகளும்", ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு - மாநாட்டு ஆய்வடங்கல்.
- மன்னர்மன்னன் ம., (2011) "உயர்கல்விக் கூடங்களில் தமிழ் : மெய்ம்மையும் சவால்களும்" மலேசியப் பன்மொழிச் சூழலில் தமிழ், மலாய் பல்கலைக்கழக வெளியீடு.
- Clawson G.S. James And Haskins E.Mark, (2016), Teaching Management, Cambridge Universiy Press, New Delhi.

****

இலக்கியம் கற்றலும் கற்பித்தலும் - பன்னோக்குப் பார்வை

Teaching and Learning Literature - Multifaceted view

பத்மா ஸ்ரீதர் | Padma Sridhar

முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை, இந்தியா.
apadmasrini@gmail.com, https://orcid.org/0000-0002-8308-4806

ஆய்வுச்சுருக்கம்

இலக்கியங்கள் பொதுவாக சமகாலச் சூழலைக் கருத்தில் கொண்டே படைக்கப்படுகின்றன. படைப்பாளர்கள் தாம் வாழும் காலத்திய மக்களின் பழக்கவழக்கம், பண்பாடு, சமூகப் பிரச்சினைகள் இவற்றைக் கருத்தில் கொண்டே இலக்கியங்களைப் படைத்து வந்துள்ளனர். அற இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள் போன்றவை உலகம் முழுவதிலும் பரவி வாழும் மக்களின் நம்பிக்கைகள் சார்ந்தும் அவர்களின் வாழுமிடத்திற்குத் தகுந்த ஒழுக்கத்தைச் சார்ந்துமே அவ்வப் பகுதிகளில் வாழும் படைப்பாளர்களால்

படைக்கப்பட்டு வந்துள்ளன. தற்கால நவீன உலகில் அத்தகு இலக்கியங்களை வாசிப்பதற்கு நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட பொதுவான கண்ணோட்டம் தேவையான ஒன்றாக உள்ளது. எனவே அவ்விலக்கியங்களைப் பிறதுறைகளான அறிவியல், உளவியல், வரலாறு, பொருளாதாரம், சமூகவியல் நோக்கில் மாணவர்களுக்கு வாசிக்கக் கற்றுக் கொடுக்கும்போது அவர்களிடையே கற்கும் ஆர்வம் அதிகரிக்கின்றது. இலக்கியத்தைக் கற்பதற்கும், கற்பிப்பதற்கும் இத்தகு பன்னோக்குப் பார்வை அவசியம்; இது தனிமனித நம்பிக்கை கடந்து மாணவர்களை ஆய்வு நோக்கில் அவ்விலக்கியத்தை அணுகச் செய்கிறது என்பதில் ஐயமில்லை. சமய இலக்கியங்கள் எப்பொழுதும் இறைவனை அடையும் பக்திநெறியையே போதிக்கும் என்ற பொதுவான கருத்து நிலவுவதால் அவ்விலக்கியங்களில் உள்ள பிற நல்ல கருத்துக்கள் பெரும்பாலும் அறிந்து கொள்ளப்படாமலேயே உள்ளன. பக்தி இலக்கியத்தைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியரும், கற்றுக்கொள்ளும் மாணவரும் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு அந்த இலக்கியத்தை எப்படி அணுக வேண்டும் என்பதைப் பற்றியே இக்கட்டுரை விரிவாக ஆராய உள்ளது.

Abstract

Literature when written reflects the present, taking into account the customs, culture and social issues of the people of the time in which they live. Literators have written moral literatures, religious literatures, community-based folk literatures, etc., which have been written in different parts of the world, depending on the beliefs and morals of the place of residence. In today's modern world reading such literature requires a general outlook beyond one's personal beliefs. Thereby, when students are taught to read literature in a different perspective, like focusing on other fields such as science, psychology, history, economics and sociology, the interest in learning increases. Such a multifaceted view is essential for learning and teaching literature as it transcends individual beliefs and enables students to approach in that manner for research purposes. This paper explores in detail ways in which a teacher who teaches religious literature and the student who learns it can approach that literature beyond their personal beliefs giving fresh perspective to religion which doesn't only cater to worship and devotion.

திறவுச்சொற்கள் (Keywords): இலக்கியம், அறிவியல், நம்பிக்கை, படைப்பாளன், Religion, Literature, Science, belief

முன்னுரை

பக்தி இலக்கியங்களைக் கற்பவரும் கற்பிப்பவரும் சுய நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு அவ்விலக்கியங்களை வாசித்தல் என்பது அவசியமான ஒன்று. அப்படி வாசிக்கும்பொழுதுதான் அப்படைப்பில் காட்டப்பட்டுள்ள பல நல்ல கருத்துக்கள் தெளிவாக விளங்கும். தாம் வாழும் சூழலுக்குத் தேவையான குறிப்பிட்ட இலக்கிய வகையைப் படைக்கும் எந்த ஒரு படைப்பாளனும் தம் படைப்பில் சமகால மக்களின் எண்ண ஓட்டங்களையும், வாழ்வியல் நெறிகளையும், நம்பிக்கைகளையும், சுற்றிலும் தாம் கண்டு மகிழும் இயற்கையையும் நடுவுநிலைமையோடு தம் இலக்கியத்தில் படைத்திருப்பான். அவற்றைக் கண்டறியும் நோக்கில் பிறதுறைகளின் கண்கொண்டு பக்தி இலக்கியத்தை எப்படிக் கற்கவும்/கற்பிக்கவும் வேண்டும் எனக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். இருபெரும் சமயங்களான சைவ, வைணவப் பக்தி இலக்கியங்களை ஆய்வு எல்லையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

சூழலியல் நோக்கு

இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவைக் காட்டுவது சூழலியல். புலவர்கள் தம் இலக்கியப் படைப்பில் காட்டும் இயற்கைக் காட்சிகள் பல நேரங்களில் வளமான அக்கால உலகை நம் மனக்கண்முன் கொண்டு வந்து மகிழ்விக்கும். பக்தி இலக்கிய இயற்கை வருணனைகளும் அவ்வகையில் நம் மனக்கண்முன் காட்சிகளை விரியச் செய்து மனத்திற்கு இன்பத்தை அளிக்க வல்லன.

"வந்து உதைத்த வெண்திரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்தி விளக்கும் அணிவிளக்காம்....(நா.தி.பி. 2297).

எனத் தம் மூன்றாம் திருவந்தாதியில் பேயாழ்வார் திருவல்லிக்கேணியின் மாலைநேர மாசுகளற்ற அக்காலக் கடற்கரைக் காட்சியை வருணிக்கின்றார். அங்குள்ள வெண் அலைகள் கரையில் கொண்டு சேர்க்கும் முத்தும் பவளமும் அந்திப்பொழுதில் ஒளிவிளக்காக அவருக்குத் தோன்றுகின்றன.

"மருளைச் சுரும்பு பாடியளக்கா வரையார் திருக்கையாற்
றாளத்தோடு பவளமீனுஞ் சண்பை நகராரே" (தேவாரம்-68)

என்னும் சம்பந்தரின் தேவாரப்பாடலில் கடற்கரையை ஒட்டியுள்ள சண்பை நகரில் வண்டுகள் மருள் என்கின்ற பண்ணைப் பாட அகமகிழ்ந்து தம் அலையெனும் கரத்தால் கடலானது முத்துக்களையும் பவளங்களையும் பரிசாக வாரி அளித்த காட்சி காட்டப்படுகிறது.

காவிரி ஆறு மலையிலிருந்து சந்தனம் மற்றும் அகில் கட்டைகளையும், பொன்னையும், இரத்தினங்களையும் திரட்டிக் கொணர்ந்து தள்ளி வயல்களில் பாய்ந்த காட்சியைத் திருமங்கையாழ்வார்

"மலைதிகழ் சந்து, அகில், கனகம், மணியும் கொண்டு
வந்துஉந்தி, வயல்கள்தொறும் மடைகள் பாய....(நா.தி.பி 1620)

எனக் காண்பிக்கின்றார். திருவண்ணாமலைப் பதிகத்தில் உயர்ந்தோங்கி நிற்கும் காட்டு மரங்களில் தாவிக் குதித்து ஆண் குரங்கு ஒன்று மாங்கனியைப் பறிக்க மரக் கிளையை இழுத்து விடுகிறது. கனி அதன் கையில் கிட்டிவிட்டாலும் இழுத்துவிடப்பட்ட வேகத்தில் மரக்கிளை மலை உச்சியைத் தாக்கி அசைக்கின்றது. அதனால் மலையைச் சுற்றிக் கொண்டிருந்த சூல் கொண்ட மேகம் ஓரிடத்தில் மழையைப் பொழிவிக்க அங்கு அலைந்து கொண்டிருந்த காட்டுப் பெண்மான்கள் மழைத்துளிக்கு அஞ்சி மலைச் சோலைகளில் அங்குமிங்கும் ஓட ஆரம்பிக்கின்றன. இந்தக் காட்சியை

"தேமாங்கனி கடுவன் கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமழை துறுகல் மிகை சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை அணையும் பொழில் அண்ணாமலை அண்ணல்." (தேவி, 2021:பக் 211).

எனத் திரைப்படக் காட்சி போன்று நம் மனக் கண்முன் விரிக்கின்றது திருவண்ணாமலைப் பதிகப் பாடல். நாலாயிர திவ்வியப் பிரபந்தம் காட்டும் ஒரு காட்சியில் உயரமாக வளர்ந்திருக்கின்ற அசோக மரத்தினுடைய சிவந்த மலர்களைக் கண்ட வண்டுகள் நெருப்பு

என்று அஞ்சி ஒதுங்கித் திரிகின்றன. ஒருவாறு மயக்கம் நீங்கி அவை மலர்கள்தாம் எனத் தெளிவுற்று அமரும்போது அருகிலிருக்கும் மாமரக் குயில்கள் அதை உணராது நெருப்பில் வண்டுகள் விழுந்துவிட்டன என எண்ணிப் பயந்து கூவுகின்றனவாம். இந்தக் காட்சியை

"ஓங்கு பிண்டியின் செம்மலர் ஏறி வண்டு உமிழ்தர, மா ஏறித்
தீம் குயில் மிழற்றும் படப்பைத் திருவெள்ளறை...." (நா.தி.பி. 1376)

எனப் பாசுரமாக வடிக்கிறார் திருமங்கையாழ்வார்.

தத்துவ நோக்கு

எல்லாவற்றையும் கடந்து அதேசமயத்தில் எல்லாவற்றுள்ளும் உறைபவனையே சமய இலக்கியங்கள் கடவுளாகக் காட்டுகின்றன. இதனையே

"அந்தமில்லானுக் ககலிடந்தான் இல்லை
அந்தமில்லானை அளப்பவர்தாமில்லை
அந்தமில்லானுக்கு அடுத்தசொல் தான் இல்லை
அந்தமில்லானை அறிந்து கொள்பத்தே" (பக்திக் காலம் 5.4.1.1.1, Krishnamurti.C.R)

என ஓரிடத்தில் நிலையில்லா அளவிடற்கரிய பெயரற்ற அந்த இறையெனும் உணர்வை அனுபவித்தலால் அன்றி உணர முடியாது என்கிறார் திருமூலர்.

இருத்தலியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்ந்ததுபோல் இறைவன் உண்டென்று நம்புபவர்களுக்கு எல்லாவற்றிலும் உள்ளும் புறமும் அவன் இருப்பான்; இல்லையென எண்ணுபவர்களுக்கு அவன் எங்கும் இல்லையாகவே தோன்றுவான் என்பதை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில்

உளன் எனில் உளன் அவன், உருவம் இவ் உருவுகள்
உளன் அலன் எனில் அவன், அருவம் இவ் அருவுகள்
உளன் என இலன் என இவை குணம் உடைமையில்
உளன் இரு தகைமையொடு, ஒழிவு இலன் பரந்தே (நா.தி.பி. 2683)

என நம்மாழ்வாரும், திருமந்திரத்தில்

உள்ளத்தும் உள்ளன் புறத்து உள்ளன் என்பவர்க்கு
உள்ளத்தும் உள்ளன், புறத்து உள்ளன் எம்இறை
உள்ளத்தும் இல்லை புறத்துஇல்லை என்பவர்க்கு
உள்ளத்துஇல்லை, புறத்துஇல்லை தானே. (திருமந்திரம் 1532)

எனத் திருமூலரும் காட்டுகின்றனர். அதே நேரத்தில் நம் உள்ளத்துள் உள்ளதே இறையென்பதைக் காட்ட சமய இலக்கியங்கள் பலவும் முயன்றுள்ளன. இதனையே சிவவாக்கியர் தம் பாடலில்

காணவேண்டு மென்றுநீர் கடல்மலைகளேறுவீர்
ஆணவம தல்லவோ அறிவில்லாத மாந்தரே
வேணுமென்றவ் வீசர்பாத மெய்யுளே தரிப்பிரேற்

றாணுவாக நின்றசீவன் றான்சிவ மதாகுமே. (சிவவா.476)

என இறைவனை வெளியில் தேடுபவர்களுக்கு ஆணவமே மிஞ்சும் என்கிறார்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் "மாணிக்குறள் உருஆய மாயனைத் தன் மனத்துள்ளே பேணிக் கொணர்ந்து புகுத வைத்துக்கொண்டதாகப் பாடுகிறார் ஆழ்வார்.

வாழ்வியல் உண்மைகள்

எவ்வளவு துன்பம் நம்மை வந்து வருத்தினாலும் பிறரிடம் செலுத்தும் அன்பில் குறைவுபடாது வாழ்தலின் அவசியத்தை

"என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப் பொன்போல்
கனலில் பொரிய வார்ப்பினும் அன்போடு
உருகி அகம்குழை வார்க்கன்றி'..... (பக்திக் காலம் 5.4.1, Krishnamurti.C.R)

மற்றவர்களால் மெய்ப்பொருள் காணுதல் இயலாது என்கிறார் திருமூலர்.

சொற்களால் வடிக்க முடியா மகிழ்ச்சியான நிலையை மனதிற்குத் தரும் இன்ப உணர்வே இறை என்பதை

"முகத்திற்கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற்கண் கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய் தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல் எனல் சொல்லுமாறு எங்கனே". (பக்திக்காலம் 5.4.1.1.5, Krishnamurti.C.R)

எனக் கேட்கின்றார் திருமூலர். அந்த இறை நடுநிலைப் பண்பைக் கொண்டது என்பதைக் காட்ட திருவருட்பாவில்

"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும மாட்டார்க்கும் வரம்அளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே".

எனப் பாடுகிறார் வள்ளலார்.

அறிவியல் நோக்கு

பிறதுறை அறிவுகொண்டு இலக்கியத்தை ஆராய முற்படும்போது அறிவியல் நோக்கு தோற்றம் பெறுகிறது. இந்நோக்கின் மூலம் இலக்கியத்தில் காணப்படும் அறிவியல் சார்ந்த உண்மைகளை வெளிக்கொணர முடியும். உதாரணமாக திருப்பாவையிலிருந்து ஒரு காட்சி.

பாவை நோன்பிற்காகச் சிறுமிகளனைவரும் சென்று கொண்டிருக்கிறார்கள். இன்னும் உறக்கத்திலிருந்து எழாத ஒருத்தியை எழுப்பும் நிலையில் விரைவாக எழுந்துவா எனக் கூறும் தோழிகளிடம் பொழுது விடிந்து விட்டதா என்ன? என்று உறங்கிக் கொண்டிருப்பவள் கேட்க, அவளுக்கு மறுமொழி கூறுவது போல்

"வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண்...." (திருப்பாவை 13)

என விடியலை அறிவுறுத்தும் விதமாக மற்ற சிறுமிகள் பதிலிறுப்பதாகப் பாசுரத்தை அமைத்துள்ளார் ஆண்டாள் நாச்சியார். இப்பாசுரத்தில் வானியல் நிகழ்வுகள் காட்டப்பட்டுள்ளன. அத்துறை சார்ந்த வல்லுநர்களின் துணையோடு இக்கருத்தை மேலும் ஆராய இயலும்.

"இரும்பு அனன்று உண்ட நீர்போல்
எம் பெருமானுக்கு என்தன்
அரும் பெறல் அன்பு புக்கிட்டு
அடிமை பூண்டு உய்ந்து போனேன்". (வசந்தாள்.த, பகுதி 5.4)

எனப் பாடுகிறார் திருமங்கையாழ்வார். இவ்வடிகளில் ஆன்மாவும் பரமான்மாவும் கூடிய நிலையைக் காட்ட காய்ச்சிய இரும்பின் மீது பட்ட நீரை உவமையாக்குகிறார். நீர் ஆவியாகி கண்ணுக்குத் தெரியாது மறையும் அறிவியல் உண்மை இங்குக் காட்டப்படுகிறது. நம் உடலானது ஐம்பூதங்களால் ஆனது என்பது அறிவியலாளர்களின் கருத்து. இதனையே திருமூலர்

"பூதங்கள் ஐந்தும் பொறியவை ஐந்துளும்
ஏதம் படஞ்செய்து....." (பார்வதிதேவி, 2019)

எனத் தம் திருமந்திரத்தில் காட்டுகிறார். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் திருமங்கையாழ்வார்

"மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமா காசமுமாம்
புண்ணா ராக்கைதன்னுள் புலம்பித்தளர்ந் தெய்த்தொழிந்தேன்...

எனக் காட்டுகிறார். தொல்காப்பியர் மரபியலில் உலகிலுள்ள உயிர்களை எல்லாம் அவற்றிற்குரிய அறிவின் அடிப்படையில் ஓரறிவு உயிர் முதல் ஆறறிவுயிர் வரை பகுத்துக் காட்டுகிறார். திருவாசகத்தில் இதற்கு ஒருபடி மேலே போய்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள் (சிவபுராணம்-1)

என எல்லாவித பிறப்பும் தாம் பிறந்து வருந்தியதாகக் காட்டும் மாணிக்கவாசகர் தம் மெய்யறிவால் உணர்ந்துகொள்ள நினைப்பவருக்கு அவ்விறை ஓர் நுண் உணர்வு மட்டுமே என்பதை, "நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே" என்றும் "தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய் என்றும் காட்டுகிறார்.

திருமூலரின் திருமந்திரத்தில்

அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரம் கூறிட்டு
அணுவில் அணுவை அணுக வல்லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலும் ஆமே (திருமந்திரம், 2008)

என்ற பாடல் "அணுவின் அடிப்படைத் துகள்களையே கட்டமைக்கும் பரமாணு என்ற ஹிக்ஸ்போசோன் (Higgs Boson) என்ற கடவுள் துகள் குறித்த சோதனையை நினைவுபடுத்துகின்றது. (விநாயகலிங்கம், 2016).

உளவியல் நோக்கு

பக்தி இலக்கியங்கள் அதிக பற்றுவைக்கும் ஒருவரின் மனநிலை எப்படியிருக்கும் என்பதை நமக்குக் காட்டுகின்றன. மிக அதிகமாக ஒருபொருளின் மீது பற்று வைக்கும் ஒருவர் காணும் அனைத்தையும் அப்பொருளாகவே காண்பார். இந்நிலையையே தொல்காப்பியம் "நோக்குவ எல்லாம் அவையே போறல்" எனக் காட்டுகிறது. திருமூலர் தம் திருமந்திரத்தில் அன்பு செலுத்துதலையே சிவம் என்கின்றார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்" (பாடல்.270)

அவருடைய கண்களுக்கு அன்பும் தாம் வணங்கும் இறையாகவே தோன்றுகிறது.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாருக்குத் தாம் கொண்ட அளவுகடந்த பற்றின் காரணமாக உண்ணுகின்ற சோறும், பருகுகின்ற நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாமுமே கண்ணனென்னும் இறையாகவே தோற்றமளிக்கிறது.

"உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன்" (நா.தி.பி. 3293).

இதுதான் நம் வாழ்க்கைப் பாதை என வகுத்துக்கொண்டு அதில் முறையோடு தொய்வில்லாது பயணம் செய்தால் வெற்றி நிச்சயம். எனினும் அந்த வெற்றியை முறைப்படி உண்மையோடு அணுகவேண்டும். பாதை பிறழ்ந்து குறுக்கு வழியில் முன்னேற முயன்றால் நெருஞ்சிமுள் கால்களைக் கீறிக் கிழித்து முன்னேற முடியாமல் செய்துவிடும். எனவே முறையான வாழ்க்கைப் பாதையைக் கடந்து சென்று வெற்றி பெறுவதே நம் இலட்சியமாக இருக்க வேண்டும் என்பதைத் திருமூலர்

நெறியைப் படைத்தான்; நெருஞ்சில் படைத்தான்!
நெறியில் வழுவின் நெருஞ்சில் முள்பாயும்!
நெறியில் வழுவாது இயங்கவல் லார்க்கு
நெறியில் நெருஞ்சில்முள் பாயகி லாவே! (திருமந்திரம், 1617)

எனக் காட்டுகிறார்.

பண்பாடும் பழக்கவழக்கங்களும்

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம் பாடல்களில் வரலாற்றுக் கருத்துக்களையும், இசை பற்றிய கருத்துக்களையும் எடுத்துக் காட்டியுள்ளனர். "நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்த நாதமுனிகள் இசைப்பா என மூன்று தொகுதியாகவும், இயற்பா என ஒரே தொகுதியாகவும் வகைப்படுத்தித் தொகுத்துள்ளார்." (கமலக் கண்ணன்.இரா. வ தொகுதி-1, ப-84,).

"இந்தளத்திலிருந்து தொடங்கி வியாழக் குறிஞ்சி வரை 29 பண்களில் பாடல்கள் திவ்வியப் பிரபந்தத்தில் அமைந்துள்ளன. தேவாரத்தில் 23 பண்கள் உள்ளன". (கமலக்கண்ணன்.இரா. வ, தொகுதி-1, ப-89).

அக்கால மக்களின் உணவு, உடை, குழந்தை வளர்ப்பு, திருமணம் முதலான பழக்கவழக்கங்களை அறிந்துகொள்ளவும் பக்தி இலக்கியங்கள் துணை நிற்கின்றன. இறந்தவர்களின் குற்றங்களைக் கூறாது அவர்களின் குணங்களைக் கூறிப் பாடிப் பாடி அழும் முறை

> **"கூடிக் கூடி உற்றார்கள் இருந்து குற்றம் நிற்க நற்றங்கள் பறைந்து**
> **பாடிப் பாடி ஓர் பாடையில் இட்டு"** (நாலாயிர தி.பி. 378)

எனப் பெரியாழ்வார் திருமொழியில் காட்டப்பட்டுள்ளது.

'பிள்ளைத் தமிழ்' என்னும் சிற்றிலக்கிய வகையின் தோற்றத்திற்குப் பெரியாழ்வார் பாடிய பெரியாழ்வார் திருமொழி முன்னோடியாக விளங்குகின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்க்கையின் நிகழ்வுகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் பக்தி இலக்கியங்கள் நமக்கு விளக்குகின்றன.

முடிவுரை

- பக்தி இலக்கியங்கள் இயற்கையை இரசிக்கக் கற்றுக் கொடுத்துள்ளன.
- படைக்கப்பட்ட காலத்திய வாழ்வியல் உண்மைகளை உணர்த்துகின்றன.
- சுய நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட நோக்கில் வாசிக்கும்போது கடவுட்கோட்பாட்டைப் பற்றிய நடுநிலைமைத் தன்மையைப் புலப்படுத்துகின்றன.
- அறிவியல் நோக்கில் அணுகும்போது இறையருள் பெற்று இறைநிலைக்கு உயர்ந்தவர்கள் தாம் பக்தி இலக்கியத்தைப் படைத்தார்கள் என்னும் எண்ணக் கருத்தை மாற்றி படைப்பாளிகளின் சமகால அறிவியல் அறிவை உணர்த்துகின்றன.
- மனித வாழ்வு நன்முறையில் அமையத் தேவையான வழிமுறைகளை உளவியல் நோக்கில் அவை உணர்த்துகின்றன.
- பண்பாடு, கலாச்சாரம், வரலாற்று நோக்கில் ஆய்வு மேற்கொள்ள விரும்புவோருக்குத் தேவையான தகவல்களைப் பக்தி இலக்கியங்கள் தருகின்றன.
- எனவே, மண்ணில் நல்லவண்ணம் வாழ, பக்தி இலக்கியத்தைப் பன்முக நோக்கில் நாம் கற்கவும் கற்பிக்கவும் வேண்டும் என்பதே இந்த ஆய்வின் முடிவாக முன்வைக்கப்படுகிறது.

துணைநின்றவை

- கமலக்கண்ணன், இரா. வ (2019), நாலாயிர திவ்வியப் பிரபந்தம், தொகுதி1,2,3,4 வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
- தேவி. இரா, (2021) "தேவாரத்தில் ஐம்பெரும் பூதத்து இயற்கை", ஐம்பெரும் பூதத்து இயற்கை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு (ISBN 978-93-80426-04-4), பக். 208-215
- "தமிழ் இலக்கியம் தொன்றுதொட்டு இன்று வரை', பகுதி 5, .பக்திக்காலம், Krishnamurti.C.R. Dr.") தமிழ்நேஷன் வலைத்தளத்திலிருந்து பெறப்பட்டது.
- https://tamilnation.org/literature/krishnamurti/05bakthi.htm
- பண்டைய தமிழ்ப் பாடல்களில் விஞ்ஞானம், பகுதி 3 of 6, கந்தையா தில்லை விநாயகலிங்கம், (2016, Dec 10) தீபம் வலைத்தளத்திலிருந்து பெறப்பட்டது.
- http://www.ttamil.com/2016/12/03-of-06.html
- பஞ்சபூதத்தில் அடக்கிய இந்த பிரபஞ்சமும் நம் சாஸ்திர வழிமுறைகளும், பகுதி-2, பார்வதி தேவி, (2019, ஜூன் 4), தினமணி கட்டுரையிலிருந்து பெறப்பட்டது.
- https://www.dinamani.com/religion/religion-news
- திருமூலர், திருமந்திரம், தமிழ் இணையக் கல்விக் கழக மின்னூல்
- http://www.tamilvu.org/ta/library-l4100-html-l41A0res-136137
- பன்னிரு திருமுறை பாட்டும் பொருளும் மின்னூல், தேவாரம் வலைத்தளத்திலிருந்து பெறப்பட்டது.
- http://www.thevaaram.org/thirumurai_1/songview.php?thiru=1&Song_idField=1001&padhi=001
- வசந்தாள். த, திருமங்கையாழ்வார் தமிழ் இணையக் கல்விக் கழக மின்னூல், பகுதி 5.4.
- http://www.tamilvu.org/ta/courses-degree-p202-p2022-html-p202254-28726

****

இணையவழிக் கல்விச் செயல்பாட்டில் மொழியாசிரியர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளும் அவற்றுக்கான தீர்வுகளும் Solutions for Problems Faced by the Language Teachers in Online Education

முனைவர் மு.புஷ்ப ரெஜினா | Dr.M.Pushpa Regina

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, (தன்னாட்சி), திருச்சி-17. (Assistant Professor, Department of Tamil, Bishop Heber College, Trichy-17)
pushpargn@gmail.com - 6383662806.

ஆய்வுச்சுருக்கம்

ஆதிமனிதன் தொடங்கி இன்று வரை கற்றல், கற்பித்தல் செயல்பாடு மனித வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளமையைக் காண முடிகிறது. அவ்வாறு கற்கும் மனிதன் தன் வாழ்வில் தான் கற்றவற்றைச் செயல்படுத்திப் பார்க்கும்போதே அவன் நாகரிகம் பெற்றவனாகிறான். குறிப்பாக நெருப்பு, போர்க்கருவிகள், உழவுத்தொழில் போன்றவை மனிதன் கற்றறிந்தவை என்பதைக் காட்டிலும் பட்டறிவின் வெளிப்பாடே எனலாம்.

"கோடல் மரபே கூறுங் காலைப்

பொழுதொடு சென்று, வழிபடல் முனியான்,
குணத்தொடு பழகி, அவன் குறிப் பின்சார்ந்து,
'இரு' என இருந்து, 'சொல்' எனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்
செவிவா யாக, நெஞ்சுகள னாகக்,
கேட்டவை கேட்டவை விடாதுஉளத்து அமைத்துப்
'போ' எனப் போதல் என்மனார் புலவர்" (நன். பாயிர.40)

என்ற நன்னூலார் கூற்றுப்படி, பண்டைய காலங்களில் ஆசானைத் தேடிச் சென்று கல்வி பயின்ற குருகுலக்கல்வியாக இருந்த நிலை காலப்போக்கில் மாற்றம் பெற்றது. மாணாக்கரைத் தேடிச் செல்லும் வகையில் பள்ளிகள், கல்லூரிகள் போன்ற நிறுவனங்கள் வளர்ச்சி பெற்றதோடு, மீண்டுமாகப் பழைய குருகுலக் கல்விமுறையும் நம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை அறிய முடிகின்றது. அந்த வகையில் அடுத்த கட்டமாக மாணவர்கள் தானே கற்றல் என்ற முறையில் இணையம் வழியாகக் கற்கும் நிலையும் உருவாகிவிட்டது.

கொரோனா எனும் இப்பெருந்தொற்றுக் காலமானது, இணையவழிக்கல்வி எனும் எட்டாக்கனியைப் பலருக்கும் எட்டச் செய்துள்ளது என்றே கூறலாம். இணையம் வழிக் கற்றல் செயல்பாட்டில் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும், பயிலும் மாணாக்கரும் தொழில்நுட்ப ரீதியாகவும், புரிதல் அடிப்படையிலும் சந்திக்கும் இடர்ப்பாடுகளை ஆய்ந்து அவற்றுக்கான தீர்வினை முன்வைப்பதே இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

Abstract

From the earliest times to the present day the learning and teaching process can be seen to be ambiguous in human life. The man who learns in this way becomes civilized when he seeks to apply what he has learned in his life. Fire, ammunition, and plowing, in particular, are more an expression of workshop than what man has learned.

"கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று, வழிபடல் முனியான்,
குணத்தொடு பழகி, அவன் குறிப் பின்சார்ந்து,
'இரு' என இருந்து, 'சொல்' எனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்
செவிவா யாக, நெஞ்சுகள னாகக்,
கேட்டவை கேட்டவை விடாதுஉளத்து அமைத்துப்
'போ' எனப் போதல் என்மனார் புலவர்" (நன். பாயிர.40)

According to the epistemology, in ancient times the status of a guru who went in search of a teacher and was educated changed over time. Institutions like schools and colleges have developed in search of students and we can see that the old curriculum system is being implemented in our country again. The next step in that direction is the self-learning of students through the Internet.

It is safe to say that eCommerce, the epicenter of corona, has reached many. The purpose of this research paper is to explore the technical and comprehension challenges faced by language teachers and students in the process of learning through the Internet and to present solutions to them.

திறவுச்சொற்கள் (Keywords): கல்வி, கல்விமுறை, குருகுலக்கல்வி, இணையவழிக்கல்வி, ஆசிரியர்கள், மாணாக்கர் நிலை, Education, Education Methods, Gurukulas, Online Education, Situations faced by teachers and students

அறிமுகம்

செம்மொழியாம் தமிழ்மொழியானது பழமை வாய்ந்தது. வளர்தமிழ் என்று குறிக்கப்பெற்ற தமிழ்மொழி பாட்டாகவும், தொகையாகவும் இருந்த நிலை மாறி, பன்முகத்தன்மை கொண்டு பயன்பாட்டுத்தமிழ் என்ற உச்சத்தை எட்டியுள்ளது. அத்தகைய தமிழ்மொழியில் இக்காலச்சூழலில் கற்பதன் நோக்கம், கற்றலின் தன்மை மற்றும் வகைகள், அதன் வளர்ச்சியையும், புதிய முறை கற்றல் செயல்பாட்டால் ஏற்படும் நன்மை, தீமைகளையும் ஆராயப்புகுதல் நலம் பயக்கும்.

கல்வி

கற்போர், கற்பிப்போர் ஆகிய இருவர் நோக்கமும் இணைவதோடு, கற்போரை நெறிப்படுத்தி, இச்சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் வகையில் கற்பிப்போர் ஆற்றுப்படுத்துவதே கல்வியின் இன்றியமையாதச் செயல்பாடாகும்.

'கல்' என்ற வேர்ச்சொல்லிலிருந்து கல்வி (Education) என்ற சொல் உருவானது எனவும், வளர்த்தல் எனும் பொருளைக் குறிக்கும் education என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டது என்றும், கற்பித்தல், பயிற்றுவித்தல் என்னும் பொருளைக் குறிக்கும் educo என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டது என்றும் கூறுவர். இச்சொல்லிற்கு வெளிக்கொணரல், உயர்த்திவிடல், முன்னேற்றி விடல் என்ற பொருளும் கூறப்படுகிறது.

கல்வியின் நோக்கங்கள்

கல்வியின் நோக்கங்களாக அறிவாற்றல், வேலைவாய்ப்பு, பண்பாடு, மனவிடுதலை, வாழ்க்கையைச் சரியாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்பவை என்றும், நல்ல குடிமகனாக ஒருவனை உருவாக்குதலே என்றும், சமுதாயத்தின் பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் பாடுபட உதவுவதாக இருக்க வேண்டும் என்றும் கருதப்படுகின்றன. "உண்மையான கல்வி என்பது உண்மையான தத்துவத்தின் மூலமே நடைமுறையாகும்" என்கிறார் ஸ்பென்சர். (ta.vikaspedia.in/education).

இத்தகைய நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டிருந்த கல்வியின் தோற்றம், கல்விமுறைகள் கருத்தில் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

கல்வி குறித்த அறிஞர்கள் கருத்து

கல்வியைக் குறித்து "வாழ்வின் இறுதிப் பேறாகிய வீடுபேற்றை அடைய உதவுவதே கல்வி" என்று உபநிடதமும், "நாட்டிற்காகப் பயிற்சி, தேசத்தின் மீது பற்றுக் கொள்ளக் கற்றுத் தருவதே கல்வி" என்று கௌடில்யரும், "தன்னை உணர்தல் கல்வி" என்று ஆதிசங்கரரும், "இயற்கையாக மனிதனுக்குள் புதைந்திருக்கும் தெய்வீகமான பரிபூரணத்தை வெளிக்கொணர்வது கல்வி, உள்ளத்தின் விருப்பங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து பயனுள்ளதாக ஆக்குவதே கல்வி" என்று விவேகானந்தரும், "குழந்தையின் உடல், மனம், ஆன்மா இம்மூன்றையும் ஒரு சேர வளர்ப்பது கல்வி" என்று காந்தியடிகளும் கருத்துரைக்கின்றனர். (https://ta.vikaspedia.in/education/)

கல்வியின் வளர்நிலை

குருகுலக்கல்வி, திண்ணைப்பள்ளி, பள்ளிகள் என பல்வேறு காலங்களில் பல்வேறு முறைகளில் கற்றல் கற்பித்தல் செயல்பாடு நடைபெற்று வருகிறது. அவ்வாறு கல்வி கற்கும் நிலையில் மாணவர்கள் கலை, இலக்கியம், அறிவியல், மருத்துவம், பொறியியல், சோதிடம், போர் போன்ற பல்துறை அறிவையும் பெறுகின்றனர். ஐம்புலன்கள் கற்றலின் வாயிலாக அமைகின்றன. அவ்வகையில்,

1. காட்சிவழிக் கல்வி(Visual Learning)
2. செவிவழிக் கல்வி (Auditory Learning)
3. செயல்வழிக் கல்வி (Kinesthetic Learning)

இவற்றோடு, இசைவழிக்கல்வி (Musical), மாந்தர் வழிக் கல்வி (Interpersonal), சொல்வழிக்கல்வி (Verbal), ஏரணவழிக்கல்வி (Logical), தனக்குள் நிகழும் கல்வி (Intra Personal) ஆகியனவும் பயன்பாட்டில் உள்ளவையாகும். ரீட்டா டன்,கென்னத் டன் என்ற ஆய்வாளர்கள், சுற்றுப்புறச் சூழ்நிலை, மாணவனின் உணர்வுகள், சமுதாய சக்திகள், உடல் தொடர்பான பிரச்சனைகள், உளவியல் சார்ந்த சிக்கல்கள் போன்றவை ஒரு மாணவன் கல்வி கற்பதற்குத் தூண்டுகோலாக உள்ளன என்றனர்.(↑https://medium.com/love2learnidaho/do-you-know-the-5-elements-of-a-learning-style-7721c10e358c)

மேற்கண்ட கல்வி முறைகளோடு இக்கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் பள்ளி, கல்லூரிகளில் கற்க, கற்பிக்க இயலாது கல்விநிலையங்களும் கல்வியாளர்களும் மாணவர்களும் பரிதவித்த நிலையில் இணையவழிக் கற்றல் பேருதவி புரிந்தது என்றே கூறலாம். இணையவழிக் கற்றல் முறையில் மொழியாசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகும்.

ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டிய பண்புநலன்கள்

மொழியாசிரியர்கள் முற்காலப் பள்ளிகளில் இலக்கிய இன்பம் பெறுதலே கல்வியின் தலையாய நோக்கமாகக் கொண்டிருந்தனர். ஆகவே ஆசிரியரே முதலிடம் பெற்றிருந்தார். பழங்காலத்தில் மாணவர்களின் உணர்ச்சிகள், தேவைகள், ஈடுபாடுகள் ஆகியவை சிறிதளவும் கருத்திற்கொள்ளப்படவில்லை. ஆனால் மாறிவரும் அறிவியல் உலகத்தில் மாணாக்கர்கள் முதன்மையிடம் பெறுகின்றனர். விரைவாகக் கற்றுவரும்

மாணவர்களுக்கேற்ப ஆசிரியர்களும் அவர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

பல ஆண்டுகளாகக் கணினியுடன் தொடர்புடைய பாடங்கள், தொலைதூரக்கல்வி, NPTEL, SWAYAM போன்றவற்றில் இணையவழியில் கற்பிக்கும் பாடங்களே நடைமுறையில் இணையவழிக்கல்வியாக இருந்தன. ஆனால் கொரோனா எனும் பெருந்தொற்றுக் காலத்தில் சுமார் ஒன்றரை ஆண்டுகள் பள்ளிகளுக்குச் சென்று கற்க, கற்பிக்க இயலாத நிலையை மாணவரும், ஆசிரியரும் சந்தித்தனர். இப்பேரிடர் காலமானது கணினியில் அறிமுகமில்லாத மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் கூட இணையம் வாயிலாகக் கற்கவும் கற்பிக்கவுமான நிலைக்குத் தள்ளியிருப்பதை அறியமுடிகிறது. இத்தகைய கணினிவழிக் கல்வியால் மாணவர்கள், ஆசிரியர்கள் சந்தித்த இடையூறுகளை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளைக் கண்டறிவது இவ்வேளையில் இன்றியமையாத ஒன்றாகும்.

ஆய்வுக் குறிக்கோள்கள்

1. நேரடி வகுப்புகளின் நன்மைகளைக் கண்டறிதல்
2. இணைய வழிக்கல்வியின் நன்மைகளைக் கண்டறிதல்
3. இணைய வழிக்கல்வியில் சந்திக்கும் இடர்ப்பாடுகளை இனங்காணல்
4. இணைய வழிக்கல்வியில் உறவுநிலையை அறிதல்
5. கல்வியை இன்பமயமாக மாற்ற செய்யவேண்டுவனவற்றை முன்மொழிதல்

என்ற குறிக்கோள்கள் அடிப்படையில் வினாநிரல் அமைக்கப்பட்டு, தகவல்கள் திரட்டப்பட்டன.

ஆய்வு முறையியல்

தமிழகத்தில் பரவலாக உள்ள பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள், பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், பெற்றோர்களிடையே கூகுள் படிவம் வழி வினாக்கள் தொடுக்கப்பட்டு, அவர்கள் பார்வையில் இணையவழிக்கல்வியில் காணலாகும் நன்மைகள், இடர்ப்பாடுகள் குறித்ததான தகவல்கள் சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டன. இவ்வாய்விற்கான வினாநிரலில் தமிழகத்தில் திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, கடலூர், கோயம்புத்தூர், அரியலூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் இணையவழிக் கல்விச் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள 53 மாணவ, மாணவிகளும், கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் 6 ஆசிரியர்களும், 1 பெற்றோர், 1 சமூக ஆர்வலர் ஆகியோர் எனத் தத்தம் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

வினாநிரல் மூலம் சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்ட கருத்துக்கள்

1. நேரடி வகுப்புகளின் நன்மைகள்

1.1. மாணவர்கள் சுயஒழுக்கம், நேரநிர்வாகம், சமூகத்திறன் பெறுவர்

கல்வி நிலையங்களுக்குச் சென்று கல்வி கற்பதன் மூலம் மாணவர்கள் ஒழுக்கநெறிகள் எவை என்பதையும் சுய ஒழுக்கத்தையும் பெறுவதோடு, நேர நிர்வாகம் செய்யும் திறனும்,

சமூகத்திறனும் பெறும் வாய்ப்பினைப் பெறுகின்றனர் என்பதை 95.1% பேர்களின் கருத்துக்களாக வினாநிரல் மூலம் அறிய முடிகிறது.



1.2. புரிதல் திறன் அதிகம்

நேரடி வகுப்புகளில் கல்வி கற்பதன் மூலம் மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் திறனைப் பெறுகின்றனர். புரிதலுக்கேற்ற வகையில் கற்பித்தல் முறைகளும், உபகரணங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இணைய வழியில் அவ்வாறு புரிதல் திறன் இல்லை என்பதனை வினாநிரலில் 16.4%+ 47.5% பதில்கள் உறுதியாகக் கூறுகின்றன.



1.3. கவனச்சிதறல் குறைவு

வகுப்புகளில் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பாடம் கற்பிக்கப்படும். மேலும் இல்லத்தில் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் தொலைக்காட்சி போன்றவற்றால் கவனச்சிதறல் அதிகம் ஏற்படுகின்றது என்பதும்,



வினாநிரலில் கிடைத்த 95.1%பதில்கள் வாயிலாக அறிய முடிகிறது

1.4. நண்பர்களிடம் கேட்டறிந்து கொள்வர்

நேரடி வகுப்புகளில் கல்வி கற்கும் வேளையில் பாடங்கேட்கும் மாணவர்கள் பாடத்தில் ஏதேனும் ஐயம் ஏற்படின் உடன்பயிலும் மாணவர்களிடம் கலந்துரையாடுவதன் மூலம் தங்கள் ஐயங்களைக் கேட்டறிந்து கொள்ள முடிகின்றது என்பதனை, வினாநிரலில் 82% பதில்கள் நமக்கு நிரூபிக்கின்றது.



1.5. தவறான வழிகளுக்குச் செல்வது தடுக்கப்படுகிறது

வீட்டிலிருந்தவாறே இணையவழியில் கற்கும் நிலையில் பல்வேறு விளம்பரங்கள் மற்றும் தேவையற்ற தளங்கள் குறுக்கிட்டு மாணவர்களைத் தவறான வழிகளுக்கு இட்டுச் செல்கின்றன. அவ்வாறு வழி தவறி செல்லுதல் நேரடி வகுப்புகளால் தடுக்கப்படுகிறது என்னும் கருத்தினை 72.1% நபர்கள் ஆமோதித்துள்ளனர்.



2. இணைய வழிக்கல்வியின் நன்மைகள்

2.1. வீட்டில் இருந்தவாறே கல்வி கற்கலாம்

கல்வி நிலையங்களுக்குச் சென்று கற்கும் பாடங்களைக் காட்டிலும் இணைய வழிக்கல்வியின் வாயிலாக வீட்டில் இருந்தவாறே எந்த வித சிரமமுமின்றி உலகில் காணலாகும் பல்வேறு வகையான பாடங்களைக் கற்க முடியும் என வினாநிரலில் 78.7% பதில்கள் உணர்த்துகின்றன.



2.2. பல்வேறு பல்கலைக்கழகங்களில் பயிலலாம்

குறிப்பிட்ட ஒரு பல்கலைக்கழகத்திலுள்ள ஒரு துறையிலுள்ள ஒரு பட்டமோ, பட்டயமோ, சான்றிதழோ மட்டுமே பெறமுடியும் என்பதில்லை. மாறாக, உலகின் பல்வேறுபட்ட பல்கலைக்கழகங்களிலுள்ள பல்துறைகளிலும், விருப்பப்பட்ட பாடங்களைப் பயிலலாம் என்ற கருத்து 90.2% மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.



2.3. உலகின் எப்பகுதியிலிருந்தும் கற்கலாம்

அந்தந்த ஊர்களில், பகுதிகளில் வாழும் மக்கள் மட்டுமே ஒரு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் பயிலலாம் என்றில்லாது உலகின் வெவ்வேறு பகுதிகளில் வாழும் மக்களும் உலகின் எந்த பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்களிலோ, கல்விநிலையங்களிலோ கல்வி கற்க இயலும் என்னும் உறுதியைக் கொடுக்கப்பட்ட வினாநிரலில் 93.4% மக்களின் பதில்கள் நமக்குப் புலப்படுத்துகின்றது.



2.4. பல்துறை அறிவைப் பெறுவர்

நேரடி வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அவ்வக்கல்வி நிலையங்களில் கற்பிக்கப்படும் பாடங்களைப் பற்றிய அறிவை மட்டுமே பெற இயலும். ஆனால் இணைய வழியில் கற்கும் போது, அவ்வக்கல்வி நிறுவனங்களில் கற்பிக்கும் பாட அறிவை மட்டுமல்லாது, பிற ஆர்வம் மிகுந்த பல்வேறு துறை தொடர்பான பாடங்களின் அறிவையும் பெறுவர். இதனை, 85.2% ஏற்றுக்கொண்டுள்ளனர்.



2.5. செலவிடும் நேரம், பொருள் குறைவு

நேரடி வகுப்புகளில் கல்வி நிலையங்களுக்கு வந்து கல்வி கற்போர், போக்குவரத்துக்கும், பல்வேறு கல்விச்செயல்பாடுகளுக்கும் அதிகமாக பொருளையும், காலத்தையும் செலவிடுகின்றனர். அதனுடன் ஒப்பிடுகையில் இணைய வழி வகுப்புகளுக்கு செலவிடப்படும் பொருளோ(72.1%), காலமோ(65.6%) குறைவாகவே உள்ளது என்பதை உணர்த்தியுள்ளனர்.





3. இணைய வழிக்கல்வியில் உறவுநிலை

3.1. ஆசிரியர் மாணவர் உறவு நிலை



நேரடி வகுப்புகளில் ஆசிரியர்கள் மாணவர்கள் உறவு மிகவும் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகவே இருக்கும். எவ்வாறெனில் முகத்தொடு முகம் நோக்கி தாங்கள் கற்பிக்க விழையும் பாடங்களை விளக்கமளிப்பர். மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப பாடங்கற்பித்தல் நிகழும். ஆனால் இணைய வழியில் ஆசிரியர்களால் ஒரே சமயத்தில் மாணவர்களின் முகங்களைப் பார்க்கவோ அவர்தம் உணர்வுகளைப் புரிந்துகொண்டு பாடங்கற்பிக்கவோ, அவர்களின் மனநிலைக்கேற்ப பாடங்கற்பிக்கும் முறையை மாற்றியமைக்கவோ முடிவதில்லை என்பது 96.7% மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே நண்பர்களுடனான உறவும் அதிகளவில் காணப்படும் என்பதையும் உணரமுடிகிறது.

3.2. பெற்றோர்கள் பிள்ளைகளுடனான உறவுநிலை

நேரடி வகுப்புகளில் பெற்றோர்கள் பிள்ளைகளைக் கல்விநிலையங்களுக்கு அனுப்பிவைப்பதோடு ஆசிரியரின் கரங்களில் பொறுப்பு ஏற்றிவைக்கப்படுகிறது. ஆனால் இணையவழிக்கல்வியில் பெற்றோரின் முன்னிலையில் பிள்ளைகள் கற்கும் நிலை உள்ளது. ஆகவே பெற்றோரின் கவனமும் கண்காணிப்பும் அதிகமாகிறது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகவே உள்ளது.



4. இணைய வழிக்கல்வியில் சந்திக்கும் இடர்ப்பாடுகள்

4.1. இணையவழி வகுப்புகளுக்காகத் திட்டமிடுதலில் உள்ள இடர்ப்பாடுகள்



நேரடி வகுப்புகளுக்காகத் திட்டமிடுகையில் ஏற்படும் இடர்ப்பாடுகள் மிகக்குறைவு. ஆனால் இணைய வழி வகுப்புகளில் தொழில்நுட்பக்கோளாறுகள், பருவநிலை மாற்றங்கள், சில சமயங்களில் தொழில்நுட்ப அறிவுக்குறைபாடும் சீரான வகுப்புகள் நடைபெறுவதைத் தடுக்கும் காரணிகளாக மாறுகின்றன என்பதை இவ்வினாநிரல் நமக்குப்புலப்படுத்துகிறது.

4.2. இணையவழி வகுப்புகளில் பாதிக்கப்படுவது





இணையவழி வகுப்புகளால் மனரீதியாக 62.3% பேர் பாதிப்படைவதையும், உடலளவில் பெரும்பாலும் கண்ணே அதிகம்(80.3%) பேர் பாதிப்படைவதையும் ஏற்றுக்கொள்கின்றமை கணக்கெடுப்பின் வழி அறியலாகின்றது.



மேலும் இணையவழிக்கல்வியால் மாணவர்களுக்கு கவனச்சிதறல், தூக்கமின்மை, படைப்பாற்றல் குறைவு, கற்பனைத்திறன் குறைவு, பதற்றம், பயம், தனிமை உணர்வு, எரிச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிய முடிகிறது.

4.3. இணையவழித்தேர்வு முறை



இணையவழிக்கல்வியில் மிகவும் இன்றியமையாத ஒன்று தேர்வு ஆகும். இணைய வழித்தேர்வின் மூலமே மாணவர்களின் இறுதித்தேர்வுகள் நடத்தப்பெற்றன. இவ்வகையான இணையவழித்தேர்வுகளின் காரணமாக மாணவர்கள் வகுப்பில் கவனமின்றியும், படிப்பில் ஆர்வமின்றியும், தேர்வு பயமற்றவர்களாகவும் இருக்கின்றனர் என்பது 100% தெளிவு. இணையவழித்தேர்வுகள் பயனற்றவையாகக் கருதப்படுகின்றன.

4.4. இணையவழிக் கல்வியில் வகுப்பின் போது சந்திக்கும் பிரச்சனைகள்





குடும்பத்தினர் மகிழ்ச்சியாக இருக்கும் சூழலிலும் இணையவழி வகுப்புகளில் கலந்துகொள்ளும் நிலையில் பல்வேறு அழைப்புகள், குறுஞ்செய்திகள், புலனங்களில் வரும் தகவல்கள் போன்றவை வகுப்பிலுள்ள ஈடுபாட்டைக் குலைக்கின்றன. அத்தகைய சூழலில் வகுப்பின் போது அழைப்பு வரின் அவ்வழைப்பினை 94.6%ஏற்காது நிராகரிக்கின்றனர்.

5. இணையவழிக்கல்விக்குப் பயன்படுத்தும் சாதனங்கள்



இணையவழிக் கல்விக்கு அடிப்படைத் தேவை திறன்பேசி அல்லது கணிப்பொறி. ஆனால் தமிழகத்தில் பெரும்பாலானோர் இத்தகைய தொழில்நுட்ப சாதனங்களை வாங்கிப் பயன்படுத்தும் வாய்ப்பற்ற நிலையில் இருப்பதைப் பகுப்பாய்வு வழிக் காணமுடிகிறது. வினாநிரல் அடிப்படையில் சுமார் 25 சதவிகிதத்தினர் மட்டுமே கணிப்பொறி பயன்படுத்துபவர்களாகவும், மீதமுள்ள 75 சதவீதத்தினர் திறன்பேசி எனும் ஸ்மார்ட்போன் பயன்படுத்துவோராகவுமே உள்ளனர். அவர்களிலும் 50 சதவீதத்தினர் இணையவழிக்கல்விக்கென்றே இத்தகைய சாதனங்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர் எனலாம். மேலும் இணைய வழிக்கல்விக்கான சாதனங்களை உபயோகிப்பதில் பல குடும்பங்களில் பல பிரச்சனைகள், கொள்ளை, கொலை சம்பவங்களும் அரங்கேறியமையை நாம் நாளிதழ்கள், சமூக இணைய ஊடகங்கள் வாயிலாக அறிய முடிந்தது. (கலைஞர் செய்திகள்., 2020, செப்டம்பர் 01)

5.1. இணையவழிக்கல்வியில் மடிக்கணினியின் பங்களிப்பு







இணையவழிக்கல்விக்கு திறன்பேசி அல்லது மடிக்கணினிகளை வகுப்பிற்குப் பயன்படுத்தவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர். இந்நிலையில் இணையவழிக்கல்விக்காக 40.5%பேர் மடிக்கணினி வைத்துள்ளனர். இதிலும் 48.6%பேர் மடிக்கணினி இன்றி திறன்பேசி வழி வகுப்பில் இணைகின்றனர். கருத்துக்களை வழங்கியோரில் 56.8% பேர் தங்கள் குடும்பச்சூழல் காரணமாகக் கணினியின்றி வகுப்பில் இணைகின்றனர்.

6. கல்வியை இன்பமயமாக மாற்றச் செய்யவேண்டுவன





அறிவை வளர்க்கும் கல்வியை அனைவரும் விரும்பிப் பயில ஒரு சில முறைகளைப் பின்பற்றிடல் அவசியமாகின்றது. மாணவர்கள் தானாகக் கற்க முயலுதல், பாடப்புத்தகங்களோடு பிற அறிவு சார்ந்த புத்தகங்களையும் படிக்கும் வழக்கத்தைப் பின்பற்ற வேண்டும். மாணவர்களிடையே கற்கும் ஆர்வத்தை அதிகரிக்க இருவழி தகவல் பரிமாற்றத்தைப் பயன்படுத்துவதோடு, நவீன கற்பித்தல் கருவிகளையும் பயன்படுத்துதல் இன்றியமையாததாகின்றது என்பதை இப்பகுப்பாய்வு மூலம் அறிய முடிகிறது.

தொகுப்புரை

- ❖ கல்வி நிலையங்களுக்குச் சென்று கல்வி கற்பதைக் காட்டிலும் இணைய வழியில் கற்பதன் மூலம் பல்துறை அறிவையும், பரந்துப்பட்ட ஆய்வுணர்வையும் மாணவர்கள் பெறுவர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- ❖ சுமார் ஒன்றரை ஆண்டுகளாக (மார்ச் 2020 - செப்டம்பர் 2021) ஏற்ற பணிவாய்ப்புகளோ, போதுமான வருவாயோ இன்றிப் பலரும் துயருற்ற நிலையில் இணைய வழிக்கல்வி கற்பதற்கென்று பல குடும்பத்தினரும் ஏற்ற சூழ்நிலையில்லாமையால் கல்வி கற்க இயலாமலும் தொழில்நுட்பங்களில் தேர்ச்சியில்லாமையாலும், பல்வேறு உடல் உள்ளப் பாதிப்பாலும் பெரிதும் துயருற்றனர் என்பதைக் கருத்துக்கணிப்பு வாயிலாக அறியமுடிகிறது.
- ❖ பழங்காலந்தொட்டே தங்கள் அனுபவங்களோடு, வாழ்க்கைக் கல்வியையும் மாணவர்களுக்குப் புகட்டி அவர்களைச் சிறந்த குடிமக்களாக உருவாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியர்களையேச் சாரும். பெற்றோர் நிலையில் மாணவர்கள் மீது அன்பும், கருணையும், கண்டிப்பும் செலுத்த வேண்டிய ஆசிரியர்கள் இணையவழியிலான கல்வி முறையால் செய்வதறியாது திகைத்தனர். பெரும்பாலான ஆசிரியர்கள் வயதில் மூத்தோராகவும், ஆங்கிலப்புலமையோ, தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதில் தேர்ச்சியோ இல்லாதிருத்தல் இணைய வழிக்கற்பித்தலில் பெரிதும் சிரமத்திற்குட்படுத்தியுள்ளது என்றே கூறமுடிகிறது.

- குறிப்பாக மொழியாசிரியர்கள் தங்களின் இயல்பான காட்சிப்படுத்தலான வகுப்பறையின்றி தாமே ஒரு திரையாக மாறுவதைப் பலராலும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஆகவே நேரடி வகுப்புகளையே பெரிதும் விரும்புகின்றனர் என்பதும் பகுப்பாய்வின் வழி புலனாகின்றது.
- நேரடி வகுப்புகளில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே ஒரு சுமூகமான உறவு இருப்பது உறுதி. ஆனால் இணைய வழி வகுப்புகளில் மாணவர்களின் உடல் மற்றும் மனநிலையை அறிந்துகொள்ளுதல் சவாலாகவே உள்ளது. மேலும் மாணவர்களின் புரிதல் திறன் நேரடி வகுப்புகளை விட இணையவழி வகுப்புகளில் சற்று குறைந்தே காணப்படுகிறது என்பதையும் அறிய முடிகிறது..
- நேரடி வகுப்புகளில் மாணவர்கள் தங்களுக்குள் நட்புறவு கொண்டு தங்கள் உள்ளத்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதோடு, குடும்பச்சூழலை மறந்து மகிழ்வோடு கல்வியும் கற்க விரும்புகின்றனர். ஆனால் இணைய வழியில் பெற்றோர்கள் முன்னிலையில் வகுப்பில் இணைகையில் ஒரு அசௌகரியமான மனநிலையே மாணவர்களிடம் காணப்பெறுவதைக் அறியமுடிகிறது. பாலர் பள்ளிகள், தொடக்கப்பள்ளிகளில் மாணவர்கள் பெற்றோரின் துணையின்றி கற்றல் என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே உள்ளது என்பதையும் ஆராய்ந்தறிய முடிகிறது.
- இணையவழிக்கல்வியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கற்றல் கற்பித்தல் நிகழ்வினை ஆர்வமுடன் கையாளத்தொடங்கினால் மிகவும் எளிமையானதாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் பலரும் ஆர்வமற்ற நிலையில் பங்கேற்பதால் அதன் மூலம் அவர்கள் பெறும் பலன் மிகக் குறைவாகவே உள்ளது. நண்பர்களுடன் உரையாடவோ, சந்தேகங்களைத் தெளிவுசெய்து கொள்ளவோ இயலாத நிலை காணப்படுவதைப் பகுப்பாய்வின் வழி உணர முடிகிறது.
- பெருந்தொற்று தொடர்ந்து அரங்கேறிவரும் இக்காலச் சூழலில், மாணவர்கள் பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று கல்வி கற்பதென்பது எட்டாக்கனியாக உள்ளது. இருப்பினும் இணைய வழிக்கல்வி வகுப்புகளில் பல்வேறு சிக்கல்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் இணைய வழி வகுப்புகளில் பங்கேற்பதில் தகவல் தொடர்பின்மை, செயலியைப் பயன்படுத்த அறியாத நிலை, நான்கைந்து பிள்ளைகள் உள்ள ஒரு நடுத்தர குடும்பத்தில் ஆளுக்கொரு திறன்பேசி வேண்டுமென்ற நிலையில் பொருளாதாரச் சிக்கலின் காரணமாக மன உளைச்சலுக்கு ஆளாகி, சிலர் தற்கொலைக்கும் முயற்சிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை போன்ற சிக்கல்களை சந்திக்கும் வேளையில், அரசின் சீரிய முயற்சியினால் பெருந்தொற்றைத் தடுக்கும் வகையில் விழிப்புணர்வு அளிப்பதோடு, அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வலியுறுத்துதல் போன்றவை மூலம் இவ் அசாதாரணச் சூழலிலிருந்து விடுபட வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- கொரோனா எனும் பெருந்தொற்று முற்றிலும் நம் நாட்டை விட்டு ஒழிந்தாலொழிய மாணவர்கள் இணைய வழியில் கற்பதில் கவனக்குறைவு, ஆர்வமின்மை, புரிதலில் ஏற்படும் இடர்பாடுகள், கலந்துரையாட இயலாமை போன்றவைகளைக் களைதல் இயலாது. ஆகவே இணையவழி வகுப்புகளைக்காட்டிலும் பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று கற்பதே சாலச் சிறந்ததாகும்.
- அப்பொழுது தான் மாணவர்களின் மன உளைச்சலைப் போக்கி, நல்லொழுக்கத்தை வளர்த்து, ஆசிரியர் மாணவர்களிடையேயான உறவினை மேம்படுத்தி, ஒரு வளமிக்க ஒளிமயமான எதிர்கால இளைய சமுதாயத்தை உருவாக்கிட இயலும்.

இணையத்தையே நம்பிக் காலத்தை வீணடிக்கும் இளந்தலைமுறையினரிடம் நல்லதொரு கல்விச்சூழலை உருவாக்கும் எண்ணத்தை விதைக்கலாம்.

துணைநின்றவை

- திருமலை, மா.சு.,(1998), ***தமிழ் கற்பித்தல்***, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
- கணேசன் அம்பேத்கர்., (2010), ***மொழியறிதிறன் வகைப்பாடும் வழிமுறையும்***, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
- கோவிந்தராஜன், எம்., (2016), ***மொழியாசிரியர் பண்புகளும் மொழிப்பயிற்சியும்,*** சென்னை, பார்த்திபன் பப்ளிகேஷன்ஸ்
- மாணிக்கம்,அ., (1994) ***நன்னூல் (காண்டிகையுரை)***, சென்னை, முல்லை நிலையம்.
- Vijayarani, K., (November 2016), ***A study on attitude towards computer and internet education among highschool students***, International Research Journal of India, (ISSN:2454-8707), Vol.2, Issue 3, pp.100-103.
- Mohamed Shazny, S. H. (2021). இடைநிலைப் பாடசாலைகளில் கற்றலில் ஆபத்து விளிம்பிலுள்ள மாணவர்களும் அவர்களை மீட்டெடுப்பதற்கான வகுப்பறை மட்டச் செயற்பாடுகளும்: இலங்கையின் கற்பிட்டி கல்வி வலயத்தின் தமிழ்மொழி மூல பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டது: Students at Risk in the Learning process and the recovering classroom activities: With Special reference to the Tamil medium secondary schools in Katpitiya Education Zone of Sri Lanka. *இனம் பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் (Inam International E-Journal of Tamil Studies)*, *7* (27), 4–14.
- கலைஞர் செய்திகள் (2020, செப்டம்பர் 01), ஆன்லைன் வகுப்பால் தொடரும் உயிர்பலி, கலைஞர் செய்திகள் வலைத்தளத்திலிருந்து பெறப்பட்டது. https://www.kalaignarseithigal.com/tamilnadu/2020/09/01/kallakurichi-student-committed-suicide-in-a-dispute-with-sisters-who-were-using-the-same-cell-phone-for-an-online-class
- அப்டேட் நியூஸ்360 (2021, ஜூலை 14), செல்போன் வாங்கித் தர முடியாத கூலித்தொழிலாளி.. பாதித்த படிப்பு : விரக்தியில் தற்கொலை செய்த மகன்!! அப்டேட் நியூஸ்360 வலைத்தளத்திலிருந்து பெறப்பட்டது, https://www.updatenews360.com/tamilnadu/mercenary-who-could-not-afford-a-cell-phone-affected-study-son-who-committed-suicide-in-despair-140721/
- விகடன்.காம் செய்திகள் (2020, ஜூன் 24), ஆன்லைன் வகுப்பு: 'மொபைல் இல்லை; மன உளைச்சல்'- 10-ம் வகுப்பு மாணவர் தற்கொலை, விகடன்.காம் வலைத்தளத்திலிருந்து பெறப்பட்டது, https://www.vikatan.com/news/india/a-boy-committed-suicied-because-he-has-no-mobile-to-attend-online-class
- https://tamonews.com/education/12660/
- https://ta.wikipedia.org/wiki/கல்வி
- https://ta.vikaspedia.in/education/கல்வியின்முக்கியத்துவம்/இந்தியக் கல்விமுறை/கல்வியின் நோக்கங்கள்

****

கல்வியில் ஆராய்ச்சி (Research in Education)

முனைவர் ப.தினகரன்| Dr. P. DINAKARAN

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு – 638107, அலைபேசி எண் :7010049779, மின்னஞ்சல் :drpdhasini@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

ஆராய்ச்சி என்பது ஓர் இனிமையான அனுபவம். ஆழ்கடலின் அடியில் ஆராய்ச்சிகளை நிகழ்த்துவோரும், இமயத்தின் உச்சியை எட்டியோர் அடையும் இனிய அனுபவத்தினை அடைய இயலும். கேள்விகளின் வழியாக ஆராய்ச்சிகள் மலர்கின்றன. ஆய்வின் விளைவாக அறிவு மலர்கிறது. அறிவின் முதிர்ச்சியாக நாகரீகம் தழைக்கிறது. பண்டைய கற்காலம் முதல் இன்றைய கணிப்பொறிக் காலம் வரை கேள்விகளாலேயே உலகம் முன்னேறி வந்துள்ளது. ஆய்வு என்பது பிரச்சனைக்குத் தீர்வுகாண மேற்கொள்ளப்படும் ஒழுங்குபடுத்தப்பட்ட செயல்பாடு ஆகும். ஆராய்ச்சியின் நோக்கமே அறிவினை விரிவாக்குதல் ஆகும். கல்விமுறையில் கல்விச் செயல்திட்டங்கள் மற்றும் அதனைச் செயல்படுத்தும் அமைப்புகள் அடங்கியுள்ளன. கல்விச் செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிறுவன அளவில் ஆசிரியர், மாணவர் மற்றும் கற்பித்தல், கற்றல் செயல்பாடுகளைக் குறிப்பிடலாம். கல்வி ஆராய்ச்சியின் நோக்கங்களைக் கீழ்க்காணுமாறு தொகுத்துக் கூறலாம்.

1. தீர்வு அடைதல்
2. கருத்துக்களை மதிப்பிடல்
3. சிறப்பு அறிவு பெறுதல்
4. முற்கூறல்
5. கோட்பாடுகளைச் சோதித்தல்

கல்வி ஆராய்ச்சியின் வரம்பு அல்லது எல்லை மிகவும் விரிவானது. கல்வியுடன் தொடர்புடைய அனைத்துப் பகுதிகளும் மற்றும் அம்சங்களும் இதில் அடங்கும்.

1. ஆசிரியர் தொடர்பானவை
2. மாணவர் தொடர்பானவை
3. கலைதிட்டம் தொடர்பானவை
4. கல்வி நிலையங்கள் தொடர்பானவை
5. நிர்வாகம் தொடர்பானவை

இவ்வாறாக கல்வியின் ஆராய்ச்சி குறித்தும் சிறப்புக் குறித்தும் அறியலாம்.

Abstract

Research is a pleasant experience. Those who explore the depths of the ocean and reach the summit of the Himalayas can enjoy the off experience. Research flourishes through questions. Knowledge blossoms as a result of research. Civilization flourishes as knowledge matures. The world has advanced with questions from the Stone Age to the computer age today. Research is a

systematic study that is carried out to solve a problem. The purpose of research is to broaden knowledge. The education system includes educational programs and the organizations that implement them. Teacher, student and teaching and learning activities can be specified at the organizational level in the implementation of educational action plans. The objectives of academic research can be summarized as follows.

1. Achieving the solution
2. Evaluation of suggestions
3. Gaining specialized knowledge
4. Forecast
5. Testing the principles

The scope of academic research is very broad. This includes all areas and features related to education

1. Teacher oriented
2. Student Oriented
3. Project Oriented
4. Educational institutions Oriented
5. Administration oriented

In this way one can learn about the research and specialization of education.

திறவுச் சொற்கள் (Keywords) :- கல்வி, Education, ஆராய்ச்சி, Research, ஆய்வுச் சிக்கல், Problem in Research

"பண்டைய கற்காலம் முதல் இன்றைய கணிப்பொறி காலம் வரை கேள்விகளாலேயே உலகம் முன்னேறி வந்துள்ளது. ஆய்வும், அறிவும் இத்தகைய கேள்விகளாலேயே மலர்கின்றன ,வளர்கின்றன.' பூமியை ஏன் சுற்றுகிறது? என்பதை அறிய முற்பட்டவர் தத்துவ அறிஞர் ஆயினர்.' பூமி எப்படிச் சுற்றுகிறது 'என்பதைக் காண முற்பட்டவர் அறிவியல் அறிஞர் ஆயினர். கல்வியியல் ஆய்வானது மனிதர்களுடைய அறிவை வளர்ப்பதற்கும், பெருக்குவதற்கும் மற்றும் பதப்படுத்துவதற்கும் பயன்படுகிறது. சமூக மேம்பாட்டிற்குக் கல்வியியல் ஆய்வு அதிக அளவு பயன்படுகிறது" 1 என்கிறார்.

எந்த ஒரு துறையிலும் பிரச்சனைகள் உள்ளவரை ஆய்வின் தேவையும் தவிர்க்க முடியாததாகும் கல்வித்துறையிலும் பிரச்சினையில் இல்லை அல்லது தீர்ந்து விட்டன என்று எந்த காலகட்டத்திலும் கூற முடியாது ஒரு பிரச்சினையை தீர்க்க புதியதொரு பிரச்சனை முளை தெரிவது இயல்பு. அதற்குத் தீர்வு காண வேண்டியதும் அவசியம் கடலில் அலை ஓய்வதில்லை கல்வித் துறையில் மட்டுமன்றி அனைத்துத் துறைகளிலும் பிரச்சனை முடிவு பெறப்போவதில்லை பிரச்சனை உள்ளவரை ஆராய்ச்சிக்கான தேவை இருந்து கொண்டே தான் இருக்கும் ஏனெனில் ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம் பிரச்சனைக்கு தீர்வு காணல் ஆகும்

கல்வி என்பதன் பொருள்

கல்வி என்பது குறித்த விளக்கங்களும், விவரங்களும் பலப்பல. கல்வி என்றால் என்ன என்பது எல்லோருக்கும் புரியவே செய்கிறது என்றாலும், எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வரையறையாக, இது தான் அது எனச் சுருக்கமாகக்கூறுவது எளிதல்ல. எது கல்வி? என்ற கேள்விக்கான பதிலும் வரையறையும், தத்துவங்களும் நோக்கங்களும், காலம், இடம், சூழலுக்கு ஏற்ப இடத்திற்கு இடம் ,சந்தர்ப்பத்திற்குச் சந்தர்ப்பம், நாட்டுக்கு நாடு காலத்திற்குக் காலம் தனிமனிதருக்கு மனிதர் மாறுபடும் தன்மை கொண்டது. எனினும் எல்லாக் காலக்கட்டத்திலும், அனைவராலும் கல்வியின் முக்கியத்துவமும் அருமை பெருமைகளும் உணரப்பட்டு, உன்னதமானதோர் இடம் கல்விக்கு அளிக்கப்பட்டு உள்ளமையை வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

"கல்வி என்ற கருத்து பல்வேறு சூழல்களில் பல பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. கல்வி எனும் சொல் வாழ்வியல் நோக்கில் மிகப் பரவலாக ப்பொருள்படும். நம் முன்னோர்களிடம் இருந்து நமக்குக் கிடைத்த தகவல்கள், பட்டறிவு, செயல் திறன்கள், செய்முறைகள், சாதக பாதகக் கூறுகள் முதலியவற்றைப் பயில வரும் மாணவர்களுக்கு அளிக்கும் முயற்சியே கல்வி. இதனை 'முறையான கல்வி' "2 என்று கூறுவர்.

கல்வி என்பது தத்துவத்தின் சக்திவாய்ந்த ஒருபக்கமாகும். கல்வி என்பது இலத்தீன் என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். 'E 'என்றால் உள்ளே இருந்து என்றும்' Duco 'என்றால்' வெளிக்கொணர்தல்' என்றும் பொருள்படும் .எனவே Education என்றால் "உள்ளே இருந்து வெளியே கொண்டு வருவதாகும்". மேலும் Educatum என்பதற்கு 'பயிற்றுவித்தல் 'என்று பொருள்படும். 'Educere' லிருந்து கல்வி எனும் சொல் பிறந்தது என்று கூறுவர் . இதன் பொருள் 'வளர்ப்பது' என்பதாகும் . மேலும் 'Educare' என்ற சொல்லில் இருந்து 'Education' தோன்றியது என்றும் கூறுவர். இதன் பொருள் 'வெளிக்கொணர்வது' என்பதாகும். ஆகவே, கல்வியின் அடிப்படைப் பொருள் குழந்தைகளின் வளர்ச்சிக்கான பயிற்சி முறையாகும்.

கல்வியினால் மனிதன் மனிதனாகிறான். உயிரினங்களில் மனிதனுக்கு மட்டுமே கல்வி அளிக்க முடியும். இதர உயிரினங்களுக்குப்பயிற்சி மட்டுமே அளிக்க முடியும். கல்வியானது தன்னுடைய மதிப்புகளாலும் கொள்கைகளாலும், செயல்முறைகளாலும் மனித வளர்ச்சியினைத் திருத்தி அமைக்கின்றது. மேலும் கல்வியானது வருங்காலச் சமுதாயத்தில் வளர்ச்சியை வடிவமைத்து, எதிர்கால வாழ்வின் குறிக்கோள்களை அடைவதற்கும், நிறைவு கொள்ளச் செய்வதற்கும் முயற்சிக்கின்றது. இவ்வகையில் வெளிப்படும்போது எந்நிலையிலும் தனித்தன்மைக்கு ஊறு ஏற்படாத வண்ணம் பாதுகாத்துக் கவனமாக இருந்து ஒரு முழுமையான வளர்ச்சிக்கு உறுதி அளிக்கின்றது. கல்வியானது அதனுடைய விரிவான கருத்தில் "வாழ்வு முழுமையும் அமைந்த வளர்ச்சி "என்பது ஆகின்றது. மனிதன் இயற்கையுடன் தொடர்பு கொள்ளும் போதெல்லாம் அனுபவங்களைப் பெறுகின்றான். இந்த அனுபவமே அவன் இயற்கையின் தொடர்பாலே சூழல்களில் பெறக்கூடிய கல்வியாகும். இந்த நிலையான தொடர்பானது அவனுடைய நடத்தைகளின் மாற்றங்களை விளைவிக்கின்றது. இந்நிலையில் கல்வியானது நடத்தை மாற்றங்களைக் குறிப்பது என்றாகிறது.

"மனிதனின் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் ஆற்றல்களை உணரச் செய்வதும் வளர்க்கச் செய்வதும் கல்வியின் செயலாகக் கொள்ளலாம். கல்வி என்ற ஆதாரச் சொல்லான கல்லுதல் என்ற சொல் தோண்டுதல் என்ற பொருளை அளிப்பதாக உள்ளது. எனவே

புதைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து மடைமாற்றம் செய்து திசைதிருப்ப வல்லது கல்வியாகும். மேலும் அத்திறம் முழுமையாக வளரவும் உதவுகின்றது. எனவே இக்கல்வியின் பயனாக ஒருவன் இயைந்த முழுவளர்ச்சியினையும் பெறுகிறான். கல்வியானது இச்செயலையே தன்னுடைய பணியாகக் கொண்டு செயல்படுகின்றது"3 என்கிறார்.

கல்வி மனித வாழ்வை மேம்படுத்துகிறது. கல்வி மனிதச் செயலாகும். கல்வியே மனிதனின் நடைமுறை ஒழுக்கங்களை நெறிப்படுத்துகிறது. கல்வி ஒன்றே மனிதன் மனிதனாக மதிக்கப்படுகிறான். கல்வியே வருங்காலச் சமுதாயத்தை வடிவமைத்துத் தருகின்றது. எதிர்கால வாழ்வை குறிக்கோளை அடைவதற்கு உறுதுணை செய்கிறது.

ஆராய்ச்சி : பொருள் மற்றும் விளக்கம்

ஆய்வு என்பது பிரச்சினைக்கான தீர்வு காண மேற்கொள்ளப்படும் ஒழுங்குப்படுத்தப்பட்ட செயல்பாடு ஆகும். ஆராய்ச்சியின் நோக்கமே "அறிவினை விசாலமாக்குதல்" ஆகும்.

"கிளிபோர்டு வுட்டி என்னும் கல்வியியலாளர், ஆய்வு என்பது "பிரச்சினையை இனம் கண்டறிந்து, அதற்கான கருதுகோளினை அமைத்து, தேவையான புள்ளிவிவரங்களை சேகரித்து, சேகரித்த புள்ளிவிவரங்களைப் புள்ளியியல் முறையில் பகுப்பாய்வு செய்து பின் முடிவுகளைப் பெறுதல், மற்றும் அந்த முடிவுகளுக்குப் பொருள் சார்ந்த விளக்கமளித்தல் " 4 என்கிறார்.

"ஆராய்ச்சி என்ற சொல் மூன்று கூறுகளை உடையது . ஆர்+ ஆய் + சி என்பன இயைந்து ஆராய்ச்சி ஆயிற்று. ஆர் என்பதற்குக் கூர்மை என்ற பொருளுண்டு. ஆய்தல் என்பதன் பகுதி ஆய் என்பது, ஆய்தல் என்பதற்கு நுணுகுதல், வருந்துதல், அழகாய் இருத்தல், அசைதல், சோதனை செய்தல், பிரித்தல், கருதுதல், தெரிந்தெடுத்தல், கொண்டாடுதல், கொய்தல், காம்பு நீக்குதல், குத்துதல் எனப் பல பொருட்கள் உண்டு என்பர்"5

ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் ஆகிய நான்கு சொற்களும் நுணுக்கம் என்ற பொருள் உடையன.6 குறிஞ்சிப்பாட்டில் வரும் "இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென" என்ற அடிக்கு நச்சினார்க்கினியர், நாணமும் மடமும் நுணுகியவழிப் பிறந்த காதல் என்று பொருள் உரைப்பது எண்ணத் தக்கதாகும்.

ஆயுதம் என்ற சொல் தொல்காப்பியர் காலத்திலிருந்து இன்றுவரை வழக்கற்று விடாத சொல்லாகும்.

> ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
> தான்சாம் துயரம் தரும்.7

என்ற இடத்தில் நட்புக் கொள்ளும் முன் ஆராய்ச்சி வேண்டும் என்பர் திருவள்ளுவர். ஆராய்வான் என்ற சொல்லையும் திருவள்ளுவர் பயன்படுத்துகின்றார்.4 ஆராய்பவனை திவாகர நிகண்டு அறிஞன் என குறிக்கின்றது.

அறிவும் ஆராய்ச்சியும்

அறிவு என்பது எல்லா உயிர்களிடத்தும் வெவ்வேறு படிநிலைகளில் அமைகின்றது. பரிணாம இயற்கை ஓரறிவுயிர் முதலாக ஆறறிவு உயிர் வரை அறிவியலில் ஒரு வளர்ச்சியைக் காட்டுகின்றது. தொல்காப்பியர் அறிதலில் அமைந்த படிநிலைகளை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றோடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே. 8

என்று கூறுவர். எனவே எல்லா உயிர்களுக்கும் ஒரு வகையாக அறிதல் திறன் உள்ளது. அறிவு என்பது ஐந்து புலன்களாலும் பெறப்படுவது. ஐந்து புலன்களையும் அறிஞர் ஐந்து பேரறிவின் வாயில்கள் என்று குறிப்பர். மழை வரும் என்பதை உணர்ந்து எறும்புகள் உணவு சேகரிக்கின்றன. வெப்பநிலை மாற்றத்தை முன்னரே உணர்ந்து ஈசல்கள் வட்டமிடுகின்றன. நாள்தோறும் திருக்கழுக்குன்றத்தில் உச்சிப் போதில் உணவு ஏற்கக் கழுகுகள் வருகின்றன. வானத்தில் பருந்து பறப்பதை அறிந்து தாய்க்கோழி குஞ்சுகளுக்கு எச்சரிக்கை செய்கின்றது. வௌவால்கள் மரங்களில் பழம் பழுக்கும் காலம் அறிந்து பயன் கொள்கின்றன. பல ஆயிரம் கல் தொலைவில் இருந்து வேடந்தாங்கலுக்குப் பறவைகள் வந்து, பருவம் முடிந்ததும் மீள்கின்றன. வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகளின் அறிவுத்திறம் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. வளர்த்தவன் சிதையில் எரிவதைக் கண்டு நாயும் நெருப்பில் குதித்து இறந்ததாகச் செய்தி அறிகிறோம். மனிதக் குரங்கு மட்டை பிடித்துப் பந்தாடுகின்றது. ஆனால் இவையெல்லாம் ஆறாவது அறிவின் அடையாளங்கள் இல்லை. தலைமுறைதோறும் வளர்ச்சி பெறுவதாகவும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதாகவும் அறிவு, பண்பாடு ஆகியவற்றை தலைமுறைக்குக் கற்பிப்பதாகவும் அமைவது ஆறாவது அறிவு. காலம் இடையிட்டவற்றையும் தேயம் இடையிட்டவற்றையும் அறியும் அறிவு என்று இதனை பரிமேலழகர் கூறுவர். இந்த அறிவுத் திறனுக்கு அடிப்படையாக அமைவது மொழியே. நம்மையே நாம் ஆராய்ந்து கொள்ள இந்த அறிவு பயன்படுகிறது.

ஆராய்ச்சி முறைகள்

ஓர் ஆய்வுக்கு மிகவும் தேவையானது எவ்வகையான ஆய்வு முறையை மேற்கொள்வது என்பதாகும். ஆய்வுப் பொருளுக்கு ஏற்பவும், துறைக்கு ஏற்பவும் ஆய்வு முறை மேற்கொள்ளப் பெறுதலுண்டு. வரலாற்று முறை ஆய்வு, ஒப்பீட்டு முறை ஆய்வு, சோதனை முறை ஆய்வு, உய்த்துணர் முறை ஆய்வு, செலுத்துநிலை ஆய்வு, அமைப்பியல் முறை ஆய்வு, நடைமுறை சார் ஆய்வு ஆகிய ஏழும் அறிவியல் ஆய்வுமுறையின் தொடக்க வடிவங்கள் எனக் கூறலாம். இவை எல்லாமே அறிவியல் ஆய்வுநெறியின் பயனைக் கொண்டு வளர்ந்தன எனக் கூறலாம். அறிவியல் ஆய்வுமுறை என்பது முற்றிலும் அறிவுசார்ந்த முயற்சிகளையும், சோதனைகள் வழி அறியப்பெற்ற மெய்ம்மைகளையும் அடிப்படையாகக் கொண்டது. கற்பனை, அனுமானம், காரணங்கள் புலப்படாத புதிர்நிலை ஆகியவற்றுக்கும் அறிவியல் ஆய்வுமுறைக்கும் இடையே பெரிய இடைவெளி உண்டு. மேற்காட்டிய ஏழு முறைகள் அல்லாத மாதிரி ஆய்வுமுறை, அளந்தறி ஆய்வுமுறை, மதிப்பீட்டு ஆய்வுமுறை, புள்ளிவிவர ஆய்வுமுறை, விளக்கவியல் ஆய்வுமுறை, செயல்முறை ஆய்வுமுறை, மரபியல் ஆய்வுமுறை ஆகியவையும் ஆராய்ச்சியில் பயன்படுத்தப் பெறும். இவற்றிலும் அறிவியல் நெறியின் தாக்கங்கள் உண்டெனினும் முற்குறிப்பிட்ட ஏழு முறைகளைப் போல இவற்றை அறிவியல் ஆய்வு முறையின் தொடக்கநிலை வடிவங்கள் எனக் கூறுவதற்கு இல்லை.

ஆராய்ச்சியின் ஒவ்வொரு படிநிலையிலும் அறிவுக்கும் சோதனைக்கும் மெய்யறிவும் முயற்சிக்கும் இடமுண்டு. வேதியியல் அல்லது இயற்பியல், விலங்கியல், நிலைத்திணை இயல் அல்லது தாவரவியல், வானியல், மண்ணியல், புவியியல் போன்ற அறிவியலின் வெவ்வேறு துறைகளில் மனிதன் சிந்தனையே ஆராய்ச்சியின் அடித்தளமாய் அமைந்தது. ஒரு சிந்தனை, அதன் அடிப்படையில் தோன்றும் ஐயம், ஐயத்தை தீர்த்துக்கொள்ள உசாவல், தேடல், திரட்டி இவ்வாறு இருக்கக் கூடுமோ என்று அரைகுறையாய்த் தெளிந்த நிலை பின் சோதனைகள் நினைத்தது சரியானது சரியான அழியும் நிலை பின் விதிகளை வகுக்கும் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்ச்சி அளிக்கின்றது. இவ்வாறு பல படிநிலைகளைக் கடந்து செல்வதே ஆராய்ச்சி முறை எனப்படும்.

ஆய்வு முறைகளிலிருந்து உத்திகள் மாறுபட்டவை. உத்தி என்பது ஆராய்ச்சி முறையில் நாம் சமைத்துக் கொள்ளும் கருவியைக் குறிப்பதாகும். நேர்காணல் ஓர் உத்தி. ஆய்வுக்கூட சோதனை ஓர் உத்தி. பட்டியல் அனுப்பிக் கருத்துக்களைப் பெறுதல் ஓர் உத்தி. இவ்வாறு மாறுபட்ட உத்திகளை வெவ்வேறு ஆய்வுகளில் கருவிகளாகப் பயன்படுத்தலாம். ஒரு பொருளைக் குறித்த முறையான படிப்பு முறை எனப்படும். ஒவ்வொரு முறைக்கும் குறிக்கப்பட்ட வரையறை விதிமுறை ஆகியன உண்டு. இந்த முறைகளில் காலப்போக்கில் மாற்றங்கள் நிகழா, ஆனால் உத்திகளில் மாற்றம் இருக்கும். நேர்காணல் என்பது ஒரு காலத்தில் ஆளை நேரில் கொண்டு வினாக்களுக்கு விடைகளை பெறுவதாக இருந்தது. இன்று தொலைபேசி வழியாகக் கேட்டுப் பதிவு செய்து கொள்ளுதலும் நேர்காணல் என்னும் அளவில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. அறிவியல் துறைகளுக்கு வேறாகவும் சமூகவியல் துறைக்கு வேறாகவும் உத்திகள் அமைகின்றன. இலக்கிய ஆராய்ச்சிக்கு அறிவியல் துறையினர் பயன்படாமல் போகலாம். அறிவியல் துறையில் பயன்படும் ஊடுகதிர் போன்றவற்றைப் பயன்படுத்தும் உத்திகளுக்கு இனமுண்டு. இலக்கிய ஆராய்ச்சிகளில் சிந்தனையின் நோக்கம் துருவித்துருவிப் பகுத்தாராயும் எந்த நூல் கூறும் அமையும் கருவிற்கு இடமில்லை.

ஆய்வேடுகள் என்ன முறை ஆய்வு மேற்கொண்டன என்று கூறுகையில் இந்த ஆய்வேட்டில் விளக்கவியல் ஆய்வு முறையும் ஒப்பீட்டு ஆய்வு முறையும் வரலாற்று ஆய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று எழுதிவிட்டனர். ஆய்வில் இத்தனை முறைகள் பயன்படுமா என்பது அறிதற்குரியது. "விளக்கவியல் ஆய்வு என்பது நிகழ்கால சூழலை அதன் ஒரு பகுதியில் காணப்பெறும் பொது பண்புக்கூறுகளைப் படி எடுக்கும் வகையில் அணுகி உண்மை காண்பதாகும். இம்முறை இயற்பியல் மற்றும் இயற்கை அறிவியல் துறைகளில் மிகுதியாகப் பயன்படுவது. இம்முறையில் இயற்பியல் அழைக்கிறது. உயிரியல் வகைப்பாடு செய்கிறது. விலங்கியல் பகுதி நிலை இயல்பாகவே சமூக அறிவியலில் இம்முறை பொது நிலைகளில் சமூகப் பொருளாதார அளவிலும் வேலைவாய்ப்பு மற்றும் செயல்களில் பகுப்பாய்வில் பயன்படுகிறது" என்று கூறக் காணலாம். ஓர் ஆய்வில் ஒரு குறிப்பிட்ட முறையே பேரிடம் பெறும்.

கல்வியில் ஆராய்ச்சியின் நோக்கங்கள்

கல்வி முறையில் கல்விச் செயல்திட்டங்கள் மற்றும் அதனை செயல்படுத்தும் அமைப்புகள் அடங்கியுள்ளன. கல்விச் செயல் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிறுவன அளவில் ஆசிரியர், மாணவர் மற்றும் கற்பித்தல், கற்றல் செயல்பாடுகளைக் குறிப்பிடலாம். கீழ்க்காணும் சில நோக்கங்களை நிறைவேற்ற கல்வியில் ஆராய்ச்சி தேவைப்படுகிறது. கல்வி ஆராய்ச்சியின் நோக்கம், கல்வியின் சிறப்புத் தன்மைகளை உள்ளடக்கி அமையும்.

கல்வி ஆராய்ச்சியின் நோக்கங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். தீர்வு அடைதல், கருத்துக்களை மதிப்பிடல், சிறப்பறிவு பெறுதல், முற்கூறல், கோட்பாடுகளைச் சோதித்தல் என ஆராய்ச்சி சரிபார்க்கப்படுகிறது.

கல்விப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகள் காண்பது ஆராய்ச்சிகளால் மட்டுமே முடியும். சிக்கலை அறிந்து, காரணங்களை ஆராய்ந்து, விவரங்களைச் சேகரித்து, பகுத்து ஆய்ந்து, சிக்கலுக்குரிய தீர்வை அடைதல் ஆராய்ச்சியின் நோக்கம் ஆகும். தீர்வைத் தராத ஆராய்ச்சி பயனற்றது.

கல்வி உலகின் கருத்துக்களை மதிப்பிடுதல் கல்வி ஆராய்ச்சியின் நோக்கமாகும். மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப கருத்துக்களில் மாற்றம் தேவைப்படும். அவை ஆராய்ச்சி முறைப்படி அணுகி முடிவுகளைக் கூறுகின்றன. பழையன கழிதலும் புதியன புகுத்தலும் எந்த அளவுக்கு ஏற்புடையது என்பதை முடிவு செய்யவும் ஆராய்ச்சி பயன்படுகிறது. முன்பே உள்ள அறிவையும் சேர்த்து புத்தறிவை, சிறப்பு அறிவைத் தர ஆய்வு துணைபுரிகிறது. எனவே சிறப்பு அறிவு பெறுதல் கல்வி ஆராய்ச்சியின் நோக்கமாக அமைகிறது.

கல்வியின் கூறுகளில் ஏதேனும் ஒன்றின் வரலாற்று வளர்ச்சி ஆகியவற்றை ஆராயவும் பயன்படுகிறது. இவற்றின் கடந்தகால, நிகழ்கால விவரங்களின் அடிப்படையில் எதிர்காலம் பற்றிய கல்வி நிலைகளை அறிய முடியும். எனவே எதிர்கால நிலையைக் கணித்து முன்கூட்டியே கூறுதல் கல்வி ஆராய்ச்சியின் நோக்கங்களில் ஒன்றாகிறது. புதிய கோட்பாடுகளை உருவாக்க ஆராய்ச்சி பயன்படுகிறது. கோட்பாடுகளைச் சரிபார்க்கவும் ஆராய்ச்சி பயன்படுகிறது. கோட்பாடுகளின் காரண - காரிய உறவுகளைச் சோதித்து சரிபார்க்க ஆராய்ச்சி தேவைப்படுகிறது. கல்வி ஆராய்ச்சியின் வரம்பு அல்லது எல்லை மிகவும் விரிவானது. கல்வியுடன் தொடர்புடைய அனைத்துப் பகுதிகளும் மற்றும் அம்சங்களும் இதில் அடங்கும். ஆசிரியர் தொடர்பானவை, மாணவர் தொடர்பானவை, கலைத்திட்டம் தொடர்பானவை, கல்வி நிலையங்கள் தொடர்பானவை, நிர்வாகம் தொடர்பானவை என இவை அடங்கும்.

ஆசிரியர் முன்பயிற்சி, பணியிடைப் பயிற்சி, வகுப்பறை மேலாண்மை, கற்பித்தல் திறன்கள், தொழில் புலமை, தொழிலில் நாட்டம், ஆளுமைப் பண்புகள், தலைமையேற்புப் பாணி, கற்பித்தல் முறைகள் மற்றும் யுத்திகள், ஆசிரியர் பிரச்சினைகள் போன்றவை. மாணவர் கற்றல், கற்றல் பாணி, கற்றல் தொடர்பான காரணிகள், உளவியல் பண்புகள், கற்றல் இடர்பாடுகள், கற்றல் அடைவு, கற்றல் நிறைகுறைகள், படிக்கும் பழக்கவழக்கம், ஆசிரியர் மாணவர் உறவு, மாணவர் உறவு போன்றவை. கலைத்திட்ட வடிவமைப்பு, கலைத் திட்டம் செயல்படுத்துதல், கற்பித்தல் மாதிரிகள், கற்பித்தல் உபகரணங்கள், மதிப்பீட்டு முறைகள், உளவியில் சோதனைகள், சோதனைகள் தரப்படுத்துதல், பருவத் திட்டம், பருவம் இல்லா திட்டம், கல்வித் தத்துவங்கள், இயலா நிலையில் உள்ளவர்களுக்கான கல்வித் திட்டங்கள் போன்றவை.

அடிப்படை வசதிகள், நூலகம், ஆய்வகம், விளையாட்டு வசதிகள் இடவசதி, பாதுகாப்பு முறைகள், உடல் நல திட்டங்கள் போன்றவை. தணிக்கை மேற்பார்வையிடல் நிறுவனச் சூழல், தலைமை ஏற்கும் பாணி, ஒழுங்கு, கட்டுப்பாடு, நிதி நிலை விதிமுறைகள், கல்வி அறிக்கைகள், பரிசீலனைகள், கல்வித்திட்டங்கள், விளைவுகள் போன்றவை. கல்வியோடு தொடர்புடைய எந்தப் பகுதியும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படலாம் . நாம் தேர்வு

செய்யும் பிரச்சினை பொருத்தமானதாகவும், கல்வி மேம்பாடுகளுக்கு வழிவகுப்பதாகவும் அமைந்திட வேண்டும்.

கல்வியில் ஆய்வு தேவை

ஒரு நாட்டின் எதிர்காலம் அந்நாட்டின் நடைமுறையில் உள்ள கல்வி அமைப்பு முறையில் தான் அடங்கியுள்ளது என்பது அசைக்க முடியாத உண்மையாகும். கல்வி முறை சிறப்பாக செயல்படுத்த வேண்டுமெனில் கல்வி செயல்திட்டங்கள் தேவைக்கேற்பவும், காலத்தின் மாறுபாடுகளுக்கு ஏற்பவும் மாற்றியமைக்கப்பட வேண்டும். மாற்றியமைக்கப்படும் செயல்திட்டங்கள் சிறப்பாக நிறுவன அளவில் செயல்படுத்த வேண்டும். கல்விச் செயல்திட்டங்களை வகுப்பதிலும் அவற்றைச் செயல்படுத்துவதில் உள்ள பிரச்சனைகளுக்குக் கல்வி ஆராய்ச்சிகள் மூலம் தீர்வு காண முடியும்.

கல்வித் துறையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அறிவியல் முறையில் தீர்வு காணும் செயல் முறையே கல்வி ஆராய்ச்சி எனப்படும். கல்விச் செயல்முறையைச் சிறப்பாக புரிந்து கொள்வதற்காகவும் அதன் திறனை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முறையான முயற்சியை ஆராய்ச்சி குறிக்கிறது. கல்விப் பிரச்சினைகளை இது அறிவியல் முறையைப் பயன்படுத்தி ஆராய்கிறது. ஆராய்ச்சிக்குரிய இயல்புகளும் படிநிலைகளும் கல்வி ஆராய்ச்சிக்குப் பொருந்தும். இதுபோலவே ஆராய்ச்சியாளர் கூறிய பண்புகளும் கல்வி ஆராய்ச்சி அவருக்கும் பொருந்தும். ஆய்விற்கான தேவை யானது பின்வரும் காரணங்களை கொண்டுள்ளது.

கல்விசார் பிரச்சினைகளுக்குத் தீர்வினை கண்டறிய ஆராய்ச்சி தேவைப்படுகிறது. கண்டறிந்த தீர்வினை அறிவியல் பூர்வமாக சோதித்து அறிய ஆராய்ச்சி தேவைப்படுகிறது. பிரச்சினையின் தீர்வுக்கு பொருள் சார்ந்து விளக்கமளிக்க ஆராய்ச்சி தேவைப்படுகிறது. கல்வித்துறையில் பாடப்பொருள் கற்பித்தல் கற்றல் முறைகள் தேர்வுகள் ஆசிரியர்கள் மாணவர்கள் நிர்வாகம் போன்ற பல உறுப்புகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு சிக்கல் தோன்றிக் கொண்டேதான் உள்ளது. அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

கற்பித்தலில் பல உத்திகள் அவ்வப்போது தோன்றி வந்துள்ளன. அனைத்தையும் அப்படியே வைத்திருக்கவும் இல்லை. புதியனவற்றைத் தேடவும் இல்லை. காலப்போக்கில் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதிய உத்திகள் கையாளப்பட ஆய்வு தேவைப்படுகிறது. தொழில்நுட்ப வளர்ச்சி துரிதமாக வளர்ந்த வண்ணம் உள்ளது. அவர்களினால் கல்வியின் பல்வேறு கூறுகள் தாக்கம் புரிகின்றன. கற்பித்தல் பொறிகள் போன்றவை ஆசிரியருக்குப் பதிலாக செயல்படும்போது அதன் எல்லையைச் சுட்டிக்காட்டுவது ஆய்வாகத்தான் இருக்கும். தொலைக்காட்சி மூலம் உயர்கல்வி என்பது பற்றி இருவேறு கருத்துக்கள் உள்ளன இதில் எது உண்மை என்பதை அறிய ஆய்வு தேவை.

சமூக அறிவியல்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படுகின்றன. கல்வியில் அவைகளின் இசைவைப் பொருத்தித் தர ஆய்வுகள் பயன்படுகின்றன.

கல்வியில் புதிய கோட்பாடுகளை உருவாக்கவும் இருக்கின்ற கோட்பாடுகளின் உண்மையை மாறிய சூழலில் சரிபார்க்கவும் ஆய்வு தேவைப்படுகிறது. சமூகக் குறைபாடுகளை நீக்கி சமூக மாற்றத்தைத் தருவது கல்வி. இத்தகைய கல்வியின் மூலம் சமூக மறுமலர்ச்சியையும்

கல்வியில் சிறப்பு அறிவு பெறவும் கற்றல் சூழலை மேம்படுத்தவும் கற்றலுக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் கல்வியில் ஆய்வு தேவைப்படுகிறது.

ஆராய்ச்சிகளில் பிரச்சனை

கல்வியில் சிறப்பு அறிவு பெறவும், கற்றல் சூழலை மேம்படுத்தவும், கற்றலுக்கான வள வாய்ப்புகளைப் பயன் தரும் விதத்தில் பயன்படுத்தவும் கல்வியில் ஆராய்ச்சி தேவைப்படுகிறது. எந்த ஒரு துறையிலும் பிரச்சனைகள் உள்ளவரை ஆய்வின் தேவையும் தவிர்க்க முடியாதது ஆகும். கல்வித்துறையிலும் பிரச்சினைகள் தீர்ந்து விட்டன என்று எந்த ஒரு காலகட்டத்திலும் கூறமுடியாது. ஒரு பிரச்சினையை தீர்க்க, புதியதொரு பிரச்சனை முளைத்தெழுவது இயல்பு. அதற்குத் தீர்வு காணவேண்டியதும் அவசியம். ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல் ஆகும். ஆகவே பிரச்சனைகளைத் தெரிவு செய்வதில் மிகமிக கவனமாக ஆராய்ச்சியாளர் இருத்தல் வேண்டும். ஆராய்ச்சியைத் தொடங்கி முடிப்பதற்குச் செயல்முறைகள் உள்ளன. அவற்றையே ஆய்வு முறை என்கிறோம். கல்வி ஆய்வானது அறிவியல் அணுகுமுறை கொண்டு விளங்குவதால் இதன் செயல்முறைகள் குறிப்பிட்ட சில படிநிலைகளைக் கொண்டு அமைகின்றன. ஆராய்ச்சிக்குரிய பிரச்சனையைத் தேர்ந்தெடுப்பது ஆராய்ச்சி பிரச்சினையை சொற்களால் குறித்தல் கருதுகோள்களை உருவாக்கி இலக்கியங்களை கற்றல் ஆராய்ச்சிக் கருவிகள் மாதிரி கூறுகளை எடுத்தாளல், ஒரு விவரங்களை சேகரித்தல் முடிவுகளும் பொதுமக்களும் ஆகிய படிநிலைகள் காணப்படுகின்றன.

ஆராய்ச்சிக்குரிய பிரச்சினையைத் தேர்ந்தெடுப்பது ஆராய்ச்சியின் முதல் படியாகும். சரியான தலைப்பை எடுத்துக் கொண்டால் ஆராய்ச்சி சிக்கலின்றிச் செல்லும் எனலாம். ஆராய்ச்சித் தலைப்பு புதுமையும் வாழ்க்கைப் பயனும் உடையதும், சார்பிலக்கியம் கொண்டதும், ஆராய்ச்சிக் கருவி பயன்பாடு நிலை உடையதுமாக இருத்தல் சிறப்பு. அத்தகைய நிலையில் ஆராய்ச்சித் தலைப்பு அமைந்திட அதன் தோற்றுவாய்களைப் பொறுமையாக பரிசீலித்தல் அவசியம்.

ஆராய்ச்சித் தலைப்பைத் தெரிவு செய்து விட்டால் மட்டும் போதாது. அதனைத் தக்க சொல் கொண்டு குறிப்பிடவும் வேண்டும். தலைப்பைக் குறிப்பிட பயன்படுத்தும் சொற்கள் எளிமையாகவும் திட்டவட்டமான பொருளை உடையனவாகவும் இருத்தல் வேண்டும். தலைப்பைச் சரியாகக் குறிப்பிட்டு விட்டால் ஆராய்ச்சியின் பாதிச்சுமை இறங்கி விட்டதாகப் பொருள்.

அறிவியல் முறையில் கருதுகோளின் இடம் மிக முக்கியமானது. கருதுகோள் என்பது தீர்வு கருதிய அனுமானம். அனுமானங்கள் எனக் கூறுவதால் பின்னர் அந்த அனுமானத்தைத் தள்ளுபடி செய்யவோ அல்லது ஒத்துக் கொள்ளவோ, தள்ளவோ, கொள்ளவோ செய்ய வாய்ப்புள்ளது என்று பொருள். சில உண்மைகளைக் கண்டறிய சில தற்காலிகமான முடிவுகளை மேற்கொள்ளலாம் .அம் முடிவுகளின் உண்மைநிலை சோதனைக்கு உரியது. சோதனை முடிவுகளின் அடிப்படையில் முன்பு எடுக்கப்பட்ட முடிவுகள் ஒத்துக் கொள்ளவோ, அல்லது தள்ளுபடி செய்யவோ இருக்கலாம். இக்கருதுகோள் ஆய்வை நேர் வழியில் இட்டுச் செல்ல துணைபுரியும் எனலாம். தற்போது ஆய்வு என்பதே கருதுகோளைச் சோதிப்பது தான் என்று அர்த்தம். கருதுகோளை உருவாக்கும் போது தகுந்த கவனம் தேவை. எதை வேண்டுமானாலும் ஊகித்துக் கொள்ளல் என்பது தவறு. நூல்கள், கட்டுரைகள், ஆராய்ச்சிவுரைகள் போன்றவற்றை ஆழ்ந்து படிப்பதன் மூலமே ஒன்றின் விளைவுக்குரிய

காரணிகள் எவை? என்று அறிய முடியும் .அந்த அடிப்படையில்தான் கருதுகோளை அமைக்க முடியும்.

ஆராய்ச்சிக்கு நேர்முக மறைமுக தொடர்புடைய அனைத்து அடிப்படைக் கூறுகளையும், ஆதாரங்களையும் தருகின்ற ஆய்வுரைகள், ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், இதழ்கள் போன்ற அனைததும் சார்பிலக்கியங்கள் எனப்படும். வளர்ச்சி பெற்று வந்துள்ள அறிவே வரவிருக்கும் புதுமை வெளிப்பாட்டிற்கு உதவும். அதற்கு ஏற்ப ஆராய்ச்சியை மேற்கொள்ளும் ஒருவர் இதுவரை அத்துறையில் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சி வளர்ச்சியை அறிய வேண்டும். அதற்கு சார்பு இலக்கியங்களைக் கற்க வேண்டும் என்பது ஆராய்ச்சி முறையில் ஒரு முக்கிய படிநிலை ஆகும்.

ஆராய்ச்சி முறையையும் ஆராய்ச்சிக் கருவிகளையும் திட்டமிடல் அடுத்த முக்கிய படிநிலை ஆகும். ஆராய்ச்சிக்குரிய விவரங்களை எப்படி சேகரிப்பது எத்தகைய ஆராய்ச்சிக் கருவிகளைப் பயன்படுத்துவது என்பவற்றை முன்கூட்டியே திட்டமிட வேண்டும். மாதிரிக் கூறுகளைச் சமவாய்ப்புக் கூறு எடுத்தல் முறையில் தேர்வு செய்வதால் ஆராய்ச்சி முடிவுகள் நம்பகம் பெறும். கூறுகளின் எண்ணிக்கை மிகக் குறைந்தோ கூடியோ இருத்தல் கூடாது. காலம், செலவு விவரங்களைப் பெறுவதில் ஒத்துழைப்பு, ஆய்வு பரப்பு, ஆராய்ச்சித் தலைப்பின் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாதிரிக் கூறுகளை முடிவு செய்ய வேண்டும்.

புள்ளி விவரங்களே ஆராய்ச்சிக்கு அடிப்படை. விவரங்கள் முதல் நிலை விவரங்கள், இரண்டாம் நிலை விவரங்கள் என இருவகைப்படும். முதல்நிலை விவரங்கள் நேரடியாக ஆராய்ச்சியாளர் சேகரிப்பது. இரண்டாம் நிலை விவரங்கள் தயார் நிலையில் வெளியீடுகள், செய்தித்தாள்கள், கோப்புகள் போன்றவற்றிலிருந்து கிடைப்பவை. ஆராய்ச்சிக்கு எது தேவை என்பதைத் தீர்மானித்து அதன்படி சேகரிக்க வேண்டும். சேகரிக்கப்பட்ட விவரங்கள் மூலப் பொருளுக்குச் சமமானவை. அவற்றை வகைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, பிரித்து எழுதி அட்டவணை வடிவில் அமைக்க வேண்டும். அதன்பின் தக்க ஆராய்ச்சிக் கருவிகளைப் பயன்படுத்தி பகுத்து ஆய்வு செய்தல் வேண்டும். புள்ளியியல் முறைகளும் கணிப்பொறிகளும் இதற்குப் பயன்படும். பகுப்பாய்வில் இருந்து கிடைத்த முடிவுகளைப் பொருள் வடிவாக்குதல் இப்படி நிலையில் இறுதி கட்டமாகும் . எடுத்துக்காட்டாக, ஒரு வகுப்பு மாணவர்கள் இரு பாடங்கள் (தமிழிலும், அறிவியலிலும்) எடுத்த மதிப்பெண்களின் தர உறவுக் கெழு r-0.80 என வந்தால் அதை மட்டும் அப்படியே குறிப்பிட்டால் போதாது. அதிலிருந்து அறியப்படும் கருத்தை வாக்கியத்தில் அமைத்து தர வேண்டும்.

கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் கருதுகோள்களை ஏற்றுக்கொள்ளுதலும், நிராகரித்தலும் ஆய்வு முறையின் இறுதிப் படிநிலை எனலாம். கொள்ளப்படும் கருதுகோள் பொதுமை ஆகிறது. மாதிரிக் கூறுகளை ஆராய்ந்ததில் இருந்து கிடைத்த உண்மைகளைக் கொண்டு பொது விதிகளை அமைத்தல் வேண்டும். அதுவே பொதுமைகளை உருவாக்குதல் எனப்படும்.

கல்வி ஆராய்ச்சிக்கான அணுகுமுறை

தடங்களை உணர்தல், பிரச்சினையை இனம்கண்டு வரையறுத்தல், கருதுகோள்கள், கருதுகோள் வழி ஏற்படும் பின்விளைவுகளை ஊகித்தல், கருதுகோள்களைப் பரிசோதித்து சரிபார்த்தல், எனப் பின்வரும் ஆராய்ச்சியின் அணுகுமுறைகள் உள்ளன. சில தடங்கள், அனுபவங்கள், புரிந்துகொள்ள இயலாத புதிர்கள் ஆகியவற்றை ஓர் ஆராய்ச்சியாளர்

எதிர்நோக்கக் கூடும். அப்போது அவர் விரும்புகிற முடிவை நிறைவேற்றிக் கொள்ளும் வழிவகை அற்றவராகவோ, அல்லது பொருளின் இயல்பை அடையாளம் காண்பதில் இன்னல்களை உணர்பவர் ஆகவோ, ஒரு எதிர்பாராத நிகழ்ச்சியை விளக்க முடியாதவராகவோ இருக்கலாம். இந்த இன்னலைக் கண்டுகொண்டு விலகி அதை சிக்கல் கூற்றாக வடிவமைக்க வேண்டும். இதற்காக அவர் சிக்கல்களைக் கூர்ந்து கவனித்து விவரங்கள் திரட்டி, எதிர்கொண்ட இன்னலை விளக்கி தமது ஆராய்ச்சித் தலைப்பைத் தெளிவுபெறப் பகிர்ந்துகொள்கிறார்

அவர் எதிர்கொண்ட சிக்கலை நுண் அறிவோடு கூடி ஊகங்களோடு தீர்வு காண்பதற்கான கருத்துக்களை கூறுகிறார். இதற்கான காரணங்கள் பற்றி ஊகங்கள் கருதுகோள்கள் எனப்படும் இவ்வாறு உருவாக்கப்பட்ட கருதுகோள் பகுத்தறிதல் சிந்தனை சார்ந்தவை. ஒரு கருதுகோள் உண்மையானால் ஒரு குறிப்பிட்ட விளைவு பின்விளைவாக இருக்கும். எடுத்துக்காட்டாக பள்ளிக்கு வருகை குறைவு மாணவர்களின் தேர்ச்சியைக் குறைக்கும்.

ஒவ்வொரு கருதுகோளையும், பரிசோதனை முறையில் சரிபார்க்க ஏற்றவாறு உற்றுநோக்கல்களைக் கையாண்டு கருதுகோள்களைச் சோதிக்க முடியும். அதாவது உற்றுநோக்கிப் பெற்ற தகவல்கள் மூலம் கிடைத்த ஆதாரங்களோடு எந்த அளவு விளைவு பொருந்துவனவாக உள்ளன என்பதை அறிய முடியும். வலுவான ஏற்ற ஆதாரங்களின் அடிப்படையில்தான் கருதுகோள்கள் இயக்கப்படுகின்றன அல்லது ஒதுக்கப்படுகின்றன.

சிறந்த ஆராய்ச்சியாளர் குணநலன்கள்

ஆய்விற்கான நோக்கமானது தெளிவாக வரையறுக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆய்வின் முறையானது தெளிவாக வரையறுக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆய்வினை மேற்கொள்ளும் முறை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் ஒரு காலத்தில் இதே பகுதியில் ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கு இது பேருதவியாக அமையும். ஆய்விற்கான புள்ளிவிவரங்கள் சரியாகவும், உண்மையாகவும் சேகரிக்கப்பட்டு இருக்க வேண்டும். புள்ளிவிவரங்களைப் பகுப்பாய்வு செய்யும்போது, அதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். பகுப்பாய்வில் தேவையான புள்ளியியல் விவரங்களைப் பயன்படுத்த வேண்டும். ஆய்வில் ஏற்படைமை மற்றும் நம்பகத்தன்மை சரியான விதத்தில் அமையும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ஆய்விற்கான முடிவானது, உண்மையாகவும் பொருள் சார்ந்தும் அமையும்படி இருத்தல் மிகவும் அவசியமாகும்.

சிறந்த ஆராய்ச்சியின் தகுதிகள்

சிறந்த ஆய்வானது முறைப்படுத்தப்பட்டது. சிறந்த ஆய்வானது தர்க்கரீதியானது. சிறந்த ஆய்வானது உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. சிறந்த ஆய்வானது மதிப்பீட்டிற்கும் கருத்தொற்றுமைக்கும் உட்பட்டது.

கீழ்க்கண்ட பண்புகளை ஆராய்ச்சியாளர்கள் பெற்று இருத்தல் மிகவும் அவசியம். அறிவியல் மனப்பான்மையைப் பெற்றிருத்தல், எச்சரிக்கை, கற்பனை வளம் மற்றும் நன்கு புரிந்து கொள்ளும் தன்மையைப் பெற்றிருத்தல், உண்மையைத் தேடும் விருப்பம் கொண்டவராக இருத்தல். சீக்கிரம் புரிந்து கொள்ளும் தன்மையைக் கொண்டிருத்தல். பொறுமையும், சேகரித்த செய்திகளை மனதில் நிறுத்திக் கொள்ளும் திறமையை பெற்றிருத்தல் வேண்டும். மேற்கூறிய பண்புகளை ஆராய்ச்சியாளர்கள் பெற்றிருந்தால் தான் ஆராய்ச்சியை நல்ல முறையில் சிறப்பாக மற்றும் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் நடத்த முடியும்.

சான்றெண் விளக்கம்

1. மீனாட்சி சுந்தரம்.அ (2010) கல்வியில் ஆராய்ச்சி, காவ்யமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல். ப.1
2. மீனாட்சி சுந்தரம்.அ (2010) கல்வியில் தத்துவமும் சமுதாயமும், காவ்யமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல். ப.5
3. மீனாட்சி சுந்தரம்.அ (2010) கல்வியில் தத்துவமும் சமுதாயமும், காவ்யமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல். ப.7
4. மீனாட்சி சுந்தரம்.அ (2010) கல்வியில் ஆராய்ச்சி, காவியமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல், ப.2
5. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி 1 : ப.236.
6. பேராசிரியர், தொல்காப்பியம் ,சொல்லதிகாரம், .330.
7. மு.வ , திருக்குறள் உரை, 792.
8. பேராசிரியர்,தொல்காப்பியம், பொருளதிகாரம், 582.

****

அகநானூற்றில் தலைவனின் பரத்தமை ஒழுக்கம் - உளவியல் நோக்கும் தீர்வும் Aganaanootril Thalaivanin Parathamai Ozhukkam – Ulaviyal Nokum Thirvum

ரா. வனிதா | R. Vanitha

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசுக்கல்லூரி, மூணாறு - 658612. கேரளா
vanitharoni@gmail.com, 9092391122

ஆய்வுச்சுருக்கம்

"இனிமையும் நீர்மையும் தமிழென லாகும்" – (பிங்கல நிகண்டு, பாகம்-4, சூத்திரம் 3610)

என்று புகழப்படும் தமிழ்மொழிக்குப் பெருமை சேர்ப்பது தமிழர்களின் படைப்பேயாகும். அதிலும், தமிழெனப்படுவது சங்கத்தமிழே (சங்க இலக்கியம்) என்பது தமிழ் மந்திரம். இச்சங்கத்தமிழானது (சங்க இலக்கியம்) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்கள் வாழ்வையும் மனப்பண்புகளையும் நோக்கியதாக அமைக்கப்பட்ட ஒரு பெருங்கடல் எனலாம். உளவியல் என்பது அண்மையில் தோன்றிய ஒரு புதுக்கடல் எனலாம். இவ்விரு கடல்களும் சங்கமிக்கும் வகையில், சங்கப்பாடல்களின் கவிதை உணர்வையும், உளவியல் கருத்தையும் (ஏற்புடைய வகையில்) இணைத்துக் காணும் பாங்கில், சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானுற்றின் மருதத்திணையில் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தினை உளவியல் அடிப்படையில் ஆராயவுள்ளது இக்கட்டுரை.

ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்கள், தோல்விகள், போராட்டங்கள் அவர்களின் உள்ளத்தைப் பாதிக்கின்றன. அதனோடு உள்ளத்தின் நடுநிலை அமைதியையும் குலைக்கின்றன. இந்நிலையில் உள்ளம் தன்னைத்தானே பாதுகாக்கச் சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எத்தகைய இடர்ப்பாடுகள் நேரிடினும் அத்தகைய சூழ்நிலைகளில் உள்ளத்தின் வீழ்ச்சியை உள்ளத்தின் போக்கே தடுத்து நிறுத்த வேண்டும் அல்லது பிறரின் அறிவுரையை ஏற்றுத் தன் வாழ்க்கையைச்

சரிப்படுத்த வேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் தலைவனின் நடத்தைப் போக்கும், தலைவியின் உள, தற்காப்பு இயங்குமுறையும் அமைந்திருப்பதால், உளவியல் நோக்கில் ஆராய்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்னும் காரணத்தால் அகநானூறு மருதத்திணைப் பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

Abstract

It is the work of the Tamils to add pride to our Tamil language which is hailed as "sweet and fluid Tamil". After all, what is called Tamil is Sangath Tamil (Sangam literature) is the Tamil mantra. This Sangam Tamil (Sangam literature) is an ocean set towards the life and attitudes of the people two thousand years ago. Psychology is the recent emergence of a new ocean of intelligence. As the two seas converge, I seek to explore, from a psychological point of view, the psychological basis of the leader's prostitution in the medical field of one of the Sangam literatures, in a way that combines (appropriately) the poetic sense and psychological concept of the Sangam songs. The disappointments, failures, and struggles that each person experiences in his or her life affect their psyche, as well as the neutral peace of the soul. In this case, the soul must make some effort to protect itself. I have selected over a hundred medical songs because they are an opportunity to explore psychologically, as the leader's behavioral mechanism is such that the leader's behavior is such that he or she must stop the downfall of the soul in such situations directly or by accepting the advice of others and adjusting his or her life.

திறவுச்சொற்கள் (Keywords): பரத்தமை ஒழுக்கம், கற்பு வாழ்வு, பரத்தையிற் பிரிவு, அலர், புனல் ஆட்டம், பரத்தையர் இல்லம், வாயில் மறுத்தல், Prostitution, Chastity, Prostitution Detachment, Alarm, Funnel Dance, Whorehouse, Denial of mouth

முன்னுரை

இலக்கியம் அவ்வக்காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் ஒரு கருவியாகப் பயன்படுகிறது. அதில் சங்க இலக்கியங்கள் கற்பனையும், கனவும், பொய்யும், புனைவும் அற்ற தமிழ்ச் சமுதாயத்தை உள்ளது உள்ளபடியே காட்டும் படிமக் கலங்கள் – கண்ணாடிகள் என்றும் சான்றோர் பெருமக்கள் கூறியுள்ளனர். சங்கஇலக்கியத்தில் தமிழ்ச் சமுதாய வாழ்வியல் நிகழ்வுகளின் மத்தியில் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தால் உண்டான உளவியல் நிலைப்பாடுகளை அகநானூற்று மருதத்திணை எவ்வாறு எடுத்துரைக்கிறது என்பதை ஆராய்ந்து தொகுத்து, கற்றல் கற்பித்தல் நோக்கில் காணும் வகையில் இக்கட்டுரை அமைக்கப்படுகிறது.

ஆய்வுநோக்கம்

ஆண்களின் பரத்தமை ஒழுக்கம் அக்காலத்துச் சமூகத்தில் மட்டுமல்ல இக்காலத்துச் சமூகத்திலும் குடும்ப வாழ்க்கையைப் பாதிக்கும் ஒன்றாக அமைந்து விடுகிறது. ஆண்களுக்குப் பரத்தமை ஒழுக்கம் வெறும் உடல் சார்ந்த ஒன்று என நினைக்கின்றனர். ஆனால் அது குடும்ப வாழ்வில் முக்கிய உறுப்பினர்களின் மனவுணர்வுகளைப் பாதிக்கும் ஒன்றாக இருக்கிறது என்பதை உணர மறந்துவிடுகின்றனர். ஆதலால், பரத்தமை ஒழுக்கத்தால் தலைவன்-தலைவிக்கு இடையே உண்டாகும் மனவுணர்வுகளை உளவியல் கூறுகளோடு உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆய்வு அணுகுமுறை

அகநானூற்று மருதத்திணையில் அமைந்துள்ள பாடல்கள் மூலம் பரத்தமை ஒழுக்கத்தை விளக்கும் வகையில் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறையும், மனவுணர்வுகளின் பதிவுகளை உளவியல் நோக்கில் ஆராயும் வகையில் உளவியல் அணுகுமுறையும் இக்கட்டுரையில் பயன்படுத்தப்படுகிறது.

ஆய்வுச்சிக்கல்

பரத்தமை ஒழுக்கத்தால் குடும்பங்களில் பல்வேறு முரண்பாடுகளும், சிக்கல்களும் உருவாகின்றன. எனவே வெறும் புறத்தோற்றத்தின் அழகும், இன்பம் அனுபவிக்கும் எண்ணமும் கொண்ட தலைவனும் சரி, தலைவன் மீதான வெறுப்புணர்ச்சியைக் கடமை உணர்ச்சியாக உயர்வாக்கம் செய்யும் தலைவியும் சரி பரத்தமை ஒழுக்கத்தால் சிதைந்திருக்கும் குடும்பத்தின் மகிழ்ச்சியை எத்தகைய இயங்குமுறைகளால், எவ்வாறு மீட்டெடுக்கின்றனர் என்பது இந்த ஆய்வுக்குரிய சிக்கலாக அமைகிறது.

ஆய்வுப்பகுப்பு

அகநானூற்றில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து திணைகள் அமைந்துள்ளன. இதில் மருதத்திணைப் பாடல்கள் மட்டும் பரத்தமை ஒழுக்கத்தை மையப்படுத்தி உளப்போக்கினை வெளிப்படுத்துபவையாக அமைந்திருக்கின்றன. ஆதலால், மருதத்திணைப் பாடல்களில் அமைந்துள்ள செய்திகளின் அடிப்படைகளைத் தொகுத்து இவ்வாய்வினை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை,

1. தலைவனின் பரத்தமை ஒழுக்கம்

1.1 கற்புவாழ்வில் பரத்தை
1.2 தலைவனுக்கும் தலைவிக்கும் உண்டாகும் விரிசல்
1.3 தலைவனின் நாட்டமும் காம மிகுதியும்
1.4 தலைவனின் மணவிருப்பமும் புதல்வனால் மனமாற்றமும்
1.5 தலைவன் பரத்தையிடம் மாறுபாடு காட்டல்

2. தலைவியினது மனவுணர்வுகளின் உளவியல் போக்கு

2.1 தலைவி தலைவனுக்கு வாயில்மறுத்தல்
2.2 தலைவி தலைவனைப் புலத்தல்
2.3 தலைவி பரத்தையை ஏற்றல்
2.4 தோழி அறிவுரை பகர்தல்

1. தலைவனின் பரத்தமை ஒழுக்கம்

1.1 கற்புவாழ்வில் பரத்தை

வரையறுத்துக் கொண்ட ஒழுக்கம் இல்லாதவராய், பரந்துபட்ட ஒழுக்கம் உடையவராய் வாழ்பவரை உணர்த்துவதாகப் பரத்தை என்னும் சொல் அமைந்துள்ளது. அதை

"பரத்தையர் யாரெனின் அவர் ஆடலும்
பாடலும் வல்லராகி அழகும் இளமையும்
காட்டி இன்பமும் பொருளும் வெஃகி
ஒருவர் மாட்டும் தங்காதார்" (தொல். இளம்பூரணர் உரை. பக்.115)

என்ற இளம்பூரணர் கூற்றால் அறியலாம்.

"பரத்தை' என்ற சொல் மூன்று நிலைகளில் பொருள்கொள்ள வாய்ப்பு நல்குகிறது. அவை 1.முறையற்ற உடலுறவு 2.பொருட்பயன் 3.அன்பின்மை என்பனவாகும்". (tamil parks. 50 webs.com ஆன்லைனில் உள்ளது. "அகநானூறு காட்டும் பரத்தை" **இரா.குமார் உதவிப்பேராசிரியர், அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி,** http://tamilparks.50webs.com)

தம் உடம்பை ஆடவர்க்கு விற்கும் பெண்களைப் பரத்தை, விபச்சாரி, விலைமகள், பொதுமகளிர், வரைவின் மகளிர், பொருட்பெண்டிர், வேசி, தாசி, கற்பற்றார் எனப் பல பதங்களால் அழைப்பர். (பதிவுகள், ஆன்லைனில் உள்ளது. நூணவிலூர் கா. விசயரத்தினம் 02.07.2017 "பழந்தமிழ் நூல்களில் பரத்தமை" ஆன்லைன் வலைதளத்திலிருந்து பெறப்பட்டது. https://geotamil.com)

மேலும் தொல்காப்பியத்தில், களவில் கூற்று நிகழ்த்துவோர், கற்பில் கூற்று நிகழ்த்துவோர் என்று காட்டப்படுகிறது. இதில் கற்பில் கூற்று நிகழ்த்துவோராக,

"பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதரு சிறப்பிற் பார்ப்பான் முதலா" (தொல். செய்யுளியல் நூற்பா - 182)

என்னும் நூற்பாச் சுட்டுகிறது. இப்பட்டியலில், கற்புவாழ்வில் கூற்று நிகழ்த்துவோரில் ஒருவராகப் பரத்தையும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். கற்புவாழ்வில் தொடங்கும் தலைவனின் பரத்தமை ஒழுக்கம் சங்க இலக்கியத்தில் பரவலான பழக்கமாக இடம்பெறுகிறது. இப்பரத்தமை ஒழுக்கத்தால் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லவும் செய்கிறான். ஒரே ஊரில் இருந்துகொண்டு பிற இல்லத்துக்குச் சென்று தலைவியைப் பிரிவதாக இப்பரத்தையிற்பிரிவு அமைந்திருப்பது கற்புவாழ்வின் கொடுமையை எடுத்துரைக்கிறது. இதனை,

ஒரூர் வாழினும் சேரி வாரார்
சேரி வரினும் ஆர முயங்கார் (குறுந். 231. 1-2)

என்னும் தலைவியின் புலம்பலால் அறியலாம்.

உளவியல் நோக்கும் தீர்வும்

உளவியல் நோக்கில், காணும்போது அக்காலம் தொட்டு இக்காலம் வரை ஆண் என்பவன் தன் மனைவி கற்புடையவளாக இருக்க வேண்டும் என விரும்புகின்றான். ஆனால் அவ்வாறு தானும் தன் மனைவிக்குக் கற்புடையவனாக விளங்க வேண்டும் என்று (ஆண்களில் சிலர்) கருதுவதில்லை. உளவியல் சார்ந்து இப்பிரச்சனைனையத் தீர்க்க

வேண்டுமெனில், ஒவ்வோர் ஆணும் திருமணத்திற்குப் பிறகு பரத்தமை நாடா ஆண்களாக இருப்பது மட்டுமன்றி, கற்புடையவராக விளங்கவும் முயற்சிக்க வேண்டும்.

தலைவனுக்கும் தலைவிக்கும் உண்டாகும் விரிசல்

கற்புவாழ்வில் இல்லறத்தை இனிது நடத்திய தலைவனும், தலைவியும் அழகான ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கின்றனர். தலைவி குழந்தையைப் பெற்றெடுத்த பின்பு, களவுகாலத்து தலைவியிடம் இருந்த வனப்புச் சற்றுக் குறைந்துவிட்டதோ எனத் தலைவன் கருதத் தொடங்கியதன் விளைவாகவும் இருக்கலாம். தலைவனது பரத்தைவயிற் பிரிவு இந்த நிலையில் தலைவியைக் காணாது, பரத்தையிடம் சென்று வந்த தலைவனோ,

"ஆக வன முலை அரும்பிய சுணங்கின்
மாசு இல் கற்பின் புதல்வன் தாய்" (அகம்- 6,12-13)

என்னும்படி, மாசில்லா கற்பினை உடையவளே, என் புதல்வன் தாயே என்றெல்லாம் புகழ்கிறான். அவனது பொய்யான புகழுரைகளுக்கானக் காரணத்தை ஒருவாறு உணர்ந்த நிலையில், தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை அறிகின்றாள் தலைவி. அதனால் தலைவன் கூறும் புகழ்மொழிகளை வெறுக்கிறாள்.

"மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றிஎம்
முதுமை எள்ளல், அஃது அமைக்கும் தில்ல!" (அகம்- 6,14-15)

மேலும், உனது வஞ்சனையுடைய பொய்யான வார்த்தைகளையெல்லாம் கூறி, எனது முதுமையை எள்ளல் செய்யும்படி இகழாதே! எனக் கோபமும் கொள்கிறாள்.

"பல்வேல் மத்தி, கழாஅர் அன்னஎம்
இளமை சென்று தவத் தொல்லஃதே
இனிமை எவன் செய்வது, பொய்மொழி, எமக்கே!" (அகம் - 6,20-22)

இதுமட்டுமல்லாது, எமது இளமையும் கழிந்து மிகப் பழமையாயிற்று, இனி உன் பொய்ம்மொழி எனக்கு எந்த வகையிலும் இனிமை செய்யாது என்று தலைவி கூறுகிறாள். மேலும்,

"புல்உளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுகர் நின்இன்று உறைய" (அகம் 176,19-20)

உனக்கான நுமது புதல்வரைப் பெற்று வளர்த்தும், இல்லறக் கடமைகளை வீட்டில் தனித்து இருந்து செய்யும் நிலையையும் எனக்குக் கொடுத்து பரத்தைவயிற் செல்வது உனக்குத் தகுதியான செயல்தானோ? எனக் கூறுமிடத்து, தலைவனுக்கும் தலைவிக்குமான விரிசல் விதைக்கப்படுகிறது.

உளவியல் நோக்கும் தீர்வும்

திருமணத்திற்குப் பிறகு ஆண் பெண் இருவரும் குடும்பத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் பொறுப்புடையோர் ஆவார். ஆனால், மருதநிலத் தலைவனின் பரத்தைவயிற் பிரிவால் அனைத்தையும் தலைவியே மேற்கொள்ள வேண்டிய சூழலில்

தள்ளப்படுவது, தலைவியின் மனநிலையைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்குகிறது. தலைவிக்குத் தனது அன்புடையாரின் புறக்கணிப்பு, அன்புடையாரின் மதிப்பழிவு பற்றிய அச்சம், செயல்பட இயலாத சினம் எனப் பல்வேறு உணர்வுச் சிக்கல்கள் முரண்பட்டு மோதுகின்றன. உளவியல் பிரச்சனைகள் என்று பார்க்கும்போது அது பலவிதங்களில் அமைகின்றது. அதிலும் தனிமைச் சூழலால் வருகிற பிரச்சனைக்குத் தன் அன்புக்குரியவர்களின் அரவணைப்பு, சரியான நேரத்தில் ஆறுதல் கூறல் என்பது மிக அவசியமாகும். தலைவிக்கு உளவியல்சார் தீர்வு காண வேண்டுமெனில், தலைவன் பரத்தமை ஒழுக்கத்தை விடுத்துத் தலைவியை அரவணைப்புடன் பார்த்துக் கொள்வதே சிறந்த வழியாகும். எனவே இன்றைய இளைய சமுதாயத்தினருக்குப் பரத்தமை ஒழுக்கத்தால் உண்டாகும் பாதிப்புப் பற்றிய படிப்பினைக் கற்பிக்கும்போது எதிர்காலத்தில் குடும்பச்சிக்கல் இல்லாமல் பாதுகாக்க அது வழிவகுக்கும்.

1.2 தலைவனின் நாட்டமும் காம மிகுதியும்

தலைவன் புதல்வரைப் பெற்ற பின்பும்கூடத் தலைவியைப் பிரிந்து பரத்தையை நாடிச் செல்லும் பரத்தமை ஒழுக்கத்தைக் கைக்கொண்டுள்ளான். இதனால் பழி உண்டாகுமோ என்னும் நிலையையும் கடந்து,

"குழைமாண் ஒள்இழை நீ வெய்யோளொடு" (அகம் 6-7)

"நறும்பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு" (அகம் 16-11)

"நிரைதார் மார்பன் பெருநல் ஒருத்தியோடு" (அகம் 66-7)

"தொடிஅணி முன்கை நீ வெய்யோளோடு" (அகம் 226-11)

"மைஎழில் உன்கண் மடந்தையொடு" (அகம் 256-10)

"நரந்தம் நாறும் குவை இருங்கூந்தல்
"இளந்துணை மகளிரொடு" (அகம் 266-4-5)

"அரிமதா் மழைக்கண் மாஅ யோளொடு" (அகம் 296-3)

"நலம்பெறு பணைத்தோள், நல்நுதல் அரிவையொடு" (அகம் 366-13)

என்றெல்லாம் உன்னால் விரும்பப்படும் பரத்தையிடம் மோகம் கொண்டு சுற்றத்துடன் கள்ளுண்டு மகிழ்ந்து, நம்முடைய இல்லத்திற்கு வாராது, உம்முடைய இல்லமாகவே கருதும் பரத்தையின் இல்லத்தையே நாடிச் சென்றீர். அதனால்,

"மகிழ்துணைச் சுற்றமொடு மட்டு மாந்தி
எம்மனை வாரா யாகி, முன்நாள்,
நும்முனைச் சேர்ந்த ஞான்றை, அம்மனைக்
குறுந்தொடி மடந்தை உவந்தனள்" (அகம்.346,15-18)

அந்தப் பரத்தையோ பெரிது மகிழ்ந்தாள். தலைவனது நாட்டம் முழுமையும், பரத்தையை நாடிச் செல்லும் பரத்தமை ஒழுக்கத்திலே அமைந்துவிடுகின்றது. அதாவது களவுக்

காலத்தில் தலைவிக்கு மிகுந்த அன்பினை வாரிவழங்கிய தலைவன், திருமணத்திற்குப் பிறகு தனது அன்பினை முழுமையாகப் பரத்தையிடம் காட்டி நிற்கின்றான் என்றும் இல்லத்திற்கு வராமல் பரத்தையின் இல்லத்திலேயே தங்கி விடுகின்றான் என்றும் வேதனையில் தவிக்கிறாள் தலைவி.

உளவியல் நோக்கும் தீர்வும்

"தனிமை ஒரு நோய், உள்ளும் புறமும் அரித்துக் கொண்டு போகும் பிணி. இது உள்ளத்தை உலுக்கும் ஒரு கொடிய அனுபவம்" என ஆர்.எம்.சோமசுந்தர், மனோதத்துவ மருத்துவம் (1981, பக்.102) எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அத்தனிமைச் சூழலைத் தலைவிக்குக் கொடுத்துப் பரத்தையின் இல்லத்தில் தங்குவதோடு, கள்ளுண்டும் களிக்கிறான் தலைவன். பரத்தமை ஒழுக்கமும், கள்ளும் என்ற இரண்டும் உறழும்போது உள்ள அழுத்தம் மிகுகின்றது. உள்ள அழுத்தம் மிகுவதற்கு உள்ளத்தின் விருப்பம், புறமுகத்தேவை என்னும் இரண்டின் இணைவே காரணமாக அமைகின்றது என்பது உளவியல் கருத்தாகும். எனவே, தலைவன் இவ்விரண்டையும் நீக்கும்போதே தலைவியின் தனிமை நிலையை உணரத் தலைப்படுகிறான், என்பதை எடுத்துக்காட்டி, ஆண்களின் வாழ்க்கையானது பாதிக்க மதுவும், மாதுவுமே காரணமாக அமைகின்றது, என்றும் அது குடும்ப வாழ்வினைச் சிதைத்துவிடும் என்றும் இன்றைய இளைய சமுதாயத்தினருக்குக் கற்பிக்கும் போது அது அவர்களின் வாழ்வை நல்வழிக்குக் கொண்டு செல்ல வழிவகுக்கும்.

1.3 தலைவனின் மணவிருப்பமும் புதல்வனால் மனமாற்றமும்

பரத்தைமை ஒழுக்கத்தில் ஈடுபாடு கொண்ட தலைவனே! மாலை போன்று தோன்றுகின்ற பூங்கொத்துக்களையும் குறுகிய அடிப்பகுதியையும் கொண்ட காஞ்சி மரத்தின் மலர்களினின்றும் உதிர்ந்த பூந்துகள் படிந்த கூந்தலையும் செவ்வரி படர்ந்த செருக்குற்ற குளிர்ந்த கண்களையும், மாமை நிறத்தினையும் உடைய பரத்தையுடன் நேற்று மணங்கமழும் சோலையில் துயில் கொண்டாயாய்,

"கோதை இணர, குறுங்கால் காஞ்சிப்
போதுஅவிழ் நறுந்தாது அணிந்த கூந்தல்
அரிமதர் மழைக்கண், மாஅ யோளொடு
பொருநையும் கமழ்பொழில் துஞ்சி" (அகம்.296, 1-4)

இதற்கு நீ சிறிதும் நாணம் கொள்ளாது,

"கழை நிலை பெறாஅக் காவிரி நீத்தம்,
குழை மாண் ஒள்இழை நீ வெய்யோளொடு,
வேழ வெண் புணை தழீஇ, பூழியர்
கயம் நாடு யானையின் முகன் அமர்ந்தாஅங்கு,
ஏந்து எழில் ஆகத்துப் பூந் தார் குழைய,
நெருநல் ஆடினை, புனலே," (அகம்,6,6-11)

என்றும்,

"நெடுவெண் மருதொடு வஞ்சி சாஅய,

விடியல் வந்த பெருநீர்க் காவிரி,
தொடி அணி முன்கை நீவெய் யோளொடு
முன்நாள் ஆடிய கவ்வை," (அகம்,226,9-12)

என்றும்,

"பெருநீர் வையை அவளொடு ஆடி" (அகம்,296,5)

என்றும்,

"மைஎழில் உண்கண் மடந்தையொடு வையை
ஏர்தரு புதுப்புனல் உரிதினின் நுகர்ந்து" (அகம் 256,10-11)

என்றும்,

"கோடுற நிவந்த நீடுஇரும் பரப்பின்
அந்திப் பராஅய புதுப்புனல், பொருநை,
மைந்துமலி களிற்றின் தலைப்புணை தழீஇ,
நரந்தம் நாறும் குவை இருங்கூந்தல்
இளந்துணை மகளிரொடு ஈர்அணிக் கலைஇ,
நீர் பெயர்ந்து ஆடிய ஏந்து எழில் மழைக்கண்
நோக்குதொறும் நோக்குதொறும் தவிர்விலை யாகி,
காமம்கைம்மிகச் சிறந்தலின், நாண்இழந்து,
ஆடினை என்ப - மகிழ்ந!" (அகம் 266, 1-9)

அதுமட்டுமல்லாது முகம் இனியவனாய் மிக்க அழகினைக் கொண்ட மார்பகத்துப் பூமாலைப் பொலிவழிய, தலைவனே! கரையின் உச்சியைத் தொடுமளவு உயர்ச்சியையும், நீண்டு அகன்ற பெரிய பரப்பினையும் பரந்தொழுகும் அழகினையும் உடைய புதுநீர்ப் பெருக்கில், வலிமை மிகுந்த யானையைப் போல், தெப்பத்தின் தலைப் பக்கத்தைத் தழுவிக் கொண்டாய், நரந்தம் பூவின் மணம் கமழ்கின்ற தொகுதியாகிய கரிய கூந்தலையும், அழகு தங்கப் பெற்ற குளிர்ச்சி பொருந்திய கண்களையும் உடைய நினக்குத் துணையாகிய இளைய மகளிருடன் நீராடற்குரிய அணிகளை அணிந்து கொண்டு நீரின்கண் புடைபெயர்ந்து விளையாடிய பொழுது, அவர் நின்னைப் பார்க்குந்தொறும் பார்க்குந்தொறும் நீ அவர்பால் பெருவிருப்புக் கொண்டாய், மனத்து அடக்கமுடியாத காமநோய் பெருகி மிகுந்தமையால் நாணத்தை இழந்த நீ அம்மகளிரோடு நேற்று நீராடி மகிழ்ந்தனையே.

"தேர்தர வந்த, தெரிஇழை, நெகிழ்தோள்
ஊர்கொள் கல்லா மகளிர் தரத்தர
பரத்தமை தாங்கலோ, இலென்" (அகம் 316 8-10)

இதனால் உனது காமம் மிகுதியைக் காணும் போது, ஏவலாளர்கள் ஆராய்ந்து அணிந்த அணிகலன்களையும், நெகிழ்ந்த தோள்களையும் உடைய ஊரே கொள்ளாத அளவுக்கு நிறைந்த பரத்தையரைக் கொண்டு வந்து விடவிட, அப்பரத்தையரும் பரத்தமை ஒழுக்கத்தை உன்னிடத்து மேன்மேலும் மிகுவிக்க, அதைத் தாங்க இயலாதவனாய் நீ இருக்கின்றாயே

என்று கூறுமிடத்து, தலைவனின் பரத்தையுடனான காமம் மிகுதி உச்சத்தைத் தொட்டது எனலாம்.

"தலைவன் பரத்தையைத் தானே தன் இயல்பும் அவளின் இயல்பும் அறிந்து கூடுகிறான். தலைவனின் தனிப்பட்ட விருப்பமே அவன் எப்பரத்தையைக் கூடுவது என்பதில் முன்நிற்கிறது. இருப்பினும், பரத்தையைத் தலைவன் அறிய வேண்டிய சூழலும் தேவைப்படுகிறது". (சிறகு.காம் ஆன்லைனில் உள்ளது. செம்மொழி இலக்கியங்களில் பரத்தை அழைப்பு முறைகள், **முனைவர் மு.பழனியப்பன்** 12.5.2018 ஆன்லைன் வலைதளத்திலிருந்து பெறப்பட்டது. http://siragu.com)

பரத்தையர்பால் காமம் மிகுதியைக் காட்டியவன் அதன் உச்சமாக அவளைத் திருமணம் செய்து கொள்ளத் தயராகின்றான். மழைக்காலத்து ஈங்கைச் செடியில் தளிர்க்கும் தளிரினைப் போன்ற மாமை நிறத்தினையுடைய மேனியையும், ஆராய்ந்தெடுத்த அணிகலன்களையும் உடைய பரத்தையரது முத்துமாலையைத் தாங்கியிருக்கும் பரந்தகன்ற முலைத்தடத்தே, ஆராக்காதலுடன் பூமாலை புரண்டசைய, இடைவிடாது முழவொலி முழங்க, விழாக்களைக் கொண்ட பெரிய மனையில் அப்பரத்தையரை மணந்து கொள்வதில் பெருவிருப்பம் உடையவனாக நின்றாய்,

"மாரி ஈங்கை மாத்தளிர் அன்ன
அம்மா மேனி, ஆய்இழை, மகளிர்
ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்து
ஆராக் காதலொடு தார்இடை குழைய
முழவுமுகம் புலரா விழவுடை வியல்நகர்
வதுவை மேவலன் ஆகலின்" (அகம் 206 .7-12)

என்றும்

"ஒண்தொடி ஆயத்துள்ளும் நீ நயந்து
கொண்டனை என்ப "ஓர் குறுமகள்" (அகம் 96, 9-10)
...
"அலர் ஆகின்றது, பலர் வாய்ப் பட்டே" (அகம் 96, 9-10)

என்றும்

உறை இறந்து, ஒளிரும் தாழ் இருங்கூந்தல்
பிறரும், ஒருத்தியை நம் மனைத் தந்து
வதுவை அயர்ந்தனை என்ப, அஃது யாம்
கூறேம்" (அகம் 46, 8-11)

என்றும்,

"வருபுனல் வையை வார்மணல் அகன்துறை,
திரு மருது ஓங்கிய விரிமலர்க் காவில்
நறும் பல்கூந்தல் குறுந்தொடி மடந்தையொடு

வதுவை அயர்ந்தனை என்ப அலரே" (அகம் 36,9-12)

தலைவனின் மணவிருப்பத்தால் ஊரார் தலைவியிடம், இடித்துரைத்து அலர் உரைக்கின்றனர். இதனால் ஊரார் கூறும் அலரால் தலைவி பெரிதும் வருந்தியிருக்க, தலைவனோ அதை மெய்ப்பிக்கும் வண்ணம், பரத்தையரில் ஒருத்தியை மணம் செய்து கொள்ள விரும்பியவனாய் புதிதாகச் செய்து கொண்ட மணக்கோலத்துடன் இத்தெருவினையும் கடந்து சென்றான். அப்போது மாட்சிமையுடைய தொழிற்சிறப்பு அமைந்த அவனது குதிரையின் மணி ஒலித்தது, அதனைக் கேட்டு வாயிலைக் கடந்து தளர்ந்து தளர்ந்து ஓடிவந்த பூப்போன்ற கண்களையுடைய தன் புதல்வனைக் கண்டான், கண்டவன், "பாகனே! நீண்ட தேரினை நிறுத்துக" எனக் கூறித் தேரினின்றும் இறங்கினான், காலந் தாழ்த்தாது புதல்வனது பவளம் போன்ற சிவந்த வாய் தனது மார்பில் பொருந்துமாறு எடுத்துத் தழுவிப் "பெரும! இனி நீ வீட்டிற்குச் செல்வாயாக?" என விடுத்தான். புதல்வன் அதற்கு உடன்படாது அழுதான். அங்ஙனம் அழுது தடுத்த மகனோடு, "இவன் குபேரனும் ஆவான்" எனக் கூறித் தானே நம் வீட்டிற்குள் புகுந்தான்.

இவ்வாறு வீட்டினுள் வந்தவர்களைக் கண்ட தலைவி, யானே (மகனைப் போகவிட்டேன்) இச்செயலைச் செய்வித்தேன் என்று பலரும் கருதுவதற்கு இடனாதலை உணர்ந்து, அதற்காக நாணப்பட்டு, இக்கொடியமகன்இடையூறு விளைவித்து அவனது தந்தையை மனம் கலங்குமாறு செய்தான்போலும் எனக்கூறிஅடிக்கும் கோலுடன் அவனைஅணுகினாள். அப்போது தலைவனோ, தலைவியிடத்தே நின்ற மகனைத் தன்னிடத்தே எடுத்து அணைத்துக் கொண்டான். மணம் நிகழும் அப்பரத்தையர் வீட்டில், இம்மணம் கருதி ஒலிக்கும் கண்ணினையுடைய முழவின் இனிய ஓசை தன்னை அழைப்பதை அறிந்தும் கூட, தலைவன் அங்கிருந்து நீங்கினான் அல்லன். அன்றோரு நாள் கழங்கு ஆடும் தோழியர் கூட்டத்தில் வந்து தலைவிக்கு அருள் செய்த பழைய அருட்செயலும் வருத்தத் தான் விரும்பிய மணத்தைத் தவிர்த்தான்,

"நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
...
அழுங்கினன் அல்லனோ, அயர்ந்த தன்மணனே." (அகம் 66 , 7-26)

இச்செய்தியைத் தோழியிடம் தலைவிக் கூறி மகிழ்கிறாள்.

"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
...
வாயே ஆகுதல் வாய்த்தனம் – தோழி!" (அகம் 66, 1-6)

மேலும் தலைவி தோழியிடம் கூறுகையில், பலரும் அலர்கூறத் தலைவன் பழி உண்டாக்கும் விதமாக நடக்கமுற்பட்டவனைத் தனது மகன் தடுத்தான். எனவே, பகைவரும் விரும்பும் பிறரால் பழிக்கப்படாதக் குற்றம் தீர்ந்த அழகினையுடைய புதல்வரைப் பெற்ற தலைமைத் தன்மையுடையோர் இவ்வுலகத்தில் புகழோடும் விளங்கி மறுமை உலக வாழ்வையும் குற்றமின்றி எய்துவர். இவ்வாறு சான்றோர் பலரும் கூறிய, பழமொழிகள் யாவும் உண்மையாதலை மெய்யாகவே கண்டேன் என்கிறாள்.

உளவியல் நோக்கும் தீர்வும்

புதல்வன் பிறந்ததால் பிரிந்த தலைவனை, அப்புதல்வனே காரணமாக இருந்து, பரத்தையருடனான தலைவனின் திருமணத்தைத் தவிர்த்தான் என்பது தலைவிக்குப் பெரும் ஆறுதலைக் கொடுக்கின்றது. தலைவனின் திருமணத்தைத் தன்னால் தடுக்க இயலாத சூழலில், தன் மகன் தடுத்து நிறுத்தியதை எண்ணி மகழ்கிறாள் தலைவி. தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைத் தடுக்க நினைத்து முடியாத சூழலில், பரத்தைக்கும், தலைவனுக்குமான திருமணத்தையாவது தடுக்க நினைத்தும் அது முடியாமல் தவித்தாள் தலைவி. ஆனால், தன் மகன் அச்செயலை எளிதாக முடித்துவிட்டதால் தலைவி மகிழ்ந்தாள். எனவே, ஒரு நிலையின் இழப்பை மறுநிலையில் ஈடுசெய்து கொள்ள உள்ளம் விழைவது உளவியலாகும். எனவே, ஒன்றைச் சாதிக்க இயலாத சூழலில் ஏமாற்றமும், மன முறிவும், கவலையும் உற்ற, உள்ளம் தவறான முடிவை எடுக்காமல் பிறிதொன்றின் மூலம் சாதிக்க முயல வேண்டும். உள்ளத்தின் இவ்வியல்பை உளவியலார் ஈடுசெய்தல் என்னும் முறையில் கையாளுகின்றனர் என்பதை அறிவுறுத்தும் நோக்கில் கற்பிக்கப்படும்போது கையற்ற நிலையிலும் சிந்தித்துச் செயல்பட அது வழிவகுக்கும்.

1.4 தலைவன் பரத்தையிடம் மாறுபாடு காட்டல்

தலைவனுக்குப் பரத்தையுடன் நடக்கும் திருமணம் மட்டுமே தடைபட்டிருந்த நிலையில் பரத்தையுடனான தொடர்பு தொடர்ந்து கொண்டே இருந்தது. இதனை அறிந்த தோழியோ, தலைவியின் கூற்றாக எடுத்துரைக்கத் தொடங்குகிறாள். தலைவனே, உன்னுடன் கூத்தாடிய பரத்தையோ குறுகிய வளையல்கள் அணிந்த கையினால் நின்னைப் பிடித்திருந்த பிடிப்பினை நீ தளர்த்திச் சென்ற அவ்வளவிற்கே அவள் சினந்து கொண்டாள்,

"...முன்கைக்
குறுந்தொடி துடக்கிய நெடுந்தொடர் விடுத்தது
உடன்றனள் போலும், நின்காதலி?" (அகம் 176, 16-18)

அவ்வாறு அவளது பிடிப்பினைத் தளர்த்தியவுடன் அவள் ஓவியம் பார்த்து எழுதுவதற்குக் காரணமாக விளங்கும் தன் முகத்தினது அழகு கெடுமாறு ஏக்கமுற்று அழுதாள், பொன்னை உருக்கி வார்த்தாற் போன்ற தேமலையும், சினத்தால் பலமுறை நெரித்துக் கொண்டமையால் சிவந்த மென்மையான விரல்களையும், திருகிக் கடித்தமையால் கூர்மையான முனை மழுங்கிய பற்களையும் உடையவளாய் ஊர்முழுவதும் அலர் தூற்றும் தன்னைக் காண்பதற்குத் தேடிச் செல்வாளாயினள்,

"... தன் முகத்து
எழுதுஎழில் சிதைய அழுதனள் ஏங்கி,
அடித்தெனரு உருத்த தித்திப் பல்ஊழ்
நொடித்தெனச் சிவந்த மெல்விரல் திருகுபு,
கூர்நுனை மழுகிய எயிற்றள்
ஊர் முழுவதும் நுவலும்நிற் காணிய சென்மே" (அகம் 176, 21-26)

ஊரே அலர் தூற்றத் தலைவனைப் பரத்தை தேடியதால், தலைவனையும், பரத்தையையும் தலைவி பழித்துரைத்தாள். முன்பே தலைவனைக் காணாது வருந்தும் பரத்தை தன்னைப் பழித்துக் கூறும் சொற்களையும் கேட்க நேரிடும்போது அவள், தலைவியின் தோழிமார்

கேட்ப, தலைவனால் நமக்குப் பழி வருவதாயின் வருவதாக! இனி நாம் நாணி இருப்பதால் பயன் ஏதும் இல்லை. எனவே, தலைவன் எம் சேரிக்கு வந்தால், செவ்வரி படர்ந்த மையுண்ட கண்களையுடைய அவன் பெண்டிர் காணுமாறு அவன் சூடியுள்ள மாலையைப் பற்றுவேன், அவன் தப்பிப் போகாதபடித் தாழ்ந்து கிடக்கும் அவன் ஆடையைப் பற்றிக் கொள்வேன், ஆரியர் பழக்கி வைத்துள்ள பெண்யானைத் தான் பழகிக் கொண்டு வந்து தரும் ஆண்யானை போல, என் தோளே கட்டும் தறியாகக் கொண்டு, என் கூந்தலாகிய கயிற்றினால் கட்டி அவனுடைய மார்பினைச் சிறைப்படுத்துவேன், அவ்வாறு செய்யவில்லையெனில் என்தாய் பேணிப் பாதுகாத்து வளர்த்த என் அழகும் பிறர் அறிய வெளிப்படாது இருந்து துன்புற்று அழிவதாகுக.

"அரிவேய் உண்கண் அவன் பெண்டில் காண,
தாரும் தானையும் பற்றி, ஆரியர்
பிடி பயின்று தரூஉம் பெருங்களிறு போல
தோள்கந் தாகக் கூந்தலின் பிணித்துது, அவன்
மார்புகடி கொள்ளேன் ஆகின், ஆர்வுற்று
இரந்தோர்க்கு, ஈயாது ஈட்டியோன் பொருள்போல்
பரந்து வெளிப்படாது ஆகி,
வருந்துக தில்ல, யாய்ஓம்பிய நலனே!" (அகம் 276, 8-15)

என்று சூளுரைக்கிறாள். ஆனால், தலைவனோ வேறொரு பரத்தையிடம் சென்றான் என்பதை உணரும் தருவாயில், அப்பரத்தை "தலைவனால் எனக்கு உண்டான பழிச்சொல்லோ பெரிதாகும். ஏனெனில் அவனோடு யான் கொண்ட நட்போ, வளமான வெறுக்கந் தட்டையால் செய்யப்பட்ட தெப்பத்தைத் துணையாகக் கொண்டு அவனுடன் புனலாடிய நட்பின் அளவினதே ஆகும். அத்தலைவனோ ஒளி பொருந்திய தொடியணிந்த மகளிர், பழைய யாழினை இசைத்துப் பாடவும், ஈரமும் குளிர்ச்சியும் உடைய முழவினைக் குறுந்தடியால் ஒலி எழுப்பவும், குளிர்ந்த நறுமணம் உடைய சந்தனம் கமழும் அவர்தம் தோள்களைத் தழுவிய வண்ணம் இப்பொழுதும் வேறொரு பரத்தையின் வீட்டிலே உள்ளான், அவ்வாறிருக்க, அவன் மனைவி எம்முடன் வெறுப்பினைக் கொண்டுள்ளாள்" என்று தலைவியின் தோழியர் கேட்கக் கூறுவாள். மேலும், தலைவனைப் பிரிந்து வருந்தும் நிலையில் தனது வளையல்களை உடைத்து வெறுப்பைக் காட்டும் பரத்தையர் மத்தியில், யானோ எனது செறிந்த வளையல்களை உரிமையால் யான் உடைக்கவும் செய்திலேன். அப்படியிருக்க, யான் தலைவிக்குப் பகை உடையேம் அல்லேம், தம்மைச் சேர்ந்த மகளிரது அழகிய நெற்றியில் பசலை பரவிட, அவர்களைக் கைவிட்டு நீங்கும் அவள் கணவனே அவளுடைய நீங்காப் பகையாவான்,

"பெருங்களிற்றுச் செவியின் அலைக்கும் ஊரனொடு
...
கொழுநனும் சாலும் தன் உடன்உறை பகையே" (அகம்186 ,6-20)

என்று பரத்தையானவள் தன் நிலையைத் தலைவியின் தோழியர் கேட்க எடுத்துக் கூறுகிறாள். தலைவனின் நடத்தையியலைக் காணும்போது தலைவியிடம் மட்டுமல்லாது, பரத்தையரிடமும் மாறுபாடு காட்டுபவனாக விளங்குகிறான் என்பதை அறியமுடிகிறது.

உளவியல் நோக்கும் தீர்வும்

பரத்தையானவள், தலைவியைப் பிரிந்து வந்து தன்னிடம் அன்பு காட்டிய தலைவனை முதலில் நல்லவன் என்றும், பின்பு வேறொரு பரத்தையிடம் சென்றுவிட்டான் தலைவன் எனக் கேட்டதும் அவனைத் தீயவன் என்றும் கருதும் நிலைப்பாட்டைக் காணமுடிகிறது. இத்தன்மையை, உளவியல் ரீதியில் இருவர்ப் பிரிவுமுறைச் சிந்தனை என்று குறிப்பிடுவர். சிறிது நாட்கள் தங்கி பின் வேறு ஒருவளுடன் தலைவன் சென்ற நிலையிலே பரத்தையானவள் தலைவனைப் பிரியமுடியாமல் அவனுடனே இருக்க எண்ணுகிறாள். இதன் வெளிப்பாடே பரத்தையின் சூளுரைத்தல். அதன்பின் தலைவன் வேறு பரத்தையிடம் சென்றதை அறிந்ததும் தன் மதிப்பைக் காத்துக்கொள்ளவும் தன் நடத்தையை நியாயப்படுத்தவும் முயற்சிக்கிறாள். எனவேதான், சமூகத்தில் மதிப்புடன் நடக்க வேண்டுமெனில், பரத்தையர் சார்ந்த நடத்தைகளை நிறுத்திக்கொள்வது ஆண்களுக்குச் சாலச்சிறந்ததாகும். ஏனெனில், நாம் செய்யும் தீய ஒழுக்கமானது சமூகத்தில் நம் மதிப்பை இழக்கச் செய்துவிடும் என்னும் படிப்பினையை உணர்ந்து ஒவ்வொருவரும் செயல்படுவது அவசியம்.

2. தலைவியினது மனவுணர்வுகளின் உளவியல் போக்கு

2.1 தலைவி தலைவனுக்கு வாயில் மறுத்தல்

நிலைத்த எண்ணம் இல்லாத தலைவன் தனது பரத்தமை ஒழுக்கத்திலிருந்து நீங்கி இறுதியில், தலைவியை நாடி வருகின்றான். அப்போது தோழி, தலைவனிடம் பேரழகு படைத்த பெருத்த தோளினையும், அழகிய நெற்றியினையும் உடைய பரத்தையோடு மணங்கமழும் சோலையிலே நேற்றுத் தங்கியிருந்தமையை அறிந்து கொண்ட தெய்வம் போன்ற எம் தலைவி, அழுதவண்ணம் இருக்கின்றாள்,

"நலம் பெறும் பணைத்தோள், நல்நுதல் அரிவையொடு,
...
கலுழ்ந்த கண்ணள்எம் அணங்கு அன்னாளே," (அகம் 366, 13-16)

என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள். தனது பரத்தமை செயல் தலைவியை வருத்தும் என்பதை உணர்ந்து கொள்ளும் தன்மையற்றவனாக நீ இருந்தாய். ஆனால் தலைவியோ, களவுக் காலத்துக் கூடுதற்கரிய காமவேட்கை நீங்கியமையால் தாம் சென்றிருக்கும் இடத்தைக் கடந்து இங்கு வாராத நம் தலைவர் "நமக்கு என்ன உறவினா'" எனக் கூறாள், மாறாக, ஒளி பொருந்திய நெற்றியினையுடைய நம் தலைவி, "இரவில் வீட்டினைச் சார்ந்துள்ள பனைமரத்தில் வாழும் வளைந்த வாயினையுடைய அன்றில்கள் கூடியிருத்தலினின்றும் துணை சிறிது பிரியினும் கண் உறங்காது, இதனை நெஞ்சே காண்பாயாக! என தானே தன் நெஞ்சிடம் கூறுவாள். கண் நிறைந்த நீர் கொண்டு தன் ஆற்றாமையால் வந்த வருத்தத்தைப் பிறர் அறியாது மறைப்பாள், இவ்வாறு தான் வருந்தும் நிலையை, தலைவனுக்குச் சொன்னால் என்ன தவறு, என்று பாணனிடமும் வருந்திக் கூறியிருக்கிறாள்.

"இனியே, மணப்பருங் காமம் தணப்ப நீந்தி,
...
ஒண் நுதல் அரிவை, யான் என் செய்கோ? எனவே" (அகம் 50, 7-14)

இவ்வாறு பாணன், வழி தனது வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டி நிலையை நீ உருவாக்கியிருக்கிறாய். ஆனால் உன்னால் விரும்பப்பட்ட பரத்தையோ, எமது தலைவியைப் போலப் புல்லிய உளை போன்ற தலைமயிரையுடைய மகனைப் பெற்று நெல்லையுடைய பெரிய வீட்டில் நின்னைப் பிரிந்து தங்கியிருக்க என்ன கடமைப்பட்டவளா? அத்தகைய கடமை உடையவள் இல்லையே!

"... நின்காதலி? எம்போல்
புல்உளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்இன்று உறைய
என்ன கடத்தளோ, மற்றே?" (அகம் 176, 18-21)

எனத் தோழி தலைவனிடம் இடித்துரைக்கிறாள். இவ்வாறு தலைவியை நாடிவந்த தலைவனிடம் அவன் தான் தலைவியைப் பிரிந்து பரத்தைமையை விரும்பிச் சென்றதால் தலைவி எவ்வாறெல்லாம் மனம் வருந்தியிருப்பாள் என்பதை உணராத தலைவனுக்குத் தலைவியின் வேதனையை உணர்த்தக் கருதி இடித்துரைத்தவள், தலைவியின் சார்பில் தலைவனுக்கு வாயில் மறுக்கிறாள்.

உளவியல் நோக்கும் தீர்வும்

தலைவனின் புறத்தொழுக்கம் தலைவியை எவ்வாறெல்லாம் வருத்தும் என்பதை உணர இயலாத நிலைக்குத் தலைவன் தள்ளப்படுகிறான். ஆனால் தலைவியோ, எந்தவிதத்திலும் தலைவனைக் குறை கூறவில்லை. ஆனால் தான் அடையும் துன்பத்தை வெளிப்படுத்தினாலாவது தலைவன் மனம்மாறி வருவதற்கு வாய்ப்பாகுமோ எனக் கருதியதன் விளைவாகவும் இருக்கலாம். தலைவி பாணனிடம் தன் கருத்தை எடுத்துரைத்தது. தலைவனை வெறுத்தும் பரத்தையைப் பகைத்தும் தூற்றுதலே இயல்பு உணர்வு. ஆனால் தலைவனால் உண்டாகிய சிக்கலுக்குத் தீர்வாக, தலைவி ஆரவாரம் செய்யாமல் தன் இயல்புணர்ச்சியை அடக்கி மதிப்புடைய நடத்தைகளை மேற்கொள்வது தலைவியின் உயர் மனமாற்றப் போக்கினைக் காட்டுகிறது. எனவே, இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது - கணவன் பிழையொழுக்கம் மேற்கொண்டாலும் மனைவியானவள் எவ்விதத்திலும் கணவனை வெறுக்கமாட்டாள் என்பதுதான். ஆகவே, ஆண்கள் தன் துணையின் மனவுணர்வை உணர்ந்து ஒழுகுதல் நன்மை பயக்கும்.

2.2 தலைவி தலைவனைப் புலத்தல்

நிலையான எண்ணம் இல்லாத தலைவன் முதலில் தலைவியைப் பிரிந்தான். அதன்பின் பரத்தையையும் பிரிந்து பின்பு மற்றொரு பரத்தையையும் நாடிச் சென்றான். இறுதியில் அவர்களையும் விட்டு தலைவியிடம் வர, தலைவி தலைவனை நோக்கி, மாலை போன்று தோன்றுகின்ற பூங்கொத்துக்களைக் குறுகிய அடிப்பகுதியையும் கொண்ட காஞ்சிமரத்தின் மலர்களினின்றும் உதிர்ந்த பூந்துகள்கள் படிந்த கூந்தலையும், செவ்வரி படர்ந்த செருக்குற்ற குளிர்ந்த கண்களையும், மாமை நிறத்தினையும் உடைய பரத்தையுடன் நேற்றும் மணங்கமழும் சோலையில் துயில் கொண்டாய், இன்றும் அவளோடு வையை நீர்ப்பெருக்கில் புனலாடி மகிழ்ந்தாய், ஈரம் புலராத மார்போடு எம்முன் வந்து நின்று நின் செயலை மறைக்க முயல்கின்றாய் நின்னால் அச்செயலை மறைத்தல் இயலுமோ? இயலாதன்றோ?

கோதை இணர, குறுங்கால், காஞ்சிப்

...
இரத்தல் கூடுமோ மற்றே? (அகம் 296, 1-7)

என்கிறாள் தலைவி. அதற்குத் தலைவன் வேளூரின் வாயிலிடத்து, பல்வகை மணமும் கலந்த நீர் தெளிக்கப் பெற்ற மணங்கமழும் கொத்துக்களாலான மலர்மாலையின்கண் உள்ள தேனைப் புள்ளிகளையும் வரிகளையும் உடைய வண்டின் கூட்டம் உண்ணாது விலகிச் செல்வதற்குக் காரணமான, உயர்ந்த பலிகளையே ஏற்றுக்கொள்ளும் அச்சம் தரும் தெய்வமே வாழ்கின்றது. ஒப்பனை செய்யப்பெற்ற கரிய கூந்தலையுடைய உன்னால் ஐயுறப் பெற்றவளாகிய பரத்தையுடன் யான் புனலாடி வந்தது உண்மையாயின் அவ்வேளூர்த் தெய்வம் என்னை வருத்துவதாக,

பழம்பல் நெல்லின் வேளூர் வாயில்
...
அனையேன் ஆயின், அணங்குக, என்! (அகம் 166, 4-9)

என்று சூளுரைத்துத் தன் மனைவியைத் தெளிய வைக்க முயற்சிக்கிறான். ஆனால் தலைவியோ,

பொய்யால், அறிவென்நின் மாயம், அதுவே
கையகப் பட்டமை அறியாய், (அகம் 256, 8-9)

நீ பொய் சொல்லற்க, நின் வஞ்சத் தன்மையை நான் அறிவேன், நின் பரத்தமை ஒழுக்கத்தை ஊராரும் நன்கறிவர், ஆனால் நீ அறியாய் போலும்? அதுமட்டுமல்லாது, நின் பரத்தையானவள் மெத்தென நடந்து வந்தாள், முகமன் பல கூறினாள். தலைவியை நோக்கி நீண்ட கரிய கூந்தலையுடைய மடவோளே! யானும் நின் சேரியைச் சேர்ந்தவள்தான், நின் வீட்டிற்கு அயல் வீட்டில் உள்ளேன், உனக்குத் தங்கை முறையும் ஆவேன், என்று கூறி மோதிரம் அணிந்த தன் மெல்லிய விரலால் தன்னுடைய நெற்றியினையும் கூந்தலினையும் தடவினாள்,

'நல்போர்
...
பகல்வந்து பெயர்ந்த வாணுதற் கண்டே' (அகம் 386, 7-15)

போரில் வல்ல கணையன் என்பான் நாணியது போன்று, யானும் பகற்பொழுதில் வந்து மீண்ட நின் பரத்தையைக் கண்டு நாணமுற்றேன். ஆதலால், நின் நலத்தை நுகர்வதற்குத் தக்கவளாகிய பரத்தையும், நின்னை அடைந்த களிப்புமிகுதியால் செருக்குற்றுத் திரிகின்றாள். எனவே அவளைத் தழுவிய நின் மார்பினை யாம் தீண்டமாட்டேன் என் அருகே வாராது ஒழிக!

அன்னி மிஞிலியின் இயலும்

நின்நலத் தகுவியை முயங்கிய மார்பே (அகம் 196, 12-13)

...தொடுகலம், குறுக வாரல் (அகம் 196, 8)

என்று சினந்து கூறுகிறாள். தலைவன் பரத்தையிடம் சென்று வந்தமையால், தலைவனின் செயலை மிகவும் வெறுக்கிறாள் தலைவி. பரத்தையைத் தழுவிய தலைவன், இனி எப்போதும் தன்னை அணுக வேண்டாம் என்னும் முடிவுக்கு வருகிறாள் தலைவி.

உளவியல் நோக்கும் தீர்வும்

அனைத்தையும் சகித்து வாழ்ந்தவளிடம், தலைவன் தான் தவறு செய்யவில்லை அவ்வாறு தவறு செய்தால் தெய்வம் என்னைத் தண்டிக்கட்டும் என்று கூறுவதும், பரத்தை உரிமையுடன் நான் உனது தங்கை முறை என்று உரைப்பதும் தலைவியின் மனதை மிகவும் வேதனைப்படுத்துகிறது. இவ்விருக் காரணங்களால் மிகவும் வெறுப்படைந்த தலைவி இனி எப்போதும் உனை நான் தீண்டமாட்டேன் என்று சினந்துரைக்கிறாள். இச்சிக்கலைத் தீர்க்கத் தலைவி எடுத்த முடிவானது எதிர் வினை அமைப்பின் போக்காக அமைக்கிறது. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது பரத்தமை ஒழுக்கம் பொய்யுரைக்க வழிவகுக்கின்றது என்பதும், பரத்தையர் உரிமை பாராட்டி நம் குடும்பத்தில் உறுபபினராக மாறுவர் என்பதையும் உணர்ந்து ஆண்கள் பரத்தமை ஒழுக்கத்தைக் கைவிடவேண்டும் என்பதுதான்.

2.3 தலைவி பரத்தையை ஏற்றல்

தலைவி தலைவனை வெறுத்து இனித் தீண்டமாட்டோம் எனக் கூறியவள், பகைவரும் விரும்பும் பொற்றொடி அணிந்த நம் புதல்வனைப் பொன்னாலான அணிகலன்களைத் தாங்கிய கூரிய பற்களையுடைய தலைவனின் பரத்தை அவன் தெருவில் சிறுதேர் உருட்டிக் கொண்டு தனியனாய் நிற்பதைக் கண்டாள். தலைவனே, நின் உருவ ஒப்புமை கருதிப் போற்றி, காண்பார், யாரும் இல்லாமையால் அவனைச் சென்றடைந்து மிக மகிழ்ச்சியுற்று "என் உயிரே வருவாயாக" எனப் பூண் அணிந்த இளை முலையிடத்து அணைத்துக் கொண்டு நின்றவளைக் கண்டேன்" கண்ட யான் நின்ற நிலையினின்றும் மீண்டும் பெயர்ந்தேன் அல்லேன், வரைந்து வந்து அவளைத் தழுவிக் கொண்டேன், "குற்றமற்ற இளமகளே ஏன் மயங்கினாய்? இவனுக்கு நீயும் தாயாகுவை" என அவளிடம் கூறினேன். தாம் செய்த களவுக் குற்றத்தை (கண்டு கொண்டார் முன்) உடன்பட்டு நிற்பாரைப் போல நாணி முகங்கவிழ்ந்து நிலத்தைக் கீறி நின்றாள், அவளுடைய நிலையினைக் கண்ட யான் அவள் வானத்தில் காண்டற்கரிய அழகுத் தெய்வமாகிய அருந்ததியை ஒப்பாவாள் எனவும், அவள் நின் மகனுக்குத் தாயாதல் ஒக்கும் எனவும் எண்ணி யானும் அவளை விரும்பினேன்.

நாயுடைமுது நீர்க் கலித்த தாமரைத்
...
மகன்தாய் ஆதல் புரைவது - ஆங்கு எனவே? (அகம் 16 , 1-19)

இங்ஙனமாகவும் யாரையும் அறியேன் என் நீ பொய் கூறாது ஒழிக" எனத் தலைவி கூறினாள். மேலும்,

"நெல்லுடை மறுகின் நன்னர் ஊர
இதுவோ மற்றுநின் செம்மல்? (அகம் 306, 8-9)

தலைவனே! இதுதான் நின் தலைமைத் தன்மையோ? எம்மைப் போற்றுவதை விடுத்து இவ்விடத்தினின்றும் அகன்று செல்லுமாறு

பெரும்பெயர் மகிழ்ந! பேணாது அகன்மோ! (அகம் 306, 1)

தலைவிக் கூறுகிறாள்.

உளவியல் நோக்கும் தீர்வும்

தலைவனின் பிழையொழுக்கம் கண்டு வெறுத்தவள், முதலில் தலைவனோடு பரத்தையையும் வெறுத்தாள். பின்னர் அவள் தலைவனின் பிழையொழுக்கத்திற்குப் பரத்தை எவ்விதத்திலும் காரணமாகாள் என உணர்ந்து, பரத்தையை ஏற்றுக்கொள்கிறாள். ஆனால் அவளது மனது தலைவனை ஏற்க மறுக்கிறது. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது, ஆண்கள் பிழையொழுக்கம் மேற்கொள்வதற்கு அவர்களே முழுக்காரணம். ஆண்களின் உள்ள விருப்பத்தின் தூண்டுதலே இதற்குக் காரணமாக அமைவதால் பரத்தையர் எவ்விதத்திலும் தலைவனின் பிழையொழுக்கத்திற்குப் பொறுப்பாகார். ஆதலால் ஆண்கள் தங்களின் தவறான நடத்தைகளைத் தாங்களாகவே உணர்ந்து நடக்கும் பட்சத்தில் குடும்ப உறுப்பினர்களிடத்தும் சரி, சமூகத்திலும் சரி நன்மதிப்பைப் பெற இயலும்.

2.4தோழியின் அறிவுரை

தனது தோழியாகிய தலைவி பரத்தையுடன் சென்ற தலைவனை, எண்ணி வருந்தி அழுதுகொண்டு இருக்கிறாள், மேலும் தலைவி சொல்ல நினைக்கும் கூற்றையெல்லாம் தோழி கூறி தலைவியைத் தேடிவந்த தலைவனிடம் வாயில் மறுக்கிறாள். இவ்வாறு செய்வதால் தலைவியின் வருத்தமே மிகும். அதுமட்டுமல்லாது தலைவியினது வாழ்க்கையும் பாதிப்பிற்குள்ளாகுமே என எண்ணவும் தொடங்குகிறாள்.

"தலைவன் தன் மனைவியைப் பிரிந்து பரத்தையர் வீட்டிற்குச் சென்றுவிடுகிறான். இதனை அறிந்த தோழி, தலைவனை ஆற்றுப்படுத்த நினைக்கிறாள். அவள், தலைவன் தன் மனைவியோடு இல்லறம் நடத்த வேண்டும்; அவளோடு சேர்ந்து வாழ வேண்டும் என நினைக்கிறாள்", (கீற்று. காம் ஆன்லைனில் உள்ளது.**தோழியின் மனிதநேயப் பண்புகள்** சு.அ.அன்னையப்பன் 22 ஆகஸ்ட் 2016 ஆன்லைன் வலைதளத்திலிருந்து பெறப்பட்டது. https://www.keetru.com)

"கணவனது புறப்போக்குத் தாங்க இயலவில்லையே என்று மனைவி மிக வருந்துகின்றாள். ஏவ்வாற்றானும் அவள் மனம் இசையவில்லை. இதன் விளைவு என்னாகும்? குடும்பம் வறுமைப்படும் குழந்தைகள் மெலிவெய்தும்; இல்லறம் வற்றிப்போம் ஆதலின், அறிவுடைத் தோழி பிடிவாதத் தலைவியை இடித்துரைக்கின்றள்". (யாழ்.காம் ஆன்லைனில் உள்ளது. அகநானூறு உணர்த்தும் வாழ்வியல் அறன்கள், முனைவர் சி.சேதுராமன் 28.1.2012 **ஆன்லைன் வலைதளத்திலிருந்து பெறப்பட்டது.** https://yarl.com)

இவ்வாறு எண்ணத் துவங்கும் தோழியிடம் தலைவன் தனக்கும் தலைவிக்குமான ஊடலைத் தீர்க்குமாறு வேண்டிக் கேட்கிறான். அதன் விளைவாக, தலைவிக்குத் தோழி அறிவுரை கூறும்முகமாக, தலைவியை அழைத்து, தலைவனோடு வீணே ஊடுதல் மனைவாழ் மகளிர்க்குரிய மாண்புடைய செயலாகுமா? தலைவன் மேற்கொள்ளும் பரத்தைமையை வெறுத்து அவரோடு ஊடல் கொள்ளும் பெண்கள், தம்மிடத்துத் திருமகள் விலகிச் செல்ல, நொய் அரிசியை முறத்தால் புடைத்துத் தாமே சமைத்து உண்டு தனிமையை மேற்கொண்டவராய், இனிய மொழிபேசும் குழந்தைகள் பால் இன்றி உலர்ந்த முலையைச்

சுவைத்துப் பார்த்துப் பெரிதும் வருந்தி இருப்பர் என்பதை அறிந்து வைத்தும், அவரது பரத்தமை குறித்து மாறுபாடு கொள்வோர் அறிவிலாதவரே ஆவர், ஆதலின் ஊடலைக் கைவிடுமாறு,

புலத்தல் ஒல்லுமோ? – மனைகெழு மடந்தை!
...
அறியார் அம்ம, அ,,...து உடலு மோரே! (அகம் 316. 11-17)

தோழி கூறுகிறாள். இவ்வாறு தோழி தலைவியைச் சமாதானப்படுத்தி அவளது வாழ்வு நல்வழிப்பட உறுதுணையாக அமைகிறாள். பிழை பொறுத்து வாழும் உயர்குடியில் பிறந்திருக்கிறோம் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். அது நமக்கு வேதனையைக் கொடுப்பினும் நாம் அதனைப் பொறுத்துக்கொள்ளுதலே சிறந்தது என அறிவுறுத்துகிறாள்.

உளவியல் நோக்கும் தீர்வும்

தலைவியும் பரத்தையிடம் சென்றுவிட்ட தலைவனை வெறுத்துத் தூற்றுதலை விடுத்து இல்லறக் கடமைகளை ஆற்றி வாழ்தலே செய்யத் தக்கதென தோழியின் அறிவுரையை ஏற்கும்பட்சத்தில் தலைவன் மேல் உள்ள வெறுப்புணர்ச்சியைக் கடமை உணர்ச்சியாக உயர்வாக்கம் செய்கிறாள். அகஇலக்கியத் தலைவியர் தலைவனின் பிழைகளைப் பொறுத்து அவர்களுடன் ஒன்றி வாழத்தலைப்படுகின்றனர். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது, அனைத்துத் தவறுகளையும் பொறுத்துக்கொள்ளும் தன்மைகொண்டவராக மனைவியர் விளங்கும்பட்சத்தில் கணவன்மார்கள் அவர்களுக்காகவே வாழத் தலைப்படுதல் அவசியம் என்பதை உணர்ந்து பிழையொழுக்கமான பரத்தமை ஒழுக்கத்தை மேற்கொள்ளாது கைவிடுதல் குடும்ப நலனுக்குச் சிறந்ததாகும்.

ஆய்வுத் தீர்வு

அகநானூற்று மருதத்திணைப் பாடல்கருத்துக்கள் மிகப்பெரும் சிக்கல்களைக் குடும்ப வாழ்வில் உருவாக்கிக் குடும்பத்தின் இன்பத்தை நிலைகுலையச் செய்யும் ஒரு படிப்பினையை நமக்கு வழங்குகின்றன. அதாவது கணவன் மனைவி என்ற இருவருக்குமான குடும்ப வாழ்வில் விரிசல் உண்டாக்கும் ஒரு பெரும் ஆபத்தாக அமைவது பரத்தமை ஒழுக்கம் என்பதை எடுத்துரைக்கின்றன. அக்காலம் தொட்டு இக்காலம் வரை ஆண்களின் விருப்பத்தால் நேரும் ஒரு பெரும் ஆபத்தாக இருப்பது இப்பரத்தமை ஒழுக்கம். ஆண்களின் விருப்பமானது உளவியல் சிக்கலாக உருவெடுக்கின்றது. இச்சிக்கலிலிருந்து விடுபடுவது அக்காலம் தொட்டு இக்காலம் வரை ஒரு பெரும் சவாலாகவே அமைந்திருக்கின்றது. அக்காலத்து பெண்கள் மனதளவில் மன்னிக்கவும், பொறுத்துக் கொள்ளவும் செய்ததால் அச்சிக்கல் ஓரளவு தீர்ந்ததாகக் காணமுடிகிறது. ஆனால் இக்காலத்து பெண்களிடம் இச்சிக்கல் பெரும் பூதாகரமான ஒன்றாக செயல்பட்டு வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்குகிறது. எனவே, இச்சிக்கல்களுக்கு இக்காலத்தில் தீர்வுகாண உணர்வுகளையும், செயல்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு உளவியல் சார்ந்த அணுகுமுறைகளோடு கையாள்வது அவசியமாகின்றது.

இவ்வாய்வின் பயன்/முடிவு

- பிறரது உணர்வை உணர்ந்து கொள்ளும் தன்மையற்றவனாகவும், நிலையான எண்ணம் அற்றவனாகவும், தனது இன்பமே பெரிதாகவும் கொண்டு மருதநிலத்

தலைவன் வாழ்ந்துள்ளான் மற்றும் பல பரத்தையரை நாடிச் செல்பவனாக விளங்குகிறான். இச்செயல்பாட்டைத் தலைவன்(ஆண்கள்) நீக்குவது அவசியம் என்பதை இவ்வாய்வின்வழி உணர முடியும்.

- பரத்தையர், திருமணமான ஆடவர்களின் குடும்ப வாழ்வைச் சிதைக்கும் தன்மை கொண்டவர்களாக வாழ்ந்துள்ளனர். ஆதலால், இவர் போன்றவர்களோடு தொடர்பு கொள்வது நல்லதல்ல என்பதை உணர முடியும்.

- தான் எத்தகைய வேதனைகளையும், துன்பங்களையும் அடைந்தாலும் தானே அதனை முழுதும் அனுபவிக்கக் கடமைப்பட்டவளாக எண்ணி வருந்தி வாழ்ந்துள்ளாள் தலைவி(மனைவி) என்பதனை அறிய முடிகின்றது.

- நல்ல குழந்தைகளைப் பெற்றவர்கள், தனது துன்பத்திலிருந்து விடுபட அக்குழந்தைகளே ஒரு முக்கிய காரணமாக அமைவர் என்பதை அறியமுடிகிறது. குழந்தையை எண்ணியாவது ஆண்கள் தவறுசெய்யாமல் இருப்பது அவசியம் என்பதை உணர்தல்.

- தலைவனது திருமணம் தடைபடுவதற்குத் தான் காரணமாக இருப்பதாக எண்ணிவிடக்கூடாது என்பதற்காக குழந்தையை அடிக்கக் கோலுடன் வந்ததிலிருந்து தலைவனது விருப்பத்திற்கு எப்போதும் தான் ஒரு இடையூறாக இருக்கக்கூடாது என்னும் எண்ணம் கொண்டவளாக தலைவி இருந்துள்ளாள். எனவே, தன் குடும்பத்தலைவியின் மனநிலையை உணர்தல் குடும்பத்தலைவருக்கு அவசியம் என்பதை அறிய முடியும்.

- தலைவியர் சில நேரங்களில் தவறை உணர்ந்து நாணி நிற்கும் பரத்தையரை ஏற்றுக்கொண்டனர். உயர்மனமாற்றப்போக்குத் தலைவியிடம் மட்டும் இருந்தால் போதாது தலைவனிடமும் வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துதல் அவசியம் என்பதை உணர முடியும்.

- தோழியர், தங்களது தலைவியின் வாழ்வு பாழாகி விடக்கூடாது என்பதற்காகவும், அவள் தலைவனைப் பிரிந்து வருந்தி நிற்கும் நிலையினை மாற்றவும் பல அறிவுரைகளைக் கூறி அவளது வாழ்வை நல்வழிப்படுத்துபவராக இருந்துள்ளனர். தானே உணர்தல் அல்லது அறிவுரை ஏற்றல் என்பதன் வழி ஒவ்வொருவரும் இயங்குவது அவசியம் என்பதை அறிய முடிகின்றது.

- கற்புவாழ்வில் பரத்தைமை ஈடுபாடானது ஒரு மிகப்பெரும் வாழ்வியல் மாறுபாடுகளைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது என்பதை இவ்வாய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

Bibliography

- Dr.C.Sethuraman. (2012). Agananooru unarthum arangal. *yarl.com* , 1-2.
- Dr.M.Pazhaniyapppan. (2018). Semmozhi illakkiyangalil parathai azhaippu muraigal. *siragu.com* , 1-2.
- Dr.R.Kumar. (2009). Agananooru kattum parathamai. *tamil parks.50 web.com* , 1-2.
- ILAMPURANAAR. (2001). *THOLKAPPIYAM.* CHENNAI: THIRUNELVELI SAIVA SITHANTHA NOORPATHIPPUKKAZHAGAM.

- Nunaviloor.ka.visayarathinam. (2017). pazhanthamil noolgalil parathamai. *pathivigal* , 1-2.
- PINGALAMUNIVAR. (1917). *PINGALANTHAI(PINGALANIGANDU).* CHENNAI: MATHARAAS RIPPAN ACHIYANTHARASALAI, 87,THAMBUCHETTI VITHI.
- SOMASUNDHAR, M. (1981). *MANOTHATHUVA MARUTHUVAM.* CHENNAI: NARMADHAPATHIPPAGAM.
- SOMASUNDHARANAR, P. (1955). *KURUNTHOGAI.* CHENNAI: THIRUNELVELI SAIVA SITHANTHA NOORPATHIPPUKKAZHAGAM.
- Su.A.Annaiyappan. (2016). Thozhiyin manithaniya panpugal. *keetru.com* , 1-2.
- VENGADASAMINADAR, N. (1965). *AGANANOORU.* CHENNAI: THIRUNELVELI SAIVA SITHANTHA NOORPATHIPPUKKAZHAGAM.

****

காப்பியங்கள் : கற்றலும் கற்பித்தலும் Epics : Learn and Educate

முனைவர் ம. ஷீலா | Dr. M. Sheila

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக்கல்லூரி, செங்கல்பட்டு. கைப்பேசி :9677940619, மின்னஞ்சல் : lalithampika1968@gmail.com, Orchid No : https://orcid.org/0000-0002-8587-1985

ஆய்வுச்சுருக்கம்

மனித வாழ்வியலைப் பற்றிப் பேசுவன இலக்கியங்கள். நாம் வாழும் வாழ்க்கையை எடைபோடும் தராசு என்றும் இலக்கியங்கள். அவற்றுள், பொருள்தொடராய் அமையும் காப்பியங்கள் விளக்கமாய், விரிவாய் வாழ்க்கைக்குத் தேவையான பண்புகளையும், நிகழ்வுகளில் எங்ஙனம் செயலாற்றினால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பன பற்றியும் காட்சிப் படமாகக் காட்டுகின்றன. வள்ளுவர் கூறும்,

"செய்தக்க அல்ல செயக் கெடும்
செய்தக்க செய்யாமை யானும் கெடும்"(466)

என்பதற்கு இலக்கியமாக அமைவதால் வாழ்வின் வழிகாட்டியாகவும் அமைகின்றன.

நாம் காப்பியங்களைக் கற்கும்போது ஆரம்பத்தில் நம் உணர்வுகளுக்கு வடிகாலாய், இன்பத் துய்ப்பிற்காகத்தான் கற்க ஆரம்பிக்கின்றோம். ஆனால் அது துன்ப மறப்பிற்கான தாங்குவதற்கான ஊன்றுகோலாக அமைகின்றது. வழக்கில் ஒன்று கூறுவார்கள் - சீதை, சந்திரமதி அனுபவிக்காத துன்பங்களா...? பாஞ்சாலி படாத பாடா..? பெண்ணிய நோக்கில் பார்க்கும்போது அடிமைத்தனத்தை ஊக்குவிப்பது போல் தோன்றினாலும், துயர்கள் இல்லாத வாழ்க்கை இல்லை; 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றாற் போல் துயர்களில் சோர்ந்து செயலற்று விடாமல் அதிலிருந்து மீள முயல வேண்டும்; முயற்சியே உயிர்ப்பு; வாழ்க்கை என்பதை உணர்த்தும் பாங்காகக் கொள்ள வேண்டும்.

காப்பியங்கள் அறம், பொருள், இன்பம் வீடெனும் நாற்பொருள்கள் பற்றிப் பேசுவதால் பெரும்பாலும் முழுவாழ்க்கை பற்றிய சித்திரமாக அவை அமைகின்றன. கதை வடிவில் வாழ்வியலை உணர்த்துவதால் சுவையுடன் படிக்க, கேட்கச் செய்வதுடன் செயல்படவும்

தூண்டுகின்றன. பாத்திரங்கள் பெரும்பாலும் அடிக்கடி வருவதால் அவர்களின் பண்பு விளக்கங்கள், உணர்வுப் போக்குகள் எளிதில் புரிகின்றன. பாத்திரங்களுடன் ஒன்றியும், படர்க்கை நிலையிலும் நின்று அவற்றை அனுபவிப்பதால் அவர்களின் உணர்வுகளை உணர்வதால் செய்தக்கன, செயத்தகாதன புரிவதால் வாழ்வின் இடர்களில் 'மாற்றி யோசிக்க' உதவுகின்றன.

காப்பியங்கள் பல்கலைக்கழகமென பல்பாத்திரங்கள், நிகழ்வுகள் எனப் பரந்து காணப்படினும் ஆழ உழுவது போல கருத்தை ஆழமாகவும் உணர்த்துவதால் வாழ்க்கையைப் புரிய வைக்கின்றன.

Abstract:

Literature that talks about human life. These can be said to be the scales that weigh the life we live. The epics that do not follow the subject illustrate and show the characteristics that are necessary for detailed life. Literature is the visual images of how to act on the events and how to deal with the consequences. They also serve as a guide to life as the literature suggests that the cultivator is not adaptable but inactive and ineffective.When we learn epics we begin to drain emotion for pleasure but it is also a crutch for forgetfulness, suffering and endurance. One would say are the suffering not experienced by Sita and Chandramathy? Sing without Panchaali? While it may seem like promoting slavery when viewed from a feminist perspective, there is no life without tragedies.

'Idukan Varungal Naguga' should not be active in misery and should try to recover from it.Effort is life. Life should be a way of realizing that, Epics speak of four elements of Virtue,meaning,pleasure and Moksham and thus depict life as a whole.Realizing life in the form of a story stimulates reading, listening and acting with taste. The characters come so often, it is easy for us to travel with their character descriptions and emotions. Their character descriptions make it easier for us to travel with emotional tendencies. Characters can feel their feelings and pleasures as they come often. They provide an opportunity to experience our world even though natural descriptions sometimes seem to restrict the state we feel their beauty and richness through natural paintings. We live well in the world only with nature. If we all had an emotional connection with the natural world, would it be like destroying the forest unnecessarily or grieving that the rain did not come?

Isn't it unnecessary that the children would lose the natural life we enjoyed if we realized these and realized them to the students? Epics, because the intrinsic elements we spoke of arn and Educate.

திறவுச்சொற்கள் (Keyword): காப்பியங்கள், கற்றல், கற்பித்தல், நிலையாமை, அரிச்சந்திரன், கேசி, சுவை, உற்றுழி, வருணனை.

முன்னுரை

நிலவிற்கே மனிதன் சென்றானாயினும் உலக வாழ்க்கையை அவன் இன்னும் முற்ற முழுவதும் புரிபடா நிலையிலேயே உள்ளான். இதனைப் போக்கும் பான்மைய இலக்கியங்கள். கதைவடிவில் சுவையாய் அவனுக்கு வாழ்க்கையைக் கற்றுக் கொடுக்கின்றன; வாழும்

முறையை உணர்த்துகின்றன. அவ்வகையில் காப்பியங்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்கின்றன. இவை வாழ்க்கையின் பல் நிகழ்வுகள், பல் பாத்திரங்கள், சூழல்கள் என ஒரு பிரமிப்பை அவனுக்குள் உருவாக்கினாலும் வாழ்க்கையை உணர்த்தி வாழச் செய்வனவாம். காப்பியங்கள் கற்றலும் அதனைப் பிறர் உணரக் கற்பித்தலும் சிறப்புடைய நிலைகளாக உள்ளமையின் அவற்றைப் பற்றிக் காண்போம்.

1.காப்பியங்கள்

பொருள் தொடர் செய்யுட்களாக அமைவன காப்பியங்கள். இவை அளவால், பொருளால் பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள் என்னும் பகுப்புகளையும் உடையன. 'வாழ்த்து, வணக்கம் வருபொருள் கூறுவதாய், அறம், பொருள், இன்பம், வீடெனும் நாற்பொருள்களை மொழிவதாய், தன்னிகரில்லாத் தலைவனையுடையதாய், மலை, கடல், நாடு, நகர், பருவங்கள், சந்திர சூரியர்கள் என்னும் இரு சுடர்களின் தோற்றங்களை மொழிவதாய், திருமணம், முடிசூடல், பொழில் நுகர்தல், புனல் விளையாடல், கள்ளுண்டு களித்ததல், நன்மக்களைப் பெறுதல் ஊடல், புலவியென இல்லறத்தில் மகிழ்தல், மந்திரம், தூது, செலவு, போர், வெற்றி போன்ற புறவாழ்வுகளை உடையதாய், சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் போன்ற பகுப்புகளில் ஒன்றையுடையதாய் எண்வகையான மெய்ப்பாடுகளும் விளங்க, ஒருவகையாகவும் பலவகையாகவும் பாடல்கள் அமையப் பாடப்படுவனவே பெருங்காப்பியங்கள்; மேற்கூறிய உறுப்புகளில் சில கூடியோ குறைந்தோ வந்தாலும் தவறில்லை; அறம் முதலாய நாற்பொருட்களில் ஒன்று குறையினும் அது சிறு காப்பியமே' என்றும் காப்பிய இலக்கண நிலைகளைத் தண்டியலங்காரம் கூறும் (தண்டியலங்காரம்,பொது.8). பிற்காலத்தவரும் காப்பிய இலக்கண வரையறை செய்துள்ளனர். "காலம் பழமையடைந்தாலும் நூல் புதுமை அழகோடு விளங்கும்படி காப்பியம் அமைய வேண்டுமென"" (கி.வா. ஜகந்நாதன் தமிழ்க்காப்பியங்கள்,ப.271); "எல்லாக் காப்பியக் கதைகளும் மனித சமுதாயத்தின் ஒரு முக்கியச் செயலை நோக்கியே விரியும். இங்கு வருகின்ற மாந்தர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அருஞ்செயலின் குறியீடுகளாகவே அமைவர்" என காசிராஜனும்; "காப்பிய இலக்கியங்கள் நாகரீகத் தொடக்கக்கால இனமரபுக் குழுவினரின் கடவுள் வழிபாட்டிலிருந்துதான் தோன்றியிருக்க வேண்டுமென" ஜான் கிளார்க்கும் கூறக் காணலாம் (இரா. காசிராஜன், தமிழ்க்காப்பியங்கள், பக்.7 ,23).இவ்வாறு பலபடப் பேசப்படினும் மனித மன உணர்வுகளின் பல்கோணங்களை விளக்கமாய், விரிவாய் உணர்த்தும் வாழ்க்கையின் வெளிப்பாடுகள் காப்பியங்கள் எனலாம். காப்பியங்கள் வாழ்க்கைப் பற்றிப் பேசுவனவாதலின் காப்பியங்களைக் கற்றலும், கற்பித்தலும் முக்கிய இடம் பெறுகின்றன.

2. காப்பியங்களைக் கற்றல்

கற்றல் என்பதும் ஒரு வாழ்வியல் பயிற்சி முறையே எனலாம். ஏனென்றால் கற்றலால் பொருளை, மனிதர்களை, உலகை, இறையை அறிந்து கொள்ள முயலுகின்றோம். கற்றல் என்பது வளர்ச்சியின் வெளிப்பாடு. அவ்வகையில் வாழ்க்கையை உணர்த்தும் காப்பியங்களைக் கற்றலும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

2.1 சூழல் உணர்தல் என்பது இலக்கியங்கள் யாவற்றுக்கும் உரிய பொதுவான கற்றல் நிலை. எந்தக் காலச்சூழலில், தேவையின் அடிப்படையில் அவ்விலக்கியம் எழுந்தது என்பது அவ் இலக்கியத்தை உள்ளபடி உணரத் துணை செய்யும் கூறாம். சான்றாக, அவதாரமாய இராமன் மனித இயல்பிற்கேற்பச் செயல்பட்டமையை வான்மீகி இயல்பாகக் காட்ட, கம்பரோ, காலப்போக்கின் வளர்ச்சி மாற்றங்களால் தெய்வீகத் தன்மைக்குக் குறைவு வராத நிலையில்

விடுபாடுகள் செய்துள்ளார்; காரணங்கள் கூறியுள்ளார். இராமாயணத்தில் இராமர் பட்டாபிஷேகத்திற்குப் பின்னுள்ள செய்திகளைப் பாடாமையைக் கூறலாம். ஒட்டக்கூத்தர் பாடியதால் பாடவில்லை என்றொரு காரணம் கூறப்படினும் இராமனைப் பாடுகையில் தெய்வபாவம் தோன்றவே பாடியுள்ளார். வாலி தன் மீது அம்பு விட்டவர் யாரென அறிய முயன்று அம்பைப் பார்க்கையில்,

"மும்மைசால் உலகுக்கெலாம் மூலமந்திரத்தை முற்றும்

தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே

இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை 'இராமன்' என்னும்

செம்மைசேர் நாமம் தன்னை கண்களின் தெரியக் கண்டான்"(கம்ப., 4013).

மட்டுமல்ல காவியச்சூழல் உணர்தல் அக்காப்பியக் கால மக்களின் உணர்வுப் போக்கினைப் பண்பாட்டு நிலைகளை உணர வழி செய்கின்றது.

2.2 காப்பியங்கள் பிரம்மாண்ட வடிவுடையனவாதலின் அவை கூறும் செய்தி, கரு என்னவென்பதை அறிதலும் நம் கற்றலை எளிதாக்கும்.

2.3 இலக்கியங்கள் சுவைப்பிற்கு உரியன; மக்கள் துயர் போக்கிற்கும் வாய்ப்புமாதலின் உணர்ந்து படித்தல் சிறப்பு. எனவே கவிதைகளைப் படித்தல், சொற்பொருள் உணர்ந்து மீண்டும் மீண்டும் கற்றல் என்பது அதன் சொற்பொருள் நயங்களை உணர வழிவகுப்பதுடன், காப்பிய உணர்வில், கருத்தில் இயல்பாய்ப் பயணிக்கவும் உதவுகின்றது.

2.4 காப்பியங்கள் எண்சுவைகட்கு இருப்பிடம். அணிகள் அழகுபெறச் செய்யப்படுவதாதலின் அவற்றை உணர்ந்து கற்றல் காப்பியக் கற்றலின் முடிமணியாம். இது தமிழின் வளத்தைக் காலப்போக்கில் ஏற்பட்ட இலக்கிய இலக்கண உலகின் மாற்றங்களைத் தெளிவாகக் காட்டும் கண்ணாடியுமாம்.

2.5 காப்பியங்கள் வாழ்க்கையைப் பேசுவன. பல பாத்திரங்கள், சூழல்கள் வருவதால் அவற்றை உணரப் புரிபடா மனித இயல்புகள் புரிபடும் வாய்ப்பாக இருப்பதால் நிகழ்வுகளில், சூழல்களில் பாத்திரங்கள் செயல்படும் நிலைகளை அறிதல் வாழ்வில் என்றாவது உற்றுழியாய் நமக்கு உதவும் அல்லது பிறர் வாழ்வில் நிகழின் அவருக்கு ஆறுதல் கூற, வழிப்படுத்த அவர்களை அச்சூழல்களிலிருந்து வெளிக்கொணர உதவுமாதலின் காப்பியக் கல்வியில் பாத்திரங்களைத் திறனாய்வுநிலையில் கற்றல் வாழ்வியலைப் புரியவும் உதவும். இவ்வாறு காப்பியங்கள் கற்றல் வாழ்வியலைப் புரிய உதவுகின்றது

3.காப்பியங்களைக் கற்பித்தல்

காப்பியங்கள் கற்றலின் பெரும்பான்மைக் கூறுகள் காப்பியங்கள் கற்பித்ததலுக்கும் பொருந்தும்.

3.1 காப்பியங்கள் கற்க வேண்டியதன் அவசியத்தை முதலில் புரிய வைக்க வேண்டும். காப்பியங்கள் என்பன மனிதவாழ்வின் முழுநிலையை அல்லது வாழ்வின் பல சூழல்களைப் பற்றிப் பேசுவன; காலச்சூழல்களை அறியலாம். காலப்போக்கில் வளர்ந்த கருத்துமாற்றங்களை, உணர்வு நிலைகளை, பண்பாட்டு பான்மைகளை உணர முடியும்.

சுவைநிலையில் வாழ்வை விளக்குவன ஆதலின் வாழ்வில் கைக்கொள்ளத் தக்க அறங்களைப் பசுமரத்தாணியாய்ப் பதியும்; பழக்கமாய் மாறும். ஆயின் இவற்றை வெளிப்படக் கூறாமல் வாழ்வியல் பற்றி அறிய உதவும் ஊன்றுகோல் என்றும் கூறலாம். இவை யாவுமே காப்பியங்களைக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டுவதால், கற்பித்தல்வழி அவர்களை ஈடுபாட்டுடன் ஈடுபடச் செய்யலாம்.

ஒழுக்கமே உயர்வைத் தருமாதலின் என்றும் தளர்வுறாது அதனைக் கைக்கொள்ளுதல் வேண்டும். புகழுடைய வாழ்விற்கு மட்டுமன்றித் திருப்தியான வாழ்விற்கும் மனிதனாம் தகைமைக்கும் அதுவே அடிப்படையாகும். இதனை,

" நன்றி யறிதல் பொறையுடைமை யின்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டோப்புர வாற்ற வறித றிவுடைமை
நல்லினத் தாரோடு லிவையெட்டுஞ்
சொல்லிய ஆசார வித்து"(ஆசாரக்கோவை, 1).

என நீதியாகக் கூறினால் ஏற்றல் அரிது; கேட்பார்; ஆனால் நாளடைவில் மறப்பார் எனலாம். ஆனால் காப்பியக் கதையாய் கூறின் மறவாராம். வாய்மையின் உயர்ந்த அறம், வாழ்வு இல்லை. இதனை அரிச்சந்திர புராணம்வழி விளக்கலாம். வாழ்க்கையில் பல துன்பங்கள் அடைந்த போதும், மனைவி, மகன், தான் என யாவும் இழந்து அடிமைப்பட்டுத் துயருற்ற போதும் வாய்மையை மறக்காமல், மகனை இழந்து, மனைவியைத் தன் கையால் கொல்ல நேர்ந்த போதும் பொய் கூறாமல் வாய்மையில் உறுதியுடன் நின்ற நிலைகளை, பின்பு அவர் பெற்ற பேறுகளைக் காண்கையில் துன்பம் என்பது வாழ்க்கையில் இயல்பான விஷயமே. அதற்காக நம் கொள்கைகளைக் கைநழுவ விடக்கூடாது. துயர்கள் நம்மை சோதிக்கும் படிக்கட்டுகளே. அவற்றைக் கடந்தால் விழுமிய நிலை அடையலாம் என்பதை உணர்த்துவதாக விளக்கலாம்.

"பதிஇ ழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதிஇ ழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதிஇ ழக்கினும் கட்டுரை இழக்கிலோம் என்றார்
மதிஇ ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்"(அரிச்சந்திர., 130)

என பாடலாய் விளக்கின், கற்பித்தால் மறவாராம். அரிச்சந்திரன் நாடகம் கண்டு வாய்மையே கைக்கொண்ட மகாத்மாவின் மேன்மைகள் நாமறியாததல்ல....வழக்கமாக வாழ்வை மலர்ச்சியாக்க அடுத்த தலைமுறைக்குக் காரணமாய் விளங்கும் காமவுணர்வை சிற்றின்பம் என பழிப்பது வழக்கம். ஆனா அளவுடனென இருந்தால் எதுவும் கேடில்லை. 'களவும் கற்று மற' என்றாற்போல சிற்றின்பத்தை உணர்ந்து அனுபவித்து அதனைக் கடத்தலே மனித வாழ்வை 'வையத்துள் வாழ்வாங்கு வாழச்' செய்யும் என்பதை சீவகசிந்தாமணிவழி விளக்கலாம். சீவகன் தந்தை சச்சந்தனுக்கு விசயை என்னும் ஒரே மனைவிதான். ஆனால் சச்சந்தனோ காமத்தில் ஆழ்ந்து ஈடுட்டு எழமுடியாமல் வீழ்ந்து விடுகின்றான்.

"அசைவிலாப் புரவிவெள் ளத்தரிஞ் யன்குலத் துட்டோன்றி
வசையிலாள் வரத்தின் வந்தாள் வான்சுவை யமிர்தமன்னாள்
விசையையைப் பிரித லாற்றேன் வேந்தனீ யாகி வையம்
இசைபடக் காத்தல் வேண்டுமிலங் குபூண் மார்பவென்றான் " (சீவக. நாமக.172)

ஒரு மனைவியிடம் துய்த்தும் அடங்காதவனாய் தன் ஆட்சி பொறுப்பைத் தன் அமைச்சன் கட்டியங்காரனுக்கு வழங்கித் தன் ஆட்சி அழிவுக்கே காரணமாகின்றான். ஆனால் மகனாகிய சீவகனோ அழகுடன் அருங்குணங்களுடைய சமுதாயத்தில் உயர்நிலையுடைய எட்டுப் பெண்களை மணந்தான். இல்லறமும் நல்லறமாகவே இருந்தது. காமம் துய்த்தார்; ஆனால் அதிலேயே ஆழ்ந்து விடவில்லை. எனவே உரிய காலத்தில் வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்தவராய் உறுதியுடன் உலகியல் வாழ்விலிருந்து விடுபட்டவராய் வீடுபேற்றிற்கான வழியைத் தேடி உயர்நிலை அடைந்தார். இக்காப்பியச் செய்திகள் வாழ்வை, உறவுகளை வெறுப்பது மட்டும் வாழ்க்கையன்று. வாழ்ந்து மேனிலை அடைய வேண்டும் என்பதையே காட்டுகிறது.

"உழவித்தி உறுதி கொள்வார் கொண்டுய்யப் போகல் வேண்டித்
தொழுவித்தி அறத்தை வைத்துத் துளங்கிமி லேறு சேர்ந்த
குழவித்தண் திங்க என்ன இருக்கைய னாகிக் கோமான்
விழவித்தாய் வீடு பெற்றான் விளங்கிநால் வினையும் வென்றே""(சீவக. முத்தி.516).

இல்லறமே கைக்கொள்ளத் தக்கதாதலின் 'பிறன்மனை நோக்காப் பேராண்மை" வேண்டும். அதில் வழுவின் 'கரணம் தப்பின் மரணம்' என்றாற்போல் குலமும் தன்னுடன் அழியும். இந்த வாழ்வியல் உண்மையை

"அறம்புகழ் கேண்மை பெருமைஇந் நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா-பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்று
அச்சத்தோ டிந்நாற் பொருள்"
"காணின் குடிப்பழியாம் கையுறின் கால்குறையும்
மாணின்மை செய்யுங்கால் அச்சமாம்-நீள்நிரயத்
துன்பம் பயக்குமால் துச்சாரி நீகண்ட
இன்பம் எனக்கெ னைத்தால்கூறு" (நாலடி. 82, 84)

என பலமுறை அறம் கூறினாலும் அசையாதவர்களைக் கூட கம்பராமாயணம் கற்பித்தல் வழி உணரச் செய்யலாம். இதனைக் கம்பராமாயணத்தில் வரும் இராவணன் அழிவாலும் கற்பிக்கலாம். இராவணன் கல்வி ,கலை, வீரத்தில் தன்னிகரற்றவன்தான். ஆனால் பிறன்மனையாள் மீது கொண்ட ஆசையால் வீழ்ந்து விட்டான்.

"சினத்தொடும் கொற்றம் முற்றி இந்திரன் செல்வம் மேவி
நினைத்தது முடித்து நின்றேன் நேரிழை ஒருத்தி நீரால்
எனக்குநீ செய்தக்க கடனெலாம் ஏங்கி ஏங்கி
உனக்கு நான் செய்வதானேன் என்னின் யார் உலகத் துள்ளார்"(கம்ப.9224)

பிறர்மனை விரும்பியோர் இழிவை, இழப்பை இதைவிட தெளிவாய்க் காட்சிப்படுத்த முடியாதன்றோ...? பிறர்க்குத் தீங்கு செய்தல் அது தற்காப்பிற்காக என்றாலும் துன்பத்தையே தரும். இதனையே காப்பிய கதைவழி குண்டலகேசி வாழ்க்கைவழி கற்பிக்கத் தெளிவாய் உணர்வர். வணிக மகளாய பத்திரை கள்வனாய காளனைக் கழுவேற்றச் செல்லும் நிலையில் கண்டு காதலுற்று பெரும் முயல்வுக்கிடையில் மணக்கின்றாள். ஒரு நாள் ஊடலில் கள்வனல்லவா என்று கூற, அவள் மீது வெறுப்புடன் மலைமேல் அழைத்துச் சென்று கொல்ல முயல்கின்றான். இதை உணர்ந்த பத்தரையோ, 'கணவனே கண்கண்ட தெய்வமாதலின் அவனை வலம் வந்து வணங்குகிறேன்' என்று வலம் வருகையில்

அவனைக் கீழே தள்ளி விடுகிறாள். தன்னைக் கொல்ல முயன்றவனைத் தான் கொன்றாள். ஆயின் மனச்சான்று உறுத்தத் துறவியான நிலையை விளக்கின் உணர்வாராம்.

வாழ்வின் நிதர்சனம் காட்டல் - தன் மகன் கொலைப்பட மணிமேகலையே காரணம் என வன்மம் மிகக் கொண்டு பழிவாங்கிய அரசிக்கும் நலம் செய நினைந்து உலகின் நிலையா நிலை உணர்த்த முயலும் மணிமேகலையோ,

"உடற்கு அழுதனையோ உயிர்க்கு அழுதனையோ
உடற்கு அழுதனையேல்உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
உயிர்க்கு அழுதனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட் டுவினையால் தெரிந்துணர் வரியது
அவ்வுயிர்க் கன்பினை யாயின் ஆய்தொடி
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்" (மணிமே.சிறைவிடு.73-79).

எனக் கதை நிகழ்வோடு கூறின் எளிதில் புரிந்து கொள்வர்.குண்டலகேசி கூறும்,

"பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்
மீளுமிவ் இயல்பு மின்னே மேல்வரு மூப்பு மாகி
நாளுநாள் சாகின்றமால் நமக்குநாம் அழாததென்னோ" (குண்ட.9).

வினையின் பயனை அனுபவித்தே ஆக வேண்டும் என்னும் வாழ்வியல் நிலையைத் திருடனெனப் பொய்பழி சாட்டப்பட்டுக் கொலையுண்ட கோவலன் நிலையாலும் உணர்த்தலாம் (முன்வினைப்பயன்).

தலைமை நிலையில் இருப்பார் மதிப்பு, மரியாதை, புகழ் பெறுதல் இயல்பே. ஆயின் அவர் தம் விருப்பின்படி தான் நடப்பின அது கேடு தருவதாம். இதனையே வள்ளுவரும்,

"அல்லற்பட் டாற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"(555).

இதனை இவ்வாறு நீதியாகக் கூறுவதைவிட சிலப்பபதிகார பாண்டிய மன்னன் நிலைவழிக் கற்பிக்க எளிதின் விளங்கும். தேவியின் சிலம்பு திருடிய கள்வனைப் பிடித்துள்ளேன் என்கவும், ஆராயாது மன்னன்,

"ஊர் காப்பாளரைக் கூவி ஈங்கென்
தாழ்பூங் கோதை தன்கால் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகில்
கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கென"(சிலப்.கொலைக்.150-153).

எனக்கதையின் முன், பின் சூழல் காட்ட எளிதில் விளங்கும். தாம் தலைமை நிலையடைகையில் மேற்கொள்ளத் தக்க நெறியும் புலனாகும். இவ்வாறு வாழ்வியல் உணர்த்தும் பாங்கினதாய்க் காப்பியங்கள் உள்ளதைக் கற்பித்தால் மனிதன் மனம் பண்பட, நல்லொழுக்கம் கைக்கொள்ள, வாழ்வின் சூழல்களில் உற்றுழியாய் உதவ, புரிய காப்பியங்கள் துணையாவதைப் புரிய வைக்கலாம்.

3.2 மாணவர்களுக்கு நாம் கற்பித்தல் ஒருவகையாயின், அவர்கள் தாமே தம் முயற்சியால் படிக்கும் நிலையை அவர்கள் உணரும்படி கற்பிக்க வேண்டும்.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல-தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய ற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து "(நாலடி.135).

என்றாற்போல சுவைபெறக் கற்கத் துணைசெய் நிலையில் பாக்களைப் படிக்கும் முறையைப், பொருள் தெரிந்து கற்கும் நிலையை எவ்வாறு பெறல் வேண்டும் போல்வனவற்றையும் கற்பிக்க வேண்டும். இது பிற காப்பியங்களைக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டுவதோடு தாமே சுவைப்பிற்கும் வழிவகுக்கும். "பசித்தவனுக்கு மீனை உண்ணக் கொடுப்பதைவிட மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பது சிறந்தது" எனும் பழமொழி இங்கு நினையத்தக்கதாம் (சீனப்பழமொழி - விக்கி மேற்கோள்கள்).

காப்பியம் கற்பிப்பில் ஒப்பீட்டுக் கற்பித்தலும் சுவையை, ஆர்வத்தைத் தூண்டுவதாம். சிலப்பதிகாரம் கற்பிக்கையில், மதுரைக் காண்டம் - புறஞ்சேரி இறுத்த காதையில் வானவர் தங்குகின்ற மதுரையை வலம்வரின் நலம் விளையுமென கவுந்தியடிகள் , கோவலன், கண்ணகி முதலானோர் அகழியைச் சுற்றிவர நீங்கள் மதுரைவரின் கேடே விளையும் எனவே வாராதீர் எனக் கொடிகள் அசைந்தன என்பார் இளங்கோ.

"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரலென் பனபோல் மறித்துக்கை காட்ட"(சிலப்.புறஞ்.189-190).

இங்குக் கொடிகள் 'வராதே' எனக் கைகளை ஆட்ட, கம்பராமாயணத்திலோ, திருமகள் என்னிடம் உள்ளாள் 'விரைந்து வருக' எனக் கையசைத்தனவாம்.

"மையறு றேலரின் நீங்கி யான்செய் மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்த கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லைவா என்றழைப்பது போன்ற தம்மா"(கம்ப.480).

சிலம்பில் வராதே; கம்பராமயணத்தில் வா என எதிர்நிலையையாயினும் இத்தகு ஒப்புகள் காப்பியங்கள் கற்கும் நிலையைத் தூண்டும் கூறுகளாம்.

3.3 பாத்திரப்பண்புகள் வழி மானுடப் பண்புகளை உணர்த்தலாம். மனிதர்கள் உருவங்களால் மட்டுமல்ல உணர்வுகளால், கருத்துக்களால் வேறுபட்டவர்கள். 'ஒருத்தருக்குத் தெரிந்தால் அது இரகசியம். இரண்டு பேர்க்குத் தெரிந்தால் அது பரசியம்'(விளம்பரம்)என்ற மலையாளப் பழமொழி. ஒவ்வொருவர் பண்புகளும், சூழல்களும் வேறுவேறாதலின் காப்பியங்களில் வரும் பல் பாத்திரங்கள், சூழல்களில் மாறுபடும் இயல்புகளின் பண்புகளை அறிவதால், மனித மனங்களின் மாறுபட்டகோணங்களைச், செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளலாம். இது வாழ்வை எதிர்கொள்ளும் பக்குவ நிலையைக் கேட்பவனுக்குள் உருவாக்குவதாம்.

பொறாமையால் தானும் குலமும் அழிந்த துரியோதனனைப் பாஞ்சாலி சபதத்தும்

"பாண்டவர் முடியுயர்த்தே-இந்தப்
பார்மிசை யுலவிடு நாள்வரை நான்

ஆண்டதொ ரரசாமோ-என
தாண்மையும் புகழுமோர் பொருளா மோ?"(பாஞ்சா.அழைப்.29:2);

பிறன் மனையாளை விரும்பியதால் குலத்துடன் அழிந்த இராவணனை; கணவனைக் கண்டிக்க வேண்டிய நேரத்தில் மௌனமாக இருந்தமையால், நாடுவிட்டு நாடு சென்றும் பழியுடன் கணவன் உயிர் போன அவலநிலையைக் கண்ணகியை, மனைவி மீது கொண்ட அடக்கவியலாக் காமத்தால் ஆட்சியை, உயிரை இழந்த சச்சந்தனை என வாழ்க்கையில் தவிர்க்க, குறைக்க வேண்டிய இயல்புகளையும், வாய்மை பேசல் நிலையில் துன்பங்கள் அனுபவித்தும் உறுதியாக நின்றமையால் மேனிலை அடைந்த அரிச்சந்திரன்; கணிகையர் குலத்தில் பிறந்தும் ஒழுக்கத்தில் உறுதியாக நின்றமையால்,' கற்பில் சிறந்தவள் கண்ணகியா..?மாதவியா..?என குலமகளோடு ஒப்பப் பேசும் உயர்நிலையை அடைந்த மாதவி என வாழ்க்கையில் கைக்கொள்ளத்தக்க நிலைகளைக் காட்டியும் கற்பிக்கலாம்.

3.4 இலக்குடைய வாழ்வே சிறந்தது என்பதைக் காப்பிய தலைமைமாந்தர் வழி உணர்த்தலாம். நல்லன, சிறந்தன, உயர்ந்தன செய்பவர்களே நிலையில்லா இவ்வுலகிலும் நிலைத்த வாழ்வைப் -புகழுடம்பைப் பெற முடியும். இது மாணவர்களை ஊக்குவிக்க, அவர்களிடம் தன்னம்பிக்கையைத்,தன்முனைப்பைத் தூண்ட இவ்வகையிலான கற்பித்தல் உதவும்.

3.5 காப்பியங்களில் வரும் வருணனைப் பகுதி சற்று சுவையில்லாததாய்த் தோன்றினும், நம் உலகைச் சுற்றுப்புறச் சூழலை மாணவர்கள் உணரும் வாய்ப்பாக, கருவியாக நாம் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.காப்பியங்கள் மலை,கடல்,நாடு நகர், இருசுடர் தோற்றங்கள் எனும் இவையாவும் காப்பியங்கள் கற்பித்தல்வழி உணர்கையில் இயற்கையின்றி நாம் இல்லை; இயற்கையைக் காத்தல் நம் கடன் எனும் உணர்வு அவர்களுக்கும் எழுவதால் மாசு குறையவும், எதிர்காலச் சந்தியினர்க்கு இயற்கையின் எல்லா வளங்களும், நலங்களும் கிடைக்க வழிவகுக்குமாதலின், இவ்வருணனைப் பகுதிகளை இந்நோக்கில் மாணவர்கள் உணரும்படி கற்பித்தல் சிறப்பாம்.

3.6 இயற்கையே உலகம்; அது இங்குள்ள உயிர்கள் யாவர்க்கும் பொதுவானது; "வாழு; வாழவிடு" என்பதை உணர்ந்து உயிர்க் கருணையுடன் வாழும் உணர்வை உருவாக்கும். இதனை சீவகசிந்தாமணிப் பாடல்வழி விளக்கலாம். குரங்குகள் பாக்குக் காய்களை ஒன்றன் மீது எறிந்து விளையாட, தோற்ற ஆண்குரங்குகள் கனிகளை உதிர்க்கின்றனவாம்... அஃறிணைகளுக்கும் மகிழ்ச்சி, விளையாட்டுணர்வு உள்ளதைக் காடுவதாய் இப்பாடல் வருகின்றது.

"கண்பயில் இளங்கமு கெருத்திற் காய்பரீ இக்
கொண்டிள மந்திகள் எறியக் கோட்டிடைத்
திண்கனி முசுக்கலை சிதறும் தேம்பொழில்
மண்டமர் கடந்தவன் மகிழ்வொ டேகினான்"(சீவக.1616).

3.7 நீர் நமக்கு வளம் செய்வது; வாழ்வைத் தருவது.

"முல்லையைக் குறிஞ்சி ஆக்கி மருதத்தை முல்லை யாக்கி
புல்லிய நெய்தல் தன்னைப் பொருவரு மருதமாக்கி
எல்லையில் பொருள்கள் எல்லாம் இடைதடு மாறும்நீரால்
செல்லுறு கதியில் செல்லும் வினையென சென்ற தன்றே"(கம்ப.28).

நீரால் ஆனது உலகு. பூமியில் 71%நீரே உள்ளதாம் (நீர்-தமிழ் விக்கிப்பீடியா). எதிர்காலத் தேவைகள், மக்கட் பெருக்கம், நீரின்றி உயிர்கள் இல்லை என்றெல்லாம் கருத்துக்களாகக் கூறாமல் நீரால் உண்டாகும் வளம் உயிர்களின் மகிழ்ச்சியென கடல் ஆறு வருணிப்புகளாகக் காட்டுகையில் மாணவர்களை இயற்கை உணர்வில் ஒன்றச் செய்வதுடன், நீர் மேலாண்மை மற்றும் தேவைகளையும் உணரச் செய்கின்றன. இவ்வாறு காப்பியங்களின் கற்பித்தல் பயன்பாட்டைக் கூறிக் கொண்டே போகலாம்.

தொகுப்புரை

செய்யுள் இலக்கிய வகைகளுள் ஒன்றாய காப்பியங்கள் மனித வாழ்வியலுடன் தொடர்புடையன. சூழல் உணர்ந்து கற்றலும், காப்பியங்கள் உணர்த்தும் செய்திகளை உணர்தலும், பாடல்களைப் பொருள், சுவையுணர்ந்து கற்றலும் அனுபவித்தலும், அணிநயங்களை உணர்தலும், வாழ்வியல் உணர்தலும், காப்பியங்கள் கற்றலைச் சிறக்கச் செய்யும். வாழ்க்கை என்பது கற்றலுடன் முடிவதில்லை. தான் உணர்ந்ததை உணர்த்தலும் வாழ்க்கையாம். காப்பியங்களைக் கற்பதற்கான தேவையை உணர்த்தினால் இயல்பாக கற்றல் மீது ஆர்வமும் வருமாதலின் அதை முதலில் தெளிவாக்க வேண்டும். 'சொல்லிக் கொடுத்த வார்த்தைகளும் கட்டிக்கொடுத்த சோறும் எவ்வளவு நாளுக்குத்தான் வரும்?' என்பார்கள். எனவே மாணவர்கள் தாமே படிக்கும் பழக்கத்துக்கு அவர்களைத் தயார் செய்தல் வேண்டும். காப்பிய மாந்தர்கள் வழி, நிகழ்ச்சிகள் வழி வாழ்க்கையை, வாழ் முறையைக் கற்பிக்கலாம். ஆக கற்றலும் கற்பித்தலும் வாழ்க்கையை உணர்த்தும் பாங்கே எனலாம்.

முடிவுரை

கற்றலும் கற்பித்தலும் வாழ்க்கைக்குச் சுவையூட்டுவன; காப்பியங்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல. கவிதைகளைப் பொருளுணர்ந்து படித்தலும், படிப்பித்தலும், அவைவழி வாழ்க்கையை, மனிதர்களை, உலகை உணரச் செய்வதும், வாழ்வதுவுமே காப்பியங்களைக் கற்றல், கற்பித்தலின் பயன்களாம்.

துணைநின்றவை

- சாமிநாதையர், உ.வே., Samynathaiyar, U.V., 2013, ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் (1-2) shree Meenakshi Sundaram pillai's History(1-2), சென்னை , டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்.
- தண்டி Dhandi 2017, தண்டியலங்காரம் Dhandiyalangaram, இராமசுப்பிரமணியம், வ.த.(தெளிவுரை) Ramasubramaniyam, V.D,(Commentary)சென்னை ,முல்லை நிலையம்.
- ஜகந்நாதன், கி.வா., Jagannathan, K.V.,1991, தமிழ்க்காப்பியங்கள்(ஆராய்ச்சி) Tamil Kappiyangal(Research), சென்னை, அமுத நிலையம் லிமிடெட்.
- காசிராஜன், இரா., Kasirajan,R., 2004, உலகக் காப்பியங்கள், World Epics, சென்னை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட் .
- அரசுமணி, புலவர்(உரை)., Arasumani, pulavar(Commentary), 2018, திருக்குறள், Thirukkural, சென்னை, அருணோதயம்.
- கௌமாரீஸ்வரி,எஸ்.(தொ.ர்), Gowmareeswari,S. (editor), 2015, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், சென்னை, சாரதா பதிப்பகம்.
- ஞானசம்பந்தன், அ.ச., ஞானசுந்தரம், தெ., (பதி.ள்) , Gynasambandan,A.S., Gynasundaram,D., (editor), 2002, இராமாயணம், Ramayanam, சென்னை, கங்கை புத்தக நிலையம் .

- ஸ்ரீசந்திரன்,ஜெ., shreeChandran ,J.,2004, ஐம்பெரும் காப்பியங்கள் (1-5) ,Imperum Kappiyangal(1-5) , சென்னை,வர்த்தமானன் பதிப்பகம்.
- வீரன், நெல்லூர். ஆசுகவிராஜர். Veeran,Nelluoor. Asukavirajar,2001, அரிச்சந்திர புராணம், Aricchandira Puranam,சென்னை, குமார் அசோசியேட்ஸ்.
- பாரதியார், Bharathiyar, 2018, பாரதியார் கவிதைகள்,Bharathiyar Kavithaikal,சென்னை, காளீஸ்வரி பதிப்பகம்.
- சீனப் பழமொழிகள் - விக்கி மேற்கோள்கள், https://ta.m.wikiquote.org>wiki
- நீர்-தமிழ் விக்கிப்பீடியா, https://ta.m.wikipedia.org>wiki>ந..

****

வண்ணதாசனின் 'நாபிக்கமலம்' : உளவியல் சிக்கலும் தீர்வும்
Vannadhasanin 'Naabikamalam' : Ulaviyal Sikkalum Theervum

முனைவர் சி.அம்சவேணி | Dr. C. Amsaveni

தமிழ்த்துறை, இணைப் பேராசிரியர், இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த), கோயம்புத்தூர் – 641 028. camsaveni@gmail.com, 9659444010, 9659852010

ஆய்வுச்சுருக்கம்

இலக்கியம் பல்வேறு வகையான சமூகச் சிக்கல்களைக் களைய ஒரு கருவியாகப் பயன்படுகிறது. அது காலத்தைப் பிரதிபலிக்கும் அங்கமாக மட்டும் இல்லாமல், காலத்தைத் தாண்டி நிற்கும் நிலையான பொருண்மைகளை எடுத்துரைப்பதாகவும் அமைகிறது. அவ்வகையில் வண்ணதாசனின் நாபிக்கமலம் சிறுகதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகளில் பாலியல் சிக்கல்கள் உளவியல் நோக்கில் எவ்விதம் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது என்பதைக் கற்றல், கற்பித்தல் நோக்கில் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

Abstract

Literature has been a part of resolving social issues. It serves the purpose not only to reflect time but literature is beyond it. In Naabikamalam short stories it depicts how to overcome sexual and psychological problems. still there is no proper awareness regarding sex education. There are misconception that sex is about physical relationship alone. But i is also more about Psychological trauma. So this story is about sexual realationship interconnected with human Psychology.

திறவுச்சொற்கள் (Keywords) – வண்ணதாசன், உளவியல், நாபிக்கமலம், சிறுகதைகள்

ஆய்வு நோக்கம்

பாலியல் குறித்தான தெளிவான சிந்தனை சமூகத்தில் இன்னும் பரவவில்லை. பாலியல் என்பது வெறும் உடல் சார்ந்தது என்ற சிந்தனை இக்காலச் சமூகத்தினருக்கு அதிகம் உண்டு. பாலியல் என்பது உடல் சார்ந்தது மட்டும் அல்ல, மனவுணர்களும் சார்ந்தது. மனித உளவியல் கூறுகளோடு இணைந்தது என்பதை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஆய்வு அணுகுமுறை

நாபிக்கமலம் தொகுதியில் அமைந்துள்ள சிறுகதைகள் வெளிப்படுத்தும் பாலியல் கூறுகளை விளக்கிக் கூறுவதற்காக விளக்கவியல் அணுகுமுறையும் பாலியல் பதிவுகளை உளவியல் நோக்கில் ஆராய்வதால் உளவியல் அணுகுமுறையும் இக்கட்டுரையில் பயன்படுத்தப்படுகிறது.

ஆய்வுச் சிக்கல்

பாலியல் உறவுகள், பாலியல் எண்ணங்கள் இவற்றால் சமூகத்தில் பல்வேறு சிக்கல் உருவாகிறது. இச்சிக்கல்களை மையப்படுத்தி, பண்பாட்டு முரண்பாடுகள் அதிகம் உருவாகின்றன. எனவே, பாலியல் குறித்தான சமூகச் சூழல்களை எடுத்துக்காட்டி உளவியல் ஆலோசனை மற்றும் உளவியல் சிந்தனையோடு மேற்கண்ட சிக்கல்களை அணுக வேண்டும் என்பதைக் கற்பிப்பதாக இக்கட்டுரை அமையும்.

ஆய்வுப் பகுப்பு

வண்ணதாசனின் நாபிக்கமலம் சிறுகதைத் தொகுப்பில் பதின்மூன்று சிறுகதைகள் உள்ளன. இதில் ஏழு சிறுகதைகள் பாலியல் கூறுகளை மையப்படுத்தி, உளவியல் சிக்கலை வெளிப்படுத்துபவையாக அமைந்திருக்கின்றன. அதன் உள்ளடக்கங்களை வைத்து இரு பிரிவாகப் பிரிக்கலாம். அவை,

1.தனிமைச் சூழல்
1.1. சற்றே விலகி
1.2. இக்கரைக்கும் அக்கரைக்கும்
1.3. அகஸ்தியம்
2. ஆண்- பெண் உறவில் புரிதலின்மையால் வரும் உளவியல் சிக்கல்
2.1 போதாமை
2.2 காற்று வெளியிடை
2.3. நாபிக்கமலம்
2.4. இனிமேல் என்பது இதிலிருந்து

என்பனவாகும்.

ஆய்வுப் பயன்

பாலியலைத் தவறான கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்காமல் உளவியல் சார்ந்து எதிர்கொள்ள வேண்டிய தேவையைக் கற்பிப்பது இவ்வாய்வின் பயனாகும்.

1.தனிமைச் சூழல்

1.1. சற்றே விலகி

கபாலியா பிள்ளை என்கிற முதியவர் பாலியல் எண்ணங்கள் கொண்டவர். அவரைச் சுற்றியிருக்கும் மனிதர்கள் கபாலியா பிள்ளையை நடத்துகிற பாங்கினால் அவருக்கு ஏற்படுகிற உளம்சார் சிக்கல்கள் தான் இச்சிறுகதையின் கதைக்கருவாகும்.

கபாலியா பிள்ளையின் உளவியல் சிக்கல்களை அவருடைய குடும்பத்தார் புரிந்து கொள்ளவில்லை. அவரின் மனநிலையைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்றாற் போல் அவருடைய சிந்தனைகளை மாற்றியிருக்கலாம். அப்படி மாற்றியிருந்தால் சொந்த மகனே அவரை ஒரு பாலியல் குற்றவாளியாகக் கருதியிருக்க மாட்டார். கபாலியா பிள்ளைக்கு மனநல ஆலோசனை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவரது குடும்பத்தார்க்கு இல்லை. மகனின் மனைவியை, அண்டை வீட்டுப் பெண்மணிகளை, பாலியல் எண்ணங்களோடு அவர் பார்ப்பதாகக் குற்றம் சாட்டிய குடும்பத்தாருக்கு, அவருக்கு மனநல ஆலோசனை தேவை என்ற சிந்தனை எழவில்லை. மேலும் அவருடைய தனிமைச்சூழல் அவரை இன்னும் உளநோயாளியாக மாற்றிக் கொண்டிருந்தது.

பொதுவாக இச்சமூகம் உளம்சார்ந்த நோய்களைச் சிகிச்சையின் மூலம் குணப்படுத்த முடியும் என்ற அடிப்படை அறிவு பெறவில்லை. இதன் காரணம் உளவியல் நோயாளியை மனநலம் குன்றியவராக, பைத்தியக்காரர்களாகவே மட்டுமே கருதிக் கொண்டிருப்பது தான். கபாலியா பிள்ளையைப் போல் பல முதியவர்களுக்கு இது போன்ற உளவியல் சிக்கல்கள் வர அவர்களது தனிமையே காரணமாகிறது. கபாலியா பிள்ளையை பாலியல் எண்ணங்களைக் காரணங் காட்டி அவரைத் தனிமையில் வைத்திருந்தனர். அதனால் பாலியல் எண்ணங்களினால் வருகிற உளவியல் சிக்கல் இன்னும் அதிகமாக மாறியது. "அடக்கி மறைத்தல், ஒடுக்குதல் ஆகிய உள்ளப் போக்கிற்கு நேரெதிரான உளவியல் செயல்படுத்தல் அல்லது வெளிப்படுத்துதல் (Acting out) ஆகும். மனத்தில் அழுந்திக் கிடக்கும் சிக்கல்களை மறுபடியும் வெளிக்கொணர்ந்து அவற்றை மறுபடியும் நினைவின் மூலமாக, அனுபவிக்கும்படி செய்துவிட்டால் அந்தச் சிக்கல்களினால் ஏற்படும் கோளாறுகள் நீங்கி விடுகின்றன."[1] (சங்க இலக்கியத்தில் உளவியல்,ப.175.) என்கிற சிவராஜ் அவர்களின் கூற்றிற்கேற்ப கபாலியா பிள்ளையின் உளநோயினைக் குணப்படுத்த முடியும். இதனை அவரது குடும்பத்தார் உணரவில்லை.

1.2. இக்கரைக்கும் அக்கரைக்கும்

தனிமையினால் வருகிற உளவியல் சிக்கலுக்கு வண்ணதாசனின் நாபிக்கமலம் சிறுகதைத் தொகுதியில் உள்ள இக்கரைக்கும் அக்கரைக்கும் என்ற சிறுகதையில் வருகிற குருசாமி என்பவரும் ஒரு சான்று. தன் மனைவியை கார் விபத்தில் இழந்து விட்டு தனிமையில் வாழ்ந்து வந்தார். குருசாமியும் விபத்தில் கால் செயலிழந்து இருந்தார். அவரது உதவிக்கு, வீட்டில் வேலை செய்வதற்காக நாராயணனின் மனைவி கஸ்தூரி வருவாள். அவளிடம் குருசாமி நடந்து கொள்கிற முறைகளைப் பார்த்தால் மற்றவர்கள் தவறான உறவுமுறை கொண்டவர்கள் என எண்ணுவார்கள். ஆனால் கஸ்தூரி அவரை முழுமையாகப் புரிந்து கொண்டாள். மனைவியை இழந்து அனாதரவாக இருக்கும் முதியவருக்கு வேலை

செய்வதாக நினைத்தாள். தன் மனைவியை இழந்து வருந்தும் ஒருவர் முன் மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருந்தால் பொதுவாக ஒருவித மனக்கசப்புத் தோன்றம். ஆனால் நாராயணன் கஸ்தூரியிடம் நெருக்கமாக இருப்பதைப் பார்த்து குருசாமி மகிழ்ச்சி அடைந்தார். குருசாமியின் குறைப்பட்ட கால்கள் குறித்து வேறு யாருக்கேனும் தெரிவதில் அவருக்கு விருப்பம் இல்லை. ஆனால் அந்தக் குறை கஸ்தூரிக்குத் தெரிவதில் அவருக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. இவ்விரு கதைகளிலும் இருவேறுவிதமான உளவியல் சிக்கல்களை வண்ணதாசன் எடுத்துக் காட்டியுள்ளார்.

சற்றே விலகி சிறுகதையில் கபாலியா பிள்ளையின் பாலியல் எண்ணங்களை அவரது குடும்பத்தார் முறைப்படுத்தாமல் அவரைக் குற்றவாளியாக மட்டுமே பார்த்தனர். அதன் பொருட்டு அவரைத் தனிமையில் விட்டனர். அந்தச் சூழலை அவரை இன்னும் அதிகமாக உளவியல் நோய்க்கு ஆளாக்கியது. கபாலியா பிள்ளையின் மனைவி திரவியம் படுத்த படுக்கையாகிப் போன காலங்களில் அவரது தேவையை உணர்ந்து கொள்ள குடும்பத்தில் யாருமில்லை. அதனால் குடும்ப உறுப்பினர்கள் தன்னைக் கவனிப்பதற்காக சில செயல்களைச் செய்கிறார். அது கபாலியா பிள்ளையின் பாலியல் இச்சைகளை வெளிக்காட்டுவதாக இருக்கிறது.

இக்கரைக்கும் அக்கரைக்கும் என்ற சிறுகதையில் குருசாமி என்பவருக்கும் பாலியல் இச்சைகள் இருக்கிறது. ஆனால் அதனைத் தன்னுடைய செயல்கள் மூலம் செய்யாமல் பிறரின் மகிழ்வான தருணங்களை அதாவது கணவன் மனைவி நெருக்கங்களைப் பார்ப்பதில் மகிழ்ச்சியடைகிறார். மேலும், கஸ்தூரி என்கிற வேலை செய்கிற பெண்ணிடம் உன் கணவன் எப்படியிருக்கிறார்? குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள் என அவ்வப்போது விசாரித்துத் தன்னுடைய தனிமைச் சூழலை மாற்றிக் கொள்கிறார்.

உளவியல் பிரச்சினைகள் பலவிதமாகும். அதிலும் தனிமைச் சூழலால் வருகிற பிரச்சினைகளுக்குத் தீர்வு என்பது அவர்களை ஒதுக்காமல் சரியான நேரத்தில் மனநல ஆலோசனை, குடும்பத்தாரின் அரவணைப்பு ஆகியவை தேவையான ஒன்றாகும். இது போன்ற உளவியல்சார் சிக்கல்களுக்கான தீர்வை இளைய சமுதாயத்தினரிடம் கற்பிக்கும் பொழுது எளிமையாக முதியவர்களின் உணர்வு நிலையைப் புரிந்து, அதற்கு ஏற்றாற்போல் குடும்பத்தார் நடந்து கொள்ள வழிவகை ஏற்படும்.

இதுபோன்ற கதைகளை உளவியல் அணுகுமுறையில் பார்க்கும் பொழுது படைப்பின் வழியாக சமூகத்திற்குத் தேவையான உளவியல் கண்ணோட்டங்களைக் கற்பிக்க முடியும். "இலக்கியத்தைப் புரிந்து கொள்ளவும் படைப்பின் வழியாகத் தனிமனித மற்றும் சமூக மனத்தினைப் புரிந்து கொள்ளவும், படைப்பினை மேன்மேலும் சுவையூட்டக் கூடியதாக மாற்றவும் எனப் பல கோணங்களில் வைத்துப் பார்ப்பதற்கு உளவியல் துணை நிற்கிறது. " (திறனாய்வும் அணுகுமுறையும், தி.சு.நடராசன்,ப.71) எனவே வண்ணதாசனின் சிறுகதைகளை உளவியல் கூறுகளோடு அணுகுவது சாலச்சிறந்ததாகும்.

1.3.அகஸ்தியம்

சமூகத்தில் உளவியல் சிந்தனைகளுக்குச் சரியான மதிப்புத் தரப்படுவதில்லை. அதனாலேயே சாதாரணமாகக் கடந்துபோகிற செயல்கள்கூட உளவியல் சிக்கல்களாக மாற்றம் பெறுகின்றன. பாலியல் எண்ணங்களை வெளிப்படுத்துகிற தன்மையைப் பொறுத்து அவை உளவியல் சார்ந்த பிரச்சனைகளால் வந்த பாலியல் எண்ணங்களா? என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

தனுஷ்கோடி அகஸ்தியருடன் நெருங்கிப் பழகியதற்கான காரணம் அவருடைய துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளவே. அதனால் அந்தத் துயர் மனப்பான்மையில் தன்னுடைய செயல் சரியானதா என்பதை அவன் ஆராயவில்லை.

"இன்ப வெள்ளத்தால் துன்பப் புயலால் நெஞ்சு அலையும்போது, அவற்றைப் பிறரிடம் பேசினால் ஆறுதல் உண்டாகும்."(சங்க இலக்கியத்தில் உளவியல்,ப.175) என்கிறார் சிவராஜ். அதுபோல தனக்கு ஏற்பட்ட துன்பத்திலிருந்து விடுபட ஆறுதலுக்காகவே தனுஷ்கோடி அகஸ்தியரை நாடிச் சென்றான். தன்னுடைய தங்கை இறந்த பொழுது யாருமற்ற தனக்கு ஆறுதலாய் இருந்தது அகஸ்தியர் தான். சிலகாலம் கழிந்ததும் திருமணமான பெண்ணுடன் நெருங்கிய உறவில் இருந்தது தவறு என நினைத்து அகஸதியரை விட்டு விலகுகிறான்.

அகஸ்தியர் மீது தனுஷ்கோடி கொண்ட அன்பு என்பது ஆறுதலுக்காக, தன்னுடைய துயர் களைவதற்காக ஏற்பட்டது. "பொதுவாகப் பாலியல் சார்ந்த குற்றங்கள், ஆண்களால் மட்டுமே நிகழும் என்ற கற்பிதம் சமூகத்தில் தொன்றுதொட்டு நிலவி வருகிறது. பெண்களாலும் பாலியல் சார்ந்த குற்றங்களும் பிரச்சினைகளும் தோன்றுவதும் உண்டு. இது நீரில் உள்ள குமிழி போல் பெரும்பாலும் வெளிப்படுவது இல்லை. "சில வகையான உள்ளக் கிளர்ச்சிகள் நேரடியாகக் கூறப்படுதல் தடுக்கப்படும்போது மறைமுகமான வழிகளில் வெளிப்படுத்தப்படுவது உண்டு. எடுத்துக்காட்டாக, வெறுப்புணர்வு, துன்புறுத்துவதும், தூற்றுவதுமான முறையிலும் கவலையும் அச்சமும் தொடர்ந்து அமையும், களைப்பு மற்றும் உளஞ் செய்நோயின்(psychomatic) அறிகுறிகளாகவும் வெளிப்படுத்தப்படும்." (சிவராஜ். து, டாக்டர், சங்க இலக்கியத்தில் உளவியல்,ப.166.) என்ற கருத்து இக்கதைக்குப் பொருந்தும். தனுஷ்கோடி தன்னை விட்டு விலகியதை நினைத்து வெளிப்படையாகக் கவலைப்படாதது போல் இருந்தாலும் மனதில் அந்த பாரம் மிக அதிகமாக அகஸ்தியருக்கு இருந்தது. அதனால் அவள் துயர் கொண்டாள். அகஸ்தியர் அந்நிலையிலிருந்து மீள முடியாமல் உளநோய்க்கு ஆளாகிறாள். இதனை அவளது கணவன் பழனியின் உரையாடலில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

இருவரும் சரியான புரிதலோடு இருக்கும்பொழுது பாலியலால் வருகிற உளவியல் சிக்கல்களைத் தடுக்கலாம். ஆறுதல் படுத்துவதற்குப் பாலியல் மட்டுமே வழியல்ல. இதனை தனுஷ்கோடியும் அகஸ்தியரும் புரிந்திருந்தால் இச்சிக்கல் தோன்றியிருக்காது. பெரும்பாலான தவறான பாலியல் தொடர்புகள் இதுபோன்ற ஆறுதல் கூறும் நிலையிலிருந்து தான் ஆரம்பிக்கின்றன. பிறருக்கு ஆறுதல் தருகிற செயலின் எல்லையை நாம் உணரும்போது அது நல்ல நடவடிக்கைக்கு ஆதாரமாக அமையும். இதுபோன்ற நிகழ்வுகளில் ஆண்களும் பெண்களும் தமக்கான எல்லையை வகுத்துக் கொள்ளுதல் அவசியம்.

2. ஆண்- பெண் உறவில் புரிதலின்மையால் வரும் உளவியல் சிக்கல்

பாலியல் எனபது ஆண் -பெண் இருபாலருக்கும் இருக்கின்ற ஒன்றாகும். இதனைத் தவறான கண்ணோட்டத்தில் அணுகும்போது அது சமூக ஒழுக்கத்திற்குப் புறம்பானதாகக் கருதப்படுகிறது. இதைப் பிரித்துணர முடியாத சிலர் சரியென்று கருதி பல தவறுகளைச் செய்கின்றனர். உடலால் துன்புறுத்துவது மட்டும் பாலியல் துன்புறுத்தல் அல்ல. மனதளவில், செய்கையில் என அனைத்துமே பாலியல் துன்புறுத்தலாகத்தான் அமையும். "பாலியல் என்பது பாலின்ப ஈடுபாடுகள், நடத்தைகள், தொழிற்பாடு பற்றிய படிப்புத் துறை ஆகும். பாலியல் துறை உயிரியல், உளவியல், சமூகவியல், மருத்துவம், புள்ளியியல், குற்றவியல்

ஆகிய துறைகளுடன் நெருங்கிய தொடர்புடையது. இது அவற்றின் அறிவையும் முறைகளையும் பயன்படுத்துகிறது." (sexology,Merriam websiter, tamil Wikipedia.) இங்ஙனம் பாலியல் குறித்த தெளிவான மதிப்பீடுகள் நம்மிடையே இருந்தால் காதல் என்கிற பெயரில் நடக்கின்ற பல பாலியல் தொல்லைகள் நீங்கும். வண்ணதாசனின் நாபிக்கமலம் சிறுகதைத் தொகுதியில் இருக்கின்ற இக்கருத்தை ஒத்த சிறுகதைகள் குறித்து இப்பகுதி விளக்குகிறது.

2.1. போதாமை

ஒருவரைக் குறித்து மனதில் ஏற்படுகிற எண்ணங்கள் நாளடைவில் பாலியல் சிந்தனையாக மாறும்பொழுது ஏற்படுகிற உறவுச் சிக்கல்களைக் கதை வெளிப்படுத்துகிறது. காசிராஜன், தாயம்மாள் என்ற இரு கதாபாத்திரங்களுக்கு இடையேயான புரிதலின்மையால் வரும் பாலியல் சிக்கல்தான் கதையின் மையமாக உள்ளது.

தாயம்மாளை ஒருதலையாக நேசித்து வருகிறான் காசிராஜன். அவளது இயல்பான அழகு, அவனைக் கவர்ந்திழுக்கிறது. இதனை, மறைமுகமாகவும் சிலநேரம் வெளிப்படையாகவும் தாயம்மாளிடம் காசிராஜன் வெளிப்படுத்துகிறான். மனதில் தவறான எந்த எண்ணமும் இல்லாத தாயம்மாள் ஒளிவுமறைவு எதுவும் இல்லாமல் தன் கணவனிடம் சொல்கிறாள். அவ்வளவு மனமொத்த தம்பதிகளாக தாயம்மாளும் அவன் கணவன் சபாபதியும் திகழ்கின்றனர். காசிராஜனுக்குத் தான் அவளை நேசிக்கிற அளவுக்குத் தாயம்மாளும் தன்னை நேசிக்க வேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறது. இது உளநோயில் ஒரு வகையாக இருக்கிறது. "மூங்கில் இலை உரசின மாதிரி உங்க சேலைத் தலைப்பு பட்டுகிட்டே இருந்த குறுகுறுப்பு அந்த ஃபோட்டோவில் என் முகத்தில தெரியும்" (வண்ணதாசன், நாபிக்கமலம்,ப.24.) என்று அவளின் உடல் உறுப்புகளோ, ஆடைகளோ காசிராஜன் மீது பட்டு விடாதா என ஏங்குகிறான். இது போன்ற எண்ணங்களே காலப்போக்கில் முதிர்ந்த உளநோயாக மாறுகிறது. அதுவும் அவள் திருமணமானவள் எனத் தெரிந்தும் அவன் எதிர்பார்ப்பது தவறான எண்ணமாகும். பட்டிமன்றம் பேசுவதைத் தாயம்மாள் நிறுத்திக் கொண்ட போதும் ஏதேனும் காரணம் காட்டி அவளைக் காண வேண்டும். தன் கவிதைகளை அவள் படிக்க வேண்டும். தன்னைக் குறித்த நினைவுகள் அவளிடம் இருக்கின்றனவா? என அறிய வேண்டும் என்கிற ஆவல் கொண்டிருக்கிறான். தனிமையில் அவளுடன் இருக்க எண்ணுகிறான். இதுதான் காசிராஜனுடைய உளவியல் சிக்கலாகும்.

இச்சிக்கலை நாம் புரிந்து கொள்ள உளவியல் நோக்கோடு நாம் அணுகும் போதுதான் அதற்கான தீர்வுகள் குறித்து நாம் சிந்திக்க இயலும். இதனை, உளவியல் அணுகுமுறையின் முக்கிய நிலைகளில் ஒன்றாகக் குறிப்பிடுகிறார்கள் ஆய்வாளர்கள். **"படைப்பாளியின் உள்ளத்து நிலையையும் அதற்குரிய காரணங்களையும் அறியக் கொண்டு வருதல் அதாவது படைப்பாளியின் சுய வரலாற்றைப் படைப்பில் காணுதல், குறிப்பிட்ட இலக்கியத்தில் காணப்பெறுகின்ற கதைமாந்தர்களின் உணர்வுகளையும் செயல்களையும் விளக்குதல்"** (திறனாய்வும் அணுகு முறையும், தி.சு.நடராசன்,ப.72.) என்பன போன்ற படிநிலைகளின் மூலம் இது போன்ற உளவியல் சிக்கல்களைப் புரிந்து கொள்ளலாம் எனக் குறிப்பிடுகின்றனர்.

2.2. காற்று வெளியிடை

ராஜாங்கம் என்கிற கதாபாத்திரம் மாணவப் பருவத்தில் இருக்கும் பொழுது தனது ஆசிரியர் மீது தவறான பாலியல் கண்ணோட்டத்தினைக் கொண்டுள்ளார். காலம் பல கடந்த பின்பும் அவரது எண்ணங்கள் மாறாது இருக்கின்றது. இது போன்ற பாலியல் சிக்கல்களும், சிக்கலுக்கான காரணங்களும் இச்சிறுகதையின் மையப் பொருண்மையாக உள்ளது.

ராஜாங்கத்திற்குத் தனது ஓவிய ஆசிரியரின் மனைவி குருமணி டீச்சர் மீது ஒரு ஈர்ப்பு இருந்தது. குருமணி டீச்சர் ஓவிய ஆசிரியரோடு நடந்து வருகையில் தன் நண்பன் தேவராஜ் தான் அறிமுகப்படுத்தினான். கூடவே டீச்சருக்கும் தமிழ் ஆசிரியர் மகேந்திரன் சாருக்கும் தவறான தொடர்பு உண்டு என்றும் சொன்னான். குருமணி டீச்சரைப் பார்த்த அந்த நொடியிலேயே ஆச்சியின் வீட்டிற்குப் போகும்போது அங்கு இருக்கும் பெருமாள் அத்தைதான் ராஜாங்கத்திற்கு நினைவுக்கு வந்தாள்.

பெருமாள் அத்தை, ஊருக்கு ராஜாங்கம் போகும்போது அவனைக் கொஞ்சுவாள். அது அவனுக்குப் பிடிக்கும். **"லீவுக்கு களக்காட்டு ஆச்சி வீட்டிற்குப் போகும்போது எல்லாம் பெருமாள் அத்தை ராஜாங்கத்தை முத்தம் கொஞ்சிக் கொண்டே இருப்பாள். ரொம்ப நாளைக்கு அப்புறம் கல்யாணமாகி புத்திக்குச் சரியில்லாமல் இருந்து செத்துப்போனாள். இப்போது கூட தன்னை அறியாமல் ராஜாங்கத்தின் கைக்கு கன்னத்தில் இருக்கிற எச்சில் நுரையைத் துடைத்துக் கொள்ளத் தோன்றுகிறது."** (வண்ணதாசன், நாபிக்கமலம்,ப.45). தனக்குப் பிடித்த பெருமாள் அத்தை சாயலில் இருக்கிற குருமணி டீச்சரின் மீது ஈர்ப்பு வந்தது அதிசயமாக இல்லை.

மகேந்திரன் சாரைப் பிடிக்கிற அளவுக்கு குருமணி டீச்சரையும் பிடிக்கும். அவர் சேலை கட்டுகிற விதம், சீரான உடல்வாகு, இயல்பான பேச்சு இவையெல்லாம் மாணவப் பருவம் தாண்டியும் திருமணமான பின்னும் ராஜாங்கத்தின் மனதில் நின்றது தான் ராஜாங்கத்தின் உளவியல் சிக்கல். ஓவிய ஆசிரியர் இறந்த பிறகு சில காலம் கழித்து குருமணி டீச்சரைப் பார்க்கும் போது அவன் மனதில் எழுகின்ற அதே உணர்வு இன்னும் மனதில் குருமணி டீச்சரின் மீது உள்ள ஈர்ப்பு எதுவுமே மாறவில்லை. டீச்சரிடம், "உங்க கையைப் பிடிச்சுகிடலாமா டீச்சர் என்றான். இப்படிக் கேட்கப்படக் காத்திருந்தது போல, ஒரு கையை அல்ல, இரண்டு கைகளையும் அவர் நீட்டினார். எழுந்து நடனம் ஆடப்போகிற ஒரு பாவனையில் ராஜாங்கம் அந்த இரண்டு கைகளையும் பற்றிக் கொண்டு அப்படியே இருந்தான். " (வண்ணதாசன், நாபிக்கமலம்,ப .50.)

"தற்கால சமூகத்தில் பாலியல் தொடர்பாகப் பேசுவதே தப்பு என்றல்லவா போதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மை யாதென யாவருக்கும் தெரியும்தானே. ஆதியில் பாலுணர்வு இல்லாமல் மனித சமூகம் ஓர் அடி கூட நகர்ந்திருக்க வாய்ப்பில்லை. பாலுறுப்புகளை கற்பனை செய்து கொள்வதிலும், தன் கற்பனைப்படி அதனை வரைந்து பார்ப்பதிலும் ஆர்வமுள்ள ஓர் ஆதிவாசியின் ஜீன் எப்போதும் எக்கால மனிதனுக்குள்ளும் பயணித்துக் கொண்டே இருக்கும். அதனால்தான் நம் ஊர் பொதுக் கழிவறைகள் எங்கும் குகைச் சித்திரவாசியின் வழிவந்தவர்கள்போல் தங்கள் அந்தரங்க சித்திரங்களை தீட்டியபடி இருக்கின்றனரோ என்று நினைக்கத் தோன்றுகிறது." (https://www.puthiyathalaimurai.com/newsview/102913/Bold-Attempt-of-ki-rajanarayanan---vayathu-vanthavargalukku-mattum-) என்கிற கி.ராவின் கூற்றுப்படி பாலுணர்வு நாம் பிறந்ததிலிருந்தே நம்முடன் இருக்கின்ற ஒரு உணர்வு ஆகும். இதனை எச்சூழலில் யாரிடம் வெளிப்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே அது ஏற்புடையதா இல்லையா எனப் பிரிக்க

இயலும். ஆசிரியர் போன்ற சமூகத்தில் போற்றப்படக்கூடியவர் மீது பாலியல் இச்சை கொள்வது தவறானது. அதனைத் திருத்தி அமைக்கவும், அவ்வுணர்விலிருந்து வெளியே வரவும் சரியான வழிகாட்டுதல் அவசியம்.

ஆண் பெண் இணைந்து இருந்தால் அது தவறான உறவு என்ற எண்ணம் நீங்க வேண்டும். போதாமை சிறுகதையில் காசிராஜன் தன் உணர்வை வெளிப்படுத்தும் போது தாயம்மாள் எந்த உணர்வையும் பதிலாகத் தரவில்லை. ஆனால் காற்றுவெளியிடை சிறுகதையில் தனக்குப் பிடித்த குருமணி டீச்சரை நீண்ட காலம் கழித்துப் பார்க்கும் போது தன் உணர்வை வெளிப்படுத்தியவுடன் பதிலுக்கு அவரும் தன் உணர்வைக் காட்டியவுடன் ராஜாங்கத்தின் இத்தனை வருட மன அழுத்தத்திற்கு விடுதலை கிடைத்தது. அது பாலியல் உணர்வாக இல்லாமல் இருந்ததால் மனதளவில் ராஜாங்கத்திற்கு மாற்றம் கிடைத்தது. பாதிக்கப்பட்டவர்களின் மனவோட்டத்தைப் புரிந்து கொண்டு நடப்பதே உளவியல் பிரச்சனைகளுக்குத் தீர்வாகும்.

பாலினப் புரிதல் ஒவ்வொருவருக்குள்ளும் வரும் பொழுது இதுபோன்ற உளவியல் சிக்கல்களைத் தவிர்க்கலாம். தாயம்மாள் காசிராஜனிடம் இன்னும் வெளிப்படையாகத் (பாலியல் ரீதியானது அல்ல என்னுடைய பழக்கம் எனத்) தன்னுடைய எண்ணங்களைச் சொல்லியிருந்தால் காசிராஜனுடைய பிரச்சனை முடிந்திருக்கும். ஏனெனில் காசிராஜன் என்றும் பாலியல் குற்றவாளி அல்ல. பாலியல் எண்ணம் கொண்டவன் அவ்வளவே. இந்த நோக்கத்தோடு ஒருவர் தன்னை அணுகும்போதே சரியான புரிதலோடு அவருக்கு விடை தரப் பழக வேண்டும். இதுவே இச்சமூகத்திற்கு இன்றைய தேவை.

2.3.. நாபிக்கமலம்

திருமணமாகிக் குழந்தை பிறந்தவுடன் சில பெண்களுக்கு ஏற்படும் உளவியல் சிக்கல் தான் இக்கதையின் அடித்தளம். சங்கரபாகத்தின் மீது சுந்தரி பிறந்தவுடன் கனகுவிற்கு சந்தேகம் என்ற நோய் உருவானது. எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் தன் கணவனுடன் சம்பந்தப்படுத்திப் பேசி சங்கரபாகத்தைக் காயப்படுத்துவாள். ஆனால் சங்கரபாகம் அப்படி எந்தப் பெண்களோடும் முறை தவறி நடந்து கொண்டது கிடையாது. கனகு தனக்குக் குழந்தை பிறந்தவுடன் தன்னுடைய அழகெல்லாம் கெட்டுவிட்டது. அதனால் கணவன் மற்ற பெண்களுடன் பேசுகிறான், சிரிக்கிறான், அன்பளிப்புத் தருகிறான் என எண்ணுகிறாள். சிலசமயம் தான் எண்ணுவது போல் இல்லை என நினைத்தாலும் அதனை நம்பும் பொழுதுதான் கனகுவிற்கு நிம்மதி கிடைக்கிறது. தன் பெண் சுந்தரிக்கு நிச்சயமாகி இருந்த மாப்பிள்ளையின் உறவினப் பெண் வீட்டிற்கு வந்து பேசிவிட்டுப் போனாள். அவள் வந்து சென்றதையும் பற்றி, "தன்னுடைய கைகளை இரண்டு மார்புப் பக்கமும் கூப்பி வைத்துக் கொண்டு, இப்படி இப்படி ரெண்டையும் ஆட்டிக்கிட்டு அவப் பேசுவா, நீரு அவ குசுவைக் குடிச்சுகிட்டு காரு வரைக்கும் அவ பொட்டி படிக்கை எல்லாம் கொண்டி வச்சிட்டு வருவீரு. இங்கே நான் விக்கிச் செத்தால்கூட ஒரு மடக்குத் தண்ணீர் கோரிக் கொடுக்க எனக்கு நாதியில்லை." (வண்ணதாசன், நாபிக்கமலம்,ப .67.) என்று சங்கரபாகத்தைத் திட்டித் தீர்ப்பாள்.

கனகுவின் மனதில் சங்கரபாகம் தன்னை வெறுத்து ஒதுக்கி வேறு பெண்களின் பின்னால் சென்றுவிடக் கூடாது என்ற உணர்வே அவளது சந்தேக மனப்பான்மைக்குக் காரணம். கனகு இறக்கும் வரை அவளது மனதில் இத்தகைய எண்ணமே ஓடிக் கொண்டிருந்தது. சங்கரபாகத்தைக் குறித்த மனநோயே கனகுவின் மரணத்திற்குக் காரணமாக

அமைந்திருக்கலாம். சரியான நேரத்தில் கனகுவிற்கு மனநல ஆலோசனை கொடுக்கப்பட்டிருந்தால் இத்தகைய சிக்கல் வந்திருக்காது.

2.4.இனிமேல் என்பது இதிலிருந்து

தன்மேல் அக்கறை கொள்கிற ஒரு மனிதன் மேல் ஏற்படுகிற பாலியல் எண்ணங்களையும் அதனால் ஏற்படுகிற உளவியல் சிக்கல்களையும் இந்தக் கதை விளக்குகிறது.

இனிமேல் என்பது இதிலிருந்து சிறுகதையில், கோமு தன் அம்மா உடல்நலம் சரியில்லாது இருப்பதால் அவள் மீது அதிக அன்பு கொண்டவனாக இருக்கிறாள். கோமுவின் அம்மா இறந்தபிறகு நடக்கும் நிகழ்வில் இணைகிற தன்மனைவி ஆவுவின் உறவினரான பாரதி அத்தான் என்ற கதாபாத்திரம் தான் இக்கதையில் ஆவுவிற்கு ஏற்படுகிற உளவியல் சிக்கலுக்குத் தீர்வாக இருக்கிறார். அம்மாவின் இழப்பு கோமுவிற்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது. இதுபோன்ற சூழ்நிலையில் அவர்களது குடும்பத்திற்குப் பேராதரவாக இருப்பவன் பாரதி தான். ஆவுவிற்கு பாரதி அத்தான் மீது ஒரு ஈர்ப்பு இருந்தது. இதனைத் தீர்க்க பாரதி, "இந்த உலகத்துல அவனுக்குத் தெரிஞ்சது ரெண்டே ரெண்டு பொம்பிளைகள் தான். ஒண்ணு அவ்வொ அம்மை, இன்னொண்ணு நீ. இப்போ நீ வீட்டுக்குள்ளே போறியே, இதுல இருந்துன்னு வச்சுக்கோ. சரியா? (வண்ணதாசன், நாபிக்கமலம்,ப. 137.) என்று அவளைத் தட்டிக் கொடுத்தான்." என்று ஆவுவின் மனம் சார்ந்த பிரச்சனையையும் எண்ணத்தையும் மாற்றுகிறான்.

ஆண்-பெண் புரிதலின்மையால் இன்றைய சூழலில் நிறைய சிக்கல்கள் வருகின்றன. தான் நேசிக்கிற பெண் தன்னை நேசித்தே ஆகவேண்டும் என்கிற பிடிவாதமே நிறைய இளைஞர்களிடம் உளநோயாக உருமாறி ஆசிட் வீசி அந்தப் பெண்ணைத் துன்பப்படுத்தத் துணிவதும், கொலை செய்வதும் என பெரிய சிக்கல்களை உருவாக்குகிறது. இதனைப் போக்க பதின்ம வயதுகளிலேயே பாலியல் குறித்த கல்வியும், பெண்ணும் ஒரு சக உயிரி தான் அவளைப் பாலியல் நோக்கில் மட்டும் பார்ப்பது தவறான செயல் என்பதை உணர்த்துகிற பாடப்பகுதிகளும் இருக்க வேண்டும்.

அதனை ஆசிரியர்கள் கற்பிக்கும்போது பாலியல் குறித்த கல்வியாக மட்டும் அல்லாமல் உளவியல் நோக்கோடு, அது சார்ந்த சிந்தனையோடு மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது இளைஞர்களிடம் ஏற்படும் இதுபோன்ற உளவியல் சிக்கல்களையும் அதனால் வருகிற ஆபத்துகளையும் தடுக்க முடியும்.

துணைநின்றவை

- வண்ணதாசன், (2016), நாபிக்கமலம், சென்னை: சந்தியா பதிப்பகம்.
- சிவராஜ் து, (1994), சங்க இலக்கியத்தில் உளவியல், வேலூர்: சிவம் பதிப்பகம், காந்தி நகர்.
- http://www.tamilvu.org/courses/degree/d061/d0612.pdf பேராசிரியர் தி.சு.நடராசன், திறனாய்வும் அணுகு முறையும்,
- https://www.puthiyathalaimurai.com/newsview/102913/Bold-Attempt-of-ki-rajanarayanan---vayathu-vanthavargalukku-mattum-

****

வரலாற்றுப் பின்னணியில் இலக்கணம் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் New approaches to teaching Grammar in the background of Historical context

முனைவர் பா. சங்கரேஸ்வரி | Dr.B.Sankareswari

உதவிப்பேராசிரியர், தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625021, தமிழ்நாடு, இந்தியா. sankaritamil@gmail.com, Orcid No: https://orcid.org/0000-0002-5389-4533

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கணம் மாணவர்களுக்குப் பல்வேறு நிலைகளில் கற்பிக்கப்படுகிறது. உயர்நிலைப்பள்ளி, மேனிலைப்பள்ளி, இளநிலை, முதுநிலை.... என பல நிலைகளில் கற்பிக்கப்படுகிறது. அந்தவகையில் முதுகலைத்தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு இலக்கணத்தை வரலாற்றுப் பின்னணியிலும் கோட்பாடு அடிப்படையிலும் கற்பித்தல் எங்ஙனம் என்னும் அடிப்படையில் இக்கட்டுரை அமைகின்றது.

Abstract

Tamil grammar is taught to students at different levels. High school, high school, undergraduate, postgraduate. As is taught in many stages.

Thus this article is based on how to teach grammar to students studying postgraduate Tamil in historical context and in theory.

திறவுச்சொற்கள் (Keywords): இலக்கணம், கோட்பாடுகள், வரலாற்றுப் பின்னணி, கற்பிக்கும் முறை, புரிதல்கள், அணுகுமுறைகள், Grammar, Theories, Historic Background, Method of Teaching, Understandings, Approach.

பின்னணி

முதுகலைத் தமிழ் மாணவர்கள் இதுவரை இலக்கணங்களில் கூறப்பட்ட செய்திகளை மனப்பாடம் செய்து தேர்வு எழுதுகின்றனர். அதைத் தாண்டிய ஒரு சிந்தனை என்பது அவர்களுக்கு இல்லை. எனவே ஒவ்வொரு இலக்கணத்திற்கும் தோற்றம் யாது? எந்த இலக்கியத்திற்கு இந்த இலக்கணம் தோன்றியது என்பதைக் கோட்பாட்டு அடிப்படையில் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

சிக்கலைக் கண்டறிந்த விதம்

நான் முதுகலை மாணவர்களுக்குக் கடந்த எட்டு ஆண்டுகளாக வகுப்பு எடுத்து வருகின்றேன். அவர்கள் அதிக அளவில் மதிப்பெண் பெற வேண்டும் என்ற நோக்கத்திலே செயல்படுகின்றனரே தவிர புதிதாக ஒரு செய்தியைத் தெரிந்து கொள்வோம் என்ற எண்ணம் இல்லை. இதை அறிந்து மாணவர்களுக்கு விருப்பப்பாடமாக இலக்கணவியல் என்ற பாடத்தை அறிமுகப்படுத்தலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது.

- கோட்பாடு யாது? கொள்கை யாது?
- இலக்கியத்தின் வழியாக இலக்கணத்தைக் கற்றுத் தரலாமா?
- ஓர் இலக்கணத்திற்கும் மற்றோர் இலக்கணத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமை யாது?
- காலச் சூழல்தான் இலக்கணத்தைக் கட்டமைக்கிறதா?

இவையெல்லாவற்றிற்கும் தீர்வாக மாணவர்களுக்கு வரலாற்றுப் பின்னணியில் இலக்கணத்தைக் கற்றுத்தர வேண்டும் என்று ஆய்வை மேற்கொள்ள முற்பட்டேன்.

ஒரு மொழியில் எழுதப்படும் இலக்கண நூல் அம்மொழியை மட்டும் அடிப்படையாக வைத்துப் படைக்கப் பெறுவதில்லை. அவ்விலக்கணநூல் எழுதப்பெற்ற கால அரசியல், சமூகச் சூழல் ஆகியவற்றோடும் தொடர்புடையதாகும். தமிழ்மொழி ஒன்றுதான். அதற்கு இத்தனை இலக்கணங்கள் உருவாக்கத்திற்கான தேவை யாது? ஏனெனில் ஒவ்வோர் இலக்கணமும் அக்காலகட்ட வழக்குமொழியை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. ஒரு மொழியின் மீது மற்றொரு மொழியின் கலப்போ, தாக்கமோ ஆதிக்கமோ மிகச் சாதாரணமாக நிகழ்ந்துவிட முடியாது. அரசியல் நிர்வாகத்திலும், கல்வி முறையிலும், செல்வாக்குப் பெற்று விளங்கும் ஒரு மொழியின் இலக்கிய இலக்கண மரபு மற்றொரு மொழியின் இலக்கிய இலக்கண அமைப்பிற்கு மாதிரியாக விளங்கும். எனவே தொல்காப்பியர் காலந்தொட்டு 20ஆம் நூற்றாண்டு வரை தமிழ்மொழியில் நடைபெற்ற மாற்றத்திற்குக் காரணம் யாது? சமூக அரசியல் தளங்களில் செல்வாக்குப்பெற்று எம்மொழி திகழ்ந்து விளங்கியது? செல்வாக்கின் காரணமாக இலக்கணம் உருவாக்கத்தில் ஏற்படுத்திய புதிய மாற்றம் யாது? போன்ற சமூகப் பின்புலங்களை மாணவர்கள் அறியும் நோக்குடன் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

ஆய்வின் நோக்கம்

- மாணவர்களின் ஆராய்ச்சித்திறனைத் தூண்டுதல்
- அந்தந்தக் காலகட்ட வரலாற்று நிகழ்வுகளினால் ஏற்பட்ட மொழி மாற்றம் குறித்துச் சிந்திக்க வைத்தல்
- ஆய்வு வினாக்கள்
- இலக்கியத்தின் வழி இலக்கணத்தைக் கற்பிப்பது எவ்வாறு?
- அதன் மூலம் ஒற்றுமை வேற்றுமைகளைக் காண இயலுமா?
- இதன் மூலம் கோட்பாடு ரீதியில் மாணவர்கள் இலக்கணங்களைப் புரிந்து கொள்வரா?
- வரலாற்றுப் பின்னணி மூலம் கற்பிப்பதால் மாணவரின் ஆராயுந்திறன் வளரும் என்பதில் எந்த அளவிற்கு உண்மை உள்ளது?

ஆய்வின் எல்லை

மதுரை காமராசர் பல்கலைக்கழக முதுகலை இரண்டாம் ஆண்டு பயிலும் 9 மாணவர்களை வைத்துக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்புநூல் பற்றிய திறனாய்வு

இலக்கிய இலக்கண நூல்கள் தேர்வு அடிப்படையில் மட்டும் வாசிக்கப்படாமல் புதிய அணுகுமுறை மூலம் ஆராயுந்திறனை மேம்படுத்த முடியும் என்பதை வலியுறுத்தியுள்ளன.

ஒரு குறிப்பிட்ட இலக்கணநூல் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டு அவ்விலக்கணத் தோற்றத்திற்கான சமூகப் பின்புலம் யாது? என்பதை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்து அதைப்போலவே பிற இலக்கணங்களின் தோற்றத்தினையும் கண்டறியச் செய்வது ஆய்வின் முக்கிய நோக்கமாகும். எனது நோக்கம் நிறைவேறும் பொருட்டு மாணவர்களுக்குப் பல வகையான இலக்கண மரபுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன்வழி புதிய அணுகுமுறையிலான இலக்கணங்கள் யாது என்பதை மாணவர்கள் உய்த்துணர்வார்கள்.

நெறிமுறை

இவ்வாய்வு பத்து வாரங்களுக்கு மேற்கொள்ளப்பட்டது. முதல் வாரத்தில் மாணவர்களுக்கு முன்னிலைத் தேர்வு கொடுக்கப்பட்டது. முன்னிலைத் தேர்வில் மாணவர்கள் இலக்கணத்தைப் புரிந்துகொண்ட விதத்தை அறிய முடிந்தது. அதன்பிறகு புதிய அணுகுமுறை செயல்படுத்தப்பட்டது. அதன்பிறகு முன்னிலைத் தேர்விற்கு இணையான வகையில் பின்னணித்தேர்வு ஒன்று கொடுக்கப்பட்டு மாணவர்கள் கோட்பாட்டு அடிப்படையில் இலக்கணங்களை எங்ஙனம் புரிந்து கொண்டுள்ளனர் போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

ஆய்வு பின்வரும் முறையில் நடைபெற்றது.

- முன்னிலைத் தேர்வு
- நடவடிக்கைகள்
- பின்னிலைத் தேர்வு

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில் பயின்று வரும் முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் ஆவர். இதில் 4 பெண்களும் 5 ஆண்களும் கலந்து கொண்டனர். இவர்களின் சராசரி வயது 22.

ஆய்வுக் கருவிகள்

முன்னிலைத் தேர்வுக்கு, ஆய்வு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட எட்டுப் பயிற்சித் தாள்களும் முன்னிலைத் தேர்வுக்கு இணையான பின்னிலைத் தேர்வுப் பயிற்சித் தாளுமே இவ்வாய்வின் ஆய்வுக் கருவிகளாகும்.

செய்முறை

2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முன்னிலைத் தேர்வு நடத்தப்பட்டது. பின்னிலைத் தேர்வு மார்ச்சு மாதத்தில் நடத்தப்பட்டது.

இலக்கணம் பற்றியதான செய்திகளைக் கற்றுக்கொள்ளும் பயிற்சியாக முன்னிலைத் தேர்வு அமைந்தது.

இலக்கணங்களைக் கோட்பாட்டு அடிப்படையில் வரலாற்றுப் பின்புலத்தோடு கற்பிப்பதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். அதனால் வகுப்பில் புதிய அணுகுமுறையைச் செயல்படுத்துவதில் நான் மிகுந்த கவனம் செலுத்தினேன். புதிய அணுகுமுறைகள் எட்டு வாரப் பயிற்சியின்போது வகுப்பறையில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

'தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மொழி - கற்றல் கற்பித்தல்' - பன்னாட்டு மாநாடு (சிறப்பு வெளியீடு)

வாரம் - 1

இலக்கணம் என்பது யாது? என்று முதல் வகுப்பில் கேட்கப்பட்டது. இலக்கணம் என்பதன் வேர்ச்சொல் யாது?

இலக்கணம் என்னும் சொல் வடமொழிச் சொல்- வையாபுரிப்பிள்ளை, பாவாணர்,

வெள்ளைவாரணர் - தமிழ்ச்சொல்

இலக்கணம் என்பது கலைச்சொல் - செ.வை.சண்முகம்

தொல்காப்பியர் காலத்தில் இலக்கணம் என்கிற சொல் 4 இடங்களில் பயின்று வந்துள்ளது. முந்துநூல் கண்டு என்னும் பாயிரச் சொற்கள் முந்தைய இலக்கணங்களைக் குறித்தவை. எனவே நூல் என்கிற சொல்லும் இலக்கணத்தையே குறித்தது. மொழியியல் அறிஞர்கள் Grammar is a Book என்று வழங்குகின்றனர். இவ்வாறாக முதல் வாரத்தில் கலந்துரையாடப்பட்டன.

வாரம் - 2

இலக்கணம் என்ற சொல்லுக்கு விளக்கம் கொடுத்ததைத் தொடர்ந்து, கொள்கை என்பது யாது? கோட்பாடு என்பது யாது? என்பனவற்றிற்கு விளக்கம் கொடுக்கப்பட்டது.

வாரம் - 3

மரபுவாரியாக இலக்கணங்களை எப்படிப் பார்க்கலாம் என அட்டவணையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

வாரம் - 4

இலக்கணம் உருவாக்கம் என்பது யாது? என்றும் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்பதற்கும் விளக்கம் கொடுக்கப்பட்டது.

வாரம் - 5

ஐந்திலக்கண மரபு, மூன்றிலக்கண மரபு, ஈரிலக்கண மரபு, ஓரிலக்கண மரபு, அறுவகை இலக்கணம் என இலக்கணங்களைப் பாகுபடுத்தப்பட்டது.

வாரம் - 6

ஐந்திலக்கண மரபில் இடம்பெறும் தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல், நேமிநாதம், முத்துவீரியம், இலக்கண விளக்கம், இலக்கணத் தொகை போன்ற நூல்கள் அனைத்தும் கோட்பாட்டு ரீதியில் கற்பிக்கப்பட்டன. ஒவ்வொரு இலக்கணத்தின் நோக்கமும் வெவ்வேறானவை என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் அறிமுகப்படுத்தப்பட்டன.

வாரம் - 7

மூன்றிலக்கண மரபை அறிமுகம் செய்து ஐந்திலக்கண மரபு எவ்வாறு மூன்றிலக்கண மரபாக மாறுவதற்குரிய காரணங்கள் விளக்கப்பட்டன.

வாரம் - 8

ஈரிலக்கணமரபு, ஓரிலக்கண மரபு அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்விலக்கணத் தோற்றத்திற்கான காரணங்கள் ஆராயப்பட்டன.

வாரம் - 9

அறுவகை இலக்கணம் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விலக்கணம் முழுக்கமுழுக்க சமயத்தைப் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளது என்பதை மாணவர்களின் மத்தியில் பதிய வைக்க முடிந்தது.

வாரம் - 10

இதுவரை கூறப்பட்ட மரபுகளைத் தொகுத்துத் தமிழ்மொழியில் இலக்கணங்கள் 63 என்று வகைப்படுத்தப்பட்டன.

வாரம் - 11

ஆய்வை நிறைவுசெய்யும் இறுதி வாரத்தில் முன்னிலைத் தேர்வுக்கு இணையான பின்னிலைத் தேர்வு ஒன்று தரப்பட்டது.

பகுப்பாய்வு

மாணவர்கள் செய்த முன்னிலைத் தேர்வு, பின்னிலைத் தேர்வு, 10 வார நடவடிக்கைகள் அவ்வப்போது தேர்வு வைத்துத் திருத்தப்பட்டன. முன்னிலைத் தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களைச் சற்று ஆராய்வோம்.

அட்டவணை – 1

முன்னிலைத் தேர்வின் முடிவுகள்

மாணவர்	பெற்ற மதிப்பெண்கள் (75)
1	23
2	24
3	22
4	25
5	26
6	27
7	20
8	22
9	23

முன்னிலைத் தேர்வின் முடிவினைக் கண்ட நாம் 10 வாரங்களில் நடத்தப்பட்ட நடவடிக்கைகளை ஆராய்வோம். தொடக்கத்தில் மாணவர்கள் இலக்கணம் என்றவுடன்

தயங்கினார்கள். இலக்கணத்தில் புறவரலாற்றைத் தெரிந்து கொண்டு அகவரலாற்றிற்குச் செல்வோம் என்ற எண்ணத்தை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தினேன். மாணவர்களும் ஆர்வத்துடன் பயிலத் தொடங்கினார்கள்.

மரபு என்பது யாது? இலக்கணம் என்பது யாது? இலக்கண உருவாக்கத்திற்கான தேவை யாது? தமிழ்மொழி ஒன்றுதான். அதற்கு இத்தனை இலக்கணம் உருவாவதற்குக் காரணம் யாது? காலந்தோறும் மொழியானது மாறுதலுக்கு உட்படுமா? கோட்பாடு மாறுதலுக்கு உட்பட்டதா? வடமொழிச் சார்பு இலக்கணங்களின் நோக்கம் யாது? ஒவ்வோர் இலக்கணத்திற்கும் வரலாற்றுப் பின்னணி யாது? என அத்துணை வினாக்களுக்கும் மாணவர்கள் பதிலளிக்கக் கற்றுக் கொண்டனர். மேலும் ஒவ்வோர் இலக்கண மரபிலும் இடம்பெறும் இலக்கணங்கள் எத்தனை? சமயம் இலக்கணத்தில் பிரதிபலிக்குமா? போன்ற வினாக்களுக்கான விடைகளை மாணவர்கள் அறிந்து தெளிந்து கொண்டனர்.

பின்னிலைத் தேர்வு முடிவுகள்

மாணவர்	பெற்ற மதிப்பெணகள் (75)
1	48
2	52
3	55
4	49
5	57
6	52
7	53
8	49
9	47

மாணவர்கள் செய்த முன்னிலை, பின்னிலைத் தேர்வுகளின் ஒப்பாய்வின் மூலம் 60 சதவீதம் துரித வளர்ச்சி அடைந்துள்ளனர். இதன் மூலம் இலக்கணத்தை எவ்வாறு பார்க்க வேண்டும் என்பதை மாணவர்கள் கற்றுக்கொண்டனர் என்பதை அறிய முடிந்தது.

முடிவுகளும் பரிந்துரைகளும்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புல மாணவர்களுக்கு முன்னிலைத் தேர்வு கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பத்து வாரப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. அப்பயிற்சிகளை மாணவர்கள் சிறப்பாகச் செய்தனர். இறுதியாகப் பின்னிலைத் தேர்வு கொடுக்கப்பட்டது. முன்னிலை, பின்னிலைத் தேர்வினை ஒப்பிடும்போது மாணவர்களிடையே நல்ல முன்னேற்றம் தெரிந்தது. இலக்கணத்தைப் புதிய அணுகுமுறை, செயல்பாட்டுடன் பயில முற்பட்டனர். மேலும் இலக்கணத்தைப் பயிலும்போது கோட்பாடுகளை இலக்கியத்திற்கும் பொருத்திப் பார்த்தனர். இதனால்

வியக்கத்தக்க வேறுபாட்டை மாணவர்களிடத்தில் கண்டேன். மேலும் இலக்கண நூல்களைத் திறனாய்வு செய்யவும் மாணவர்கள் கற்றுக் கொண்டனர்.

பரிந்துரைகள்

- இலக்கணம் என்பது இனிமையானது என்பதை ஆசிரியர்கள் மாணவர்களிடம் பதிய வைக்க வேண்டும்.
- ஒவ்வோர் இலக்கண ஆசிரியனுக்கும் இலக்கணம் எழுதுவதற்கு வலுவான காரணங்கள் உண்டு என்பதைத் தெளிவுறுத்த வேண்டும்.
- மரபு மாற்றத்திற்குக் காரணம் யாது? என்பதை மாணவர்களிடம் வினவ வேண்டும்.
- மொழிக்கலப்பு மொழியைப் பாதித்ததா? வளப்படுத்தியதா? என ஆராயச் செய்ய வேண்டும்.
- கோட்பாட்டு முறையில் இலக்கணங்களை அணுகுவதற்குக் கற்றுத் தரவேண்டும்.
- இலக்கியத்திற்கு இலக்கணம் என்றால் எந்த இலக்கியத்திற்கு எந்த இலக்கணம் எழுதப்பட்டது என்பதை ஒப்பிட்டுப் பார்க்கப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்.
- இலக்கணக் கோட்பாடுகளைக் கற்பித்தல் என்னும் இவ்வாய்வு மாணவர்களிடையே இலக்கணம் பற்றியதான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என நம்புகிறேன்.

துணைநின்றவை

- கருணாநிதி மா., (2008), கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடு பதிப்பகம், கொழும்பு, இலங்கை.
- கார்த்திகேசு சிவத்தம்பி, (1993), தமிழ் கற்பித்தலில் உன்னதம், தர்ஷன் பிரசுரம் இலங்கை.
- சரவணமுத்து. இரா., (2006), கற்றல் கற்பித்தல், சாரதா பதிப்பகம், சென்னை.
- பாலசுப்பிரமணியம் தனபாலன், (2008), நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, இலங்கை.
- வசந்தி சு., (2007), கற்பித்தலில் புதிய அணுகுமுறை, வனிதா பதிப்பகம், சென்னை.

Bibliography

- M.Karunanithi, (2008) Katral Karpithal Mempaatirkaana Vazhimuraigal, Chemmamadu Pathipagam, Columbu, Ilangai
- Karthikesu Sivathambi (1993), Tamil Karpithalil unatham Aasiriyar Pangu, Dharshana Pirasuram, Ilangai.
- R.Sarava Muthu (2006), katral karpithal, Saratha Pathipagam, Chennai.
- Balasubramaniyam Dhanabalan (2008), Naveena katral karpithal Muraiyiyalgal, Kumaran Puthaga Illam, Columbu, Ilangai.
- S. Vasanthi (2007), Karpithalil Puthiya Anugumurai, Vanitha Pathipagam, Chennai.

இணைய ஆய்விதழ்கள்

- மா.தியாகராஜன், கற்றல் கற்பித்தல், சிங்கப்பூர் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், (http://www.muthukamalm.co/crray/serial/p4d.html)

- ச.சேவியர், கற்பிக்கும் முறையில் இலக்கண நூல்கள் கூறும் கருத்துக்கள், இலயோலா கலை அறிவியல் கல்லூரி, மெட்டாலா, நாமக்கல் மாவட்டம். (http://www.muthukamalm.co/crray/serial/p4d.html)
- க.பாலசுப்பிரமணியன், கற்றல் ஒரு ஆற்றல், (www.vallamai.com/p=78383)
- ப.பானுமதி, மொழிப்பாடம் கற்பித்தலில் (www.vallamai.com/p=10451)

****

A STUDY OF ICT FOR MARGINALIZED COMMUNITIES: A CRITICAL PERSPECTIVE IN NILGIRIS DISTRICT நீலகிரி மாவட்டத்தில் உள்ள விளிம்புநிலை மக்களின் மத்தியில் தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கத்தைப் பற்றிய ஆய்வு

Dr. J.Jone Antony Raja | முனைவர் ஜோ.ஜோன் அந்தோணி ராஜா

Department of Visual Communication, Hindusthan College of Arts and Science, Behind Nava India, Coimbatore – 651 028

ஆய்வுச் சுருக்கம்

அறிவு சமூகம் அல்லது தகவல் சமூகம் என்பது தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் (ஐசிடி) சாத்தியமான நன்மைகளை அங்கீகரிக்கும் மற்றும் தொழில்நுட்ப நிர்ணயத்தை வலியுறுத்தும் சொற்கள். உலகெங்கிலும் நடத்தப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் குறிப்பாக விளிம்புநிலை சமூகங்களுக்கு வளர்ச்சிக்கான தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளனர். இந்த தாள் விளிம்புநிலை சமுதாயத்திற்கு இந்த (ஐசிடி) என்ன அர்த்தம் மற்றும் அவர்களின் சமூக கட்டமைப்பில் ஐசிடியின் பொருத்தத்தை புரிந்து கொள்ள ஒரு முக்கியமான கண்ணோட்டத்தை ஏற்றுக்கொள்கிறது. இந்த ஆய்வு இயற்கையில் விளக்கமான மற்றும் ஆய்வுக்குரியது. பதிலளிப்பவர்களிடமிருந்து தகவல்களின் இலவச ஓட்டத்தை உறுதி செய்ய இந்த ஆய்வு அவசரகால நேர்காணல்களைப் பயன்படுத்துகிறது. நேர்காணல்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவை பகுப்பாய்வு செய்ய ஒரு தூண்டல் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. (ஐசிடி)மற்றும் ஓரங்கட்டப்பட்ட படிப்பில் அந்நியப்படுதல், உயிர்வாழ்தல் மற்றும் சேர்த்தல் போன்ற சமூக பிரச்சினைகளை கருத்தில் கொள்வதன் முக்கியத்துவத்தையும் இந்தக் கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

Abstract

"ICTs for development" (ICT4D), knowledge society or information society are the terms which endorse the potential benefits of Information and Communication Technologies (ICT) and emphasize technological determinism. Researchers conducted worldwide have highlighted the importance of ICT for development particularly for the marginalized communities. This paper adopts a critical perspective to understand what these ICT mean to marginalized society and the appropriateness of ICT in their social structure. This study is descriptive and exploratory in nature. The study employs emergent interviews to ensure free flow of information from the respondents. An inductive approach is used to analyze the data collected from the interviews.

The paper also highlights the importance of considering social issues like alienation, survival and inclusion in studying ICT and marginalized.

திறவுச் சொற்கள்Keywords: *ICT, alienation, marginalized, livelihood,* (ஐசிடி), அந்நியப்படுதல், ஓரங்கட்டப்பட்ட, வாழ்வாதாரம்

Introduction

The on-going computing and communications revolution has numerous economic and social impacts on modern society and requires serious social science investigation in order to manage its risks and dangers. Such work would be valuable for both social policy and technology design. Decisions have to be taken carefully. Many choices being made now will be costly or difficult to modify in the future.

ROLE OF ICT IN THIS MODERN WORLD

The last few years (after the 1970s) there has been an unpreceded transformation in information and communications technology, and all signals are that technological development and usage of information technology will evolve and develop at an express stride. Associating and assisting the histrionic upsurges of the usage of modern information technologies has been the falling cost of communications as a consequence of technological enhancements and amplified market race.

In accordance with Moore's law the working capacity of processing chips are multiplying every 12 months. These developments pose several substantial chances but also contribute significant challenges and unanswered questions. Today, revolutions in the field of information technology and communications develops extensive effects across various territories of cultures and societies, and intellects, lawmakers and diplomats are working on questions connecting economic and social yields, intellectual property privileges, privacy fortification, and affordability and access to data, information and communication

EMERGENCE OF ICT IN INDIA

By the mid-1960s, India's ICT sector was trivial and inexperienced and the supplies for computers in the subcontinent nation was chiefly provided by overseas dealers like IBM and ICL. During his second term, then prime minister, Jawaharlal Nehru introduced computers and communications technology in the infrastructural policies for strategically significant sectors in nation building.

And in the year 1966, Dr.HomiBhaba Committee quantified in its technical commentary on information and communications technology that India should evolve into an autonomous nation in the subsequent 20 years. Nevertheless, contemplating the country's then technological competence was beyond the grasp of the nation's economic and technical advancement. But that situation didn't stay for long, the country's perilous condition went through serious technological reformation and transformation during the 1970s. Soon the government of India instituted The Department of information and communication technology in 1970 which will change the course of the country's role in the information technology and communication sector.

Soon, the Commission for information and communication technology was created for monitoring and regulating the roles and activities of the private and public sector in the information and communications industries. Ensuing the counsel and recommendations of the Bhaba Committee, The Electronics Corporation of India commenced the manufacturing of small and medium-sized computers in early 1970s. In 1973, the government recognized the strategic importance of the information and communications technology industry and in its computer policy emphasis was laid on developing complete self-reliance in information and communications sector. Computer Mainframe Corporation was formed in 1976, was given the governing power to control and facilitate all overseas information and communication technologies instated in the nation. These phasesvis-à-visevolving into an autonomous nation in information and communications technology were further reinforced by governing bodies by creating strategies to control import and upsurge the tariff laws and regulations for the for imported electronic goods under the supervision of Department for information and communications.

Advanced computer manufactures developed software outside their hardware manufacturing unit in the late 1970s, as it became gradually arduous for hardware manufacturing firms to deliver the complete assortment of software prerequisites to make effective use of their hardware commodities. This was also expedited by the suitable improvement of educational courses regarded with the software development programs, sophistications of programming languages, and mass manufacturing of hardwares. Nevertheless, in early days such software development was largely limited to the effort of in-house developers writing programs for their own establishments

OBJECTIVE OF THE STUDY

- To find out the amount of penetration among the tribal population of Nilgiri district.
- To find the reasons that prevent digital divide from reaching the tribals.
- To find a solution how these could change and get the tribals to be part of the digital world.

RESEARCH QUESTIONS:

- What is the level of ICT knowledge the tribal people of Nilgiri have?
- How does digital divide influence tribal population in and around Nilgiri?
- Does digital divide have any negative significance on the information acquired by the tribal people of Nilgiri?
- Do the tribal people of Nilgiri feel that they lack knowledge of the current world?
- Does the tribal person of Nilgiri want to improve their knowledge over ICT?
- Do the people of Nilgiri feel that they are alienated due to the digital divide?
- Can digital divide in the tribal villages of Nilgiri be eliminated?

METHODOLOGY

'Survey Quantitative research method' is used for the research. A sample was collected from the people in and around the tribal population of the Nilgiri district and it was later made to be analyzed and used.

Method of survey is one of the instructive research approaches. This technique is used principally in scholastic study. The amount of survey schemes is very enormous in western countries and it is very much needed in India to find out the length and width of this nation. Even though the technique of survey has a subordinate position in research, it is predominant in day-to-day life. This system is valuable for examining the present condition.

Literature Review

The digital divide is a societal concern denoting the divergent quantity of info amid those who have accessibility to the internet and those who do not have accessibility to the internet. The phrase "digital divide" became prevalent among political parties, lawmakers and social activists in the late 1990s.The digital divide is not certainly a well-defined specific divide.

Annan, K. (2015). Investigators studied that drawbacks can be in any form such as inferior functioning computers, costly connections, struggle to gain mechanical aid, and lesser access to basic contents. Digital Divide is a comparatively fresh idea and most of the literature on this subject is fashioned in the last decade mostly. Furthermore, the catch phrase increased its stance in American and European literature before becoming part of the Indian context. Its practise initially arose in those countries where the internet was already extensively used and the disparities in the usage among the masses are witnessed to be generating a new group of haves and have-nots. Social disparities have stretched the attentiveness of social scientists.

Social disparities are ascribed to numerous issues by diverse philosophers. One of the utmost leading investigations has been done by Karl Marx, for whom all social imbalances reproduced in society are the consequence of the imbalanced circulation of substantial assets of creation.

Nevertheless, his communistic ideologies based on the possession of the materials bombs to fully clarify the disparity and discrimination in conventional cultures like India where caste, beyond class, remains a determining standard for societal respect. Researchers do not say that his idea does not aid in understanding the communal debate and battles in Indian culture, reasonably it, in fact, offers a much desired perception into the subtleties of class problems obtaining a larger position with the mounting characters of the market forces. Nevertheless, it stops to reason out for the caste subtleties of the culture that functions on a completely unusual rationality than that of class.

Max Weber, customs the notion of class, status and party-to analyze societal struggles. For him the economy is not a communal collection of people but a collection of people sharing alike life odds. He clarifies social modification with the assistance of his notion of class, status and party, denoting a combination of people dividing identical or similar life odds, life styles and association with power correspondingly.

Therefore, Weber classifies the social hierarchy of the elites-economic, political and social. When the economy improves and vice versa, society starts displaying traumas. Nonetheless, both Marx and Weber discourse only about the subject of access to the communally cherished resources as a root cause of conflicts and strain in society.

The apprehension with disparities evolving out of alterations in technology and upsurge in information network is reproduced in numerous education systems that predict the conceivable prohibiting of many from this wave of technology uprising and side-lining them

further in the society. Since it charges a lot to partake in this information, it is dreaded that many needier citizens will be omitted.

Daniel Bell was among the first to talk of the occurrence of an age categorized by intensified burden and consequence of info and knowledge. However it is still hard to contemplate of a post-industrial culture in situation of India, where 75% of populace still exists in villages and numerous people have yet to receive the might of by the information networks, one cannot reject the slow but momentous growth of such network Pew. (2014).

Herbert Schiller in his findings illustrates the way IT has progressed to provide the attention of large industrialists and how these technologies again used to reinforce capitalism. According to him, the class of info formed and dispersed is regulated by market dynamisms and is molded by the requirements of the capital world and governments, the key purchasers of the information.

The civic in common, with its associates retrieving info and data as individuals, form the lower end of the social ladder. What they get is hardly of any value and use to them and has been labeled by Schiller as "trash information". Huebler.F, & Lu, W. (2012).

Jurgen Habermas, meanwhile worries about the fading 'public sphere' in the civilization as the individual members of society barely are able to contribute evocatively in the relaxation of info and its banquet. He finds the lessening of the 'public sphere' corresponding with the growth in Privatization and departure of the state from the public accessibility. Both the theorist specifies flared of the prevailing disparities with the rise in information network that unvaryingly errands the elite. This viewpoint would be helpful in appreciating and analyzing the nature and content of the internet, especially about the unrestrained Privatization and globalization (Fank, 2006: 124-126,155, 161-164,167). Manuel Castells distributed his book entitled "The Information Age" between 1996 and 1998.

Manuel Castells' theory of web culture offers a superior sketch for the studies of a very diverse port entrancing from globalization of manufacture to reinforcing democracy at the indigenous level. Castells claims that the notions of post-industrial culture or information society are insufficient to border the current world.

STUDY AREA

During the last four month I was going through research about the people's ICT knowledge in Nilgiri district and conducted interviews and recorded audio clips for about 10 minutes to gather the information.

Analysis

Qualitative analysis was used to analyze the data collected from the interview. The inductive approach was used to examine the qualitative data.

FINDINGS

The term 'Digital Divide' was predominant in analysis and strategies throughout the 1990s and 2000s. As admission to and content in the ICTs have advanced over the years, so has the description of the digital divide.

Now it is regarded: as

deficiency of infrastructure;
deficiency of access;
deficiency of info, or
Inability to leverage information.

There are substantial alterations in the description of the digital exclusion by numerous scholars. For some, the term denotes the fissure between people who have the ability to access the internet and those who don't have the degree of physical access to ICTs and the Internet. It considers it the 'jagged supply of the welfare of ICTs' which can be reviewed at the focussed level (Internet access) and basic ICT access level (access to basic model phones, TV and radio).

Around the mid-2000s, an analysis on the digital divide refocused beyond physical obtain ability and gave a sharper attentiveness to notions that are concerned with questions around culture, gender, economic situations, empowerment, and social agility; and distinguished the uses of the Internet. Alongside a universal conception of 'digital inclusion' as access and obtain ability to computers and internet for all, irrespective of corporeal, cerebral or economic capability, widen the definition to include technological literateness and the capability to access germane online content and facilities.

It is also the procedure of democratizing the obtaining ability of ICTs, in order to allow the addition of the side-line in the information world. Digital inclusion must be seen as a carriage to social inclusion that safeguards individuals and deprived groups have accessibility to ICTs and the skills to use them and are consequently able to partake in and to profit from a progressively electronically arbitrated knowledge economy and communication society.

Aedapalli—a small village in the Nilgiri district at Tamil Nadu, India, has only one primary school, no hospital or other medical treatment center. While BSNL Internet network is obtainable in this village, connectivity and quality of the connection is very poor. A student who requires assistance to fill a form or apply online for admittance has to pay a minimum of INR 50. For a labor availing welfare from the Mahatma Gandhi National Rural Employment Guarantee Act making about INR 150 a day, the entire cost of receiving a photocopy of an Aadhar card comes to INR 225. Thus, students are powerless to exploit the benefits of higher education due to non-existence of access to the Internet.

Daily wage workers lose their day's wages just to get their identity card printed. For them, accessibility of digital media is not a luxury but an inevitability. It is significant for us to highlight that the digital medium has value not in and by itself but reasonably acts as a vehicle that enables access to basic public goods and services, particularly in 2nd world countries.

In India, accessibility to public entitlement is tough to obtain, especially for people existing in rural and remote areas; here the poor and illiterate get ill-advised easily and accessibility to essential necessities like pension, daily wage, food, basic health facilities and education is a challenge. 'Cubic goods' are hard to acquire for the people living in these areas.

Civic goods are described as goods, facilities, achievements, skills, operational and freedoms—separate and shared—that is vital for any being to live with self-respect.

The subsequent case will intricate the above mentioned point. MGNREGA generates a reasonable 'right to work' by assuring up to 100 days of wage employment per year to all rural populations whose adults volunteer to do unskilled blue-collar jobs. Nonetheless, a fresh report has pointed out that there is very little civic cognizance about what requires to be done to find work along with an array of other matters contiguous to the MGNREGA programme. Therefore, notwithstanding the law ensuring work and livelihood, people are left jobless due to the lack of suitable channels of information.

The digital divide consists of lack of skills and lack of physical access to Information Technology (IT) and the two major problems frequently interconnected with each other. Without accessibility to technology, it is problematic to acquire technical talents and it is archaic to have access to technology without actually having the ability to exploit it.

ICTs have become an inimitable instrument in societal up gradation. Today, the Internet has become an integral part of many lives and it is tough to visualize day to day tasks without internet access. The number of people 'going online' to manage everyday actions, such as business and banking, education, seeking occupation, public engagement and starting and maintaining social relationships, is increasing every day. The World Development Report stated virtually 1.165 billion Indians are disconnected from the cyber world even though India ranks among the top five countries in terms of the total figure of Internet consumers, along with China, USA, Japan and Brazil. The account further specified that while India has come close to the US in numbers in terms of Internet penetration it remains far overdue at 18 per cent as against 87 per cent in the US. India still requires linking these 'disconnected people' to the Internet for insistent development, creating employment and accessing civic amenities.

ROLE OF ACADEMIC INSTITUTIONS

Academic institutes, particularly the Indian Institutes of Technology (IIT), have been making encouraging efforts to help rural and technologically disadvantaged people to access TO ICT.

IIT Kanpur introduced a mission and established a battery backed facility, the "Infothela", which is furnished with an arrangement of Internet and telecom services to communicate the advantage of IT to people in isolated parts. The distinctiveness of wireless "Infothela" comprises dispersion information about education, weather agriculture, and employment. The system is also secured with "Digital Mandi" ability, which is an electronic podium for agro based commerce. Under the umbrella of this scheme the farmer will be given a granary certificate facility. To embolden active contribution, educated and unemployed village youth have been empowered to operate the project.

Another mission has been started by IIT Kharagpur to "reduce the communication problem among the urban and the tribals." The plan has allowed the people to use the Internet even in isolated places using radio- waves mechanisms. These projects have made encouraging efforts to empower the tribal people by bridging the digital divide. Technology for the benefit of the common man is also introducing telemedicine in a big way in India.

The Indian Space Research Organization (ISRO) started a pilot project in 2002 with a "technology demonstration" and has been established in nearly 100 hospitals, with twenty of these at super-specialty hospitals and 80 of them in remote districts with large tribal communities. The consequence of the usage of this technology is tremendously hopeful. It is

revealed that 16,000 patients have received consultation assistance from multi special hospitals without traveling to large cities. Lives have been saved in remote places through instructions obtained from experts with the help of this facility. In the 2004 tsunami tragedy which smacked the shore of India and the Andaman and Nicobar, the internet and phone–based medicine Network provided by ISRO was surge instantaneously into service.

Telemedicine is now becoming a reality. However, the system must be expanded and designed to be more user–friendly and economical. What is needed is to bring awareness among people about telemedicine and telehealth and their advantages. In this respect an International Telemedicine Conference happened in 2005 to share opinions and knowledge on the technological growth taking place all over the world. A expressive and economical incorporation of ICT and medical technology into what is called tele- medicine will bridge the gap between those fortunate to have health care amenities and the rural parts of the nation.

The National Institute of Agricultural Extension and Management based at Hyderabad in Andhra Pradesh state under the National Agriculture Technology Project (NATP) has set up Internet kiosks in 24 districts of seven states: Andhra Pradesh, Bihar, Tamil Nadu, Jharkhand, Maharashtra, Orissa and Punjab.

The state governments of Tamil Nadu, especially the Ministry of Information Technology, have taken several initiatives for rural development through community information centers (CIC). These may be considered as rural electronic libraries. The project has been started in Salem and Nilgiri district of the state to provide IT facility tribal villages Each CIC will have one server computer system and five client configuration computer systems linked in a local area network and connected to a V– SAT for Internet access. The facility will help government functionaries to use e–mail and the Internet for communicating with district and state officers. Efforts are being made to use the IT Infrastructure at the CICs to capture local information of the village and make them available worldwide through the Internet.

CONCLUSION

Tribal communities in this portion of the planet are trusted into this fissure without their knowledge, repeatedly finding themselves underprivileged in socio- economic- political and now digital. As a consequence of the country's growth in socioeconomic supremacy, many tribal societies are enormously underprivileged of ICTs' access and movement, whether living in established states or undeveloped states.

Furthermore, tribal populations are regularly poor in terms of literateness and other skills-based understanding vital for capable action of info and communications technology. And the dark truth is ICTs' accessibility is more and more associated with the social, political and economic expediency making the tribes in the country digitally handicapped.

Besides, fresh analyses approve this image, with only a minor portion of tribes using the internet, and even far less having access to broadband.

Even though grounded on the condition of tribes in the district of Nilgiri, this study linking digital, social, and economic weakness is binding to tribes throughout the country.

Mirroring the multiplicity of tribal population, however, digital dimness should be detected in the location of wider social and economic dissections, it is not always just an inquiry of

obtaining ability or socioeconomic exclusion. Sympathetic of "Digital choice" is also essential to get a sharper understanding of ICT commitment by tribal population.

Genuine concern and disbelief concerning ICTs exists amongst tribal in India, For numerous tribal populations in India, ICTs indicate a vulnerability to endorse establishment of their lands, non-appearance of legal defenses for their lands, annihilation of traditions, modification of intellectual rational, and the hazard of risking community exercises.

Suspicious brashness and traditional hurdles regarding ICTs requires more than revolutionary and inventive tactics; it includes a level of faith attainable only with the thorough and active participation of the groups involved, and it must go hand in hand with the implementation and travelable defense of tribal population and land rights. Upended on this insight, attaching the socio- economic- political and digital gaps can be consistent with important rights such as freedom of expression and the right to accept info.

ICTs are an influential technology that offers chances to get linked to the tribal societies of the country, even in the most isolated regions. However, restrictions in linking with the tribes of our country still persist, including lack or badly maintained basic infrastructure, expensive financial strategy, inadequate bandwidth, or poor, undependable facility and inadequate economic plans for IT maintenance and lifecycle. And also other main problems that stop ICT from reaching out to the tribal population include the lack of Information and Communication Technology specialists amongst legislators and lawmakers, lack of teachers with IT skills, the supremacy of English on the Internet, the non-appearance of family and local society's involvement. As problematic as this list of problems may seem, they are not the only significant hardships on the skyline. Unquestionably, as the digital transformation is also acknowledged as a vital feature of globalization, some investigators advise that ICT accessibility among tribal peoples could prompt and hurry the reign of Western idea of believes, ethos, and educational approaches, impending threat about the devastation of the cultural variety for example television, radio, movies, and even video games have triggered massive and interminable acquaintance of many tribal youth to non- tribal cultural standards and information with diminutive opportunity to relearn, understand and emphasize their own cultural legacy.

Television is linked to many socio- psychological changes challenged by tribal populace, including cultural loss, absence of community contribution, rising contempt toward land, forest and the wild life around it.

In spite of the problems and barriers, the dormant notion of fairly contributing in the digital world is recognised and often encompassed by tribal populations themselves. During the whole research the tribal population hold the forecasts to use information and communication technology, for example, to protect their human rights, their forest, their wildlife and their land, to revitalize their traditional values, have more educational options, upsurge job chances particularly white collar jobs, admittance to the internet, and facilitate tribal and non- tribal message.

But it is also essential that the tribal communities require being a part of the ICT world on their own terms and on the basis of their traditional backgrounds, to be able to figure their future without jeopardizing their philosophies and identities.

LIMITATION OF THE STUDY

- The study was geographically limited.
- The survey was done with a limited population.
- The study was done with a small private investment.
- The research was specifically about ICT.

SCOPE FOR FUTURE STUDIES

- The study could be done with the tribal population around Tamil Nadu or even India.
- The study could focus on technological reach too.
- The study could be pan- India government funded research.
- The study can extent to the rural villages and not just tribals

Reference

- Annan, K. (2015). *Digital development: Report of the secretary-general*. Retrieved from http://unctad.org/meetings/en/SessionalDocuments/ecn162015d2_en.pdf
- Pew. (2014). *Mobile technology fact sheet*. Pew Research Center. Retrieved from http://www.pewInternet.org/fact-sheets/mobile-technology-fact-sheet
- Huebler, F., & Lu, W. (2012). *Adult and youth literacy: National, regional and global trends, 1990–2015*. Montreal, Canada: UNESCO Institute for Statistics. from Retrievedhttp://unesdoc.unesco.org/images/0021/002174/217409e.pdf
- S. Baller, S. Dutta, & B. Lanvin (Eds.). (2016). *The global information technology report*. Retrieved from http://www3.weforum.org/docs/GITR2016/WEF_GITR_Full_Report.pdf
- http://unpan1.un.org/intradoc/groups/public/documents/un-dpadm/unpan042671.pdf
- https://economictimes.indiatimes.com/industry/telecom/telecom-news/jio-user-base-likely-to-touch-400-million-by-march-2020-analysts/articleshow/65776894.cms
- https://digitalindia.gov.in/writereaddata/files/3.CEO%20NEGD%20Digital%20India_12022018_5.pdf
- https://economictimes.indiatimes.com/news/politics-and-nation/15-18-lakh-tamil-nadu-students-to-get-free-laptops/articleshow/68190548.cms
- https://www.thehindubusinessline.com/specials/india-file/a-story-of-poor-data-inadequate-finances/article25290215.ece
- https://www.thehindu.com/opinion/op-ed/Bridging-the-digital-divide/article14511451.ece
- https://www.news18.com/news/india/indias-digital-divide-low-internet-penetration-web-attacks-make-a-weak-case-for-digital-india-1801721.html
- https://www.dw.com/en/world-bank-points-to-indias-digital-divide/a-19246910

****

சித்தர் பாடல்கள் கற்றலும் கற்பித்தலும் – கடுவெளிச் சித்தர்

Siddhar padalgal katral karpiththal - Kaduveli siddhar

முனைவர் சி.செந்தில்வடிவு | Dr.S.Senthilvadivu

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் – 641 028. senthilvadivu100@gmail.com அலைபேசி - 9585836265

ஆய்வுச்சுருக்கம்

சித்தர்கள் தமது ஞான அனுபவத்தால், உள்ளத்தைப் பக்குவப்படுத்தி, உடலைப் பேணிப்பாதுகாத்து, மனதை ஒருமுகப்படுத்தி வாழ்ந்தவர்கள். யோக, தியானப் பயிற்சிகள் மூலம் 'இறை' என்னும் பேராற்றலை உணர்ந்தவர்கள். சமுதாயப் பொதுமையை விரும்பிய சமூகச் சீர்த்திருத்தவாதிகள். மதங்களைக் கடந்து, சாதியத்தை உடைத்து, மனித மனங்களைப் பண்படுத்த முயற்சித்த சமூகப் போராளிகள் எனலாம். இன்றும் சூட்சுமமாக வாழ்வதாக நம்பப்படும் தீர்க்கதாிசிகள் ஆவர். மக்களுக்குள் காணப்பட்ட சமயச் சடங்குகளையும், போலிப் பூசைகளையும், போலியான போதனைகளையும் தோலுாித்துக் காட்டிய புரட்சியாளர்களுள் ஒருவரான கடுவெளிச் சித்தர் பாடல்களில் காணப்படும் குறிப்பு மொழிகள், மறைமொழிகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

Abstract

Siddhargal Played a Vital role in Indian culture. Siddargal, by using their wise experience and maturity in inner beauty saved their body and soul, They Followed Yoga and Dhayna Practices and realized the great power of God. They treated society and different caste systems in a manner. They are the great reformers of society. They broke the system of different religions and castes by their advice and united the souls of the people like great warriors. People Believe that Still, they are living like Prophets.

They Broke the religious rituals and poojas of the take Principles. They Peeled the outward takes of the different rituals. They are the revolutionists. One of Siddargals is Kaduveli Sidhhar through his Poems and notes and his language he reformed Society. This Essay aims to find out the cryptic voice of the kaduveli siddhar.

திறவுச்சொற்கள் (Keywords): Siddhar padalgal, katral karpiththal, Kaduveli siddhar, Dr.S.Senthilvadivu

ஆய்வின் நோக்கம்

சித்தர் பாடல்கள் உலக மக்கள் அனைவருக்கும் சென்று சேரவேண்டும். சித்தர்களின் மனிதநேயக் கொள்கைகள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாக அமைகின்றது.

ஆய்வின் இன்றியமையாமை

இன்றைய நவீன உலகில் மனிதர்கள் உடல் மற்றும் உள்ள ஆரோக்கியம் குறித்துக் கவனம் செலுத்த இயலாத சூழலில் வாழ்ந்து வருகின்றனர். தற்போது உள்ள ஆபத்தான பெருந்தொற்றுக் காலத்தில், சித்தர்களின் மூச்சுப் பயிற்சி, தியானப் பயிற்சி போன்ற

கலைகள் மக்களுக்குப் பெரிதும் தேவைப்படுகின்றன. ஆகவே மக்கள் நலன் காக்கும் மனிதநேயச் சிந்தனைக் கொண்ட சித்தர் பாடல்கள் சமுதாய மக்களைச் சென்றடைதல் இன்றியமையாத ஒன்றாகும்.

ஆய்வுச் சிக்கல்

சித்தர் பாடல்களில் உள்ள நாட்டுப்புறச் சொல்லாடல்கள், கருத்தாடல்கள் போன்றவை அக்கால மக்களைச் சென்றடைந்துள்ளன. அவர்கள் தம் வாழ்வியலுடன் இச்சிந்தனைகளைப் பொருத்தி வாழ்ந்துள்ளனர். ஆனால் தற்கால மக்கள் இப்பாடல்களை உணர்ந்து கொள்வதில் மொழிச்சிக்கல் உள்ளது. குறிப்புமொழி, மறைமொழி உத்திகள் அதிகம் கையாளப்பட்டு உள்ளமையால், பெரும்பான்மையான மக்கள் உணர்ந்து கொள்வது கடினமாக உள்ளது.

ஆய்வுப் பொருள்

"சித்தர் பாடல்கள் கற்றலும் கற்பித்தலும் – கடுவெளிச் சித்தர்" என்னும் ஆய்வுப் பொருண்மையில் இக்கட்டுரையானது அமைகின்றது.

ஆய்வு எல்லை

"சித்தர் பாடல்கள் மூலமும் உரையும் – தமிழ்ப்பிரியன்" – என்னும் நூற்தொகுப்பில் உள்ள கடுவெளிச் சித்தரின் 35 பாடல்கள் மட்டுமே ஆய்வின் எல்லையாக அமைகின்றது.

ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வுக் கட்டுரையானது கீழ்க்காணும் அணுகுமுறைகளைக் கொண்டு அமைகின்றது.

- விளக்கமுறை அணுகுமுறை
- பகுப்பாய்வு அணுகுமுறை
- ஒப்பீட்டு அணுகுமுறை

குறிப்பு மொழிகள்

மனித வாழ்வின் உடற்கூறு பற்றியும், உள்ளத்தின் இயல்பினைப் பற்றியும் சித்தர்கள் பெரிதும் ஆராய்ந்துள்ளனர். மனித வாழ்வின் நிலையாமையைப் பற்றியும், உடலின் நிலையற்ற தன்மையினையும் கடுவெளிச்சித்தர்,

"நீர்மேற் குமிழியிக் காயம் – இது
நில்லாது போய்விடு நீயறி மாயம்
பார்மீதின் மெத்தவும் நேயம் – சற்று
பற்றாது இருந்திடப் பண்ணு உபாயம்" (பா - 3)

எனும் இப்பாடலில் கூறியுள்ளார். இதில் நீர்மேற் குமிழியினை குறிப்பால் எடுத்துக்காட்டி, மனித வாழ்வும் இதுபோல் கண்ணிமைக்கும் நொடியில் நில்லாமல் சென்றுவிடும் என்கிறார். மனித வாழ்வு என பெரிதாக நாம் நினைக்கும் ஒன்றைக் கூடச் சித்தர் இயற்கை சார்ந்த நீர்க்குமிழி என்னும் சிறிய குறிப்பால் கூறுவதன் மூலம் மனித வாழ்வு மிகவும் அற்பமானது என்றும் கூட பொருள் கொள்ளலாம். அத்தகைய மிகக்குறுகிய வாழ்நாளினை அர்த்தமுடையதாக மாற்ற வேண்டியது மனிதர்களின் முக்கியக் கடமையாகும் என்பதையும் குறிப்பால் உணர்த்துவது போல் உள்ளது.

இறைவனை உன்னுள் காணமுடியும் என்ற புதிய மறுமலர்ச்சி சிந்தனைக்கு வித்திட்டவர்கள் சித்தர்கள் ஆவார். இவர்கள் இறையாற்றலை உணர்வதற்கு பல்வேறு யோகச் சாதனைகளைப் புரிந்துள்ளனர். சான்றாக, "திருமூலர் பிராணாயம முறையில் பின்பற்றப்படும் 'இடதுநாசி வழியாக பூரகம் மட்டும் மற்றும் வலதுநாசி வழியாக இரேசகம் மட்டும்' என்பது பற்றிய குறிப்புகள், திருமூலர் பாரம்ரியத்தில் வந்த சித்தர்களான போகர் மற்றும் கொங்கணரின் நூல்களிலும் காணப்படுகிறது

- 'போகர் ஏழாயிரம்' நூலின் முதல் ஆயிரத்தில் பாடல் எண் . 30 – ல் 'உயர்ந்தேறி வாசியை நீ இடத்தே பூரி. மூச்சிந்த மூலத்தில் முதிர்ந்து கும்பி, முனையான வலம்ரேசி தவறிடாமல்' எனக் கூறப்படுகிறது.
- 'கொங்கணர் முதல் காண்டம் ஆயிரம்' என்ற நூலின் பாடல் எண் 810 – ல் 'ஆட்டியங்கே இடகலையில் பூரித்தப்பா' அடவாக மூலத்தே நினைவாய்க் கூப்பி, நீட்டியங்கே பிங்கலையினுள்ளே ரேசி' எனவும்
- 'கொங்கணர் கடைக்காண்டம் ஆயிரம்' – என்ற நூலில் பாடல் எண் 582 – ல் 'கோச்சிந்த இடத்தே பூரி. கொள்கியே மூலம் கும்பி நாச்சிந்த வலத்தே ரேசி' எனவும் கூறப்பட்டுள்ளது. (https://www.researchgate.net/publication/336900455_tirumular_marrum_cittarkal_parinturaikkum_cantira_petanap_piranayamam)

இவ்வகையில் சித்தர்களின் யோகம் சார்ந்த பாடல்கள் பெரும்பாலும் மறைமொழிகளாகவே உள்ளன.

சித்தர்கள் யோகப் பயிற்சிமுறைகளைக் குருவின் துணைகொண்டே மேற்கொண்டு வந்திருக்கின்றனர். ஆகவே உரிய குருவின் துணையின்றி யோக முறைகளைப் பயிற்சி செய்யும்போது அது, மனித குலத்திற்கு பேராபத்தை விளைவிக்கும். ஆகையால் இவர்கள் தம் பாடல்களை குறிப்புமொழிகளாகவும், மறைமொழிகளாகவும் கூறி வைத்துள்ளனர் எனலாம்.

கடுவெளிச்சித்தர் தமது பாடலில் யோகம் பற்றிக் கூறியுள்ள போதிலும், இறைவனைக் காண விழைவோர்க்கு மெய்ஞானப் பாதையே சிறந்தது என்பதை,

> "மெய்ஞ்ஞானப் பாதையில் ஏறு – சுத்த
> வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு
> அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு – உன்னை
> அண்டினோர்க்கு ஆனந்த மாம் வழி கூறு" (பா – 10)

இப்பாடலில் குறிப்பால் உணர்த்தியுள்ளார். இறைநம்பிக்கை அற்றோர் கூறும் அஞ்ஞானம் உன்னிடத்தில் இருந்தால், அதனை நீக்கிவிடுவாயாக என்று கூறுகின்றார். இறைவனுடன் தாம் கண்டு அனுபவித்த பேரின்ப நிலையைப் பிறருக்கு உணரும்படியாகவும், அவர் மனம் ஏற்கும்படியாகவும் கூறலாம் என்கின்றார்.

இவர் குறிப்புமொழிகளைத் தம் பாடலில் பயன்படுத்தியுள்ள போதிலும், தாம் கண்ட பேரின்பப் பேற்றினைச் சமுதாயத்திற்கு உரிய முறையில் வெளிப்படுத்த விழைகின்றார் என்பதை இதன்மூலம் உணரமுடிகின்றது.

பட்டினத்தாரும் தம் பாடல் ஒன்றில் இறையனுபவத்தைப் பற்றிக் கூறுகையில், "விண்டவர்கள் கண்டவரோ கண்டவர்கள் விண்டவரோ" (பட்டினத்தார், அருட்புலம்பல், பா – 35) என உணர்த்தியுள்ளார். இதில் இறையனுபவத்தை உணர்ந்தவர்கள் அதனை வெளிப்படுத்துவதில்லை, அனுபவத்தை வெளிப்படுத்துபவர்கள் உணர்ந்ததில்லை என்ற சிந்தனையையும் தாண்டி, கடுவெளிச் சித்தரின் இறையனுபவக் கருத்துக்கள் பரந்து விரிந்து கொண்டே செல்கின்றது.

மறைமொழிகள்

சித்தர்கள் தாம் கூற விழைகின்ற கருத்துக்களை, நேரடியாகக் கூறாமல், மறைமொழி வாயிலாகவும் வெளிப்படுத்துவர். சான்றாக, "கோரக்கரால் இயற்றப்பட்ட 16 நூல்கள். அவை எழுதப்பட்டவுடனே பிற சித்தர்களால் மறைக்கப்பட்டு விட்டன. அந்த 16 நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட மறைபொருள் விளக்கங்களின் சாராம்சமே கோரக்கர் சந்திரரேகை – 200 எனும் நூலாகும்." (https://www.researchgate.net/publication/342610408_cittarkal_kalattil_valakkilirunta_citta_maruttuva_nulkalaiyum_avarril_kalappokkil_marainta_nulkalaiyum_attavanaippatuttutalukkana_munvaraivu)

அவ்வாறு அவர்கள் மறைமொழியின் மூலம் வெளிப்படுத்திய கருத்துக்கள் இருவேறு பொருளைக் கொண்டமைவனவாக இருக்கும். அப்பாடல்களை மேலோட்டமாக வாசிக்கும்போது ஒரு பொருளையும், ஆழ்ந்து வாசிக்கும்போது ஆழமான உட்பொருளையும் வெளிப்படுத்தும்.

கடுவெளிச் சித்தரும் தம் பாடல்களில் மறைமொழிகளைக் கையாண்டுள்ளார். ஆண்டி ஒரு இறைவனிடம் பத்து மாதங்கள் வேண்டித் தோண்டி ஒன்றைப் பெறுகின்றான். தமக்குக் கிடைக்கப்பெற்ற பொருளின் அருமையை அறியாமல், அதனைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைத்து விடுகின்றான். இதனை,

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாயக் குயவனை வேண்டி
கொண்டு வந்தான்ஒரு தோண்டி – மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைத் தாண்டி" (க.சி, பா - 5)

இப்பாடலில் கூறியுள்ளார். இதன் வெளிப்பொருள் ஆண்டியின் நிலையினை எடுத்துக் கூறுகின்றது. ஆனால், இதன் உட்பொருள் மனிதன் பத்து மாதங்கள் தாய் வயிற்றில் தங்கி, பின்னர் இப்புவியில் பிறப்பு எடுக்கின்றான். பிறவியின் நோக்கத்தினை உணராது, இறைவனைத் தியானிக்காமல், தீய பழக்கங்கங்களுக்கு ஆட்படுகின்றான். இறுதியில் பிறப்பின் நோக்கத்தை அறிய முற்படாமலே, உடல்நலம் குன்றி மாண்டுபோகின்றான். ஆகவே, நீ அத்தகைய எளிய மனிதன் போலிருக்காமல், யோகப்பயிற்சிகளை முறைப்படி செய்து இறைநிலையை அடைய முற்படுவாயாக என்று அனைவருக்கும் உணர்த்தும்படி கூறியுள்ளார்.

ஐம்புலன்களின் இயக்கத்தால் செயல்படும் இந்த உடலின் நிலை குறித்துக் கடுவெளிச்சித்தர்,

"ஐந்துபேர் சூழ்ந்திடும் காடு – இந்த
ஐவர்க்கு மைவ ரடைந்திடு நாடு
முந்தி வருந்திநீ தேடு – அந்த
மூலமறிந்திட வா முத்தி வீடு" (பா – 13)

இப்பாடலில் கூறியுள்ளார். இதில் உடலினை ஐந்து பேர் சூழ்ந்த காடாக உருவகப்படுத்தி, மறைமொழியினை முன்வைக்கின்றார். ஆனால் இதன் உட்பொருளாக பஞ்சபூதங்களின் கலப்பினால் ஆன, மனித உடலினை ஐம்புலன்கள் ஆட்சி செய்கின்றது. மனித உடலினை மையமாகக் கொண்டு இறையென்னும் பரம்பொருளைத் தேட முற்பட வேண்டும் என்கிறார். அவ்வாறு தேடிக் கண்டுவிட்டால் முக்திப்பேறு கிட்டிவிடும் என்பதை இத்தகைய மறைமொழி வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார்.

இதுபோன்று திருமூலரும் யானை, பகல், இரவு போன்ற மறைமொழிகளைத் தம் பாடல்களில், நுண்பொருட்களைப் பற்றிக் கூறும்போது பயன்படுத்தியுள்ளார். இதனை,

"நேர்மறை எண்ணங்கள், சொற்கள், செயல்கள் மூன்றையும் ஒரு மனிதன் கடைபிடிக்கும் போது, மனித சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் அவன் பதப்படுத்தப்படுகின்றான். இதற்கான உணவு மற்றும் மருந்து உயிர்க்காற்று என சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

'பன்னிரண் டானைக்குப் பகல்இரவு உள்ளது
பன்னிரண் டானையைப் பாகன் அறிகிலன்
பன்னிரண் டானையைப் பாகன் அறிந்தபின்
பன்னிரண் டானைக்குப் பகல்இரவு இல்லையே '

இப்பாடலின் பொருள் யாதெனின், பன்னிரண்டு விரற்கடை செயற்படும் பிராணனாகிய சூரியனுக்குப் பகல் என்றும் இரவு என்றும் காலங்கள் உள்ளன. மூக்கிலிருந்து தொண்டை வழியாகக் கீழ்நோக்கிப் பாய்வதால் சிரசிலுள்ள ஆன்மா ஆன்மாவை அறியாது. கீழ்முகம் செல்லாது மேல்முகம் கொண்ட பிராணனை ஆன்மா அறிந்தபின் பிராணனாகிய சூரியனுக்குப் பகல், இரவு என்ற காலங்கள் இன்றி எப்போதும் பிரகாசிக்கும்" (திருமந்திர யோக விளக்கம், ப – 71) என்பதை இக்கருத்தின் மூலம் அறிய முடிகின்றது.

இதில் பிராண வாயுவினைக் கட்டுப்படுத்தக் கூடிய சாதனையாளர்களின் நிலையினை, யானை அதனைக் கட்டுப்படுத்தும் பாகனின் நிலையுடன் ஒப்பிட்டு நோக்கி கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக திருமூலரும் திருமந்திரத்தில் மறைமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளமையை இதன் மூலமாக அறியமுடிகின்றது.

இயல்பு மொழிகள்

இறையெனும் பேராற்றலை உணர்வதற்கு "வாசி" என்னும் மூச்சுப்பயிற்சி உகந்தது என கடுவெளிச் சித்தர் கூறியுள்ளார். எண்வகை சித்திகளையும் அறிந்து, உன்னுள்ளே உறைந்திருக்கின்ற வெட்டவெளியாகத் திகழும் இறைவனைச் சார்தலை,

"எட்டும் இரண்டையும் மோர்ந்து – மறை
எல்லாம் உனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து
வெட்ட வெளியினைச் சார்ந்து – ஆனந்த
வெள்ளத்தின் மூழ்கி மிகுகளி கூர்ந்து" (பா – 22)

இப்பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். இதில் இறைவனாகிய பரம்பொருள் வாழ்நாள் முழுமையும் தேடினால்கூட காண இயலாதவர். அத்தகைய அரும்பொருளை, மனம் ஒருமைப்பட்ட நிலையில் மூச்சுப்பயிற்சி செய்வதன் மூலம் காண இயலும் என்பதை இவ்வாறாக இயல்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

சித்தர்கள் வெட்டவெளியினைப் பற்றிச் சிந்தித்த கருத்துக்கள் " வெட்டவெளியைச் சில தமிழ்ச்சித்தர்கள் சூனியம் என்றும் குறிக்கிறார்கள். பரம்பொருளை நிறுவுவதற்கு நேர்நிலைச் சான்றுகள் கொடுத்தால் அந்தச் சான்றுகள் அந்தப் பரம்பொருளைக் கட்டுப்படுத்தியதாக ஆகிவிடுகிறது. அதை நிறுவுவதற்கு எதிர்மறைச் சான்றுகள் கொடுத்தால் பரம்பொருளுக்கு நேர்நிலைத் தன்மை எதுவுமே இல்லை என்று ஆகிவிடுகிறது. ஆகவே அதனைப் பற்றிப் பேச நேரும்போது தமிழ்ச்சித்தர்கள் அதனைச் சூனியம் என்றும் வெட்டவெளி என்றும் இரண்டுமற்ற நிலையில் அழைத்தார்கள். சூனியம் அல்லது வெட்டவெளி என்பதைப்பற்றி இந்தியச் சிந்தனை மரபில் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ – எண்ணற்ற குறிப்புகள்

தரப்படுவதைக் காணலாம்" இவ்வாறாக அமைகின்றன. (சித்தர்களின் குறியீட்டு மொழியும் திருமூலரின் சூனிய சம்பாஷணையும், ப – 83, 84)

மனிதர்கள் தம்முடைய வாழ்நாளில் தீவினைகளைச் செய்தல் கூடாது என்பது சித்தர்களின் ஒருமித்த கருத்தாக உள்ளது. ஏனெனில் வினைகளே மனிதர்களின் பிறவினைத் தீர்மானிக்கின்றது. அவர்களின் வாழ்வின் செயல்பாடுகளை நியமிக்கின்றது. ஆகவே நல்வினைகளையே என்னாளும் செய்தல் வேண்டும் என்பது சித்தர்களின் பொதுவான கருத்தாக உள்ளது. அவ்வாறு மனிதர்கள் பின்பற்ற கூடாத செயல்களாக,

"வைதோரைக் கூட வையாதே – இந்த
வையம் முழுவதும் பொய்த்தாலும் பொய்யாதே
வைவினைகள் செய்யாதே – கல்லை
வீணில் பறவைகண் மீதில் எய்யாதே" (பா – 25)

கடுவெளிச் சித்தர் இச்செயல்களைக் குறிப்பிட்டுள்ளார். நம்மை ஒருவர் வைதால் கூட, நாம் பிறரை வைதல் கூடாது. பொய் கூறுதல் கூடாது. பிறர் வெறுக்கும்படியான கீழ்த்தரமான செயல்களைச் செயதல் கூடாது. பறவைகள் மீது கல் எறிதல் போன்றவை மனிதன் நீக்க வேண்டிய செயல்களாக உள்ளன என்கிறார்.

மனித வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நல்ல நெறிகளையும், பின்பற்ற வேண்டிய கடமைகளையும் எளிய மொழிநடையில் அனைவரும் உணர்ந்து கொள்ளும்படி கடுவெளிச்சித்தர் கூறியுள்ளார். இதனை,

"சிவம் அன்றி வேறே வேண்டாதே – யார்க்கும்
தீங்கான சண்டையைச் சிறக்கத் தூண்டாதே
தவநிலை விட்டுத் தாண்டாதே – நல்ல
சன்மார்க்கம் இல்லாத நூலை வேண்டாதே" (க.சி, பா – 26)

இப்பாடலில் சிவத்தை முதன்மையாகக் குறிப்பிடுகின்றார். பிறருக்குத் தீமை உண்டாக்கும் சண்டையைத் தூண்டிவிடுதல் கூடாது என்கிறார். தவநிலையிலிருந்து விலகாமல் இருத்தல் நலம் என்றும், சன்மார்க்கம் கற்பிக்கும் நூலைத் தவிர, மற்ற நூல்களை விரும்பாதே என்கிறார். இதில் கடுவெளிச்சித்தரின் சமநோக்கு சமுதாயத்தை விரும்பும் தன்மையானது எளிய இயல்பான மொழியில் கூறப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி நிலை

மனித வாழ்வின் நிலையற்ற தன்மையினையும், உடலின் அழியும் தன்மையினையும் கடுவெளிச் சித்தர்,

"கூடவருவது ஒன்றில்லை – புழுக்
கூடெடுத்து இங்கண் உலவுவதே தொல்லை
தேடரும் மோட்சம் எமதுஎல்லை – அதைத்
தேடும் வழியைத் தெளிவோரும் இல்லை" (க.சி, பா – 14)

இப்பாடலில் கூறியுள்ளார். புழு போன்ற துர்நாற்றம் வீசுகின்ற இவ்வுடலைக் கொண்டு இப்புவியில் நடமாடுவதைத் தொல்லையாகக் கருதுகின்றார். ஆகவே, இவ்வுடலை விடுத்து வீடுபேற்றினைத் தாம் விரும்புவதாக இப்பாடலில் கூறியுள்ளார். அந்த அரிய பேற்றினை அடையும் வழியைத் தேடித் தெளிவோர் இவ்வுலகில் யாருமில்லை என்ற எதார்த்ததையும் பதிவு செய்துள்ளார். இதில் நிலையற்ற இப்பிறப்பில் நிலையான

பேரின்பத்தை நோக்கிப் பயணித்தல் வேண்டுமென்ற இவரது (மனிதவாழ்வு குறித்தான) ஆராய்ச்சியின் நோக்கமானது புலப்படுகின்றது.

வாழ்நாளில் எண்ணற்ற பாவங்களைச் செய்துவிட்டு, அதனைப் போக்குவதற்கு புனித நீராடும் செயலானது பயனற்றது என்பதை,

"காசிக்கு ஓடில்வினை போமோ – அந்தக்
கங்கையாடில் கதி தானும் உண்டாமோ
பேசமுன் கன்மங்கள் சாமோ – பல
பேதம் பிறப்பது போற்றினும் போமோ?" (பா – 15)

இப்பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். பாவங்கள் செய்தாலும், அதனைப் பற்றி பிறரிடம் புலம்புவதாலும் அவை தீர்ந்து விடுவதில்லை. அவரவர் செய்த வினைகளின் பலன்களை அவரவரே அனுபவித்தல் வேண்டும். "வினைகளின்று விடுபடுதல் அரிது" என்ற பேருண்மையை தமது ஞானத்தால் கண்டுணர்ந்த ஆராய்ச்சிக் கருத்தாக இங்கு வெளிப்படுத்தியுள்ளார்.

சித்தர்கள், மக்கள் வினையிலிருந்து விடுபடுதல் அரிது என்று கூறிய போதிலும், சித்தர்கள் வினைகளைக் கடந்தே நிற்கின்றார்கள் சான்றாக, "சிவபோகமாகிய திருவடி நுகர்வினைத் தம்முள்ளே உலையாவுணர்வில் உழந்துணர்ந்து நிற்பார் தூங்கிக் கண்டார். அவர் தம் திருவடிப் பேற்றின் பொருவரு நிலையினை ஒருவராலும் கூற முடியாது. தூங்காமல் தூங்கல் என்பது அறிதுயில் நிலை என்கிறார் திருமூலர்,

'தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே' (திருமந்திரம், 173)

பிறவிதொறும் தொடர்கின்ற கன்ம வினையாகிய வாசனையை முழுவதுமாக அறுத்தவன் ஞானி. பிறவிப்பிணி தன்னை அடையாமல் காப்பவன் சித்தன் என்கிறார் சட்டைமுனி,

'எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி
ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தன்' (சட்டைமுனி ஞானம், பா – 22) (சித்தர்கள் கண்ட மானுட ரகசியம், ப – 37) இவ்வாறாக சித்தர்கள் வினைகள் குறித்து பல்வேறு வகையில் சிந்தித்துள்ளனர்.

அறிவுரை மொழிகள்

கடுவெளிச் சித்தர் தம் பாடல்களில் மூலம் மக்களுக்கு அறிவுரைகள் கூறி, நல்வழிப்படுத்தும் தன்மையை,

"கள்ளவேடம் புனையாதே – பல
கங்கையிலே உன் கடம் நனையாதே
கொள்ளை பிரிந்து நீ கோள் முனையாதே" (பா – 33)

இப்பாடலில் அறிய முடிகின்றது. இறைவனை உண்மையான முறையில் நாடாமல், போலிச்சாமியார் வேடம் புனைந்து நாடுதல் தவறு என்கிறார். பல பாவங்களைச் செய்துவிட்டு கங்கையிலே போய் நீராடுவதால் பயன் ஒன்றும் இல்லை. பிறர் பொருளை அபகரிக்க எண்ணுதல், கோள்மூட்டி பகையை வளர்த்தல் போன்ற செயல்களைப் பின்பற்றுதல் தவறு என்று அறிவுரை மொழிகள் கூறுகின்றார்.

மனிதர்கள் தாம் செய்த பாவங்களின் விளைவினை, தமது மரணத்தருவாயில் தான் உணர நேருகின்றது. அவ்வாறு இயலாத காலத்தில் வாழ்வின் எதார்த்தத்தை உணர்ந்து பயன் இல்லை என்பதை,

"பொய்யாகப் பாராட்டும் கோலம் – எல்லாம்
போகவே வாய்த்திடுமி யார்க்கும் – போங்காலம்
மெய்யாக வேசுத்த காலம் – பாரில்
மேவப்புரிந்திடில் என்ன அனுகூலம்? " (பா – 16)

இப்பாடலில் கூறியுள்ளார். இறுதித் தருவாய் வரையில் பொய் வேடமிட்டுத் திரிகின்றனர். ஆகவே ஒருவரின் புறத்தோற்றத்தைக் கண்டு மட்டுமே இவ்வுலகம் அவரைப் பாராட்டி வருகின்றது. அப்பொய்க்கோலம் மனிதனின் மரணத் தருவாயில் அழிகிறது. ஆகவே பொய்க்கோலத்தைத் தவிர்த்து மெய்யான வாழ்வு வாழவேண்டும் என்று கடுவெளிச்சித்தர் கூறுகின்றார்.

இறைவன் சோதி வடிவானவன். அடியார்களின் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் அடியார்க்கும் அடியார் என்பதை,

"எங்கும் சுயப்பிரகாசன் – அன்பர்
இன்ப இருதயத்து இருந்திடும் வாசன்
துங்க அடியவர் தாசன் – தன்னை
துதிக்கின் பதவி அருளுவன் ஈசன்" (பா – 34)

இப்பாடலில் உணர்த்தியுள்ளார். இறைவன் அனைத்தையும் கடந்தவர். ஆகவே தன்னை விரும்பி வணங்கும் அடியார் உள்ளத்தில் எழுந்தருளி வீடுபேறு அளிப்பவர் என்கிறார். இவ்வாறாக இறைவன் அனைவருக்கும் பொதுவானவர். மக்களுள் பேதம் பார்த்து இறைவனை வணங்கிட தடைகள் கூறும், சமயங்களின் கட்டுப்பாடுகளை கடுவெளிச்சித்தர் இவ்விதம் உடைத்துள்ளார்.

நிறைவாக

- சித்தர்கள் தன்னை உணர்ந்தவர்கள். காலம் கடந்தும் இவ்வுலகில் வாழ்பவர்கள்.
- காலத்தால் முன்னோக்கியும், பின்னோக்கியும் செல்லும் ஆற்றல் கொண்டவர்கள்.
- நாடு, மதம், மொழி, இனம், சமயம் ஆகிய அனைத்தையும் கடந்து நிற்கும் சித்தர்களின் உள்ளம் தெளிந்த நீரோடை போன்றது. இவ்வுள்ளம் இறைவன் வீற்றிருக்கும் ஆலயம் ஆகும்.
- சித்தர் பாடல்களின் மறைபொருள் தன்மையின் காரணமாக அரிதாக உள்ள ஆராய்ச்சிகள் பரவலாக மேற்கொள்ளபட வேண்டும்.
- சித்தர்களின் கொள்கைகள், கருத்துக்கள் அக்கால அரசியல் நிலை போன்றவற்றை சித்தர்களே கூறிய காரணத்தினாலும், பெரும்பாலும் இது ஒரு புதிராகவே உள்ளது.
- சித்தர்களின் யோக சாதனைகள், மனித உடல் மூலம் பல்வேறு உண்மைகளை ஆராய்ந்து கண்டறிந்துள்ளனர். இப்பயிற்சிகளைச் சித்தர்கள் உரிய குருவின் துணை கொண்டே மேற்கொண்டுள்ளனர்.
- யோகப் பயிற்சி முறைகளை உரிய குருவின் துணையின்றி, மேற்கொள்ளும் போது மனித சமூகத்திற்கு பேராபத்து நிகழும் என்பதால், சித்தர்கள் அப்பாடல்களை மறைமொழியில் கூறி வைத்துள்ளனர் எனலாம்.

- ஆகவே, தெளிந்த ஞானத்துடன் இப்பாடல்களை கற்று அறிய முற்படும் போது இப்பாடல்கள் மக்களிடம் சென்று சேரும். அப்போது மனிதகுலத்திற்குப் பெரிதும் நன்மைகள் கிட்டும் என்பது திண்ணம்.
- சித்தர்களின் புரட்சி சிந்தனைகள் தோன்றிய காலத்தில், பக்தி இயக்கங்கள் வளர்ச்சியுற்றன. அதனால் முரண்பட்ட கருத்துக்களாகச் சித்தர்களின் சிந்தனைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.
- மக்களால் பித்தர்களாக அடையாளம் காட்டப்பட்டு, இவர்தம் பாடல்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.
- சித்தர் பாடல்கள் மக்களிடத்து அக்காலம் முதல் இக்காலம் வரையில் முழுமையாகச் சென்று சேராமைக்கு, அக்கால அரசியல் பின்னணியும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.
- இந்நிலைகள் மாறுவதற்கு அடித்தளமாக கல்லூரிகளில் இளங்கலை, முதுகலைத் தமிழ்ப் பாடத்திட்டத்தினுள் சித்தர் பாடல்களும் இடம்பெறுதல் வேண்டும்.
- சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைய அரும்பாடுபட்ட சித்தர்களின் முற்போக்குச் சிந்தனைகள் எதிர்வரும் தலைமுறையினருக்கு உரிய வகையில் கொண்டு சேர்ப்பது நம் தலையாய கடமையாகும்.
- சித்தர்களின் சமூகச்சீர்த்திருத்தச் சிந்தனைகள் உலக மக்கள் அனைவருக்கும் எவ்விதத் தடைகளுமின்றிச் சென்று சேர வேண்டும்.

துணைநின்றவை

- தமிழ்ப்பிரியன், (முதற்பதிப்பு, டிசம்பர் 2014), சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், சென்னை: கற்பகம் புத்தகாலயம்
- கணபதி டி.என்., சித்தர்களின் குறியீட்டு மொழியும் சூனிய சம்பாஷணையும், ரவி பப்ளிகேஷன்ஸ், தமிழ்ச் சித்தர் ஆய்வு மையம் வெளியீட்டு எண் – 3.
- ரிஷபானந்தர், (2005), சித்தர்கள் கண்ட மானுட ரகசியம், சென்னை: அழகு பதிப்பகம்.
- மாணிக்கவல்லி பொன்., (முதற்பதிப்பு டிசம்பர் 2015), திருமந்திர யோக விளக்கம், காரைக்கால்: விழிச்சுடர் பதிப்பகம்.

****

கணித்தமிழ் கற்பித்தலில் உள்ள சிக்கல்களும் தீர்வுகளும்
Problems and Solutions in Tamil Computing Teaching

முனைவர் இரா.தனசுபா | Dr. R. Dhanasuba

உதவிப் பேராசிரியர் – தமிழ்த்துறை, சைவபானு சத்திரிய கல்லூரி, அருப்புக்கோட்டை – 626102, தமிழ்நாடு, இந்தியா, Mail id : traj.acc@gmail.com, Orcid id : https://orcid.org/0000-0001-7551-7993

ஆய்வுச் சுருக்கம்

கன்னித்தமிழ் கணினித்தமிழாக வடிவெடுத்துப் பல்லாண்டு ஆகிவிட்டது. ஆயினும் கணினியில் ஆங்கிலமொழி வளர்ச்சி பெற்றுள்ள அளவிற்குத் தமிழ்மொழி வளர்ச்சியடையவில்லை. "ஒரு சமுதாயம் இன்றைய பணிகளை இன்றைய கருவி கொண்டு செய்ய வேண்டும். இன்றைய பணியை நேற்றைய கருவி கொண்டு செய்யும் இனத்தின் நாளைய வாழ்வு நலிவடையும்" என்னும் சிந்தனைக்கேற்ப இணையத்தில் தழிழ்மொழியைப் பயன்பாட்டு மொழியாக்குவதற்குக் கணித்தமிழ் வளர்ச்சியடைய

வேண்டும். சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை பல தரவுகள் கணினியில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு உள்ளீடு செய்தவை அனைத்தையும் தமிழை முதன்மைப் பாடமாகப் படிக்கும் கல்லூரி மாணவர்கள் அறிந்துள்ளனரா என்பதையும் அவர்களுக்குக் கணித்தமிழைக் கற்பிப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் ஆய்வு செய்து அதனைப் போக்குவதற்குரிய தீர்வை முன்மொழிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

Abstract

It has been many years since Kannithamil was formed as a computer Tamil. However, the Tamil language has not developed to the extent that the English language has developed in the computer. A society needs to do today's tasks with today's tool. Mathematical Tamil needs to be developed to make Tamil a working language on the Internet in line with the idea that the future life of the race that does today's work with yesterday's tool will be ruined. Many data have been entered into the system, from Sanskrit literature to contemporary literature. The purpose of this article is to examine whether college students who study Tamil as a primary subject are aware of all such inputs and to find solutions to their problems in teaching mathematical Tamil.

திறவுச் சொற்கள் (Keywords): இணையதளம் - Internet, குறுஞ்செயலிகள் - Apps, மென்பொருள் - Software, தேடுபொறி – Search Engine, சமூக ஊடகங்கள் - Social Media, அகரமுதலி - Dictionary, சொற்பிழை திருத்தி – Spell Checker, எழுத்துணரி - Text to Speech

முன்னுரை

'மாற்றம் ஒன்றே மாறாத் தத்துவம்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தொழில்நுட்பங்கள் மாறிக் கொண்டும் வளர்ந்துகொண்டும் உள்ளன. அவற்றைத் தமக்குள் உள்வாங்கிக் கொண்டு நீடிக்கும் மொழிதான் காலம்கடந்து நிற்கும். மற்றவை காலப்போக்கில் பயன்பாடு குறைந்து அழிந்துபோகும் அபாயம் உள்ளது. முதலில் தோன்றிய மொழி, இருபதாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த மொழி, செம்மொழி போன்ற சிறப்புகளைப் பெற்ற தமிழ்மொழி இன்று கணினிவழியிலும் வளர்ச்சியடைந்து வருகிறது. தொழில்நுட்ப வல்லுநர்களும் தமிழ் அறிஞர்களும் இணைந்து பணியாற்றிக் கணினிவழியே தமிழ்மொழியைக் கற்பதற்கும் கற்பிப்பதற்குமான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். கணித்தமிழை, கணினியைக் கற்பிப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. அச்சிக்கல்கள் என்ன என்பதை ஆராய்ந்து அதற்குச் சரியான தீர்வு காணவேண்டும்.

கற்றல்-கற்பித்தலில் கணினியின் பயன்பாடு

ஒருகாலத்தில் அஷ்டாவதானி, தசாவதானி, சதாவானி என்று மனிதர்களின் திறமைகளைப் போற்றினர். இன்று மனிதனுக்குப் போட்டியாக கணினிகள் பல்வேறு திறன்களுடன் வளர்ந்து வருகின்றன. குழந்தைகளுக்கான அடிப்படைத்தமிழ் தொடங்கி அறிஞர்களுக்கான ஆய்வுத்தமிழ் வரை கணினிவழி தமிழ் கற்பதற்கான சூழல்கள் உருவாகியுள்ளன. வலைப்பதிவு, சமூக வலைதளங்கள் என காலத்திற்கு ஏற்ப வகுப்பறைகளைக் கடந்து மாணவர்களுடன் ஆசிரியர்கள் தொடர்பில் இருக்கும் நிலை உருவாகி உள்ளது. இந்நிலையில் தமிழ் கற்றல் - கற்பித்தலுக்குக் கணினியைச் சரியாகப் பயன்படுத்தினால் உலகு பரவி வாழும் தமிழர்களுக்கும் அடுத்த தலைமுறைக்கும் தமிழைக் கொண்டு சேர்க்க முடியும். கணினி மூலமாகப் பலவகைகளில் கற்றல்-கற்பித்தல் செயலை மேம்படுத்த முடியும்.

இணையதளங்கள், சமூக ஊடகங்கள், தேடுபொறி நிறுவனங்கள், குறுஞ்செயலிகள், மென்பொருள்கள் போன்று பல வழிகளில் இன்று தமிழ்மொழி வளர்ச்சியடைந்து வருகிறது. வெளிநாடுவாழ் தமிழர்கள் தங்கள் குழந்தைகள் தம் தாய்மொழியாம் தமிழைக் கற்க வேண்டும் என்ற ஆவலின் காரணமாக இம்முயற்சியை ஊக்குவித்துச் சிறந்த பங்காற்றி வருகின்றனர்.

தமிழ் இணையதளங்களின் பங்கு

தமிழ்மொழியைக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் பல இணையதளங்கள் உள்ளன. ஆங்கிலத்தின் வழியாகத் தமிழ் கற்றல், மலாய்மொழியின் வழியாகத் தமிழ் கற்றல் என உலகத்தின் பெருமொழிகள் பலவற்றின் வழியாகத் தமிழைக் கற்பதற்குரிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன. முறையாகச் செய்யப்பட்ட கலைத்திட்டங்கள், பாடங்கள் ஆகியவற்றை இணையத்தின் வழியே படிப்பதன் வழியாகத் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ள முடியும்.

தொடக்கத்தில் ஆங்கிலம் கற்றுக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட இணையதளங்கள் காலப்போக்கில் உலகில் இருக்கும் அனைத்து மொழி கற்றலுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வகையில் 'தமிழ் இணையக் கல்விக் கழகம்" (http://www.tamilvu.org/) முன்னிலை வகிக்கிறது. இந்த இணையப் பக்கத்தில் தமிழில் அடிப்படைக் கல்வியிலிருந்து பட்ட மேற்படிப்புக் கல்விவரை படிக்க முடியும். இதைப் போன்று அமெரிக்காவிலிருந்து தெற்காசியாவின் மொழிகளைக் கற்றுக் கொடுக்க உருவாக்கப்பட்ட 'தெற்காசிய மொழி வழி மையம்" என்ற இணையப் பக்கம் உள்ளது. இது அமெரிக்காவில் வாழும் தமிழ்க்குழந்தைகள் தமிழ்மொழியைக் கற்றுக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டது. (http://www.southasia.sas.openn.edu/tamil/index.html)

குழந்தைகள் வீட்டில் இருந்தபடியே இணைத்தின் வழியாகத் தமிழ் கற்கும் வகையில் தமிழ்க்கழகம் (http://www.tamilacademy.com/) என்ற இணையதளம் உருவாக்கப்பட்டது. மழலைக்கல்வி முதல் ஏழாம்நிலை வரையிலான கல்வியை இத்தளம் வழங்குகிறது. இத்தளமும் அமெரிக்காவிலிருந்து செயல்படுகிறது. மேலும் இதன் மற்றொரு பிரிவு தமிழகத்தில் விருதுநகர் மாவட்டத்தில் செயல்படுகிறது.

இவற்றைப்போல இன்னும் பல இணையதளம் தமிழ் கற்றல்-கற்பித்தல் சேவையைச் செவ்வனே செய்து வருகின்றன. அவற்றில் சில:

- http://www.valaitamil.com/
- http://eluthu.com/
- http://tamillexicon.com/
- http://neechalkaran.com/
- http://tamilunltd.com/
- http://tamizhagam.net/about/aboutus.html

தமிழ் கற்பிக்கும் குறுஞ்செயலிகள்

"சராசரி ஆசிரியர் பாடத்தைக் கற்பிக்கிறார். சிறந்த ஆசிரியர் நடைமுறை உதாரணங்களோடு கற்பிக்கிறார். உன்னதமான ஆசிரியர் உயிரோட்டத்தை ஏற்படுத்துகிறார்." என்று வில்லியம் ஆலபர்ட் உன்னத ஆசிரியனுக்கு இருக்கும் திறனை எடுத்துக்காட்டியுள்ளார். இன்று தொழில்நுட்ப அறிவைப்பெற்ற ஆசிரியர் இத்தகு உயிரோட்டமிகு பாடத்தை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். இவ்வகையில் கற்றல் - கற்பித்தல் குறுஞ்செயலிகள் உலக அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. அலைபேசியில் குறுஞ்செயலிகள் உருவாக்கப்பட்டு இவ்வுலகம் முழுதையும் ஆட்டிவைக்கிறது எனலாம்.

இன்று தமிழ்க் குறுஞ்செயலிகள் பல உருவாக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளன. புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் தம் தாய்மொழியாம் தமிழைத் தனது சந்ததியினர் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற பேரவாவில் பல தமிழ்க் குறுஞ்செயலிகளைப் பயன்படுத்தியும் உருவாக்கியும் வருகின்றனர். தமிழர்கள் அதிகம் வாழும் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாட்டு வகுப்பறைகளில் தமிழ்க் குறுஞ்செயலிகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. ககூட், தமிழ் 101, மழலைத்தமிழ், பேபி ஸ்லேட் தமிழ், கிட்ஸ் மீடியா தமிழ், மூடுல்ஸ், அரேஸ்மா, ராக்மேன், பாலமுருகன், தமிழ் கொட்ஸ், Learn Tamil Writing, தமிழ் நூலகம், தமிழ்க் காப்பியம், தேவாரம், கவிஞர்கள், சங்கம் போன்ற எண்ணற்ற குறுஞ்செயலிகள் உலக அளவில் தமிழ்மொழியை வளர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளன.

எழுத்துப் பயிற்சிச் செயலிகள்

ஆப்பிள் நிறுவனத்தின் செயலி சந்தையில் (Apple App Store) தமிழ் எழுத்துப் பயிற்சிக்காகவும் எழுதும் துறைகளை அறிவதற்காகவும் பல செயலிகள் மேம்படுத்தப்பட்டு இன்றைய பயன்பாட்டில் உள்ளன.

தமிழ் 101 செயலி – சிவக்குமார் லோகநாதன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. எழுத்துக்களைக் கேட்டு எழுதும் வகையில் அமைந்துள்ளது.

- Learn Tamil Writing செயலி – வேகமாப் நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டது.
- மழலைத்தமிழ் செயலி – மேஜிக்பாக்ஸ் நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டது.
- Tamil Alphabetic Tracing செயலி – விக்னேஷ் என்பவரால் கண்டுபிடிக்கபட்டது.
- சங்கம் செயலி – Melio Sistems நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் தமிழ் எழுத்துக்களை உச்சரிக்கக் கற்றுத்தரும் செயலிகளும், தமிழ் அகராதிகளும், தமிழ்த் தட்டச்சுச் செயலிகளும், ஏராளமாகப் பயன்பாட்டில் உள்ளன.

மேலே குறிப்பிட்ட பல தொழில்நுட்ப உட்பிரிவுகளின் வாயிலாகக் கற்றல் - கற்பித்தல் நடைபெற்றாலும் இதற்கெல்லாம் மூலமாக இருந்து செயல்படுவது மென்பொருள்கள். இன்று பல்வேறு மென்பொருள்கள் கற்றல் - கற்பித்தலுக்காகத் தயாரிக்கப்பட்டு உலகச் சந்தையில் வியாபாரம் செய்யப்படுகின்றன. அவற்றை வாங்கிப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே உள்ளது.

கணித்தமிழ் கற்பித்தலில் உள்ள சிக்கல்கள்

தமிழ் எழுத்துருக்கள், இணையதளங்கள், மென்பொருள்கள், குறுஞ்செயலிகள், வலைதளங்கள், மின் அகரமுதலிகள், தமிழ் எழத்துணரிகள், சொற்பிழை திருத்திகள் போன்றவற்றைத் தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்கள் ஓரளவு அறிந்திருந்தால் மட்டுமே ஆசிரியர்கள் அவர்களது கணித்தமிழ் அறிவை மேம்படுத்த முடியும். கல்லூரிகளில் தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்களின் கணித்தமிழ் அறிவைச் சோதிப்பதற்காக விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சில கல்லூரிகளில் தமிழ்த்துறையில் படிக்கும் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களிடையே களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ் இலக்கியத்தை முதன்மைப் பாடமாகப் படிக்கும் கல்லூரி மாணவர்களிடையே தமிழ் இணைய அறிவைச் சோதிக்கும் வகையில் வினா - நிரல் தயாரிக்கப்பட்டது. வினாக்களுக்கு அவர்கள் அளித்த விடைகளை ஆய்வு செய்து அவர்களின் தமிழ் இணைய அறிவு அறியப்பட்டது. ஆய்வுக்காலம் மற்றும் ஆய்வு எல்லை கருதி விருதுநகர் மாவட்டத்தில் உள்ள கலை - அறிவியல் கல்லூரிகளில் தமிழ் இலக்கியம் படிக்கும் இளங்கலை மூன்றாமாண்டு, முதுகலை முதல் மற்றும் இரண்டாமாண்டு மற்றும் ஆய்வு மாணவர்கள் இவ்வாய்விற்கு எடுத்துக்

கொள்ளப்பட்டனர். மொத்தம் 9 கல்லூரிகளில் படிக்கும் 533 மாணவர்களுக்கு வினா-நிரல் கொடுத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கலை - அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களில் பெரும்பாலானோர் சமூக பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியவர்களாக உள்ளனர். இவர்களுக்கு இணையம் பயன்படுத்தும் வாய்ப்பும் குறைவாகவே உள்ளது. பெரும்பாலான மாணவர்கள் இணைய அறிவைப் பெறுவதற்கு ஆர்வமாக இருந்தால்கூட சிறந்த வழிகாட்டுதல்கள் இல்லை. மேலும் இணையத் தமிழில் போதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போதுதான் சில ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்வேடுகளும் வெளிவந்த வண்ணம் உள்ளன. இன்னும் பழந்தமிழ் இலக்கியங்களை ஆர்வத்துடன் ஆய்வுசெய்யும் சிறந்த தமிழ்ப் பேராசிரியர்கள் பலரும் இணையத்தமிழ் பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் காட்டவில்லை. இப்படிப் பல காரணங்கள் அவர்கள் இணைய அறிவைப் பெறுவதற்குத் தடையாக உள்ளது. மாணவர்கள் அளித்த விடைகளை ஆய்வு செய்து இணைய அறிவை மேம்படுத்துவதற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் கண்டறியப்பட்டன. தமிழ் கற்ற பேராசிரியர்களும் மாணவர்களும் தமிழ்மொழியை இணையத்தில் கோலோச்சச் செய்ய வேண்டும் என்ற முனைப்பில் பணியாற்றினால் தமிழ்மொழியையும் இலக்கியங்களையும் உலகறியச் செய்யலாம். களஆய்வின் மூலம் கீழ்க்கண்ட ஆய்வு முடிவுகள் கண்டறியப்பட்டன.

வினா- நிரல்

பெயர் : கல்லூரியின் பெயர் :

வகுப்பு : நாள் :

1. உனக்கு தமிழில் தட்டச்சுச் செய்யத் தெரியுமா?

அ) தெரியும் ஆ) தெரியாது இ) ஆர்வமில்லை.

2. இணையதளங்களைப் பயன்படுத்தத் தெரியுமா?

அ) தெரியும் ஆ) தெரியாது இ) ஆர்வமில்லை.

3. தமிழ் இணையதளங்களைப் பற்றிய அறிவு.

அ) அதிகம் ஆ) குறைவு இ) இல்லை.

4. உனக்கெனத் தனி மின்னஞ்சல் முகவரி வைத்துள்ளாயா?

அ) உள்ளது ஆ) இல்லை இ) தெரியாது

5. இணையதளங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு

அ) அதிகம் ஆ) குறைவு இ) இல்லை.

6. தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பதிவிறக்கம் செய்து படிக்கும் பழக்கம் உள்ளதா?

அ) உள்ளது ஆ) இல்லை இ) குறைவு

7. உனது படைப்பை இணையதளப் பக்கங்களில் பதிவேற்றம் செய்துள்ளாயா?

அ) பதிவேற்றியுள்ளேன் ஆ) பதிவேற்றவில்லை இ) பதிவேற்றத் தெரியாது

8. இணைய நூலகங்களைப் பயன்படுத்தும் பழக்கம் உள்ளதா?

அ) உள்ளது ஆ) இல்லை இ) தெரியாது

9. மின்னிதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்ததுண்டா?

அ) உண்டு ஆ) இல்லை இ) தெரியாது

10. உலக இணையத்தமிழ் அமைப்புகள், நிறுவனங்களின் செயல்களைப் பற்றித் தெரியுமா?

அ) தெரியும் ஆ) தெரியாது இ) ஆர்வமில்லை.

11. இணையத்தமிழ் மாநாடு, கருத்தரங்கு மற்றும் பயிலரங்குகளில் கலந்துகொண்டது உண்டா?

அ) உண்டு ஆ) இல்லை இ) வாய்ப்புக் கிடைக்கவில்லை.

12. உனது பாடத்திட்டத்தில் இணையத்தமிழ்க்கல்வி இடம்பெற்றால் உனக்குப்

பயனுள்ளதாக இருக்குமா?

அ) இருக்கும் ஆ) இருக்காது இ) தேவையில்லை.

13. தமிழ்க் குறுஞ்செயலிகளைப் பயன்படுத்தும் வழக்கம் உள்ளதா?

அ) உள்ளது ஆ) இல்லை இ) தெரியாது

14. இணையத் தமிழ்க்கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டால் ஆர்வமாக பங்கேற்பீர்களா?

அ) பங்கேற்பேன் ஆ) பங்கேற்க மாட்டேன் இ) தேவையில்லை.

15. இணையத்தமிழ்க் கல்வியைக் கற்றுக் கொடுப்பதன் மூலம் தமிழ்மொழியை

உலகத்தரத்திற்கு உயர்த்த முடியுமா?

அ) முடியும் ஆ) முடியாது இ) தேவையில்லை.

16. சமூக வலைதளங்களில் நீ பயன்படுத்தும் மொழி?

அ) தமிழ் ஆ) ஆங்கிலம் இ) இரண்டும் கலந்து

(கையொப்பம்)

மொத்த மாணவ மாணவியர் - 533

வினா எண்	அ	ஆ	இ

1	192	299	42
2	274	229	30
3	59	426	48
4	284	241	8
5	101	352	80
6	160	308	65
7	61	404	68
8	150	352	31
9	16	437	80
10	72	446	15
11	514	8	11
12	506	25	2
13	168	301	64
14	514	8	11
15	518	12	3
16	142	127	264

கள ஆய்வில் கண்டறிந்த உண்மை

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 9 கல்லூரிகளில் தமிழ் இலக்கியம் படிக்கும் 533 மாணவர்களிடம் செய்யப்பட்ட ஆய்வில் கீழ்க்கண்ட ஆய்வு முடிவுகள் கண்டறியப்பட்டது.

- 50 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் தமிழில் தட்டச்சு செய்யத் தெரியாதவர்களாக உள்ளனர்.
- இணையதளங்களைப் பயன்படுத்தும் பழக்கம் இருப்பினும் பொழுதுபோக்கிற்காக சமூக வலைதளங்களை மட்டுமே பயன்படுத்துகின்றனர்.
- தமிழ் இணையதளங்களைப் பற்றிய அறிவு மிகவும் குறைவாக இருப்பதால் இலக்கணம் மற்றும் இலக்கியங்களைத் தரவிறக்கம் செய்து படிக்கும் பழக்கமும் குறைவாக உள்ளது.
- பெரும்பாலான மாணவர்கள் தனக்கென மின்னஞ்சல் முகவரி வைத்துள்ளார்கள்.
- 66 சதவீத மாணவர்கள் தாங்களுக்கு இணையதளத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது என பதிலளித்துள்ளனர்.
- 3 சதவீத மாணவர்கள் மட்டுமே தமிழ் மின்னிதழ்கள் பற்றி அறிந்திருந்திருந்தனர்.
- இணைய நூலகங்கள் பற்றியும் உலக இணையத்தமிழ் அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் பற்றியும் இணையத் தமிழ் மாநாடு, கருத்தரங்குகள் பற்றியும் 80 சதவீத மாணவர்கள் அறிந்திருக்கவில்லை.
- 95 சதவீத மாணவர்கள் பாடத்திட்டத்தில் இணையத்தமிழ்க் கல்வி இடம்பெற்றால் பயனள்ளதாக இருக்கும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

- இணையத்தமிழ்க்கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டால் ஆர்வமாகப் பங்கேற்பேன் என்றும் அவ்வாறு கற்றுக் கொடுப்பதன்மூலம் தமிழ்மொழியை உலகத் தரத்திற்கு உயர்த்தமுடியும் என்றும் 95 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் பதிலளித்துள்ளனர்.
- 50 சதவீதம்பேர் சமூக வலைதளங்களில் தமிழும் ஆங்கிலமும் கலந்த மொழிநடையைப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர். இவர்கள் தமிழ் தட்டச்சு தெரியாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.
- ஒட்டுமொத்த ஆய்வின்மூலம் தமிழ் இலக்கியத்தை முதன்மைப் பாடமாகப் படிக்கும் மாணவரிடையே போதிய அளவு இணைய அறிவு இல்லை என்பது கண்டறியப்பட்டது.
- தமிழ் கற்றவர்கள் இணைய அறிவை முழுமையாகப் பெற்றால் மட்டுமே தமிழ்மொழியை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முடியும் என்பது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

தீர்வுகள்

- தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவர்களுக்கு இளங்கலை முதலாமாண்டிலேயே தமிழ் தட்டச்சுப் பயிற்சியைக் கட்டாயமாக்க வேண்டும்.
- செய்முறைப் பயிற்சியோடுகூடிய இணையத்தமிழைப் பாடத்திட்டமாக்க வேண்டும்.
- தமிழ்மொழியறிவுடன் இணையத்தில் தொழில்நுட்ப அறிவையும் பெற்ற ஆசிரியர்களைப் பணியிலமர்த்தலாம்.
- இணையத்தமிழ் மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் பற்றிய சுற்றிக்கைகள், செய்திகள் போன்றவை அனைவருக்கும் சென்றுசேர வழிவகை செய்யவேண்டும்.

முடிவுரை

உலகமயமாகிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் 21ஆம் நூற்றாண்டு கற்றல் திறன்களையும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். கணினி வழியாகத் தமிழ்மொழியை வளர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம். இதனைப் புரிந்து கொண்டு கணினியில் புதிதாக அறிமுகமாகும் தமிழ் மென்பொருள்கள், குறுஞ்செயலிகள், வலைதளங்கள், போன்றவற்றைக் கையாளும் முறையைக் கற்றுக் கொள்வதில் ஆசிரியர்கள் முனைப்புக் காட்ட வேண்டும். அவ்வாறு கற்றுக் கொள்ளும் ஆசிரியரே எதிர்கால மாணவர்களின் கற்றல் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யும் ஆசிரியராக விளங்க முடியும்.

துணைநின்றவை

- மணிகண்டன் துரை., (மு.ப.2012), தமிழ்க் கணினி இணையப் பயன்பாடுகள், தஞ்சாவூர்: கமலினி பதிப்பகம்.
- இளங்கோவன் மு., (மு.ப.2012), இணையம் கற்போம், பெரம்பலூர்: வயல்வெளிப் பதிப்பகம்.

****

கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகள் New Thoughts in Teaching Learning

முனைவர் பொ.ஜெயப்பிரகாசம் | Dr.P.Jeyaprakasam

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை - 641028, jayaprakasam.p@hicas.ac.in

ஆய்வுச்சுருக்கம்

வளரும் குழந்தைகள் புத்திசாலிகளாக இருக்கிறார்கள் என்பதில் மாற்றமில்லை. கல்வியில் என் குழந்தை ஆர்வமில்லை என்று கூறுவது வேடிக்கையான ஒன்று. ஏனெனில் நம் கல்விமுறை அவனுக்கு ஏற்ற வகையில் கல்வி இல்லை என்பதே உண்மை. மாறி வரும் மாணவர்களின் மனநிலைக்கு ஏற்ப நம் கல்விமுறையில் மாற்றம் செய்வது அவசியம். நவீன தொழில்நுட்பங்களில் நம்மைக் காட்டிலும் அதிபுத்திசாலிகளாக மாணவர்கள் இருக்கிறார்கள். தொழில்நுட்பத்தோடு கூடிய பொழுதுபோக்குக்கு மட்டுமே அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே நாம் வகுப்பறையைக் கடந்துதான் போதிக்க வேண்டும். பாடங்களைக் கடந்து எண்ணற்ற தகவல்களைத் தருவதன் மூலமே கலவியாளர்களால் உயர்ந்த இடத்தைப் பெற முடியும்.

Abstract

The old is in sleep and the new is gonna wake, this is the change caused by the event of time. The paper does not help zucchini, it is the vote of some people. Thus we can see that changes have been taking place since the beginning of the world. We see that the human condition undergoes great changes in the essential need for food, clothing, and shelter. Today the world is undergoing new changes in all fields as a result of the Green Revolution and the Industrial Revolution. Many changes have taken place in the field of education since then.

திறவுச்சொற்கள் (Keywords): கற்றல், கற்பித்தல், சிந்தனைகள், Thoughts, Teaching, Learning

பெற்றோர்கள் செய்ய வேண்டியது

இன்றை தகவல் தொழில்நுட்பத்தில் பெரும்பாலான பெற்றோர்கள் கற்றறிந்தவர்களாக இருக்கிறார்கள். தன்னுடைய பணிநேரங்கள் போக ஓய்வு நேரங்களைக் குழந்தைகளோடு செலவிட வேண்டும். தன் புராணங்களை ஓதுவதனால் எந்தப் பயனும் எட்டிவிடப் போவதில்லை. நவீன நுட்பங்களை நாம் கற்பதோடு மட்டுமல்லாமல் தன் குழந்தைகளுக்கும் போதிக்க வேண்டும். ஊடகங்களைப் பயன்படுத்தும் விதம் குறித்தும், தன் குழந்தையின் வகுப்பறைச் செயல்பாடுகள் குறித்தும் கேட்டுத் தெரிந்து கொள்வது அவசியமாகிறது.

ஆசிரியர்களின் பங்கு

குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டும் காலம் மலையேறிப் போய்விட்டது. ஆகையால் ஆசிரியர்கள் வகுப்பறை தாண்டி உலக அறிவுகளைப் பெறுவது அவசியம். பாடங்களைக் கடந்து சென்றால் மட்டுமே மாணவனின் கவனத்தை நாம் பெற முடியும். தம் மாணவர்களுக்குத் தேவையான தகவல்தொழில்நுட்பக் கருவிகளைப் பெற்றுத் தருவது

கடமை. இதில் தனியார் பள்ளிகளைக் காட்டிலும் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மாணவனின் நம்பிக்கையை வளர்த்தெடுக்க ஆசிரியர் நீராகவும், பெற்றோர்கள் உரமாகவும் இருத்தல் வேண்டும். எந்த நிலையில் மாணவனின் கல்வித்தரம் குறைந்துள்ளதோ அதனை உணர்ந்துகொண்டு நாம் செயல்பட வேண்டும்.

கல்வியின் நிலைப்பாடு

கல்விமுறையைப் பள்ளி, கல்லூரி என்று பிரிக்கிறோம். அதாவது பள்ளிக்கல்வி, உயர்கல்வி என்ற இருநிலை. பள்ளிக்கல்வி அடித்தளம் போன்றது. கல்லூரிக் கல்வி கட்டிடம் போன்றது. இரண்டும் சரியாக அமைந்தால் மட்டுமே அது முழுமை பெறும். இதுவரை இயங்கிய கல்வித்துறைகள் அனைத்துமே தேர்வு, அது சார்ந்த சிந்தனை குறித்து மட்டுமே யோசித்துக் கொண்டிருந்தன. இதைக் கடந்த சிந்தனையை கல்வி அதிகாரிகள் யோசிக்க வேண்டும். மனப்பாடம், தேர்வு, மதிப்பெண் இவை கடந்த புதிய முறைகள் என்னென்ன என்பதை ஆராய வேண்டும். ஆனால் அதைப் பற்றிய சிந்தனை வளர்ந்து வருகிறது என்பதில் மாற்றமில்லை, தகவல் பரிமாற்ற காலத்திற்குத் தகுந்தாற்போல் கல்வியை வழங்க, நவீன தகவல் தொடர்பு நுட்பங்களைப் பயன்படுத்துவது அவசியம். இதற்குக் கல்வியாளர்கள், முதல்வர்கள், ஆசிரியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் தொழில்நுணுக்கங்கள், நிதி, கட்டுமானத் தேவைகள் போன்றவற்றில் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். இன்றைய ஆசிரியர்கள் உலகின் மாற்றங்களுக்கு ஏற்ப ஆயத்தமாகி விட்டார்கள். கற்றலுக்குத் தேவையன நவீன கருவிகளைத் தேடி ஓடுகிறார்கள். ஆசிரியர்களோடு மாணவர்களும் சேர்ந்து பயணிக்கிறார்கள். கற்றலுக்கான செயலிகளை உருவாக்குவதிலும் அதனைப் பயன்படுத்துவதிலும் தீவிரம் காட்டி வருகிறார்கள். இதன் காரணமாக பெற்றோர், ஆசிரியர் மாணவர் மனநிலையில் மாற்றத்தை உணர முடிகிறது. நவீன கட்டமைப்புகளை எளிதில் புனரமைக்கும் ஆசிரியர்களைப் பெற்றிருப்பது ஒரு வரப்பிரசாதமே.

இணையத்தின் பங்கு

இணையம் கல்வியின் முதன்மை ஆசானாக விளங்குகிறது. ஆரம்ப காலகட்டத்தில் இத்தகைய கல்விமுறைக்கு ஆதரவு இருந்ததாகத் தெரியவில்லை. பொதுநல அமைப்புகள், பெற்றோர்கள் எனப் பலரும் தங்கள் வாதங்களை முன்வைத்தனர். உலகத்தைச் சுற்றிய பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. இயற்கைப் பேரிடர்கள் தகவல் தொழில்நுட்ப மாற்றங்கள், கையடக்கக் கருவிகளின் பயன்பாடு, ஊரடங்கு எனப் பல காரணிகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. பள்ளிகளும் கல்லூரிகளிலும் இத்தகைய கல்விமுறை முதலில் சவாலாக இருந்தாலும் அதனை விரைவில் கற்றுக்கொண்டு வருகின்றனர். இத்தகைய கல்விமுறையை அரசும், தனியாரும் மாற்றியமைக்க வேண்டியிருக்கிறது.

இன்றைய கற்றல் கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் இணையத்தைப் பல வழிகளில் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் கற்றல் தேவை அதிகரித்து வருகிறது. புலனம் (Whatsapp) அனுப்புதல், தொலைவரி (Telegram), சமூக ஊடகம், பல்லூடகம் (Multimedia) என்பனவற்றிற்கு மடிக்கணினி (Laptop), அட்டைக்கணினி (Tablet), திறன்பேசி (Smartphone) போன்ற கையடக்கக் கருவிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களின் அன்றாட வாழ்வும் கற்கும் சூழலும் மாறிவிட்டது. இதனை "தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம், பல புதிய முறைகளில் தகவலைப் பயன்படுத்த மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது" (தமிழ் மொழி கற்பித்தலில் இன்றைய போக்குகள், ப.208) எனச் செங்கோட்டையன் குறிப்பிடுவதன் மூலமும் அறியலாம்.

உலகளவில் தொழில்நுட்பப் பயன்பாட்டின் அனுபவங்களைப் பார்க்கும்போது, பெரும்பாலும் அவை கீழ்க்கண்ட தலைப்புகளுள் அடங்கும்.

- பல்வேறு ஊடகங்கள் மூலம் கற்றல்
- கல்வித்தொலைக்காட்சி
- கல்வி வானொலி
- இணையதளம் மூலம் ஆலோசனை வழங்குதல்
- இணைய நூலகங்கள் மூலம் ஆராய்தல்
- அறிவியல் தொழில்நுட்பத்தில் செயல்முறை வகுப்புகள்
- ஊடகங்களின் பயன்பாடு

வானொலியும் தொலைக்காட்சியும்

வானொலி மூலம் தினமும் வகுப்பறையில் பாடங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. குறிப்பிட்ட தலைப்பிலான வானொலிப்பாடங்கள், இணையம் பயன்படுத்த முடியாதவருக்கு குறிப்பிட்ட அளவில், தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. இது ஆசிரியருக்கு உதவிகரமாக இருக்கும். பயிற்றுவிக்கும் முறையை மேம்படுத்தும். கல்வி கற்கும் திறன் இதன் மூலம் அதிகரிக்கும். இம்முறையால், கல்வி கற்கும் வாய்ப்பு மற்றும் தரம் மேம்படுவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. அதிக எண்ணிக்கையிளான மக்களுக்கு, பாடங்களை எடுத்துச் செல்ல, இம்முறை சிறந்த மற்றும் குறைந்த செலவிலான முறையாகும்.

தொலைக்காட்சி பாடங்கள் - தற்போது ஆசிரியர் பேசுவது மட்டுமின்றி, நேயர்களுடன் உரையாடுவது, அவர்களை நிகழ்ச்சியுடன் ஒருங்கிணைப்பது போன்ற பணிகள் செய்யப்படுகின்றன. தொலைக்காட்சி கல்வி ஒலி ஒளிபரப்பில், பாடங்களின் தொகுப்பும், மற்றவைகளும் சேர்க்கப்பட்டு, கல்வி கற்றல் பணி எளிமையாக்கப்படுகிறது. பாடத்திட்டத்தில் உள்ள குறிப்பிட்ட பாடங்களை ஒளிபரப்புவது மட்டுமல்லாமல், பொதுவான கல்வி, வாழ்க்கைக்குத் தேவையான பல நிகழ்ச்சிகளை வழங்குவது வானொலிக்கு முக்கிய பணியாக உள்ளது. மேலும் முறையான பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கும், வசதி வாய்ப்பு குறைவாக உள்ள பள்ளிகளுக்கும் பேருதவியாக இருக்கும். ஓரிடத்தில் தயாரிக்கப்பட்ட தொலைக்கல்வி நிகழ்ச்சிகள் செயற்கைக்கோள் மூலம் குறிப்பிட்ட நேரத்தில் நாடு முழுவதும் உள்ள பள்ளிகளுக்கு ஒளிபரப்பப்படுகிறது. இதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்துள்ளது. ஒவ்வொரு மணி நேரத்திலும் வெவ்வெறு பாடங்கள் விளக்கப்படுகின்றன. மாணவர்கள் இதன்மூலம் பல ஆசிரியர்களின் பாடங்களைக் கேட்டு விளக்கம் பெறுகின்றனர்.

கற்றல் கற்பித்தலுக்கான ஆசிரியர்களின் திட்டமிடல் மிகமிக அவசியமாகிறது. மாணவர்கள் வகுப்புக்குச் செல்வதற்கு முன்பே பாடத்திட்டங்களை இணையத்தின் வழியாக நடத்துவதற்குத் தான் முதலில் தயாராக வேண்டும். மாணவர்களுக்குச் சரியான நேரத்தில் சரியான தகவலைத் தர வேண்டும். இணைய இடையூறுகள் இருப்பின் அதற்கேற்ப நாம் ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும். காணொலி உரை, இணைய வழியாக வாசித்தல், அதனைப் புரிந்து கொள்ளும் திறன் பற்றி மாணவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். கற்றல் ஆவணங்களைக் கருவூலங்களில் இருந்து பெற்று மாணவர்களுக்கு நல்ல முறையில் வழங்க வேண்டும். எழுத்து, காணொளி, குரல்பதிவு, ஊடகம் போன்றவற்றில் கருவிகளைச் சரியாகப் பயன்படுத்தி மாணவர்களுடைய கற்றல் திறன்களை மேம்படுத்த வேண்டும்.

கற்பித்தலுக்கான உத்திகள்

கற்பித்தலுக்கான உத்திகளை இன்று ஆசிரியர்களே பல்வேறு வழிகளில் கண்டுபிடித்து வருகின்றனர். குழுவாக இயங்கவும் தனியாகவும் இத்தகைய உத்திகளைக் கையாளுகின்றனர். மாணவர்களுக்கு எத்தகைய அடிப்படையில் கற்பித்தால் அவர்களுக்குப் புரியும் என்பதைத் தெரிவு செய்து கற்பிக்க வேண்டும். அதற்குத் தன்னுடைய வகுப்பறைகளை மகிழ்வாகவும் அதே நேரத்தில் பயனுள்ளதாகும் ஆக்குவது அவசியம். இது மாணவர்களுக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் தூண்டுவதோடு மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் சமூகத்தில் போராடுவதற்கும் துணையாக அமைகிறது. கற்பித்தலோடு மட்டுமல்லாமல் விவாதித்தல் முக்கிய பங்கு வகிக்கிறது. விவாதிக்கும்போது மாணவர்களுடைய கருத்தினையும் நாம் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைகிறது.

விளையாட்டுப் போட்டிகள்

கற்பித்தல் ஒருவகை விளையாட்டு என்பதை நாம் உணர வேண்டும். விளையாட்டு வழியாகவும் மாணவர்களுக்கு எண்ணற்ற கருத்துக்களை வழங்கலாம். எந்தக் காலகட்டத்திலும் விளையாட்டு வகுப்பிற்கு மாணவர்கள் ஆர்வமாக இருப்பர். அத்தகைய விளையாட்டினை இன்று இணையம் வாயிலாக வினாடி-வினா என்ற அடிப்படையில் நாம் பிரித்துப் பயன்படுத்தலாம். முழுக்கமுழுக்க பாடம் தழுவிய கேள்விகளாக இல்லாமல் பாடம் அல்லாத மாணவர்களுக்குப் பிடித்தமான கேள்விகளையும் அதில் இணைத்துக் கேட்கும்போது மாணவர்கள் மகிழ்ச்சி அடைவதோடு புரிந்துகொள்வதற்கும் நல்லதொரு வாய்ப்பாக அமையும். இதற்கான செயலிகள் பல நாள்தோறும் வந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய முறையில் பயிற்றுவிப்பதால் கால விரயம் தவிர்க்கப்படுகிறது.

காட்சி வகுப்புகள்

காட்சி வகுப்புகள் என்பது PPT. இந்த அடிப்படையிலேயே பெரும்பாலான வகுப்புகள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடத்தப்படுகின்றன. ஒரு வாரம் வகுப்புக்கு முன்னரே தங்களை ஆசிரியர்கள் தயார்படுத்திக் கொள்கின்றனர். இதன்மூலம் கருத்துப் படங்களையும் இணைத்து காணொலிகளையும் இணைத்து மாணவர்களுக்குப் பாடம் புகட்டி வருகின்றனர். அதனை மாணவர்களுக்குக் கொடுக்கும்போது அவருடைய கற்றல்திறன் விரிவடைகிறது. இத்தகைய புதுமையான முறையை இனி வரும் காலகட்டங்களில் நேரடி வகுப்பாக இருந்தாலும் அனைத்துப் பள்ளிகளும் கல்லூரிகளும் இதனைச் செயல்படுத்த முனைந்து வருகின்றன. காலத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் இயற்கை போல தானும் மாறிக்கொள்ள வேண்டும் என்பது இயற்கையே. அதனை, கற்றல் கற்பித்தல் முறையில் நாம் மேம்படுத்துவதில் எந்தவிதத் தவறும் இல்லை. உலகின் பல நாடுகளில் கற்றல் கற்பித்தல் முறை என்பது பல நிலைகளில் மாறிய வண்ணமாக இருந்து வருவதை அறிகிறோம். எனவே அதற்கு ஏற்ப மாறுவதில் தவறில்லை. நம்முடைய முழு எண்ணமே மாணவர்களுடைய நலனாக இருப்பின் கற்றல் கற்பித்தல் முறையில் மாற்றம் தருவதில் தவறில்லை.

சிக்கல்கள்

- மரபு வழியிலிருந்து மடிக்கணினி வழி கற்பிப்பதற்கு மனமாற்றம் ஏற்பட சிறிது காலம் தேவைப்படலாம்.
- சிறந்த பயிற்சியாளர்களைக் கண்டறிதல் கடினம்.
- மடிக்கணினி, ஆன்ட்ராய்ட் செயலி கொண்ட சாதனங்கள், tablet தேவைப்படுகிறது.

- வகுப்பறையில் ப்ரஜெக்டர், ஸ்மார்ட் போர்டு போன்ற தொழில்நுட்பக் கருவிகள் அவசியமாகின்றன.
- ஆசிரியர்கள் தங்களது அன்றாட அலுவல்களையும் தாண்டி சிறப்பு நேரம் ஒதுக்கிக் கற்பித்தல் வேண்டும்.
- அனைத்திற்கும் மேலாக மாணவர்கள் இணையத்தைப் பயன்படுத்தும்போது அதிலிருக்கும் நிறைகுறைகளை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

தீர்வுகள்

- மடிக்கணினி கற்பித்தலை பெரும்பாலும் ஏற்றுக் கொண்டனர்.
- கற்றுக் கொண்டவர்களே சிறந்த பயிற்சியாளர்களாக மாறி விட்டனர்.
- தனியார் நிறுவனங்கள் ப்ரஜெக்டர், ஸ்மார்ட் போர்டு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.
- ஆசிரியர்கள் சிரமத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராகி விட்டனர்.
- மாணவர்கள் நிறை , குறைகளை ஏற்கத் தயாராகி விட்டனர்.

கல்வியை முடிக்கும் மாணவர்களிடம் எதிர்பார்ப்பவை

1. நன்னெறிப் பண்புகள்
2. தன் திறமையில் நம்பிக்கை கொள்ளுதல்
3. குழுவாகச் செயல்படுதல்
4. படைப்பாக்கத் திறன்
5. மற்றவர்கள் கருத்துக்களைப் பாராட்டும் திறன்
6. சுய கற்றல்
7. மனதளவிலும் உடலளவிலும் பயிற்சி கொள்ளும் திறன்
8. தன் தேசத்திற்கும் தன் சுற்றத்தாருக்கும் நம்பிக்கையானவனாக இருத்தல்.

புதிய பாடத்திட்டத்தில் அந்தந்த தாய்மொழிக்கான வலுவான அடித்தளம் அமைக்க வேண்டும். இதனையே ஆய்வுக் குழுவானது பரிந்துரைத்துள்ளது. நல்ல மொழிநடையில் பயன்படுத்தும்போது மாணவர்களிடையே புரிதல் திறன் அதிகரிக்கிறது. இதனால் மாணவர்கள் பேச்சுத்தமிழில் இருந்து எழுத்து தமிழுக்கும், எழுத்துத் தமிழிலிருந்து பேச்சுத் தமிழுக்கும் இயல்பாக மாற முடியும். தன்னம்பிக்கையோடு பேசுவதோடு மட்டுமல்லாமல் போட்டித்தேர்வுகளை எதிர்கொள்ள இது துணையாய் அமையும்.

தாய்மொழியில் கற்பிப்பதால் வளரும் திறன்கள்

1. பலதரப்பட்ட தேவைகளுக்கு நம் தாய்மொழியைப் பயன்படுத்துகிறோம்.
2. இடம் பொருள் ஏவல் ஆகியவற்றை உணர்வதற்கு மொழியறிவு பயன்படுகிறது.
3. கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக அமைகிறது.
4. நடைமுறைத் திறன்களை எளிதாக வெளிப்படுத்த, பாடங்களுடன் உயிரோட்டத்துடன் உறவாடப் பயன்படுகிறது.

முடிவுரை

கற்பித்தல் என்பது மாணவர்களின் மனத்திறனை வளர்த்து, ஆற்றலைக் கூர்மையடையச் செய்து அதன்வழி அவர்களின் அறிவாற்றலை வெளிக்கொண்டு வருவதாகும். கால மாற்றத்திற்கு ஏற்றாற்போல மாணவரின் மனநிலையும் மாறியுள்ளது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு விளக்கமுறை, செய்முறை போன்ற கல்வி கற்பிக்கும் முறைகளைக் குறைத்துக் கொண்டு கணினி, வானொலி, தொலைக்காட்சி, காணொலிக் காட்சி போன்றவற்றின் மூலம் கற்பித்தால் எந்த வழிக் கல்வி முறையாக இருந்தாலும் (தமிழ்,

ஆங்கிலவழிக் கல்வி) மாணவர் திறம்படச் செயல்பட்டுக் கற்றுக் கொள்வர். மாணவரின் வாழ்நாள் முழுமைக்கும் எழும் சிக்கல்களைக் களைதல் என்பது மாணவனை நாட்டிற்கு நற்குடிமகனாக உருவாக்குதல் எனும் சால்புடைய செயலாக அமையக்கூடியதாகும்.

துணைநின்றவை

- திருமலை, மா.சு., (1998), தமிழ் கற்பித்தல், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- கிருபானந்தன் க.வே., முதலியோர், (2009), கல்வியியலில் கணிணி, சென்னை: ஜி.வீ. பதிப்பகம்.
- முரளிதரன் இரா. & அருள்ராஜ் வே.சா., (2011), தமிழ் மொழி கற்பித்தலில் இன்றைய போக்குகள், தஞ்சாவூர்: நியூ விஷன் வெளியீட்டகம்.

****

காலந்தோறும் கற்றல், கற்பித்தல் Forever Learning and Teaching

முனைவர் பா.கவிதா | Dr. P.Kavitha

தமிழ் - உதவிப்பேராசிரியர், பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர், kavithapackiyam19@gmail.com, 7530016336, Assitant Professor of Tamil, PSGR Krishnammal College for Women, Coimbatore.

முனைவர் ந.இராஜேந்திரன் | Dr. N.Rajendran

தமிழ் - உதவிப்பேராசிரியர், இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், ilayavantamil@gmail.com, 9897536324. Assitant Professor of Tamil, Hindustan College of Arts and Science, Coimbatore.

ஆய்வுச் சுருக்கம்

ஒரு மாணவனின் 'அறிவுக் கண்ணைத் திறக்கும் திறவுகோல் கல்வி' இக்கல்வியைப் பொருள் கொடுத்தேனும் கற்க வேண்டும் என்ற நிலை மாறி 'பிச்சை எடுத்தேனும் கல்வியைக் கற்க வேண்டும்' என்பது சீவலமாறனின் வாக்கு.

அர்ப்பணிப்புத்தான் ஆசிரியரின் அடையாளம். ஒரு மாணவன் சமூகத்தின் மிக உயரிய பொறுப்புக்குப் போகலாம். ஆனால், ஆசிரியர் இறுதிவரை ஆசிரியராகவே இருப்பார். அந்த மாணவன் என் வளர்ச்சிக்குக் காரணம் இந்த ஆசிரியர்தான் என்றுரைக்கும்போது ஆசிரியரின் மனம் நிறைவடைகிறது. விருட்சமாக வளர்ந்து நிற்கும் ஒவ்வொரு மாணவனின் வாழ்விலும் ஓர் ஆசிரியர் விதையாகப் புதைந்து கிடக்கிறார் என்பதுதான் உண்மை. இத்தகு ஆசிரியரைத் தேடிச் சென்று கல்வி கற்ற காலம் கால ஓட்டத்தில் கரைந்துபோனது. இன்று மாணவர்களைத் தேடி ஆசிரியர்கள் வீடு வீடாகச் சென்று கல்வி கற்பிக்கும் நிலை தற்காலத்தில் உருவெடுத்துள்ளது. இத்தகைய கல்வி முறையில் கற்றல் கற்பித்தல் காலந்தோறும் கடந்து வந்த பாதையைத் தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் வாயிலாக வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

Abstract

Education Provides Knowledge. Sivalamaran said that you might beg for education. Commitment is the symbol of a good teacher. A student may achieve and can be in the

highest position. In contrast, the teacher remains in the same position. If a successful student reminds that the teacher is responsible for the success, then that teacher feels proud and glad. Each successful student has a dedicated teacher behind their success. Searching for a good teacher is outdated; now, teachers search for responsible students and are ready to teach them at the doorstep. The current manuscript details the evolution of the learning and teaching methods based on the grammatical and literary evidence.

திறவுச்சொற்கள் (KeyWords)

காலந்தோறும் கற்றல் கற்பித்தல், கல்வி, முனைவர் பா.கவிதா, முனைவர் ந.இராஜேந்திரன், ஆதிகாலத்தில் கற்றல் கற்பித்தல், குருகுலக் கல்வி, தொல்காப்பியர் காலக் கற்றல் கற்பித்தல், ஆசிரியரும் மாணாக்கரும், சங்ககாலத்தில் கற்றல் கற்பித்தல், சங்கம் மருவிய காலத்தில் கற்றல் கற்பித்தல், இன்றைய கற்றல் கற்பித்தல்.

Forever Learning and Teaching, Education, Dr P.Kavitha, Dr N.Rajendran, Teaching learning in antiquity, Gurukul Education, Tolkappier term learning teaching, Teacher and student, Sangakala term learning teaching, Teaching learning in the Sangam Maruviyakala, Today's learning is teaching.

முன்னுரை

'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பதற்கு இணங்க மக்களின் தேவைகளும் சிந்தனைகளும் காலத்திற்கு ஏற்ப மாறிவருகின்றன. அவ்வகையில் கால ஓட்டத்தில் மாணவர்களின் கற்றல், கற்பித்தலின் தேவைகளும் சிந்தனைகளும் மாறி வருகின்றன. பண்டைய தமிழகத்தில் கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. 'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' எனவும், 'கல்லாதவன் மனம் இருளின் உறைவிடம்' எனவும், 'களர் அனையர் கல்லாதவர்' எனவும், 'கல்லாதவளின் வயிறு களர் நிலத்திற்கு ஒப்பானது' எனவும், 'கற்பதற்கான காலமாக இளமைப் பருவமும்' கருதப்பட்டன. இத்தகைய கற்றல், கற்பித்தல் காலந்தோறும் எப்படிக் கடந்து வந்திருக்கிறது என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்வி

ஒரு மனிதன் தன் கற்றலின் மூலம் அறிவை விரிவு செய்தல், தெளிவடைதல், தன்னுடைய திறமைகளை வளர்த்துக் கொள்ளுதல், தன்மதிப்பு, நம்பிக்கையை வளர்த்தல் மற்றும் சிறந்த பழக்கவழக்கங்களைக் கையாளுதல், தனது சமூகத்தை வழிநடத்துதல் போன்ற செயல்களைச் செய்தலே சிறந்த கல்வியாகும்.

"**கல்** என்ற சொல்லுக்குத் **தோண்டு** என்பது பொருள். கிழங்கைக் கல்லி (தோண்டி) எடுத்தல் - என்பது தமிழர்களின் பேச்சு வழக்காகும். அதுபோல மனிதனின் உள்ளத்தில் மறைந்திருக்கும் மனிதப் பண்புகளை, நாகரிகத்தை, கலையை, கலாச்சாரத்தை, அன்பை, பண்பைத் தோண்டி வெளிக்கொணர்ந்து அதை அனைவர்க்கும் பயன்பட, பகிர்ந்தளிக்கும் வகை செய்வதே கல்வி" என்பர் ஆன்றோர் (எஸ்.இளங்கோவன், 2016).

கற்றல் கற்பித்தல்

கற்றல் கற்பித்தல் பல்வேறு காரணிகளை உள்ளடக்கியே நிகழ்கிறது. "கடந்த நூற்றாண்டுகளில் கல்வி பற்றிப் பல்வேறு விதமான பார்வைகள் இருந்தன. கல்வி என்பது அறிவு சார்ந்தது (கற்றல் மூளையின் செயல்திறனால் நிகழ்கிறது) அல்லது வளர்ச்சி சார்ந்தது (கற்கும் அனுபவத்தால் அறிவு ஏற்படுகிறது) என்ற இருவேறுவித

பார்வைகள் இருந்தன. இவ்விரு கொள்கைகளைப் பிரித்துப் பார்க்காமல் ஒன்றிணைத்துப் பார்த்தால் கற்றல் முறையில் பல்வேறு வாய்ப்புகள் இருப்பதை உணரலாம். இவற்றை ஒருங்கிணைக்கும்போது பல்வேறு பிற காரணிகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் தாங்கள் ஏற்கனவே பெற்ற கல்வி, கருத்துகள் மற்றும் திறன்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி முறை அமைகிறது. தாங்கள் ஏற்கனவே அறிந்தவைகளோடு புதிய தகவல்களையும் சேர்த்துப் புதிய புரிதல்களை உருவாக்குகிறார்கள்.

இந்த முறையில் கற்பிக்கும் ஆசிரியர் மாணவர்களுக்குப் பயிற்சிகளைக் கொடுக்கிறார். அதனை மாணவர்கள் எவ்வாறு அணுகுகிறார்கள் என்பதைக் கவனித்துத் தக்க ஆலோசனை வழங்கி புதிய முறைகளில் சிந்திக்கத் தூண்டுகிறார். எளிய தகவல்களைச் சொல்லி அதில் மாணவர்களின் எண்ணங்கள் தூண்டப்படும் இம்முறையில் கல்வி அறிவு சிறிதுசிறிதாக அதிகரிக்கப்படுகிறது. வயது முதிர்ந்தோர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினர்க்கும் இம்முறை ஏற்றதாகும்". (https://ta.vikaspedia.in/education/)

இங்கு ஆசிரியரின் அறப்பணி என்பது பாடங்களை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வதுதான். பாடத்திட்டம் ஒரு சுருள் போல் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் தாங்கள் ஏற்கனவே கற்றுக்கொண்டவற்றிலிருந்து புதியவற்றை அறிவார்கள்.

கற்பிக்கும் முறை

ஒவ்வொரு மனிதனின் வாழ்வையும் செதுக்குவதில் இன்றியமையாத பங்கு என்றுமே ஆசிரியர்களுக்கு உண்டு. நல்ல ஆசிரியர்கள் நல்ல மாணவர்களைத் தோற்றுவிப்பதோடு மட்டுமல்லாமல் நல்ல சமூகத்தையும் தோற்றுவிக்கின்றனர். நல்ல ஆசிரியர்கள் இல்லாத சமூகம் நிச்சயம் நல்லதொரு சமூகமாக இருக்க முடியாது. நல்ல கருத்துகளையும் பண்புகளையும் மாணவர்களுக்கு ஊட்டி அதன் வாயிலாக அவர்களை நெறிப்படுத்தி அவர்களின் வாயிலாகவே சமூகத்தினைச் சீர்படுத்தும் அளப்பரிய அறப்பணியைச் செய்பவர்கள் ஆசிரியர்கள். அத்தகைய அறப்பணியினைச் செய்யும் ஆசிரியர்களைக் குறித்தும் அவர்கள் எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பது குறித்தும் தமிழ் இலக்கிய இலக்கணங்கள் சில கருத்துக்களைக் முன்வைக்கின்றன. அவை பின்வருமாறு,

கற்பித்தல் என்பது உண்மையில் கற்பித்தலின் நுட்பங்களைக் கூறுவதாகும். நவீனகாலக் கல்விமுறையில் கல்வி கற்பிக்கும் இடம், சூழல், நேரம், பாடக்குறிப்புத் தயாரித்து ஆயத்தமாதல், உளவியல் நோக்கோடு மாணவர்களின் மனநிலையை அறிந்து முகமலர்ச்சியோடு கற்பித்தல், ஆகிய நுட்பங்கள் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளாக அளிக்கப்படுகின்றன. இத்தகைய நுட்பங்களைக் கற்றபின்னரே ஒரு ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்கின்றார். என்பதை,

> "ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
> காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
> சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
> உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
> விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
> கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளம்கொளக்
> கோட்டமின் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப" (நன்னூல்.எழுத்து36)

பவணந்தி முனிவரின் நன்னூல் தெளிவாக விளக்குகிறது.

கற்றல் முறை

மாணவர்கள் பாடங்கேட்கும் முறை குறித்து நன்னூல் பின்வருமாறு விளக்குகிறது. கற்கும் மாணவன், ஆசிரியர் சொன்ன நேரத்தில் வருதல், வந்ததும் அவரை வணங்குதல், வெறுப்பில்லாதவனாய் ஆசிரியரின் இயல்பறிந்து நடந்துகொள்ளுதல், ஆசிரியரின் குறிப்புணர்ந்து மாணவன் செயல்படுதல், இந்த இடத்தில் அமர்ந்துகொள் என்று அவர் கூறிய பிறகே அமர்ந்துகொள்ளுதல், படி என்று அவர் சொல்லியபிறகே பாடத்தைப் படித்தல், தாகம் கொண்டவன் தண்ணீரைக் கண்டதும் எப்படி ஆர்வத்துடன் பருகுவானோ அப்படிப் பாடத்தில் ஆர்வம் மிகுந்தவனாக மாணவன் இருத்தல், சித்திரப்பாவையைப் போல ஆசிரியர் முன் அடக்கத்துடன் இருத்தல், ஆசிரியர் நடத்தும் பாடத்தைக் கேட்கும்போது மாணவனுக்குக் காது வாயாகவும், மனம் வயிறாகவும் இருத்தல், முதல் நாள் ஆசிரியரிடம் கேட்டவற்றில் ஐயங்கள் இருப்பின் மீண்டும் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல், பலமுறை கேட்டுத் தெளிந்தவற்றை மனத்தில் பதியவைத்தல், போகலாம் என ஆசிரியர் சொல்லிய பிறகே வகுப்பு முடிந்து மாணவன் போதல் போன்ற நற்பண்புகளோடு கற்க வேண்டும் என்கிறது நன்னூல். இதனை,

> "கோடல் மரபே கூறுங் காலைப்
> பொழுதொடு சென்று, வழிபடல் முனியான்,
> குணத்தொடு பழகி, யவன் குறிப்பிற் சார்ந்து,
> இருவென இருந்து, சொல்லெனச் சொல்லிப்
> பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்,
> சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்,
> செவிவாய் ஆக நெஞ்சுகளன் ஆகக்
> கேட்டவை கேட்டு, அவைவிடாது உளத்தமைத்துப்,
> போவெனப் போதல், என்மனார் புலவர்" (நன்னூல். எழுத்து.40)

ஆதிகாலத்தில் கற்றல் கற்பித்தல்

மொழி என்பது மொழியப்படுவதால் மொழி ஆயிற்று. நம் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் கருவி மொழி. பண்டைய காலத்தில் மனிதன் கையினால் சைகை செய்து தன் மனக்கருத்துக்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தினான். காலப்போக்கில் ஒலிகளையும், சைகைகளையும் அதற்குரிய பொருள்களையும் பயன்படுத்தினான். முதலில் பேச்சு மொழி தோன்றி பின்னர் அம்மொழி பேசும் மக்கள் எழுத்துக்களையும் பின்னர் சொற்களையும் உருவாக்கினர். சொற்கள் வாக்கியங்களாக மாறின, வாக்கியங்கள் கருத்துத் தொகுப்பாக மாறின, இவ்வாறு மொழி தோன்றியது.

"சிந்துவெளி எழுத்துக்கள் என்பவை இரண்டாம் தமிழ்க் கழகக் காலத்தில் தமிழர்களால் இசைத் தமிழ் அமைப்பு நோக்கி அசை எழுத்துகளாக அமைக்கப்பட்டவை. இவை, முதல் தமிழ்க் கழகக் காலத்தில் நிலவிய ஓவிய எழுத்திலிருந்து வளர்ச்சியடைந்தவை. தமிழ்நாட்டுக் குகை ஓவியங்களிலும் மட்பாண்ட ஓடுகளிலும் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றிலிருந்தே கி.மு.1700-1900 கால அளவில் தமிழ் பிராமி என்னும் தமிழ் எழுத்தை மூன்றாம் தமிழ்க் கழகப் புலவர்கள் உருவாக்கினர் என்பர் இரா.மதிவாணன் (2017:6).

மொழிநூல் ஆய்வாளர்கள் தமிழ் 20ஆயிரம் ஆண்டுப் பழமை உடையது என்கின்றனர். பேச்சுமொழி தோன்றியதும் எழுத்துமொழி தோன்றியிருக்கும். எழுத்தின்

வரிவடிவங்களும், பின்னர் சொல் வடிவங்களும் தோன்றியிருக்கும். தமிழின் எழுத்துமுறை வட்டெழுத்திற்கு முன்பு தமிழி எழுத்து முறையாக இருந்திருக்கும் என்பது மொழியியலாளர் கருத்து. அவ்வாறு மொழி தோன்றிய பின்னர் இலக்கிய, இலக்கணங்கள் தோன்றின. அந்த இலக்கிய இலக்கணங்களைக் கற்றறிந்தோர் அடுத்த இளைய தலைமுறை மாணவர்களுக்குக் கற்பித்தனர். இந்தக் கற்றல், கற்பித்தல் என்பது குருகுலக் கல்வி போன்றோ, மெக்காலேக் கல்வி போன்றோ இருந்திருக்க அன்றைய காலத்தில் வாய்ப்பில்லை. ஆகையால், கற்பிப்போர் தம் எண்ணக் கருத்துகளைப் பாறைகளில் ஓவியமாகவோ, மட்பாண்டங்களில் குறியீடாகவோ, ஓலைச்சுவடிகளில் எழுத்துகளாகவோ பதிவுசெய்திருக்கலாம். கற்போர் அந்த ஓவியங்களை, குறியீடுகளை, எழுத்துகளைப் பார்த்து தம் எண்ணக் கருத்துகளோடு கூட்டிப் பொருள்கொண்டு கற்றிருக்கலாம்.

குருகுலத்தில் கற்றல் கற்பித்தல்

குருகுலத்தில் கற்றல் முறை என்பது மாணவர்கள் ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று பல ஆண்டுகள் தங்கி அவருக்குத் தேவைப்படும் பணிகளைச் செய்து கல்வி கற்றனர். குருகுலக் கல்வி முறையானது வேதகாலத்திலிருந்தே இருந்து வருகிறது. உபநிடதங்கள் பல குருகுலங்களைப் பற்றிக் கூறுகிறது. யாக்ஞவல்கியர், வசிட்டர், வியாசர், வாருணி போன்ற குருக்கள், குருகுலங்கள் நடத்தி வந்ததை உபநிடதங்கள் விரிவாகக் கூறுகிறது. 8 முதல் 12 வயதிற்குள் குழந்தைகளுக்கு உபநயனம் எனும் சமயச் சடங்கு செய்து முடித்த பின்பே குருகுலத்திற்குத் தங்கள் குழந்தைகளைக் கல்வி கற்க அனுப்புவர். கல்வி பயின்று முடியும் வரை மாணவர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் பிரம்மச்சர்ய விரதம் கடைபிடிக்க வேண்டும். குருகுலத்தில் கல்வி கற்கும் குறைந்தபட்ச காலம் 12 ஆண்டுகளாகும். குருவின் அருகில் அமர்ந்து செவிவழியாகக் கேட்டறிந்த அரிய பெரிய தத்துவ விளக்கங்களை, உபநிடதங்களைப் பின்னாளில் தான் குருவாக மாறி, தனது மாணவர்களுக்குக் கடத்திவந்தனர்.

வேத வேதாந்த சாத்திரங்கள், வேதங்கள், உபவேதங்கள், யோகா, தர்க்கம், அரசியல், அரச தந்திரம், இதிகாசம், புராணம் மற்றும் சோதிடம், வானவியல், ஆயுர்வேத மருத்துவம் மற்றும் பொது அறிவு போன்ற பல கலைகளைக் குரு, சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்தனர். இவைகள் தவிர ஐம்புலன்களை அடக்கி, விவேகம், வைராக்கியம், ஆத்ம ஞானம் போன்ற உயர் கல்விகளும் குரு, சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்தனர். (https://ta.wikipedia.org/wiki/).

"ஆங்கிலேய முறைக் கல்வி இந்தியாவில் தொடங்கிய பின்பு வேதகால குருகுலங்களின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணும் அளவிற்குக் குறைந்துவிட்டது. இருப்பினும் அரித்வார், ரிஷிகேஷ், காசி, புனே, சென்னை, கோவை, உத்தரகாசி போன்ற இடங்களில் வேதக் கல்வி மற்றும் வேதாந்தக் கல்வி இன்றளவிலும் குருகுலத்தில் கற்றுத் தரப்படுகிறது. சுவாமி தயானந்தர் - ரிஷிகேஷ், சுவாமி குருபரானந்தர் - உத்திரமேரூர், சுவாமி பரமார்த்தனந்தர் - சென்னை, சுவாமி ஓங்காரனந்தர்-தேனி". (https://ta.wikipedia.org/wiki/)

குருகுலக் கல்வி இயங்கிய காலத்தில், இறைநிலை, அதாவது மோட்சம் அடைவது கல்வியின் தலையாய நோக்கமாயிருந்தது. வேதங்களைக் குருவழியாகக் கற்று அவற்றின் வழிநடப்பதே மோட்சம் அடையும் வழி; மோட்சமே வாழ்வின் இறுதிப் பயன் என வலியுறுத்தப்பட்டது. வாழும் வகை, முறை, நெறி, நோக்கம், பயன் முதலிய அனைத்தும் கல்வியின் வழி பெறுவதையே கற்றலின் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஆக, குருகுலத்தில் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் தங்கள் தேவைகளை அல்லது வேலைகளைக் கற்றுக்கொள்ள வந்திருக்கும் மாணவர்கள் மூலம் பூர்த்திசெய்துகொண்டனர். மாணவர்கள் ஆசிரியர் இருக்கும் இடம் தேடிச்சென்று அவர் சொல்லும் அத்துணை வேலைகளையும் செய்துமுடித்துக் காரியத்தில் கண்ணாய் இருந்து கற்றிருக்கிறார்கள் என்றால் அன்றைய காலத்தில் கல்வி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்துள்ளது என்பதை நாம் உணரமுடிகிறது.

தொல்காப்பியர் காலக் கற்றல் கற்பித்தல்

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து எனத் தொடங்கும் தொல்காப்பியத்தின் சிறப்புப்பாயிரம் முதலே கல்வியின் முக்கியத்துவம் புலப்படத் தொடங்குகிறது. முதலில் தமிழக எல்லையைக் கூறிய பனம்பாரனார் வழக்கின்கண்ணும் செய்யுளின்கண்ணும்; எழுத்து, சொல், பொருள் என்னும் மூவிலக்கணத்தையும் ஆராய்ந்து செந்தமிழ் நில வழக்குடன் தான் நூலியற்றக் காரணமான முதல்நூல் கூறியவற்றைக் கண்டு அவற்றை முறைப்படி ஆராய்ந்த தொல்காப்பியர் நூல் செய்ததாகக் கூறுகிறார்.

அறிவார்ந்த நூல்களைக் கற்று கல்வியில் வல்லவராய் திகழ்பவரால்தான் நூல் இயற்றப்பட்டது என்பதனைத் தொல்காப்பியர் காலச்சூழல் தெளிவுபடுத்துகின்றது.

ஆசிரியரும் மாணாக்கரும்

"ஈவோன் தன்மை யீத லியற்கை
கொள்வோன் தன்மை கோடன் மரபு" (தொல்.சிறப்.நச்.உரை - ப.2)

என்பதால் ஆசிரியரை ஈவோன் என்றும் அவர் கற்றுத்தரும் கல்வியைக் கற்றுக் கொள்வதால் மாணவரைக் கொள்வோன் என்றும் தொல்காப்பியம் கூறுகிறது.

ஈவோரைக் கற்கப்படுவோர், கற்கப்படாதோர் என இருவகையாகப் பகுப்பர். கற்கப்படுவோருக்கு உவமையாக மலை, நிலம், பூ, துலாக்கோல் ஆகியவையும் கற்கப்படாதோருக்கு உவமையாக கழற்பெய்குடம், மடற்பனை, முடத்தெங்கு, குண்டிகைப் பருத்தி ஆகியவையும் கூறப்படுகின்றன.

கொள்வோனைக் கற்பிக்கப்படுவோர் என்றும் கற்பிக்கப்படாதோர் என்றும் இருவகையாகப் பகுப்பர். கற்பிக்கப்படுவோரைத் தன்மகன், ஆசான்மகன், பொரு நனி, கொடுப்போன், வழிபடுவோன், உரைகோளன் என ஆறு வகையாகவும்; கற்பிக்கப்படாதோரை மடி, மானி, பொச்சாப்பன், காமுகன், கள்வன், அடுநோய்ப்பிணியாளன், ஆறாச்சினத்தன், தடுமாறு நெஞ்சத்தவன் என எண் வகையாகவும் பகுப்பர். கற்பிக்கப்படுவோருக்கு அன்னம், கிளி, நெய்யரி, போன்றவற்றையும் கற்பிக்கப்படாதோர்க்கு குரங்கெறிவிளங்காய், எருமை போன்றவற்றையும் உவமையாகக் கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

ஆசிரியர் இலக்கணம்

ஆசிரியருக்குப் பல உவமைகள் கூறிய தொல்காப்பியம் 'ஈதலியல்பே' என்று தொடங்கும் நூற்பாவின் மூலம் ஆசிரியர் பாடம் கூறும் இயல்பை விளக்குகிறது.

"பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்
தெளிந்த அறிவினன்" (தொல்.சிறப்.நச்.உரை - ப.3)

என்பதால் தான் கூறக்கருதும் பொருளின் பல்வேறு பரிமாணங்களையும் உணர்ந்து மாணவர் புரிந்து கொள்ளும் வகையில் தக்க உவமை, உவமேயங்களுடன் கூற வேண்டும் என்கிறது. மேலும் மாணவனது அறிவுத்திறன் அவன் புரிந்து கொள்ளும் முறை ஆகியவற்றை அறிந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் ஓர் மனநல மருத்துவர் போல் ஆசிரியர் பாடம் கற்பிக்கும் முறையும் தொல்காப்பியர் காலத்தில் செம்மையுற இருந்தமையை இதன் மூலம் நாம் அறியமுடிகிறது.

மாணாக்கர் இயல்பு

மாணாக்கர் ஆசிரியர் கூறிய காலத்தில் குறித்த இடத்திற்கு உரிய நேரத்தில் சென்று கல்வி கற்கும் ஆர்வம் மிக்கவராய் இருத்தல் அவசியம் என்று கூறுவதோடு அவன் 'அன்பொடு பழகினான்' என்றும் தொல்காப்பியர் கூறியதால், ஆசிரியரிடம் மாணவர்கள் அன்போடு எளிமையாகப் பழகிய இயல்பும் அதன் மூலம் தனது ஐயங்களைக் கேட்டுத் தெளிவடைந்து கொண்ட இயல்பும் இருந்தமையை அறிய முடிகிறது.

உயர்திணை, அஃறிணை என்று உலக உயிர்களைப் பிரித்த தொல்காப்பியர் உயர்திணைக்குரியோராக ஆடூஉ, மகடூஉ, பலர் ஆகியோரைக் கூறினார். கல்வி என்பது மக்களுக்குப் பொது. ஆனால் தொல்காப்பியர் 'பெருமையும் உரனும் ஆடூஉமென' என்பதால் கல்வியில் பெண்களை ஒதுக்கிவிட்டு ஆண்களுக்கு மட்டுமே சிறப்பிடம் தந்துள்ளார். பெருமிதம் என்பதன் மெய்ப்பாட்டு வாயிலாகக் "கல்வி, தறுகண், இசைமை. கொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"(தொல்.மெய்.நூற்.9) எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. பெண்களுக்குக் கல்வி அக்காலத்தில் வழங்கப்படவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

"ஓதல் பகையே தூதிவை பிரிவே" (தொல்.அகத்.நூற்.25) என்று பிரிவின் வகைகளைக் கூறிய தொல்காப்பியர் ஓதலும் தூதும் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகையோரிலும் உயர்ந்தோர்க்குரியனவாகவும் 'உயர்ந்தோர்க்குறிய ஓத்தினான' என்பதின் மூலம் பின்னோரில் உயர்ந்தோராகிய வணிகருக்கும் ஓதுதல் நிமித்தமாகப் பிரியும் பிரிவு உண்டு என்பதாலும் அக்கால வருணாசிரம முறைப்படி அறிய முடிகிறது. "கீழ்ப்பால் ஒருவன் கல்வி கற்பின் மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே"(புறம்.183) என்ற நிலை தொல்காப்பியர் காலத்தில் இல்லை என்பது தெரிய வருகிறது.

தொல்காப்பியர் காலத்தில் குருகுல வழியில் கல்வி போதிக்கப்பட்டமையும் தொல்காப்பியம் வழி அறியமுடிகிறது. தொல்காப்பியத்தில் கல்விக்குரிய காலமாக மூன்றாண்டுகள் கூறப்பட்டுள்ளன. பெருமிதம் தோன்றும் வாயிலாகவும்; நகை தோன்றும் வாயிலாகவும் கல்வி கூறப்படுகின்றது. 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு'(ஔவையார் தனிப்பாடல்) என்ற நிலையில் பெண் கல்வி மற்றும் வேளாளர் கல்வி பற்றித் தொல்காப்பியத்தின் வழி அக்காலச் சமுதாயச் சூழலைத் தெறிந்துகொள்ள முடிகிறது.

சங்ககாலத்தில் கற்றல் கற்பித்தல்

சங்க காலத்தில் கல்வி பெரிதும் சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது. ஆனாலும், சங்க காலத்தில் வழக்கிலிருந்த கல்வி அமைப்புப் பற்றியும் கல்விமுறை பற்றியும் அறிந்துகொள்ள உதவும் நேரடிச் சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. சங்ககால சமுதாய அமைப்பில் கல்விக்குப் பொறுப்பேற்று இருந்தவர்களுள் புலவர்களும் பாணர்களும் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவார். சங்க நூல்கள் வாயிலாகப் பண்டையத் தமிழகத்தில் வாழ்ந்த புலவர்களின் கல்வியறிவு, அவர்களின் புகழ் போன்றவற்றை அறியமுடிகிறது. பாண்டியர்கள் தலைசிறந்த புலவர்களை ஒன்றுசேர்த்து தமிழ்க் கழகம்

நிறுவினர். புலவர்களின் பாடல்களும், நூல்களும் தமிழ்க் கழகத்தால் குற்றமற்றவை என ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு மக்களிடையே வழங்கப்பட்டது. பொதுவாகக் கல்வியின் பெருமையறிந்து மதித்துக் கொடுக்கும் பொருளையே புலவர் விரும்பினர். அதியமான் நெடுமானஞ்சி பரிசில் கொடுக்காமல் காலம் கடத்தியதைக் கண்ட அவ்வையார் கோபம்கொண்டு "எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே"(புறம்.206:13) என்று முழங்கிப் பாடுகிறார். சங்ககாலச் சமுதாயத்தில் கல்வி கற்றவர்களுக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. கல்வி கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற பெருமை இருந்தது. கல்வி கற்ற ஒருவன் கீழ்க் குலத்தவனாயினும் முயற்சி பெறுவான். இவ்வாறு அமையும் கல்விச் சிறப்பினை,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலைமுனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே" (புறம்.183:1-10)

என்ற புறநானூற்றுப் பாடலில் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற மன்னன் புலப்படுத்தியுள்ளார். பெற்ற தாய்க்குத் தன் பிள்ளைகள் அனைவரிடத்திலும் அன்பு உண்டு என்றாலும் கல்வியில் சிறந்தவர் மீது மிகுந்த அன்பு பாராட்டுவாள். இப்பாடலைப் பாடிய மன்னன் வீரத்திற்கு முக்கியத்துவம் தராமல் கல்விக்கு முக்கியத்துவம் தந்திருக்கிறான் என்றால், கல்வி எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக சங்க காலம் இருந்துள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

மேலும் "கற்பித்தான் நெஞ்சமுங்கப் பகர்ந்துண்ணான் விச்சைக்கண், தப்பித்தான் பொருளேபோல் தமியவே தேயுமால்"(கலித்.149:4-5) எனும் கலித்தொகைப் பாடலடிகள் அக்காலத்தில் ஆசிரியர் நன்கு மதிக்கப்பட்டதையும் கற்ற மாணவர்கள் ஆசிரியருக்குச் செய்ய வேண்டிய கடமையையும் எடுத்துக் கூறுகின்றது என்றால் கற்பித்தோர் அறப்பணி செய்திருக்கிறார்கள், கற்றவர்கள் கடமையுணர்வோடு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைச் சங்ககால நூல்கள் வழி அறியமுடிகிறது.

சங்கம் மருவிய காலத்தில் கற்றல் கற்பித்தல்

சங்கம் மருவிய காலத்தில் "தமிழகத்தில் பிராமணர் குடியேற்றமும் அவர்களுக்கு வேதங்களைக் கற்பிக்கும் காலமும் தோன்றியது. பிராமணர்கள் பல சலுகைகளைப் பெறத் துவங்கினர்" (N.Subrahmanian, 1989). இந்தக் காலக் கட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் இருந்த பெண்களின் கல்விநிலை வீழ்ச்சி அடைந்தது. "சாதி ரீதியாகக் கல்வி மறுக்கப்பட்டதை மனுஸ்மிருதி உத்தரவுகள் கூறுகின்றன, அதன்படி பிராமணர் சூத்திரர்களுக்குக் கற்பித்தால், அவர் நரகத்தில் வீழ்வார், சூத்திரர் வேதத்தைக் கேட்டால் அதற்குத் தண்டனையாக அவன் காதுகளில் ஈயத்தை உருக்கி ஊற்ற வேண்டும். பழுக்கக் காய்ச்சிய எழுத்தாணியைக் கொண்டு அவனது நாவில் சூடு இடவேண்டும் என்பன போன்ற ஒடுக்குமுறைகள் கல்வி கற்பதற்கு எதிராகத் தோன்றின" (S.N.Sadasivan, 2000)

சங்கம் மருவிய காலத்தில் பல்லவர் பிராகிருதத்தையும், சமசுகிருதத்தையும் ஆதரித்தனர். அவர்கள் சமசுகிருதப் பள்ளிகளைக் காஞ்சியிலும், சிலவற்றைப் புதுச்சேரியிலும்

நிறுவினர். இவை தமிழகத்திலும் தென்னகத்தின் பிற பகுதியிலிருந்தும் மாணவர்களைக் கவர்ந்தன.

பல்லவர் காலத்தில் தமிழகத்தில் சமண சமயத்தின் தாக்கம் கூடுதலாக இருந்தது. தமிழகமெங்கும் பரவலாக சமணத் துறவிகள் வாழ்ந்து வந்தனர். இத்துறவிகள் ஓய்வு எடுப்பதற்குப் பாறைக் குன்றுகளிலும், குகைகளிலும் கல்லில் படுக்கைகளை வெட்டி வைத்திருந்தனர். பள்ளிகொள்ளும் அந்த இடம் பள்ளி எனப்பட்டது. அந்த இடங்களில் அவர்கள் மாணவர்களுக்குக் கல்வியும் போதித்தனர். இந்தப் பள்ளிகளில் துவக்கத்தில் சமயக் கருத்துகளும், பின்னர் அறநெறிகளும் போதிக்கப்பட்டன. எழுத்தறிவும் இந்தப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்பட்டது. அதனால்தான் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் இடம் பள்ளி என்று பின்னாளில் பெயர் வந்தது.

"நாயக்கர் காலத்தில் நாடெங்கும் பிராமணக் குழந்தைகள் வேதங்கள் ஓதி பயிற்சி பெறுவதற்குச் சமஸ்கிருதப் பாடசாலைகள் அரச மானியத்தோடு இயங்கின. ஓணர் என்ற நகரில் ஆண்களுக்கு 23 பள்ளிகளும் பெண்களுக்காக 12 பள்ளிகளும் நடத்தப்பட்டன" (அறவாணன் க.ப, 20113, ப.159) இப்பதிவினை நோக்குங்கால் இன்று தமிழகத்தில் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆண்கள் கல்லூரி, பெண்கள் கல்லூரி எனத் தனித்தனியாகக் கல்வி நிறுவனங்கள் இருப்பதற்கு நாயக்கர் காலமே அடிகோலாய் இருந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.

கல்வி சார்ந்து தமிழகத்து மாணாக்கர்களின் மானத்தையும் உயிரையும் பறிக்கும் நுழைவுத்தேர்வை நாயக்கர் காலத்தில் பிராமணர்கள்தான் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதற்குக் கீழ்வரும் பகுதி சான்று பகரும். "தருணம் தடக்கன் எனும் அரசன் கடிகை (பள்ளி) ஒன்று நடத்தினான். மாணவர் விடுதியும் இணைந்திருந்தது. 95 மாணவர்கள் பயின்று வந்தனர். வியாக்கரணம், மீமாம்சை, புரோகிதம், திரைராஜ்ஜிய விவகாரம் ஆகிய பாடங்கள் நடத்தப்பெற்றன. நுழைவுத்தேர்வில் வெற்றிபெற்ற பிராமண இளைஞர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அக்கல்லூரி தென்திருவிதாங்கூரில் இருந்த பார்த்திபசேகரபுரம் எனும் ஊரில் அமைக்கப்பட்டிருந்த திருமால் கோயிலில் செயல்பட்டது"(இராஜேந்திரன்.ந, 2019, பக்.73-74, திறனாய்வு நோக்கில் க.ப.அறவாணனின் தமிழ் மக்கள் வரலாறு - நாயக்கர் காலம்).

மனித வாழ்வில் கற்றலும் கற்பித்தலும் எவ்வளவு முக்கியம் என்பதை வள்ளுவர் கற்றல் பற்றிய செய்திகளை அரசியல் என்னும் பகுதியில் உரைக்கிறார். காரணம், அரசன் கற்றிருந்தால்தான் அவன் ஆட்சிக்கு உட்பட்ட மக்களும் கல்வி கற்பார்கள், அரசனும் தம் மக்களுக்குக் கல்வி அறிவை ஊட்டுவான் என்ற நோக்கில் அமைத்துள்ளார். மேலும், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று அதிகாரங்களிலும் கல்வி பற்றிய செய்திகளைச் சுட்டிச்செல்கிறார்.

"எண்ணும், எழுத்தும் நாம் வாழும் வாழ்க்கைக்குக் கண்களைப் போன்றன(391) எனக் கல்வியின் எல்லையைச் சுட்டிய வள்ளுவர், கல்லாமை பற்றிக் கூறும்போது கற்றவர்களுடன் கல்லாதவர்களை மக்களோடு(மக்களுக்கும்) விலங்குகளுக்குமான வேறுபாடு(410) என்று உரைக்கிறார். செல்வங்களுள் தலைசிறந்த செல்வம் கேள்விச் செல்வம்(411) என்றும் கற்காவிட்டாலும் கேட்டறிய வேண்டும், அது தளர்ச்சியுற்றபோது ஊன்றுகோலாகும்(414) என்றும் உரைக்கிறார். அறிவுடையாரே எல்லாம் உடையார், அறிவிலார் வேறு என்ன உடையவராக இருந்தாலும் அவர் ஏதுமற்றவரே என்றும் நுவல்கிறார். இவ்வாறு கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை ஆகிய அதிகாரங்கள் கற்றல் கற்பித்தல் சார்ந்த பரந்த பார்வையை நல்குகின்றன" என்கிறார் இரா.குணசீலன் (2018:76-77).

"கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக" (குறள். 391)

எனும் குறளுக்கு மு.வரதராசன் அவர்கள் 'கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும். அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்கவேண்டும்' என்கிறார். நாம் பெற்ற கல்வியானது வெறுமனே ஒரு அறிவாக நிலைத்துவிடாது அதனை நமது வாழ்க்கையில் பின்பற்றினோமேயானால் நம் வாழ்வு மேன்மையடையும் என்பதை வள்ளுவர் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

நாலடியார் கூறும் கற்றல் கற்பித்தல்

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு" (நாலடி.131)

என்கிறது நாலடியார். ஒரு பெண்ணுக்குக் கூந்தல் கருமையாக நீண்டு வளர்ந்து அழகாகத் தோன்றலாம், மஞ்சள் பூச்சால் அவள் மேனி அழகாகத் தோன்றலாம் ஆனால், அவை யாவும் அழகல்ல! ஒரு பெண் கல்வி கற்பதனால் அவள் நெஞ்சத்துள் நல்ல பண்புகள் வளரும், அந்த நல்லொழுக்கப் பண்புநிலை உருவாதல்தான் ஒரு பெண்ணுக்கு அழகு என்கிறது மேற்குறித்த இப்பாடல்.

"குஞ்சி அழகு, கொடுந்தானைக் கோட்டழகு, மஞ்சள் அழகு என்னும் தொடர்களை ஓர் ஆணுக்குப் பொருத்திப் பொருள் கூறுவது பொருந்தாது. எனவே, இப்பாடல் பெண்கல்வியைச் சிறப்பித்துக் கூறுகிறது எனக் கருதுவதே ஏற்புடையதாகும்" என்கிறார் கோ.வெங்கடகிருஷ்ணன் (2008:1007). "சமணர்கள் பெண்கல்வியைப் போற்றியதில்லை என்று சில அறிஞர்கள் மறுக்கலாம். ஆனால், நாலடியாரின் அனைத்துப் பாடல்களுமே சமணர்களின் பாடல்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. பெண்கல்வி பற்றிய தமிழர்களின் பழமையான சிந்தனை இது என்று நாம் பெருமை கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது" என்கிறார் கோ.வெங்கடகிருஷ்ணன் (2008:1007-1008)

அழகு என்பது உண்மையில் வெளித்தோற்றத்தில் இல்லை. நெஞ்சத்துள் உள்ள நல்ல பண்பே அழகாகும். அதற்குக் கல்வி தான் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. எனவே, கல்வி கற்ற பெண்கள் அழகான பெண்கள் என்ற தெளிவான சிந்தனையை பாடல் நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

ஒரு மனிதன் கற்க நினைத்தால் சாகும் வரை கற்கலாம் என்பார் வள்ளுவர். அதிலும் கசடறக் கற்க வேண்டிய நூல்களைக் கற்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தும் பாடல் நாலடியாரிலும் இடம்பெற்றுள்ளது. அப்பாடல் கீழ்வருமாறு,

"கல்வி கரை யில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல, தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே, நீர் ஒழியப்
பால் உண் குருகின் தெரிந்து" (நாலடி.135)

அதாவது கல்வி கற்பதற்கு வயதே கிடையாது. கற்பவரின் வாழ்நாள் மிகவும் குறைவானது. அந்தக் குறைவான வாழ்நாளில் நோய் பல வந்து, மனிதன் கல்வி கற்க தடையாய் மாறிவிடும் நாட்கள் பலவாகும். எனவே, இத்தகைய குறைந்த நாட்களில் ஒருவன் தெளிவாக ஆராய்ந்து பார்த்துக் கற்க வேண்டிய சிறந்த நூல்களைக் கற்றுத் தேற வேண்டும். அதுமட்டுமல்லாது நூல்களில் சிறந்த கருத்துக்களும் இருக்கும், தேவையற்ற பயன்தராத கருத்தும் இருக்கும். பாலையும் நீரையும் கலந்து வைத்தால்

அன்னப் பறவை எப்படிப் பாலை மட்டும் உண்ணுமோ அதைப்போல ஒருவன் நூலில் சொல்லப்பட்ட தேவையற்ற கருத்துக்களை ஒதுக்கிவிட்டு சிறந்த கருத்துக்களை மட்டும் கற்றுகொள்ள வேண்டும். கல்வி அனைவருக்கும் சமம் என்பதும் பிறப்பின் பயனை அடைவதற்குக் கல்வி முக்கியம் என்பதையும் நாலடியார் போன்ற சங்கம் மருவியகால நூட்கள் எடுத்துரைக்கின்றன.

இன்றைய சூழலில் கற்றல் கற்பித்தல்

'ஆசிரியர் பணியே அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி', 'எழுத்தறிவித்தவன் இறைவன்' 'நல்ல ஆசிரியனால் நல்ல மாணவர்களையும் நல்ல சமூகத்தையும் உருவாக்க முடியும்' 'ஆசிரியர் பணி என்பது ஒருவருடைய வாழ்வாதாரத்தை உருவாக்கும் பணி' 'ஆசிரியர் உறவே முக்கியமான, முதன்மையான உறவு' 'மனத்தின் அறியாமை இருளைப்போக்கி அறிவுக் கண்களைத் திறந்து வைப்பவர் ஆசிரியர்' இது போன்ற கருத்துக்களைப் படித்ததினாலும், அறிஞர்களின் வாய்ச்சொற்களைக் கேட்டதினாலும் பலர் ஆசிரியர் பணியைத் தேர்ந்தெடுத்து வாஞ்சையோடு பணிசெய்ய வந்துள்ளனர்.

கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்றிருந்த அன்றைய கூற்று இன்று இருக்கிறதா? குறிப்பாக, பள்ளி, கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மதிப்பு இருக்கிறதா? தகுந்த ஊதியம் கிடைக்கிறதா? என்றால் விரல் விட்டு எண்ணும் ஒரு சில பள்ளி, கல்லூரிகள் தவிர புற்றீசலைப் போல் நிறைந்திருக்கும் பள்ளி, கல்லூரிகளில் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியர்கள் பாடம் நடத்துவதை விட்டுவிட்டு மாணவர்களின் கல்விக் கட்டணத்தை வசூலித்தல், மாணவர்களின் தரவுகளைச் சேகரிக்கும் பணிசெய்தல், மாணவர் சேர்க்கைக்காக ஊர்ஊராக, பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமாக அலைதல், அலுவலக உதவியாளராகப் பணிசெய்தல், காவலாளியாகப் பணிசெய்தல், இது போன்ற ஆசிரியர் பணிக்கு எந்தவிதத்திலும் தொடர்பே இல்லாத எண்ணற்ற பணிகளைச் செய்வதினால் ஆசிரியர்கள் என்ன பணிக்காக வந்தார்கள் என்பதையே மறந்து விடக்கூடிய அளவிற்கு அவர்களின் மனநிலை மாறிப்போய்விடுகிறது. இந்த நிலையில் பல ஆசிரியர்கள் மனம் நொந்து விரக்தியில் கடனுக்காகப் பாடம் நடத்திச் செல்கிறார்கள் என்பதுதான் உண்மை. விதிவிலக்கிற்கு ஒரு சில ஆசிரியர்கள் மேலே குறிப்பிட்ட பணிகளைச் செய்வதோடு மணவர்களின் நலன்கருதியோ, மனசாட்சிக்குப் பயந்தோ நன்னூலாரின் கூற்றுக்கு இணங்க அறப்பணி செய்கிறார்கள் என்பதும் உண்மை.

பண்படுத்தாத நிலமும் பக்குவப்படாத விதையும் நல்ல மகசூலைத் தருவதில்லை. அதைப்போல, நல்ல கருத்துக்களைக் கேட்காத மாணவனும், நல்ல ஆசிரியரிடம் பாடம் கேட்காத மாணவனும் இந்தச் சமூகத்தில் நல்ல மனிதன் என்று பெயர் எடுக்க முடியாது. ஏனென்றால், இந்தச் சமூகத்தில் தற்போதைய நிலையில் தீய வழியில் செல்வதற்கும் தீய செயல்களைச் செய்வதற்கும் பல வழிகள் உள்ளன. தீய குணமில்லாமல் மாணவர்கள் நல்வழியில் நடப்பதற்கு ஆசிரியர்கள் அன்றைய காலம் போல் அறப்பணி செய்திட வேண்டும். பள்ளி, கல்லூரிகள் ஆசிரியர்களுக்கு உரிமையையும், மதிப்பையும், தகுந்த ஊதியத்தையும் வழங்கிட வேண்டும்.

நெஞ்சு களனாக, செவி வாயாக இருந்து கேட்ட மாணவர்களின் கற்றல் நிலை எப்போதோ மலையேறிவிட்டது. இன்றைய சூழலில் அரை மணி நேரம் கூட பொறுமையாக இருந்து ஆசிரியர் சொல்லும் பாடத்தைக் கேட்கும் திறன் அற்றவர்களாக இன்றைய மாணவர்கள் மாறிவிட்டார்கள். காரணம் ஒருபுறம் ஊடகம் அவர்களை மழுங்கடித்துக் கொண்டிருக்கிறது. மற்றொருபுறம் திறன்பேசி அவர்களை

அடிமையாக்கிக் கொண்டிருக்கிறது. சில வேளைகளில் உயிரையும் பறித்து விடுகிறது. இந்தச் சூழலில் மாணவர்கள் மீண்டெழுந்து வருவதென்பது மிகக் கடினமான சூழல்தான்.

இந்தக் கொடுமை போதாதென்று பெற்றோர் செய்யும் கொடுமை அதிலும் மோசமானது. கொடுமை 'கொடுமையென்று கோவிலுக்குச் சென்றால் அங்கே இரண்டு கொடுமை தலையை விரித்துப்போட்டு ஆடியதாம்' என்ற பழமொழிக்கு இணங்க தாய்மொழியில் சிந்திக்கக்கூடிய குழந்தையை ஆடம்பரத்திற்காகவும் அந்நிய மொழியின் மோகத்திற்காகவும் தனியார் பள்ளியில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கிறார்கள். தனியார் பள்ளிகள் நல்ல பேர் வாங்குவதற்காகக் குழந்தைகளை நன்றாகப் படிக்க வைக்கிறோம், அறிவாளியாக மாற்றுகிறோம் என்ற பெயரில் குழந்தைகளைக் குழந்தையாகப் பார்க்காமல் பொதிமூட்டை சுமக்கும் கழுதையாகவே மாற்றி விடுகிறார்கள். குழந்தைகளின் அறிவுத்திறனை அறியாமல் செய்த இக்காரியத்தால் குழந்தைகள் இளமை பருவத்திலேயே முதுமைப் பருவம் பூண்டு கூனிகளாக மாறிவிடுகிறார்கள் என்பதை,

"கல்வி இங்கே
இதயத்தில் சுமக்கும்
இனிமையாய் இல்லாமல்
முதுகில் சுமக்கும்
மூட்டையாகி விட்டது
கொடுமை
என்னவென்றால்
குழந்தைகள்
எல்லாம் கூனிகளாயின" (ஒரு வானம் இரு சிறகு)

என்கிறார் மு.மேத்தா.

குழந்தை விருப்பத்தோடு விரும்பி உண்ணும் உணவாக இருக்க வேண்டும் கல்வி. குழந்தையை மிரட்டி வாயைத் திறக்கச் சொல்லி திணிக்கப்படும் வேண்டாத உணவு போல் இருத்தல் கூடாது கல்வி. கல்வி விருப்பத்தோடும் எளிமையாகப் புரிந்துகொள்ளும் வகையிலும் மாணவர்கள் வாழ்க்கையில் பயன்படும் வண்ணமும் இருக்க வேண்டும். ஆனால் இன்றைய கற்றலுக்கான சூழல் எப்படி இருக்கிறது என்பதை,

"அவர்கள் மூளையில்
விதைகளைப் போல்
தூவப்பட்ட வேண்டிய அறிவு
ஆணியைப் போல்
அறையப்படுகிறது" (இன்னொரு தேசிய கீதம்)

என்கிறார் வைரமுத்து. விதை மண்ணில் தூவப்பட்ட பிறகு அந்த விதைகள் நல்ல மகசூலையும் அல்லது மனிதனுக்குத் தேவையான விளைபொருள்களையும் தரக்கூடியதாகவும் நல்ல வீரியமுள்ள விதையாகவும் அது இருக்க வேண்டும். கல்வியானது மாணவர்களுக்குத் தேவையான நல் அறிவைத் தரக்கூடியதாகவும், சிந்தனையை வளர்க்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். ஒருவேளை கல்வி மாணவர்களின் மனதில் ஆணியைப் போல் அறையப்பட்டால், பசுமையான மரத்தில் ஆணியை அறைந்து வைத்தால் நாட்கள் செல்லச்செல்ல வெயிலிலும் மழையிலும் ஆணி எப்படித் துருப்பிடித்து யாருக்கும் பயனில்லாமல் கீழே விழுந்து மண்ணறித்துப் போகுமோ அதைப்போல மாணவர்களின் மனதில் அறையப்பட்ட கல்வி, தேர்வில் பாஸ்

மார்க் எடுக்க உதவுமே தவிர, இந்தச் சமூகத்தில் சிந்தனையை விளைவிக்கக்கூடிய நல்ல மாணவர்களை அல்லது மனிதர்களை உருவாக்காது.

அதுவே மாணவர்களின் மனநிலையை அறிந்து அவர்களுக்கும் இந்தச் சமூகத்திற்கும் பயன் விளைவிக்கக்கூடிய கல்வியைக் கொடுப்பதே கற்றல் கற்பித்தலின் மிக முக்கியமான கடமையாக இருக்க வேண்டும்.

துணைநின்றவை

- அறவாணன் க.ப., 2013, தமிழ் மக்கள் வரலாறு, தமிழ்க்கோட்டம் வெளியீடு, சென்னை-29
- இளங்குமரன் இரா., 2003, சங்க இலக்கியம் புறநானூறு, கோவிலூர் மடாலயம், கோவிலூர் - 307, காரைக்குடி.
- இளங்கோவன் எஸ்., 2016, கல்வி நேற்று இன்று நாளை, http://elangonarasimman.
- இராஜேந்திரன் ந., 2020, திறனாய்வு நோக்கில் க.ப.அறவாணனின் தமிழ் மக்கள் வரலாறு - நாயக்கர் காலம், (மீள் வாசிப்பில் தமிழ் மக்கள் வரலாறு, பாலாஜி.க) வேர்களைத்தேடி பதிப்பகம்.
- குணசீலன் இரா., 2018, (நிற்க அதற்குத் தக) தமிழ் ஆங்கிலம் கணிதம் கற்றல், கற்பித்தல் உத்திகள், தமிழ் நாற்றங்கால் பதிப்பகம், சிவகங்கை - 630 702.
- கணேசையர், 1937, தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும் நச்சினார்க்கினியருரையும், கழக வெளியீடு, சென்னை.
- மதிவாணன் இரா., 2017, இடைக்கழகச் சிந்துவெளி எழுத்து படிப்பது எப்படி?, எழிலினி பதிப்பகம், எழும்பூர், சென்னை - 8.
- விசுவநாதன். அ.(உ.ஆ.), 2004, கலித்தொகை (மூலமும் உரையும்), என்.சி.பி.எச் பதிப்பகம், அம்பத்தூர், சென்னை - 98.
- வெங்கடகிருஷ்ணன் கோ., 2008, (நாலடியார் நுவலும் கல்வி) வளர் தமிழ் ஆய்வு மன்றம், திண்டுக்கல்-624 001.
- Subrahmanian N., (1989), The brahmin in the Tamil country, Ennes Publications.
- Sadasivan S.N., (2000), A Social History of India. APH Publishing. p.274.
- http://elangonarasimman.blogspot.com/2016/10/kalvi-andrum-indrum.html
- https://ta.vikaspedia.in/education/ {The book-"GURUKULS AT A GLANCE" by S.P.Arya (Founder of ARYA BROTHERS CARE) and WWW.GURUKULSWORLD.COM as well as WWW.ARYABROTHERS.COM)Cheong Cheng, Cheong Cheng Yin; Tung Tsui Kwok Tung Tsui, Wai Chow King Wai Chow, Magdalena Mo Ching Mok (eds.) (2002). Subject Teaching and Teacher Education in the New Century: Research and Innovation. Springer. பக். 194. பன்னாட்டுத் தரப்புத்தக எண்:962-949-060-9. https://ta.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AF%81%E0%AE%B0%E0%AF%81%E0%AE%95%E0%AF%81%E0%AE%B2%E0%AE%AE%E0%AF%8D

****

இலக்கியம் கற்பித்தலின் அணுகுமுறைகள் Teaching Approaches of Literature

முனைவர் ந. சுபா | Dr.N.Shubha

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, சேலம்-8,
Mob: 97917 97869, Email: drnshubharameshpondi@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

கற்றல் - கற்பித்தல் திட்டத்தை - செயல்பாட்டை வெற்றியடையச் செய்பவர் ஆசிரியரே ஆவர். ஆசிரியர் என்போர் நாளும் கற்பவர்; கற்பிப்பவர்; மாணவர்களைக் கற்கத் தூண்டுபவர் என்பது அனைவரும் அறிந்ததே. மாணவர்களின் ஆளுமைப் பண்புகளை வெளிக்கொணர்பவர்; புதிய உத்திகளைக் கற்பித்தலில் புகுத்துபவர்; மாணவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டுபவர்; நல்ல மாணவரை உருவாக்க மானுடம் கற்பித்து சமூகப் பொறுப்புகளை எடுத்துரைக்கக் கூடியவராக ஆசிரியர் விளங்குகிறார். இத்தனை பரிமாணங்களைக் கொண்டிருக்கக்கூடிய ஆசிரியர்களால்தான் தனது கற்பித்தல் தொழிலில் வெற்றி அடைய முடியும்.

குறிப்பாக, இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர் இலக்கியம் ஏன் கற்பிக்கப்படுகிறது? அதன் முக்கியத்துவம் என்ன? இலக்கியம் எவ்வகையில் பயன்படுகிறது? எவ்வாறு கற்பிக்கப்பட வேண்டும்? என்ற செய்திகள் குறித்த தெளிவு இன்றி இலக்கியம் கற்பிக்க எந்தவித அணுகுமுறையும் மேற்கொள்ள முடியாது. இக்கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட சிந்தனை இங்கு முன்வைக்கப்படுகிறது.

Abstract

Learning – Teaching methods put forth into action only by the teaching fraternity. It is a well known fact that a teacher is a learned personality who learns throughout their life, teaches till their end, motivates students to learn well. He introduces new techniques, modules in the learning process, and paves a way for the virtual growth of the students. His teaching becomes universal since he teaches from heart and creates a responsible human to the world. All these factors, add more dimensions to make him the best and also a successful teacher.

The teacher one who teaches literature always stands par excellence because he has to impart the main purpose of teaching literature, the significance of it and how far one could make use of it, unless he does, one can not inculcate the soulful touch of literature. In view of all this very concept, the theme of the study has put forth into a research article.

திறவுச்சொற்கள் (Keywords): கற்றல், கற்பித்தல், மாணவர்கள், ஆசிரியர், இலக்கியக்கல்வி, ஆளுமைப் பண்புகள், இலக்கியம், அணுகுமுறை, பரிமாணங்கள், கருத்தியல், Learning, Teaching, Personality, motivate students, new techniques, Modules, Literature.

முன்னுரை

கற்பித்தல் என்பது பல திறன்களை உள்ளடக்கியது. வகுப்பறையைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் ஆசிரியர் கல்வியின் அவசியம், கற்கும் முறை, அறிவுத்திறன் போன்ற அடிப்படைக் கூறுகளை மாணவர்களுக்குக் கொடுக்கும் விதமாகக் கற்பித்தலை அணுகுகிறார். குறிப்பாக, தாங்கள் ஏற்கனவே அறிந்தவை, பெற்ற அறிவு இவற்றோடு புதிய தகவல்களையும் சேர்த்துக் கற்பிக்கிற பொழுது மாணவர்களுக்குப் புதிய புரிதல்களை ஏற்படுத்த வாய்ப்புண்டு. இந்த வகையில் மாணவர்களின் சிந்தனை தூண்டப்படவும், தனித்திறமைகளை வெளிக்கொணரவும் வழியுண்டு.

இலக்கியக் கல்வி கற்பித்தலில் ஆசிரியரின் பங்கு மிகப்பெரிது. அவ்விலக்கியக் கல்வி மாணவர்களிடையே (i) காலந்தோறும் இலக்கியம் கூறும் இலக்குகள் என்னென்ன? (ii) இலக்கியக் கல்வி மனித நடத்தைகள் பற்றிய புரிதல் உணர்வை முன்வைத்தல், (iii) அழகியல் உணர்வை வளர்க்கச் செய்தல் (iv) மனிதப் பண்புகளை வலுவுடன் எடுத்துரைத்தல், (v) இலக்கியத்தை மனித நடைமுறைப் பண்பாட்டோடு கற்பித்தல்..... இதுபோன்ற கருத்தியல்களை உள்வாங்கிக் கொண்டு இலக்கியங்களை இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றாற்போல் புதுவித திறனாய்வுக் கோட்பாட்டுடன் பொருத்தியும் தொழில்நுட்ப உதவியுடன் கற்பித்தும் வந்தால் மாணவர்களுக்கு இலக்கியம் கற்கும் ஆர்வம் ஏற்படுவதுடன் ஆய்வுச் சிந்தனையும் வளரும். அடிப்படையான இக்கூறுகளை முன்வைத்து இக்கட்டுரை அமைகிறது.

கற்றலின் அவசியம்

கற்றல் என்பது மனிதனது அனைத்து திறன்களை வெளிக்கொணரும் தன்மை கொண்டது. கற்றலின் அடிப்படைக்கூறு கல்வியே. அந்தக் கல்வி எந்தத் துறையானாலும் குறிப்பாக, இலக்கியம், இசை, ஓவியம், சிற்பம் போன்றவற்றை அறிந்து கொள்ளக்கூடிய கல்வியாக இருக்கலாம். அதனால் கல்வி கற்றல் என்பது சமூகத்தில் மிக முக்கிய பங்காற்றி வருகிறது. "எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ. . . அத்தகைய கல்விதான் நமக்கு தேவை" என்கிற சுவாமி விவேகானந்தரின் கூற்று (தெ.செல்வராசு, இலக்கியமும், வாழ்வியலும், ப.79) கல்வி கற்பதின் அவசியத்தைக் காட்டுகிறது.

கற்றல்தான் ஒரு மனிதனின் அறிவை - வாழ்க்கையை வளமாக்குவது. தனி ஒருவனின் அறிவு மற்றும் திறன்கள் கற்றலில் இருந்துதான் பெறப்படுகிறது. கல்வியின் குறிக்கோள்கள் என்னென்ன? கற்றல் அனுபவத்தின் பயன்கள் எப்படிப்பட்டது? கற்றலினால் ஏற்படும் மதிப்பீடுகள் எவை? என்பன குறித்துக் கற்றல் தெளிவாக்குகிறது. இவற்றில் ஒன்றின் வளர்ச்சி தடைபட்டாலும் மற்றவற்றின் வளர்ச்சி பாதிக்கப்படும். ஆகவே கற்றலின் அவசியத்தைப் பின்வருமாறு பகுத்துப் பார்க்க முடியும்.

- சமூகம் மற்றும் சூழல் குறித்த அறிவைப் பெறுவதற்கு . . .
- மொழியினுடைய ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கு . . .
- மனிதப் பண்புகளை அறிந்து கொள்வதற்கு . . .
- நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்வதற்கு . . .
- தனிமனித ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கு . . .
- நல்ல ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்வதற்கு. . . கற்பிப்பதற்கு. . .
- தனிமனித திறன்களை வெளிப்படுத்துவதற்கு . . .

இத்தகைய ஆற்றல்கள் நிறைந்ததுதான் கற்றலின் இயல்புகளாகும்.

கற்பித்தலின் முறைகள்

கற்றல் என்பது கற்பித்தல் மூலம் நிறைவு பெறுகிறது என்று கூறலாம். "கற்பித்தல் என்பது மற்றவரின் கற்றலுக்கு வழிகாட்டுதல் தொடர்பான செயல்பாடுகளாகும்" - ரேயான்.

"கற்பித்தல் என்பது மற்றவர்கள் கற்க உதவுதல்" - ஆபட்மெமோஹன் (இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு (2016-178) "கற்றலும் கற்பித்தலும்", "கற்பிக்கும் தன்மை" - ஜகந்நாதன், ப,19, வலைதளத்திலிருந்து பெறப்பட்டது)

கற்பவர் தன்மைக்கு ஏற்ப கற்பித்தல் முறைகள் வேறுபடும்; ஒவ்வொருவருடைய கற்பித்தல் அணுகுமுறைகள் வேறுபட்டிருக்கும். பொதுவாக, கற்பித்தலானது (i) ஆசிரியர் மையமிட்ட கற்பித்தல், (ii) மாணவர் மையமிட்ட கற்பித்தல் என இரண்டு அணுகுமுறைகளில் அமைகின்றன.(கற்பித்தல் முறை....விக்கிபீடியாவிலிருந்து பெறப்பட்ட கருத்து.)

(i) ஆசிரியரை மையமிட்ட கற்பித்தல்

ஆசிரியரே முதன்மையாக விளங்குகிறார்; வகுப்பில் ஆசிரியரின் நிர்வாகம் முதன்மையானது; வகுப்பறை ஆசிரியரின் கட்டுப்பாட்டில் இருக்கும். கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் ஆசிரியர் கூறுவதைக் கேட்டு கற்பர். தேர்வுகள், பயிற்சி அளித்தல் போன்ற மதிப்பீட்டின் வழி மாணவர்களின் கற்றல் திறம் அறியப்படுகிறது.

(ii) மாணவரை மையமிட்ட கற்பித்தல்

இம்முறையில் ஆசிரியரும் கற்க வரும் மாணவரும் சமமாக செயல்படுவார்கள். பாடங்களை எளிதில் புரிய வைக்கும் பொறுப்பு ஆசிரியரைச் சார்ந்தது. மாணவர்களின் புரிதல் திறனுக்கு ஏற்ப கற்பித்தலில் விரிவுரை முக்கிய பங்கு வகிக்கிறது. அந்தவகையில் ஆசிரியர் மாணவர்களின் மத்தியில் பயிற்றுநராக - வழிநடத்துபவராகச் செயல்பட வேண்டியுள்ளது.

வகுப்பில் கற்க வரும் மாணாக்கர் பல வகை; தமிழிலக்கண நூலான நன்னூலில், "அன்னம் ஆவே மண்ணொடு கிளியே, இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி அன்னர், தலை இடை கடை மாணாக்கர்" (நன்னூல், பொதுப்பாயிரம், நூ.எ.38) என்று மூன்று வகைகளில் மாணவர்கள் இருப்பர் என்று கூறப்படுகிறது. தலைமாணாக்கர், இடைமாணாக்கர், கடைமாணாக்கர் என்று வகுப்பில் இருந்தாலும் பாடம் கற்பித்தலில் எந்தவித வேறுபாடின்றி ஒரே மாதிரியான கற்பித்தல் முறையே அனைவருக்கும் பயிற்றுவிக்கப்படுகின்றது. இருப்பினும், மாணவர்களை, சுயகற்றல், குழு கற்றல், ஊடகக் கற்றல், அனுபவக் கற்றல், இ-கற்றல் என்ற முறைகளில் மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்தலாம்.

ஆசிரியர் கற்பிப்பதால் கால் பங்கு அறிவு; தன்னுடன் பயிலும் மாணவருடன் பழகிப் பேசுவதால் கால் பங்கு அறிவு; தான் கற்றதை எடுத்துக் கூறுவதால் அரைப்பங்கு அறிவு என முழுப்பங்கு புலமையும் மாணவன் பெறுகிறான் என்ற நன்னூல் சூத்திரத்தின் வழி (நூ.42,43) ஆசிரியர் மாணவர்களை வழிநடத்திக் கற்றல் செயலில் ஈடுபடுத்த வேண்டும்.

மேலும், வகுப்பறையில், மாணவர்களை வாசிக்கச் செய்தல், கலந்துரையாடச் செய்தல், விளக்கச் சொல்லுதல், வினாவங்கி தயாரிக்கச் செய்தல், கருத்தரங்கம் போல நடத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுத்தி அவர்களது ஆளுமையை வளர்க்கச் செய்யலாம்.

இலக்கியம் கற்பித்தலின் நோக்கம்

இலக்கியம் ஏன் படிக்க வேண்டும்? ஏன் கற்பிக்கப்படுகிறது? என்பதற்குரிய காரணங்கள் பின்வருமாறு முன்வைக்கப்படுகின்றன.

"அறநெறியில் நிற்றல், உணர்ச்சியைத் தூண்டுதல், ஆய்வுச் சிந்தனை வளர்த்தல் மக்கட்பண்பை வளர்த்தல், கற்பனை ஆற்றலை வளர்த்தல், இறையுணர்வை உண்டாக்குதல், மொழிப்பற்றை உண்டாக்குதல், கவி புனையத் தூண்டுதல், கருத்துணர்தல் ஆற்றலை வளர்த்தல், இலக்கியப் பற்று உண்டாக்குதல்" ..(இலக்கியம் கற்பிக்கும் அணுகுமுறைகளின் நன்மைகள், நித்யா சேகர் & காயத்ரி கணேசன்—வலைதளப் பதிவு-SCRIBD)

இவை சார்ந்த கூறுகளை இன்றைய சமூகப்-பண்பாட்டோடு ஒப்பிட்டுக் காட்டிக் கற்பித்தல் வேண்டும்.

இலக்கியம் கற்பிக்கும் அணுகுமுறை

இலக்கியக் கல்வி கற்க வரும் மாணவர்களுக்கு இலக்கியம் கற்பதன் அவசியம், இலக்கியம் எடுத்துக்கூறும் கூறுகள், இலக்கியம் எழுந்த சூழல், இலக்கியப் பண்புகள், காலந்தோறும் இலக்கியம் எடுத்துரைக்கும் இலக்குகள், இலக்கிய வரலாறு போன்ற இலக்கியப் பாடங்களை நடைமுறைப் பண்பாட்டோடு அணுகி கற்பித்தல் வேண்டும். செய்யுட்கள், சிறுகதை, நாவல், கட்டுரை, உரைநடை முதலிய இலக்கிய வகைகளைப் பயிற்சி கொடுப்பதன் மூலம் கற்பித்தல் மாணவர்களுக்கு இலக்கியம் படிக்கும் ஆர்வம் ஏற்படுத்தலாம்.

மொழியின் அமைப்போடு இலக்கியம் கற்பித்தல் அவசியமாகிறது. இலக்கியம் கற்பித்தலுக்கு இரண்டு முக்கிய பயன்பாடுகளைக் கார்த்திகேசு சிவத்தம்பி முன் வைக்கிறார்.

1. மொழியாட்சித் திறனை வளர்த்தல்
2. பண்பாட்டைக் கற்பித்தல்

மாணவர்கள் மொழியின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கான வாயில் அம்மொழியின் இலக்கியமே ஆகும். ஆனால், இலக்கியம் கற்பித்தல் என்பது மாணவர்கள் இலக்கியத்தை அனுபவிக்க வழிவகுப்பதாகவும் அந்த அனுபவம் ஏற்படுவதற்கான காரணிகளை அறிந்து கொள்வற்கான திறனையும் பயிற்றுவித்தலாகும். (கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழ் கற்பித்தல், ப.31)

இலக்கியம் என்பது மனிதப் பண்புகளைக் கற்பிக்கிறது என்ற அடிப்படையிலான கருத்தினை மாணவர்களிடத்தே கொண்டு செல்ல வேண்டும். இலக்கியம் கற்பித்தலில், கவிதை என்கிற செய்யுள் முக்கியம் இடம் பெறுகிறது. செய்யுட்களைக் கற்பிக்கின்ற பொழுது, பொழிப்புரை- விளக்கவுரை என்ற அளவில் நின்று விடாமல் அவ்விலக்கியப் பகுதியின் உள்ளே இருக்கும் இலக்கணம் சார்ந்த கூறுகள், நயப்பு ஏற்படக்கூடிய பகுதிகள், இலக்கியம் கூற வரும் கருத்து, கற்பனை சார்ந்த பகுதிகள், மாணவர்களின் புரிந்து கொள்ளும் தன்மைக்கு ஏற்ப பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

மாணவர்களுக்கு ஆக்கப்பூர்வமான சிந்தனைக்கு இடம் அளிக்கக்கூடிய படைப்புகள் - படைப்பிலக்கியம் குறித்த பயிற்சிகளைக் கொடுத்து மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். தொடக்கக்கால மரபு சார்ந்த கற்பித்தலோடு (குருகுலக்கல்வி)

மாணவர்களுக்கு ஆர்வம் - ஆய்வுச்சிந்தனை - புதிய சிந்தனை திறன்கள் ஆகியன ஏற்படக்கூடிய அணுகுமுறைதான் நவீன கற்பித்தலில் பின்பற்றப்பட வேண்டும்.

இலக்கியம் கற்பிக்கின்றபொழுது கையாளப்படுகின்ற வழிமுறைகள்,

1. இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள கருத்து மற்றும் சொற்கள் குறித்து அறிமுகப்படுத்தல்,
2. இலக்கியப் பாடப் பகுதிகளை (கவிதை, உரைநடை போன்றன) சத்தமாக வகுப்பில் வாசிக்க வைத்தல்.
3. சீர்பிரித்து ஓசையுடன் - தெளிவுடன் வாசிக்க வைத்தல்.
4. இலக்கியப் பகுதிக்குரிய கருத்துக்களை மாணவர்கள் அறிந்த முறையில் எடுத்துரைக்கச் செய்தல். அப்பொழுது மாணவர்களுக்கு அப்பாடப்பகுதியின் கருத்துக்களைப் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.
5. சில இலக்கியப் பாடங்களை மனனம் செய்யத் தூண்டுவதால் நினைவாற்றல் பயிற்சியும் வந்து விடுகிறது. (சான்றாக, நூற்பாக்கள், சில செய்யுட் பகுதிகள்)
6. படைப்பாற்றலை வளர்க்கும் பகுதிகளான கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல், நாடகம் படைத்தல், கட்டுரை எழுதுதல் போன்ற பயிற்சி அளிக்கக்கூடிய வகையில் அணுகினால் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படுவதுடன் படைப்பாற்றல் திறனும் வளர்கிறது. தொடர்ந்து, மாணவர்கள் படைத்த படைப்புகளை ஒன்று சேர்த்து ஒரு கோப்பாகத் தயார் செய்யும்பொழுது மாணவர்களின் ஆளுமை வெளிப்பட வாய்ப்பு ஏற்படும். நாடகம் குறித்த செயல்பாட்டில் குழுக்கள் பிரித்து குழுவிற்கென்று தலைப்பு தந்து நடிப்பதற்கு உற்சாகப்படுத்தலாம். நடிப்புத் திறன் வெளிப்படவும் வாய்ப்பு உண்டாகும்.

ஆகவே, ஆசிரியர் மட்டுமே கற்பித்தலில் ஈடுபட்டு வருவதோடு மாணவர்களையும் இணைத்து ஆசிரியருக்குச் சமமாக கொண்டுவரும் போது திறன்மிக்க வகுப்பறையாக மாறுவதோடு மாணவர்களின் திறன்களும் வெளிப்பட வாய்ப்பு உண்டாகிறது. இலக்கியம் படிக்க ஆர்வமும் ஏற்படுகிறது.

மேலும், இலக்கியங்களைக் கற்பிக்கின்றபோது, நவீன காலத்தில் முக்கிய இடம்பெறுவதான திறனாய்வுக் கூறுகளையும் இலக்கிய மாணவர்கள் மத்தியில் புகுத்திக் கொண்டே வருதல் அவசியம். மாணவர்களின் ஆய்வுச் சிந்தனை வளர்ப்பதற்கும் ஆசிரியரின் பங்கு மிகப்பெரிது. அதற்காக, சிறுதைகளைப் பயிற்சிக்காக கொடுத்து திறனாய்வுச் சிந்தனையை வளர்க்க முடியும். அந்த வகையில், இலக்கியக் கல்வி படிக்க வரும் மாணவர்களுக்கு அச்சமின்றி ஆர்வம் ஏற்படுகின்ற அளவிற்கு இலக்கியம் கற்பித்தல் அணுக வேண்டும்.

இலக்கியம் கற்பித்தலில் தொழில்நுட்ப உதவிகள்

இலக்கியம் கற்பிக்கின்ற பொழுது, நாம் இருக்கிற காலக்கட்டம், சமூக அமைப்பு, உலகம் தழுவிய கருத்துகள் - கோட்பாடுகள் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் என்பன குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் கற்றல் முறையை ஊக்குவிக்கலாம். இதுபோன்ற முறையில் கற்பித்தல் பணி நடைபெறுகிற பொழுது தொழில்நுட்ப உதவியுடன் செயல்பட வேண்டும். புத்தகம் - கரும்பலகை என்றில்லாமல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியினால் கற்றல் நடைபெறலாம் என்ற ஆர்வத்தை மாணவர்களுக்குக் கொடுத்தல் அவசியம்.

குறிப்பாக, மாணவர்களுக் கணினிப் பயன்பாடு, இணையதளம் பயன்படுத்தும் முறை குறித்து ஊக்குவிக்கலாம். ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பிக்கின்ற பொழுது PPT

பயன்படுத்துதல், காட்சிப் படங்கள் வழிக் கற்பித்தல், இணையதளங்கள் வழிக் கற்பித்தல் போன்ற முறைகளில் ஈடுபடுகின்ற பொழுது மாணவர்களுக்குக் கற்றலில் ஆர்வம் ஏற்பட வாய்ப்புண்டு. மாணவர்களையும் அவர்களது ஒப்படைப்பு (Assignment), கருத்தரங்கம் போன்ற பயிற்சிகளுக்குத் தொழில்நுட்ப உதவியுடன் கற்பதற்குத் துணை நிற்கலாம் (தமிழ் கற்றல் கற்பித்தல் தொழில்நுட்பத்தின் பங்கு, பா.நாகேஸ்வரி, 2021).

இன்றைய சூழலில் வீட்டிலிருந்தே கல்வி கற்றல் என்ற நிலை உருவாகியுள்ளது. அதற்குரிய வெளிப்பாடான Google meet, Zoom, Webex போன்ற செயலிகள் வழிக் கற்பித்தல் நடைபெற்று வருகிறது. கூகுள் வகுப்பறை வழியாக மாணவர்களைப் பங்கேற்கச் செய்து கற்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேரடி வகுப்பறை போலவே அனைத்துச் செயல்பாடுகளும் இவ்வகுப்பறை வழியே நடைபெற வாய்ப்புள்ளது. இதைத்தவிர, மாணவர்கள் தங்களது பாடங்கள் தொடர்பாக - ஆய்வு தொடர்பாக புத்தகங்கள் பார்ப்பதோ (அல்லது) கருத்துக்கள் தேடுவதோ அனைத்தும் வீட்டிலிருந்து கொண்டே இணையதள வசதிகள் துணைகொண்டு அறிந்து கொள்ள மாணவர்களைத் தூண்ட வேண்டும்.

மேலும், சமூக ஊடகங்களின் வழி (முகநூல், டிவிட்டர், யூட்யூப், இன்ஸ்டாகிராம்) கற்பித்தலை மேற்கொள்ளலாம். வகுப்பிற்கென்று வலைப்பூ (Blog) ஒன்று உருவாக்கி மாணவர்களின் படைப்புகளை அதில் பதிவிடலாம். அப்பொழுது மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டு ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுவர்.

இன்றைய காலச்சூழலுக்கு ஏற்றாற்போல் மாணவர்களைக் கற்கத் தூண்டும் வகையில் இலக்கியக் கல்வி அமைதல் அவசியம். அதற்கு அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி அவசியமாகிறது. மாணவர்களைக் கற்றல் செயலில் முழுவதுமாக ஈடுபடுத்தும் வகையில் பல்வேறு கோணங்களில் பல பயிற்சிகள் வழியாக கற்கத் தூண்டுதல் என்பது அவசியமாகிறது. இலக்கியம் வாசித்துவிட்டு மனனம் செய்வதோடு இலக்கியக் கல்வி நின்றுவிடக்கூடாது. அதனைச் செயல்முறையோடு - செய்முறையோடு - தொழில்நுட்பக் கருவிகள் உதவியுடன் கற்பித்தல் பணி செயல்படுத்தும்பொழுதுதான் மாணவர்கள் அனைவரும் கல்வி அறிவை முழுமையாகவும் திறமையாகவும் பெற முடியும் என்பதில் ஐயமில்லை.

கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்

இன்றைய சூழலில் இணையவழிக் கற்பித்தல் கட்டாயம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, எதிர்வரும் காலக்கட்டங்களில் ஆசிரியரல்லா வகுப்பறை கூட உருவாகலாம். எவ்வாறு இருப்பினும், இன்றைய காலக்கட்டத்தில் இணைய வழியாக (Online) பாடங்கள் நடத்தி வருகிற சூழலில் அனைத்து மாணவர்களும் அவர்கள் வீட்டிலிருந்து கொண்டே வகுப்பிற்குள் இணைந்து பங்கேற்பதில்லை. காரணம் மாணவர்கள் அனைவரும் நகர்ப்பகுதி, கிராமப்பகுதி மற்றும் மலைசூழ்ந்த பகுதிகளில் வாழ்ந்து வருவதால் இணையதள வசதி (Internet connection) விரைவாகக் கிடைப்பது அரிதாக உள்ளது. அதனால், 100 சதவீத மாணவர்களை Online வகுப்பில் காண்பது என்பது இயலாத ஒன்றாக உள்ளது. குறிப்பாக, மாணவர்களின் பொருளாதார வசதியின் அடிப்படையில்தான் அவர்களது கணினி, கைபேசி இவற்றின் திறம் இருக்கும். இதுவும் ஒரு காரணம் என்பது மாணவர்களின் கருத்துக்கேட்பு வழியாக அறிய முடிகிறது.

மேலை நாடுகளின் வளர்ச்சிபோல நம் இந்திய நாடு பொருளாதாரத்தில் - மக்களின் வாழ்வாதாரத்தில் மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும். அப்பொழுதுதான், இணையவழிக் கற்றல் முறை நூறு சதவீதம் வெற்றியை அடைய முடியும். அரசு கல்லூரிகளில் படிக்க வரும் மாணவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள்;

இணைய வசதி (Internet Connection) பெற முடியாத நிலையில் இருப்பவர்கள். அத்தகையவர்கள் இணையவழிக் கற்றலில் முழுமை அடைய முடிவதில்லை.

புதிய கல்விக் கொள்கைக்கான - நவீனத் திட்டமான இணையவழிக் கற்றல் என்பது வளர்ச்சியடைய மேலும் சில காலங்கள் ஆகலாம். இருப்பினும், மரபுப்படி நேரடி வகுப்பில்- வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களைச் சந்திப்பதும் மாணவர்கள் ஆசிரியர்களைச் சந்தித்து கலந்துரையாடுவதுமான கற்றல்- கற்பித்தல் முறையில் ஏற்படும் மகிழ்ச்சியானது இணைய வழிக் கற்றல்- கற்பித்தலில் கிடைப்பது சற்றுக் குறைவாகவே உள்ளது.

எவ்வாறு இருப்பினும், நேரடி வகுப்பறையில் நவீன தொழில்நுட்ப கருவிகள், இணையம், படக்காட்சிகள் இவற்றின் உதவியுடன் கற்பித்தலில் ஈடுபடும்பொழுது,

> "உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து
> விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
> கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கௌக்
> கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப" (நன்னூல்,எழுத்து.36)

என்ற நன்னூல் சூத்திரத்திற்கு ஏற்ப பாடம் கற்பிக்கும்முறை அமைய வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்களும்,

> "பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகி
> சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்
> செவிவாயாக நெஞ்சு களனாகக்
> கேட்டவை கேட்டவை விடாதுஉளத்து அமைத்து" (நன்னூல், எழுத்து.40)

என்பதாகக் கற்பதில் விருப்பம் கொண்டவராகவும் குறிப்பாக வகுப்பறையில் இருந்துகொண்டு கற்றுக் கொள்வதில் ஆர்வம் கொண்டவராகவும் இருக்கின்றனர் என்பது தெரிய வருகிறது.

முடிவுரை

- இலக்கியக் கல்வியை நடைமுறைப் பயன்பாட்டோடு கற்பித்தல் வேண்டும்.
- மாணவர்களிடத்து மதிப்பீட்டு உணர்வை வளர்க்கும் இலக்கியக் கல்வியைப் பயிற்றுவிக்கலாம்.
- இலக்கியக் கல்வியில் அழகியல் சார்ந்த கூறுகள், சமூக பொறுப்புகள் குறித்த செய்திகள், மனிதப் பண்புகள் ஆகியன குறித்த புரிதல்கள் முன்வைக்கப்பட வேண்டும்.
- கற்பித்தல் செயல்முறைகளில் விரிவுரைகள், கலந்துரையாடல்கள், பின்னூட்டங்கள், வினாக்கள் வினவுதல், படைப்புக் குறித்துப் பயிற்சி அளித்தல் போன்ற உத்திகளைப் பின்பற்றி மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்தலாம்.
- குறிப்பாக, தொழில்நுட்ப கருவிகளுடனும் இணையதளம் சார்ந்த கருத்துக்களுடனும் இன்றைய காலத்தோடு ஒப்பிட்டுப் பயிற்றுவிப்பதாலும் கற்பித்தலில் வெற்றியடைய முடியும்.

துணைநின்றவை

I. நூல்கள்

- இளவரசு சோம.(ப.ஆ.), (2010), நன்னூல் - எழுத்ததிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- சிவத்தம்பி கார்த்திகேசு, (2012), தமிழ் கற்பித்தல், NCBH, சென்னை.

II. வலைதளம்

- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை, இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு (2016-17) **'கற்றலும் கற்பித்தலும்'** 'கற்பிக்கும் தன்மை' - ப.ஜெகநாதன், வலைதளத்திலிருந்து பெறப்பட்டது. http://www/tnteu.ac.in
- **'கற்பித்தல் முறை' - தமிழ் விக்கிப்பீடியா,** https://ta.m.wikipedia.org/wiki/
- **'இலக்கியம் கற்பிக்கும் அணுகுமுறைகளின் நன்மைகள்', நித்யா சேகர் & காயத்ரி,** http://www.scribd.com
- **'தமிழ் கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பங்கு'** - பா. நாகேஸ்வரி, தமிழ் இணைய ஆசான் (Tamil Computing Journal) செப்டம்பர் 4, 2021 - வலைதளத்திலிருந்து பெறப்பட்டது. http://www.tamilcomputingjournal.org

****

மனித வளர்ச்சியில் கற்றல் உளவியல் - அறிஞர்களின் சிந்தனைகள் Psychology of learning in human development - Thoughts of scholars

முனைவர் ஜெ.கவிதா | Dr.J.Kavitha

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, Assistant Professor of Tamil, PSGR Krishnammal College for Women, Coimbatore. MAIL ID: jkavitha@psgrkcw.ac.in, kavithamahendiran1973@gmail.com,phono no: 948757527, ORCID : https://orcid.org/0000-0002-3938-1985

ஆய்வுச் சுருக்கம்

சைக்காலஜி துறையானது மனிதனுடைய மனதையும் நடத்தையையும் பற்றி ஆராயும் ஒரு துறையாகும். இத்துறையில் வல்லுனர்களை சைக்காலஜிஸ்ட் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தனிமனிதனின் புலனுணர்வு, அறிவாற்றல், செயல்திறன், மன அழுத்தம், ஆளுமை, நடத்தை ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து உரிய தீர்வு அளிக்கின்றனர். உளவியல் சார்ந்த அறிவானது அன்றாட வாழ்வில் உள்ள கல்வி, குடும்பம், தொழில், உள்ளிட்டவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறது. மனித வளர்ச்சியில் ஏற்படும் நன்மைகள், தீமைகள், அதற்கான தீர்வுகள் ஆகியவற்றை சைக்காலஜி துறையானது விளக்குகிறது. மனித வளர்ச்சியில் கற்றல் உளவியல் என்ற தலைப்பில் எண்ணற்ற உளவியல் அறிஞர்கள் விளக்கவுரை கொடுத்துள்ளனர். இவ்வாறான விளக்கவுரையை கற்றுத்துர மாணவர்களுக்கு எங்கு?, யார்?, எப்படி?, எங்கே? எப்போது கற்கப்படுகிறது என்ற வினாவிற்கு விடையாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். கற்றலானது மனித வளர்ச்சியில் பிறப்பு முதல் இறப்புவரை நடந்தேறி வருகின்றது.

Abstract

The field of psychology is the study of the human mind and behavior, as a psychologist who excels in this field of the perception, cognition, performance of the individual, and explores stress, personality, and behavior springs. In the current mechanical life, stress can affect children as well as adults strongly. Psychological knowledge includes education in everyday life, family, doing research on industry, including about human development, discussing the pros, cons, learning practice in this topic, student and finding causes cum curing remedials includes education in everyday life, family, does research throughout the industry. Psychology is the study of evolution and its changes that is the purpose of this article. It is also discovering how psychology can be expressed through interpreted as a concept of scholarship. According to Heavikast, evolutionary processes are involved in the development of human learning in physical development, intellectual development, mental development, moral development, social development. Golbok also said that students cultivate personality traits and cultivate merits, in my opinion, moral development is the virtue of students. He says that it is not only about cultivating but also about creating a good society. Thus, learning took place in human development from birth to death. Various psychologists have researched and revealed that is coming you can find out through this article.

திறவுச்சொற்கள் (Keywords)

மனித வளர்ச்சி, கற்றல் உளவியல், சைக்காலஜி, மனவெழுச்சி வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, சமூக வளர்ச்சி, கற்றல் பண்புகள், சமுதாய அன்பு, இரக்கம், பிரிவு, பாராட்டு, ஹைப்போதாலமஸ், நுண்ணறிவு, உற்றுநோக்கல், தனியாள் வேற்றுமை, Personality, genetics, behaviors, adolescence adulthood, parenthood, psychology, sociology, economics, anthropology, ethics, social, environment, authority, persuasion.

முன்னுரை

தற்போதைய இயந்திர வாழ்க்கையில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பாதிக்கப்படும் ஒரே கருத்து மன உளைச்சல். அதற்கான காரணங்களைக் கண்டறிதல், இதைக் குணமாக்குதல் பற்றிய படிப்புதான் உளவியல் (psychology) எனப்படும். உளவியல் எனும் சைக்காலஜி துறையானது மனிதனுடைய மனதையும், நடத்தையையும் பற்றிப் படிக்கும் படிப்பாகும். இந்தத் துறையில் வல்லவர்கள் சைக்காலஜிஸ்ட் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தனிமனிதனின் புலன் உணர்வு அறிவாற்றல், செயல்திறன், மன அழுத்தம், ஆளுமை, நடத்தை ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து உரிய தீர்வு அளிக்கின்றனர். உளவியல் சார்ந்த அறிவானது அன்றாட வாழ்வில் உள்ள கல்வி, குடும்பம், தொழில் உள்ளிட்டவைகளைப் பற்றி முழுவதும் ஆராய்ச்சி செய்கிறது. மேலும் அவற்றால் ஏற்படும் நன்மைகள், தீமைகள், அதற்கான தீர்வுகள், மேலும் மனித வளர்ச்சியில் ஏற்படும் உடல் மற்றும் உள்ள வளர்ச்சிகள், இவற்றில் ஏற்படும் மாற்றங்களைக் கற்றலாக, உளவியல் ரீதியில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மனித வளர்ச்சி

மனிதன் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கின்றான். அந்த மாற்றம் தான் மனிதனின் வளர்ச்சி எனப்படும். கல்வியானது தற்போது உடல் உள்ள வளர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது, அறிவு மனவெழுச்சி உடலியக்க வளர்ச்சி ஆகியவற்றின் வளர்ச்சியை ஒரு தனிமனிதனுடைய முழு வளர்ச்சியாகக் கொள்ளலாம். மனித வளர்ச்சிசார் செயல்கள் என்பவை தனி மனிதனிலும் சமூகத்திலும் ஏற்படக்கூடிய

பொதுவான செயலாகும். "**ஹவிகொர்ஸ்ட்**" என்பவரது கருத்துப்படி ஒருவனுடைய வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் அல்லது வயதில் வளர்ச்சிசார் செயல்கள் ஏற்படுகின்றன. (ஆ.மீனாட்சிசுந்தரம், முற்போக்குக் கல்வி உளவியல், ப.23) இச்செயல்கள் வெற்றிகரமாக இருக்குமாயின் மகிழ்ச்சியையும் பின்னர் வரப்போகும் செயல்களில் வெற்றியையும் அளிப்பதாகும். மனித வளர்ச்சிசார் செயல்கள் பல்வேறு நிலைகளில் நடைபெறுகின்றன. அவை உடல்வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, சமூகவளர்ச்சி என வகைப்படுத்தலாம்.

உடல்வளர்ச்சி

உடலில் உள்ள உட்புற வெளிப்புற உறுப்புகளின் வளர்ச்சியே உடல் வளர்ச்சியாகும், நல்ல உடல் வளர்ச்சியும் உடல் நலனுமே அறிவு வளர்ச்சி, ஒழுக்கவளர்ச்சி, மனவெழுச்சியின் வளர்ச்சிக்கு அடிப்படையாகும். குழந்தைப் பருவத்தில் முதல் இரண்டு ஆண்டுகளில் அதன் வளர்ச்சி அதிகமாக இருக்கும். முதல் ஆண்டில் 50 சதவீதமும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் 70 சதவீதமும் அதன் வளர்ச்சி இருக்கும். இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அதன் வேகம் குறைகிறது. பதினோரு வயது வரை பையனும், அதன் பின் (அதாவது 12 அல்லது 13 வயதுக்குப் பின்) பெண்களும்தான் வேகமாக வளர்கிறார்கள், எடையிலும் கூடுகிறார்கள். உடல் வளர்ச்சியும் உடலியக்க வளர்ச்சியும் (Motor Development) இணைந்தவை நடப்பது, ஓடுவது, கண் அசைவு, தலைஅசைவு, எல்லாம் உடலியக்க வளர்ச்சியைச் சார்ந்தவை, தசை, நரம்பு இயக்கங்களைக் கட்டுப்படுத்துவதும் இதில் அடங்கும் உடலியக்க வளர்ச்சியின் முதிர்ச்சி உடல்வளர்ச்சிக்கு மிகவும் தேவையான ஒன்றாகும். உடலியக்க வளர்ச்சி ஆண், பெண் இரு பாலருக்குமிடையே மிகுந்த வேறுபாடு உடையது. ஒரு சராசரிப் பையன் வலிமை, வேகம் போன்ற உடலியக்கங்களில் ஒரு சராசரிப் பெண்ணைவிட மேலாக இருக்கிறான். குரல், பசி ஆகியவற்றிலும் வேறுபடுகிறான். குழந்தையின் வளர்ச்சி நிலை அதன் நடத்தையிலும் முக்கிய விளைவுகளை ஏற்படுத்துகிறது. நல்ல உடல் நலத்தோடு இருக்கும்போது அதனுடைய செயல்களும் நல்ல மாற்றம் பெறுகின்றன.

அறிவுவளர்ச்சி

அறிவு வளர்ச்சி குழந்தையின் ஆரம்ப காலத்திலேயே காட்சித்திறன் மூலமாக வரளத்தொடங்கியப் பின்னர் கற்பனை, மொழித்திறன், நினைவாற்றல் போன்றவை மூலம் முழுமையடைகின்றது. உள்ளத்திறன்கள் பதினைந்து முதல் பதினேழாம் வயதிற்குள் உச்சகட்ட வளர்ச்சியைப் பெற்றுவிடுகின்றன. "**தர்ஸ்டன்**" என்பார் அறிவு வளர்ச்சியானது பல்வேறு வயதில் முதிர்ச்சியடைகின்றது என்று கூறுகின்றார். (மேலது, ப.25) முதன்மையான ஏழு உள்ளத்திறன்களில் புலன் காட்சி வேகம் முதலில் முதிர்ச்சியடைகின்றது. இடம் பற்றிய அறிவு, பகுத்தறிவு போன்றவை பதினான்காம் வயதில் முதிர்கின்றன. சொல்லாற்றலும் செறிவும் இறுதியாகவும் முதிர்ச்சியடைகின்றன. தூரம், இடம் போன்றவை பற்றிய அறிவு ஆரம்பத்திலும் எண், காலம், காரணகாரியம் போன்றவை பற்றிய அறிவு காலத்தின் அடிப்படையில் வளர்கின்றன. மரபுரிமையானது அறிவு வளர்ச்சிக்கு எல்லைக்கோடு அமைத்துவிடுகிறது. பள்ளிகள் மாணவரிடம் பொதிந்து கிடக்கும் ஆற்றலைக் குறிப்பாக சமூக பொருளாதார ரீதியாக பின் தங்கியிருக்கும் மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் அளவிற்குப் பக்குவமான சூழ்நிலையை வழங்க வேண்டும். கற்பிக்கும் முறை, புரிந்து கொள்ளும் ஆற்றல், சிந்திக்கும் ஆற்றல், பகுத்தறியும் ஆற்றல் இவைகளை வளர்க்கும் வகையில் அமையவேண்டும் என்று. "**தர்ஸ்டன்**" கூறுகின்றார்.

நல்லொழுக்க வளர்ச்சி

ஒழுக்கம் ஒருவனுடைய அறப்பற்றுகளின் தன்மையையும் குறிப்பாக அவனுடைய தன்மதிப்பையும் பொறுத்தே அமைகின்றது. அறப்பண்புகளின் அடிப்படையில்தான் ஒருவனது ஆளுமை personality சிறப்பாக அமையவேண்டும். சமுதாயத்தில் கல்வி ஆற்றும் பணிகளுள் சிறப்பானது நல்லொழுக்கம் பெறுதல் ஆகும். நல்லொழுக்கம் என்பது அறப்பற்றுகளையும், நற்பண்புகளையும் உள்ளடக்கியதாகும். இவ்வொழுக்கம் குழந்தையின் பிறவியிலேயே தோன்றிவிடுவதில்லை. அதற்கு மாறாகப் பயிற்சியினால் ஒழுக்கம் உருவாகின்றது. குழந்தை வளரும் சூழலும், வளர்க்கப்படும் முறையும் தான் குழந்தையின் ஒழுக்கத்தை உருவாகின்றன என்று பியாஜே கூறுகின்றார்.

பியாஜேயின் நல்லொழுக்க வளர்ச்சிக் கோட்பாடு

பியாஜே, ஒரு குழந்தையின் ஒழுக்க வளர்ச்சியில் ஒரு புதிய கருத்தைக் கூறுகிறார். பியாஜேயின் பார்வையில் ஒரு குழந்தையானது தன் ஆரம்ப நிலையில் சுயநலம் மிகுந்ததாகவும், பின் ஒழுக்க மதிப்புகளைப் பற்றித் தெரிந்த பிறகு சமுதாய சிந்தனை உள்ள குழந்தையாகவும், வளர்கிறது. ஒழுக்க வளர்ச்சியானது, ஒருவர் தனகக்கென வைத்திருக்கும் சுயநலமுள்ள மனநிலையை மாற்றி, மாறி வரும் சமூக சூழலுக்கேற்பத் தன்னை மாற்றிக்கொள்ளும் மனநிலையை வளர்க்கிறது என்று பியாஜே கூறுகின்றார். (மேலது, ப. 26)

கோல்பாகின் நல்லொழுக்க வளர்ச்சிக் கோட்பாடு

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த "லாரன்ஸ் கோல்பா" (Lawrence Kohlberg) என்பவர் நல்லொழுக்க வளர்ச்சியானது குழந்தைப் பருவத்திலிருந்தே தொடங்கி விடுகிறது என்று குறிப்பிடுகின்றார். பல பண்பாடுகளைச் சேர்ந்த குழந்தைகளின் நடத்தைகளை ஆராய்ந்து நல்லொழுக்க வளர்ச்சிக் கோட்பாட்டை உருவாக்கினார். ஒருவருக்கான நியாய உணர்வு வளர்ச்சியைத்தான் இவர் நல்லொழுக்க வளர்ச்சி எனக் குறிப்பிடுகின்றார்.

நல்லொழுக்கத்தை வளர்க்கும் முறைகள்

மாணவர்களிடம் அறவொழுக்கம் வளர வேண்டுமாயின் அதற்குக் கூட்டு முயற்சி தேவை. ஆசிரியர் நற்பண்புகளைப் பெற்று மாணவரிடம் ஊக்கம் கொடுப்பாரேயானால் மாணவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாக உருவாகமுடியும். மாணவர்களிடம் அறப்பற்றுக்களை வளர்க்க ஒழுக்கமுடைய பெரியோர்களின் உறவும், நற்பண்புகளைப் போதிக்கும் நூல்களும் பெருமளவில் துணைபுரியலாம். பள்ளிகளில் மாணவர்கட்கு ஒழுக்க போதனையானது அப்பண்புகளில் செயல்பாடுகளால் போதிக்கப்பட்டு பல்வேறு வாய்ப்புகள் மூலமும், கூட்டுவாழ்க்கை, சமூகசேவை, குடிமைப் பயிற்சி முகாம்கள் போன்றவை மூலமும் வழங்கப்பட வேண்டும். நற்பண்புகளை வளர்ப்பதில் பெற்றோரும் குடும்பமும் பெரும்பங்கேற்கின்றனர். நல்லொழுக்க வளர்ச்சிமூலம் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கலாம் எனவும், மனித வளர்ச்சி கற்றலில் நல்லொழுக்க வளர்ச்சி மிக முக்கியத்துவம் பெற்ற ஒன்று என்பது உளவியல் அறிஞர்களின் கருத்தாகும் என்று கூறப்படுகின்றது.

மனவெழுச்சி வளர்ச்சி

உணர்ச்சிகள், மனக்கிளா'ச்சிகள், உடலியல் எதிர்ச்செயல்கள் ஆகியவற்றின் இணைப்பே மனவெழுச்சி ஆகும். உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலையே மனவெழுச்சியாகும்.

நேர்றை மனவெழுச்சிகள்

மனவெழுச்சிகளில், ஊக்கம் தரக்கூடியவை, சமூகத்தால் ஏற்கப்படக்கூடியவை நேர்மறை மனவெழுச்சிகளாகும். இவற்றால் தனிநபருக்கும், சமூதாயத்திற்கும், மனநிறைவும், ஊக்கமும் ஏற்படுமே தவிர இழப்பு எதுவுமில்லை. உதாரணமாக மகிழ்ச்சி, உற்சாகம், பெருமிதம், அன்பு, இரக்கம், பரிவு, பாராட்டு, மதித்தல் போன்றன நோ'மறை மனவெழுச்சிகளாகும் (மேலது, ப. 31).

எதிர்மறை மனவெழுச்சிகள்

விரும்பத்தகாத, பிறர் மனதைப் புண்படுத்தும், தன் மனநிலையையும், சமுதாயத்தில் வாழும் மக்களின் மனநிலை இவற்றைப் பாதிக்கும் மனவெழுச்சிகள் எதிர்மறை மனவெழுச்சிகளாகும். இதனால் மன உளைச்சல் ஏற்படும். சமூக உறவு பாதிக்கப்படும், உதாரணமாக மகிழ்ச்சியின்மை, சினம், அச்சம், துயரம் வலி, அருவருப்பு, குற்ற உணர்வு, அவமானம், பொறாமை, இழிவுபடுத்துதல், புறக்கணித்தல் போன்றவை எதிர்மறை மனவெழுச்சிகளாகும். (மேலது, ப. 31)

வாழ்வில் மனவெழுச்சியின் பங்கு

மூளையின் ஹைப்போதலாமஸ் பகுதியிலிருந்து நரம்புத்துடிப்புகள் பெருமூளைக்குச் சென்று உணர்ச்சி அனுபவங்களை உண்டாக்குகின்றன. கீழே செல்லும் துடிப்புகள் நரம்புத் தொகுப்பின் ஸிம்பத்தடிக் பிரிவைத் தூண்டி, அதன் மூலம் பல உடலியக்கங்களையும், உடல்நிலையில் மாறுதல்களையும் ஏற்படுத்துக்கின்றன. தனிமனிதனின் நடத்தையைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றன. பிறக்கும் பொழுதே மனவெழுச்சிகள் உள்ளன. அவை அடிப்படை மனவெழுச்சிகள் எனப்படுகின்றன. சினம், அச்சம், அன்பு மூன்றும் அடிப்படை மனவெழுச்சிகளென்று **வாட்சன்** குறிப்பிடுகின்றார். (மேலது, ப. 33)

மனவெழுச்சி முதிர்ச்சியின் பண்புகள்

ஒரு மனிதனின் தேவைப்படும் நேரங்களில் தேவைப்படும் நேர் (அல்லது) எதிர்மறை மனவெழுச்சிகளை வெளிப்படுத்தப் பக்குவம் பெற்றிருக்கும் நிலையைத் தான் மனெவெழுச்சி முதிர்ச்சி என்றழைக்கின்றோம். ஒருவரின் மனவெழுச்சி வளர்ச்சியானது கீழே தரப்பட்டிருக்கும் பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

- சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் வகையில் மனவெழுச்சி இருக்கவேண்டும்.
- ஒருவர் திடீரென உணர்ச்சி வயப்படாத நிலையையும், அதனைக் கட்டுப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்
- உரிய நேரத்தில், உரிய இடத்தில் மனவெழுச்சிகளை வெளிபடுத்தும் திறன் பெற்றிருத்தல் வேண்டும்.
- பிறரோடு விரும்பத்தக்க சமூக உறவுநிலை வைத்திருத்தல் வேண்டும்.
- சிந்தித்து ஆராய்ந்து முடிவுகள் எடுக்கும் பண்பினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- போதுமான அளவு தற்கருத்து மற்றும் சுய மதிப்பு பெற்றவராயிருத்தல் வேண்டும். மேற்கூறியவை மனவெழுச்சி முதிர்ச்சியின் பண்புகளாகும் என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

மேற்கூறிய மனவெழுச்சி முதிர்ச்சியின் பண்புகளாக W.N.கெல்லாக் மற்றும் L.A.கெல்லாக் என்ற உளவியல் அறிஞர்கள் இவற்றைக் கூறுகின்றனர்.

மனவெழுச்சி நுண்ணறிவுப் பற்றி ஜாக்மேயர் மற்றும் பீட்டர் சலோவேயின் கருத்தாக்கங்கள்

மனவெழுச்சியை ஆளும் திறமையே மனவெழுச்சி நுண்ணறிவு என்று அழைக்கப்படுகிறது. தீவிரமாக மனவெழுச்சியை எல்லா நிலைகளிலும் ஒரே மாதிரி வெளியிடாமல், அம்மனவெழுச்சியைத் தோற்றுவித்த காரணி, சூழ்நிலை ஆகியவற்றிற்கு ஏற்ற அளவிலேயே மனவெழுச்சிகள் வெளியிடப்படுகின்றன. மனவெழுச்சியை ஒத்திப்போடவும் கட்டுப்படுத்தவும் மனவெழுச்சி நுண்ணறிவுடையோரால் மட்டுமே முடியும். மேலும் நெருக்கடி நிலையிலும் அமைதியுடன் நடந்துகொள்ளும் ஆற்றலும் உள்ளது. பிறருடன் மகிழ்ச்சியாக இருப்பது ஒரு திறன். தனக்கும் பிறருக்கும் பயன்படும் வகையில் ஓய்வு நேரத்தைச் செலவிடுதல், பிறருக்கு உதவுதல் தன் பிழைகளின்று உண்மையை உணருதல், போன்ற நற்பண்புகள் மனவெழுச்சி நுண்ணறிவின் வெளிப்பாடாகும். நுண்ணறிவு ஈவைப் பயன்படுத்தி நுண்ணறிவை அளவீடு செய்வதில் 1990 ஆண்டுவாக்கில் சில சர்ச்சைகள் எழுந்தன. அமெரிக்க பல்கலைக்கழகப் பேராசிரியர்களான **ஜாக்மேயர்** மற்றும் **மீட்டர்சலோவே** ஆகியோர் மனவெழுச்சி நுண்ணறிவ ஈவு என்ற பதங்களைப் பயன்படுத்தினர். மனவெழுச்சியைச் சிந்தனையோடு இணைத்து உணர்ந்து அதனைப் புரிந்து மேலாண்மை செய்வதற்கான மனவெழுச்சியுடன் கூடிய ஆராய்ந்தறியும் திறனே மனவெழுச்சி நுண்ணறிவு என்று **ஜாக்மேயர்** மற்றும் **பீட்டர் சலோவே** கூறுகின்றனர். **(**மேலது, ப. 34)

மனவெழுச்சி நுண்ணறிவின் முக்கியத்துவம்

- மனவெழுச்சியுடன் கூடிய நுண்ணறிவு பெற்றவர் வாழ்க்கையில் வெற்றி பெற்றிருக்கின்றனர்.
- மாணவர்களிடம் மனவெழுச்சி நுண்ணறிவை வளர்த்து அவர்களின் வாழ்க்கையை ஆரோகியமானதாகவும், மகிழ்வுள்ளதாகவும் மாற்ற இயலும்.
- மனவெழுச்சி நுண்ணறிவு சவால் நிறைந்த சூழல்களை வெற்றிகரமாகச் சந்திக்க மிகவும் பயன்படுகிறது.
- பிறர் மனவெழுச்சிகளைப் புரிந்து அவர்களுடன் மனித உறவுகளை மேம்படுத்தவும், தன் மனவெழுச்சிகளைப் புரிந்து அவற்றை மேலாண்மை செய்யவும் மனவெழுச்சி நுண்ணறிவு பயன்படுகிறது.
- ஒருவரின் வாழ்க்கை வெற்றிக்கு 20 நுண்ணறிவு ஈவு உதவுகின்றது. என்றால் மீதி 80 சதவீத உதவி, மனவெழுச்சி நுண்ணறிவு ஈவு சமூக அந்தஸ்து மற்றும் கடும் உழைப்பு போன்றவற்றால் கிடைப்பதாக உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர் மற்றும் கடும் உழைப்பு போன்றவற்றால் கிடைப்பதாக உளவியல் அறிஞரான எஸ்.ஹெயின் கூறுகின்றார்.

சமூக வளர்ச்சி

சமூக வளர்ச்சி என்பது சமுதாயத்தில் ஒரு தனிப்பட்ட மனிதனின் வளர்ச்சியைக் குறிக்கும். அத்தகைய வளர்ச்சியின் மூலம் அவன் சமுதாயத்தில் ஒரு பயனுள்ள உறுப்பினராகவும், அவனைச்சுற்றியுள்ள மனிதர்களிடமும் ஒரு நல்ல மதிப்பினையும் பெற முடியும். தான் வாழும் சமுதாயத்திலும், தன்னைச்சுற்றியுள்ள மக்களிடமும் தனிமனிதன் தன்னுடைய மதிப்பினையும் வளர்த்துக் கொள்வதே சமூகவளர்ச்சியாகும். ஒரு மனிதனின் சமூக

நடத்தையில் விரும்பத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் உள்ள கொள்கைகளில் ஏற்படக் கூடிய வளர்ச்சியே சமூக வளர்ச்சி என்கிறோம். வாழும் சூழ்நிலைகளுக்கும் உயிரிகளுக்கும் இடையே உள்ள தன்மையைப் பொறுத்தே அவைகளின் சமூகவளர்ச்சி அமைகின்றது. சூழ்நிலைதான் இதில் பெரும்பங்கேற்கிறது. மனவெழுச்சிக்கும் அறிவு, மூளை, உடல் ஆகியவற்றின் வளர்ச்சிக்குச் சமூகச்சூழலே முக்கியக் காரணியாக அமைகின்றது. சமூக இயல்பினராக்குதல் (socialization) என்னும் பண்பு குழந்தையின் பிறப்பிலிருந்துதான் தொடர்கின்றது. மாறாக மனவெழுச்சியைக் கருவிலிருந்தே உருவாக்க முடியும். என்.எஸ்.பவர்ஸ் (F.S.Powers) என்பாரது வரையறையில் சமூகவளர்ச்சி என்பது நல்வழிப்படுத்தப்பட்ட முன்னேற்றகரமான வளர்ச்சியாகும் என்று கூறுகின்றார். (மேலது, ப. 36)

கற்றல் உளவியல்

ஒருவரின் நடத்தையில் ஏற்படும் மாற்றமே கற்றல் எனப்படும். உளவியல் ரீதியில் கற்றல் என்பது தூண்டலுக்கேற்ப பயன்படுவதாகும். கேட்ஸ் (Gates) என்பவர் அனுபவம், பயிற்சி, ஆகியவற்றின் மூலம் எழும் நடத்தை மாற்றமே கற்றல் எனப்படும் என்கிறார். (மேலது, ப. 43) மேலும் ஒரு தனிமனிதன் பொதுவாக வாழ்க்கையில் பெறக்கூடிய பழக்கவழக்கங்கள், அறிவு, மனப்பான்மை ஆகியவற்றைத் தரக்கூடிய ஒரு செயல்முறையே கற்றல் எனப்படும் என்று ஜி.டி.போயஸ் (G.D.Boaz) கூறுகிறார். (மேலது, ப. 43) பிற உயிர்களைக் காட்டிலும் தம்மை உயர்வாகக் காட்டக்கூடியத் தமது அனுபவத்திலிருந்து பயனடையச் செய்யும் திறமையே கற்றல் என மாஸ்கோவிட்ஸ் (Moscowitaz), ஆர்கல் (Orgal) என இருவரும் கருதுகின்றனர். மேற்கூறிய உளவியல் அறிஞர்கள் கற்றலுக்கான வரையறையைக் கொடுக்கின்றனர். (மேலது, ப. 44)

கற்றிலின் பண்புகள்

நடத்தையில் ஏற்படும் கற்றலானது வாழ்நாள் முழுவதும் நிகழ்ந்துகொண்டே இருக்கும். கற்றல் என்பது ஒரு அறிவு நுட்பம், பல அனுபவங்களை ஒழுங்கு படுத்துவது, புதிதாக ஒன்றைச் செய்து கொண்டே இருக்கக்கூடியது. இதுவே கற்றலின் பண்புகளாகும்.

கற்றலின் தன்மை

ஒரு மாணவனுக்குத் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கான விருப்பம் என்பது ஊக்கம் Motive ஆகும். பாடத்தில் தேர்ச்சி அமைந்தால் அது இலக்கு (Goal) என்பதாகும். பாடத்திட்டத்தைத் தவிர வேறு களைப்பு, கற்றலின் வசதிக்குறைவு, மற்ற செயல்களில் விருப்பம் இவைகள் தடைகள் (Burriers) ஆகும். இவற்றிற்கான அட்டவணை விளக்கம் கீழே உள்ளது. (மேலது, ப. 45)

தேர்வில் தேர்ச்சி பெறுதல்	களைப்பு வசதிக்குறைவு	பாடத்தைக் கற்றல்
(ஊக்கம்)	(தடைகள்)	(இலக்கு)

மனித வாழ்வில் கற்றலின் முக்கியத்துவம்

மனித நடத்தைக்கு அடிப்படையாக அமைவது கற்றலே. நாம் பேசும்மொழி, நமது பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மனப்பான்மைகள், இலட்சியங்கள், கொள்கைகள், ஆளுமைக் குணங்கள், புலன்காட்சி ஆகிய அனைத்திலும் கற்றலானது முக்கியப் பங்கு வகிக்கிறது. சுவாசித்தல், கண்சிமிட்டுதல், தாயிடம் பால் அருந்துதல் கால் கைகைளை உதைத்தல், ஒலியெழுப்புதல், போன்ற மிகச்சில இயல்பூக்கங்களைக் கொண்டு பிறக்கும்

மனிதக் குழந்தையானது, கற்றலின் காணரமாகவே, தனது சுற்றுச்சூழலைக் கையாள்வதில் மேம்பட்ட நடத்தையை வெளிப்படுத்தமுடிகிறது. இதன் காரணமாகவே அக்குழந்தைத் தனித்து இயங்குவதிலும் சுயசார்புடையதாக மாறுவதிலும் வெற்றி பெறுகிறது. எனவே கற்றல் ஆற்றலால் மனிதக் குழந்தைப் பிற உயிரிகளை விடச் சிறப்புற்று வலிமை மிக்கதாகத் திகழ முடிகிறது. பேச்சு, சிரிப்பு, நுண்திறன்கள், கலைவளர்ச்சி, உயர்வகை பொழுதுபோக்கில் நாட்டம் போன்றவை மனிதர்களுக்கு மட்டுமே உரியவை. இவற்றைக் கற்றலின் காரணமாக மனிதக் குழந்தைத் தனதாக்கிக் கொள்கின்றது. (பேராசிரியர் கி.நாகராஜன், கற்றல் மனிதவளர்ச்சி தொடர்பான உளவியல், நான்காம் பதிப்பு ஜீலை 2012, இராம் பதிப்பகம் சென்னை – 93 (பக் – 178)

கல்வியியலில் கற்றல் கோட்பாடுகளின் முக்கியத்துவம்

கற்றல் என்பது பல நிலைகளில் பல வகைகளில் நிகழ்கிறது என்ற உண்மையை, பல்வேறு கற்றல் கோட்பாடுகள் நமக்கு உணர்த்துகின்றன. கற்கும் விஷயத்தைப் பொறுத்தும், கற்பவரின் நுண்ணறிவு, முந்தை அனுபவங்கள் ஆகியவற்றைப் பொறுத்தும் கற்கும் முறைகள் அமைகின்றன. பல்வேறு கோட்பாடுகளை ஆசிரியர் அறிந்திருப்பதன் மூலம், ஒவ்வொரு வகுப்பு மாணவர்களின் கற்றல் ஆற்றலுக்கு ஏற்ப, கற்பிக்கும் விஷயங்களுக்கு மிகப் பொருத்தமான கற்பித்தல் முறையைத் தேர்ந்து செயல்படுவாரேயானால், வகுப்பறைக் கற்றல் – கற்பித்தல் மேம்பாடு அடையும் – மாணவர்கள் அனைவரும் ஆர்வத்துடன் கற்றலில் ஈடுபட்டு தங்கள் முழுத்திறனையும் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பாக அமையும்.

காக்னேயின் கற்றல் கோட்பாடு (Gagne's Theory of hierarchical learning)

இராபர்ட் காக்னேயின் கோட்பாடுபடி எல்லாவகைக் கற்றல்களும் ஒரே மாதிரியானவை அல்ல. எளிய கற்றலிலிருந்து சிக்கலான பிரச்சனைகளையும் தீர்க்க கற்றுக் கொள்வது வரை கற்றலில் எட்டு வகைகள் உள்ளன. அவை

1. குறியீடுகள் அல்லது அடையாளங்களைக் கற்பது (signal learning)
2. தூண்டல் – துலங்கல் இணைப்பைக் கற்றல் (S.R Learnig)
3. உடலியக்கத் தொடர் இணைப்பு (motor Chuining)
4. சொற்கள் இணைத்தலைக் கற்றல் (verbal Chuining)
5. வேற்றுமையறிதல் (Discriminative Learning)
6. பொதுமைக் கருத்துகளைக் கற்றல் (Concepl Learning)
7. விதியைக் கற்றல் (Rule Learning)
8. சிக்கல் (அ) பிரச்சனையைத் தீர்க்க கற்றல் (Problem Solving)

எனக் காக்னேயின் கற்றல் கோட்பாடானது, கீழ்நிலைக் கற்றலில் இருந்து, உயர்நிலைக் கற்றலை அடைய முயற்சிப்பதே ஆகும் என்று வலியுறுத்துகின்றது.

கற்றலில் தனியாள் வேறுபாடுகள்

கற்றல் திறன் அனைத்து மாணவர்களிடமும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. ஆர்வம், புலன்காட்சி, மனப்பான்மை, நுண்ணறிவு, ஆளுமை போன்றவை ஆளுக்கு ஆள் மாறுபடுவதைப் போன்றே கற்றல் திறனும் ஆளாளுக்கு மாறுபடுகிறது. கற்றலானது, ஆர்வம், நுண்ணறிவு, ஊக்கம் (Motivation) ஆகியவற்றின் அடிப்படையில் அமைவதால் கற்றல்திறனானது ஆளுக்கு ஆள் பெரிதும் மாறுபட்டு அமைகிறது.

ஒருவன் ஆர்வத்துடன் கற்றுக் கொள்கிறான். ஆனால் மற்றொருவன் கற்பதற்கு அதிக நேரம் தேவைப்படுபவனாகவும் ஆர்வமின்றியும் கற்றுக்கொள்கிறான். நுண்ணறிவு மிக்கவன் சுயசிந்தனையைப் பயன்படுத்திக் கற்கிறான். நுண்ணறிவில் குறைந்தவன்

முயன்று தவறிக் கற்றல் முறையையே அதிகம் பயன்படுத்துகிறான். ஊக்கம் மிகுந்தவன் கவனத்துடன் கற்பதால் கடினமான பாடப்பொருளையும் கற்றலில் அதிகம் கவனம் செலுத்துவதில்லை, அவனால் கடினமான பாடப்பகுதிகளைக் கற்க முடிவதில்லை. ஊக்கம் குறைந்தவர்கள் கற்பதற்கான தொடர் முயற்சிகளிலும் ஈடுபடுவதில்லை, சுருங்கக் கூறின் கற்றலில் தனியாள் வேறுபாடு பெரிய அளவில் இடம் பெற்றுள்ளது. (மேலது, ப. 212).

வகுப்பறைக் கற்றலின் முக்கியத்துவம்

யார் கற்கிறார்கள்?

மாணவர்களின் வயது, திறன், நாட்டம் மற்றும் தகுதிக்கேற்றவாறு கற்கிறார்கள், வகுப்பறைக் கற்றலானது மாணவர்களுக்கு ஏற்றவாறு அமைகிறது.

யாரிடமிருந்து கற்றல் பெறப்படுகிறது?

ஆசிரியரிடமிருந்து கற்றலானது பெறப்படுகிறது. கற்றல் மற்றும் கற்பித்தலில் ஆசிரியர் மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும், முன்மாதிரியாகவும் திகழ்கிறார்.

ஏன் கற்க வேண்டும்?

பழங்காலத்தைப் போன்று வாசித்தல், எழுதுதல், கணக்கீடு செய்தல் இவற்றை மட்டும் அடிப்படையாக கொண்டது அல்ல. வாசித்தல், எழுதுதல், கணக்கிடுதல், உரிமை மற்றும் கடமைகள், இவற்றிற்கு இடையே உள்ள தொடர்புகள் பொழுதுபோக்கு இவற்றை அப்படிடையாகக் கொண்டு கற்றல் நடைப்பெறுகின்றது.

எப்படி கற்பது?

கற்றலில் வெவ்வேறு கற்பித்தல் முறைகள் உள்ளது உதாரணமாக, பார்த்துக் கற்றல், மனப்பாடம் செய்வதின் மூலம் கற்றல், தூண்டலின் மூலம் கற்றல் முதலியனவாகும்.

கற்றல் எப்போது நடைபெறுகிறது?

பல்வேறு சூழ்நிலைகளில் தூண்டுதல்களால் கற்றல் நடைபெறுகின்றது.

கற்றல் எங்கே நடைபெறுகிறது?

கல்லூரி மற்றும் பள்ளிகளில் மட்டுமே கற்றலானது நடைபெறுவதில்லை, வகுப்பறையில், விளையாடும் போது, வெளியிடங்களில், விவாதங்களில், உறவினர்கள் மத்தியில் போன்ற பல இடங்களில் கற்றல் நடைபெறுகின்றது. மேற்கூறிய கற்றலில் மாணவர்களுக்குக் கற்றலானது எங்கு? யார்? எப்படி? எங்கே? எப்போது? கற்கப்படுகிறது என்பதை கற்றலின் மூலம் அறியப்படுகிறது.

பாண்டுராவின் உற்றுநோக்கிக் கற்றல் மற்றும் சமூககற்றல்

பாண்டுரா நான்கு நிலைகளில் கற்றல் இயக்கத்தை விவரித்துள்ளார்.

கவன ஈர்த்தல் (Alternate Process)

கற்றலில் உற்று நோக்குதல் ஒரு முக்கியப் பங்கை அளிக்கிறது உற்று நோக்குதல் செயல்பட கவன ஈர்த்தல் உறுதுணையாக இருக்கிறது.

தக்க வைத்தல் (Retention Process)

உற்று நோக்குதல் செய்யப்பட்ட காட்சிகள் நினைவாற்றலில் தக்க வைக்கப்படுகிறது. காட்சி மற்றும் சொல் மூலமாக நினைவாற்றலில் தக்க வைத்தல் நேரிடுகிறது.

உருவாக்கு முறை (Production Process)

அறிதல், மற்றும் மறுபார்த்தல் செய்யப்படும்போது தக்க வைத்தல் செம்மையாக நடைபெறுகிறது சுய கண்டறிதல் மற்றும் சுயதிருத்தம் மற்றும் தக்க வைக்கும் விவரங்களை சரிபார்க்கப் பயன்படுகிறது.

ஆர்வமூட்டல் முறை (Motivation Process)

பாண்டுரா, ஆர்வமூட்டல் என்பது ஒரு வலுவூட்டியாகவே செயல்படுகின்றது என்பதைக் கண்டறிந்தார். மற்றும் வகுப்பறைச் சூழல் ஒரு முக்கியப் பங்கை கற்றலில் வகிக்கிறது. உற்றுநோக்குதல் திறன்களை மாணவர்களிடையே வளர்க்க வேண்டும். மாணவர்களிடையே கூட்டுறவு கற்றல் மற்றும் ஒன்றிணைந்து கற்றல் மற்றும் குழு கற்றல் முறைகளை உருவாக்க வேண்டும் என்று பாண்டுரா கற்றல் முறைகளை விளக்கிக் கூறுகின்றார். இவர்மட்டுமல்லாது கற்றல் கோட்பாடுகளையும் கற்றல் முறைகளையும் தார்ண்டைக், பாவ்லோவ், ஸ்கின்னர், கெஸ்டாப்ட், குர்ட், டால்மன் போன்ற எண்ணற்ற உளவியல் அறிஞர்கள் விளக்கமளித்துள்ளனர். (சு. மீனாட்சி சுந்தரம், முற்போக்கு கல்வி உளவியல், ப. 54)

முடிவுரை

ஒரு மனிதனின் மனித வளர்ச்சி செயல்பாடுகள் உளவியல் ரீதியாக ஆராய்ந்து அதனைக் கற்றல் மூலம் எவ்வாறு வெளிப்படுத்த முடியும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகவும், உளவியல் அறிஞர்களின் கருத்தாகவும் விளக்கப்படுகிறது. இக்கற்றலானது கற்றலுக்கு அடிப்படையாக இருக்கின்றது. ஹெவிகா'ஸ்ட் கூற்றுப்படி வளர்ச்சிசார் செயல்களானது மனித கற்றல் வளர்ச்சியில், உடல் வளர்ச்சி, அறிவுவளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, சமூக வளர்ச்சி இவற்றில் கற்றல் பெரிதும் பங்களிக்கிப்படுகின்றன என்று கூறுகிறார். பியாஜே, கோல்பா'க் போன்ற உளவியல் அறிஞர்கள் நல்லொழுக்க வளர்ச்சியைப்பற்றிக் கூறியுள்ளனர். நல்லொழுக்க வளர்ச்சியானது, மாணவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தி நற்பண்புகளை வளர்க்கின்றன. எனவும், கோல்பர்க் என்பாரது கருத்து, நல்லொழுக்க வளர்ச்சியானது மாணவர்களின் நற்பண்புகளை வளர்ப்பது மட்டுமல்லாமல் நல்ல சமுதாயத்தை உருவாக்குவதேயாகும் என்று கூறுகிறார். ஒருவனின் வாழ்வில் மனவெழுச்சியானது நேர்மறை மற்றும் எதிர்மறை நடத்தைகளால் கற்றலானது கட்டுப்படுத்தப்படுகின்றன எனவும் மனவெழுச்சி நுண்ணறிவு பற்றி ஜாக்கு மேயர், பீட்டர் சலோவே இருவரும் ஒருவனின் மனவெழுச்சி நுண்ணறிவானது சமூகச்சூழலில் தன் நடத்தையின் மூலம் நற்பண்புகளை வளர்த்து நுண்ணறிவைப் பெருக்கிக் கொள்ளமுடியும் என்று கூறுகின்றனர். நம் மனவெழுச்சியைக் கருவிலிருந்தே உருவாக்கமுடியும் என்று எப்.எஸ்.பவர்ஸ் கூறுகிறார். மனித வளர்ச்சியில் கற்றல் உளவியலானது பெரும்பங்கு வகிக்கிறது என்று கேட்ஸ், ஜி.டி.போயஸ், மாஸ்கோவிட்ஸ், ஆர்கல் போன்றோர் வரையறுத்துக் கூறுகின்றனர். மனித நடத்தைக்கு அடிப்படையாக இருப்பது ஒருவரின் மனவெழுச்சி முதிர்ச்சிப்பண்புகளாகும். இப்பண்புகள் கற்றலில் தனியாள் வேறுபாடுகளைக் கண்டறியப் பயன்படுகின்றன. காக்னே போன்றோர்கள் கற்றல் கோட்பாட்டுக்கான வரையறையையும் வரையறுத்துள்ளனர். மாணவர்களுக்குக் கற்றலானது எங்கு?, யார்?, எப்படி?, எங்கே?, எப்போது கற்கப்படுகிறது என்பதைக் கற்றலின் மூலம் வரையறுத்து வெளிப்படுத்தியுள்ளார் பாண்டுரா. இவ்வாறாக,

கற்றலானது மனித வளர்ச்சியில் பிறப்பு முதல் இறப்பு வரை நடந்தேறி வருகின்றது என்பதைப் பல்வேறு உளவியல் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

துணைநின்றவை

- மீனாட்சிசுந்தரம் சு., (முதற்பதிப்பு, பிப்ரவரி 2010), முற்போக்கு கல்வி உளவியல், திண்டுக்கல்: காவ்யமாலா பப்ளிஷர்ஸ்.
- நாகராஜன் கி., (நான்காம் பதிப்பு ஜூலை 2012), கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல், சென்னை: இராம் பதிப்பகம்.

****

மொழிப்பாடம் கற்பித்தலின் நோக்கம் IMPORTANCE OF LEARNING LANGUAGE

முனைவர் க. உமாமகேஸ்வரி | Dr. K. Umamaheswari

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு, கோயம்புத்தூர். அலைபேசி : 9677240403, uma061982@gmail.com, Orcid Id 0000-0003-4814-7661

ஆய்வுச்சுருக்கம்

வளர்கின்ற சமுதாயத்தின் வளர்ச்சிப்படியாக இருப்பது மொழி. ஒரு சமுதாயத்தின் வரலாறு, நாகரிகம், பண்பாடு, அரசியல் குறித்து அறிவதற்கு மொழி மிகவும் அவசியம். மொழியானது மாணவர்களின் அறிவை வளர்க்கவும், மாணவர்களின் அறிவு வளர்ச்சியின் மூலம் சமுதாயத்தை வளர்க்கவும், மாணவர்களின் நிலையை உயர்த்தவும், மாணவர்கள் செயல்படும் விதத்தை உணரவும், மாணவர்களின் செய்திப் பரிமாற்றத் திறனை உயர்த்தவும் மாணவர்கள் பிற நாடு, சமுதாயத்தோடு உறவு கொள்ளவும், மாணவர்கள் சமுதாயச் சாதனங்களான இலக்கியம், இலக்கணம், அறிவியல், கலை முதலியனவற்றை அறிந்து நயத்தை உணரவும் வழிவகுக்கும் ஒரு கருவியாக மொழி பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழை முதன்மொழியாகப் பயிற்றுவிக்கும்போது எந்த அளவுக்கு அவர்கள் மேற்கூறிய திறன்களையும் மொழிக்கூறுகளையும் பெற்றுள்ளார்கள் என்பதையும் இவற்றைக் கற்கும்போது அவர்களுக்கு என்னென்ன சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதனையும் அச்சிக்கல்களுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதனையும் இக்கட்டுரையில் காணலாம்.

Abstract

Language is essential for understanding the history of society, civilization, culture, and politics. Language is useful for improving their learning skills. Using this skill they can develop the society, elevate the status of the students, realize the way in which the students function, enhance the communication skills of the students, it helps them to share new ideas. Language is essential for the development of a developing society. Language is essential for understanding the history of a society, civilization, culture, and politics. In this review, we will see to what extent they have acquired the above skills and linguistics while teaching Tamil as

a first language and what problems they face while learning these, and how to solve the problems.

திறவுச்சொற்கள் (Keywords): மொழிப்பற்று - மொழிக்கல்வி கற்றல் கற்பித்தல் - மொழிப்பாடம் கற்பித்தலின் குறிக்கோள் - மொழி கற்றல் கற்பித்தலின் நோக்கங்கள் - மாணவர்களின் மொழிச் சிக்கல் - கிராமப்புறப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் - நகர்ப்புறப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல்.

முன்னுரை

மொழி என்பது மனித வரலாற்றோடு தொடர்புடையது. மனித இனம் தோன்றிய காலந்தொட்டே மொழியும் தோன்றியது எனலாம். ஒரு மனிதன் இன்னொரு மனிதனோடு தொடர்பு கொள்ள முயன்ற வேளையில் மொழி மிகவும் அவசியமாக இருந்தது. மனித உறவை வலுப்படுத்தும் ஒரு சாதனமாக மொழி அமைந்தது சிறப்பான அம்சமாகும். மொழியின் ஆரம்பம் சைகை அடிப்படையில் அமைந்தது. மனிதனால் உருவாக்கப்பட்ட ஒலிகள் கேட்பவர்களுடைய செவிப்புலனைத் தாக்குவதன் மூலம் உணரப்பட்ட வேளையில் அது பேச்சு மொழியாகவும் அப்பேச்சுமொழிக்குக் குறிப்பிட்ட வரிவடிவம் கொடுக்கப்பட்டபோது அது எழுத்துமொழியாகவும் கருதப்பட்டது.

மொழிப்பற்று

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் உண்டாவதற்கு மொழிப்படிப்பு மிகவும் இன்றியமையாதது. எல்லா மக்களும் தத்தம் தாய்மொழியைச் சிறப்பித்துப் பேசுதல் இயல்பெனினும், எம்மொழியும் பெறாத சிறப்பினைத் தமிழ்மொழிதான் பெற்றிருக்கின்றது. மொழியை இறையுடன் இயைபுபடுத்திப் பேசும் வழக்கம் நம் நாட்டில் தான் உண்டு.

கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து

பண்ணுறத் தெரிந்து ஆய்ந்தஇப் பசுந்தமிழ்

என்று தமிழ்மொழி போற்றப்படுகின்றது.

மொழிக்கல்வி என்பது மொழியைக் கற்றல், மொழியைக் கற்பித்தல், மொழியறிவைச் சோதித்தல் எனப் பல செயல்களை உள்ளடக்கி நிற்கின்ற தன்மையையுடையது. தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் என்பது தமிழ் இலக்கியத்தைக் கற்பித்தல், பாடப்பொருளைக் கற்பித்தல் என்றிருந்த நிலை மாறி, மொழி கற்பித்தல், மொழித்திறங்களைக் கற்பித்தல், மொழிக்கூறுகளைக் கற்பித்தல் என்னும் உண்மை நிலையினை உணரச் செய்துள்ளது.

மொழியானது மாணவர்களின் அறிவை வளர்க்கவும், மாணவர்களின் அறிவு வளர்ச்சியின் மூலம் சமுதாயத்தை வளர்க்கவும், மாணவர்களின் நிலையை உயர்த்தவும், மாணவர்கள் செயல்படும் விதத்தை உணரவும், மாணவர்களின் செய்திப்பரிமாற்றத் திறனை உயர்த்தவும் மாணவர்கள் பிறநாடு, சமுதாயத்தோடு உறவு கொள்ளவும், மாணவர்கள் சமுதாயச் சாதனங்களான இலக்கியம், இலக்கணம், அறிவியல், கலை முதலியனவற்றை அறிந்து நயத்தை உணரவும் வழிவகுக்கும் ஒரு கருவியாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. மேற்கண்ட நோக்கங்களை அடையும் வகையில் பயில்நிலையில் மொழிக்கல்வியைத் தரம்பிரித்துத் தேவையான அளவில் புகட்ட வேண்டும் என மொழியியலறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமிழ்நாட்டில் கல்வி நிலையங்கள் அனைத்திலும் தமிழ்மொழி முதல்மொழியாய் உயர்கல்வி வரையிலும் கற்பிக்கப்பட்டு வருகின்றது. பள்ளிக் கல்வியினைப் பார்க்கும்பொழுது, அது உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் முதல் மொழியாகவும் பயிற்று மொழியாகவும் இருந்து வருகிறது. ஆனால் மாணவர்களிடம் தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் சரியான முறையில் மொழிக்கூறுகளின் அடிப்படையில் மொழித்திறங்கள் கற்பிக்கப்படுவதில்லை. அதனால் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையில் கற்றல் கற்பித்தலில் சிக்கல் ஏற்படுகிறது.

மொழிப்பாடம் கற்பித்தலின் குறிக்கோள்

- மொழிக்கூறுகளை அறிந்து கொள்வதற்காக
- மொழித்திறன்களை வளர்த்தல் – கேட்டல், பேசல், வாசித்தல், எழுதுதல் (LSRW)
- சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்
- இலக்கிய நயத்துடன் இன்பத்தை உணரச்செய்தல்
- அழகுணராற்றலை வளர்த்தல்
- கற்பனை ஆற்றலை வளர்த்தல்
- பிறர் உணர்ச்சிகளை மதிக்கக் கற்றுத்தருதல்
- சிந்தனை ஆற்றலை வளர்த்தல்
- படைப்புத்திறனை வளர்த்தல்
- அறப்பண்புகளை வளர்த்தல்
- நடைமுறைக்கேற்ற வாழ்வியல் கொள்கைகளை வலியுறுத்தல்
- மொழியுணர்வை ஊட்டுதல்
- பண்பாடு, மரபுகளை அறியச் செய்தல்
- பிறருடன் தொடர்பு கொள்ளும் ஆற்றலை வளர்த்தல்

மொழி கற்றல் கற்பித்தலின் நோக்கங்கள்

மொழி கற்பித்தலில் முதலாவதாக மொழியின் பல்வேறு உறுப்புகளை வளர்க்கும் வகையில் கற்றல் கற்பித்தல் அமைய வேண்டும். ஒவ்வொரு மொழியிலும் மொழி உறுப்புகளை எட்டு வகையாக மொழியியலாளர் கூறுகின்றனர். அவை,

1. ஒலியியல்
2. ஒலியனியல்
3. சொல்லியல்
4. சொல்லொலியனியல்
5. தொடரியல்
6. பொருளியல்
7. வார்த்தையியல்
8. எழுத்தியல்

என்பனவாகும்.

ஒலியியல்

மொழியில் பயன்படும் ஒலிகளின் இயல்பையும் அவை எவ்வாறு பிறக்கின்றன என்பதையும் விளக்குகிறது.

ஒலியனியல்

"மொழியில் பயன்படுத்தப்படும் ஒலிகள் எவ்வாறு ஒலியன்களுக்குள் அமைகின்றன. இவ்வொலியன்கள் எவ்வாறு இயங்குகின்றன எனபதைப் பற்றி விளக்குகிறது" என குறிப்பிடுகிறார்.

சொல்லியல்

ஒலியன்களைக் கொண்டு சொற்கள் எவ்வாறு அமைகின்றன என்பதையும் சொற்கள் என்னென்ன இலக்கணப் பிரிவுகளைக் கொண்டு இயங்குகின்றன என்பதையும் கூறுகிறது. ஓரெழுத்து சொற்கள், ஈரெழுத்து சொற்கள் மற்றும் அதற்கு மேலான சொற்கள், பொருள் தரக்கூடியவை, பொருள் தராதவை என்பதையும் விளக்குகிறது.

சொல் ஒலியனியல்

சொற்புணர்ச்சியால் ஏற்படும் மாற்றங்களை இம்மொழிக் கூறு விளக்குகிறது.

தொடரியல்

சொற்களைக் கொண்டு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இலக்கணப் பிழைகள் இல்லாமல் தொடர்களை அமைக்கும் முறையையும், சொற்றொடர்களை இணைக்கும் முறையையும் சொற்றொடர்களால் பத்தி அமைக்கும் முறையையும் சொற்றொடரியல் விளக்குகிறது.

பொருளியல்

சொற்களும் சொற்றொடர்களும் இணைந்து அவற்றின் பொருளைத்தரும் முறையை பொருளியல் விள்க்குகிறது.

வார்த்தையியல்

வார்த்தைகள் குறிக்கும் பொருளையும் அவை பயன்படும் முறையையும் இம்மொழிக் கூறு விளக்குகிறது.

எழுத்தியல்

எழுத்தியலில் மொழியில் பயன்படும் எழுத்துக்களைப் பற்றியும் அவை எவ்வாறு சேர்ந்து மொழியின் மற்ற உறுப்புகளை எழுதப் பயன்படுகின்றன என்பது பற்றியும் இம்மொழிக் கூறு விளக்குகிறது.

மொழி என்பது மேற்குறித்த மொழிக்கூறுகளின் கூட்டாகவும், மொழித்திறங்களின் கோவையாகவும் விளங்குகின்றன. இம்மொழிசார் திறங்கள்,

- கேட்டல் திறன்
- பேசுதல் திறன்
- வாசித்தல் திறன்
- எழுதுதல் திறன்

என நான்கு வகைப்படும்.

கேட்டல் திறன்

கேட்டுணர்வது என்றால் பேசப்படுபவற்றைப் புரிந்து கொள்வது என்று பொருள். கேட்டல், பேசல் திறன் மொழி கற்பிக்கும் முறையில் மற்ற திறங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாகத் தொடக்கத்திலேயே அமைகிறது.

கேட்டல் திறன் என்பது ஈடுபாடோடு கேட்டல், ஈடுபாடற்று கேட்டல், தனக்கு வேண்டியவற்றைப் பற்றிக் குறிப்பெடுக்க கேட்டல், கருத்தை உணரக் கேட்டல், புதுக் கருத்தை வெளியிடும் வகைக்குக் கேட்டல் என கேட்டலில் பல வகைகள் அடங்கும்.

பேசுதல் திறன்

"பேசும் திறன் என்பது மொழியியலறிஞர்களுக்கு ஒலி வடிவம் கொடுத்து வெளிப்படுத்துதல் ஆகும். ஒருவர் பேசியதைப் போலப் பேசுதல், சொல் மற்றும் தொடர்களை உச்சரித்தல், உரையாடுதல், மேடையில் பேசுதல் போன்ற பல வகைகளில் பேசும்திறன் வளர்க்கப்படுகிறது" என குறிப்பிடுகின்றார்.

வாசித்தல் திறன்

"வாசிக்கும் திறன் என்பது வரி வடிவிலிருக்கும் மொழி அலகுகளுக்கு ஒலி வடிவ உருக்கொடுத்து உச்சரிப்பது ஆகும். இதில் எழுத்துக் கூட்டி வாசித்தல், உரைக்கோவையை படித்தல், கருத்தை உணர வாசித்தல், உச்சரிப்பை செப்பனிட படித்தல் எனப் பல வகைகளில் இத்திறன் வளர்க்கப்படுகிறது குறிப்பிடுகின்றார்.

எழுதுதல் திறன்

எழுதும் திறன் என்பது பேச்சையும் மனத்தில் இருக்கும் எண்ணங்களையும் வரி வடிவில் வெளிக்கொணர்வதாகும். இதில் பல நிலைகளைக் காணலாம். கோடுகளை வரைதல், எழுத்துக்களை வரைதல், சொற்கள் மற்றும் தொடற்களை எழுதுதல் போன்றவற்றால் இத்திறன் வளர்க்கப்படுகிறது என குறிப்பிடுகின்றார்.

மொழி என்பது மேற்குறித்த மொழித்திறங்களின் கூட்டாகவும், மொழி உறுப்புகளின் கோவையாகவும் விள்ங்குகின்றன என்பதை மொழியியலறிஞர் மா.சு.திருமலை (பக்.18-19) குறிப்பிடுவது இங்கு நோக்குவதற்குரியது.

ஒவ்வொரு மொழித்திறனையும் அதனோடு தொடர்புடைய ஒவ்வொரு மொழி உறுப்புகளையும் கற்பிப்பதற்கு பயன்படுத்தப்படும் மொழிப்பயிற்சி ஓரளவு இருந்தாலும், ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய கற்பித்தல் முறைகள் சரியாக இல்லாமையால் தாய்மொழியில் அனைத்துத் திறங்களிலும் சிக்கல் தோன்றுகின்றது.

கிராமப்புறப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல்

கிராமத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் கற்றல் கற்பித்தலில் பழைய கற்பித்தல் முறையையே பின்பற்றுகின்றனர். கிராமப்புறப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் செய்யுள் பாடல்களைப் பக்திப் பாடல்களின் ராகத்தில் மனப்பாடப்பகுதிப் பாடலாகவே கற்பிக்கின்றனர். இவ்வாறு பாடல் முறையில் மாணவர்களுக்குக் கற்பிப்பதால் மாணவர்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து விடுகின்றன. என்றாலும், ஆசிரியர் மொழிக்கூறுகளின் அடிப்படையில் மொழித்திறங்களை முறையாகக் கற்பிக்கவில்லை. இதனால் மாணவர்களுக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

நகர்ப்புறப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல்

நகரத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் என்பது புதிய கற்பித்தல் முறைகளைக் கடைப்பிடிக்கக் கூடியதாக அமைகிறது. ஒரு பாடம் நடத்துவதற்கு முன்னர் அப்பாடம் பற்றிய பொருள் பொருந்திய கதை, படங்களை மாணவர்களிடம் காட்டிப் பிறகு அப்பாடத்தை நடத்துகின்றனர். இருந்தாலும் மற்ற பாடங்களுக்குக் கொடுக்கும் நேரத்தைத் தமிழ்ப்பாடம் கற்பித்தலில் செலவழிப்பதில்லை. மற்ற பாடங்களுக்கு, (எ.கா) கணக்கு, அறிவியல், வரலாறு, ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு முன்னுரிமை தருகின்றனர். தமிழ்தானே என்று அலட்சியமாக இருப்பதால் மாணவர்களுக்குத் தமிழ்மொழி கற்பதில் ஈடுபாடு இல்லாமல் போகிறது. ஆசிரியர்களும் தமிழை முறையாக மொழிக்கூறுகளையும் மொழித்திறங்களையும் கற்பிக்காததால் இம்மாணவர்களிடையே பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

மொழிப்பாடத்திட்டத்தின் சிறப்புக் கூறுகள்

மொழிப் பாடத்திட்டம் கீழ்க் குறிப்பிட்டுள்ள மொழிப் பண்புகளை, மொழித் திறன்களை, மொழி இலக்குகளை அடையும் நோக்கை மையமாகக் கொண்டது.

1. மொழி வாயிலாகக் குழந்தைகள் கற்பனைத் திறனை மேம்படுத்தவும் தானே கற்கவும் நடைமுறை இலக்கணத்தைப் புரிந்து கொண்டு பயன்படுத்தவும் மொழிப்பாடத்திட்டம் வழிவகுத்துள்ளது.
2. உயர்நிலை மொழியாற்றல்களான மையக் கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடை அளித்தல், குறிப்பெடுத்தல், பகுத்தல், தொகுத்தல், வகைப்படுத்தல், விவரித்தல், வெளிப்படுத்துதல், இதழ் தயாரித்தல், நாட்குறிப்பு எழுதல்,ஆகியவற்றை வளர்க்கும் வகையிலும் அமைந்துள்ளது.
3. தாம் சொல்லும் செய்திகளைக் குழந்தைகள் உள்வாங்கிக் கொண்டு செயல்படுதல் கேட்ட, படித்த செய்திகளின் மையக் கருத்துக்களைப் புரிந்து கொள்ளல், சிந்தித்தல், கருத்துத் தொடர்புடன் எழுதுதல் ஆகிய அடிப்படைத் திறன்களை அடைய வழி செய்யப்பட்டுள்ளன.
4. உயர்நிலை மொழித்திறன்களான கதை, கவிதை, கட்டுரை, உரையாடல், நாடகம் ஆகியவற்றை வளர்ப்பதாக அமைந்துள்ளது.

ஆய்வின் நோக்கம்

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குத் தமிழ் கற்றல் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும் என்ற தலைப்பில் அமையும் இவ்வாய்வு தேர்வு செய்யப்பட்ட நான்கு பள்ளிகளில் உள்ள ஒன்பது, பத்தாம் வகுப்பு மாணவர்களின் தமிழ் கற்றல் கற்பித்தலில் பெறப்பட்ட சிக்கல்களின் அடிப்படையில் சிக்கல்களை வகைப்படுத்தி அதற்கான தீர்வுகளை ஆராயும் நோக்கில் அமைகிறது.

ஆய்வின் எல்லை

உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் கற்றல் கற்பித்தலின்போது பயன்படுத்தப்படும் மொழிக்கூறுகளையும் மொழித்திறங்களையும் தன்னகத்தே முதன்மைப்படுத்திய குறைந்தபட்ச கற்றல் கற்பித்தலைக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

முடிவுரை

குழந்தைகள் மொழித்திறன் பெறவும் மொழி ஆளுமையில் வல்லமை பெறவும் குழந்தைகளின் விருப்பத்தை, தேவையை, எண்ணத்தை நிறைவு செய்யவும் மொழி ஆற்றலானது தேவைப்படுகிறது. குழந்தைகள் பாதுகாப்புடன், அச்சமற்ற சூழலை உருவாக்கிக் கொடுத்து குழந்தைகளின் ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்டு மொழி கற்பித்தல் வேண்டும். மொழிப்பாடமே பிற பாடங்களுக்கு அடிப்படையாகும். மொழியே அனைத்து வகையான பாடங்களைக் கற்றலும் கற்பித்தலும் மொழி அடிப்படை என்பதால் மொழிக்குப் பின்னால் உள்ள உணர்வுகளைப் புரிந்து கொள்வதன் வாயிலாகப் பாடங்களை எளிதில் புரிந்து கொள்ள இயலும். எல்லா மாணவர்களின் மொழித் திறனைப் பெறும் வகையிலாகப் பிற பாடத்திட்டங்கள் அமைத்தல் வேண்டும். அவ்வாறு அமைப்பதன் மூலமாக சிறந்த புரிதல் நிலையை மாணவர்களுக்கு வழங்க முடியும்.

துணைநின்றவை

- தண்டபாணி சு., **(2015),** தமிழ் கற்பிக்கும் முறைகள், **மதுரை:** மீனாப்பதிப்பகம்.
- ஸ்ரீ பாலாஜி லோகநாதன், **(2011),** கலைத்திட்டமும் கற்பித்தலின் நுட்பங்களும், **சென்னை:** ஸ்ரீ ஜி.வி பப்ளிக்கேசன்ஸ், திருவல்லிக்கேணி.
- அகத்தியலிங்கம், **(2002),** தமிழ்மொழி அமைப்பியல், **சிதம்பரம்:** மெய்யப்பன் தமிழாய்வகம், 53 புதுத்தெரு .
- இராசாராம் (பதிப்.), **(1980),** ஒலியியல், **சென்னை:** அனைத்திந்தியத் தமிழ் ஆய்வு மையம், மொழியியற் கழகம்.
- அரும்பு, **(2002),** ஏழாம் வகுப்பு மாணவர்களின் தமிழ் பயிற்சியில் உள்ள சிக்கலும் தீர்வுகளும் - ஓர் ஆய்வு, **தஞ்சாவூர்:** இந்திய மொழிகள் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம்.

****

மனவெழுச்சியும் மாணவர்களின் வளர்ச்சியும்
EMOTIONS AND STUDENTS GROWTH

வீ.பூமிநாதன் | V. Boominathan

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), நஞ்சனாபுரம், ஈரோடு - 638 107. அலைபேசி – 9751524368, மின்னஞ்சல் - vboomi@gmail.com, ORCID: https://orcid.org/0000-0002-3150-5672

ஆய்வுச்சுருக்கம்

மாணவர்களின் மனவெழுச்சியினைக் கண்டறிந்து அதனை வளப்படுத்திக் கற்பிக்கும்போது மாணவர்களின் கற்றல் ஆற்றலானது மிகுகிறது. மாணவர்கள் வளம்பெறும்போது அவர்கள் சார்ந்துள்ள சமூகமும் சமூக விரோதிகள் இன்றிச் சிறந்த சமூகமாக மாறுகிறது.

Abstract

Students' learning potential is enhanced when their emotions are discovered and enriched. As students prosper, the community on which they depend becomes a better society without social enemies.

திறவுச்சொற்கள் (Keywords): மனவெழுச்சி, மாணவர், வளர்ச்சி, EMOTION, STUDENT, GROWTH

முன்னுரை

பள்ளி மற்றும் கல்லூரிகளில் கற்றல் கற்பித்தல் என்பது தற்காலச் சூழலில் மிகவும் சவாலான ஒன்றாக உள்ளது. மாணவர்கள் பல்வேறு மனநிலையில் கல்வி நிலையங்களை வந்தடைகின்றனர். அவர்களின் மனநிலைக்கேற்பக் கற்பித்தல் மிகவும் அவசியமான ஒன்றாக உள்ளது. அவ்வாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் கல்வி உளவியல் மிகவும் அவசியமான ஒன்றாகவே உள்ளது.

மனவெழுச்சி

மனவெழுச்சி என்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவுநிலையாகும். மாணவர்களின் உணர்ச்சிகளைச் சீர்படுத்துவதன் மூலம் அவர்களின் நடத்தை மற்றும் அறிவினை வளப்படுத்தி வாழ்வில் வெற்றிபெறச் செய்ய முடியும். மாணவர்கள் குடும்பம், கல்வி நிறுவனச் சூழல், உடல் வளர்ச்சி, உடல் நலம், நுண்ணறிவு மற்றும் சமூகம் போன்ற பல்வேறு காரணிகளினால் மனவெழுச்சி பெறுகின்றனர். மனவெழுச்சி நேர்மறையாக அமையும்போது மாணவர்களின் வளர்ச்சியும் நேர்மறையாகவே உள்ளது. ஆனால் எதிர்மறைச் சூழல் அமையும்போது மாணவர்கள் பாதிப்பதோடு சமூகமும் சீர்கெடுகிறது.

"பொதுவாக மனவெழுச்சி என்பதன் அர்த்தம் 'வெளிப்படுத்து' அவாவைத்தூண்டு என்பதாகும். மனவெழுச்சியானது உயிரியை எழுச்சியுறச் செய்து செயல்களைச் செய்வதற்கு ஊக்குவிக்கின்ற ஓர் உயிருள்ள செயற்பாடு எனலாம். இவ்விதத்தில் தனியாளின் நடத்தைகளுக்கு ஊக்குவிப்பது மனவெழுச்சியே ஆகும். வேறுவிதமாகக் கூறின் மனித நடத்தையின் ஊக்கி மனவெழுச்சியாகும். மனவெழுச்சிகள் ஏதாவது ஒரு தூண்டல் காரணமாக ஏற்படும் ஒருவருடைய பிரதிபலிப்புக்கள் என்று அறிமுகப்படுத்தலாம். அதாவது ஒருவருடைய மனதில் ஏற்படும் உள்ளார்ந்த உணர்வுகளே மனவெழுச்சி. மனவெழுச்சி என்பது உணர்ச்சி என்பதிலும் வேறுபாடானது. இவை தூண்டல்களால் தூண்டப்படும் மனநிலையாகும்."[1]

எனவே மனவெழுச்சியானது மாணவர்களின் மனதிற்கு ஏற்ப மாற்றும் தன்மையுடையது என்பதை அறிய முடிகிறது.

மனவெழுச்சியின் இயல்புகள்

மனவெழுச்சியினைச் சமநிலைப்படுத்துவது அல்லது சூழலுக்கு ஏற்றவாறு உயர்த்தல் அல்லது குறைத்தல் மூலம் ஒருவரை நாம் சாதனையாளராக மாற்ற முடியும். இம்முயற்சியில் ஈடுபடுவதற்குமுன் மனவெழுச்சியின் இயல்புகளை அறிய வேண்டியது அவசியமாகிறது. மனவெழுச்சியின் இயல்புகளாக கி.நாகராஜன் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

"மனவெழுச்சிகள் ஒவ்வொரு உயிரியிடத்தும் தோன்றுகின்றன. இவை நடத்தையின் ஊக்கிகளாகவும், நடத்தையின் இலக்குகளாகவும் செயற்படுகின்றன.

ஒவ்வொரு மனவெழுச்சியிலும் ஒரு பொருளையோ, ஒரு நிலைமையையோ பற்றித் தீவிர உணர்ச்சி மேம்பட்டிருக்கும். இவ்வுணர்ச்சி இன்பவுணர்ச்சியாகவோ வெறுப்புணர்ச்சியாகவோ இருக்கலாம்.

மனவெழுச்சிகள் குழந்தைப் பருவம் முதல் கிழட்டுப் பருவம் வரை எவ்வயதிலும் மனிதரிடம் காணப்படும். எனினும் இவை சிறு குழந்தைகளிடம் பாகுபடாத நிலையில் காணப்படும்.

ஒருவனைச் சிந்திக்க வைப்பதைவிட அவனிடம் பல்வேறு மனவெழுச்சிகளைத் தோற்றுவிப்பது மிகவும் எளிது.

ஆராய்ந்து சிந்திக்கும் திறனை மனவெழுச்சிகள் தடைசெய்யக் கூடியவை. இவை கற்றலையும் பெரிதும் பாதிக்கின்றன.

குறிப்பிட்ட மனவெழுச்சியைப் பல்வேறு தூண்டல்கள் மூலம் எழுப்ப முடியும்.

மனவெழுச்சிகளும், அவை வெளிப்படும் விதமும், ஆளுக்கு ஆள் மாறுபடுகின்றன.

ஒவ்வொரு மனவெழுச்சியும் பல நிலைகளைக் கொண்டது. உதாரணமாக சினம் என்னும் மனவெழுச்சி 'சிறு எரிச்சல்' (Mild irritation) முதல் பெருங்கோபம் (Rage) வரையிலான பல நிலைகளைத் தன்னுள் அடக்கியதாகும்.

ஒரு மனவெழுச்சி, அது எழுவதற்கான காரணம் மறைந்த பின்னரும் தொடர்ந்து செயற்படுகிறது. இதனை 'மனவெழுச்சி நீட்சி' (Mood) எனலாம். வீட்டிலே ஏதோவொரு காரணத்துக்காகச் சினம் கொண்ட ஆசிரியர் பள்ளிக்கு வந்தபின்பும் சிலபோது அந்நிலையிலேயே தொடர்ந்து காணப்பட்டு, மாணவர்களிடம் தனது எரிச்சலை வெளிப்படுத்தக் கூடும்.

மனவெழுச்சிக்கு உட்பட்டவனது உடல்நிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இம்மாற்றங்களைக் குறிப்பாக அச்சம், சினம் போன்ற எதிர்மறை மனவெழுச்சிகளில் காணக்கூடும்."[2]

மேற்கண்ட மனவெழுச்சிகளின் இயல்புகளை ஆராயும்போது மாணவர்களின் மனவெழுச்சியை ஒருமுகப்படுத்தல் அல்லது நேர்மறையான திசையில் திருப்புதல் மூலம் அம்மாணவனைச் சாதனையாளனாக மாற்ற முடியும் என்பதை அறிய முடிகிறது. மேலும் ஒரு மாணவன் எத்துறையில் ஆர்வமாக இருக்கிறான் என்பதை ஆராய்ந்து அத்துறையின் நேர்மறை எண்ணங்களை அறிவுறுத்தும்போது அம்மாணவன் அத்துறையில் வெற்றியாளனாகத் திகழ வாய்ப்பு ஏற்படுகிறது.

மனவெழுச்சி பற்றிய உளவியல் கொள்கைகள் (Theories of Emotions)

மனவெழுச்சியுடன் மகிழ்ச்சி, மகிழ்ச்சியின்மை போன்ற உணர்ச்சிகளும், உடல் மாற்றங்களும் ஏற்படுகின்றன என அறிந்தோம். இவற்றுள் எது முந்தியது, எது பின் வருகிறது என்பது பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. மனவெழுச்சித் தூண்டல், உணர்ச்சியைத் தோற்றுவித்து இதன் விளைவாகச் சில உடல்மாற்றங்கள் எழுகின்றன எனப் பொதுவாக நாம் எண்ணுகிறோம். ஆனால் ஜேம்ஸ் – லாங் (James-Lange) கொள்கையின்படி *"மனவெழுச்சியைத் தூண்டக்கூடிய நிலைமை ஏற்பட்டவுடன் எழுவது உடல்நிலை மாற்றங்களாகும். இவ்வுடல்நிலை மாற்றங்களை மனம் உணர்வதன் மூலம் தோன்றுவது உணர்ச்சியாகும். இக்கொள்கையின்படி, மனவெழுச்சிகளில் முதலிடம் பெறுவது உடல்நிலை மாற்றங்களே. இம்மாற்றங்கள் இல்லையேல் மனவெழுச்சிகளில் அமைந்துள்ள தனிப்பட்ட உணர்ச்சிகள் ஏற்படா. தம்*

கொள்கைக்கும் பாமர மக்களின் கருத்துக்கும் உள்ள வேறுபாட்டைப்பற்றி ஜேம்ஸ் கூறுவது ஈண்டு கவனிக்கத்தக்கது. நாம் செல்வத்தை இழக்கிறோம்; வருத்தம் ஏற்படுகிறது; அழுகிறோம்; ஒரு கரடியைச் சந்திக்கிறோம்; அச்சம் ஏற்படுகிறது; ஆதலால், நடுங்கி ஓடத் தொடங்குகிறோம். ஒருவன் நம்மைத் தூற்றுகிறான்; சினம் பொங்குகிறது. அவனை நாம் அடிக்கிறோம். இவ்வாறு பாமர மக்கள் எண்ணுகின்றனர்; இது தவறு. உண்மையில் நாம் அழுவதனால்தான் வருத்தமடைகிறோம். நடுங்குவதால்தான் அச்சமுறுகிறோம்; அடிப்பதால்தான் சினத்தை அனுபவிக்கிறோம். இவ்வுடல் நிலைகள் இல்லாதிருப்பின் மனவெழுச்சிகள் ஏற்படமாட்டா" [3] என்கிறார் ஜேம்ஸ். ஜேம்ஸின் கருத்தினை நோக்கும்போது மனவெழுச்சியானது முதலில் உடலையும் பிறகுதான் மனதையும் பாதிக்கிறது என்பதை அறிய முடிகிறது. எனவே மாணவர்களின் உடநலத்தினைச் சீர்படுத்துவதன் மூலம் உள்ளத்தையும் சீர்படுத்த முடியும் என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டியுள்ளது.

மனவெழுச்சியின் பல்வேறு பிரிவுகள்

ஹெரால்டு ஷால்ஸ்பர்க் (Herald Schlosberg) என்பாரது கருத்துப்படி மனவெழுச்சிகள் மூன்று பரிமாணங்களில் பரவிக் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் இருமுனைகளை (Bipolar) கொண்டவை:

I. மகிழ்ச்சி – மகிழ்ச்சியின்மை
II. கவனித்தல் – புறக்கணித்தல்
III. செயலுறுநிலை – செயலற்ற நிலை

இம்மூன்றுடன் நான்காவதாக எளிமை, சிக்கல் என்னும் பரிமாணமும் இன்று குறிப்பிடப்படுகிறது. இப்பரிமாணங்களை மனவெழுச்சிகளோடு பொருத்திப் பல்வகை மனவெழுச்சிகளை அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். இவையாவன:

- அடிப்படை மனவெழுச்சிகள் (சினம், மகிழ்ச்சி, துயரம், அச்சம்)
- புலன் உணர்ச்சிகளால் தூண்டப்படும் மனவெழுச்சிகள் (வலி, அருவருப்பு, உற்சாகம்)
- தற்கருத்து, அவாவுநிலை ஆகியவையுடன் இணைந்தவை (பெருமிதம், அவமானம்,குற்ற உணர்வு போன்றவை)
- பிறரைச்சார்ந்து எழும் மனவெழுச்சிகள் (அன்பு, பொறாமை, பரிதாபம் போன்றவை)
- ஆச்சரியம், மரியாதை போன்ற பாராட்டுத் தொடர்பான மனவெழுச்சிகள்.

இவ்வாறு மனவெழுச்சி பொது நிலையிலிருந்து வளர்ச்சி பெற்றுக் குமரப்பருவத்தை அடையும் முன்னரே பல கிளைகளாக உருப்பெறுகின்றன.

மனவெழுச்சிகளைக் கண்டறிந்து அதற்கு ஏற்றவாறு மாணவர்களின் உணர்ச்சிகளைத் தூண்ட அவர்களின் முழு வரலாறு அறிவது மிகவும் அவசியமாகும். மாணவர்களின் வரலாற்றினை அறிய தனியாள் ஆய்வுமுறை என்ற உளவியல் முறையைக் கையாளுவது ஏற்றதாகும்.

தனியாள் ஆய்வுமுறை

மாணவர்களின் வரலாற்றினை அறிவதற்குப் பெரும்பாலும் ஆசிரியர்கள் கையாளும் உளவியல்முறை தனியாள் ஆய்வுமுறையாகும். பல்வேறு உளவியல் அறிஞர்களும் இம்முறையினையே பரிந்துரை செய்கின்றனர்.

தனியாள் ஆய்வின் பொருள்

"தனியாள் ஆய்வுமுறை என்பது கல்வி நிகழ்ச்சிகளில் தற்செயலான தொடர்புகளைப் பற்றி ஆய்வு செய்யும் ஒரு முறையாகும். இது ஒரு பிரச்சனையைப் பற்றிய ஆழ்ந்த ஆய்வாகும். ஒரு குழந்தையைப் பற்றி, ஒரு சமுதாயத்தைப் பற்றி, ஒரு இனத்தைப் பற்றி, ஒரு நாட்டைப் பற்றி, ஒரு குடும்பத்தைப் பற்றி, ஒரு மன்றத்தைப் பற்றி, ஒரு வாலிபக் குழுவைப் பற்றிய ஆய்வாகும்."[4]

தனியாள் ஆய்வு என்பது ஒருவனது நடத்தையின் பின்னமைந்த காரணிகளைக் கண்டுபிடிப்பதற்காக அவனைப் பற்றிய எல்லா விவரங்களையும் முழுமையாகத் திரட்டித் தொகுத்து ஆய்தலாகும்.

தனியாள் ஆய்வு நோக்கம்

தனியாள் பிரச்சனை ஆய்வு அல்லது பிரச்சனை வரலாற்றின் நோக்கமானது ஒரு குழந்தையைப் பற்றி, ஒரு நபரைப் பற்றி, ஒரு பகுதியைப் பற்றி, ஒரு பாடத்தைப் பற்றி, ஆழமாக புரிந்து கொள்ளுதல் ஆகும். ஒரு குழந்தையின் நடத்தையைப் பற்றி முற்றிலுமாக தெரிந்து கொள்வதற்கு அந்தக் குழந்தையின் இன்றைய நிலைமை, அதன் முன் அனுபவம், அதனுடைய சுற்றுப்புறம், அதற்குச் சம்பந்தப்பட்ட காரணிகள் அடங்கிய செய்திக் குறிப்புகள் சேகரிக்கப்படுகின்றன. உதாரணமாக, பள்ளி மாணவர் சிலரிடம் காணப்படும் நெறிபிறழ்வு, பாடங்களில் பின்தங்கியிருத்தல், பள்ளிக்குக் காலந்தாழ்ந்து வருதல், கவனமின்மை, மற்ற மாணவர்களிடத்துச் சேராது ஒதுங்கியிருத்தல், அதிகமாகப் பொய்பேசுதல், பணிவின்மை போன்றவற்றின் அடிப்படைக் காரணங்களை அறிய இம்முறை உதவுகிறது.

தனியாள் ஆய்வுப் படிநிலைகள்

- நேரிடையான உற்றுநோக்குதல் அல்லது அளவீடு மூலம் ஆய்வில் இருக்கின்ற பிரச்சனையின் இயல்பைத் தீர்மானித்தல்.
- பிரச்சனையில் நடக்கக் கூடியவை எனக் கருதும் முந்தைய நிகழ்ச்சிகளைப் பற்றித் தீர்மானித்தல்.
- தற்காலிகமாக யூகம் செய்யும் கருத்தை எடுத்துரைத்தல் அல்லது இது போன்ற பிரச்சனைகளின் மூலம் கிடைத்த அறிவால் தற்காலிக கருத்துக்களின் வரிசைகளை விளக்குதல்.
- தற்காலிக யூகக் கருத்தைச் சரிபார்த்தல்.
- தவறான நடத்தைக்குரிய காரணங்களை நீக்குவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.
- சரிபார்த்தல் மற்றும் பின் தொடர்தல் (Follow-up).

தனியாள் ஆய்வுமுறையின் சிறப்பியல்புகள்

- செய்திக் குறிப்புகள் முழுமையாக இருக்க வேண்டும்.
- செய்திக் குறிப்புகள் நியாயமாக இருக்க வேண்டும்.
- பதிவு அல்லது குறிப்பை மிகவும் ரகசியமாக வைத்திருக்க வேண்டும்.

- செய்திக் குறிப்புகளின் தொகுப்பு அறிவியல்பூர்வமாக இருக்க வேண்டும்.

தனியாள் ஆய்வுமுறையில் சேகரிக்கப்பட வேண்டிய செய்திக் குறிப்புகளின் வகைகள்

ஒரு குழந்தையின் பிரச்சனை பற்றிய ஆய்விற்குக் கீழ்க்கண்ட விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.

அடையாளக் குறிப்புகள்

பெயர், பால், வயது, பிறந்த தேதி, தந்தை பெயர், தாய் பெயர், முகவரி.

பிரச்சனையின் பெயர்

எத்தகைய பிரச்சனை? பிரச்சனையின் தன்மை என்ன?

குடும்ப வரலாறு

- தந்தையின் கல்வித் தகுதி, தொழில், வருமானம்
- தாயின் கல்வித் தகுதி, தொழில், வருமானம்
- குழந்தைகளுக்கிடையே உள்ள உறவு முறைகள்
- வீட்டின் நிலைமை
- வீட்டின் கட்டுப்பாடு அல்லது ஒழுக்கம்

பள்ளி வரலாறு

மாணவர் பயின்ற பள்ளிகள், பள்ளியில் சேரும்போது அவர் வயது, பள்ளியைப் பற்றியும், ஆசிரியர்களைப் பற்றியும், பாடங்களைப் பற்றியும் அவரது மனப்பான்மை.

உடல் மற்றும் ஆரோக்கியத்தைப் பற்றிய வரலாறு

எந்த வயதில் நடந்தார்? எந்த வயதில் பேசினார்? புலன் குறைபாடுகள், பேச்சுக் குறைபாடு, நோய்வாய்ப்படுதல் முதலியன.

சமூக வரலாறும் தொடர்புகளும்

மதப்பின்னணி, சமூக, கலாச்சார, அரசியல், குழு இணைவு நடவடிக்கைகளில் அவரது ஈடுபாடு முதலியன.

பொழுதுபோக்கு ஆர்வங்கள்

ஓய்வுநேர வேலைகள், செயல்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், பிற செயல்களில் ஆர்வங்கள் முதலியன.

ஆளுமைக் குணங்கள்

மகிழ்ச்சி அல்லது மகிழ்ச்சியின்மை, எதிர்பாலரைப் (Opposite sex) பற்றிய கருத்து, மனவெழுச்சியின் முதிர்ச்சி போன்றவை ஆளுமைக் குணங்களாகும். முடிந்த அளவு செய்திகளைப் பல ஆதாரங்களிலிருந்து சேகரிக்க வேண்டும். அதிகப்படியான உபகரணங்களைச் சேகரிக்க பயன்படுத்தவேண்டும். இவைகளில் பள்ளிக் குறிப்புகள்,

குழந்தையிடம் நடத்திய பேட்டி, பெற்றோர் மற்றும் அடுத்தவர்களிடம் நடத்திய பேட்டியும் அடங்கும்.

தனியாள் ஆய்வுமுறையின் நிறைகள்

- ஒவ்வொரு புதிய மாணவரைப் பற்றியும் ஆசிரியர் அதிகமாக தெரிந்து வைத்திருக்க முடியும்.
- படிப்பில் ஒவ்வொரு மாணவரின் பலமும், பலவீனமும் பற்றி அறிய முடியும்.
- சொந்த, சமூக ரீதியில் ஒத்துப்போகும் பிரச்சனைகளைப்பற்றி அறிய இயலும்.
- மாணவனது மனப்பான்மை, விருப்பம் மற்றும் நாட்டம் ஆகியன ஆசிரியருக்குத் தெரிய வருகின்றது.
- தனியாள் ஆய்வின் மூலம் மாணவர்களின் வரலாற்றினை ஆராய்ந்து அவர்களின் மன மற்றும் உடல்நிலைக்கு ஏற்ப உணர்வுகளைத் தூண்டும்போது மாணவர்கள் வெற்றியாளர்களாக மாறுகின்றனர். எனவே தனியாள் ஆய்வுமுறை என்பது மாணவர்களின் வளர்ச்சிக்கு மிக அவசியமான ஒன்றாக அமைகிறது.

மனவெழுச்சியின் பயன்கள்

மனவெழுச்சிகளினின்றும் மனிதன் பலவகைப்பட்ட பயன்களைப் பெறுகிறான்.

- மனிதனது செயல்களை ஊக்குவிப்பதற்கும், அவற்றைத் திசைப்படுத்துவதற்கும் மனவெழுச்சிகள் காரணிகளாக அமைகின்றன. மனத்திற்கு இன்பமும் மகிழ்ச்சியும் அளிக்கவல்ல செயல்களைச் செய்யத் துடிப்பதும், அச்சத்தையும் அருவருப்பையும் அளிக்கக் கூடியனவற்றை ஒதுக்கித் தள்ளுவதும் மனித இயல்பாகும்.
- மனித வாழ்க்கைக்குச் சுவையூட்டுபவை இம்மனவெழுச்சிகளேயாம். இன்ப துன்பங்கள் ஓரளவேனும் கலந்து இடம்பெறாத வாழ்க்கை சலிப்பைத் தருவதாக அமையுமேயன்றி, கவர்ச்சியுள்ளதாக அமையாது.
- இலக்கியத் திறனையும், நுண்கலைகளையும் ரசித்தல் மனவெழுச்சிகளின் துணைகொண்டு நிகழும் செயலேயாகும்.
- ஒருவன் தீவிரமாகச் செயலாற்றத் தேவைப்படும் அதிகப்படியான வலுவை அவனது மனவெழுச்சிகள் திரட்டித் தருகின்றன. சாதாரண நிலைகளில் தன்னால் செய்ய முடியாதவற்றை சில நெருக்கடியான நிலைகளில் செய்து முடிக்கத் தேவைப்படும் துணிவையும், சக்தியையும் மனவெழுச்சிகள் தரவல்லன.
- சமூக நல்வாழ்விற்கும் மனவெழுச்சிகள் அடிப்படைகளாகின்றன. பரிவு, அன்பு, பாசம் போன்ற மனவெழுச்சிகளே மனிதனது கூட்டு வாழ்க்கை நன்கு இயங்க உதவுகின்றன. சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், குறைபாடுகள் ஆகியவை மீது சீற்றம் கொண்டு, அவற்றினைக் களைந்து சமுதயாத்தைச் சீர்திருத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும், சமூகப்பற்று, நாட்டுப்பற்று போன்றனவற்றிற்கும் மனவெழுச்சிகளே காரணங்களாகும்.
- மாணாக்கர்களது பள்ளி வாழ்க்கையிலும், அவர்கள் தங்களது ஆசிரியர்கள்பால் கொண்டுள்ள தொடர்பின் தன்மையிலும், மனவெழுச்சிகளின் செல்வாக்கினை நாம் காணக்கூடும். வெற்றிக்கு வாய்ப்பினைத் தரவல்ல பள்ளிப் பாடங்களையும் செயல்களையும் மாணாக்கர் மகிழ்ச்சியுடன் விரும்பிக் கற்கின்றனர். தோல்வியையும் மனமுறிவையும் அளிக்கும் பாடங்களையும் செயல்களையும் சினந்து வெறுக்கின்றனர். மேலும், வகுப்பில் நிலவும் சூழ்நிலை மகிழ்ச்சியூட்டக் கூடியதாயின் கற்றல் நன்கு நடைபெறும்; ஆசிரியரின் எதேச்சதிகார

மனப்பான்மையால் வகுப்புச் சூழ்நிலை அச்சமும் சினமும் நிறைந்திருக்குமாயின் கற்றல்) தடைபடும்.

- தமது தொழிலில் வெற்றி காணவும், தமது மாணாக்கரோடு சீரான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் ஆசிரியரிடம் மனவெழுச்சிகளின் சமநிலையும் கட்டுப்பாடும் இருத்தல் இன்றியமையாததாகும்.
- மனவெழுச்சிகள் கட்டுக்கடங்காமற் போயின் மனவெழுச்சிப் போராட்டங்கள் (Emotional Conflicts) எழக்கூடும். பல்வேறு நெறிபிறழ்ந்த, அசாதாரண (Abnormal) நடத்தைக் கோலங்களுக்கு இவையே காரணிகளாக அமைகின்றன என்று உளவியலார் கருதுகின்றனர்.

மாணவர்களே ஒரு நாட்டின் வளச்சியைத் தீர்மானிக்கின்றனர். எனவே வளமான மாணவர்களைப் பெறும் நாடு வளமுடையதாக திகழ்கிறது. எனவே ஒவ்வொரு நாடும் மாணவர்களின் மீது அக்கறை கொள்ள வேண்டும். இக்கால மாணவர்கள் பல்வேறு காரணங்களால் பல உளவியல் சிக்கலுக்கு ஆட்படுகின்றனர். எனவே அவர்களின் உளவியல் சிக்கலைக் கண்டறிந்து அவற்றை நீக்கும்போது மாணவர்கள் வாழ்வில் சாதனையாளர்களாகவும் வெற்றியாளர்களாகவும் திகழ்கின்றனர்.

தனியாள் ஆய்வுமுறை மூலம் மாணவர்களின் வரலாற்றினை ஆராய்ந்து அறிய ஆசிரியர் மாணவர்களின் விகிதம் என்பது நமது நாட்டில் குறைவாக உள்ளது. இந்த விகிதம் என்பது தனியாள் ஆய்வுமுறைக்குப் பற்றாக்குறையாக உள்ளது. எனவே ஆசிரியரின் விகிதத்தினை உயர்த்தினால் மேற்கண்ட முறையில் வெற்றியடைய முடியும்.

அடிக்குறிப்பு

1. South Eastern University Arts Research Session – 2016
2. Nagarajan.K, (2007) Education Psychology, Chennai, Ram Publication, Pp. 70-71
3. Nagarajan.K, (2007) Education Psychology, Chennai, Ram Publication, P.73.
4. Meenachi Sundram.A, (2015), Learner and Learning Psychology, Dindigul, Kavyamala Publication, P.18.

****